# மலைக்கள்ளன்

# மலைக்கள்ளன்

நாமக்கல் கவிஞர்
வெ. இராமலிங்கம் பிள்ளை

பழனியப்பா பிரதர்ஸ்

சென்னை - 600 014 திருச்சி - 620 002
சேலம் - 636 001 கோயமுத்தூர் - 641 001
மதுரை - 625 001 ஈரோடு - 638 001

ஒன்பதாம் பதிப்பு : 1983

விலை: ரூ. 17-90

ஏஷியன் அச்சகம்; சென்னை - 600 014.

## முதற்பதிப்பின் முன்னுரை

### நாமக்கல் கவிஞர்

**1931**-ஆம் வருஷக் கடைசியில் காந்தி-இர்வின் ஒப்பந்தம் ஏற்பட்டது. சத்யாக்ரகத்தை நிறுத்துவிட்டு மகாத்மா காந்தியவர்கள் லண்டனில் நடந்த இரண்டாவது வட்டமேஜை மகாநாட்டுக்குப் போனார். அங்கே பார்க்க வேண்டியவர்களைப் பார்த்துப் பேசவேண்டியதைப் பேசி விட்டு இந்தியாவிற்குத் திரும்பினார். காந்தியடிகள் இந்தியாவிற்கு வந்து சேருவதற்கு முன்னாலேயே காந்தி—இர்வின் ஒப்பந்தத்தின் கட்டுத் தளர்ந்துவிட்டது. இந்திய சர்க்கார் அந்த ஒப்பந்தத்துக்கு விரோதமாகப் பல காரியங்களைச் செய்துவிட்டார்கள். அதைக் கண்டு மனம் வருந்திய காந்தியார் வைசிராய் அவர்களை நேரிற் கண்டு அதைப் பற்றிப் பேச வேணுமென்று விரும்பி வைசிராயைப் பேட்டி காண அனுமதி கேட்டார். அந்தச் சமயத்தில் வைசிராயான வில்லிங்டன் பிரபு காந்தியவர்களைச் சந்திக்க மறுத்துவிட்டார். வேறு வழியில்லையென்று சொல்லி மகாத்மா மீண்டும் சத்யாக்ரகத்தை ஆரம்பித்தார்.

அந்தப் போராட்டத்தில் கலந்துகொண்டு 1932-ஆம் வருஷம் ஜனவரி மாதத்தில் நானும் எனது நண்பர் ஸ்ரீ என். நாகராஜய்யங்கார், எம். எல். ஏ. அவர்களும் சேர்ந்தாற்போல் சட்ட மறுப்புச் செய்தோம். எங்களுக்கு ஆளுக்கு ஒரு வருஷம் கடுங்காவல் தண்டனை கிடைத்தது.

கோயம்புத்தூரில் சுமார் 15 நாள் சி. வகுப்புக் கைதிகளாக இருந்தோம். பிறகு எங்களை பி. வகுப்புக்கு மாற்றினார்கள். வேலூருக்குப் போனோம். ஏ. வகுப்பிலும் பி. வகுப்பிலும் கைதிகளாக இருந்த சென்னை மாகாணத் தலைவர்களில் பெரும்பாலோர் வேலூரில் இருந்தார்கள். (அவர்களைப் பற்றிய விவரங்களை இங்கே எழுத இடமில்லை. அவர்களைப்பற்றிய குறிப்புகளை "என் கதை" என்ற புத்தகத்தில் எழுதியிருக்கிறேன்.)

வேலூரில் தமிழர்கள், தெலுங்கர்கள், மலையாளிகள், குடகு நாட்டவர்கள், கன்னடக்காரர் எல்லாரும் இருந்தார்கள். நான் இருந்த 'பிளாக்'கில் சுமார் 25 பேர் இருந்தோம். அதில் பெரும்பாலும் தமிழர்கள். இரண்டே இரண்டு பேர் தெலுங்கர். அவர்களில் ஒருவர் இப்போது சென்னை சட்டசபைத் தலைவரான ஸ்ரீ புலுசு சாம்பமூர்த்தியவர்கள். அவர் என் அறைக்கு ஒன்று விட்டு அடுத்த அறையில் இருந்தார். மிகவும் இனிய சுகவாசி. நல்ல பழக்கவழக்கங்களுடையவர். வீண் காலம் போக்க மாட்டார். பை பின்னிக்கொண்டே பெரிய பெரிய விஷயங்களைப்பற்றி வெகு வேடிக்கையாகவும் பேசிக் கொண்டேயிருப்பார். வெகு நன்றாகத் தர்க்கம் செய்வார். தனக்குச் சரியாக வாதிப்பவர்களிடத்தில் வெகு சந்தோஷப்படுவார். யார் எவ்வளவு கடுமையாக எதிர்த்துவிட்டாலும் கொஞ்சங்கூடச் கோபதாபம் காட்டாமல் வாதித்துச் சமாதானம் சொல்லிக் கலகலத்துச் சிரித்துப் பேசுவார். அவரிடத்தில், அவ்வரைப் பார்ப்பதற்கு முன்னாலிருந்து எனக்கு ஒருவித பக்தி. என்னைப் பார்த்துப் பழகியபின் என்னிடத்தில் அவருக்கு எப்போதும் திருப்தி. அடிக்கடி என்னோடு பேச ஆசையுடன் அவரே வருவார். அவருக்குத் தமிழ் புரியும். ஆனால் பேசத் தெரியாது. எங்களுக்குள் பேச்செல்லாம் ஆங்கிலத்தில்தான். எனக்கும் தெலுங்கு புரியும்; பேசப் போதாது.



தினந்தினம் மாலையில் பிரார்த்தனை நடத்துவோம். தனித்தனியாகவும் சேர்ந்தும் பாடுவோம். சில ஹிந்திப் பாட்டுகளும் பல தமிழ்ப் பாட்டுகளும் பாடப்பெறும். ஹிந்திப்பாட்டுகளை ஸ்ரீ சாம்பமூர்த்தி சுலபமாகக்கூடப் பாடுவார். தமிழ்ப் பாட்டுகளில் சிரமப்படுவார். ஆனாலும் தப்புத் தப்பாகவாவது உச்சரித்து சேர்ந்து பாட விரும்புவார். பாட்டுக்கும் அவருடைய சாரீரத்துக்கும் வெகு விரோதம். ஆனாலும் நல்ல ரசிகர்.

தமிழ்ப் பாட்டுகளில் பாரதியார் பாடல்களும் என்னுடைய பாடல்களும் பாடப்படும்.

ஒருநாள் என்னுடைய 'கிளிக் கண்ணிகளை' ஒரு நண்பர் பாடினார். அந்தப் பாட்டு, கூட்டில் சிறைப்பட்டுக் கிடக்கும் ஒரு கிளியைப் பார்த்து அது விடுதலை அடைவதற்கு வழி சொல்லிக் கொடுப்பதைப் பொருளாகக் கொண்டது. அந்தப் பாட்டு ஸ்ரீ சாம்பமூர்த்தியின் மனசைக் கவர்ந்தது. அதை மீண்டும் மீண்டும் பாடச் சொல்லி விளங்காத இடங்களில் அர்த்தத்தைக் கேட்டுத் தெரிந்துகொண்டு இன்புற்றார். முழுதும் கேட்டபின் அந்தப் பாட்டிலுள்ள கற்பனா சக்தியை மிகவும் மெச்சிவிட்டு ஆங்கிலத்தில், "இது பாரதியார் பாட்டுத்தானே?" என்றார். பக்கத்திலிருந்த என் நண்பர் சேலம் ஸ்ரீ சி. அனந்தாச்சாரியாரவர்கள், "அது பாரதியார் பாட்டல்ல. நம்ம ராமலிங்கம் பிள்ளை பாட்டு" என்று என்னையும் என் கவித் திறத்தையும் புகழ்ந்து அறிமுகப்படுத்தினார். "ஓ! அப்படியா! ராமலிங்கம் பிள்ளை இவ்வளவு நல்ல கவிஞரா! எனக்குத் தெரியாமற் போச்சே" என்றெல்லாம் ஆங்கிலத்தில் ஸ்ரீ புலுசு சாம்பமூர்த்தி என்னை மிகவும் பாராட்டினார். அன்று முதல் அடிக்கடி என்னிடம் தனியே வந்து என் பாட்டுகளில் எதையாவது சொல்லச் சொல்லி அர்த்தமும் கேட்டு மகிழ்வார்.

இப்படிச் சல்லாபித்து வருகிற நாட்களில் ஒரு நாள் நான் என்னென்ன இலக்கியங்களைத் தமிழில் செய்திருக்கிறேன் என்பதைபற்றிக் கேட்டார். நான் இரண்டொன்றைச் சொன்னேன். வசன ரூபமான கதைகளும் நாவல்களும் எழுதப்படவேணும் என்பதைப்பற்றிப் பேச்சு வந்தது. பல ஆங்கில, பிரஞ்சு, வங்காளி, மராத்தி எழுத்தாளர்களைப்பற்றி ஸ்ரீ சாம்பமூர்த்தியவர்கள் பேசிவிட்டு நானும் வசன நூல்களை எழுத வேண்டும் என்று வற்புறுத்தி ஓர் ஆசான் சீடனுக்குப் பேசுவது போல் சொன்னார். அதற்கு முன்னாலேயே வசனமாகவும் எழுத வேணும் என்று எண்ணிக்கொண்டிருந்த எனக்கு ஸ்ரீ சாம்பமூர்த்தி சொன்னவற்றைக் கேட்ட பின், உடனே எதையாவது எழுதிப் பார்த்துவிட வேணுமென்று உறுதி உண்டாயிற்று. மறுநாளே 'மலைக்கள்ளன்' எழுத ஆரம்பித்தேன்.

சிறையில் ஏ. பி. வகுப்பு சத்யாக்ரகக் கைதிகள் கூடுமான வரையில் கண்ணியமாகவே நடத்தப்பட்டு வந்தார்கள். எழுதவும் படிக்கவும் எவ்வளவு வேணுமானாலும் அவகாசமும் வசதிகளும் இருந்தன. என்னுடைய 'திருக்குறள் புது உரை', 'கம்பராமாயண ஆராய்ச்சிகள்' முதலான இலக்கியங்களும், பல கதைகளும், பாட்டுகளும் இந்தச் சிறைவாசத்தில்தான் உருவாயின. அவற்றுள் ஒன்று ' மலைக் கள்ளன்.'

இந்தக் கதை முற்றிலும் என்னுடைய கற்பனை. வேறு எந்த புத்தகத்துக்கும் எவ்விதத்திலும் சார்புடையது அல்ல. இதில் வரும் ஊர்கள் பேர்கள் எல்லாம் கற்பனையே. எவரையும் குறிப்பிட்டதல்ல.

செப்டம்பர், 1942 —வெ. இராமலிங்கம் பிள்ளை.

# மலைக்கள்ளன்

## அத்தியாயம் 1

**ச**ந்தோஷமும் சலிப்பும் கலந்து, சலனப்பட்ட மனத்தோடு **வீரராஜன்** தன்னுடைய அறையில் தலை குனிந்த வண்ணமாக மேலும் கீழும் உலவிக்கொண்டிருந்தான்.

திடீரென்று கதவைத் திறந்துகொண்டு மேல் மாடிப் படிகளின் பக்கத்தில் வந்து நின்று, "டேய்! யாரங்கே? ராமா, டேய்!" என்று கூப்பிட்டான்.

சிறிது நேரத்துக்குள், "எஜமானே, கூப்பிட்டீங்களா?" என்று ராமன் கேட்டுக்கொண்டே ஓடிவந்தான்.

"ஆம், கூப்பிட்டேன். யாராவது வந்தார்களா என்னைப் பார்க்க வேணுமென்று?"

"ஆமாங்கோ. இப்போதான் காளியண்ணன் சொல்லிக் கொண்டிருந்தான். யாரோ ஒரு கறுத்த ஆளுங்களாம். மேலைப் பாக்கத்திலிருந்து வந்தானுங்களாம். ராத்திரி ஒம்பது மணிக்கு மேலே தங்களிடம் வருவதாக அவன் எஜமானர் சொல்லச் சொன்னாராம்."

"அடே முட்டாள்! ஏன் என்னிடம் சொல்லவில்லை? நான் கேட்ட பிறகுதான் சொல்லவேணுமா? எவ்வளவு அவசரமான காரியமாயிருந்தாலும் இப்படித்தானே? நான் கேட்க மறந்திருந்தால் நீயும் சொல்ல மறந்திருப்பாய் அல்லவா? பேஷ்! வெகு நன்றாய் இருக்கிறது. உன்னை நம்பினால் போதும்" என்று வெகு கோபத்தோடு வீரராஜன் கர்ஜித்தான்.

"இல்லிங்கோ எஜமானே, தாங்கள் வெளியில் போயிருந்து இப்பத்தான் வந்தீங்கோ. நானும் பசுமாடுகளையெல்லாம்

கொட்டத்தில் கவனித்துவிட்டுக் குதிரைகளுக்குக் கொள்ளு எடுத்துக் கொடுத்துவிட்டு இப்பத்தான் வந்தனுங்க. வந்த ஒடனே காளியண்ணன் இம்மாதிரி யாரோ வந்தாங்களென்னு தங்களிடத்தில் சொல்லச் சொல்லிக்கொண்டிருந்தான். நீங்களும் கூப்பிட்ட சத்தங்கேட்டு ஓடியாந்தனுங்கோ,'' என்றான் ராமன்.

''சரி; நீ போய் ஆட்களையெல்லாம் நேரத்திலேயே சாப்பிடச் சொல்லி, அவரவர்களை அனுப்பிவிட்டு, நீ மட்டும் தனியாக வீதிக் கதவண்டை காத்திருந்து, அந்த மேலைப் பாக்கத்து ஆசாமி வந்தால் சந்தடி செய்யாமல் யாருக்கும் சொல்லாமல் எனக்குத் தகவல் கொடு. தெரியுதா? வேறு யாருக்குந் தெரியப்படாது. காளி, மூளி, காத்தான், தீத்தான் எவனும் இங்கே இருக்கக்கூடாது. ரொம்ப முக்கியமான சங்கதி. ஆமாம். தெரியுதா? ஜாக்கிரதை, போ........அடே, இங்கே வா, மறந்துவிட்டேன். நம்ம ஜானகிக்கு நெல் முதலானதெல்லாம் அனுப்பினானா கணக்கப்பிள்ளை? அவள் நேற்றே சொல்லி அனுப்பினாளே!''

''ஆச்சுங்க! அனுப்பியாச்சுங்க!! நாலு வண்டி நெல்லு, இன்னும் தாங்கள் சொன்ன சாமான்கள், ஆயிரம் ரூபா எல்லாம் கணக்கப்பிள்ளை அனுப்பினது எனக்குத் தெரியுங்கோ. நம்ம ஆசாரிகூட அவங்களுக்குச் செய்யச் சொன்ன வயிரத் தோடு, அட்டிகை எல்லாம் செய்தாச்சுன்னு எடுத்துக்கொண்டு வந்திருந்தாருங்க....எஜமான் வெளியிலே போயிருந்தபோது....'' என்று ராமன் அடுக்கினான்.

''சரி போ. எவுங்களுக்குச் செய்யச் சொன்னதுன்னு நீ கண்டே? ஆசாரி; அவனொரு மடையன்....இரு, இரு, ராமா! நம்ப குள்ளப்பயலை ரப்பர் வண்டியையும் கறுப்புக் குதிரையை யும் தயார் செய்து வண்டி கிட்டவே படுத்திருக்கச் சொல்லு. நான் கொஞ்சம் தோட்ட வீட்டுக்குப் போகவேண்டியிருந்தாலும் இருக்கும். சரி, போ. எனக்குப் பசியில்லை. சாப்பிட வர மாட்டேன். எட்டு மணிக்குக் கொஞ்சம் சூடான பால் மட்டும் நீ கொண்டுவா, போதும்.''

இராமன் பயபக்தியுடன் போய்விட்டான். வீரராஜன் தன் அறைக்குள் வந்து முகத்திலிருந்த வியர்வையை ஒரு சலவைத் துண்டினால் துடைத்துவிட்டு, தான் கையிற் கட்டியிருந்த வயிரங்களிழைத்த கைக்கடிகாரத்தை அவிழ்த்து மேஜையின் மீது வைத்துவிட்டு, பக்கத்திலிருந்த ஒரு பஞ்சணைச் சாய்வு நாற்காலியின்மீது சாய்ந்தான்.



ஆறு மணிதான் ஆகியிருந்தது. இன்னும் மூன்று மணி நேரம் போகவேணுமே—தான் ஆவலோடு எதிர்பார்க்கும் **மேலைப்பாக்கத்தான்** வர. வீரராஜன் கண்களை மூடிய வண்ண மாகப் பெருமூச்சு விட்டுக்கொண்டே படுத்திருந்தான்.

திடுக்கிட்டு எழுந்து உட்கார்ந்து, ''என்ன! நான் காணப் பிறந்த உனக்கு இவ்வளவு நெஞ்சழுத்தமா? ஆகட்டும் பார்த்து விடுகிறேன். இதனால் என்ன வந்தாலும் சரி. என்னுடைய ஆஸ்தியெல்லாம் போனாலும் சரி. நான் யார் தெரியுமா?....**வீரராஜன்**. இதுவரையிலும் வீரராஜனை அவமதித்தவர்கள் யாரும் தக்க தண்டனையின்றித் தப்பினவர்களல்ல. அன்றைக்கே உன்னைக் கொன்றிருப்பேன். ஆனால் என் மனம் துணிய வில்லை....ஆ! கண்மணீ!'' என்று எதிரில் நிற்கின்ற யாருடனோ வாதிப்பவன் போலப் பேசியவண்ணம் பெருமூச்சு விட்டுக் கொண்டே சாய்ந்துவிட்டான்.

மறுபடியும் சிறு குரலால், ''கண்ணே! மணியே! தேனே! என் உயிரை வேணுமானாலும் உனக்குக் கொடுப்பேனே! நீ என்னை இவ்வளவு அவமதிக்கலாமா? நானென்ன செல்வத்திற் குறைந்தவனா? அழகில்லாதவனா? ஆற்றலில்லாதவனா? அறிவில்லாதவனா? அல்லது அன்னியனா? ஏன் இப்படி ஏளனம் செய்கிறாய்? நான் உன்னுடைய மைத்துனன் அல்லவா? எனக்கு வேணுமானால் எத்தனையோ பெண்கள் காத்துக் கொண்டிருக்கிறார்கள். உனக்கு என்னைவிடத் தகுந்த கணவன் நம்மினத்தில் எட்டியமட்டும் வேறு யார் இருக்கிறார்கள்? நீயே சொல்லு....உம்....உம்....ஏன் பேசாமலிருக்கிறாய்?'' என்று பிதற்றிக்கொண்டிருக்கும்போது மணி எட்டு அடித்தது. அந்தச் சத்தம் அவனுக்குக் கேட்கவில்லை. இதற்குள் இராமன் ஓர் அழகான வெள்ளிக் கூஜாவில் பாலும், ஒரு தட்டில் பழங்களும் பக்ஷணங்களும் எடுத்து வந்து மேஜையின்மீது வைத்தான். மேஜையின்மீது கூஜாவை வைத்த சத்தத்தால் வீரராஜன்

கண்ணைத் திறந்து "டே! யாரது ?—ராமா !—நீயா ?—கழுதே —யார்ரா உன்னை இங்கே வரச்சொன்னது....? எங்கே?.... எங்கே?....எங்கே........அவளெங்கே?" என்று உளறினான்.

"மணி எட்டாச்சுங்கோ. சரியா எட்டு மணிக்குப் பால் கொண்டுவரச் சொன்னீங்களே! இதோ பால் கொண்டுவந்து வைத்தேனுங்க. வேறே யாரும் இங்கே வல்லீங்களே! எஜமான் யாரையோ எங்கேண்ணு கேட்டாப்பலே யிருந்துதுங்கோ. யாரையும் காணமுங்களே" என்று இராமன் நடுக்கத்தோடு பேசினான்.

"சரி, சரி, ராமா; நான் தூக்கத்தில் ஏதோபேசியிருப்பேன் போலிருக்கிறது. உடம்பு ரொம்பவும் அலுப்பாயிருக்கிறது. நாற்காலியிலேயே தூங்கிவிட்டேன் போலிருக்கிறது. சரி....அது கிடக்கட்டும். ஆள்களையெல்லாம் அனுப்பிவிட்டாயா? குள்ளப் பயலுக்குச் சொன்னாயா? மணியென்னாச்சு........ஓஹோ ! எட்டுத்தானா?...."

"ஆளுகளையெல்லாம் அனுப்பிவிட்டேனுங்க. குள்ளப் பயல் தயாரா யிருக்கானுங்க. நான் போய் வீதியண்டை காத்திருக்கேனுங்க."

"போ, ஜாக்கிரதை. நான் சொன்னதெல்லாம் நினைவிலிருக்கிறதா? சரி போ" என்று இராமனை அனுப்பிவிட்டுப் பாலைக் குடிக்கலாமென்று மேஜையின் அருகிலுள்ள ஓர் உயரமான நாற்காலியில் உட்கார்ந்தான். பாலைக் கிண்ணத்தில் ஊற்றி வெகு நேரம் ஆற்றிக்கொண்டே இருந்தான். பழத்தைக் கையிலெடுத்தான். மறுபடியும் தட்டிலேயே வைத்துவிட்டான். பாலை மட்டும் கொஞ்சம் குடித்தான். "சீச்சீ ! மடையன் ! என்ன இவ்வளவு ஆறிப்போன பாலைக் கொண்டுவந்து வைத்திருக்கிறான்!" என்று கிண்ணத்தை வைத்துவிட்டு; மேஜையின் மேல் இரண்டு முழங்கைகளையும் ஊன்றி, முகவாய்க்கட்டையை இரண்டு கைகளாலும் தாங்கினபடியே நெடுநேரம் உட்கார்ந்திருந்தான்.

இராமன் வெகு வேகமாக அறைக்குள் வந்தான். "என்னடா! ராமா! வந்துவிட்டானா? எங்கே........எங்கே



யிருக்கச் சொல்லி வந்தாய்? ....வேறு யாருமில்லையே?.... குள்ளப்பயலுக்குக்கூடத் தெரியக்கூடாது........"

"இல்லிங்கோ எஜமானே, அந்த ஆள் இன்னும் வரவில்லை. அம்மா.... நம்ம ஜானகியம்மாள் காத்துக்கொண்டிருக்கிறார்களாம்; தங்களை உடனே வரும்படி வேலைக்காரனை அனுப்பியிருக்காங்க."

"என்னடா! நான் சொன்னதை விட்டுவிட்டு........ ஜானகியா, கீனகியா ?....போகச் சொல்லு அவளை....வர முடியாது....போ—ஓடு-சொல்லு....என்னுடைய எண்ணமென்ன, விசாரமென்ன !....காத்திருக்காளாம்........கூப்பிட வந்து விட்டான்....அடெடெ, ராமா....இப்படி வா. அப்படிச் சொல்லாதே....எனக்கு உடம்பு சரியில்லை. நாளைக்கு வருவதாகச் சொல்லு....என்ன....தெரியுதா? நிதானமாகச் சொல்லி அனுப்பிவிடு, போ. நீ போய் வீதியிலே இரு. அவன் வருகிற நேரமாச்சு. வேறு யாராவது வந்தால் இப்போது பார்க்க முடியாதென்று சொல்லியனுப்பிவிடு. போ."

இராமன் போய்விட்டான். வீரராஜன் மறுபடியும் சாய்வு நாற்காலியில் சாய்ந்துகொண்டான்.

வீரராஜனுக்கு இருபத்தேழு வயதிருக்கும். நல்ல கட்டான தேகமும், கடூரமான பார்வையும் உள்ளவன். நிறம் சிவப்பென்றே சொல்லுவார்கள். உற்றுப் பார்த்தால் நல்ல புத்திக் கூர்மையுள்ளவனென்று தெரிய வரும். ஏறிய நெற்றியும், கூரிய மூக்கும், முறுக்கிய மீசையும், சுருக்கிய இதழ்களும், திரண்ட கன்னங்களும்; உருண்ட முகவாய்க்கட்டையும் உடைய அவனை மிக்க வசீகரமுள்ளவனென்று சொல்லமுடியாவிட்டாலும் அழகில்லாதவன் அல்ல. அவனுடைய சொல்லையும் செயலையும் நேரில் அறியாதவர்கள் அவனை நல்லவனென்றே எண்ணுவார்கள். ஆனால்; அவனுடைய பொரித்த பார்வையையும், நெறித்த வார்த்தைகளையும் கண்டவர்கள் அவன் மிக்க அகந்தையும் அஞ்சா நெஞ்சமும் உடையவன் என்பதையும், தான் கொண்ட ஆசையை முடித்துக்கொள்ள எத்தகைய காரியத்தையும் செய்யப் பின்வாங்கக்கூடியவன் அல்ல என்பதையும் அறிந்துகொள்ளக்கூடும்.

சிறு வயதிலேயே தந்தையை இழந்தவன். வருஷம் ஒன்றுக்குச் சுமார் முப்பதாயிரம் ரூபாய் வருமானமுள்ள சொத்துகளும், பல வீடுகளும், ஐந்தாறு நந்தவன மாளிகைகளும் இவனுக்கு உண்டு. விஜயபுரியில் இவனைக்காட்டிலும் செல்வர்கள் இல்லையென்றே சொல்லலாம்.

தந்தையில்லாமல், தாய் சொல்லைக் கேளாமல், தடுத்துச் சொல்லத் தக்க மனிதர்களுமில்லாமல், தானடித்த மூப்பாக வளர்ந்தவன். ஏராளமான செல்வத்தோடு ஏனென்று கேட்பாருமின்றிப் போனதினால் சிற்றினச் சேர்க்கையே மிகுந்து, சிறிதும் ஒழுக்கமில்லாதவனாகி, கண்டதே காட்சி கொண்டதே கோலமாக வளர்ந்து, குடியர், கொலைஞர், கள்ளர், காமுகர் இவர்களுடைய சகவாசமே அதிகப்பட்டு, காரணமில்லாமல் பிறருக்குத் துன்பமுண்டாக்குவதில் இன்பங்கொண்டு வாழ்ந்துவந்தான். இவனது இச்சைக்கு இணங்காத எவரும் பகையாளியே. தன்னை எதிர்த்தவர்களுக்கு எந்த விதத்திலும் தீங்கு செய்யாமல் விடமாட்டான்.

ஆனாலும் பல பெரிய மனிதர்களுடைய அறிமுகத்தாலும் தூரந்தொலைவுகளிலிருந்து இவன் வரவழைக்கின்ற சீமான்களுக்கும் சர்க்கார் உத்தியோகஸ்தர்களுக்கும் தன்னுடைய மாளிகையில் அடிக்கடி நடத்தும் வெகு விலையுயர்ந்த விருந்துகளாலும், ஆடல் பாடல் கச்சேரிகளாலும் ஊரில் வீரராஜன் வெகு பெரிய மனிதனாக விளங்கி வந்தான்........

மணி ஒன்பதும் போச்சுது; பத்தும் வந்தது. இராமனும் வரவில்லை. தான் எதிர்பார்த்துக்கொண்டிருக்கும் ஆளும் வரவில்லை. வெகு ஆத்திரத்தோடு வீரராஜன் எழுந்திருந்து; அந்த அறைக்கு அடுத்த தன் படுக்கையறைக்குச் சென்று, இருட்டில் வீதிப்புறமாக இருந்த ஒரு சாளரத்தின் வழியாக வீதிக் கதவின் பக்கமாகப் பார்த்துக்கொண்டே நின்றான். வெகு நேரம் காத்திருந்தும் ஆள் நடமாட்டம் காணப்படவில்லை. சற்றுச் சலிப்படைந்தவனாக வீதியின் வடகோடியிற் பார்வையைத் திருப்பினான். மாளிகையின் வெளிச்சுவரின் வடகோடியில் வீதிப்புறமிருந்து ஒரு கறுத்த உருவம் சுவரின் மேல் ஏறினது போலக் கண்ணுக்குப் புலப்பட்டது. அந்த உருவம் வீதியின் அப்புறத்திலிருந்த முனிசிபல் விளக்குக்கும் தன்னுடைய பார்வைக்கும் இடையில் இருந்ததால் அதனுடைய அசைவு இவனுக்கு நன்றாகத் தெரிந்தது. சுவரின் மேல் ஏறிய அந்த உருவம் சுவரின் இந்தப் புறத்திலிருந்த ஒரு புளியமரக் கிளையைப் பிடித்துக்கொண்டு வீட்டுக்குள் இறங்குவது போலத் தெரிந்தது. யாரது சுவரின்மேல் ஏறினது? அவனாகத்தான் இருக்க வேண்டும். அல்லது அவனுடைய ஆள்களில் ஒருவனாக இருப்பான். வாசலில் நின்றுகொண்டிருக்கிற ராமனைக் கண்டு சந்தேகித்துவிட்டான் போல் இருக்கிறது. இருந்தாலும் இப்படிச் சுவரேறி வரவேண்டிய காரணமில்லையே! நாம் போய்ப் பார்ப்போம்....' என்று நினைத்துக்கொண்டே வீரராஜன் மாடியிலிருந்து இறங்கி வீட்டின் வாசலுக்கு வந்தான். கதவைத் திறந்து இரண்டெட்டுப் போவதற்குள் எதிரில் இராமன் வந்தான். "எஜமானே; அந்த மேலைப் பாக்கத்து ஆள் வந்திருக்குதுங்கொ" என்று மெதுவாகச் சொன்னான்.



"ஆ! அப்படியா? சரி, அவன்தானா ?....நான் மேலே போகிறேன். நீ அவனைக் கூட்டி வந்து, மேல் மாடிக்கு வழி காட்டிவிட்டுப் போய், வாசலிலேயே யாரும் வராதபடி காவல் இரு, தெரியுமா?" என்று சொல்லி வீரராஜன் மேல்மாடிக்குப் போனான்.

சற்று நேரத்திற்கெல்லாம் மேல்மாடிக்கு ஆள் வந்து சேர்ந்தான். வீரராஜன் தன்னுடைய அலங்காரமான அறையின் கதவண்டை காத்திருந்து, "என்ன காத்தவராயா, ஏன் இந்நேரம்? நான் சாயந்திரம் ஐந்து மணியிலிருந்து காத்திருக்கிறேனே!" என்றான்.

வந்தவன் மேலைப்பாக்கத்துக் **கொள்ளைக் காத்தவராயன்**; கைதேர்ந்த கள்ளன். களவும் கொலையும் அவனுக்குக் கள்ளுண்பன போல. அவனுடைய கன்னக்கோலுக்கு இடங்கொடுக்காத சுவரில்லை. அவனுடைய கள்ளச் சாவிக்குத் திறக்காத பூட்டில்லை. அவனுடைய தடியடி பட்டுத் தப்பியவருடைய ஆயுள் மிகவும் கெட்டியானதென்றே சொல்ல வேண்டும்.

கரடு முரடான கறுத்த சரீரமும், கண்டால் எமனுங்கூடப் பயப்பட வேண்டிய பயங்கரமான தோற்றமும் உடையவன். சிவந்த கண்களும், உயர்ந்த மூக்கும், தடித்த உதடுகளும், துடித்த மீசைகளும் உள்ளவன்; மூக்கின் அடியிலிருந்து உதடுகளின்மீது படாமல் இரும்புக் கம்பிகளால் ஆக்கப்பட்டவை போன்று ஒதுக்கப்பட்ட அவனுடைய மீசைகள் இருபுறத்திலும் நேராகச் சென்று இரண்டு காதுகளிலும் தொங்கிக்கொண்டிருக்கும் வயிரக்கடுக்கன்களைத் தொட்டுக்கொண்டிருந்தன. கழுத்திலிருந்து ஒரு மணிவடம் மயிரடர்ந்த அவனுடைய மார்பில் புரண்டுகொண்டிருந்தது. அதில் தங்கத்தில் கட்டிக் கல்லிழைத்த இரண்டு புலிப்பற்களோ அல்லது நரிக் கொம்புகளோ தொங்கிக் கொண்டிருந்தன. உள்ளங்கழுத்தில் சதுரமான ஒரு தாயத்தும், இடது புறத்தில் நீண்டு உருண்ட ஒரு தாயத்தும் காணப்பட்டன. அநேகமாக எல்லா விரல்களிலும் மோதிரங்கள் இருந்தன. தலையில் ஒரு பட்டு வஸ்திரத்தை, பாகையாகக் கட்டியிருந்தான். இடுப்பில் ஒரு விலையுயர்ந்த ஜரிகை வேஷ்டியைச் சல்லடம் போல் கட்டி அதன்மேல் ஒரு சிவந்த பட்டுத் துண்டைக் கச்சையாக இறுக்கிக் கட்டித் தங்க அரைஞாணை அதற்கு மேல் எடுத்துப் போட்டிருந்தான். இடுப்பில் இரண்டு மூன்று இடங்களில் ஏதேதோ சொருகியிருந்தான்.

"என்ன காத்தவராயா! இது உன்னுடைய சொந்த வீடு போலாச்சே, நீ தாராளமாக நேராக வரலாமே? நீ வரப் போகிறாயென்றே ராமனை வீதிவாசலில் காத்திருக்கச் சொன்னேன். சுவரின்மேல் ஏறிக் குதிக்க வேண்டிய கஷ்டம் உனக்கென்னத்துக்கு."

"செவுத்து மேலேயா? நானா? இல்லீங்களே; நான் இப்பத்தான் நேராக வாசல்வழியாக வந்தேனுங்க."

"பின் யாரோ வடகோடிச் சுவரின்மேல் ஏறி உள்ளே இறங்கினது போலிருந்ததே! உன்னுடைய ஆசாமிகளில் யாராவது இருக்குமோ?"



"என்னுடைய ஆள்களா? இருக்காதுங்க. கொம்பேறியைத்தான் நான் சாயங்காலம் அனுப்பினேன். அவனை நான் மறுபடியும் பார்க்கலிங்களே! அவன் ஏதாவது வந்தானோ என்னமோ, அவன் வந்தால், நேர வருவானுங்களே. நான் அப்புறம் விசாரிக்கிறனுங்க" என்று காத்தவராயன் தானும் தன்னுடைய ஆட்களுந் தவிர; வேறு யாரும் வந்திருக்க முடியாதென்ற எண்ணத்தோடு சொல்லி முடித்தான்.

"சரி, அது கிடக்கட்டும், காரியத்தைக் கவனிப்போம். காத்தவராயா, நீ முன் போல் நம்மைக் கவனிப்பதில்லை. இப்படித்தானா? உன்னைத்தான் நான் மலையாக நம்பியிருக்கிறேன்" என்று வீரராஜன் ஆரம்பித்தான்.

"சாமீ, என்ன அப்படி எடுத்துப் போட்டுச் சொல்லிவிட்டிங்கோ? ஒங்களைவிட எனக்கு ஒசந்தவங்க உண்டா? இதோ பாருங்கோ, உங்க வீட்டு வாசலிலே காத்துக்கிடக்கிற நாய்க்குட்டிங்க இது. இந்தச் சடலத்தை ஒங்க காலுக்குச் செருப்பாய்த் தச்சி போட்டுக்கக்கூடச் சொந்தமுண்டுங்க. என்ன அப்படிச் சொல்லிட்டிங்கோ, எஜமானே! நீங்க செய்ததையெல்லாம் இந்தக் கட்டை மறந்துடுமா? சாமி, சாமி, அப்படி நினைக்காதிங்க. காத்தவராயன் நன்றி கெட்ட ஜாதியில்லிங்க."

"இல்லையில்லை; ஒரு வாரமாக ஆள்மேல் ஆள் அனுப்பியும் பார்க்க முடியவில்லையே என்று விளையாட்டாகச் சொன்னேன். நீ வருத்தப்படாதே. எனக்குத் தெரியாதா உன்னை?"

"என்ன செய்வேனுங்க. இந்த நாய் எத்தனையோ எடத்துக்கு ஓடவேண்டியிருக்குதுங்க. எல்லாரும் வேண்டியவங்க. பெரிய மனுசருங்க. அவுங்க கூப்பிட்டா போகாட்டி நல்லாவா இருக்குதுங்க? பாருங்க. நம்ம குட்டிப்பட்டி ஜமீன்தார் அவசரமா ஆள் அனுப்பினாருங்க. நான் அங்கே போய்ப் பதினஞ்சு நாளாச்சுங்க. அவருக்கு ஒரு பெரிய ஒபகாரம் செய்துவிட்டு வந்தேனுங்க. ஐயாயிரம் ரூபாயும் இந்த வயிரக்

கடயமும் கொடுத்தாருங்க" என்று சொல்லிக்கொண்டே இடுப்பிலிருந்து ஒரு விலையுயர்ந்த வயிரக் கடயத்தை எடுத்துக் காட்டினான்.

வீரராஜன் அதை வாங்கித் திருப்பித் திருப்பிப் பார்த்து விட்டு "பேஷ்! நன்றாயிருக்கிறது. நல்ல வெகுமானம். உனக்கென்ன காத்தவராயா? உன்னுடைய தைரியத்துக்கு இதுதானா? இதைப் போல் எத்தனையோ பங்கு கொடுக்கலாம். இதில் இருக்கிற வயிரங்கள் அவ்வளவு சுகமில்லை. இருந்தாலும் பாதகமில்லை .........நான் ஒன்று காட்டுகிறேன். அதைப் பார்" என்று சொல்லிக்கொண்டே தன்னுடைய சாவிக் கொத்தை எடுத்து, அருகிலிருந்த இரும்புப் பெட்டியைத் திறந்து, ஒரு சிறு நகைப் பெட்டியை எடுத்தான். அதிலிருந்து ஒரு வயிர அட்டிகையையும், நவரத்தினங்கள் இழைத்த ஒரு பதக்கத்தையும், ஒரு ஜதை வயிரக் கம்மல்களையும், மிகவும் விலையுள்ள பலவித வர்ணக் கற்கள் இழைத்த ஒரு ஜடை பில்லையையும், மூன்று மோதிரங்களையும் காட்டி, "இதெல்லாம் என்ன விலையிருக்கும்? மதிப்பிடு பார்க்கலாம், காத்தவராயா!" என்றான்.

"ஐயோ! சாமி! எனக்கு அவ்வளவு தெரியுமுங்களா? ஏதோ தங்களைப் போல எஜமான்கள் கொடுத்தால் வாங்கிக் கொள்ளுவதைத் தவிர எனக்கு விலை தெரியுங்களா? நான் வாங்கினதுமில்லை; வித்ததுமில்லிங்கோ.........ஆமாங்க, ஜெகஜ்ஜெகன்னு ரொம்ப ஒசந்ததாகத்தான் தெரியுதுங்கோ. ஆமாங்க.......இதெல்லாம் யாருக்குங்க? எஜமானுக்குக் கலியாணம் ஆகியிருந்தால் போட்டுப் பார்க்கலாம். கலியாணம் எப்பங்கோ, சாமி? அதுக்குத்தானா?" என்றான்.

"சொல்லுகிறேன். உனக்குச் சொல்லாமல் யாருக்குச் சொல்லப் போகிறேன்....அதிருக்கட்டும். நேற்றுச் **சோலையப்பனை** அனுப்பினேனே எல்லாம் விவரமாகச் சொன்னானா?.... காரியத்தை வெகு சீக்கிரம் முடித்துவிட வேண்டும். எனக்கு அதே ஏக்கமாக இருக்கிறது; இப்போது எனக்கு வந்திருக்கிற



அவமானம் இதுவரையிலும் நான் கனவிலேகூடக் கேட்டது இல்லை."

"அதுக்கென்னங்க, தாங்கள் சொன்னால் பதிலுண்டா? ஆமாங்க, அந்தப் பெண் ஒங்க மாமன் மகள்தானுங்களே. ஒங்களுக்கு ரொம்ப உரிமையாச்சுதுங்களே. நேராகக் கேட்டு முடிச்சிக்க முடியாதுங்களா?"

"ஆமாம் சொந்தந்தான்; அதையேன் கேட்கிறாய்! காத்தவராயா, யாராரையோ போய்க் கேட்கச் சொல்லிப் பார்த்தாய்விட்டது. டேயப்பா! அந்தச் **சொக்கேசன்** லேசான ஆளா! அது கிடக்கட்டும். அந்தப் பெண்ணினுடைய கர்வம் என்னவென்று நினைக்கிறாய் நீ? இந்த நகையெல்லாம் யாருக்கென்று நினைக்கிறாய்? நீ....ரொம்பப் புத்திசாலி. நீ சொன்னது மெய்தான். என்னுடைய கலியாணத்தை நினைத்துத்தான் இதுகளைச் சுமார் லக்ஷம் ரூபாய் செலவு செய்து செய்யச் சொன்னேன். சொக்கேசர் ஊரிலில்லாத சமயம் பார்த்து, அந்தப் பெண்ணை நாமே வசப்படுத்தலாமென்று எண்ணி, இந்த நகைகளையும் ஒரு கடிதத்தையும் நம்பிக்கையான ஒரு பெண் மூலமாக அனுப்பினேன்....அடடா! என்ன சொல்லட்டும்? காத்தவராயா.... என் மனம் கொதிக்கிறதே!....இதுவரையிலும் யாரும் என்னை...."

"வருத்தப்படாதிங்கோ, சொல்லுங்க, சொல்லுங்க எஜமானே!" என்றான் காத்தவராயன்.

"போனவளை மிக மரியாதையாக உபசரித்து, கடிதத்தை வாங்கி வெகு நிதானமாக பார்த்துவிட்டு, நகைகளைப் பார்த்துக் கலகலவென்று சிரித்தாளாம். பிறகு, 'ரொம்ப சந்தோஷம்; அவருக்குப் பதில் கடிதம் கொடுக்கிறேன். கொண்டுபோய்க் கொடுங்கள்' என்று பதிலனுப்பினாள். போனவள் தான் போன காரியம் கைகூடிவிட்டது போல் என்னிடம் வந்து மிக்க சந்தோஷத்தோடு நகைகளையும் பதிலையும் கொடுத்துத் தன்னுடன் அந்தப் பெண் வெகு சந்தோஷமாகப் பேசின மாதிரியையெல்லாம் வர்ணித்தாள். நான் வெகு ஆசையோடு

கடிதத்தையும் நகைகளையும் வாங்கிக்கொண்டு, தனியாக என்னுடைய அறைக்குள் சென்று, வெகு ஆவலோடு கடிதத்தைப் பிரித்துப் படித்தேன். ஆஹா! அதில் இருந்த வார்த்தைகளை நினைத்தால்...." என்று சொல்லிக்கொண்டே தன்னுடைய கைப்பெட்டியை அவசரமாகத் திறந்து ஒரு கடிதத்தை எடுத்து, "பார், நீயே பார், உன்னிடத்தில் எனக்கென்ன ரகசியம்" என்று கடிதத்தைக் கொள்ளைக் காரனிடம் நீட்டினான்.

"எனக்கென்னாங்க படிக்கவா தெரியும்? சொல்லுங்க. நீங்களே படிங்க, கேக்கிறேன்" என்று காத்தவராயன் சொல்ல,

"கேள் காத்தவராயா, சில முக்கியமான பாகத்தை மட்டும் படிக்கிறேன். 'நீர் எனக்குக் கடிதம் எழுதத் துணிந்தது உமக்குப் பித்தம் பிடித்திருக்கிறதென்பதைக் காட்டுகின்றது. உம் நகைகளையும் செல்வத்தையும் காட்டி எனக்கு ஆசை யூட்ட எண்ணியது, சீதைக்கு இராவணன் மூன்று லோகத்தின் ஆட்சியையும் தருவதாகச் சொன்னது போலிருக்கிறது. சுருக்கமாகச் சொல்லிவிடுகிறேன். நீர் ஓர் ஒழுக்கமில்லாத வீணர். பாவங்களுக்கெல்லாம் இருப்பிடமான உம்மை நினைப் பதும் பாவம். அறிவுடைய எந்தப் பெண்ணும் உம்மிடத்தில் ஆசைகொள்ள மாட்டாள். உமது எண்ணம் என்னிடத்தில் பலிக்காது. என்னுடைய தந்தையின் வாயால் உமக்குப் பன் முறையும் சொல்லியாகிவிட்டது. இதோ நானும் சொல்லிவிடு கிறேன். இனியேனும் இந்த ஆசையை விட்டுவிடாமல் போனால் மானமழிவீர்....' பார்த்தாயா? நண்பா, காத்தவ ராயா, நான் மானமழிவேனாம்! இந்தச் சிறுக்கிக்கு இவ்வளவு கொழுப்பா? இந்த வார்த்தை உனக்குப் பொறுக்குதா? இவளை உடனே மானங் கெடுக்காவிட்டால் இனிமேல் வீரராஜன் இருந்தென்ன, போயென்ன? உன்னைப் போன்ற தீரர்களுடைய ஒத்தாசையெல்லாமிருந்தும் எனக்கு இந்த அவமானம் வரலாமா? என்ன? என்ன சொல்லுகிறாய் காத்தவராயா? உடனே நான் சொன்ன காரியத்தை நீ முடித்தே தீரவேண்டும்" என்று வெகு பதற்றத்தோடு சொன்னான்.



"அப்படியே ஆகட்டுங்க. நான் இதிலே செய்யவேண்டியது என்ன? வெவரமாகச் சொல்லிடுங்க."

"நீயா? அந்தப் பெண்ணை யாருக்கும் தெரியாமல் நம்ம தோட்ட வீட்டுக்குக் கொண்டுவந்து சேர்த்துவிடவேணும். அவ்வளவுதான். அவளைத் தெரியுமல்ல உனக்கு?"

"ஆ! என்ன அப்படிச் சொல்றீங்க? சொக்கேசருடைய ஒரே பெண்ணை..........அடடா, சந்திரமதியாட்டம் — அந்தப் பொண்ணு எனக்குத் தெரியாதுங்களா. அந்த அம்மாளைப் பாக்காதவங்க பாவிங்க."

"சரி, நான் வண்டியைக் கட்டிக்கொண்டு தோட்ட வீட்டுக்குப் போய்க் காத்துக்கொண்டிருக்கிறேன். ஜாமத்துக்குப் பின் மூன்று மணிக்குள் முடித்துவிட வேண்டும்."

"இன்னைக்கேங்களா? சாமி, முடியாதுங்கோ. நான் ஒங்களைப் பார்த்து வெவரம் தெரிஞ்சுக்கிட்டு அப்புறந்தான் வேண்டிய ஏற்பாடுகளைச் செய்யலாமின்னு வந்தேன். முக்கிய மான ஆள் சங்கிலி இன்னும் வந்து சேரலைங்கோ. ஏன்? நாளைக்கென்னங்கோ?"

"ஒன்றுமில்லை. இப்போது ஆசாமி ஊரில் இல்லாத சமயம். சொக்கேசன் ஊருக்குப் போய் மூன்று நாளாச்சுது. ஒரு வாரத்துக்குள் வருவதாகப் போயிருக்கிறானாம். அவன் ஒரு வேளை நாளைக்கு வந்துவிட்டாலும் வந்துவிடலாம். நாம் ஒரு நாள்கூடத் தாமதிக்கக்கூடாது."

"நாளைக்கு முடிச்சுவிடுறனுங்கோ. நீங்க ஒண்ணும் யோசிக்காதிங்க.... ஆமாங்க.... அந்த வீடு ஆள் அம்பு நெறைய இருக்கிற இடமாச்சுதுங்க. ஏதாவது தடங்கல் நேந்தாக்க நம்ம தடி, கத்தி எதுக்காவது வேலையிருந்தாலும் இருக்குமுங்கோ. பாதகமில்லிங்களே?"

"ஐயோ! காத்தவராயா! கூடுமானவரையில் யாருக்கும் மோசமில்லாமலேயே பார்த்துக்கொள். தீராதபட்சத்தில் ஆபத்துக்குப் பாவமில்லை. ஆனால்—இதை மட்டும் ரொம்பக்

கவனிக்க வேணும். என்ன? ....அந்தப் பெண்ணுக்கு ஒருவித ஆபத்தும் வந்துவிடாதபடி....சும்மா....அப்படியே மல்லிகைச் செண்டு மாதிரி கசங்காமல் வந்து சேர வேணும். தெரியுதா?.... ஆமாம். பத்திரம், உன்னுடைய ஆள்கள் ஏதாவது முரட்டுத் தனம் செய்துவிடப் போகிறார்கள்; ஜாக்கிரதை.''

"ஆ! என்னாங்க? அது தெரியாதுங்களா எனக்கு? அதுக்கெல்லாம் நானாச்சுங்க?''

"சரி, நாளைக்கா? அப்படியே செய். தாமதம் கூடாது. எனக்கு அதே கவலை. இந்தா .... இதை வைத்துக்கொள்'' என்று கூறி, தயாராக வைத்திருந்த இரண்டாயிரம் ரூபாய் நோட்டுகளைக் காத்தவராயனிடத்தில் கொடுத்தான்.

"எவ்வளவு இருக்குதுங்கோ இதிலே?''

"இரண்டாயிரம் இருக்கிறது. நேற்றுச் சோலையப்பனிடம் 2,500 அனுப்பினேனே, வந்ததா?''

"ஆஹா — வந்துதுங்க. எஜமான் பாத்து எவ்வளவு உத்தரவு செய்தாலும் சரி .... என்னமோ எனக்கும் பண்ணை பெரிசுங்கோ, ரொம்ப ஆள்களை வைத்துத் தாங்க வேண்டியவனுங்கோ. இதோ பாருங்கோ, இப்ப இங்கே வரும் வழியிலே போலீசு ஏட்டு, கறுப்பையா என்னை அடையாளங் கண்டுக்கிட்டு, 'என்ன காத்தான், எங்கே இப்படி? ஏதாவது வேட்டையா?' இண்ணாருங்க. உடனே அவர் கையிலே நூறு ரூபாய் கொடுத்துவிட்டுத்தான் வந்தேனுங்க. எல்லாமே நானா திங்கிறனுங்கோ?'' என்று காத்தவராயன் முணுமுணுத்தான்.

"சரி, இந்தா, அதற்கெல்லாம் பயப்படாதே'' என்று வீரராஜன் மறுபடியும் பெட்டியைத் திறந்து ஐந்நூறு ரூபாய் எடுத்துக் கொடுத்தான். வாங்கிக்கொண்டு காத்தவராயன் வீரராஜனைப் பல முறை வணங்கி விடை பெற்றுக்கொண்டு போய்விட்டான்.

வீரராஜன், "அப்பாடா! இனி ஒரு கை பார்த்துவிடுகிறேன்'' என்று பெருமூச்சு விட்டுவிட்டு, இராமனைக் கூப்பிட்டு, தான் அன்று தோட்ட வீட்டுக்குப் போவதில்லையென்று வண்டிக்காரக் குள்ளப் பயலிடம் சொல்லிவிடச் சொல்லியனுப்பிவிட்டு, தன் படுக்கையறைக்குள் சென்று தாழிட்டுக் கொண்டான்.

## அத்தியாயம் 2

"அம்மா பூங்கோதை, என்ன சாப்பிடாமல்கூடப் படித்துக்கொண்டே இருக்கிறாய்? சாப்பிட்டுவிட்டு வந்து படிக்கலாம், வா. மணி எட்டுக்கு மேலாச்சே, தம்பியும் ஊரிலில்லை. நேரத்தில் சாப்பிட்டுவிட்டால் வேலைக்காரர்கள் தங்கள் தங்கள் காரியங்களைப் பார்த்துவிட்டுப் படுக்கப் போவார்கள். விடியுமுன் எழுந்து அவர்கள் நெல் அறுப்புக்குப் போகவேண்டும். வா, போவோம்'' என்று காமாக்ஷியம்மாள், அந்த அழகான அறையில் ஒரு பெரிய மேஜையின் அருகில் உட்கார்ந்து ஊன்றிப் படித்துக்கொண்டிருந்த **பூங்கோதையைக்** கூப்பிட்டாள்.

"அத்தை! இதோ வந்துவிட்டேன். நேற்று உங்களுக்குப் படித்து அர்த்தம் சொல்லிக்கொண்டிருந்த பாட்டுக்குமேல் இன்றைக்குப் படித்து அர்த்தஞ் சொல்லச் சில பாட்டுகளைப் பார்த்துக்கொண்டிருக்கிறேன். சீதை இராவணனுக்குப் புத்தி சொல்லக்கூடிய இடம் மிகவும் நன்றாக இருக்கும். அத்தை! நேற்று எந்த இடத்தில் கதையை நிறுத்தினோம்? உங்களுக்கு ஞாபகம் இருக்கிறதோ?''

"ஆமாண்டி, என் கண்ணே! இன்றைக்கும் அதைக் கேட்க ஆசையாகத்தான் இருக்கிறது. வா, சாப்பிட்டுவிட்டு வந்து படி, கேட்கிறேன்'' என்று காமாக்ஷியம்மாள் சொன்னவுடன், பூங்கோதை படித்துக்கொண்டிருந்த பக்கத்துக்கு ஒரு காகிதத் துண்டை அடையாளம் வைத்து, புத்தகத்தை மூடிவிட்டு எழுந்து, அத்தையுடன் சாப்பிடப் போனாள்.

பூங்கோதை **சொக்கேச**ருடைய ஒரே குழந்தை. **விஜயபுரி**யிலுள்ள பெரிய பண்ணைக்காரர்களில் சொக்கேசரும் ஒருவர். நல்ல கல்வி கேள்வியும் தெய்வ பயமும் உள்ளவர். ஆடம்பரம் இல்லாத வாழ்க்கையையுடையவர். யாரிடத்தும் அன்பாக நடந்துகொள்ளுவார். கற்றவர்களுக்கும் ஏழைகளுக்கும் கணக்குப் பார்க்காமல் உதவுவார். ஆனால் சங்கடங்கள் ஏதேனும்

வந்துவிட்டால் சகிக்கக்கூடியவர் அல்ல. பயந்தவர் என்றே சொல்ல வேண்டும்.

வயது நாற்பத்தைந்துக்குமேல் இருக்கும். சுமார் பத்து வருஷங்களுக்குமுன் பூங்கோதைக்கு ஆறு வயதிருக்கும் போது தன்னுடைய அருங்குணமுடைய மனைவியை இழந்து, அந்த மனைவியினிடத்தில் வைத்திருந்த காதலினால் மறு கலியாணத்தில் இச்சையில்லாமல் வேதாந்த சித்தாந்த விசாரணைகளிலேயே காலங் கழித்துக்கொண்டு, தம மகள் பூங்கோதையிடத்திலேயே தன்னுடைய அன்பையெல்லாம் செலுத்தி, அவளை வெகு அருமையாக வளர்த்து வந்தார். நல்ல படிப்பாளிகளைக் கொண்டு வீட்டிலேயே பூங்கோதைக்கு வெகு நல்ல கல்வி கற்பித்தார். சங்கீதம், சித்திரம் முதலிய வித்தைகளிலும் பூங்கோதை திறமை வாய்ந்திருந்தாள்.

சொக்கேசருக்கும் இரண்டு தமக்கைகளும் ஒரு தங்கையும் உண்டு. மூத்த தமக்கைதான் காமாக்ஷியம்மாள். இளைய தமக்கை அலர்மேல்மங்கையம்மாள், விஜயபுரியிலேயே ஒரு பணக்காரருக்கு வாழ்க்கைப்பட்டிருந்து, இரண்டு குழந்தைகளை விட்டுவிட்டு இறந்து போனாள். அந்த இரண்டு குழந்தைகளில் ஒருவன், வீரராஜன். சொக்கேசருடைய தங்கை பார்வதி என்றவள், சிறு பிராயத்திலேயே கணவனை இழந்துவிட்டுத் தன்னுடைய சொத்துகளுடன் வந்து சொக்கேசருடைய வீட்டிலேயே வசித்து வந்தாள். பார்வதியம்மாள் பயமற்ற இயற்கையும் படபடத்த முன் கோபமும் உடையவள். எங்கும் எவரிடத்தும் கூசாமல் பேசும் குணமுடையவள். என்றாலும் குற்றமற்றவள். இளம்பிராயத்திலேயே அறுத்தவளானதால் அவள் எந்த நேரத்திலும் எந்த இடத்திலும் கூசாமல் நடமாடுவதைச் சிலர் கண்டிப்பதுண்டு. இருந்தாலும் சுபாவத்தை மாற்ற முடியவில்லை. இதற்காகத் தன் சுற்றத்தாரில் ஒருவர் இவளுடைய நடத்தை இழிவானதென்று பேசிவிட்டதைக் கேட்டுத் திடீரென்று கோபித்துக்கொண்டு கிணற்றில் விழுந்து இறந்து போவதாக எங்கேயோ போய்விட்டாள். எந்தக் கிணற்றில் விழுந்தாளென்றும் தெரியவில்லை. பிணமும் கிடைக்கவில்லை.



எனவே, சொக்கேசருடைய சகோதரிகளில் மிஞ்சியவள் காமாக்ஷியம்மாளே. காமாக்ஷியம்மாளும் கணவனை இழந்தவள். காமாக்ஷியம்மாளுடைய கணவன் வீட்டில் கள்ளர்கள் புகுந்துவிட அவர்களோடு போராடியதில் அடிபட்டு, அதனால் வெகுநாள் அசௌக்கியமாயிருந்து, காமாக்ஷியம்மாளுடைய கணவன் கணேசர் இறந்து போனார். இரண்டு ஆண் குழந்தைகளையும் ஒரு பெண் குழந்தையையும் கூட்டிக்கொண்டு தன் கணவனுடைய ஆஸ்திகளையெல்லாம் விற்றுப் பணமாக்கிக் கொண்டு பிறந்த வீட்டில் சொக்கேசருடனேயே காமாக்ஷியம்மாள் இருந்து வந்தாள்.

அவளுடைய இரண்டு ஆண்மக்களில் மிக்க அழகும் ஆற்றலும் உள்ளவனாயிருந்த குமார வீரன் என்ற மூத்த மகன், அவனுடைய பதினைந்தாவது வயதில் எங்கேயோ காணாமல் போய் விட்டான். முரட்டுப் பிள்ளைகளுடன் சேர்ந்துகொண்டு சேவல் சண்டை, ஆட்டுக்கடாச் சண்டை, மல்யுத்தம் இவற்றிலேயே காலங்கழித்தும், காடுகளில் காலம் நேரம் கருதாமல் வேட்டைக்குப் போவதுமாக இருந்தான். அவனைக் காட்டில் ஒரு நாள் சிறுத்தை அடித்துத் தின்றுவிட்டதாகச் சிலர் சொன்னார்கள். கப்பலேறிப் பினாங்குக்குப் போய்விட்டதாகச் சிலர் சொன்னார்கள். மூத்த மகனை இழந்த துக்கத்தால் காமாக்ஷியம்மாள் நெடுநாள் நோயில் கிடந்து, ஏதோ தப்பிப் பிழைத்தாள்.

பூங்கோதைக்குத் தன் தாயார் இறந்து போனபின் இந்த அத்தைதான் ஆதரவு. காமாக்ஷியம்மாளும் பூங்கோதையை வெகு அன்பாக வளர்த்து அவளுடைய அழகையும் புத்தி நுட்பத்தையும் பார்த்துத் தன்னுடைய மூத்த மகன் இல்லையே என்று எண்ணி எண்ணிக் கண்ணீர் வடிப்பாள். இளைய மகன், பூங்கோதைக்கு வயதில் இளையவன்.

காமாக்ஷியம்மாளும் பூங்கோதையும் சாப்பிட்டுவிட்டு வந்தார்கள். பூங்கோதை தான் வைத்துப் போன இராமாயணப் புத்தகத்தைக் கையில் எடுத்துக்கொண்டு மேஜையின் அருகில்

இன்னொரு நாற்காலியை இழுத்துப் போட்டு, அத்தையை உட்காரச் சொல்லித் தானும் உட்கார்ந்தாள்.

"அத்தை, நேற்று எந்த இடத்தில் கதையை விட்டோம். சொல்லுங்கள் பார்ப்போம்'' என்றாள்.

"நேற்றா.... உம்.... ஊம்.... ஊஊம்.... அதுதான் அந்த ராவ ண்ணன் அகோச வனத்துக்கு வந்தான்."

"அத்தை! அத்தை! அகோசவனம் அல்ல, அத்தை; அசோகவனம் அத்தை'' என்று பூங்கோதை கல்லென்று சிரித்தாள். காமாக்ஷியம்மாளும் கூடச் சிரித்து, "நானென்ன படிச்சாயிருக்கிறேன்? அந்த வார்த்தையெல்லாம் எனக்கு வர மாட்டேங்குது. நானென்ன செய்வேன்? கெடக்குது, கதையைச் சொல்லு,'' என்றாள்.

"சரி அத்தை, கதையை விட்ட இடத்தை நீங்கள் சொல்லவில்லையே!''

"கதையா? அதுதான் ராவணன் வந்து 'கண்ணே', 'பெண்ணே', என்றான். சீதை அவனைப் பார்த்துக் 'குறும்பே', துரும்பே' என்கிறான்.''

மறுபடியும் பூங்கோதை கலகலவென்று சிரித்தாள்.

"நான் எப்படிப் பேசினாலும் நீ தப்புக் கண்டுபிடிக்கிறாய். உன்னோடு எலக்கணமாகப் பேச என்னால் முடியுமா? குமாரவீரன் இருந்தால் உன் பேச்சுக்கும் அவன் பேச்சுக்கும் சரியாக இருக்கும். உனக்குச் சரியான பதில் கொடுப்பான். ஐயோ! என் ஆசையில் மண்ணைப் போட்டுவிட்டுப் போய்விட்டானே!'' என்று காமாக்ஷியம்மாள் கலங்க ஆரம்பித்தாள்.

அத்தைக்குத் தன்னுடைய மூத்த மகனின் நினைவுகள் வந்துவிட்டால் மிகவும் துக்கப்படுவதை அடிக்கடி பார்த்திருந்த பூங்கோதை வெகு புத்திசாலித்தனமாக, "ஆமாம் அத்தை, அத்தான் இருந்தால் எனக்குச் சரியான பதில் கொடுப்பார். அதை இனிமேல் நினைத்துப் பயனென்ன அத்தை? கதையைப் படிக்கிறேன், கேளுங்கள். சரி, நீங்கள் கதையை நேற்று விட்ட இடத்தைச் சொன்னது சரிதான். சீதை இராவணனைப் பார்த்துத் 'துரும்பெனக் கனன்று சொன்னாள்!' என்றதோடு விட்டோம். அதற்குமேல்....''



"ஐயோ! அவனுடைய அழகும்.... தைரியமும்.... சிரிப்பும்.... விளையாட்டும்.... அப்பா மகனே!'' என்று காமாக்ஷியம்மாள் தேம்பினாள்.

"அத்தை, நான் விளையாட்டாகச் சிரித்துவிட்ட முட்டாள் தனத்தால் இந்தத் துக்கத்தை உங்களுக்கு மூட்டிவிட்டேன். உங்களுக்குத் தெரியாதது உண்டா, அத்தை? போனதை நினைத்து நினைத்துப் புழுங்குவதால் என்ன பயன்? தாங்கள் துக்கப்படுவதைப் பார்த்துக்கொண்டிருக்க என்னால் முடியவில்லையே, அத்தை! தயவு செய்து அழுவதை நிறுத்துங்கள். 'மாண்டார் வருவரோ மாநிலத்தே?' அத்தை..... அத்தை."

இந்தச் சமயத்தில் காமாக்ஷியம்மாளின் இரண்டாவது மகன் **பொன்னம்பலமும்,** மகள் **வள்ளியம்மாளும்** வீட்டின் நம்பிக்கையுள்ள வேலைக்காரனான **சடையனும்** அவசரமாக மேல் மாடிக்கு வந்தார்கள். பொன்னம்பலத்தின் கையில் ஒரு தந்தியிருந்தது.

பொன்னம்பலம் "அம்மா! ....மச்சி! மாமாவிடமிருந்து தந்தி வந்திருக்கிறது'' என்றான்.

"தந்தியா! என்னப்பா பொன்னம்பலம்? என்ன? என்ன? என்னவென்று தந்தி வந்திருக்கிறது? படி, படிச்சி அர்த்தம் சொல்லு'' என்று காமாக்ஷியம்மாள் திடுக்கிட்டுத் தன் அழுகையை நிறுத்திக் கண்ணைத் துடைத்துக்கொண்டு கேட்டாள்.

பொன்னம்பலம் "என்னவென்று தந்தி வந்திருக்கும். தெரியாதாம்மா உங்களுக்கு? உங்களுக்குத் தெரியாவிட்டாலும் மச்சிக்குத் தெரியும்!'' என்றான்.

காமாக்ஷியம்மாள் "அப்பா, படிச்சுச் சொல்லேண்டா! தந்தி என்றால் என்னமோ ஏதோ என்று நினைக்கச் சொல்லுது. படி—படி—என்ன ? படி."

"அம்மா, அப்படிப் பயப்படவேண்டிய சங்கதி ஒன்றுமில்லை. எல்லாம் சந்தோஷ சமாச்சாரந்தான். மச்சிக்குத் தெரியும் ........ அம்மா ........ அம்மா ........ அதோ பாருங்கள் ! ........ மச்சி சிரிக்கிறதைப் பாருங்கள் !" பூங்கோதையைப் பார்த்து, "மச்சி ! அம்மாளுக்குச் சொல்ல வேணும்" என்று பொன்னம்பலம் சிரித்தான். தந்தியில் நல்ல சேதிதான் இருக்கிறதென்று எல்லோரும் சிரித்துக்கொண்டிருக்கும் போது பூங்கோதை தந்தியை வெடுக்கென்று பொன்னம்பலத்தின் கையிலிருந்து பிடுங்கினாள். அது தவறிப்போய்க் கீழே விழுந்துவிட்டது. பக்கத்தில் நின்றுகொண்டிருந்த வள்ளியம்மாள் உடனே அதை எடுத்து, மறுபடியும் பொன்னம்பலத்தினிடத்திலேயே கொடுத்துவிட்டுச் சிரித்தாள்.

"அம்மா, பார்த்தீர்களா, நான் சொன்னது சரியாகிவிட்டதா ? மச்சிக்குத் தந்தியில் இருக்கும் சங்கதி தன்னைப் பற்றியதுதான் என்று தெரியும். என்ன ஆத்திரம் பாருங்கள், மச்சிக்கு ! நான் சொல்லுகிற வரையிலுங்கூடப் பொறுக்க முடியவில்லை, பார்த்தீர்களா !" என்று பொன்னம்பலம் மறுபடியும் பூங்கோதையைப் பார்த்துச் சிரித்தான். பூங்கோதை வெட்கம் கலந்த சிரிப்புடன் அத்தையைப் பார்த்தாள்.

"பொன்னம்பலம் ! போதும் விளையாட்டு ; சங்கதியைச் சொல்லு. பூங்கோதை உன்னைக்காட்டிலும் ஒரு வருஷத்துக்கு மேல் பெரியவள். அவளை நீ அடிக்கடி கேலி செய்யக்கூடாது" என்று காமாக்ஷியம்மாள் கண்டித்தாள்.

"அம்மா, நல்லாயிருக்கிறது உங்கள் நியாயம். மூத்தாலும் சரி, இளைச்சாலும் சரி, மச்சி மச்சிதானே ? நான் என்ன மரியாதை தவறிப்பேசுகிறேனா........சரி, தந்தி சமாச்சாரத்தைக் கேளுங்கள். மாமாவும், கண்ணப்பரும், கண்ணப்பருடைய பெண்சாதி செங்கமலத்தம்மாளும் அவர்களுடைய மூத்த மகன் ஆடியபாதமும் இன்றைக்கு விடியற்காலை மூன்று மணி வண்டிக்கு வருகிறார்களாம். சடையனை ரயிலுக்கு வண்டி கொண்டுவரும்படி எழுதியிருக்கிறது. சரி, பிறகு அதற்கானதெல்லாம் பார்த்துக்கொள்ள வேண்டியதுதான். அம்மா, தந்தி, உங்கள் பேருக்கு வந்திருக்கிறது. வருகிறவர்கள் யாரென்று கவனித்தால் அவர்கள் எதற்காக வருகிறார்களென்று தெரியாதா ? மச்சி ! ஆடியபாதம் வருகிறார்........!" என்று பொன்னம்பலம் மறுபடியும் சிரித்தான்.



காமாக்ஷியம்மாளும் சிரித்துக்கொண்டே பூங்கோதையைப் பார்த்தாள். பூங்கோதை "போதும் போதும், பொன்னம்பலம், போதும்" என்று சிரிப்பும் சலிப்பும் கலந்தபடி சொல்லிக்கொண்டே தன் கையிலிருந்த கம்பராமாயணத்தை அலமாரியில் வைக்கப் போவது போலப் போய்விட்டாள்.

"அம்மா, மச்சிக்கு வெட்கம் வந்துவிட்டது. ஆடியபாதம் ஆடியாடி நடந்துகொண்டு வரப்போகிறார். கன்னங்கறேலென்று கருப்பண்ணசாமி மாதிரி முன்னொரு தரம் இங்கே வந்திருந்தார்களே, அவர்கள்தானே அம்மா ?........சரி, மச்சிக்குக் கலியாணப் பேச்சுத்தானே ?........இன்னும் இரண்டு மூன்று நாளைக்காவது நம் வீட்டில் விருந்துதான். மச்சி மாடியை விட்டு இறங்காது. ஏம்மா ?"

"போதுமப்பா விளையாட்டு. சும்மா மச்சியைக் கேலி செய்யாதே. அவள் வருத்தப்படப் போகிறாள்........சடையா, சரியாக இரண்டு மணிக்கு வண்டியைக் கட்டிக்கொண்டு ரயிலுக்குப் போ. கூட இரண்டு ஆளையும் கூட்டிப் போ........ சரி, எல்லோரும் போய்ப் படுங்கள். விடிய நேரத்தோடு எழுந்து வேலை பார்க்கவேணும். அம்மா பூங்கோதை...."

"ஏன் அத்தை? நான் படுக்கலாமென்று அறைக்குப் போகிறேன்."

"சரி, சரி, போ. போய்த் தூங்கு; போம்மா. விடிய விடியப் புத்தகத்தை வைத்துக்கொண்டு உட்கார்ந்திருக்காதேயம்மா.

உடம்புக்காகாது போ, வள்ளியம்மா, போ. நீயும் மச்சியும் தூங்கப் போங்கள்."

அவரவர்கள் அவரவர்களுடைய படுக்கைக்குப் போய் விட்டார்கள். காமாக்ஷியம்மாள் மாடியை விட்டுக் கீழேயிறங்கிச் சமையற்காரி மாரியம்மாளிடத்தில் தந்தி சமாச்சாரத்தைச் சொல்லி, வரப்போகிற விருந்தாளிகளுக்குக் காலை ஆகாரத்துக்குச் செய்யவேண்டிய பக்குவங்களையும் சொல்லி, சடையனை அனுப்பி மாட்டுப் பட்டியில் மாரப்பனை நேரத்தோடு எழுந்து பால் கறக்கும்படி சொல்லிவிட்டுப் படுக்கப் போய் விட்டாள்.

சடையனும் சொன்ன வேலைகளைச் செய்துவிட்டு வழக்கம் போல வீதிக்கதவு சரியாகத் தாழிடப்பட்டிருக்கிறதா என்று பார்த்துவிட்டு, தலைவாசல் கதவைத் தாழிட்டுக் கொண்டு, கதவுக்கு அடுத்தாற் போலிருக்கும் பலகணிக்கு நேராகத் தன்னுடைய கட்டிலில் போய்ப் படுத்துக்கொண்டான்.

பூங்கோதை மாடியில் தன்னுடைய அறையைத் தாழிட்டுக் கொண்டு படுக்கையின்மீது பதுமை போல் உட்கார்ந்து கொண்டிருந்தாள். வள்ளியம்மாள் தூங்கிவிட்டாள். மேஜையின் மீதிருந்த விளக்கு வெகு பிரகாசமாக எரிந்துகொண்டிருந்தது. பூங்கோதை கையிலெடுத்து வந்த கம்பராமாயணம் அலமாரிக்கும் போகாமல் படுக்கையின் மேல் பக்கத்தில் கிடந்தது. தன்னுடைய இரண்டு கைகளையும் பஞ்சணையின் மீது பின் புறமாக ஊன்றிக்கொண்டு தனக்கு நேராக மேஜையின் கீழே தரையைப் பார்த்த வண்ணமாகப் பூங்கோதை ஆடாமல் அசையாமல் உட்கார்ந்திருந்தாள்.

தன்னைப்பற்றியோ, தந்தையைப்பற்றியோ, வந்த தந்தியைப்பற்றியோ, அத்தையைப்பற்றியோ ஆழ்ந்த சிந்தனையுள்ளவள் போல, விளக்குக்கு நேராக, மூச்சு விடும் போதுகூட அசைவது தெரியாமல் உட்கார்ந்திருந்தாள்.

பூங்கோதை நல்ல கட்டழகி; கண்டவர் மனத்தைக் கவரக் கூடிய அவளுடைய அழகு எழுத்துக்கும் சொல்லுக்கும்



எட்டாது. அவளைக் கண்டு ஆசைகொள்ளாத ஆணுமில்லை, பெண்ணுமில்லை என்பதே போதும். பால் போன்ற அந்தப் பஞ்சணையில் நீல நிறச் சேலையுடுத்துத் தனியே அவள் இப்போது உட்கார்ந்திருப்பது போன்ற காட்சி அடிக்கடி காணக் கிடைப்பதல்ல. மிகக் கறுத்துச் சிறிது சுருண்டு நெளிந்த அவளுடைய கூந்தல் ஒரே சடையாகப் பின்னப்பட்டு இடுப்பைக் கடந்து படுக்கையின்மீது கிடந்தது. அந்தச் சடையின் ஆரம்பத்தில், ஒரு சிறு வயிரச் சடைபில்லை மட்டும் இருந்தது.

பொன்னிறமான அவள் நெற்றியிலிட்ட செந்நிறமான திலகமும், நீண்டு வளைந்த புருவங்களும் மேஜையின்மீது இருந்த விளக்கைப் போல வேறு இரண்டு விளக்குகள் அவளுடைய முகத்திலிருந்தன போன்று பிரகாசித்துக் கொண்டிருந்த அழகிய கண்களும், வடிவான மூக்கும், ரோஜா இதழ்களின் நிறமான உதடுகளும், அவைகளுக்கேற்ற முகவாய்க் கட்டையும், பெண்ணழகென்றால் இதுதான் என்று வரையப் பட்ட சித்திரத்தை ஒத்தன. மூக்கில் ஆபரணம் ஒன்றுமில்லை. காதுகளில் அடக்கமாக வெகு ஜொலிஜொலிப்புள்ள வைரத் தோடுகள் அணிந்திருந்தாள். கழுத்தில் மெல்லிய ஒரு கல்லட்டிகையும் இலேசான இரண்டு தங்கச் சங்கிலிகளும் இருந்தன. கைகளில் கனமில்லாத இரண்டு இரத்தின வளையல்களும் இரண்டு பொன் வளையல்களும் இருந்தன. கால்களில் மெல்லிய சதங்கை அணிந்திருந்தாள். சேலை சற்று வெளுத்த நீல நிறத்தில் மெல்லிய கரைகளும் அதிக அகலமில்லாத முன்றானையும் உள்ளதாக ஆடம்பரமில்லாமலும் அழகு தரக் கூடியதாயும் இருந்தது.

பூங்கோதைக்கு ஆடைகளுக்கும் ஆபரணங்களுக்கும் அளவேயில்லை. தமது உலக வாழ்வின் இன்பத்துக்கெல்லாம் இருப்பிடமான ஒரே குழந்தை பூங்கோதைக்குச் சொக்கேசர் ஏராளமான அணிகளும் துணிகளும் வாங்கியிருந்தார். என்றாலும், பூங்கோதை இரண்டொரு லேசான நகைகளையும் பகட்டில்லாத புடைவைகளையும் மட்டுமே அணிவாள்.

எனவே, நல்ல அழகும், அழகைக்காட்டிலும் படிப்பும், படிப்பைக்காட்டிலும் அறிவும், அறிவைக்காட்டிலும் குணமும், குணத்தைக்காட்டிலும் அன்பும் நிறைந்த பூங்கோதை சொக்கேசர் வீட்டின் உயிரும், அக்கம் பக்கத்திற்கு உறவுமாக இருந்து வந்தாள்.

இனிய குணமுடையவளென்றாலும் களங்கமற்ற சுபாவத்தால் அச்சமற்ற வாழ்க்கையுடையவள். தீமை செய்கிறவர்கள் எவ்வளவு உயர்ந்தவர்களானாலும் அவர்களைத் துரும்பென மதித்துத் துணிகரமாக ஏசுவாள்.

சொக்கேசர் சற்று பயந்தவர். ஆனால், பூங்கோதையின் தாய் **பொன்னம்மாள்** அச்சமற்றசுபாவமுடையவள். பூங்கோதை சிறு குழந்தையாக இருக்கும்போது ஒரு நாள் இருட்டியபின் அடுத்த மூன்று மைலுக்குள்ளிருக்கும் கிராமத்திலுள்ள ஓர் உறவினர் வீட்டுக்குப் பொன்னம்மாளை வரும்படி இரண்டு நாளைக்கு முன்னரேயே அங்கே போயிருந்த சொக்கேசர் செய்தி அனுப்பினார். பொன்னம்மாள் பூங்கோதையுடன், சடையன் வண்டியோட்ட, போய்க்கொண்டிருக்கும்போது, சில கள்ளர்கள் வழி மறித்தார்கள். மாடுகளையும் சடையனையும் கள்ளர்கள் பிடித்துக்கொண்டதை அறிந்த பொன்னம்மாள் சொக்கேசர் தன்னை எடுத்துக்கொண்டு வரும்படி சொல்லியிருந்த அவருடைய தோல் பெட்டியில் இருந்த கைத்துப்பாக்கியை எடுத்துத் தயாராக வைத்துக்கொண்டிருந்தாள். முன்னால் வண்டியைத் தேக்கிய பின் அந்தக் கள்ளர்களுக்குத் தலைவன் வண்டிக்குப் பின்னால் வந்து “மரியாதையா நீ போட்டிருக்கிற நகை நட்டு எல்லாத்தையும் கழட்டி, பணங்காசு ஏதாவதிருந்தால் அதையும் குடுத்துப்புடு. நாங்கள் உங்களை ஒண்ணுஞ் செய்கிறதில்லை. இல்லாட்டி....பார்த்துக்கோ” என்றான்.

“அப்படியா, இதோ தந்துவிடுகிறேன். இந்தா....” என்று ஏதோ கொடுக்கிறவள் போலப் பின்னால் நின்றுகொண்டிருந்த கள்ளர் தலைவனுடைய நெஞ்சுக்கு நேராகத் துப்பாக்கியை நீட்டிச் சுட்டுவிட்டாள். அவன் அலறிக்கொண்டு அங்கேயே



விழுந்திறந்தான். பக்கத்திலிருந்த இன்னொருவனுக்கு வலத் தோளில் குண்டு பட்டது; அவன் ஓட்டம் பிடித்தான். மாடுகளையும் சடையனையும் பிடித்துக்கொண்டிருந்தவர்களும் இருந்த இடம் தெரியாமல் ஓடிவிட்டார்கள்.

பொன்னம்மாள் வண்டியிலிருந்து இறங்கி, வண்டியில் கட்டி வந்த ராந்தலைக் கொண்டுவரச் சொல்லிக் கீழே கிடந்தவனைப் பார்த்தாள். நடு நெஞ்சில் ஆழமாகக் குண்டு பாய்ந்திருந்தது.

பார்த்துக்கொண்டிருக்கும்போது, விஜயபுரியிலிருந்து ஒரு குதிரை வண்டி அதிவேகமாக வந்து இவர்களுக்கருகில் நின்றது. அதிலிருந்து மூன்று ஜவான்களும் ஒரு போலீஸ் உத்தியோகஸ்தரும் குதித்தார்கள். பொன்னம்மாள் போலீஸ் உத்தியோகஸ்தரிடம் நடந்தவற்றைச் சொல்லித் தான் இன்னாளென்பதையும் தெரிவித்தாள். உத்தியோகஸ்தர் வெகு ஆச்சரியப்பட்டு, அந்த அம்மாளுடைய வாக்குமூலத்தை எழுதிக்கொண்டு, “அம்மா, இவன் வெகு பேர்போன குறவன். இவனைக் **காட்டேரி ராயன்** என்று சொல்லுவார்கள். இவனுக்குப் பொய்ப் பெயர்கள் பத்துப் பன்னிரண்டு உண்டு. இவனைப் பிடிக்கப் பத்துப் பதினைந்து வருஷங்களாக இரண்டு மூன்று ஜில்லாக்களில் போலீஸார் வெகு பிரயத்தனங்கள் செய்து வருகிறார்கள். இரண்டு மூன்று நாள்களுக்கு முன்னால்தான் இங்கே வந்திருக்கிறான் என்று எங்களுக்குத் துப்புக் கிடைத்து, இவனைத் தேடிக் கொண்டிருக்கிறோம். இவனும் இவனுடைய ஆள்களும் இந்த இடத்துக்கு வந்ததாக அரை மணி நேரத்துக்கு முன்னால்தான் உளவு கிடைத்தது; உடனே நாங்கள் இவனை வளைத்துக் கொள்ளவேணுமென்று ஆயுதந் தாங்கிய ஜவான்களைப் பக்கத்துக்கு நாலு பேராக அனுப்பிவிட்டு இங்கே வந்திருக்கிறோம். உங்கள் கையால் இவன் சாக வேண்டியிருந்தது. அவன் அநேக கொலைகளைச் செய்தவன். உங்களை வெகு பேர் இதற்காகப் புகழ்வார்கள். உங்களுக்குச் சர்க்கார் பரிசும் கிடைக்கும். இவனை உயிரோடு பிடிக்கிறவர்களுக்கு ரூபாய் 5000-மும் சொல்லுகிறவர்களுக்கு ரூபாய் 2500-ம் இனாம் கொடுப்பதாக அநேக வருஷங்களுக்கு முன்னாலேயே விளம்பரப்படுத்தியிருக்

கிறார்கள். சரி, நீங்கள் ஏதோ விருந்து முறையாகப் போகிறீர்கள். நாளை உங்களையும் வண்டிக்காரனையும் மறுபடியும் விசாரிக்க வேண்டியிருக்கும். அது விஷயமாக சொக்கேசர் அவர்களுக்குச் சொல்லியனுப்புகிறேன். நாங்கள் இவனைக் கொண்டுபோகின்றோம். நீங்கள் புறப்படுங்கள்" என்று சொன்னதும் பொன்னம்மாள், இதுவரையிலும் வண்டியில் தூங்கிக்கொண்டிருந்த பூங்கோதையை எழுப்பாமலே வண்டியிலேறிப் புறப்பட்டாள்.

ஊர் முழுவதும் இதைக் கேட்டு வெகு ஆச்சரியப்பட்டது. சர்க்கார் இனாம் ரூ. 2500-ம் வந்தது. அதைப் பொன்னம்மாள் அந்த ஊர்ப் பறைச்சேரியில் ஒரு பள்ளிக்கூடம் கட்டவும்; கிணறு வெட்டவும் தானமாகக் கொடுத்துவிட்டாள். ஜனங்கள் பொன்னம்மாளைப் புருஷனென்றும் சொக்கேசரைப் பெண்சாதியென்றும் வேடிக்கையாகப் பேசுவதுண்டு. ஆனால், இந்தத் துணிச்சலான இயற்கையுள்ளவளென்றாலும் பொன்னம்மாள் தன் கணவன் சொக்கேசரிடத்தில் தெய்வ பக்தியுடையவள். நற்குடிக்கொத்த எல்லா நற்குணங்களும் உடையவள்.

அந்தப் பொன்னம்மாளின் வயிற்றில் பிறந்தவள் நமது பூங்கோதை. ஆதலால் அச்சமென்பதை அறியாள்.

இனி இந்தக் கதையைத் தொடர்வோம். பூங்கோதை, கட்டிலின்மேல் காலம் கழிவதும் தெரியாமல் கண் கொட்டாமல் தரையைப் பார்த்துக்கொண்டேயிருந்த அவள், திடீரென்று எழுந்து, பக்கத்தில் கிடந்த இராமாயணப் புத்தகத்தை எடுத்து அலமாரியில் வைத்தாள். மேஜையைத் திறந்து ஏதோ ஒரு கடிதத்தை எடுத்துப் படித்துக்கொண்டே சற்றுநேரம் நின்றாள். பிறகு, வழக்கம் போல் விளக்கைத் தணித்துவிட்டுத் தீப்பெட்டியை எடுத்து, கைக்கு எட்டும்படி மேஜையின்மீது வைத்துவிட்டுத் தன் படுக்கையில் மிகவும் அலுத்துப்போனவள் விழுவது போலப் படுத்துக்கொண்டாள். தன் தலையிலிருந்த வயிரச் சடைபில்லையையுங்கூடக் கழற்றி வைக்க மறந்துவிட்டாள்.



படுக்கைக்கு வலப்புறத்தில் சுவரிலிருந்த தன்னுடைய தாயாரின் உருவப்படத்துக்கு அருகிலிருந்த கடிகாரத்தில் மணி பன்னிரண்டடித்ததைக் கவனித்தாள். அதிக நேரமாகிவிட்டதை அறிந்து தூங்க முயன்று கண்களை மூடிக்கொண்டு கட்டிலின் இருண்ட பக்கமாகத் திரும்பிப் படுத்துக்கொண்டாள். ஆனால், தூக்கம் வரவில்லை. புரண்டு புரண்டு விழித்துக்கொண்டே படுத்திருந்தாள். ஒரு மணியடித்ததையும் இரண்டு மணியானதையும் கேட்டுக்கொண்டேயிருந்தாள்.

மணி இரண்டடித்துச் சிறிது நேரத்துக்கெல்லாம் வீட்டின் முன்புறத்திலும் கொல்லைப்புறத்திலும் கட்டப்பட்டிருந்த நாய்கள் குலைக்கிற சத்தம் கேட்டது. கொஞ்ச நேரத்துக்கெல்லாம் நாய்கள் குலைக்கிற சத்தம் நின்றுவிட்டது. சற்று நேரங் கழித்து மறுபடியும் நாய்கள் குலைத்தன. இந்தத் தடவை முன்னிலும் அதிகமாகவும் அவசரமாகவும் குலைத்தன. சொக்கேசர் வீட்டில் மிகவும் விலையுயர்ந்த நான்கு காவல் நாய்கள் உண்டு. அவைகளின் மோப்பத்துக்குப் படாமல் புது மனிதர்கள் யாரும் அந்த வீட்டை அணுக முடியாது. 'என்றுமில்லாப் புது மாதிரியாக வீட்டு நாய்கள் ஆத்திரத்தோடு குலைக்க வேண்டிய காரணம் என்ன?' என்று பூங்கோதை சிறிது கவனித்தாள். என்றாலும், அதில் கவலை செலுத்தாமல் ஏதேதோ எண்ணிக்கொண்டு படுக்கையிலேயே இருந்தாள்.

கீழே, தலைவாசலுக்கருகில் தன் கட்டிலில் படுத்திருந்த சடையன் என்றுமில்லாதபடி அமர்ந்து தூங்கிக்கொண்டிருந்தான். நாய்களின் அரவத்தைக்கேட்ட காமாக்ஷியம்மாள் எழுந்து வந்து, சடையனை எழுப்பி, "நாய்கள் விடாமல் குலைக்கிறதே; "என்னவென்று பார்" என்று சொன்னாள். சடையன் அரைத் தூக்கத்தோடு எழுந்து, ஒரு தூக்கு விளக்கைக் கையிலெடுத்துக்கொண்டு வாசல் கதவைத் திறக்கப் போனான். இதற்குள்ளாக வீதியின் சுற்றுச் சுவரின் கதவண்டையிலிருந்து யாரோ கூப்பிட்ட குரல் கேட்டது. காமாக்ஷியம்மாளும் சடையனும் சன்னலின் வழியாகக் காது கொடுத்துக் கேட்டார்கள்.

'ஓ ! சடையண்ணா ! செத்தே விளக்குக் கொண்டாண்ணா !'' என்று வீதியிலிருந்து யாரோ கூறுகிறது கேட்டது.

''யாரோ, வெளக்கு வேணுமாம். தேளோ பாம்போ என்னமோ தெரியலை ; வெளக்கு வேணுமாம் ; கொண்டு போய்ப் பார்'' என்று காமாக்ஷியம்மாள் சொன்னவுடன், சடையன் கதவைத் திறந்துகொண்டு விளக்குடன் வீதிவாசல் கதவண்டையில் போய், ''யாரப்பா அது ? என்ன சேதி ?'' என்றான்.

''ஏண்ணா ! நாந்தான் தெரியிலியா ?''

விளக்கைத் தூக்கிப் பிடித்து, வந்தவன் முகத்தைப் பார்த்துவிட்டுத் ''தெரியிலியே ஆருண்ணு கெடக்கட்டும். சங்கதி என்ன ?'' என்று சடையன் கேட்டான்.

'ஒண்ணுமில்லே, அவசரமா ஊருக்குள்ளே போகணு முண்ணு வந்தேன். இவுத்தெ என்னமோ சுரீருண்ணு கடிச் சிடிச்சி. என்னாண்ணு தெரியிலே. பாப்பமுண்ணு வெளக்குக் கேட்டேன்'' என்று கதவுக்கு மறுபுறம் நின்றிருந்த புது மனிதன் தன் காலைக் காட்டிச் சுட்டிக்காட்டினான். அவனைப் பார்த்தால் ஒரு சாதாரணக் குடியானவனைப் போல் இருந்தது. உடனே சடையன் இடுப்பிலிருந்த சாவியை எடுத்துப் பூட்டைத் திருப்பிக் கம்பிக் கதவைத் திறந்தான். திறந்தவுடன் புது மனிதன் உள்ளே வந்து, தன்னுடைய காலில் ஏதோ கடித்த இடத்தைப் பார்ப்பவன் போலச் சடையனின் கையிலிருந்த விளக்கை வாங்கிக்கொண்டு வீதிக்குச் சென்றான். சடையனும் அவன் பின்னால் போகக் காலெடுக்கிற சமயத்தில்—''ஐயோ ! ஐயோ! ஐயோ யாரோ தெரியிலியே! சடையா! ஓடியாடா....அடே கட்டையா!....அடே மூக்கா! அடே....ரங்கா!.... ஐயோ போனேன்'' என்று காமாக்ஷியம்மாள் கதறுகிற சத்தத்தைக் கேட்டுச் சடையன் வீட்டுக்குள் ஓடினான்.

காமாக்ஷியம்மாளைக் காணவில்லை. கதவண்டை ஓடினான். தலைவாசல் கதவு உட்புறம் தாழிடப்பட்டிருந்தது. ஆனமட்டும்



தட்டினான் திறப்பாரில்லை. இன்னது செய்வதென்று தோன்றா மல் சிறிது நேரம் திகைத்து நின்றான். உடனே சட்டென்று ஞாபகத்துக்கு வந்து, அங்கேயுள்ள மற்ற வேலைக்காரர்களை எழுப்ப வேணுமென்று மாட்டுக் கொட்டத்தில் படுத்திருந்த கட்டையனிடம் ஓடினான். கட்டையன் படுத்திருந்த கட்டில் காலியாக இருந்தது. இருட்டில் தடவித் தடவிப் பார்த்தான்; ஆளில்லை. அதை விட்டுக் குதிரைக் கொட்டகைக்கு ஓடினான். பெட்டி வண்டிக்கருகில் மூக்கன் படுக்கும் இடத்துக்குப் பக்கத் தில் நின்றுகொண்டு ''மூக்கா மூக்கா ! டே மூக்கா'' என்று சிறு குரலால் கூப்பிட்டான். பதில் இல்லை. அங்கேயும் தடவிப் பார்த்தான். யாரும் இல்லை. மூக்கன் படுக்கும் கட்டிலைக் கூடக் காணோம். என்ன செய்வான் ? அதைவிட்டுத் தோட்டக் காரன் ரங்கன் படுக்கிற வில்லைக் கொட்டாரத்துக்கு ஓடினான். கதவு மூடப்பட்டிருந்தது. ரங்கன் கதவைத் தாளிட்டுக்கொண்டு தான் தூங்குவது வழக்கம். ''ரங்கா! ரங்கா'' வென்று கதவைத் தட்டினான். பதில் இல்லை ; சங்கிலியைப் பிடித்து ஆட்டினால் ஓசை அதிகமுண்டாகி, உள்ளிருப்பவன் விழிப்பான் என்று நாதாங்கிச் சங்கிலிக்காகத் தடவிப் பார்த்தான். ஆச்சரியம்! சங்கிலி மாட்டப்பட்டு வெளியில் ஒரு பூட்டுப் போடப்பட்டிருக் கது ! அந்தக் கொட்டகையைப் பூட்டும் வழக்கமில்லை. ரங்கன் இல்லாதபோது கூட வெளியில் சங்கிலி மட்டும் மாட்டப்பட்டிருக் குமேயன்றிப் பூட்டவேண்டிய அவசியமே இருந்ததில்லை. அன்றியும், அன்றைக்கு ரங்கன் உள்ளே படுத்துக்கொள்ளப் போனதைச் சடையன் பார்த்துக்கொண்டிருந்தான். என்ன செய்வான் சடையன் ! தன்னுடைய எஜமான் ஊரில் இல்லாத சமயத்தில் நடுச்சாமத்துக்கு மேல் யாரோ கள்ளர்கள் உள்ளே புகுந்தவிட்டார்களென்பது நிச்சயமாகத் தெரிகிறது. 'காமாக்ஷி யம்மாளின் கூச்சல்மட்டுங் கேட்டது. ஆனால், அந்த அம்மாள் இருக்கிற இடம் தெரியவில்லை ! மாடியில் பூங்கோதையும் வள்ளியம்மாளுந்தாம் இருக்கிறார்கள் ! பொன்னம்பலமோ வீட்டினுள் தன்னுடைய அறையில் தூங்குகிறான் ! அந்த நாலு பேரைத் தவிர, வீட்டுக்குள் வேறு துணை யாரும் கிடையாது! தானோ உள்ளே போய் உதவி செய்ய முடியவில்லை. ஆள்களெல்

லாம் எங்கே போய்விட்டார்கள் என்பதும் தெரியவில்லை! நாய்களுடைய சத்தமும் அடங்கிவிட்டது! அந்த நாய்களையுங்கூட வழக்கமான இடங்களில் காணவில்லை! ஏதோ கடித்துவிட்டதென்று தன் கையில் இருந்த விளக்கை வாங்கிப் போனவன் யார் என்றும் தெரியவில்லை. அவன் போன இடமும் தெரியவில்லை! விளக்கையும் எட்டின மட்டும் எங்கும் காணோம்!

சரேலென்று சடையனுக்கு வேறோர் எண்ணம் வந்தது; வெளியிற் போய் அக்கம்பக்கத்தாரை எழுப்பி, உதவி தேடி வரலாம் என்று வீதிக் கதவண்டை ஓடிக் கதவை இழுத்தான்; ஐயோ! கதவு தான் படுக்குமுன் பூட்டினது போலவே பூட்டப்பட்டிருந்தது! அடடா! விளக்கை வேண்டின மனிதனுக்காக, தான் வீதிக் கதவைத் திறந்து சாவியைப் பூட்டிலேயே மறந்து வைத்துவிட்டது அப்போதுதான் சடையனுக்கு ஞாபகம் வந்தது. என்ன செய்வது? அங்கிருந்துகொண்டு தொண்டை போகக் கத்தினாலும் அக்கம்பக்கத்துக்குச் சுலபமாகக் கேளாது. சொக்கேசருடைய வீடு ஊரைவிட்டுச் சிறிது தூரத்தில் ஒரு தோட்டத்தில் உள்ளது. குறைந்தது இரண்டு பர்லாங் தூரம் போனால்தான் வீடுகள். சடையன் மிக்க தைரியமுள்ளவனானாலும், சொக்கேசரும் அவருடைய வீட்டாரும் அவனிடம் வைத்திருந்த அன்பினால் மிகவும் எஜமான விசுவாசமுள்ளவனானதாலும் எப்படியானாலும் சரி, சும்மாயிருக்கக்கூடாது; ஆபத்துக்குதவாத ஆள் இருந்தென்ன போயென்ன? என்று தனக்குள்ளேயே எண்ணி, அந்த வெளிக்கதவின் மேல் ஏறிக் குதித்துப் போவதென்று தீர்மானித்தான். அந்தக் கதவு இரும்புக் கம்பிகளால் செய்யப்பட்ட உயரமான கதவு. இரண்டாள் உயரம் இருக்கும். உச்சியில் யாரும் சுலபமாக ஏறித் தாண்ட முடியாதபடி கம்பிகள் கூராக்கப்பட்டிருக்கும். அது சடையனுக்குத் தெரியும். இருந்தாலும் ஜாக்கிரதையாக ஏறினால் தாண்டிவிட முடியுமானதால் மெல்ல மெல்லக் குறுக்குச் சட்டத்தில் காலை வைத்துக் கம்பிகளைத் தாண்டி வீதிப்புறத்தில் தொப்பென்று குதித்தான். எழுந்திருப்பதற்குள் இருட்டில் யாரோ இரண்டு உருவங்கள் தோன்றிச் சடையனை நகர முடியாமல் பலமாக அழுத்திக் கொண்டன....



மாடியில் தூக்கம் வராமல் புரண்டு புரண்டு ஏதேதோ எண்ணிக்கொண்டிருந்த பூங்கோதை "ஐயோ ஐயோ!" என்று யாரோ கத்திய சத்தங்கேட்டுத் திடுக்கிட்டெழுந்தாள். வீதிப்புறத்துச் சன்னலண்டை ஓடித் திறந்தாள். இருட்டில் ஒன்றும் தெரியவில்லை. சற்று நேரம் உற்றுப் பார்த்தாள்; பலனில்லை. திரும்பி வந்து மேஜையின் மீதிருந்த விளக்கைத் தூண்டினாள். கதவினருகில் சென்றாள். மெத்தைப்படியில் 'திம், திம்' என்று யாரோ ஒரு கனத்த ஆள் வருகிற ஓசை கேட்டது. 'இப்படிச் சத்தமுண்டாக்கிக்கொண்டு வரக்கூடியவர்கள் வீட்டில் யாருமே இல்லையே' என்று சந்தேகித்தாள். ஒருகால் தன்னுடைய தகப்பனாரும் விருந்தாளிகளுந்தான் வந்துவிட்டார்களோ என்று எண்ணிக் கடிகாரத்தைப் பார்த்தாள். மணி இன்னும் மூன்றுகூட ஆகவில்லை. ஆகையினால், மூன்று மணி வண்டிக்கு வருவதாகத் தந்தி கொடுத்த தந்தையாக இருக்க முடியாது. பின் யாராக இருக்கலாமென்று சிந்திக்குமுன், "அம்மா, கதவைத் தெறங்க" என்று யாரோ தட்டினார்கள்.

"யாரது?"

"யாருமில்லை, நான்தான். ரொம்ப அவசரம். ஜல்தி. தெறங்கள், கீழே அத்தையம்மாளுக்கு............"

"என்ன? என்ன? அத்தைக்கென்ன?"

"சொல்றேன் சங்கதி. கதவைத் தெறங்க."

பூங்கோதை, அத்தைக்கு என்னவோ என்ற ஆத்திரத்தில் முன் தான் கேட்ட 'ஐயோ' என்ற சத்தம் அத்தையின் குரல் போல் இருந்தது நினைவுக்கு வந்து, சிறிது யோசனை செய்யாமலும் தன்னைக் கதவைத் திறக்கச் சொல்லுகிற குரல் புதிய குரலாக இருக்கிறதேயென்பதை நினையாமலும் சட்டென்று கதவைத் திறந்துவிட்டாள்.

கதவுக்குப் பின்னால் இருட்டில் கறுத்த பெருத்த ஓர் உருவம் நிற்பதைக் கண்டு, சற்றுப் பின்னிட்டு, "யாரது? அத்தைக்கு என்ன? இப்படி வெளிச்சத்துக்கு வா!" என்றாள்.

"போய்ப் பார்க்கலாம்; வாங்கம்மா."

" நீ யார்? எங்கே வந்தாய்? எப்படி வந்தாய்? அத்தைக்கு என்னவோ என்று சொன்னாயே, அது என்ன? முதலில் அதைச் சொல்."

" அம்மா, நீங்க ரொம்பப் புத்திசாலிங்க; படிச்சவுங்க; அதெல்லாம் எனக்குத் தெரியுமுங்க. நான் ஒண்ணும் கெடுதல் பண்ண வந்தவனல்ல, பயப்படாதிங்கம்மா."

" நீ யாரையா? அதைச் சொல். இங்கே உனக்கு என்ன வேலை? இந்நேரத்தில் எங்கள் வீட்டுக்குள் ஏன் வந்தாய்?"

" அம்மா; உங்களோடு வாது பேசிக்கொண்டிருக்க எனக்கு நேரமில்லிங்கோ. நீங்க பெரிய மனசு வச்சி என்னோடு வரணுங்க."

" சீச்சீ! அறிவில்லாதவனே! உன்னோடு எங்கே வருவது? எங்கள் வீட்டுக்குள் ஏன் வந்தாயென்றால், வாதாட நேரமில்லையென்கிறாய். போ, வீட்டை விட்டு வெளியே போ" என்று பூங்கோதை கதவை மூடப் போனாள். உடனே வந்தவன் இருட்டிலிருந்தபடியே, கதவை மூட முடியாதபடி அழுத்திக் கொண்டு தன் கையிலிருந்த தடியைக் கதவுச் சந்தில் வைத்துப் பலமாகப் பிடித்துக்கொண்டான். பூங்கோதைக்குத் தேகமெல்லாம் நடுக்கமெடுத்துவிட்டது. இருந்தாலும் தைரியத்தைக் கைவிடாமல் வந்தவன் யாரென்று அறிய வேணுமென்று கதவை விட்டுவிட்டு மேஜையின் மீதிருந்த விளக்கை எடுத்துவரப் போனாள்.

அவள் விளக்கை எடுக்கும்போது இதுவரையிலும் இருட்டிலேயே நின்றுகொண்டிருந்த உருவம் கதவைத் திறந்துகொண்டு ஒரே பாய்ச்சலாகப் பாய்ந்து பூங்கோதை திரும்பிப் பார்ப்பதற்குள் விளக்கை வாயால் ஊதி அணைத்துவிட்டது. அறை முழுதும் ஒரே இருட்டாகிவிட்டது.

இதுவரையிலும் அச்சமென்பதே இன்னதென்று அறியாது வளர்ந்த பூங்கோதைக்கு இப்போதுதான் அது சிறிது தெரிய வந்தது. இன்னது செய்வதென்று தோன்றாமல் மயங்கி நின்றுவிட்டாள். எவ்வளவு நேரம் அப்படி நின்றாளோ சொல்ல முடியாது.



தன் தலையின் பின்புறத்தில் ஏதோ கெட்டியான ஒன்று தொட்டது. தனது இடக்கையால் அதைத் தள்ளிவிட முயன்று, " அடே பாவி; நீ யார்—" என்பதற்குள் பூங்கோதையினுடைய வாயையும் மூக்கையும் சேர்ந்தாற்போல வந்தவனுடைய வலக்கை கெட்டியாக மூடிக்கொண்டது.

## அத்தியாயம் 3

**ச**ரியாக மூன்று மணிக்கு **விஜயபுரி** ரயில்வே ஸ்டேஷனுக்குத் தொடர்வண்டி வந்து நின்றது. **சொக்கேசர்** வண்டி நிற்பதற்கு முன்னாலேயே சன்னலில் தலையை நீட்டிச் சடையனுக்காக மேடை முழுவதையும் பார்த்துக்கொண்டே வந்தார். சடையன் கண்ணுக்குப் படவில்லை. அவரும், **கண்ணப்பரும், செங்கமலத்தம்மாளும், ஆடியபாதமும்** ஸ்டேஷனை விட்டு வெளியில் வந்தார்கள். அங்கேயும் சடையனில்லை. தாம் கொடுத்திருந்த தந்தி கிடைக்கவில்லை போலிருக்கிறதென்று எண்ணிக்கொண்டு சொக்கேசர், இரண்டு வாடகை வண்டிகளை அமர்த்தி, செங்கமலத்தம்மாளும் ஆடியபாதமும் ஒரு வண்டியிலும், தாமும் கண்ணப்பரும் மற்றொரு வண்டியிலுமாகப் போனார்கள். ஸ்டேஷனிலிருந்து விஜயபுரி சுமார் இரண்டு மைல் இருக்கும். ரயிலடியிலிருந்து ஊருக்குள் போகும் வழியில் ஊர் ஆரம்பத்தில் சொக்கேசருடைய வீடு. வீட்டுக்கு அரை மைலிருக்கும்போது பின்னால் போன வண்டியில் திடீரென்று மோதியதால், காலை வெளியில் நீட்டி உட்கார்ந்துகொண்டிருந்த ஆடியபாதத்தின் காலில் மாட்டின் தலை இடித்து "ஐயோ !" என்று கத்தினான். சொக்கேசர் திடுக்கிட்டு அவசரமாகக் குதித்தார்.

என்னவென்று பார்க்கிறபோது முன்னால் சென்ற வண்டியின் எருது பாதை ஓரத்தில் கிடந்த ஏதோ ஒன்றைக் கண்டு மருண்டு திடீரென்று நின்றுவிட்டதால், பின் வண்டி, முன் வண்டியில் மோதிவிட்டதென்று தெரியவந்தது. முதல் வண்டிக்காரனும் சொக்கேசரும் பாதையில் கிடப்பது என்னவென்று கிட்டப்போய்ப் பார்த்தார்கள். இரண்டு வண்டியிலும் விளக்கில்லை. விளக்கில்லாமல் வண்டி ஓட்டக்கூடாதென்று சட்டம் விஜயபுரியில் அமுலுக்கு வரவில்லை. இருட்டில் முடிந்த வரையில் கவனித்துப் பார்த்தபோது யாரோ ஒரு மனிதன் தன்



நினைவில்லாமல் கிடப்பதைக் கண்டார்கள். வண்டிக்காரன் 'ஏ! யாரப்பா, அது ? ரஸ்தாவில் இப்படி நடுப்புறப் படுத்திருக்கிறாயே; வண்டி கிண்டி மேலே ஏறினால் ? ஏந்திரி, ஏந்திரி" என்று அதட்டினான். கீழே கிடந்த உருவம் அசையவில்லை ; " நல்ல தூக்கம் போலிருக்கிறது " என்று சொல்லிக்கொண்டே தன் கையிலிருந்த சாட்டைக் கோலால் மெல்லத் தட்டினான். அதற்கும் அசையவில்லை. "யாரோ கணக்கில்லாமல் குடித்துவிட்டான் போலிருக்கிறது. உணர்ச்சியற்றுக் கிடக்கிறான். நாம் அவனை எழுப்ப முடியாது. அவனை இழுத்துப் பாதையை விட்டு அப்புறம் போட்டுவிடு. ஆபத்தில்லாமலாவது கிடக்கட்டும். இன்னும் கொஞ்ச நேரமானால் பொழுது விடிந்துவிடும். பிறகு பயமில்லை" என்று சொக்கேசர் சொன்னார். அதுவே சரியென்று வண்டிக்காரன் கீழே கிடந்தவனைப் பாதையை விட்டு அப்புறம் இழுத்துவிடுவதற்காகத் தலையைப் பின்புறமாக இருந்து பிடித்தான். உடனே கையில் ஏதோ தேள் கொட்டிவிட்டவனைப்போல் வெடுக்கென்று இழுத்துக்கொண்டான். தன்னுடைய வலக்கையில் என்னவோ கோந்துபோல வழவழவென்று ஒட்டிக்கொண்டதைக் கவனித்தான். சிறிது திகைத்து நின்று வண்டிக்காரனைச் சொக்கேசர், "என்ன ? என்ன ? ஏதாவது கடித்துவிட்டதா ? ஏன் திடுக்கிட்டுக் கையை இழுத்துக்கொண்டாய் ? நானும் பிடிக்கட்டுமா ? இரண்டு பேருமாகத் தூக்குவோம்" என்றார். " இல்லிங்கோ, என் கையில் ஏதோ பிசுபிசுவென்று ஒட்டிக்கொண்டது. ரத்தமாட்டமிருக்குதுங்கோ. இந்த ஆள் பலமான அடிபட்டு மண்டை உடைந்துபோயிருக்கிற மாதிரி தெரியுதுங்கோ" என்றான். இருவருமாகத் தலையண்டை உட்கார்ந்து உற்றுப் பார்க்கும்போது கீழே கிடந்தவனுடைய வலப் பொறியிலிருந்து ஒரே கறுப்பாக ரத்தம் ஓடித் தோய்ந்து கீழேயும் போயிருப்பது தெரிந்தது. சொக்கேசர், "ஐயோ பாவம் ! அடிபட்டுத்தான் கிடக்கிறான். மூச்சு இருக்கிறதோ, இல்லையோ !" என்று மூக்கில் கையை வைத்துக் கவனித்தார். முதலில் ஒன்றும் தெரியவில்லை. நிதானித்துப் பார்க்கிறபோது மூச்சு விடுவதாகக் கண்டார். இதற்குள் கண்ணப்பர், ஆடியபாதம், இரண்டாவது வண்டிக்காரன்

எல்லோரும் வந்து சூழ்ந்துகொண்டார்கள். சொக்கேசர் வண்டிக்காரனைப் பார்த்து, "அப்பா, நம் வீடு தெரியுமே உனக்கு, உடனே ஓடி முன்னால் சடையன் படுத்திருப்பான்; அவனையும் இன்னும் இரண்டு வேலைக்காரர்களையும் கூட்டிக்கொண்டு ஒரு கைவிளக்கையும் எடுத்துக்கொண்டு ஓட்டமாய் ஓடியா பார்ப்போம்" என்றதும் வண்டிக்காரன் போனான். "இரு, இரு, இன்னொன்று. அப்படியே அம்மாளை எழுப்பி, குழந்தை பூங்கோதையிடம் அடிபட்ட பச்சைப் புண்ணுக்குப் போடக்கூடிய புது மருந்து ஒன்றிருக்கிறது. அதையும் வாங்கிக்கொண்டு ஓடி வா. சீக்கிரம்........ ஐயோ பாவம்! யாரோ தெரியவில்லையே!" என்றார்.

வண்டிக்காரன் வேகமாகப் போய்விட்டான். மற்றவர்கள் அவன் திரும்பி வருகிற வரையில் செய்வதற்கொன்றுமின்றி, இருட்டில் ஏக்கத்தோடு நின்றிருந்தார்கள்.

சுமார் இருபது நிமிஷங்கள் சென்று வண்டிக்காரன் வந்தான். கையில் விளக்கும் இல்லை; கூட வேறு ஆள்களும் இல்லை. கனமாக மூச்சு விட்டுக்கொண்டு நொண்டி நொண்டி மெதுவாக வந்தான். "ஐயா....உங்கள்....வீடு பரக்கத் திறந்து....கெடக்குது. உம்....உஸ்....உஸ்....உம்....வெளிக்கதவு உள் கதவு ....உம்........ உம் எல்........எல்லாம் திறந்து கிடக்குதுங்க. ஓர் ஆள்கூட இல்லீங்கோ! நானும் கத்திக் கத்தி....உம்....உம்....என் தொண்டையெல்லாம் புண்ணாயிப் போச்சி .... உம் .... உம்.... உள்ளே போய்ப் பார்க்கலாம், ஏதாவது வெளக்கிருந்தால் நாமாவது எடுத்து வரலாமென்று .... உம் ..உஸ்.... அப்பாடா.... இதோ பாருங்கோ....இருட்டிலே தடவிக்கொண்டே போனேனுங்கோ. உம்....உம்....உம்........குறுக்கே என்னமோ தடுக்கி....ஐயோ பாருங்க அப்படியே குப்புற விழுந்து ..பொட்டியோ, நாக்காலியோ நெத்தியில் படேரென்று இடிச்சி, பாருங்க .... பெருத்த காயம்....ரெத்தம் வருதுங்க. மொழங்கால்லே நல்ல அடி. நடக்க முடியலிங்கோ அப்பா....அப்பா உஸ்...." என்று சொல்லிக்கொண்டே வண்டிக்காரன் நடுப் பாதையில் நெற்றியைப் பிடித்துக்கொண்டு உட்கார்ந்துவிட்டான்.



பார்த்தார் சொக்கேசர். ஒன்றும் விளங்கவில்லை. திகைத்து நின்று,'வீடு பரக்கத் திறந்து கிடக்கிறதாம்—வெளிச்சமில்லையாம்—கத்திக் கத்திப் பார்த்தானாம்--யாருமில்லையாம்! என்ன கனவா? சடையன் எங்கே போனான்? கட்டையனிருப்பானே! மூக்கன், ரங்கன்—இவர்கள் வீட்டை விட்டுப் போகக் காரணமில்லையே! குதிரைக் கொட்டாரத்தின் விளக்கெங்கே! மாட்டுக் கொட்டத்து விளக்கு விடிய விடிய எரியுமே! எல்லாம் போனாலும் அக்காள் காமாக்ஷியம்மாள் இரவில் பூனை வந்தாலும் "யாரங்கே?" என்று கேட்கக்கூடிய ஜாக்கிரதைக்காரராயிற்றே. அவர்கள் கூடவா ஏனென்று கேட்கவில்லை! எந்த விளக்கு அணைந்தாலும் பூங்கோதையின் அறையிலுள்ள விளக்கு அணைந்ததே கிடையாதே! ஒரு பர்லாங்கு தூரத்திலிருந்தே பூங்கோதையினுடைய அறையின் விளக்குத் தெரியுமே! என்ன ஆச்சரியம்!' என்று தமக்குள்ளேயே பலவாறு சிந்தித்து,.... "சரி, நான் போய் விளக்கெடுத்து வருகிறேன்" என்று புறப்பட்டார். அதற்குள் வண்டிக்காரன் "ஐயா, நான் திரும்பி வெளிக்கதவண்டை வரும்போது வீட்டுக்குள் யாரோ கதவை உடைக்கிற மாதிரி 'திடீர் திடீர்' என்று சத்தங் கேட்டதுங்கோ. நான் பயந்து போய் ........ வலி வேறே ........வந்துவிட்டேன். நீங்கள் கொஞ்சம் நிதானமாகப் பார்க்க வேணுமுங்கோ" என்றான்.

சொக்கேசர் வெகு வேகமாகத் தம் வீட்டுக்கு வந்தார். வெளிக்கதவும் தலைவாசலும் திறந்து கிடந்தன. வேலையாள்களின் பெயர்களை ஒவ்வொன்றாகச் சொல்லி உரக்கக் கத்தினார். பதிலில்லை. குதிரைக் கொட்டாரம், மாட்டுக் கொட்டகை முதலான எல்லா இடங்களுக்கும் போய்ப் பார்த்தார். வண்டிக்காரன் சொன்னது சரியாய் இருந்தது. யாரோ கதவை உடைக்கிற சத்தங் கேட்டதாக வண்டிக்காரன் சொன்னானே என்று காது கொடுத்துக் கவனித்தார். ஒரு சத்தமும் கேட்கவில்லை. கூடத்தில் மெல்ல மெல்ல அடிமேல் அடிவைத்து நடந்தார். தம்முடைய சொந்த வீட்டில் பயமில்லாமல் போகக் கால் வந்தாலும் வண்டிக்காரன் தடுக்கி விழுந்துவிட்டதாகச்

சொன்ன பயத்தால், மெதுவாகப் போனார். காலில் ஏதோ தட்டுப்பட்டது. கூடத்தின் நடுவிலிருந்த நாற்காலிகளில் இரண்டு மூன்று கவிழ்ந்து சாய்ந்து கிடந்தது தெரிந்தது. அவைகளைக் கடந்து பின்கட்டுக்குப் போகும் கதவண்டை வந்தார். தடவிப் பார்த்தார். ஒருநாளும் அறியாதபடி அந்தக் கதவு இந்தப் பக்கத்தில் பூட்டப்பட்டிருந்தது ! மாடிப்படிக்குப் போனார். ஒவ்வொரு படியிலும் நின்று நின்று ஏறினார். ஒரு கால் கதவை உடைக்கிற சத்தம் மேலிருந்து வந்திருக்குமோ என்று, பயத்தோடுதான் படியேறினார். தாழ்வாரத்தில் சற்றுத் தாமதித்தார். உள்ளே புகுந்தார். உடனே பூங்கோதையின் நினைவு வந்து இடப்புறத்தில் இருந்த அவளுடைய அறைக்குச் சென்றார். அதுவும் திறந்து கிடந்தது. மேஜையின்மீது வழக்கமாகப் பூங்கோதை விளக்கை வைக்கிற இடத்துக்குப் போய்த் தேடினார். மேஜையின்மீது அணைக்கப்பட்ட விளக்கு இருந்தது. ஆனால், நெருப்புப் பெட்டிக்கு என்ன செய்வது? படுக்கையைச் சோதித்தார். சிறு குரலால் பூங்கோதையைக் கூப்பிட்டார். பூங்கோதை அங்கில்லை என்று நிச்சயமாகத் தெரிந்தவுடன் இயற்கையாகவே பயந்தவரான சொக்கேசருக்கு என்றுமில்லாத பயமும் விசனமும் மலை போல வளர்ந்துவிட்டன. 'தம்முடைய வாழ்வின் இன்பத்துக்கெல்லாம் உயர்நிலையாகிய தமது ஒரே குழந்தையான பூங்கோதைக்கு என்ன மோசம் வந்துவிட்டதோ என்ற ஏக்கத்தால், துக்கமும் பயமும் ஆவேசமும் கொண்டு வளர்ந்து, குழந்தையைப் பார்க்க வேண்டுமென்ற வெறியாக மாறிவிட்டது. வெறிகொண்ட பதற்றத்தோடு பயத்தை மறந்து, அங்குமிங்கும் ஆத்திரத்தோடு தேட ஆரம்பித்தார்.

பெண்கள் மேல்மாடிக்கு வருவதற்கென்று வீட்டின் பின்புறத்திலிருந்து அமைக்கப்பட்டிருந்த படிகளுக்குப் பூங்கோதையின் அந்தப்புரத்திலிருந்து போகும் வழியில் ஓடினார். அந்தப் படிக்கட்டின் கதவு எப்போதும் போல உட்புறத்தில் தாளிடப்பட்டிருந்தது. மீண்டும் வந்தார். தம்முடைய அறைக்குப் போனார். அது தாம் ஊருக்குப் போகும்போது விட்டுப் போனபடியே பூட்டப்பட்டிருந்தது. அறையைத் திறந்தால் விளக்கு,



நெருப்புப் பெட்டி—எல்லாம் சுலபந்தான். ஆனால் சாவி, தாம் ரயிலிலிருந்து வந்த வண்டியில் இருக்கிறது! அந்தப் பூட்டின் இன்னொரு சாவியோ இவர் ஊரிலில்லாதபோது வேணுமானால் உபயோகப்படுத்திக்கொள்ள காமாக்ஷியம்மாளிடம் இருப்பது வழக்கம். அந்த அம்மாள் எந்த இடத்தில் இருக்கிறார்கள் என்றும், என்ன கதியானார்கள் என்றும் தெரியவில்லை. ஐயோ! பரிதாபம் ! என்ன செய்வார் சொக்கேசர் ! வீட்டில் கள்ளர்கள் புகுந்துவிட்டார்கள் என்பதும், தம் அருமைக் குழந்தை பூங்கோதைக்கும், அக்காள் காமாக்ஷியம்மாளுக்கும் ஏதோ ஆபத்து வந்துவிட்டதென்றும் பயமும் பதற்றமும், ஆத்திரமும் ஆவேசமும், விசனமும் வெறியும் ஒன்றோடொன்று பின்னிப் பின்னிச் சொக்கேசரைப் பித்தாக்கிவிட்டன.

மாடியை விட்டுக் கீழே ஓடினார். பொன்னம்பலம் படுக்கும் அறையைத் தட்டினார். "ஊம் ஊ ஊம் ஊம்" என்று அவன் தூங்கிக்கொண்டே பதில் கொடுப்பது போலத் தெரிந்தது. சிறிது தைரியம் வந்து கதவை ஓங்கித் தட்டினார். அவன் 'உம்' கொட்டிக் கொண்டபடி இருந்தானே அல்லாமல் எழுந்து வந்தபாடில்லை. சொக்கேசர் என்றுமில்லாத கோபத்தோடு தமது பலத்தையெல்லாம் கூட்டிக் கதவை இடித்தார். பொன்னம்பலம் விழித்துக்கொண்டு "யாரது ?" என்றான். அப்பாடா!

"நான்தான்; நான்தான்....மாமா........அட முட்டாள்! என்ன தூக்கமடா உனக்கு விடியற்காலையில் ! படிக்கிற பையனா நீ ! கதவைத் திற" என்று கத்தினார். "அட முட்டாள்" என்பது சொக்கேசருக்கு அடக்க முடியாத கோபம் வந்துவிட்ட சமயங்களில் சொல்லுகின்ற வார்த்தை. அதைப் பொன்னம்பலம் அறிவான். மாமாவென்று அறிந்து எழுந்து வந்து தாழைத் திறந்து கதவை இழுத்தான். கதவு திறக்க முடியவில்லை. "என்ன மாமா; அந்தப் பக்கத்தில் சங்கிலி போட்டிருக்கிறது போலிருக்கிறதே !" என்றான். அப்போதுதான் சொக்கேசர் சங்கிலியைத் தொட்டுப் பார்த்தார். ஆச்சரியம் ! அதிலும் ஒரு புதுப் பூட்டு போடப்பட்டிருந்தது.

இந்தச் சமயத்தில் வீதியில் யாரோ "ஐயா ! ஐயா; வாங்க, வாங்க" என்று கூப்பிடுகிற குரல் கேட்டது ! சொக்கேசர் வாசலுக்கு வந்தார். வீதியில் விளக்கு வெளிச்சமும் வண்டியும் இருக்கக் கண்டார். வீதிக்கதவுக்கு ஓடினார். "இரண்டு 'கேட்'டையும் திறந்து வண்டிகளை உள்ளே விடு" என்று கண்ணப்பர் சொன்னது கேட்டது. சொக்கேசர் கிட்ட வந்த உடன் கண்ணப்பர் கீழே குதித்து, "வழியில் அடிபட்டுக் கிடந்தவன் வேறு யாருமல்ல. உங்களுடைய ஆள் **சடையன்** தான். இதோ இந்தப் போலீஸ் ஜவான் கொண்டுவந்த விளக்கில் பார்த்த போது வண்டிக்காரன் அடையாளங் கண்டு சொன்னான். நீங்கள் திரும்பி வருகிற வரையிலும் காத்திருக்க வேண்டாமென்று அவனை வண்டியில் தூக்கிப் போட்டுக் கொண்டு வந்தோம். உடனே போலீஸாருக்குச் சொல்லி யனுப்பி அடித்தவர்களைக் கண்டு பிடிக்கச் செய்யுங்கள்" என்றார்.

"சடையனை அடித்தது மட்டுமா ? இன்னும் என்னென்ன நடந்திருக்கிறதோ" என்று சொல்லிக்கொண்டே சொக்கேசர் வண்டியில் தம் கைப்பெட்டியில் வைத்திருந்த சாவிக்கொத்தை எடுத்துக்கொண்டு போலீஸ்காரனுடைய விளக்கை வாங்கிப் பிடித்து, வீட்டுக்குள் ஓடி மாடியில் தம்முடைய அறையைத் திறந்து, இரண்டு மூன்று கைவிளக்குகளைப் பொருத்திப் பதற்றத்துடன் எடுத்துக்கொண்டு வந்தார்.

சடையன் வழக்கமாகப் படுக்கும் அவனுடைய கட்டிலை வெளியில் கொண்டுவந்து போட்டுச் சடையனை வண்டியி லிருந்து இறக்கி, அதில் படுக்கப்போட்டுப் பார்க்கிறபோது வலப்புருவத்திலிருந்து கீழே கன்னத்தைக் கிழித்துக்கொண்டு சுமார் மூன்றங்குல நீளமுள்ள ஆழமான காயம் ஒன்றிருந்தது. வலத் தோள்பட்டை கிழிந்திருந்தது. தோள் வீங்கியிருந்தது. இடையில் கோவணத்தைத் தவிர ஆடையில்லை. மூச்சு வந்து கொண்டிருந்தாலும் பிணம் போலவே கிடந்தான். உடனே சொக்கேசர் இரண்டாவது வண்டிக்காரனையும் போலீஸ் ஜவானையும் டாக்டருக்கும் போலீசுக்கும் அனுப்பினார்.



போலீஸ்காரன் புறப்படும்போது "இந்த இடத்துக்கு இன்றைக்கு நீர்தான் பீட்டா?" என்றார் சொக்கேசர். "இல்லிங்கோ, நான் வேறே ஒரு 'டூட்டி'யாக ரயிலுக்குப் போயிருந்தேன். நீங்கள் மூன்று மணி வண்டியில் வந்து இறங்கின போது நான் டேசனில்தான் இருந்தேன். கொஞ்சம் 'டேசன் மாஸ்ட'ரிடம் பேசிவிட்டு உங்களுக்குப் பின்னால் வந்தேனுங்க. வழியில் நீங்கள் வந்த வண்டிகள் நிற்கிறதைக் கண்டு விசாரித்ததில் சமாச்சாரம் தெரியவந்தது. நான் நேரா பெரிய இன்ஸ்பெக்டரிடத்திலேயே போய்ச் சொல்ரனுங்கோ" என்று சொல்லிப் போலீஸ்காரன் போய்விட்டான்.

சொக்கேசர் கண்ணப்பரைப் பார்த்து, "சடையன் அடி பட்டிருப்பது மட்டுமா ! வீட்டில் யாரையுங் காணோமே ! குடி போன வீடு மாதிரி பாழடைந்து கிடக்கிறதே ! குழந்தைக்கும் அக்காளுக்கும் என்ன துன்பம் வந்ததோ தெரியவில்லையே ! அநேக இடங்களில் நாமறியாத பூட்டுக்கள் பூட்டப்பட்டிருக் கின்றன. என்ன அநியாயமிது ! நான் யாருக்கும் ஒரு பாவமும் செய்யவில்லையே ! ஐயோ!" என்று துக்கப்படும் சமயத்தில் வீட்டின் பின்புறத்திலிருந்து 'தடதடதட், தடதட தட்.... . தட்........தட்' என்று கதவிடிக்கிற சத்தம் கேட்டது. "ஆ ! இதுதானுங்க நானும் கேட்டது" என்று, முன் வீட்டுக்கு வந்துபோன வண்டிக்காரன் சொன்னான்.

"அதென்னவென்று பார்ப்போம்" என்று சொக்கேசர் புறப்பட்டார். ஆனால்; கண்ணப்பர் போலீஸார் வருகிறவரை யிலும் சும்மா இருக்கும்படி தடுத்து, "அதை அப்புறம் பார்த்துக் கொள்ளுவோம். இவனுக்கு ஏதோ பச்சைப் புண்ணுக்கு மருந்து இருக்கிறதாகச் சொன்னீர்களே, அதையும் கொஞ்சம் துணியையும் கொண்டுவாருங்கள். நான் ஒரு கட்டுக் கட்டு கிறேன். ரத்தம் போவதைத் தடுக்கவேண்டும்" என்றார். சொக்கேசர் ஒரு விளக்கை எடுத்துக்கொண்டு வீட்டுக்குள் போனார்.

செங்கமலத்தம்மாள் இதுவரையிலும் சற்று தூரத்தில் விசனத்தோடு நின்றுகொண்டிருந்தவள் கண்ணப்பருக்குப் பக்கத்தில் வந்து சிறு குரலால் "என்ன? பார்த்தீங்களா? நான் வாண்டாமென்று தலையிலே அடித்துக்கொண்டேன்; கேட்டீங்களா? நான் சொன்னதுக்குச் சரியா சகுனம் எப்படியிருக்கிறது பாருங்கள்! படிச்ச பெண் வேணும், பணக்காரப் பெண் வேணும், அழகான பெண் வேணும், அறிவுள்ள பெண் வேணும் என்று, அலைகிறதெல்லாம் இப்படித்தான். பேசாமல் என் தம்பி மகளைக் கட்டியிருந்தால் இத்தனை நாள் பேரன் பேத்தி எடுத்திருக்கலாம்" என்றாள்.

"சீச்சீ! பைத்தியக்காரி! நல்ல சமயம் பார்த்து இதைச் சொல்லவந்தாய். உன் புத்தி."

சொக்கேசர் மருந்தையும் துணியையும் எடுத்துக் கொண்டு வந்தார். அதைக் கண்ட செங்கமலத்தம்மாள் மறுபடியும் தான் முன் நின்றுகொண்டிருந்த இடத்திற்கே போய் விட்டாள்.

போலீஸ் இன்ஸ்பெக்டர் **சுந்தரமும்** டாக்டர் **சாம்பசிவமும்** அநேக ஜவான்களுடன் வந்து சேர்ந்தார்கள். டாக்டர், சடையனைச் சோதனை செய்து, இரத்தம் அதிகமாகப் போயிருக்கிறதாகவும் ஹிருதயம் மிகவும் அபாயமான நிலையிலிருப்பதாகவும் பிழைப்பது வெகு கஷ்டமென்றும் சொல்லிக் கட்டிலோடு ஆஸ்பத்திரிக்குத் தூக்கும்படி கட்டளையிட்டுத் தாமும் புறப்பட்டார்.

"வீட்டிலிருந்தவர்கள் ஒருவரையும் காணோம். சடையனைப் போல் இன்னும் யாருக்கு என்ன நேர்ந்திருக்கிறதோ தெரியவில்லை. ஆகையினால் தாங்கள் இங்கிருந்தால் நல்லது" என்று டாக்டரிடம் சொக்கேசர் சொன்னார். டாக்டர் தாம் சடையனுக்குச் செய்யவேண்டியதைச் செய்துவிட்டு, உடனே வருவதாகச் சொல்லிப் போய்விட்டார். இன்ஸ்பெக்டர் நடந்தவற்றை விசாரித்தார்.



இன்ஸ்பெக்டர் ஜவான்களுடன் வீட்டைச் சோதிக்க ஆரம்பித்தார். முதலில் வீட்டின் பின்புறத்திலிருந்து உண்டான சத்தம் என்னவென்று பார்க்கப் போனார்கள். தோட்டக்கார ரங்கனுடைய வில்லைக் கொட்டகையண்டை வரும்போது உள்ளே ஏதோ சத்தமுண்டானது போலிருந்தது. கதவண்டை நின்றார்கள். பூட்டப்பட்டிருந்த கதவைப் பார்த்துச் சொக்கேசர், "பாருங்கள், இந்தக் கதவை நாங்கள் பூட்டுவதே கிடையாது. இதில் போட்டிருக்கிற பூட்டும் எங்களுடையதல்ல" என்றார்.

அதில் பூட்டப்பட்டிருந்த பூட்டு சாதாரணப் பூட்டு. ஒரு ஜவான் அந்தப் பூட்டை ஓர் இரும்புக் கம்பியைக்கொண்டு சுலபமாகத் திறந்து விட்டான். கதவு கொஞ்சம் விலகிற்று. ஆனால் கதவோரமாக என்னவோ தடுத்துக்கொண்டிருந்ததால் திறக்க முடியவில்லை. ஜவான் கதவை அழுத்தினான். உள்ளிருந்து ஊமையன் அழுவது போலக்கேட்டது. "டே மெள்ளடா, யாரோ ஆள் போலிருக்கிறது. அவனும் அடிபட்டிருப்பான் போலிருக்கிறது. பலமாக அழுத்தாதே" என்று இன்ஸ்பெக்டர் சொன்னார். கொஞ்சங் கொஞ்சமாகக் கதவைத் தள்ளத் தள்ள உள்ளே திணறுகிற சத்தமும் அதிகப்பட்டது. கடைசியாக ஓர் ஆள் சிரமத்தோடு உள்ளே நுழையக்கூடிய சந்து உண்டான பின் சேவகன் விளக்கை உள்ளே நீட்டிப் பார்த்தான். கதவோரத்தில் இரண்டு மூன்று பேர் உருண்டு கிடந்தது தெரிந்தது. அவர்களில் ஒருவன் தன்னுடைய இரண்டு கால்களையும் கதவின்மேல் உதைத்து வைத்துக்கொண்டிருந்தான். போலீஸ்காரன் கொஞ்சம் கஷ்டத்துடன் உள்ளே போய்க் கதவை உதைத்துக்கொண்டு கிடந்தவனைத் தூரப் புரட்டினான். கதவு திறக்கப்பட்டது. எல்லோரும் உள்ளே போய்ப் பார்த்தார்கள். கீழே உருண்டு கிடந்தவர்கள் சொக்கேசருடைய வேலைக்காரர்களான கட்டையன், மூக்கன், ரங்கன்—இம்மூவருமே. மூவருக்கும் வாயில் பந்து வைத்து இறுகக் கட்டப்பட்டிருந்ததோடு அவர்களுடைய கைகளும் பின்புறத்தில் கட்டப்பட்டிருந்தன. கால்களில் பின்னலிட்டுக் கயிறு சுற்றப்பட்டிருந்தது. கட்டுகளெல்லாம் அவிழ்க்கப்பட்டன.

ரங்கன் மட்டும் கட்டுகளை அவிழ்க்கும்போது பொறுக்க முடியாத வலியால் வேதனைப்படுகிறவனைப் போல அலறினான். கவனித்துப் பார்க்கிறபோது அவனுக்கு மண்டையில் ஒரு பலமான தடியடியும் இடத்தோளில் ஒரு வீக்கமும் காணப்பட்டன. இன்ஸ்பெக்டர் தண்ணீர் கொண்டுவரச் செய்து குடிக்கச் செய்தார் ரங்கனுக்கும் பிரக்ஞையில்லாததால் தண்ணீரை வலியத் தொண்டையில் செலுத்தவேண்டியிருந்தது. மூவருக்கும் முகத்தில் தண்ணீர் அடித்து விசிறச் செய்தவுடன் கட்டையனும் மூக்கனும் களை தெளிந்து எஜமான் சொக்கேசரைப் பார்த்து அழுதுகொண்டே மரியாதைக்கு எழுந்திருக்க முயன்றார்கள். அவர்களை எழுந்திருக்க வேண்டாமென்று இன்ஸ்பெக்டர் கண்டித்து; அப்படியே படுத்திருக்கச் செய்து, அவர்கள் மூவரும் அந்தக் கொட்டாரத்துக்குள் அப்படியே கட்டுண்டு கிடக்க வேண்டி நேரிட்ட விவரங்களை விசாரித்தார்.

மூக்கன், தான் தன் கட்டிலில் அயர்ந்து தூங்கிக்கொண்டிருந்ததாயும், திடீரென்று விழித்துப் பார்க்கையில் நாலைந்து முரட்டு ஆள்கள் தன்னை அசையவொட்டாமல்அழுத்திக்கொண்டிருந்ததாகவும், வேறு சிலர் தன்னுடைய வாயில் பந்தை வைத்து அழுத்திக் கட்டிக் கைகால்களையும் கட்டித் தூக்கிக் கொண்டு போனதாகவும் கொஞ்ச நேரம் மாமரத்தடியில் போட்டிருந்ததாகவும், பிறகு மறுபடியும் தூக்கி வந்து இங்கே போட்டுப் பூட்டின வரைக்கும் தனக்கு ஞாபகமிருக்கிறதாகவும், அதன்பின் மூச்சு விட முடியாத கஷ்டத்தால் மயக்கம் வந்துவிட்டதாகவும், மறுபடியும் நினைவு வந்தபோது தன் பக்கத்தில் இன்னும் சில பேர் படுத்திருப்பதாகத் தெரிந்ததாகவும், தன்னுடைய இரண்டு கால்களையும் சேர்த்துத் தூக்கி இருட்டில் காலால் துழாவுகின்றபோது கதவு காலில் பட்டது கண்டு, கதவை உதைத்துச் சத்தங்காட்டினால் ஒத்தாசைக்கு யாராவது வருவார்களென்று வெகு நேரம் ஓங்கியோங்கிக் கதவை உதைத்துக்கொண்டேயிருந்து மறுபடியும் அயர்ந்து போய் மயங்கிவிட்டதாகவும் சொன்னான்.



கட்டையனும் ஏறக்குறைய இதே மாதிரி சொன்னான். ரங்கனைக் கேட்டதற்கு, அவன்—'உம்—உம்' என்று பதில் காட்டினானென்றாலும் சரியான நினைவு வராதவனாகவும் பேசச் சக்தியில்லாதவனாகவும் இருந்தான்.

மூவரையும் காற்றோட்டமான வேறோர் இடத்தில் படுக்க வைத்துவிட்டு, இன்ஸ்பெக்டர் முதலானவர்கள் வீட்டுக்குள் போனார்கள். பொழுது விடிந்துவிட்டது. டாக்டர் சிவம் மறுபடியும் வந்து ரங்கன் முதலானவர்களுக்குச் செய்யவேண்டியதைக் கவனித்தார். சொக்கேசர் சடையனைப்பற்றி வெகு கவலையோடு விசாரித்ததற்கு டாக்டர், சடையனுடைய நிலைமை அப்படியேதானிருக்கிறதென்றும் பிரக்ஞை வருவதாயிருந்தால் குறைந்தது இன்னும் பன்னிரண்டு மணி நேரம் போக வேண்டுமென்றும் சொன்னார்.

வீட்டுக்குள் போய் முதலில் பொன்னம்பலத்தின் அறையின் பூட்டைத் திறந்தார்கள். அவன் தான் படுத்துக் கொண்டதும் பிறகு விடியற்காலையில் மாமா கதவைத் தட்டிக் கூப்பிட்டதுந் தவிர, தனக்கு வேறொன்றும் தெரியாதென்றான். அதன்மேல் பின் கட்டுக்குப் போகும் கதவிலிருந்த பூட்டைத் திறக்க முயன்றார்கள். அது சற்றுக் கெட்டியான பூட்டாயிருந்ததால் உடைக்க வேண்டியிருந்தது. உடைத்துக் கதவைத் திறந்தவுடன் எதிரில் வெடவெடவென்று விழித்துக்கொண்டு சமையற்காரி மாரியம்மாள் நின்றுகொண்டிருந்தாள்.

அவளைக் கேட்டதற்கு அவள், தான் நேரத்தோடு வழக்கமாகப் படுக்கும் சமையல் கொட்டத்துக்குப் பக்கத்து அறையில் படுத்துக்கொண்டதாகவும், நடு ஜாமத்துக்கு மேல் நாய்கள் குலைத்ததால் தூக்கம் கலைந்து சற்று நேரம் உற்றுக் கேட்டதாகவும், பின் நாய்கள் குலைப்பது நின்றுவிட்டது கண்டு தானும் தூங்கிவிட்டதாகவும், விருந்தாளிகள் வரப்போவதால் சீக்கிரம் எழுந்திருந்து காரியங்களைப் பார்க்க வேணுமென்று அம்மாள் சொல்லியிருந்ததால் தான் நாலு மணி சுமாருக்கு எழுந்து வந்ததாகவும், கதவு பூட்டப்பட்டிருப்பதைக்

கண்டு வெகுநேரம் தட்டித் தட்டிக் கூப்பிட்டுப் பார்த்தும் யாரும் பதில் சொல்லாததால் என்னவோ ஏதோவென்று பயந்து மீண்டும் தன்னுடைய படுக்கைக்குப் போய் விழித்துக்கொண்டே படுத்திருந்ததாகவும்,இப்போது பூட்டை உடைத்த சத்தங்கேட்டு வந்ததாகவும் சொன்னாள்.

"நீ நேற்றுக் காமாக்ஷியம்மாளையும் பூங்கோதையம்மாளையும் கடைசியாக எப்போது பார்த்தாய்?" என்று இன்ஸ்பெக்டர் கேட்டார்.

"பூங்கோதையம்மாளை ராத்திரி சாப்பிடும் போது பார்த்ததுதான். பெரியம்மாளை, அவர்கள் என்னிடத்தில் வந்து விருந்தாளிகள் வருவதைப்பற்றிச் சுமார் பத்து மணிக்குப் பேசினபோது பார்த்தேன். ஏன்? என்னாங்க? அவர்கள் இப்போது எங்கே? என்ன சாமி? சொல்லுங்க" என்று மாரியம்மாள் துக்கப்பட ஆரம்பித்தாள்.

"பொறு பொறு, பதறாதே, ஒன்றுமில்லை; எல்லாம் சீக்கிரத்தில் தெரியும்" என்று சொல்லிவிட்டு, இன்ஸ்பெக்டர் உள்ளே போய்ச் சமையல் கொட்டடி, மற்ற அறைகள், மூலை முடுக்கு எல்லாவற்றையும் பார்த்துவிட்டு, அனைவரும் மேல் மாடிக்குச் சென்றார்கள்.

பூங்கோதையின் அறையை இன்ஸ்பெக்டருக்குச் சொக்கேசர் காட்டினார். அவர் வெகு நிதானமாக அறையைப் பரிசோதித்தார். அறையிலிருந்த சாமான்கள், பெட்டி பேழைகள் முதலிய எல்லாம் எப்போதும் போலவே கலையாமலிருப்பதாகச் சொக்கேசர் சொன்னார். படுக்கையைக் கவனித்தார்கள். தலையணை ஓரமாகப் பாதி வாடிப்போன ரோஜாப் புஷ்பம் ஒன்று கிடந்தது.

"ஆகவே, படுக்கையில் படுத்திருந்ததாகத் தெரிகின்றது" என்று இன்ஸ்பெக்டர் மேஜையண்டை வந்து கீழே ஏதோ கொத்தாகக் கிடப்பதைக் கண்டு "இது என்ன இது?" என்று எடுத்தார். அது சுருண்டு சுருண்டு இலைகளுள்ள ஏதோ ஒரு



செடியின் ஒரு சிறு கிளையாக இருந்தது. இன்ஸ்பெக்டர் அதை வெகுநேரம் கவனித்துப் பார்த்துவிட்டு, "இந்தச் செடி உங்கள் வீட்டிலாவது தோட்டத்திலாவது பயிராகியிருக்கிறதா?" என்றார். சொக்கேசர் அதைத் தாமும் நன்றாகப் பார்த்துவிட்டு, மூக்கில் வைத்து முகர்ந்து, "அப்பாடா! என்ன காரமாக இருக்கின்றது! இந்தச் செடியை நான் பார்த்ததுகூட இல்லை. இது இந்தப் பக்கங்களில் எங்குமில்லை" என்றார்.

"ஆ! அப்படிச் சொல்லுங்கள், இந்த மூலிகையைப்பற்றி நான் கேள்விப்பட்டிருக்கிறேன். ஆனால் இதுவரையிலும் பார்த்ததில்லை. இது நமக்கு ஒரு துப்பு. இதை அதிகமாக முகரக்கூடாது. இது ஒரு படு விஷம்; இங்கே நுழைந்த கள்ளர்கள் யாராயிருக்கக் கூடுமென்று இந்தச் செடி நமக்குச் சிறிது வழி காட்டுகிறது. இருக்கட்டும், இன்னும் பார்ப்போம்" என்று இன்ஸ்பெக்டர் சற்று திருப்தியோடு சொன்னார்.

"என்னவோ, இனி நீங்கள்தான் கதி....என்னுடைய உயிருக்குயிரான குழந்தையும்....ஐயோ! ஐயோ!....ஐயோ!....என் தமக்கையும்...." என்று சொக்கேசர் தேம்ப ஆரம்பித்தார்.

"நீங்கள் ஒன்றுக்கும் பயப்பட வேண்டாம், சார். கண்டு பிடித்துத் தருகிறேன். அவர்களுக்கு ஒன்றும் பிராணாபாயத்துக்கு இடமில்லை என்று நன்றாகத் தெரிகிறது. நீங்கள் தைரியமாக இருங்கள்."

"எப்படியோ....தங்கள் தயவினால்தான்....என்ன செலவானாலும் சரி....தயவு...."

"நீங்கள் சும்மா இருங்கள். நான் பார்த்துக்கொள்ளுகிறேன். அதைரியப்பட வேண்டாம். மற்ற இடங்களையும் பார்ப்போம், வாருங்கள்" என்று இன்ஸ்பெக்டர் முன்னால் போக, சொக்கேசரும் பின்னால் சென்றார்.

"இந்தச் செடி ஏதோ படுவிஷம் என்று சொன்னீர்களே, யாராவது என் குழந்தைக்கு அதைக் கொடுத்து...."

"சொக்கேசரே ! என்ன ? நல்ல படிப்பாளியான நீங்கள் இதற்குள் இவ்வளவு கலங்குகின்றீர்களே ? எதுவானாலும் தாங்கள் தடுமாற்றமில்லாமல் இருக்க வேணும். அப்படியொன்றும் உங்கள் குழந்தைக்கு ஆபத்து வந்திருக்கும் என்று எனக்குத் தோன்றவில்லை. தாங்கள் கவலைப்படாமல் இருங்கள். நான் கண்டுபிடிக்கிறேன்" என்று இன்ஸ்பெக்டர் தேற்றினார்.

"ஐயாய்யா! ஓடியாங்க, ஓடியாங்க! போய்ப் பாருங்கய்யா! ....என்ன அநியாயமையா !....போச்சே ! இந்தக் குடித்தனத்துக்கு இந்தக் கஷ்டம் வரலாமா ?....அட தெய்வமே ! தெய்வத்துக்கும் கண்ணில்லாமல் போச்சே !....ஐயோ சாமீ !.... என்னத்தைச் சொல்வேன் ! அட தெய்வமே ! அட தெய்வமே !...." என்று தலைதலையாக அடித்துக்கொண்டும் அலறிக்கொண்டும் சமையற்காரி மாரியம்மாள் மாடிக்கு ஓடி வந்தாள்.

"என்ன ? என்ன ? சொல்லு மாரியாயி ! என்ன சொல்லு" என்று சொக்கேசர் தேகமெல்லாம் நடுங்கிக்கொண்டு வாய் குளறிக் கேட்டார்.

"ஐயோ ! குடுத்துவைக்காத பாவியான நான் என்னத்தைச் சொல்லட்டும் ? எப்படிச் சொல்லுவேன் ! ஐயோ ! சாமி வந்து பாருங்களேன். புண்ணியச் சாமி ! உங்க தான தருமங்களைக் கூடப் பார்க்கத் தெய்வத்துக்கும் கண்ணில்லாதே போச்சே ! ஐயோ ! என் கெதி திக்கத்துப் போச்சே ! ஐயையோ"....

"அட சட் ! சமாச்சாரமென்ன ? அதைச் சொல்லு. நீ பாட்டுக்கு ஒப்பாரி வைக்கிறாய்."—இன்ஸ்பெக்டர் மாரியம்மாளை அதட்டினார்.

"ஐயோ சாமி, நீங்கள் கீழே போய்ப் பாருங்களேன். அம்மாளுக்கு வந்த அநியாயத்தை ! ஐயையோ ! சொல்லக்கூட என் நாக்கு வரலியே ! அடி மகமாயி ! காளி ! முருகா ! ஈசுவரா ! இந்த அநியாயம் உண்டா ? நல்லவங்களுக்கு இப்படியும் வரலாமா ? என்னைப் போலப் பாவிகளுக்கு வரக்கூடாதா ?"



"கீழே போய் அம்மாளைப் பாருங்கள்" என்பதைக் கேட்டு எல்லாரும் தங்களை மறந்து திடுதிடுவென்று கீழே ஓடினார்கள். கூடத்திலும், அங்கும், இங்கும் எல்லா அறைகளிலும் தேடினார்கள். ஒன்றுங் காணவில்லை. மாரியம்மாள் இன்னும் மாடியிலேயே அழுதுகொண்டும் அப்பிக்கொண்டும் ஓலமிட்டுக் கொண்டே யிருந்தாள்.

ஆத்திரத்தோடு கீழே ஓடித் தேடினவர்களுக்கு மாரியாயி சொன்னது எந்த இடத்தில் என்னவென்று விளங்காமல் மாரியம்மாளைக் கூப்பிடச் சொன்னார்கள். ஓர் ஆள் வேகமாக மாடிக்கு ஓடி மாரியம்மாளைக் கூப்பிட, "ஐயோ ! நான் வர மாட்டேன். இந்தப் பாழுங் கண்ணாலே இன்னொரு தரம் அதைப் பார்த்துச் சகிக்கமாட்டேன். நான் இங்கேயே இருந்து செத்தாவது போவேன். ஐயோ ! அந்தப் புண்ணியவதிக்கு இந்தக் கதியா வருவது !" என்று மாரியம்மாள் அசைய மாட்டேனென்று விட்டாள்.

"அடடே ! இதென்ன சங்கடமாயிருக்கிறது ! அம்மா இருக்கிறாங்களென்று சொன்னாயே அம்மா, அது எந்த இடத்திலே? அதையாவது சொல்லித் தொலையம்மா" என்று வந்தவன் கோபித்தான்.

"அம்மாளா ? அம்மா இருக்குறாங்களா ? இன்னும் அம்மா இருக்குறாங்கோண்ணா நான் சொன்னேன். நீங்களே பார்த்துக் கொள்ளுங்கள். ஐயா ! நான் வரமாட்டேன். என்னாலே தாங்க முடியாது. ஊஹூம் ! நான் வரவே மாட்டேன்."

"அட சனியனே ! நீ வராட்டிப் போய்த் தொலையுது. நாங்களே பார்த்துக்கொள்ளுகிறோம். எந்த இடத்தில் பார்க்கிறது ? அதையாவது சொல்லித் தொலை. அம்மாளை நீ எந்த இடத்தில் பார்த்தாய் ?"

"ஐயோ ! நான் பார்த்துப் பாழாப்போனேன். மெத்தைப் படிக்கட்டுக்குக் கீழே வெளுக்குமாறு போடுகிற பெரையிலே பாருங்கய்யா, பாருங்க. அம்மாளே பாருங்க...." என்றாள்

மாரியம்மாள். உடனே, அவன் கீழே ஓடி, மாரியம்மாள் வர மாட்டேன் என்றதையும், மெத்தைப் படிக்கட்டுக்குக் கீழே பெரையிலே பார்க்கச் சொன்னதையும் சொன்னான்.

சொக்கேசருடைய வீட்டில் மேல் மாடிக்குப் போக மூன்று படி வழிகள் உண்டு. ஒன்று, கூடத்தில் பொதுவான உபயோகத்துக்குத் தெருவிலிருந்து வரக்கூடியது. அயல் மனிதர்களும் குடும்பத்துக்கு அறிமுகமானவர்களும் ஏறுவதற்கு ஏற்படுத்தப்பட்டது. இன்னொன்று, இரண்டாவது கட்டிலிருந்து பெண்டுகள் மாடிக்குப் போவதற்காக அமைக்கப்பட்டது. மூன்றாவது, கொல்லைக்குச் சமீபமாக வீட்டு வேலைக்காரர்கள் தானியம் தவசங்களை மேலே கொண்டுபோய்க் காயப்போடுவது முதலான காரியங்களுக்கானது.

முதல் படிக்கட்டின் அருகில் பார்த்தார்கள். ஒன்றுமில்லை. இரண்டாங் கட்டின் படிவழிக்கு ஓடினார்கள். இந்தப் படிக்கட்டின்கீழ் வளைவான இடம் ஒரு சிறு அறை போல் இருக்கும். இதைப் 'படிக்கட்டுப் புரை' என்று சொல்வது வழக்கம். அதில் வீடுபெருக்கும் விளக்குமாறு, முறம் முதலானவைகளை ஒதுக்காகப் போடுவது வழக்கம்.

இப்போது இந்தப் புரைக்கு முன்னால் ஒரு பழைய கட்டில் நிறுத்தப்பட்டு அதன்மேல் அங்கே காயவைத்திருந்த சேலைகளில் ஒன்றைப் போட்டு மூடப்பட்டிருந்தது. இந்தக் கட்டிலை வெகு ஆத்திரத்தோடு சொக்கேசர், தாமே தூக்கித் தூரப் போட்டுவிட்டுப் புரையின் உள்ளே பார்த்தார். அது வெளிச்சம் மட்டான இடமானதால் முதலில் ஒன்றும் தெரியவில்லை. சற்று நேரம் உட்கார்ந்து கவனித்துப் பார்த்துவிட்டு "ஐயோ ! அக்கா ! அக்கா!" என்று புரைக்குள் தாவி விழுந்தார். உடனே இன்ஸ்பெக்டர் சொக்கேசரை அப்புறம் போகச் செய்து, தாம் சமீபத்தில் போய்க் கவனித்தார். அங்கே சுவரின் மேல் சாய்ந்த மாதிரி இரண்டு கால்களையும் நீட்டிக்கொண்டு உட்கார்ந்திருப்பது போலக் காமாக்ஷியம்மாளைக் கண்டார். தலைமயிர் அலங்கோலமாக அவிழ்ந்து கிடந்தது. கண்ணி



ரண்டும் நட்டுப்போய் ஒளியற்றிருந்தன. நாக்கு சிறிது வெளியில் தொங்கியிருந்தது. பற்கள் இறுகியிருந்தன. மூக்கிலிருந்து தாரை தாரையாகச் சளி வழிந்து அப்படியே தோய்ந்து காய்ந்து, தொங்கிக்கொண்டிருந்தது. இரண்டு கைகளும் இரண்டு பக்கத்தில் கையேந்துவது போல விரல்கள் விரிந்து விறைத்துக் கிடந்தன. பார்ப்பதற்கு அதைவிடப் பயங்கரமான காட்சி வேறொன்றும் இருக்க முடியாது.

சொக்கேசர், தடுக்கமுடியாதபடி தள்ளிக்கொண்டு வந்து, மறுபடியும் பக்கத்தில் உட்கார்ந்து, கைகால்களையெல்லாம் தொட்டுப் பார்த்துவிட்டு, "ஐயையோ ! எல்லாம் வாழைத் தண்டு போலச் சிலுசிலுத்துப் போய்விட்டதே ! அக்கா ! அக்கா ! என் தலையில் கல்லைப் போட்டுவிட்டாயே" என்று பிரலாபிக்க ஆரம்பித்தார்.

"டேய் ! தொண்ணூத்தொம்பது ! உடனே டாக்டரைக் கூப்பிடு. ஓடு, இரண்டெட்டில் வரவேணும். டே ! நாற்பத்தைந்து ! சொக்கேசரைக் கொஞ்சம் எட்டக் கூட்டிக்கொண்டு போ. உம்—சீக்கிரம்" என்று இன்ஸ்பெக்டர் இன்னும் கிட்டப் போய்க் காமாக்ஷியம்மாளைக் கவனித்தார். கழுத்தில் ஏதோ மாலை போட்ட மாதிரி ஒரு சிறு வெள்ளைத் துணியிருந்தது. அதை எடுத்தார். அதன் நடுவில் என்னவோ பச்சைப் பசேலென்று ஒட்டிக்கொண்டிருந்தது. கீழே கவனித்தார். காமாக்ஷியம்மாளின் மடியில், கசக்கிப் பிண்டமாகப் பிடித்த மாதிரி ஏதோ தழை கிடந்தது. அதை எடுத்து வெளிச்சத்தில் பார்த்துவிட்டு, "சரி சரி, நான் நினைத்தபடியேதான் இருக்கிறது. இதற்கு முறிவு டாக்டருக்குத் தெரியுமோ என்னவோ ! அப்படி அவருக்கு முறிவு கொடுக்கத் தெரிந்தாலுங்கூட இது மிஞ்சிப்போய் விட்டது போல இருக்கிறது. டே ! யாரடா அங்கே! காதுமியான்! ஒரு தகர டப்பியாவது சட்டியாவது மூடியுள்ளதாகக் கொண்டு வா" என்றார்.

கட்டையன், மூக்கன், ரங்கன்—இவர்களுக்குச் சிகிச்சை செய்துகொண்டிருந்த டாக்டர் சாம்பசிவம் அவசரமாக ஓடி வந்து காமாக்ஷியம்மாளைக் கவனித்தார். "ஓஹோ ! இது

அந்தப் பச்சிலைப் பாஷாணந்தான். இன்ஸ்பெக்டர்வாள்! இந்த மாதிரி முன் இரண்டு மூன்று தடவைகளில் **அந்த மலைக் கள்ளன்** செய்ததாகச் சொல்லப்பட்ட குற்றங்களில் நான் கவனித்திருக்கிறேன். இதற்கு நிச்சயமான முறிவு நம்மிடத்தில் இல்லை. இருந்தாலும் புதிதாக 'மெடிகல் கெஜட்டில்' ஒரு முறிவு வந்திருக்கிறது. அது பொதுவாக எல்லா விஷங்களுக்கும் பயன்படுமென்று பெரிய டாக்டர் சொல்லுகிறார். அதைக் கொடுத்துப் பார்ப்போம். ஆனால், உயிர் இருக்கிறதா இல்லையா என்று சொல்வதற்கே கஷ்டமாக இருக்கிறது. ஹிருதயத்தின் சத்தம் என்னுடைய குழாய்க்குக்கூட எட்டவில்லை. கொஞ்சம் சுவாசம் மட்டும் இருக்கிறது போலத் தான் தெரிகிறது. அதுவும் நிச்சயமாகச் சொல்லமுடியவில்லை. அந்த மூச்சுக்கூட நான் ஆஸ்பத்திரிக்குப் போய் மருந்து கலக்கிக்கொண்டு வருகிற வரையிலும் இருப்பது சந்தேகம். இருந்தாலும் நாம் செய்ய வேண்டியதையெல்லாம் செய்து பார்ப்போம். இதோ வந்துவிட்டேன், நீங்கள் இங்கே இருங்கள்....ஆ! மறந்துவிட்டேன்'' என்று ஆள்களைக் கொண்டு காமாக்ஷியம்மாளைத் தூக்கி, ஒரு கட்டிலின்மேல் காற்றோட்டம் உள்ள இடத்தில் போட்டுவிட்டுப் போனார்.

டாக்டர் தம்முடைய 'சைக்கிள்' வண்டியை எடுத்துக் கொண்டு வீதி வாசலைக் கடந்து வண்டியில் ஏறப்போனார். பின்புறத்திலிருந்து யாரோ உரத்த குரலில் தம்மைக்கூப்பிட்டது கண்டு திரும்பிப் பார்த்தார். ஓர் ஏழைக் குடியானவன் பின்னால் வேகமாக ஓடிவந்து, 'சாமீ! இதை உங்க கிட்ட ரொம்ப அவசரமாகக் குடுக்கச் சொன்னாங்க. இதில் இருக்கிறபடி ஒடனே செய்யணுங்க. இல்லாட்டி ஆவத்து'' என்று ஒரு கடிதத்தையும், ஒரு காகிதப் பொட்டணத்தையும் கொடுத்தான். 'அவசரமாக' என்று அவன் சொன்னதால், டாக்டர் தாம் புறப்பட்ட அவசரத்தையும் மறந்து, அவற்றை வாங்கிக் கடிதத்தைப் பிரித்துப் படித்தார். அவர் படிக்கிறாரா என்பதை வந்தவன் கவனித்துக்கொண்டிருந்தான்.

கடிதத்தில் "ஸ்ரீ சொக்கேசருடைய வீட்டில் யார் இந்தக் கடிதத்தை வாங்க நேர்ந்தாலும் சரி, அவர் வெகு வெகு அவசர



மாக உடனே செய்துவிட்டு மறு வேலை பார்க்க வேண்டியது. என்னவென்றால்; சொக்கேசருடைய வீட்டில் யாருக்காவது பச்சிலை விஷம் கொடுக்கப்பட்டிருந்தால் இத்துடன் அனுப்பியிருக்கும் மூலிகையைச் சரிபாதியை எடுத்துத் தண்ணீர் விடாமல் இடித்துச் சாறு பிழிந்து, அந்தச் சாற்றில் இரண்டு மூன்று துளிகளை ஒவ்வொரு கண்ணிலும் விட்டு, அதே மாதிரி மூக்கிலும் விட்டு, உச்சியிலும் வைத்துத் தேய்க்க வேண்டியது. மூலிகையின் மற்றப் பாதியை ஒரு பிடி மிளகு சேர்த்துச் சிறிது தண்ணீர் விட்டு அரைத்து அந்தச் சாற்றில் ஒரு சங்குச் சாற்றை எப்படியாவது தொண்டைக்குள் செலுத்திவிடவேண்டியது. விஷம் உச்சிக்கேறின ஒரு ஜாமத்துக்குள் இந்த மருந்தைக் கொடுக்காவிட்டால், உயிர் போய்விடும். படித்த பின் இந்தக் கடிதத்தைக் கிழித்தெறிய வேண்டியது. ஆணை—**மலைக் கள்ளன்**'' என்றெழுதப்பட்டிருப்பதைக் கண்டு சாம்பசிவம் வெகு ஆச்சரியமும் சந்தேகமும் கொண்டவராகிச் சற்று யோசனை செய்து, "இதைக் கொடுத்தது யார்?'' என்று அவற்றைக் கொண்டுவந்த குடியானவனைக் கேட்கத் திரும்பினார். அதைக் கொண்டுவந்தவன் அங்கே காணப்படவில்லை. நாலா பக்கமும் பார்த்தார்; அவன் போன இடம் தெரியவில்லை.

'இது உண்மையானதாக இருக்குமா? அல்லது ஏதேனும் மோசக் கருத்தோடு அனுப்பப்பட்டிருக்குமா? .... இருக்காது. மோசமாய் இருக்காது. ஏனெனில் காமாக்ஷியம்மாள் இப்போதிருப்பதைக் காட்டிலும் மோசமான நிலைமையை யாரும் செய்து வைக்கமுடியாது. அன்றியும், இதை அனுப்பியவன் யாருக்கு என்னவென்று அறியாமல் பொதுவாகச் சொக்கேசர் வீட்டில் இப்பேர்ப்பட்ட நிலைமை இப்போது இருக்கலாம் என்று அனுமானித்து அனுப்பியிருப்பதாகத் தெரிகிறது. ஆனால், கையெழுத்திட்டிருப்பதைப் பார்த்தால், இந்தக் குற்றத்தை யார் செய்திருக்க முடியும் என்று சந்தேகிக்கக்கூடுமோ அதே **மலைக்கள்ளன்** என்றிருக்கிறது. வேறு யாராவது அந்தக் கையெழுத்துச் செய்து அனுப்பியிருப்பார்களோ! இருக்கலாம். என்னவென்றாலும் இந்த முறிவை நாம் முன்பின் அறிந்த

தில்லை. நாம் அறியாத ஒரு மருந்தைப் பிரயோகம் செய்வது முறையல்ல....' என்று அந்த மூலிகைப் பொட்டணத்தைப் பாதையோரத்தில் எறிந்துவிட்டுக் கடிதத்தைக் கிழிக்கப் போனார். சற்று நிதானித்துக் கடிதத்தை மடித்துத் தம் சட்டைப் பைக்குள் வைத்துக்கொண்டார். வண்டியேறினார்; சிறிது தூரம் போவதற்குள் இறங்கிவிட்டார். திரும்பி வந்தார்; முன் வீசிவிட்ட மூலிகைப் பொட்டணத்தை எடுத்தார். 'அந்த அம்மாளுக்கு ஏறியிருக்கிற விஷத்துக்கு நம்மிடத்தில் சரியான முறிவு கிடையாது. இதற்கு முன்னால் இதே மாதிரி சம்பவித்த இரண்டு மூன்று மனிதர்களும் நாம் என்னென்னவோ செய்தும் தப்பவில்லை. இதுவும் அதே மாதிரிதான் இருக்கிறது. ஆகையினால் இந்தம்மாள் பிழைக்க முடியுமானால் இந்த மூலிகையைத் தைரியமாகக் கொடுத்துத்தான் பார்க்க வேண்டும்' என்று விரைவாக வீட்டுக்குள் நுழைந்தார்.

காமாக்ஷியம்மாள் அவர் விட்டுப் போனபடியே கிடந்தாள். டாக்டர் உடனே ஆள்களைக் கூப்பிட்டு, மூலிகையில் பாதியைத் தாமே இடித்துச் சாறெடுத்துக் கண்ணிலும் மூக்கிலும் விட்டு விட்டு, உச்சியிலும் வைத்துத் தேய்த்து மற்றப்பாதியை மிள கோடு சேர்த்து இடிக்கும்படி உத்தரவிட்டார். சுமார் பத்து நிமிஷம் தாமே உச்சியில் சாற்றை ஊற்றித் தேய்த்துக்கொண் டிருந்தார். உச்சியில் சூடேறின மாதிரி தோன்றிற்று. இதற்குள் மிளகுடன் இடித்த சாற்றைக் கொண்டுவந்தார்கள். பற்கள் கிட்டிப்போயிருந்தமையால் வாயைத் திறக்க முடியவில்லை. காமாக்ஷியம்மாளுக்கு முன் பற்களில் ஒரு பல் மற்றப் பற் களைக்காட்டிலும் வரிசைக்கு மேல் நீண்டிருக்கும். அந்தப் பல் மட்டும் நாக்கைக் கிழித்துக்கொண்டு கீழ்ப் பல்லோடு கடித்துக் கொண்டிருந்தது. டாக்டர் வெகு சிரமப்பட்டுக் கரண்டிக் காம்பை விட்டு நெம்பி, வாயைத் திறந்து, கஷாயத்தை ஊற்றினார். ஆனால் அதை விழுங்குவதற்கான அறிகுறிகள் ஒன்றுமில்லை. வாயின் இருபுறத்திலும் இரண்டு மரத்துண்டுகளை வைத்து மறுபடியும் பற்கள் கிட்டிக்கொள்ளாதபடி செய்துவிட்டுப் பரிசோதனை செய்தார். முன்னிருந்த நிலைமையிலிருந்து



அதிக வித்தியாசம் ஒன்றும் தெரியவில்லை. இருந்தாலும் விட்டுவிடாமல் வெகு நேரம் உச்சியில் தேய்த்துக்கொண்டே யிருக்கச் செய்தார்.

அப்பாடா! சுமார் அரைமணி நேரத்துக்குப் பின்னால் இது வரையிலும் பாதி திறந்து, பார்ப்பதற்குப் பயங்கரமாயிருந்த கண்கள் மூடிக்கொண்டன. கண்களிலிருந்து ஏராளமாக நீர் வடிய ஆரம்பித்தது. மூச்சு விடுவது இப்போது நன்றாகத் தெரிந்தது. டாக்டர் புன்சிரிப்புடன் மறுபடியும் பரீக்ஷை செய்தார். எல்லா விதத்திலும் உயிர் திரும்பி வரும் அறிகுறி கள் உண்டாகியிருப்பதும் தெரிந்தது. உடனே இதுவரையிலும் கிட்ட வரக்கூடாதென்று வைத்திருந்த சொக்கேசரைக் கூப்பிட்டு, "நண்பரே, பயப்பட வேண்டாம். உம் தமக்கை பிழைத்துக்கொள்ளுவார்கள்" என்றார்.

சொக்கேசர் துக்கம் குறைந்தவராய் வைத்தியருக்கு வந்தனம் புகல ஆரம்பித்தார்.

"ஏது, டாக்டர்வாள்! நாட்டு வைத்தியமாக இருக்கிறதே! இது ஆஸ்பத்திரி மருந்தல்லவே? இந்த மூலிகை மர்மத்தை எப்போது கற்றுக்கொண்டீர்கள்?" என்று இன்ஸ்பெக்டர் சிரித்தார்.

"இது ஒரு ரகஸ்யம். இந்த மருந்து திடீரென்று தெய்வா தீனமாகக் கிடைத்தது. அதைப்பற்றிப் பின்னால் உங்களுக்குச் சொல்லுகிறேன்" என்று டாக்டர் சாம்பசிவமும் சிரித்தார்.

## அத்தியாயம் 4

சுமார் ஒரு மைல் தூரம் வாய்க்காலோரமாகவே சென்ற பின் **காத்தவராயன்** பூங்கோதையோடு கட்டிலைத் தூக்கிக் கொண்டு பின்னால் வந்தவர்களைப் பார்த்து, "டே மருதா, நீ முன்னால் போ. நேரா வேப்பமரப் படிக்கட்டு வரையிலும் போய் அவ்விடத்தே வாய்க்காலைத் தாண்டி, இட்டேரிப் பாதையிலே போய், முனியப்பன் கோயில் ஆலமரத்துக்கிட்ட இருங்க. அங்கே **சங்கிலி, வெள்ளையன், கோணையன்** எல்லோரும் இருக்கிறாங்கோ. நான் பாதை வழியா யாராவது ஒளவு கண்டுட்டாங்களான்னு கவனிச்சிட்டு வந்து சேர்றேன். வாய்க்கால்லே இப்பத் தண்ணி ரொம்ப. வாய்க்காலைத் தாண்டுறபோது ரெண்டு பக்கமும் ரெண்டு பேர் ரொம்ப ஜாக்கிரதையாய்ப் பார்த்துக்கணும். கட்டில் சாஞ்சி அந்தம்மா பெறண்டு தண்ணியிலே கிண்ணியிலே உளுந்துட்டா ஆபத்து. சரி, போங்க. கௌக்கு வெளுக்கிற நேரமாச்சு. அதுக்குள்ளற கொண்டு போய்ச் சேத்துடணும்' என்று சிறு குரலால் சொல்லி ஒதுங்கி நின்றான். பின்னால் வந்தவர்கள் அவனுடைய உத்தரவின்படி சென்றார்கள். அவர்கள் மறைந்தவுடன், காத்தவராயன் இடப் புறத்து வேலியில் தானறிந்த வழியில் நுழைந்து போய் விட்டான்.

கட்டிலில் இருப்பது பூங்கோதை. பூங்கோதையின் அறையில் புகுந்து; அவள் எடுத்த விளக்கை அணைத்துவிட்டு, அவளுடைய தலையைப் பின்புறமாய் இடக்கையால் அழுத்திக் கொண்டு, வலக்கையால் வாயையும் மூக்கையும் காத்தவராயன் மூடிப் பிடித்துக்கொண்டதை முன்னே படித்தோம்.

இப்படி அவன் பலமாகப் பிடித்துக்கொண்டதும், புத்திக் கூர்மையுள்ள பூங்கோதை, அவனுடன் முரட்டுத்தனங் காட்டுவது முடியாதென்று கண்டு, தன்னுடைய நிலைமையை நன்றாக உணர்ந்து; இனி, தன்னைக் காத்துக்கொள்ள எண்ணி,



தன்னுடைய இரண்டு கைகளையும் மார்பின் குறுக்கே இறுக்கி இடக்கையால் வலத்தோளையும், வலக்கையால் இடத் தோளையும் கெட்டியாகப் பிடித்துக்கொண்டு பேசாமல் நின்று விட்டாள். மூக்கையும் வாயையும் இறுகப் பிடித்திருந்தாலும் மூச்சு விடுவதற்கு வேண்டிய இடம் விட்டே காத்தவராயன் பிடித்திருந்தான்., மூக்குக்கு நேராக ஏதோ காரமான ஒரு வாடை அடித்தது. தான் படித்திருந்த கதைகளில் இந்த மாதிரி கள்ளர்கள் மயக்கம் கொடுப்பது வழக்கமென்ற நினைவு பூங்கோதைக்கு வந்தது. அவள் மூக்கினால் உள்ளுக்கு மூச்சிழுப்பதை நிறுத்தி, வெகு நிதானமாக வாயால் மூச்சை இழுப்பதும் மூக்கால் சத்தங் கேட்கும்படி மூச்சை வெளியில் விடுவதுமாகச் சிறிது நேரமிருந்தாள். பின்பு மயக்கம் வந்து விட்டவள் போலத் தலை துவண்டாள். உடனே காத்தவராயன் அவளை ஒரு பூச்செண்டு போலத் தூக்கிக்கொண்டு கீழே வந்தான். முன்னமேயே காமாக்ஷியம்மாளையும் வேலையாள் களையும் அப்புறப்படுத்திவிட்டபடியால், தடுப்பாரின்றிப் பூங்கோதையை மூக்கன் படுத்திருந்த கட்டிலின்மீது படுக்கப் போட்டுத் தூக்கிக்கொண்டு வந்துவிட்டார்கள். பூங்கோதைக்கு விஷப்பூண்டின் வாடை சிறிது தாக்கியிருந்தாலும், நினைவு கலங்கவில்லை. முற்றும் மயக்கம் வந்துவிட்டவள் போலவே படுத்துக்கொண்டு நடப்பதையெல்லாம் கவனித்துக்கொண்டே வந்தாள். அந்தப் பெண்ணுக்குத்தான் என்ன தைரியம் !

காத்தவராயனுடைய உத்தரவுப்படி வேப்பமரத்துப் படித் துறையில் வாய்க்காலில் இறங்கி, வெகு ஜாக்கிரதையாகக் கடந்து இட்டேரிக்கு வந்தார்கள். முனியப்பன் கோவில் ஆலமரம் அங்கிருந்து இன்னும் சுமார் இரண்டு கல்லிருக்கும். இட்டேரிப் பாதை வெகு குறுகலாகவும் இருபுறத்திலும் முட்புதர்கள் அடர்ந்ததாகவும் இருந்ததால், கட்டிலை இதுவரையிலுங் கொண்டுவந்தது போல உயரத் தூக்கிப் போக முடியாது. முன்னால் ஒருவனும் பின்னால் ஒருவனுமாகக் கட்டிலை நிலத்தில் வைத்தபடியே தூக்கிக்கொண்டு போக வேண்டியதாக இருந்தது. மற்ற நால்வரும் பின்னால், ஒருவர் பின் ஒருவராகப் போனார்

கள். சுமார் இரண்டு பர்லாங்கு தூரம் போனபின் கட்டிலுக்குப் பின்னால் நடந்த நால்வருக்குள் கடைசியாகப் போய்க்கொண்டிருந்தவன், "ஐயோ! ஐயோ! என்னமோ கடிச்சிடிச்சே! ரெத்தம் ஒடியாருதே" என்று கத்தினான். கட்டிலைத் தூக்கிக் கொண்டு முன்னால் போனவர்கள் இதைக் கேட்டுக் கட்டிலைக் கீழே வைத்துவிட்டு ஓடிவந்தார்கள். இதையெல்லாம் கவனித்துக்கொண்டே வந்த பூங்கோதை தன்னைக் கட்டிலுடன் விட்டுவிட்டுப் போய்விட்டதைக் கண்டு இதுதான் சமயம், எங்கேயாவது இறங்கி ஒளிந்துகொள்ளலாமென்று எழுந்திருக்க முயன்றாள். உடனே படுத்துக்கொண்டு, 'ஆம், இங்கே இறங்கினால் ஒளிந்துகொள்ளுவதற்கு இடமெங்கே? வழியோ வெகு குறுகலாக இருக்கிறது! இரண்டு பக்கத்திலும் முட்புதர்கள்! பின்னால் வந்தவனைக் கடித்த பாம்போ தேளோ நம்மையும் கடித்தால் என்ன செய்வது? சீ! அவசரப்படுவது அறிவீனமாகும்' என்று முன்போலவே கட்டிலில் படுத்திருந்தாள்.

இதற்குள் பின்னால் வந்தவர்களில் ஒருவன், "டே! முட்டாள் பசங்களா! நீங்க ஏண்டா கட்டிலைக் கீளே வச்சிட்டு வந்திட்டிங்க? போங்கடா, போங்கடா....நீங்க பாட்டுக்குப் போய்க்கிட்டிருங்கடா. நாங்க என்னாண்ணு பாத்து ஒரு கட்டுக்கட்டி, இவனைக் கூட்டிக்கிட்டு வாரோம். போங்க, போங்க. இங்கே நாமதான் ராஜா. இந்த எடத்திலெல்லாம் நமக்கென்னடா பயம்? அந்த பிர்மாகூட இந்தக் காட்டிலே நம்மகிட்ட வரமுடியாது. டே! குண்டா! நீ கட்டில்கூடப் போ. நாங்க இவனைக் கூட்டியாரோம். சீக்கிரமாகப் போங்க. எசமான் கோவிச்சுக்குவார். அப்புறம் நெனச்சப்பெல்லாம் நூறு அம்பதுண்ணு வாங்கறது வாயிலே மண்ணு விளுந்துடும். போங்க, போங்க" என்றான். உடனே அந்த மூவரும் கட்டிலண்டை வந்தார்கள். இரண்டு பேர் கட்டிலைத் தூக்கிக்கொண்டு முன்னால் நடக்க, குண்டன் துணையாகப் பின்னால் வந்துகொண்டிருந்தான்.

சுமார் ஒரு மைல் தூரம் போனார்கள். அங்கே அந்த இட்டேரியின் குறுக்காகப் பக்கத்துக் கிராமங்களிலிருந்து ஜனங்கள் சந்தைக்குப் போகும் ஒரு பாதை உண்டு; அதில் ஏதாவது நடமாட்டமிருக்கிறதா என்று குண்டனை முன்னால் போய்ப் பார்க்கச் சொன்னார்கள். குண்டன் அப்படியே போய்க் குறுக்குப் பாதைக்குப் பக்கத்தில் ஒரு புதரின் இருட்டில் நின்று கொண்டு வெகுநேரம் உற்றுப் பார்த்தான். பாதைக்கு அடுத்தாற்போல் ஓர் அரசமரமும் ஒரு வேப்ப மரமும் அதனடியில் ஒரு பிள்ளையாரும் உண்டு. அருகே, அந்த வழியாகச் சந்தைக் குப் போகும் ஜனங்களுக்கு உதவும்படி தர்மமாகப் பூங்கோதையின் தகப்பனாரைப் பெற்ற பாட்டனார் கட்டிய ஒரு சிறு தண்ணீர்ப் பந்தலும் உண்டு. அதற்கு ஒரு சிறு மானியமும் விட்டிருந்தார். சந்தை நாள்களில் அந்தத் தண்ணீர்ப் பந்தல் திறந்திருக்கும். மற்ற நாள்களில் அங்கே யாரும் தங்குவதில்லை.



அந்தத் தண்ணீர்ப் பந்தலுக்குச் சமீபமாக யாரோ ஓர் ஆள் நிற்பது போலக் குண்டனுக்குத் தெரிந்தது. குண்டன் பின்னால் ஓடிப்போய்க் கட்டிலைத் தூக்கிவந்தவர்களிடம் சொன்னான். அவர்கள் "அடே! அதைக் கண்டா பயந்து வந்துட்டே? அது நம்ம **பொடாரிப்** பயலாயிருக்கும் அவனைத்தான் காலையிலே எசமான் 'தண்ணிப் பந்தல் கிட்ட இருந்து பார்த்துக்கோண்ணு' சொல்லிக்கிட்டிருந்தாங்களே, உனக்குத் தெரியாதா? போ. போய் ஒரு சத்தம் பொடாரியைக் கூப்பிடு. அவன் பதில் குடுப்பான்" என்றார்கள். குண்டன் மறுபடியும் முன் நின்ற இடத்துக்கு வந்து நின்றுகொண்டு, மெதுவான குரலால் "டே! பொடாரி! நீயா அங்கே?" என்றான். அதற்குப் பதில் "ஆமாம், இங்கே வாடா குண்டா" என்று அவன் காதில் விழுந்தது. பொடாரிதான் என்று சந்தேகம் விட்டுக் குண்டன், "ஏண்டா தொண்டையிலே என்ன கொளுக்கட்டையா இருக்குது? கொரலே அடச்சிக்கிட்டு அப்படிப் பேசாட்டி என்ன?" என்று சொல்லிக்கொண்டே தண்ணீர்ப் பந்தலுக்கெதிரில் வந்தான். முன்னால் தன் கண்ணுக்குப் பட்ட உருவத்துக்கருகில் வந்து, "டே பொடாரி!" என்று குண்டன் வாய்மூடுமுன் படீரென்று அவன் தலையில் இடி விழுந்தது போல ஓர் அடி விழுந்தது. குண்டன், குண்டு உருட்டின மாதிரி நிலத்தில் உருண்டுவிட்டான்.

நாலைந்து கறுத்த உருவங்கள் குண்டனை உடனே தூக்கிக் கொண்டு தண்ணீர்ப் பந்தலுக்குப் பின்னாலுள்ள வேலங் காட்டில் மறைந்துவிட்டன.

தண்ணீர்ப்பந்தலுக்குள்ளிருந்து மற்றோர் உருவம் வந்தது. கூடவே வேறோர் உருவமும் தோன்றிற்று. முதலில் வந்த உருவம் "நீ போய், நான் சொன்ன மாதிரி சற்று எட்டவே இருந்து, குரல் அடையாளங் காட்டிவிடாமல், அவர்களிடம் கட்டிலைத் தூக்கிக்கொண்டு சீக்கிரம் வரும்படி இரண்டே வார்த்தையில் சொல்லிவிட்டு, அவர்கள் கட்டிலுடன் புறப் படுவதற்குள் வந்துவிடு, போ" என்று காதோடு சொல்ல, இரண்டாவது உருவம் அப்படியே புறப்பட்டது.

இதற்கிடையில் குண்டன் குறுக்குப் பாதையைக் கவனிக்கப்போன உடனே கட்டிலைக் கீழே வைத்த இருவருள் ஒருவன் மற்றொருவனைப் பார்த்து, "அண்ணே! இதுதான் சமயம். நாம் ரெண்டு பேர்தான் இருக்கோம். இப்போ இந்தப் பொண்ணு மேலே நல்ல நல்ல நகைகள் இருக்குது. அதை நாம்ப கயட்டி ரெண்டு பேருமாய்ப் பங்கிட்டுக்குவோம். சல்தி, குண்டன் வரத்துக்குள்ள ........ என்னா! ஊம் ........ என்னா சொல்றே?" என்றான். மற்றவன் அதற்கு ஆக்ஷேபணை சொல்லிச் சிறிது தர்க்கம் செய்து கடைசியில் ஒத்துக்கொண் டான். இருவரும் அவசர அவசரமாக நகைகளைக் கழற்றி னார்கள். கைகளிலும், கால்களிலும், காதுகளிலும் இருந்த நகைகள் அதிகக் கஷ்டமில்லாமல் கழற்றப்பட்டன. சீக்கிரம் கழற்ற முடியாதவற்றை இடுப்பில் வைத்திருந்த கத்தரியால் கத்தரித்து எடுத்துவிட்டார்கள். கழுத்திலிருந்த அட்டிகையும் வெட்டியெடுக்கப்பட்டது. ஆனால் கழுத்தில் இருந்த சங்கிலிகள் வயிற்று வரையிலும் நீண்டவைகளாக இருந்ததால் ஆடையோடு கைகளுக்கிடையில் சிக்கிக்கொண்டிருந்தன. எனவே, சுலப மாக இழுத்துக்கொள்ள முடியவில்லை. கையைப் பிடித்து இழுத்துவிட்டுச் சங்கிலிகளை எடுப்பார்களென்று உணர்ந்து, பூங்கோதை மானத்தைக்காட்டிலும் அவை பெரியனவல்ல என்று இறுக்கிப் பிடித்துக்கொண்டிருந்த தன் கைகளை நெகிழவிட்டுச்



சங்கிலிகளைச் சுலபமாக இழுத்துக்கொள்ள விட்டாள். தலை யையும் தடவிப் பார்த்து ஜடை பில்லையையும் எடுத்துக் கொண்டார்கள். எல்லா நகைகளையும், அவைகளைத் திருடு வதற்கு ஆக்ஷேபணை சொன்ன இரண்டாவது கள்ளனே பத்திரப்படுத்த வேணுமென்றும், வீடு சேர்ந்த பின் இருவரும் பங்கிட்டுக்கொள்வதென்றும் முடிவு கட்டிக்கொண்டு குண்டனை இருவரும் எதிர்பார்த்துக்கொண்டிருந்தார்கள். அந்தச் சமயத்தில் சற்றுத் தூரத்தில் யாரோ வருவதைக் கண்டார்கள். தூரத்திலிருந்தபடியே வந்தவன் "யாருமில்லை, பொடாரிதான் அங்கிருக்கிறான், கட்டிலைத் தூக்கியாங்கடா" என்று சொல்லிவிட்டு, முன்னால் போய்விட்டான். கட்டிலைத் தூக்கிக் கொண்டு குறுக்குப் பாதையைத் தாண்டித் தண்ணீர்ப் பந்தல் விநாயகருக்கு முன்னால் இவர்கள் வந்தார்கள்.

"கட்டிலைக் கீழே வையுங்கள்" என்று ஒரு மெல்லிய சத்தம் கேட்டது. அப்படி உத்தரவிட்டது யாரென்று தெரியாமல், கட்டிலைக் கீழே வைப்பதா இல்லையா என்று தீர்மானிப்பதற்குள் பாதையின் இருபுறத்திலுமிருந்து 'திபுதிபு' வென்று பல உருவங்கள் வெளிப்பட்டுக் கட்டிலைப் பிடித்துக் கொண்டிருந்தவர்களைக் கைதூக்கவிடாமல் அப்படியே இறுக்கிப் பிடித்துக்கொண்டன. அதே சமயத்தில் அவர்கள் சத்தமிட முடியாதபடி வாயும் மூக்கும் வலுவாகப் பிடித்துக் கொள்ளப்பட்டன.

"டே **ஷண்முகம்! சாமியப்பா!!** இருவரும் கட்டிலைத் தூக்கிக்கொள்ளுங்கள். டே! **செவந்தான்!** நீ எனக்குப் பின்னால் கவனித்துக்கொண்டே வா. சப்பாணீ! அந்தப் பயல் கள் எல்லாரையும் சோதனை போட்டு, அவர்களிடத்திலுள்ள ஆயுதங்கள், காசு, பணம் எல்லாவற்றையும் எடுத்துக்கொண்டு, நான் சொன்னபடி செய்துவிட்டுக் குகைக்கு வந்துசேருங்கள்" என்று கம்பீரமான குரல் உத்தரவிட்டது.

இரண்டு பேர் கட்டிலைத் தூக்கிக்கொள்ள, செவந்தான் பின்னால் வர, உத்தரவிட்டவன் முன்னால் நடக்க, குறுக்குப்

பாதையில் போனார்கள். வெகு தூரம் பேச்சில்லாமல் நடந்து ஒரு காட்டின்மீது ஏறினார்கள். காட்டின் மேலேயே கொஞ்ச தூரம் போனபின் இரண்டு பாறைகளுக்கிடையில் ஒரு சிறு தடத்தில் சென்று, கீழே இறங்கிச் சமநிலத்துக்கு வந்தார்கள். முன்னால் போய்க்கொண்டிருந்த உருவம், "டேய் சாமியப்பா! என்ன முட்டாள்தனம் செய்துவிட்டாய்! உன்னை நம்பினால் மோசந்தான். நீ காத்தவராயன், சொக்கேசர் வீட்டுக்குள் நாளைக்குப் போகப் போகிறதாக அல்லவா சொன்னாய்? உன் பேச்சின்படி ஏமாந்திருந்தால் இந்நேரம் இந்தப் பெண்ணின் கதி என்னவாயிருக்கும்? நல்ல வேளையாக நாகப்பன், 'இன்றைக்குத்தான்' என்பதைக் கண்டுகொண்டு வந்து சொன்னான். நீ அன்றைய தினம் வீரராஜனுடைய மாடியில் காத்தவராயனும் வீரராஜனும் பேசினதை எல்லாம் கேட்டு வந்ததாகச் சொன்னாயே? சரியாகக் கேட்கவில்லையா? என்ன? அடமடையா; இப்படித்தானா?" என்றது.

"ஐயோ! அப்படி நெனைக்காதிங்கோ, எசமானே. நான் நல்லாக் கேட்டுக்கிட்டுத்தான் இருந்தேன். காத்தான் அந்த ஊட்டுக்கு வாரத்துக்கு முன்னாலேயே நான் பாதையோரமாயிருந்த செவுத்து மேல் ஏறிப் புளிய மரத்தைப் பிடிச்சி உள்ளே எறங்கி, அவுங்க பேசின எடத்துக்குக் கிட்ட இருந்த ஒரு தென்ன மரத்து மேலே ஏறிச் சன்னல் கிட்டப் போயிருந்து பேசினதெல்லாங் கேட்டனுங்கோ. 'இண்ணைக்கு முடியாது; நாளைக்கு வேணுமானால் முடிச்சுடுறேன்' இண்ணு காத்தான் சொன்னானென்று நேத்துக் காலமே தங்களிடத்தில் அவன் சொன்னதை அப்படியே ஒப்பிச்சனுங்கோ. எசமான் அதை நாளைக்குண்ணு நெனேச்சிட்டாப்பிலே இருக்குதுங்க" என்றான் சாமியப்பன்.

"ஓ! அப்படியா? அவசரத்தில் நான்தான் ஏமாந்துவிட்டேன் போலிருக்கிறது. நல்ல வேளை அந்தப் பாதகனுடைய எண்ணங்கள் முடியாதபடி செய்துவிட்டோமே, அதுவே போதும். நீ சொன்னதை நான் தப்பாக அர்த்தம் செய்யாம



லிருந்தால் அந்தக் காத்தவராயனை இன்றைக்குப் பிடித்திருப்பேன். என் மனத்தில் வெகு நாளாகக் கொதித்துக்கொண்டிருக்கிற நெருப்பு ஆறியிருக்கும்....சரி, கட்டிலுக்குப் பின்னால் வந்த மற்ற மூவரையும் என்ன செய்தார்கள்?" என்று எஜமான் கேட்டதற்கு, பின்னால் வந்துகொண்டிருந்த செவந்தான், "அது எனக்குத் தெரியுமுங்கோ. கடைசியிலே வந்தவனைச் சப்பாணி ஐயா இட்டேரியிலே காராமுள்ளுப் புதருக்குப் பக்கத்திலே மறைஞ்சிருந்து கொத்துத் தடியால் காலைப் பார்த்து ஓங்கிக் கொத்திவிட்டாருங்க. அவன் ஐயோன்னு உக்காந்துக்கிட்டானுங்க. அவனோடு மத்த ரெண்டு பேரும் ஒக்காந்து துணியைக் கிழிச்சி, கட்டுக்கட்டி நடக்கச் சொன்னா அவனால் நிக்கக்கூட முடியலிங்கோ. ஒடனே நானும் சப்பாணி ஐயாவும் முன்னாலேயே பாத்து வச்சிருந்த வழியிலே காட்டுக்குள்ளே பூந்து, இட்டேரி ஓரமாகவே தண்ணிப் பந்தலுக்கு வந்து, நம்ம ஆளுகள்லே ஆறு பேத்தை அவுங்களைப் புடிக்க அனுப்பிவிட்டுத் தானுங்க உங்ககிட்ட வந்தமுங்க" என்றான்.

"சரி, நல்ல வேலை செய்தீர்கள். சப்பாணி நல்ல யோசனைக்காரன். சமயத்துக்குத் தகுந்த தந்திரம் அவனுக்கு நான் சொல்லாமலேயே வருகிறது........அடடா, மறந்து போனேனே! இந்தம்மாளுக்கு ஏதாவது மயக்கம் கொடுத்திருப்பானே! அதை முதலில் கவனிக்கவேணும். கட்டிலைக் கீழே வையுங்கள், பார்ப்போம். காத்தவராயன் சாமர்த்தியமெல்லாம் அந்த விஷப் பூண்டில்லாமல் முடியாதே!"

உடனே கட்டில் கீழே வைக்கப்பட்டது. எஜமான் பூங்கோதையின் தலையைத் தொட்டுப் பார்த்து, மூக்கில் கையை வைத்தான். சுவாசம் சாதாரணமாகத் தூங்குகிறவர்கள் விடுவது போல வருவதைக் கண்டு, "மோசமில்லை. அந்தப் பூண்டின் வேகம் அதிகம் ஏறியிருந்தால் மூச்சு இவ்வளவு தாராளமாக வராது. சரி; மலையடிக் கொட்டாரத்துக்குப் போய் நன்றாகப் பார்த்துக்கொள்ளுவோம். இங்கே அந்தக் கொடித் தடத்தில் யாராவது வந்தாலும் வரக்கூடும். தூக்குங்கள்" என்றான்.

சுமார் இரண்டு பர்லாங்கு தூரம் நடந்து ஒரு மலையடி வாரத்துக்கு வந்து சேர்ந்தார்கள். அங்கே ஓர் அடர்ந்த புளியந் தோப்புக்குள் ஒரு பெரிய கொட்டாரம் இருந்தது. அது அவர்களுக்குச் சொந்தம். நாலு பக்கத்திலும் மிகவும் திறமான காவலுள்ள இடம். இவர்களுடைய வரவை எதிர்பார்த்துக் கொண்டு நாலைந்து பேர் அங்கே காத்துக்கொண்டிருந்தார்கள். ஒரு பக்கத்தில் மட்டும் வெளிச்சம் வரக்கூடிய ஒரு பிரகாசமான விளக்கும் இருந்தது. கட்டிலைக் கீழே வைத்தார்கள். இரண்டு ஆள்களைக் கூப்பிட்டு அவர்களை முன்னால் மேலே போய்ப் படுக்கை முதலான ஏதோ சிலவற்றைத் தயார் செய்யும்படி எஜமான் கள்ளன் காதோடு ரகசியமாகச் சொன்னதும்; அவர்கள் இருட்டில் மறைந்துவிட்டார்கள். பிறகு கள்ளர் தலைவன் விளக்கைக் கையில் எடுத்துக்கொண்டு வந்து பூங்கோதையின் முகத்துக்கு நேராக வெளிச்சத்தைத் திருப்பிப் பார்த்தான்.

இது வரையிலும் வழி முழுவதும் நடந்த காரியங்களை எல்லாம் கவனித்துக்கொண்டும் பேச்சுகளையெல்லாம் ஒன்று விடாமல் கேட்டுக்கொண்டும் வந்ததால், தன்னை முதலில் வீட்டிலிருந்து அபகரித்து வந்தவர்களிடத்திலிருந்து இந்தக் கூட்டத்தார் மீட்டது போலப் பூங்கோதைக்குத் தோன்றிற்று. தன்னைப்பற்றி இந்தத் தலைவன் வெகு பச்சாதாபத்தோடு பேசினதினாலும், தன்னை இப்படி மோசம் செய்யப் போகிறார்களென்பதை முன்னாலே ஆள் வைத்து அறிந்து, அதற்கு வேண்டிய பலத்தோடு வந்து, தன்னை அவர்களிடத்திலிருந்து தப்ப வைத்திருப்பதனாலும், வீட்டிலிருந்து தன்னைத் தூக்கிக் கொண்டு வந்த 'காத்தவராயன்' என்று இவர்கள் பேசிக் கொண்ட அந்தக் கள்ளனுடைய கூட்டத்துக்கும் இவர்களுக்கும் நெடுநாளாகப் பகைமை யிருக்கிறதென்றும் விளங்கிற்று. ஆனால், இந்தக் கள்ளன், அந்தக் கள்ளன் மேல் தனக்குள்ள வஞ்சத்தைத் தீர்த்துக்கொள்ள, அவன் எண்ணியது பலிக்கக் கூடாது என்ற ஆசையோடும், அவன் கொண்டுபோவதைத் தானே கொண்டுவந்து விடவேண்டும் என்று எண்ணியுமே தன்னை அவனிடமிருந்து கைப்பற்றி வந்திருக்கிறானா அல்லது



தனக்கு உண்மையில் உபகாரஞ் செய்ய எண்ணியா என்பது ஒன்றும் பூங்கோதைக்கு விளங்கவில்லை. ஆகையால், விளக்கு வெளிச்சம் வந்த உடன் கண்களை இறுக மூடிக்கொண்டு மயக்கத்தில் புரளுவது போல வெளிச்சத்தை விட்டு முகத்தைத் திருப்பிக்கொண்டாள். கள்ளர் தலைவன் இவளது முகத்தைப் பிடித்து வெளிச்சத்துக்குத் திருப்பி மறுபடியும் கவனித்தான்; கண்ணிமைகளைத் தன் விரல்களால் நீக்கிப் பார்த்தான். வைத்தியனைப் போலக் கையைப் பிடித்து 'நாடி' பார்த்தான்! 'அடடா! படுபாவி ஒன்றுவிடாமல் நகைகளையெல்லாம் கழற்றிக்கொண்டிருக்கிறானே!......ஆஹா! இன்றைக்கு அவன் என் கைக்குச் சிக்காமல் போய்விட்டானே! செவந்தான் சொன்னதைச் சரியாக நான் கவனித்திருந்தால் அந்தக் கொலைகாரப் பயலைச் சொக்கேசருடைய வீட்டுக்குள்ளேயே மடக்கி யிருப்பேனே! இருக்கட்டும், விட்டுவிட்டேனா? பார்த்துக்கொள் கிறேன். இந்தப் பெண்ணை இங்கே வைத்திருப்பது பிசகு. உடனே குகைக்குக் கொண்டுபோக வேண்டும். பாறையிடுக்கில் கட்டில் நுழையாது. ஆள்களைத் தூக்கிக்கொண்டு போகச் சொல்லுவதும் அழகல்ல. நானே தோளில் தூக்கிப் போட்டுக் கொண்டுதான் போக வேண்டும்........சரி. விஷம் ஏறியிருந்தாலும் இல்லாவிட்டாலும் கொஞ்சம் முறிவு கொடுப்பது நல்லது.......' "டேய்! யாரங்கே? இந்தா, இதை மிளகோடு வைத்து அரைத்துச் சாறு பிழிந்துகொண்டு வா, சீக்கிரம்" என்று ஏதோ ஒரு மூலிகையைத் தன் இடுப்பிலிருந்து எடுத்துக் கொடுத்து, "கைப்பிடியில் ஒரு பிடி மிளகு சேர்த்து இடித்து, வீசம்படி தண்ணீர் கலந்து பிழிந்து, சுத்தமாக வடிகட்டிக் கொண்டுவா. பெரிய விளக்கை ஏற்று" என்றான்.

இதைக் கேட்டுக்கொண்டிருந்த பூங்கோதை தனக்கு ஏதோ மருந்து கொடுக்கப்போகிறார்களென்றும், அதற்குப் பின் தன்னை இந்தக் கள்ளர் தலைவன் தூக்கித் தோளில் போட்டுக் கொண்டு போகப் போகிறானென்றும் கண்டாள். முன் அந்தக் கள்ளன் தன்னை வீட்டு மாடியிலிருந்து கீழே கட்டிலுக்குத் தூக்கி வந்ததே பொறுக்காமல் வேதனைப்பட்டுக்கொண்டிருந்த

அவளுக்கு இவனும் தூக்கிக்கொண்டு போகப் போகிறான் என்பதைச் சகிக்க முடியவில்லை. ஆகையினால் இனி மயக்கம் உள்ளவளைப் போல இருப்பதை விட்டுவிட்டு என்ன வந்தாலும் தைரியமாக எதிர்த்து நிற்க வேண்டுமென்றும், அவமானம் வருவதாயிருந்தால் இறந்து போவதே மேல் என்றும் தனக்குள்ளேயே தீர்மானம் செய்துகொண்டு தூக்கம் கலைந்து எழுந்திருப்பவளைப் போல் கைகால்களை முறுக்கி நெரித்துக் கொண்டு முணுமுணுத்துச் சத்தங் காட்டினாள்.

உடனே கள்ளர் தலைவன் மறுபடியும் விளக்கை அவளுடைய முகத்துக்கு நேராகத் திருப்பினான். பூங்கோதை சிறிது கண்ணை விழிப்பதும் மூடிக்கொள்வதுமாக அவனைப் பார்த்தாள். அவனுடைய முகம் வெளிச்சத்தில் இல்லாததால் தெரியவில்லை. மறுபடியும் கண்களை மூடிக்கொண்டு "ஆ! தெய்வமே!" என்று பெருமூச்சு விட்டாள்.

"மயக்கமில்லை! நல்ல நினைவிருக்கிறது போலிருக்கிறது. ......அம்மா பூங்கோதை, உன்னை யாரம்மா தூக்கிக்கொண்டு வந்தது? நீ எப்படி அவர்கள் கையில் சிக்கினாய்? நினைவிருக்கிறதா?" என்று கள்ளர் தலைவன் கேட்டான்.

பூங்கோதை சற்று நேரம் சும்மா இருந்து, "நீ யார்? நீ ஏன் என்னை இங்கே கொண்டுவந்தாய்? அதை முதலில் சொல்லு!" என்றாள்.

"பேஷ்! மயக்கமில்லை! அந்த மட்டில் சந்தோஷந்தான்....... ஆனால்....என்னம்மா? நீ ரொம்பப் படித்த பெண்ணாச்சே! 'நீ' என்று மரியாதைக் குறைவாகப் பேசுகிறாயே! உனக்கு இது நன்றாயிருக்கிறதா?" என்றான்.

"நீ மரியாதைக்குப் பாத்திரமானவன் என்று எனக்கு எப்படித் தெரியும்?"

"எப்படியா? இதோ பார்" என்று விளக்கைத் தன் முகத்துக்கு நேராகத் திருப்பிப் பிடித்துக்கொண்டே "நான் உன்னைவிட வயசிலாவது எவ்வளவு பெரியவன் என்று



பார்த்தாயா? வயசுக்காவது மரியாதையாகப் பேச வேண்டும் என்று நீ படித்த புத்தகங்களில் சொல்லவில்லையா?" என்றான்.

வெளிச்சத்தில் பார்த்தபோது அவனுடைய முகம் வெகு கம்பீரமாகவும் பிரகாசமானதாகவும் விளங்கிற்று. காதோரங்களில் வெட்டப்பட்ட 'கிருதாக்களும்' தடித்த மீசைகளும், அந்த மீசைகளுக்குக் கீழே பளிச்சென்று துலங்கிய பால் போன்ற பல் வரிசையும் காணப்பட்டன. அவன் சிரித்த சிரிப்பில் ஏதோ வஞ்சகமற்ற தன்மை யிருந்தது போல் பூங்கோதை எண்ணினாள். அவனுடைய வயது சுமார் ஐம்பதிருக்கலாம்.

"வயதுக்குத் தகுந்த மரியாதை செய்ய வேண்டுமென்ற தர்மம், இராக் காலங்களில் சிங்கம், புலி, சிறுத்தை முதலான துஷ்ட மிருகங்களைப் போலத் திரிந்து பிறருடைய பொருளையும் சுதந்தரத்தையும் பறித்து வாழும் கள்ளர்களுக்குக்கூட உண்டென்று நான் படித்ததில்லை" என்றாள்.

"கள்ளர்களுக்கு இல்லாமல் இருக்கலாம். உண்மைதான். ஆனால் ஒழுங்கான வாழ்க்கையோடு உயர்வான தர்மங்களைக் கடைப்பிடித்து ஒழுகும் உங்களுக்கு 'கீழோராயினும் தாழ உரை' என்ற நீதி உண்டல்லவா?" என்றான்.

"ஆம்.... இருந்தாலும்...." என்று பூங்கோதை சற்று வெட்கினவள் போல் பேசாதிருந்து, "சரி, நீர் யார்? என்னை இங்கே எதற்காகக் கொண்டுவந்தீர்?" என்றாள்.

கள்ளன் கல்லென்று சிரித்து, "பரவாயில்லை. கொஞ்சம் மரியாதையாகத்தான் இருக்கிறது. இருந்தாலும்...." என்பதற்குள் மூலிகையை அரைக்கப் போனவன் ஒரு வெள்ளிப் பாத்திரத்தில் மருந்தைக் கொண்டுவந்து நீட்டினான்.

"ஐயா, எனக்கு மயக்கம் ஒன்றுமில்லை. மருந்து ஒன்றும் வேண்டாம்" என்றாள் பூங்கோதை.

"வேண்டாம் என்றால், நான் கட்டாயப்படுத்தவில்லை. எதற்கும் இதைக் குடிப்பது நல்லது. ஒரு கெடுதியும் வராது....

ஆனால், உனக்கு மயக்கம் ஒன்றும் கொடுக்கவில்லையா அவர்கள் ?"

"என்னைப் பிடித்தவன் இருட்டில் ஏதோ ஒரு காரமான செடி போன்ற வஸ்துவை என் மூக்கின் அருகில் பிடித்தான். நான் அது விஷமாயிருக்கும் என்று சந்தேகித்தே மூச்சை வேகமாக மூக்கால் இழுப்பதை அடக்கிக்கொண்டு வாயால் வெகு நிதானமாக மூச்சு வாங்கினேன். வேண்டுமென்றே சீக்கிரத்தில் மயக்கம் வந்துவிட்டவளைப் போலத் தலையைச் சாய்த்துக்கொண்டேன்; உடனே, அந்தப் பாதகன் என்னைத் தூக்கிக்கொண்டு வந்துவிட்டான்."

"சபாஷ் ! நல்ல புத்திசாலியம்மா நீ. சரி, மருந்து வேண்டாம்; கொஞ்சம் தண்ணீராவது எலுமிச்சம்பழ ரஸமாவது சாப்பிடு. மிகவும் அலுத்திருக்கிறாய்."

"இல்லை, எனக்கு ஒன்றும் வேண்டாம். நீர் யார் ? என்னை என்ன செய்யப்போகிறீர் ? அதைச் சொல்லும், என் அலுப்புத் தீரும்."

"பூங்கோதை! பயப்பட வேண்டாம். நான் உனக்கு உதவி செய்யவந்தவனே. என்னால் உனக்கு ஒரு தீங்கும் நேரிடாது."

"உண்மைதானா ? நீர் எனக்கு உதவி செய்ய வந்தது உண்மையானால், நான் சொல்லுகிற ஒரு காரியத்தை உடனே செய்யவேண்டும்."

"என்ன? என்ன? சொல்லு; சொல்லம்மா சொல். உடனே செய்கிறேன்."

"எனக்கு ஆதியிலிருந்தே மயக்கம் ஒன்றுமில்லை. என்னைத் தூக்கிவந்த கள்ளர்கள் வழியில் கிசுகிசு என்று பேசிக்கொண்டு வந்ததையெல்லாம் ஒன்றுவிடாமல் கேட்டுக்கொண்டே வந்தேன். அவர்கள் பேசியதிலிருந்து எங்கள் வீட்டு வேலைக்காரர்களையெல்லாம் எங்கேயோ போட்டுப் பூட்டியிருப்பதாகவும்—வீட்டிலிருந்த பெரியம்மாளுக்கு—என் அத்தைக்கு மூக்கில் 'விஷம்' வைத்துக் கட்டி, வீட்டில் ஒரு மூலையில்



போட்டு வந்திருக்கிறதாகவும், அந்த விஷம் அதிகமாக ஏறிவிட்டால் உயிருக்கே ஆபத்தென்றும் தெரிகிறது. ஐயா என் அத்தை....என் அத்தை....என்னை வளர்த்தவர்...."

"ஆ! ஐயோ ! அப்படியா ? அடடா ! டே செவந்தான் ! ஓடிவா இங்கே. என் கைப்பெட்டியைத் திறந்து ஒரு காகிதமும் பென்சிலும் கொண்டுவா" என்று கள்ளர் தலைவன் சொல்லிச் சிறிது நேரத்துக்கெல்லாம்" காகிதத்தையும் எழுதுகோலையும் கொண்டுவந்தான். கள்ளர் தலைவன் உட்கார்ந்து ஏதோ அவசரமாக எழுதி, "இந்தா பத்திரம். சொல்லுகிறபடி செய்ய வேணும். நீ உடனே வெகு வேகமாக ஓடி, ஊருக்குள் போகும் ஒரு குடியானவனைப் போல, சொக்கேசர் வீட்டில் யாரிருந்தாலும் அவர்களிடத்தில் இந்தக் கடிதத்தையும் பொட்டணத்தையும் கொடுத்து, அவர்கள் கடிதத்தைப் பிரித்துப் பார்க்கிறவரையிலும் பார்த்துவிட்டு, அடையாளங் காட்டாமல் வந்துவிடு. ஓடு—ஓடு மூச்சுப் பிடித்து ஓடவேண்டும் ; நேரமானால் போச்சு" என்று அனுப்பினான். (இந்தக் கடிதத்தையும் பொட்டணத்தையுந்தான் டாக்டர் சாம்பசிவம் வாங்கினார்....)

"சரி, அம்மா ! உன்னுடைய அத்தைக்கு ஆயுள் கெட்டியாக இருந்தால் இந்த மருந்து தப்பாமல் உதவும். மருந்து கொடுக்கும் போது ஜீவனிருந்தால் போதும், பிழைத்துக்கொள்ளுவார்கள். இனி நாம் போவோம். உன்னால் நடக்க முடியுமா ? என் பின்னாலேயே வா" என்று கள்ளன் பூங்கோதையை அழைத்தான்.

"உங்கள் பின்னால் நான் எங்கே வருவது ? அவனும் அப்படித்தான் கூப்பிட்டான். இல்லை, நான் எங்கும் வரமுடியாது. என் வீடு போகவேண்டும். நீர் எனக்கு உபகாரியானால் என்னை உடனே என் வீட்டுக்கு அனுப்ப வேண்டும்" என்றாள்.

"அம்மா, சந்தேகப்பட வேண்டாம் ; உன்னைத் தகுந்த துணையுடன் உன் வீட்டில் கொண்டு சேர்ப்பிக்கிறேன். உன்னுடைய வீடு வெகு தூரத்தில் இருக்கிறது. உன்னைத்

தனியே அனுப்பக்கூடாது. உனக்குத் தடமுந்தெரியாது. என்னுடைய ஆட்களெல்லாம் வந்து சேரட்டும். அனுப்பி வைக்கிறேன். பயப்படாதே, வா. எழுந்து என் பின்னால் வா. விடியும் சமயம் ஆகிவிட்டது. இனி இங்கேயிருப்பது அபாய மானது. காத்தவராயன் கூட்டத்தார் பொல்லாதவர்கள். நம்மைப் பின்பற்றி இங்கே வந்தாலும் வருவார்கள்'' என்றான் கள்வன்.

'அந்தக் கள்ளர்கள் பின்பற்றி வந்தாலும் வருவார்கள்' என்ற பயத்தாலும், அத்தைக்கு இவன் மருந்தனுப்பின மாதிரி யில் உண்டான சந்தோஷத்தாலும், பூங்கோதை சந்தேகத்தை மறந்து எழுந்து, தன் உடையைச் சீர்படுத்திக்கொண்டு, கலைந் திருந்த கூந்தலைக் கோதி முடித்துக்கொண்டு, விளக்கோடு முன் னால் நடந்த கள்ளர் தலைவனுக்குப் பின்னால் தானும் போனாள்.

கொட்டாரத்தை விட்டுப் புளியந்தோப்பிலேயே கொஞ்ச தூரம் போனபின், ஒரு பாறையின்மீது ஏறினார்கள். படி யில்லை என்றாலும் சாய்வாகச் சுலபமாக ஏறக்கூடியதாக அது இருந்தது. சூரியோதயம் சமீபித்துவிட்டதால் அது ஒரு பெரிய மலையென்று தெரிந்தது. சிறிது தூரம் ஏறி, பின் அந்தப் பாறையின் மேலேயே சமவெளி போன்ற ஓர் இடத்தில் கரடு முரடான வழிகளில் சென்றார்கள். அங்கே செங்குத் தான ஒரு சிறு பாறை குறுக்கிட்டது. அதன் மத்தியில் ஓர் ஆள் சிரமத்தோடு போகப் போதுமான ஒரு சுரங்கம் வெட்டப் பட்டிருந்தது. அதில் கள்ளர் தலைவன் நுழைந்தான். பூங் கோதை சற்றுத் தயங்கினாள்.

''அம்மா, பயப்படவேண்டாம், வா. நானிருக்க உனக்கு என்ன பயம்? வா. ஆனால் நேராக மெதுவாக வரவேண்டும். இல்லாவிட்டால் நீட்டிக்கொண்டிருக்கும் பாறை முனைகள் இடித்துவிடும்'' என்று முன்னால் பிடித்துக்கொண்டிருந்த விளக்கைப் பின்னால் காட்டிக்கொண்டே நடந்தான். பூங் கோதை சற்று மருண்டாளென்றாலும், 'தலைக்குமேல் போன பின் முழம் போனாலென்ன, சாண் போனாலென்ன' என்று



எண்ணிக்கொண்டே பின் நடந்தாள். சுமார் நூறு கஜதூரம் நடந்தபின் சுரங்கத்தின் கோடியில் ஒரு கதவு போலத் தென் பட்டது. கள்ளன் கதவைத் தட்டினான். மறுபுறத்திலிருந்து கதவிலிருந்த ஒரு துவாரத்தின் வழியாக "ஸ்ரீராம ஜெயம்'' என்று சத்தங் கேட்டது. உடனே கள்ளர் தலைவன் "சீதை மீண்டாள்'' என்று அதே துவாரத்தின் வழியாகக் கத்தினான். கதவு திறக்கப்பட்டது. இருவரும் கதவைக் கடந்த பின் மறுபடியும் கதவு தாழிடப்பட்டுவிட்டது. கதவுக்கு அப் பால் வெளியான இடம் தென்பட்டது. விடியற்கால வெளிச்சம் வந்துவிட்டது. கதவின் வலப்புறத்தில் செங்குத்தான பள் ளத்தாக்கு காணப்பட்டது. கீழேயிருந்த சமநிலமும் அதிலுள்ள மரங்களும் மங்கலாயிருந்தாலும் நன்றாகத் தெரிந்தன. கள் ளர் தலைவன் கதவண்டையில் காவல் செய்துகொண்டிருந்த வனுடன் தனித்துச் சில வார்த்தைகள் பேசிவிட்டு வந்து, கதவின் இடப்புறத்தில் பாறையில் வெட்டப்பட்டிருந்த படி களைக் காட்டி பூங்கோதையைக் கூப்பிட்டான்.

பூங்கோதை பள்ளத்தாக்கையும் மலைச்சாரலையும் பார்த் துக்கொண்டே, 'என்ன! ஸ்ரீ ராம ஜயமாம்....சீதை மீண்டா ளாம்! ஸ்ரீ ராமனாம்—சீதையாம்! இந்தக் கள்ளர்க்குக்கூட ஸ்ரீ ராமனும் சீதையும் உண்டா? ஆஹா! உலகத்தில் எத்தனை பாதகர்கள் புண்ணிய நாமங்களைச் சொல்லிக்கொண்டு என் னென்ன அக்கிரமங்களைச் செய்கிறார்கள்! தர்மத்துக்கும் அது நாமாவளி! அதர்மத்துக்கும் அது நாமாவளியா?.... எனக்கு இவன் உபகாரம் செய்ய வந்தவனாக இருக்கலாம். ஆனாலும் இவனுடைய சகாக்களையும் வாழ்க்கையையும் கவ னிக்கிறபோது, இவனும் உலகத்துக்கு மறைந்து வாழ்ந்து, பிறர் அறியச் செய்யக்கூடாத செய்கைகளிலே ஈடுபட்டவ னென்று நன்றாக விளங்குகிறது' என்று சிந்தித்துக் கொண்டே நின்றவள், அவன் கூப்பிட்டதைக் கேட்டுத் திடுக் கிட்டுத் திரும்பினாள். சற்று செங்குத்தான பாறையில் படிகள் வெட்டப்பட்டிருந்தன. இந்தப் படிகளில் சுமார் ஒரு பனை மரம் உயரம் ஏறியபின் பாறை சமநிலம் போல இருந்தது.

இந்தச் சமமான பாறையில் சிறிது தூரம் நடந்து கள்ளன் சட்டென்று நின்று, பூங்கோதையிடம் "அங்கேயே நில்லம்மா" என்றான். வழியைப் பார்த்துக்கொண்டே தலை குனிந்து வந்துகொண்டிருந்த பூங்கோதை உடனே நின்று தலையைத் தூக்கினாள். எதிரே பார்த்தாள். திடுக்கிட்டுப் போனாள். என்றுமில்லாத ஒரு பயம் மனத்தில் உண்டாயிற்று. ஏனென்றால், இவர்கள் நடந்துவந்த குன்று முடிவடைந்துவிட்டது. எதிரிலே வேறோர் உயரமான மலைச்சாரல் காணப்பட்டது! இவர்கள் நின்றுகொண்டிருந்த இடத்திலிருந்து இன்னும் நாலு எட்டு நடந்தால் பாதாளந்தான்! இரண்டு மலைகளுக்கும் மத்தியில் ஐந்தாறு பனை ஆழமுள்ள ஒரு'கெபி' காணப்பட்டது. இரண்டு மலைகளுக்கும் இடையில் சுமார் பத்துக் கஜ தூரம் இருக்கும்.

கள்ளன் எதிரிலிருந்த யாரையோ கூப்பிடுவது போலப் பெயர் சொல்லிக் கத்தினான். எதிரிலிருந்து "சேது பந்தனம்" என்ற சத்தம் கேட்டது. இங்கிருந்த கள்ளன் "அசோக வனம்" என்று கூவினான்.

பூங்கோதை இதைக் கேட்டு மறுபடியும் ஆச்சரியப்பட்டு, 'சேது பந்தனம் என்றால், அசோக வனமாம்! என்ன இது? சேது பந்தனத்துக்கும் அசோக வனத்துக்கும் என்ன பொருத்தம்? முன் 'ஸ்ரீ ராம ஜயம்—சீதை மீண்டாள்' என்றதிலாவது பொருத்தமிருந்தது. இதெல்லாம் என்ன சூதோ, தெரியவில்லையே! ஸ்ரீ ராமன் யார்? சீதை யார்? சேதுபந்தனம் எங்கே? அசோகவனம் எது?' என்று எண்ணியெண்ணிக் குழம்பிக்கொண்டிருக்கும்போது, எதிரில் செங்குத்தான மலையோரத்திலிருந்த ஓர் அடர்த்தியான மரத்தின் பக்கத்திலிருந்து ஏதோ ஒரு மலைப்பாம்பு தலை நீட்டுவது போலத் தெரிந்தது. கொஞ்சங் கொஞ்சமாக நீண்டு இரண்டு மலைகளுக்கும் இடையில் ஏதோ ஒன்று கள்ளர் தலைவன் நின்றுகொண்டிருந்த இடத்துக்கு நேராக மோதிற்று. உடனே, அவன் அதனருகில் சென்று உட்கார்ந்து தொட்டுப் பார்த்துப் பரிசோதனை செய்துவிட்டு, இரண்டெட்டு வலப்புறத்தில் நடந்து,



அங்கே தொட்டி போல் கட்டப்பட்டிருந்த ஓர் இடத்திலிருந்து இரண்டு பருத்த இரும்புக் கம்பிகளை எடுத்துவந்து, அதன் இரு புறத்திலும் இழிந்த துவாரங்களில் செருகி, அசைத்துப் பார்த்துவிட்டு, "வாம்மா, வா, இந்த மலையின் அதிசயங்களையெல்லாம் நீ பார்க்க வேண்டுமென்றுதான் கூட்டிக்கொண்டு வந்தேன். இந்த மாதிரி நீ பார்த்திருக்கிறாயா? இருக்காது" என்றான்.

"இல்லை, நான் பார்த்ததில்லை. என்றாலும், கள்ளர்களிடத்தில் இதைக்காட்டிலும் அதிசயமான விஷயங்கள் உண்டென்று நான் படித்திருக்கிறேன்" என்று பூங்கோதை சொன்னாள்.

"கள்ளனா!........ஆம். சரி, வா நேரமாச்சுது" என்று அவன் முன்னால் போனான். இனி, விளக்கு வெளிச்சம் அவ்வளவு அவசியமாக இல்லை. பூங்கோதை பின்னால் சென்றாள்.

எதிர் மலையிலிருந்து இந்த மலைக்கு நீண்டு வந்தது ஓர் இரும்புப் பாலம். இரு புறத்திலும் மார்பளவு உயரமான கைபிடிக் கம்பிகளுடன் வெகு சாமர்த்தியமாகச் செய்யப்பட்டிருந்தது. பூங்கோதை அந்தக் கம்பீரமான மலைக்காட்சியில் ஓர் உற்சாகம் கொண்டவளாகித் தன்னை மறந்து, ஒருவிதத் தைரியத்தோடு பாலத்தில் நடந்தாள். வாராவதியின் இறுதியில் பாறையில் ஒரு சிறு கதவு தென்பட்டது. ஆனால் அங்கிருந்த அடர்ந்த மரத்தின் இருட்டில் நன்றாகத் தெரியவில்லை. அங்கேயும் காவல் இருந்தது. இருவரும் அந்தக் கதவைத் தாண்டியவுடன் கதவு தாழ் இடப்பட்டது. கதவுக்கு அடுத்து ஒரு சிறு அறை இருந்தது. கள்ளர் தலைவன் அந்தச் சிறு வீட்டுக்குள் நுழைந்து, "அம்மா, உனக்கு இஷ்டமிருந்தால் நீயும் உள்ளே வந்து இந்தச் சாளரத்தின் வழியாக ஒரு விநோதத்தைப் பார்க்கலாம்" என்றான். பூங்கோதை அறைக்குப் போனாள்.

அங்கே இரண்டு மூன்று ஆள்கள் மாவரைக்கும், எந்திரத்தின் சக்கரத்தைப் போன்ற ஒரு சக்கரத்தைப் பிடித்து

கொண்டு நின்றார்கள். கள்ளர் தலைவன், "அம்மா, சன்னலின் வழியாக நாம் வந்த வாராவதியைப் பார்" என்று சொல்லி விட்டுப் பக்கத்தில் சுவரின் மீது தொங்கிக்கொண்டிருந்த தாரைக் கொம்பு போன்ற ஓர் ஊதுகருவியை எடுத்து 'பூம்—பூம்—பூம்' என்று மும்முறை ஊதினான். உடனே வாரா வதியின் எதிர்க்கோடியில் ஓர் உருவம் தோன்றி, முன் இவர்கள் வாராவதியில் கால் வைப்பதற்கு முன்னால் கள்ளர் தலைவன் செருகிய இரண்டு கடப்பாரைகளையும் இழுத்து எடுத்து விட்டது. அறையிலிருந்த மற்றக் கள்ளர்கள் சக்கரத்தைச் சுற்றினார்கள். பூங்கோதை சாளரத்தின் வழியாகப் பார்த்துக் கொண்டே இருந்தாள். சக்கரம் சுழலச் சுழல இரும்பு வாரா வதியானது வெகு சீக்கிரத்தில் பூங்கோதை நின்றுகொண்டிருந்த பாறைக் கடியில் கதவுக்கு நேராகவந்து நுழைந்துகொண்டது. பிறகு இருவரும் அந்த அறையை விட்டு வெளியில் வந்ப் விளக்கைப் பிடித்துக்கொண்டே முன்வந்த கதவுக்கு நேராக நடந்தார்கள். அதுவும் பாறையில் வெட்டப்பட்ட ஒரு குறுகிய சுரங்கம். கொஞ்ச தூரம் போனபின் அந்த நடையின் வலது புறத்தில் மற்றோர் அறை சற்றுப் பெரிதாக இருந்தது. அந்த அறையில் இரண்டு சாளரங்கள் தலைக்கு மேல் உயரத்தில் இருந்தன. அவற்றின் வழியாகப் பார்த்தபோது அந்தக் குன்றும் இதோடு முடிந்துவிட்டது போல எதிரில் வேறொரு மலைச்சாரல் தென்பட்டது. பூங்கோதை சற்றுத் தயக்கமுற்ற வளைப் போல, "ஐயா, அந்தக் கள்ளர்கள் பின்பற்றி வருவார்க ளென்றும், என்னை வீட்டுக்கு அனுப்பி வைப்பதாகவும் அழைத்து வந்து, எங்கெங்கோ பயங்கரமான திருட்டு வழிகளி லெல்லாம் இட்டுக்கொண்டு போகிறீர்களே, இது உங்களுக்குத் தருமமா?" என்றாள். "ஆம். தருமந்தான்; சந்தேகமில்லை. உன்னை வீட்டுக்கு அனுப்பி வைக்கிறேனம்மா. நீ ஒன்றும் சந்தேகிக்க வேண்டாம். உன் தகப்பனார் எனக்கு மிகவும் வேண்டியவர். ஆனால், அது உனக்குத் தெரியாது. இந்த ஓர் இடத்தைத் தாண்டினால் பிறகு நான் இருக்கும் குகைக்குப் போய்விடுவோம். ஆள்களும் வந்துவிடுவார்கள். இவ்வளவு தூரம் வந்தபின் இனித் தயங்கலாமா? பயப்படவேண்டாம்.



இப்படி வா. இந்தத் தொட்டியில் இறங்கு. இங்கேயும் நீ பார்த்திராத ஒரு வேடிக்கையைப் பார்" என்று பல்லக்குப் போன்ற ஒரு தொட்டியைக் காண்பித்தான். அது அந்த அறையின் சுவரோடு சேர்த்துக் கட்டப்பட்டது போலக் காணப்பட்டது. அதற்கு ஒரு சிறு கதவும் இருந்தது. அந்தக் கதவைத் திறந்து கள்ளர் தலைவன், "அம்மா, கடவுள் சாக்ஷியாகச் சொல்லுகிறேன். நான் உனக்கு உபகாரியே யல்லாமல் வேறல்ல. சந்தேகிக்காமல் இதற்குள் இறங்கு" என்றான். பூங்கோதை 'கள்ளர்களுக்குக் கடவுளும் கூடவா!' என்று நினைத்துக்கொண்டே சிறிது தயக்கத்தோடு அந்தத் தொட்டிக்குள் இறங்கினாள்.

"டேய் மலையப்பா! எல்லாம் சரியாக இருக்கிறதா?" என்று கள்ளர் தலைவன் கத்தினான்.

"ஆமாம், எஜமானே. எல்லாம் சரியாகத்தான் இருக்கு துங்கோ" என்று ஒரு மூலையிலிருந்து பதில் வந்தது.

"இன்னொரு தரம் போய் எல்லாவற்றையும் நன்றாகப் பார்த்துவிட்டு வந்து சொல்" என்றான் தலைவன். சற்று நேரம் பொறுத்து மலையப்பன் வந்து "ரொம்பச் சரியாயிருக்கு துங்கோ" என்றான். 'சரி' என்று சொல்லிக்கொண்டே தலை வன் தானும் அந்தத் தொட்டியில் நுழைந்துகொண்டு கதவை மூடி ஆணிகளைத் திருகிவிட்டுத் தொட்டியின் அள்ளைகளில் இருந்த எதையோ தூக்கினான். தொட்டி ஒரு கிளிக்கூண்டு போல் மூடப்பட்டுவிட்டது. உடனே வாயில் தன் விரல்களை வைத்து மூன்று முறை ஏதோ ஒரு பாஷை பேசுவது போலச் 'சீட்டி' யடித்தான். அவ்வளவுதான் தாமதம்! அடடா! அந்தச் சுவர் நெரிந்து இடியப் போவது போல 'நறநற' வென்று ஒரு பயங்கரமான சத்தம் கேட்டது. என்னவென்று எண்ணுவதற் குள்ளாக அந்தத் தொட்டி அப்படியே சுவரைவிட்டு வெளியில் வந்து சுவருக்கு ஒரு கஜ தூரத்தில் அந்தரத்தில் தூரியாடிக் கொண்டு தொடங்கிற்று. பூங்கோதை பிரமையடைந்தவள் போல இரு புறத்திலும் கீழே பார்த்தாள். குடலெல்லாம் வாய் வழியாக வெளியில் வந்துவிடப் போவது போல ஓர் உணர்ச்சி

யுண்டாயிற்று. கீழே பூமியிருக்கும் இடமே தெரியவில்லை! எதிரில் இருக்கும் மலைச்சாரலோ தூரத்தில் இருக்கிறது! அச்சமும் ஆச்சரியமுமாகப் பூங்கோதை கொஞ்சம் வெட வெடத்துப் போனாள். சற்று நேரம் அந்தத் தொட்டி அப்படியே ஆடிக்கொண்டிருந்தது. எதிர் மலைக்குப் போகுமா, கீழே போகுமா, மேலே போகுமா என்று ஒன்றுமே தெரியவில்லை. சற்று நிதானித்துப் பார்த்தபோது; அது கொஞ்சங் கொஞ்சமாகக் கீழே போவதாகத் தெரிந்தது. சுமார் அரை மணி நேரம், இப்படிக் கீழே போய் ஒரு செங்குத்தான பாறையின் ஓரமாக ஒரு ஜன்னலுக்கு நேராக நின்றது. கள்ளர் தலைவன் "டே! ஆலடியான்!" என்று கூவினான். ஜன்னலின் வழியாக, "பாதுகை கொடுத்தாரா?" என்று காதில் விழுந்தது. கள்ளர் தலைவன் "பன்னசாலையோடு" என்று பதில் சத்தமிட்டான். பூங்கோதை இதைக் கேட்டு இன்னும் திகைப்படைந்தாள்.

ஜன்னல் திறக்கப்பட்டுத் தொட்டி ஓர் இரும்புக் கொக்கியால் ஜன்னலுக்குச் சமீபமாக இழுக்கப்பட்டது. ஆனால் தொட்டி சாயவில்லை. தொட்டியின் அடிப்பக்கம் ஜன்னலில் இருந்த இரண்டு வளையங்களில் மாட்டப்பெற்றுச் சமனாக நின்றது. இருவரும் ஜன்னலின் வழியாக உள்ளே போனார்கள். பார்வைக்கு வெளிப்புறத்தில் ஜன்னல் போல் இருந்த அது ஒரு கதவுதான். மிகவும் இருண்ட ஓர் அறை அங்கே இருந்தது. சற்றுநேரத்தில் ஜன்னலுக்கெதிரில் பத்தெட்டுத் தூரத்தில் ஒரு பெரிய கதவு திறக்கப்பட்டது. அங்கே காலை வெளிச்சம் காணப்பட்டது. அந்தக் கதவையுங் கடந்து வெளியில் வந்தார்கள். வரும்போது கள்ளர் தலைவன் அங்கிருந்த காவலாளியிடம் ஏதோ ரகசியமாகப் பேசினான். அது பூங்கோதைக்குக் கேட்கவில்லை. இந்த மர்மங்களையெல்லாம் நினைக்க நினைக்கப் பூங்கோதைக்கு உற்சாகம் குறைந்து, சந்தேகம் மேலிட்டது.

இப்போது அவர்கள் வந்திருந்த இடம் ஓர் உயரமான மலைச்சாரலின் பக்கத்தில் சம நிலமாக இருந்தது. அந்த இடத்தின் நாலுபுறத்திலும் வெகு உயரமான மலைகளும்,



அவற்றில் செறிந்து செழித்து வளர்ந்திருந்த மிகப்பெரிய மரங்களும், மற்றுமுள்ள செடி கொடிகளுமே காணப்பட்டன. உச்சிக்கு நேராகத் தெரிந்த ஆகாசத்தைத் தவிர, பிறபக்கங்களில் எட்டிய மட்டும் எங்கும் வானம் தெரியவில்லை. உதய காலத்தில் எங்கு பார்த்தாலும் பச்சைப் பசேலென்று இடையிடையே பற்பல வர்ணப் பூக்கள் பூத்த மரங்களே காணப்பட்ட அந்த மலைக் காட்சி பூங்கோதைக்கு வெகு சந்தோஷத்தைக் கொடுத்தது. என்றாலும், தான் அப்போதிருந்த நிலைமையும் இந்தக் கள்ளன் தன்னை எங்கே கூட்டிப் போகிறானோ என்ற ஏக்கமும் அந்தச் சந்தோஷத்தைக் குறைத்துவிட்டன. மலைப்பாங்கிலுள்ள பலவிதக் காட்டுப் புஷ்பங்களின் மணத்தோடு காலைக் காற்று மிகவும் களிக்கத் தகுந்ததாக வீசியது.

நாற்புறத்திலும் மலைவளங்களைப் பார்த்துக்கொண்டும், தன்னை இட்டுக்கொண்டு போகிற கள்ளனுடைய வெகு ரகசியமான வழிகளில் தனக்கு உண்டான சந்தேகங்களை எண்ணிக்கொண்டும், பூங்கோதை முன்னே சொன்ன கதவுக்குச் சற்றுத் தூரத்தில் இருந்த ஓர் அகன்ற கல்லின்மீது உட்கார்ந்தாள். அந்தக் கல்லின் அருகில் முளைத்திருந்த ஒரு மலை ரோஜாச் செடியை இழுத்து, அதிலிருந்த ஒரு மலரை அழகு பார்த்துக்கொண்டே ஆழ்ந்த சிந்தனையிலிருந்தாள்.

"என்ன அம்மா, பூங்கோதை! என்ன? களைப்பாக இருக்கிறதா? இன்னுங் கொஞ்ச தூரந்தான். அதோ அந்த மூலை திரும்பின உடன் நாம் போய்ச் சேர வேண்டிய மாளிகை தெரியும். போகலாமா? இல்லை. சற்று இளைப்பாற வேண்டுமா?" என்றான் கள்ளன். "ஐயா, எனக்குக் களைப்புமில்லை, இளைப்புமில்லை. உம்முடைய கள்ள வழிகளின் வேடிக்கைகளைப் பார்த்தது போதும். இனி, நான் எங்கும் வர மாட்டேன். உடனே என்னைத் தயவு செய்து, என் வீட்டுக்கு அனுப்பி வையும்....இன்னொன்று. வெகு நேரமாக உமக்குச் சொல்ல வேணுமென்ற எண்ணம். என்னவென்றால்—நான் உம்மை 'நீ' என்று முதலில் சொல்லிவிட்ட போது, 'மரியாதை யாகப் பேசவேண்டாமா!' என்று ஏளனம் செய்தீர். வழி

முழுதும் நீர் என்னை 'நீ, நீ' என்றும், வெகு ஸகஜமானவர் போலப் 'பூங்கோதை' என்று பெயர் சொல்லியும் 'வா, போ' என்று பேசுவதும் எனக்குப் பிடிக்கவில்லை'' என்றாள்.

கள்ளன் உடனே கலகலவென்று சிரித்து, ''ஓஹோ ஹோ! அப்படியா? அதற்காகவா இவ்வளவு வாட்டம்? ஆம், நீங்கள் கண்ணியமான குடித்தனத்தில் பிறந்து, நன்றாகப் படித்தறிந்த புத்திசாலி. உங்களை 'நீ' என்று நான் சொல்லக்கூடாதுதான். இனிமேல் 'நீங்கள்', 'தாங்கள்' என்று சொல்லுகிறேன். நான் படிப்பில்லாத காட்டாளானதால் வயதில் பெரியவர்கள் வயதில் சிறியவர்களை 'நீ, வா, போ' என்று சொல்லுவதால் குற்றமில்லையென்று எண்ணிவிட்டேன். தயவு செய்து மன்னித்துக் கொள்ளுங்கள். ஏனம்மா, சரிதானுங்களா?'' என்று மறுபடியும் சிரித்தான். கள்ளன் சொல்லுகிற வயது நியாயம் சரியாக இருப்பதைக் கண்டு வெட்கப்பட்டவளைப் போலப் பூங்கோதை தலைகுனிந்த வண்ணம் கையிலிருந்த புஷ்பத்தைப் பார்த்துக்கொண்டே இருந்தாள்.

சற்று நேரம் சென்ற பின் கள்ளர் தலைவன் ''என்ன அம்மா, இன்னும் கொஞ்ச தூரந்தான். போகலாம் வாருங்கள்'' என்றான்.

''ஐயா, உங்களுக்குப் புண்ணியமுண்டு. தயவு செய்து என்னை வீட்டுக்கு அனுப்பி வையுங்கள். என்னுடைய அத்தை என்ன கதியானார்களோ என்று அதே கவலையாக இருக்கிறது. என்னுடைய தகப்பனார் ஊருக்குப் போயிருந்தவர் இந்நேரம் வந்து என்னைக்காணாது கலங்குவார். ஐயா.... நீங்கள்.... என்னை முன்போலவே 'நீ' என்று சொல்லுங்கள், பாதகமில்லை. 'நீங்கள்', 'தாங்கள்' என்று சொல்லுவது நன்றாக இல்லை'' என்றாள்.

''சரி, அப்படியே செய்கிறேன். உங்களுடைய ... இல்லை யில்லை.... உன்னுடைய இஷ்டம் எப்படியோ அப்படிச் செய்யக் காத்துக்கொண்டிருக்கிறேன். உன்னை வீட்டுக்கு அனுப்பி வைக்கிறேனம்மா, பயப்பட வேண்டாம். அத்தையினிடத்தில் உனக்கிருக்கும் அபிமானம் எனக்குத் தெரியும். உன் தகப்பனார் ஊரிலில்லை என்பதையும் நான் அறிவேன். இன்றைக்கு அவர் வருகிறார் என்பதும் தெரியும். உனக்குக் கலியாணம் நிச்சயம் செய்ய அவர்கள் வருகிற இந்தச் சமயத்தில் இப்படி நேர்ந்து விட்டது எனக்கே வெகு வருத்தமாய் இருக்கிறதே, இன்னும் உனக்கு எவ்வளவு வருத்தமிருக்காது!'' என்று புன்சிரிப்போடு சொன்னான்.



சட்டென்று பூங்கோதை கண்களில் நெருப்புப்பொறி பறக்கக் கடுகடுத்த முகத்தோடு தலைநிமிர்ந்து, எதிரில் இரண்டு கைககளையும் பின்னால் கட்டிக்கொண்டு நின்ற அந்தக் கள்ளனை உருட்டிப் பார்த்து, உதடுகள் துடிதுடிக்க, ''ஐயா! எனக்கு ஆபத்தில் உதவினவராக நம்பி, உம்மைப் பின்பற்றி வந்துவிட்டேன். என்னோடு பரிகாசப் பேச்சுகள் பேசுவது உமக்கு அழகல்ல. நான் கேலிப் பேச்சுக்கு இடம் கொடுக்கக் கூடியவள் அல்ல'' என்றாள்.

''என்னம்மா? இதில் என்ன கேலி? உனக்குக் கலியாணம் பேசுவதற்குக் கண்ணப்பரும் அவருடைய மனைவியும் மகனும் வருவதாக, உங்கள் அத்தைக்குத் தந்தி வந்தது பொய்யா? அப்படி அவர்கள் வருகிற சமயத்தில் உன்னைக் கள்ளர்கள் தூக்கிக் கொண்டு போய்விட்டார்கள் என்பது எவ்வளவு வருத்தமான விஷயம்! இதைச் சொன்னால் நீ கோபிப்பானேன்?'' என்று பின்னும் சிரித்தான்.

''ஐயா, அந்த விஷயங்களையெல்லாம் உங்களோடு தர்க்கம் பண்ண எனக்கு இஷ்டமில்லை'' என்று மறுபடியும் தலையைக் கவிழ்ந்துகொண்டு, 'இந்தக் கள்ளனுக்கு நம்முடைய வீட்டு ரகசியங்களெல்லாம் தெரிந்திருக்கிறதே! அந்தக் கள்ளனும் இவனும் போட்டியிட்டுக்கொண்டு நம் வீட்டு ரகசியங்களை யெல்லாம் துப்பு வைத்து உளவறிந்திருக்கிறார்கள் போலிருக் கிறது' என்று பற்பல யோசனைகள் செய்துகொண்டிருந்தாள்.

''சரி அம்மா, உனக்கு இஷ்டமில்லை என்றால் நான் அவைகளைப்பற்றிப் பேசுவதில்லை. நீ சொல்லுகிறபடி நான் உனக்கு ஆபத்தில் உதவி செய்ய வந்தவன்தான் நீ

என்னை நம்பினதில் ஒன்றும் மோசம் வந்துவிடாது. வா, போகலாம் நேரமாச்சு" என்றான். பூங்கோதை அசையாமல் குனிந்த வண்ணமே உட்கார்ந்துகொண்டிருந்தாள்.

மறுபடியும் கள்ளன், "நம்பினால் முழுவதும் நம்ப வேண்டும். நான் உனக்குத் தீங்கிழைக்கமாட்டேன். இவ்வளவு தூரம் வந்தபின் இப்படித்தயங்குவது புத்திசாலித்தனம் அல்ல. அப்படி நான் உனக்குக் கெடுதி செய்வதாயிருந்தாலுங்கூட இனிமேல் நீ தப்ப முடியாது. உலகத்தார் எண்ணக்கூட முடியாத வெகு ரகசியமான இந்த ஏகாந்த இடத்தில், என் உள்ளங்கையில் சிக்கிய ஒரு பூச்சியைப் போல நீ இப்போது இருக்கிறாய். நான் பார்த்து உன்னை இப்போது என்ன வேணுமானாலும் செய்யலாம். இங்கே நானே ராஜா. என்னைத் தடுப்பவர் யார்?....ஆகையினால் இவ்வளவு தூரம் வந்தபின் சந்தேகிப்பது அறிவுடைமை ஆகாது. நீ நன்றாகப் படித்த பெண்ணல்லவா? உனக்குத் திருக்குறள் தலைகீழாகப் பாடமென்று கேள்விப்பட்டிருக்கிறேன்...."

பூங்கோதை ஆச்சரியத்தோடு வாயைத் திறந்த வண்ணமே கள்ளனைப் பார்த்தாள்.

"அம்மா, நீ ஆச்சரியப்பட வேண்டாம். எப்படியோ, உன்னைப்பற்றிய எல்லாச் சங்கதிகளையும் நான் அறிவேன். நீ படித்த குறளில்,

'எப்பொருள் யார்யார்வாய்க் கேட்பினும் அப்பொருள்
மெய்ப்பொருள் காண்ப தறிவு'

என்று படித்ததில்லையா?" என்று சிரித்தான்.

"திருடர்களுக்குத் திருக்குறள் வேறேயா?" என்று பூங்கோதை முனகினாள்.

"திருடர்களா?........ஏன்? திருடர்களுக்கும் திருக்குறள் உண்டு. பட்டணங்களில் பகட்டாக வாழும் உங்களுக்குத்தான் எல்லாப் படிப்பும் நீதியும் சொந்தமென்று எண்ணிவிட வேண்டாம். எங்களுக்குள்ளேயும் நல்லவர்கள் அநேகர் இருக்கிறார்கள். உங்களுக்குள்ளும் தீயவர்கள் பல பேர் இருக்கிறார்கள். பகிங்கரமாகக் கள்ளர்களென்று பேரெடுத்துக் காடுகளிலும் மலைகளிலும் வாழும் நாங்கள் செய்கிற பாவங்களுக்காவது பரிகாரமுண்டு. ஆனால்; நகரங்களில் வெகு நல்லவர்களைப் போலவும் நாகரிகம் அறிந்தவர்களைப் போலவும் நடித்து, உங்கள் ஜனங்கள் செய்கிற பாவங்களுக்கு மன்னிப்பே கிடையாது.......ஓஹோ! நீயொன்றும் ஆச்சரியப்பட வேண்டியதில்லை.......உங்களுக்குள் எங்களைக்காட்டிலும் அயோக்கியர்கள் இருக்கிறார்கள்....வேண்டுமானால் உங்கள் ஊர் **வீரராஜன்** என்ற பெரிய மனிதர் இருக்கிறாரே, அவரே சாக்ஷி" என்றான்.



பூங்கோதைக்குத் தலை சுற்றுவது போல இருந்தது. களைப்பா களிப்பா கவலையா என்னவென்று தெரியவில்லை. பூங்கோதை ஒரு புதுவிதமான பார்வையோடு கள்ளனை ஆற அமரப் பார்த்துச் சற்று நேரம் சும்மா இருந்து, பின் "அதுகளையெல்லாம் என்னிடத்தில் சொல்லிப் பயனென்ன? சரி, இப்பொழுது எங்கே போகவேண்டுமென்கிறீர்கள்? வாருங்கள் போவோம்" என்று எழுந்தாள். பெரிதும் சிறிதுமான பல பாறைகளுக்கும் ஆகாயமளாவிய மரங்களுக்கும் இடையில் நடந்து, கண்ணைக் கவரும் அந்த மலைக்காட்சியையும், அங்குள்ள மா, பலா மரங்கள் மட்டில்லாது பூத்துக் காய்த்துப் பழுத்து உதிர்ந்து கிடப்பதையும் பார்த்துக்கொண்டே பூங்கோதை கள்ளனைப் பின்பற்றினாள்.

இரண்டு பர்லாங்கு தூரம் கடந்தபின் ஒரு பெரும் பாறையின் மூலையைக் கடந்தவுடன், "அதோ பாரம்மா! அந்த வீட்டுக்குத்தான் நாம் போகவேண்டும்" என்று கள்ளன் கையை நீட்டிக் காட்டினான். பூங்கோதை பார்த்தாள். வலப்புறத்தில் ஒரு மலைச்சாரலில் சற்றுச் சமனாகத் தோன்றிய ஓர் இடத்தில் பல மரங்களுக்கிடையில் ஓர் அழகான வீடு தென்பட்டது.

"என் வீட்டுக்குப் போகத் திரும்பவும் இந்த வழியில்தான் வர வேண்டுமோ?" என்றாள் பூங்கோதை.

"ஆம். ஆனால், நாம் இப்போது வந்த வழியைவிட்டுவேறு இரண்டு வழிகளும் இருக்கின்றன. அவைகளில் ஒன்று, மிக இருட்டும் பயங்கரமுமான வழி. அது எங்கள் கூட்டத்தைச் சேர்ந்தவருக்குள்ளேயும் மிகவும் நம்பிக்கையானவர்களுக்குத் தான் தெரியும். அந்நியர்களை அந்த வழியில் கூட்டி வருவதில்லை. அப்படி நேர்ந்தால் கண்களைக் கட்டிவிட்டுத் தான் கூட்டி வருவோம். வேணுமானால் உன் கண்களையும் கட்டி, அந்த வழியாக உன்னை வீட்டுக்கு அனுப்பி வைக்கிறேன்" என்று நகைத்தான்.

"வேண்டாம், வேண்டாம். நான் இந்த வழியிலேயே திரும்பிப்போகச் செய்தால் போதும்" என்றாள்.

கள்ளன் சிரித்துக்கொண்டே "சரி, அப்படியே ஆகட்டும். இன்னொரு வழி மிகவும் கடினமான வழி. பெண்கள் அந்த வழியில் போகமுடியாது" என்றான்.

"உங்களுடைய பேச்சுகளிலிருந்து எங்களுடைய ஊர் விஷயங்களும் என்னுடைய தகப்பனாரைப்பற்றியும் உங்களுக்கு நன்றாகத் தெரிந்திருப்பதாகத் தெரிகிறது. உங்கள் பெயரென்ன? என் தகப்பனாரை உங்களுக்கு எப்படித் தெரியும்? இவற்றையெல்லாம் எனக்குச் சொன்னால் நான் வீட்டுக்குப் போனவுடன், என் தந்தையிடம் நீங்கள் செய்த உதவியைப் பற்றிச் சொல்லுவதற்கு ஒத்தாசையாயிருக்கும். சொல்லுங்கள். உங்கள் பெயரென்ன?"

"சொல்லும்போது சொல்லுகிறேன்..........இனிக் கொஞ்ச தூரம் இறக்கமான இடம். அதோ ஓடை வந்துவிட்டது. இங்கே ஜாக்கிரதையாகப் பார்த்து இறங்க வேண்டும். கால் வழுக்கக்கூடிய இடம்" என்று, அங்கே சரிவாக இருந்த இடத்தில், மெதுவாகத் தான் முன்னால் இறங்கிப் பூங்கோதை இறங்குவதைக் கவனித்துக்கொண்டு நின்றான். பூங்கோதைக்கு அந்த இடம் சிறிது கஷ்டமாக இருந்தது.

"நான் வேணுமானால் கையைப் பிடித்துக்கொள்ளுகிறேனம்மா" என்றான். "இல்லை, வேண்டாம், நானே



வருகிறேன்" என்று பூங்கோதை தரையில் உட்கார்ந்து கைகளை ஊன்றிக்கொண்டு நிதானமாக இறங்கினாள். சற்றுத் தூரம் சென்றதும் ஒரு மலையருவி வெகு தெளிவான நீரோடு சலசலவென்று ஓடிக்கொண்டிருந்தது. அதில் இறங்கு வதற்குச் சாரியான படிகளில்லை. 'அதைக் கடப்பதெப்படி?' என்று பூங்கோதை எண்ணிக்கொண்டே நிற்க, "அம்மா, நீ இங்கேயே நில்லு. நான் மட்டுமானால் இறங்கித் தாண்டி விடுவேன். நீ அருமையான விருந்தாளி. உன்னை அப்படிச் செய்யச் சொல்லுவது எனக்கு அழகல்ல" என்று தண்ணீரில் இறங்கி, அதில் சும்மா கிடப்பது போலத் தோன்றிய ஒரு கெட்டியான மூங்கில் கழியை எடுத்து, வெகு ஜாக்கிரதையாகப் பிடித்துக்கொண்டு கரைமேல் வந்து, அந்தக் கோலைத் தலைக்கு மேலாகத் தூக்கி மெல்லக் கிணற்றில் தண்ணீர்க் குடத்தைச் சேந்துவது போல இழுத்தான். அந்தக் கோல் எதிரிலிருந்த மேட்டின் மேலுள்ள செடிகளில் மறைந்து, இதுவரையிலும் கண்ணுக்குத் தெரியாமலிருந்த ஓர் ஏணியோடு பிணைக்கப் பட்டிருந்தது. மிக லேசானதும் கெட்டியானதுமான ஒரு மூங்கில் ஏணி மெல்ல மெல்லக் கீழே வந்து பூங்கோதை நின்று கொண்டிருந்த இடத்தருகில் தரையில் மோதிற்று. கள்ளன் அந்த ஏணியின் கால்களை அங்கிருந்த ஒரு பெருங் கல்லின் படியில் முட்டவைத்து, ஏணியை அழுத்திப் பார்த்தான். அது வலுவாக இருப்பதைக் கண்டபின் "பூங்கோதை, இதில் ஏறிவர முடியுமா? ஜாக்கிரதையாக ஏறவேண்டும். நீ முதலில் ஏறு. நான் இங்கிருந்து ஏணியைப் பிடித்துக்கொள்ளுகிறேன்" என்றான். "இல்லையில்லை. நீங்கள் முன்னால் போங்கள். எனக்கு இம்மாதிரி ஏணியிலேறிப் பழக்கமுண்டு; நான் பின்னால் வருகிறேன்" என்று பூங்கோதை சொன்னாள். அதன் மேல், முதலில் கள்ளர் தலைவன் ஏறிச் சென்று; நிலத்தில் கால்வைத்த பிறபாடு, பூங்கோதை தன் புடைவையை நன்றாக ஒடுக்கிக்கொண்டு, முன்றானையைக் கச்சிதமாக இழுத்து, இடுப்பில் செருகிக்கொண்டு வெகு பழக்கமுள்ளவள் போலவே ஏறி, மேட்டுக்கு வந்தாள்.

"இந்தச் சிறு வயதில், இவ்வளவு அச்சமற்ற தன்மை யுடைய பெண்கள் ரொம்பவும் அருமை. உன்னுடைய தைரி யத்தைப் பார்த்து, என் மனம் மிகவும் பூரிக்கிறது" என்று சொல்லிக்கொண்டே ஏணியைக் கள்ளன் இழுத்து முன் போலச் செடிகளுக்கிடையில் போட்டுவிட்டான்.

இருபது எட்டு நடந்த உடன் அந்த மலைவீட்டின் வெளிக் கதவு இருந்தது. அந்தக் கதவின் இருபுறத்திலும் இரண்டு அழகான கற்சிலைகள் வாளுங் கையுமாகத் துவார பாலர்களைப் போல நிறுத்தப்பட்டிருந்தன. கதவு தாழிடப் படாமல் இருந்தது. கதவைக் கடந்த உடன் நாற்புறத்திலும் வெகு செழிப்பான ஒரு சிறு பூந்தோட்டமும் அதில் முன் பார்த்தறியாத பலவிதப் புஷ்பச் செடிகளும், பழமரங்களும் வெகு அருமையாகப் பயிர் செய்யப்பட்டிருந்தன. அங்கிருந்த வீடு பார்வைக்குச் சிறியதாக இருந்தாலும் மிக்க பலமானதும் வேலைப்பாடுள்ளதாகவும் இருந்தது. பட்டணக்கரையிலுள்ள பெரிய பணக்காரர்களுடைய வீடுகளும் அதற்கு ஈடாகா.

கட்டடத்தின் தலைவாசலுக்குப் பக்கமாக ஒரு பெரிய மணி தொங்கிக்கொண்டிருந்தது. கள்ளர் தலைவன் அந்த மணியை மூன்று தடவை அடித்தான். சற்று நேரம் பொறுத்து மூன்று தடவை அடித்தான். கதவு திறந்தது. என்ன ஆச்சரியம்! இந்த மலைக்காட்டிலே பைசாசங்களுங்கூடத் தனியாக இருக்கப் பயப்பட வேண்டிய இடத்திலே பெண்கள் குடித்தனமா! கதவைத் திறந்துவிட்டுக் கதவுக்கருகில் சுமார் இருபத்தைந்து வயது மதிக்கக்கூடிய வெகு வசீகரமான ஒரு பெண் நின்று கொண்டு இவர்களை இனிய முகத்தோடு வரவேற்றாள். பூங் கோதை ஆச்சரியப்பட்டுத் தன் உதட்டைக் கடித்த வண்ணம் கண்கொட்டாமல் அந்தப் பெண்ணைப் பார்த்துக்கொண்டே அசைவற்று நின்றாள்.

'வாம்மா, வா, உள்ளே வா. கொஞ்சங்கூடப் பயப் படாதே. இதை உன் சொந்த வீடு போல் எண்ணு. வா, களைத்துப் போயிருக்கிறாய்....ஐயோ! இதென்ன, உன் நகைக ளெல்லாம் எங்கே? படுபாவிகள் அவற்றை அபகரித்துக் கொண்டார்களா?" என்று உள்ளேயிருந்த பெண் சொல்லிக் கொண்டிருக்கும்போதே கள்ளன், "என்ன, சின்னி, அதையெல் லாம் விசாரிக்க இதுதானா சமயம்? களைத்துப் போய் வந்திருக் கிறோம். வந்த விருந்தாளிக்கு முதலில் பசியை ஆற்றுவதை விட்டுவிட்டு......." என்று சொல்லுவதற்கு முன்னால், அந்தப் பெண், "சரி சரி. ஆம், நான் மறந்துவிட்டேன். வாருங்கள்— உள்ளே வாருங்கள். அம்மா..........பூங்..........அம்மா.............. வாம்மா" என்று அழைத்தாள். கள்ளன் முன்னால் போகப் பூங்கோதை வெகு கவனத்தோடு பின்னால் சென்றாள். அங்கே வெகு சுசிகரமும் அலங்காரமுமான ஒரு கூடம். அந்தக் கூடத்தில் தலைவாசல் கதவுக்கு எதிராக உயரத்தில் சுவரில் கோதண்டத்தோடு கம்பீரமாக நின்றுகொண்டிருக்கிற ஸ்ரீ ராமனுடைய வெகு அழகான சித்திரப் படம் ஒன்று இருந்தது. பூங்கோதை தன்னை மறந்து அதைக் கும்பிடக் கையெடுத்தாள். அக்கூடத்தின் வலக்கோடியில் ஒரு பெரிய சாளரமும் இடக் கோடியில் அதே மாதிரி இன்னொரு ஜன்னலும் இருந்தன. வெளிச்சமும் காற்றோட்டமும் வேண்டிய மட்டில் வரக்கூடியதா யிருந்தது. இரண்டு சாளரங்களின் பக்கங்களிலும், இன்னும் பல இடங்களிலும் சுவர் ஓமாகப் பெரிய கண்ணாடி அலமாரிகள் புத்தகங்கள் நிறைந்தனவும், அலங்காரப் பொருள்கள் நிறைந் தனவுமாக நிறுத்தப்பட்டிருந்தன. வலப்புறச் சாளரத்துக்கு நேராக மேலே சுவரில் மினுமினுப்பிடப்பட்ட ஒரு பலகை மாட்டப்பெற்றிருந்தது. அதில் சித்திரிக்கப்பட்ட எழுத்து களால் **'மனச்சாட்சியே நல்ல மந்திரி'** என எழுதப்பட்டிருந்தது. இடப்புறத்துச் சாளரத்துக்கு மேல் அதே மாதிரி **'கடவுள் பார்த்துக்கொண்டே யிருக்கிறார்'** என்றும், தலைவாசலுக்கு நேராக வீட்டிலிருந்து வெளியே புறப்படும்போதெல்லாம் கண்ணுக்குப் படக்கூடியபடி **'அச்சமே மரணம்'** என்றும், அதே பலகையில் சிறிய எழுத்துகளால் **'அஞ்சுவதஞ்சு'** என்றும் எழுதப்பட்ட பலகைகள் இருந்தன. அங்கே ஒரு மேஜையும் பல நாற்காலிகளும், அந்த மேஜையின்மீது ஒரு நிலைக் கண்ணாடியும் இருந்தன. தலைவாசலுக்கு நேராக வீட்டுக்குள்

போகும் கதவும், அதற்கு வலப்புறத்தில் மூன்று அலமாரிகளுக்கு அப்பால் ஒரு கதவும், இடப்புறத்தில் மூன்று அலமாரிகளுக்கு அப்பால் ஒரு கதவும், காணப்பட்டன. அந்தக் கூடத்தின்மேல் நெற்றி மட்டத்துக்குச் சமனாக நல்ல சித்திரங்களால் கோலம் இடப்பட்டிருந்தது.

இவற்றையெல்லாம் பார்த்துக்கொண்டு பூங்கோதை இந்தக் கள்ளனுடைய நிலை இன்னதென்று அறிய முடியாதவளாகிப் பற்பல விதமாக ஆழ்ந்த யோசனை செய்துகொண்டிருக்கையில் கள்ளன் அந்த வீட்டிலிருந்த **"சின்னி"** என்ற அந்தப் பெண்ணைத் தனியாக ஓர் அறைக்குள் கூட்டிப் போய் ஏதோ பேசிவிட்டு வெளியில் வந்தான். வெளியில் வரும் போது கடைசியாக அவன் "நம்முடைய........ தெரியும்படி........ கூடாது. சந்தேகப்பட்டால் கெட்டுப் போகும்....சொல்லி விடாதே" என்று சொன்ன வார்த்தைகள் மட்டும் பூங்கோதையின் காதில் விழுந்து கள்ளனைக் கவனித்தாள்.

வெளியில் வந்து கள்ளன், "சின்னி! எங்களுக்கு ஆகாரம் தயாராயிருக்கிறதா? கொண்டுவா" என்று அவளை அனுப்பி விட்டுப் பூங்கோதையைப் பார்த்து, "அம்மா பூங்கோதை, இந்த இடம் எப்படி இருக்கிறது?" என்றான்.

"இந்த இடத்துக்கென்ன கேட்கவேண்டுமா? வெகு நன்றாக இருக்கிறது" என்றாள்.

"உன்னைப் போன்ற அறிவுள்ள இளம்பெண்கள் இஷ்டப்படி படித்துக்கொண்டும், எத்தச்சையாகப் பாடிக்கொண்டும் இருப்பதற்கு வெகு நல்ல இடம் அல்லவா? உனக்கு வேண்டிய எல்லாப் புத்தகங்களும் இருக்கின்றன. வீணை, பிடில் முதலான வாத்தியங்களும் இருக்கின்றன."

"ஐயா, இப்போது என்னுடைய மனம் படிப்பிலும் பாட்டிலும் இல்லை. தயவு செய்து நான் வீட்டுக்குப் போய்ச் சேரவேண்டியதற்கான ஏற்பாடுகளைச் செய்யுங்கள்."

"ஆஹா, அப்படியே செய்கிறேன். ஆகாரத்துக்குப் பின் அதைப்பற்றி யோசிப்போம். உனக்கென்ன பாலா காப்பியா



தேயிலையா கோக்கோவா? எது பிடிக்கும்? அதைத் தயார் செய்யச் சொல்லுகிறேன்."

"எனக்கு ஒன்றும் வேண்டாம். வீடு போய்ச் சேருகிற வரையிலும் ஒன்றும் உண்ணமாட்டேன். நீங்கள் யார்? என் தந்தையை உங்களுக்கு எப்படித் தெரியும்? அந்தக் கள்ளன் யார்? அவன் ஏன் என்னைத் தூக்கிக்கொண்டு வந்தான்? அவனிடத்திலிருந்து நீங்கள் என்னை மீட்டு இங்கே கொண்டு வந்ததன் கருத்தென்ன? இவைகளையெல்லாம் தெளிவாகச் சொல்லி, என்னுடைய சந்தேகங்களைத் தீர்த்தால் அல்லாமல், இவ்விடத்தில் நான் பச்சைத் தண்ணீர்கூடப் பருகமாட்டேன்."

"அம்மா, உனக்கேன் இன்னும் அவநம்பிக்கை? உன்னுடைய தந்தை இந்தப் பக்கங்களில் ஒரு பெரிய மனிதர். அவரை நான் அறிந்திருப்பதில் உனக்கு ஆச்சரியமென்ன? நான் உன்னுடைய ஆபத்தில் உதவிய ஒரு நண்பன். இதற்கு மேல் நீ அறிய வேண்டியது என்ன?"

"நான் நம்பவில்லை. நீர் அகஸ்மாத்தாக எனக்கு உதவி செய்ய வந்தவர் அல்ல. என்னை அவனிடத்திலிருந்து இங்கே கொண்டுவர வேண்டுமென்று, முன்னாலேயே வேண்டிய ஏற்பாடுகளுடன் முயற்சி செய்து முடித்திருக்கிறீர். ஆகையினால் இதில் ஏதோ சூது இருக்கிறது."

"சபாஷ்! இது வெகு புத்திசாலித்தனமான சந்தேகந்தான். ஆனால், உன் விஷயத்தில் என்னிடம் சூது ஒன்றுமில்லை. உன்னைச் சூதாக ஜயித்து உன்னை அவர்களிடத்திலிருந்து மீட்டேனென்பதைத் தவிர, வேறு சூதொன்றும் இல்லை; நீ வீணாக வருத்தப்பட வேண்டாம்" என்று சிரித்துக்கொண்டே வாசல் கதவை மூடித் தாழிட்டு ஒரு பூட்டையும் அதில் பூட்டி விட்டு, "இதோ வந்துவிடுகிறேன். நீ அந்த நாற்காலியின்மேல் உட்கார்ந்திரு. இதை உன் வீடு போல் பாவித்து நிம்மதியாக இரு" என்று உள்கட்டுக்குப் போகத் திரும்பினான்.

உட்புறத்தில் பூட்டுப் போட்டதைக் கண்டுகொண்ட பூங்கோதை அடங்காத ஆத்திரங் கொண்டவளாகி, கதவண்டை வந்து நின்றுகொண்டு, "நீர் எனக்கு உதவி செய்தது போதும். வீட்டை உடனே திறந்துவிடும். நான் என்ன உம்முடைய கைதியா? இனி நான் அரைக் கணமும் இங்கே இருக்கச் சம்மதியேன். திறவும் வீட்டை, நான் போகிறேன். இல்லா விட்டால்..."

"அம்மா பூங்கோதை, ஆத்திரப்படாதே. அப்படி உன்னைப் போக விட்டுவிடுவதற்காகவா இவ்வளவு பாடுபட்டுக்கொண்டு வந்தேன்? நீ இங்கே எத்தனை நாளைக்கு இருந்தாலும் உன் தகப்பனார் வருத்தப்படாதபடி நான் பார்த்துக்கொள்ளுகிறேன். அவசரப்படாதே! இதோ, வந்துவிட்டேன்" என்று சொல்லிக் கொண்டே உள்ளே போய்விட்டான்.

பூங்கோதைக்கு வந்த கோபத்துக்கும் வருத்தத்துக்கும் அளவேயில்லை. வலையிற்பட்ட மான் போல் மருண்டு மருண்டு அங்குமிங்கும் பார்த்துக்கொண்டு, 'இவன் அந்தக் காத்தவரா யக் கள்ளனைக்காட்டிலும் படுமோசக்காரன் போலிருக்கிறது. அவனாவது தன்னுடைய கள்ளத்தனத்தை வெள்ளையாகக் காட் டிக்கொண்டு தன் கருத்தை அறியவிட்டான். இவனோ மிகவும் கற்றறிந்த சூதனாக இருக்கிறான். ஹே! ஸ்ரீராமா, நீதான் சாக்ஷி. என்னைக் காக்க உன்னைவிட வேறு இங்கே உதவி யில்லை" என்று கூவி, இதுவரையிலும் கலங்காதிருந்த அவள் உள்ளம் கலங்கிக் கண்ணீர் துளிர்க்க, ஒன்றுந் தோன்றாமல் சுவர் ஓரமாகத் தரையில் உட்கார்ந்துகொண்டு, சுவரில் மாட்டி யிருந்த இராமர் படத்தைப் பார்த்துக்கொண்டே இருந்தாள்.

சுமார் ஒரு நாழிகை சென்ற பின் சின்னியம்மாள் வந் தாள். இரண்டு கைகளிலும் இரண்டு பெரிய தங்கத் தட்டங் களை ஏந்தி வந்தாள். அவை தங்கந்தானோ அல்லது சூதோ தெரியவில்லை. பளபளவென்று கண்ணைப் பறிப்பனவா யிருந்தன. ஒரு தட்டில் பலவிதமான பழவகைகளும், இன்னொன்றில் இட்லி, தோசை முதலான உண்டிகளும் இருந்தன.



"அம்மா, பல் துலக்கிக்கொள். இதோ தண்ணீர் கொண்டு வருகிறேன். வா....என்ன?.... என்னம்மா? ஏன் அழுதிருக் கிறாய்?....அவர் அப்படிப் பிறர் புண்படப் பேச மாட்டாரே.... அம்மா, நீ வருத்தப்படாதே. அவரைப் போல் ஆண்மையும் புத்திசாலித்தனமும் அன்பும் உடையவர்கள் வெகு அரிது. உனக்குக் கெடுதல் ஒன்றும் செய்யமாட்டார்....நீ அவரை...." என்று சின்னியம்மாள் சொல்லிக்கொண்டிருக்கும் போதே, உள்ளே யிருந்து ஓர் அழகிய வாலிபன் வந்து நின்றான். வயது சுமார் இருபத்தேழு இருக்கலாம். சிவப்பென்று சொல்ல முடியாதென்றாலும் நல்ல நிறமாக இருந்தான். கடைந்தெடுத்தது போன்ற கவர்ச்சியான அங்கங்களும் கண்டவர் மனத்தைக் கவரக்கூடிய வசீகரமான பார்வையும் உடையவனாக இருந்தான். சற்றே முறுக்கிவிடப்பட்ட அவனுடைய சிறு மீசைகளும், வடிவான உதடுகளும், அவற்றின் மீதமர்ந்த புன்சிரிப்பும் வெகு இனிமையாகக் காணப்பட்டன. நெற்றியில் நிறைய நீறணிந்து ஒரு சிறு குங்குமப் பொட்டும் இட்டிருந்தான். இடையில் சாதாரணமான வெளுத்த வேஷ்டி ஒன்றும் மேலே ஒரு துண்டும் மட்டும் அணிந்திருந்தான். தலை மயிர் வெட்டப்பட்டு அழகாக ஒதுக்கப்பட்டிருந்தது. உச்சி யில் சிறு குடுமியும் இருந்தது.

சின்னியம்மாள் தனக்குச் சொல்லிக்கொண்டிருந்த சமா தானங்களைத் தலைகுனிந்தபடியே கேட்டுக்கொண்டிருந்த பூங்கோதை, வேறு யாரோ வருகிற காலடிச் சத்தத்தைக் கேட்டுத் தலைநிமிர்ந்து பார்த்தாள். தானறியாத ஒரு புது மனிதனாகவும் வாலிபனாகவும் இருப்பதைக் கண்டு மிகவும் நாணப்பட்டு எழுந்து, சற்று எட்டிப்போய் மறுபடியும் தலை குனிந்து நின்றாள்.

வந்த வாலிபன் சின்னியம்மாளைப் பார்த்துப் புன்சிரிப்புடன் ஏதோ கண்ஜாடை காட்டிக்கொண்டே, "என்ன? பூங்கோதை யம்மா, என்னை அடையாளந் தெரியவில்லையா?" என்று கல கலவென்று நகைத்தான். குரலும்,குலுங்க நகைத்த மாதிரியும், தன்னை அங்கே கூட்டி வந்த கள்வர் தலைவனுடைய குரலையும்

சிரிப்பையும் போலவே யிருந்ததனால், பூங்கோதை தன்னைத் தூக்கிப் போட்டது போலத் திடுக்கிட்டு மறுபடியும் தலையை நிமிர்ந்து முன்னால் நின்ற வாலிபனை உற்றுப் பார்த்தாள். அவன் சிறுகச் சிரித்துக்கொண்டே நின்றான். அவனுடைய மூக்கும், கண்களும், பல்வரிசையும் மட்டும்தான் முன் பார்த்தவைகளாகத் தோன்றின. மற்றபடி தன்னை இட்டு வந்த கள்ளனுக்கும் இப்போது சிவக்கோலத்தோடு எதிரில் நிற்கும் இவனுக்கும் யாதொரு சம்பந்தமும் காணப்படவில்லை. வயது ஐம்பதாய்த் தோன்றும்படியாக இடையிடையே நரை செறிந்த தடித்த மீசைகள் எங்கே! காதோரத்தில் அதே மாதிரி காணப்பட்ட கிருதாக்கள் எங்கே! தலையில் காதுகளையும் சேர்த்துக் கட்டியிருந்த தலைக்கட்டெங்கே! ஆயுதங்களெங்கே! கொலைக்கும் களவுக்கும் குறி காட்டும் கோலங்கள் எங்கே! இப்போது நிற்கும் வாலிபனுடைய வைதிக வடிவமெங்கே! என்ன மாறுதல்! என்ன வேஷம்! என்ன மோசம்! "அம்மா, பயப்பட வேண்டாம். உன்னை வீட்டுக்குக் கொண்டுபோய்ச் சேர்ப்பிக்க நானாச்சு. நீ இப்போது ஆகாரம் செய்துகொள். மற்றக் கவலைகள் உனக்கு வேண்டாம். நான் பார்த்துக்கொள்கிறேன்" என்று வாலிபன் சொன்னான்.

"வேண்டியதில்லை. எனக்கு ஆகாரம் வேண்டாம். உம்முடைய மோசமும், பகல் வேஷமும் எனக்குக் கொஞ்சமும் பிடிக்கவில்லை. இப்படி உருமாறி என்னை இங்கே அழைத்து வந்தது ஒன்றே உம்முடைய குணங்களைக் காட்டுகிறது. நீ யார்?"

நானா.... .......நான்தான் ........ அதைப்பற்றி உனக்கென்ன அவ்வளவு விசாரம்? நான்........நான்........நான்........நான். என் பெயர் உங்கள் ஊருக்கு நன்றாகத் தெரியுமே! இருந்தாலும் அதைப்பற்றி நீ ஏன் இவ்வளவு விசாரப்படுகிறாய்? நான் யாராயிருந்தால் உனக்கென்ன? நான் உனக்கு உதவி செய்ய வந்தவன்; உன்னை உன் வீட்டுக்கு அனுப்பி வைக்கிறேன். அதைவிட உனக்கு வேண்டியதென்ன?"



"நான் அறிய வேண்டும். நீர் யார்?"

"நான் யாரென்று சொல்லித்தான் ஆகவேண்டுமா? நான்........நான்தான் **மலைக்கள்ளன்**".

"ஆ! ஐயோ! என்ன? என்ன? மலைக்கள்ளனா?........ அந்த ........ நீர்தானா ........ நீரா அந்த ........ மலைக் கள்ளன்? ஐயோ, தெய்வமே! விலங்குக்குத் தப்பித் தொழுவில் சிக்கிக் கொண்டேனே!" என்று சொல்லிக்கொண்டே கீழே உட்கார்ந்து, பூங்கோதை மயக்கமடைந்தாள்.

## அத்தியாயம் — 5

**பூ**ங்கோதை காணாமற்போன மறுநாள், போலீஸ் இன்ஸ்பெக்டர் **ஸ்ரீ சுந்தரம்,** தம்முடைய தனியறையில் மேஜையின்மீது கைகளை ஊன்றித் தலையைக் கவிழ்த்துக்கொண்டு நாற்காலியில் உட்கார்ந்திருந்தார். எதிரில் மற்றொரு நாற்காலியில் துப்பறியும் 'ஸ்பெஷல் டூட்டி' சப் இன்ஸ்பெக்டர் ஸ்ரீ ஆறுமுகம் உட்கார்ந்து, ஸ்ரீ சுந்தரம் அவர்களை உற்றுப் பார்த்துக் கொண்டே இருந்தார்.

''சொக்கேசரின் வீட்டில் நடந்த காரியங்கள் முழுதும் அந்த 'மலைக்கள்ள'னுடைய வேலையாகத்தான் இருக்க வேண்டும். நாம் உடனே மேலதிகாரிகளுக்கு எழுதி, தக்க போலீஸ் படையுடன் - வேண்டுமானால் பட்டாளத்தின் உதவியையுங் கொண்டு, அந்த மலைக்கள்ளன் என்று சொல்லப்படுகிறவனுடைய இரகசியமான இடங்களைக் கண்டுபிடிக்க வேண்டும்'' என்று இன்ஸ்பெக்டர் சுந்தரம் சொன்னார்.

இன்ஸ்பெக்டர் சுந்தரம் போலீஸ் இலாகாவின் மேலதிகாரிகளுக்கு ரொம்பவும் வேண்டியவர். உத்தியோகத்தில் கெட்டிக்காரர் அல்லாவிட்டாலும், 'சூப்ரண்ட்', 'டி. ஐ. ஜி', 'ஐ. ஜி' முதலிய துரைமார்களிடத்தில் நல்ல செல்வாக்குடையவர். ஸ்ரீ சுந்தரம் இன்ஸ்பெக்டராக இருக்கும் ஊர்களுக்குத் துரைமார்கள் தணிக்கைக்கு வந்தால் மற்ற இடங்களைக்காட்டிலும் இரண்டு நாள் அதிகமாகவே 'முகாம்' போடுவார்கள். அவராகக் கண்டுபிடித்த குற்றவாளிகள் அதிகம் இல்லையென்றாலும், துப்புக் கண்டுபிடிப்பதில் கெட்டிக்காரர் என்ற கீர்த்தியை மேலதிகாரிகளிடத்தில் எப்படியோ சம்பாதித்தவர். இரண்டு மூன்று பெரிய கொலைகளையும் கொள்ளைகளையும், இவர் இன்ஸ்பெக்டராக இருக்க நேர்ந்த இடங்களில், தெய்வாதீனமாக இவருக்குக் கீழிருந்த சிப்பந்திகள் கண்டுபிடிக்கவே, அந்தப் புகழ் முழுவதும் இவருக்கு வந்துவிட்டதால், 'இவர் கெட்டிக்காரர்'



என்ற பெயர் துரைமார்களுடைய புத்தகங்களில் தாக்கலாகி விட்டது. அதிருஷ்டம் என்றால் இதுதான்.

இந்தப் பேர் வாங்கினதால், இவரை விஜயபுரி வட்டத்துக்கு வேண்டுமென்றே மாற்றி, இங்கே நெடுநாளாகப் போலீஸார்களுடைய கண்ணுக்கும் கைக்கும் கிடைக்காத 'மலைக்கள்ளனுடைய' கொட்டத்தை அடக்க வேண்டுமென்பது மேலதிகாரிகளின் நோக்கம். மற்ற இடங்களில் எப்படியோ பேர் வாங்கிவிட்டாரென்றாலும், விஜயபுரிக்கு வந்து இரண்டு வருஷங்களாகியும் 'மலைக்கள்ள'னிடத்தில் இவருடைய அதிருஷ்டம் பலிக்கவில்லை.

ஊரில் எல்லாருக்கும் நல்லவராக நடந்துகொள்வார். சொக்கேசர், வீரராஜன் முதலிய பணக்காரர்களிடத்தில் பழக்கமுள்ளவர். வீரராஜனுடைய வீட்டில் நடக்கும் விருந்துகளில் முதன்மையாக விளங்குவார். போலீஸ் துரைமார்களுக்கும் அங்கே விருந்துகள் நடப்பதுண்டு. அந்தச் சமயங்களில் எல்லா ஏற்பாடுகளையும் தாமே பக்கத்திலிருந்து பார்த்துக்கொள்ளுவார். சங்கீதம், நடனம், நாட்டியம், நாடகம்—இவைகளில் ரஸிகர்.

''என்ன, மிஸ்டர் ஆறுமுகம், இன்றைக்கு 'ரிப்போர்ட்' என்ன ? நீங்கள் கொஞ்சம் சிரமப்பட்டு இந்த 'மலைக்கள்ளனை'க் கண்டுபிடிக்க வேண்டும். இல்லாவிட்டால் நம்முடைய பேர் ரொம்பக் கெட்டுப்போகும்'' என்றார் இன்ஸ்பெக்டர்.

''ஆமாம். எனக்கும் அதுதான் கவலை. இந்தக் 'கேஸில்' சில நூதன விஷயங்கள் வெளியாகியிருக்கின்றன. இன்று காலையில் இட்டேரித் தண்ணீர்ப் பந்தலுக்குப் போயிருந்தேன். நான் புறப்படுவதற்கு முன்னாலேயே இரண்டு மூன்று குடியானவர்கள் கச்சேரிக்கு வந்து ஏதேதோ சொன்னார்கள். நான் உடனே நான்கு ஜவான்களுடன் போனேன். அந்தத் தண்ணீர்ப் பந்தல் வரையில் இட்டேரிப் பாதையில் சொக்கேசருடைய பெண்ணைத் தூக்கிப் போயிருக்கிறார்கள் என்பதற்குப் பல அடையாளங்கள் இருக்கின்றன.''

"என்ன ? என்ன ? நீர் பார்த்த அடையாளங்கள் என்ன?" என்று இன்ஸ்பெக்டர் வெகு தீவிரமாகக் கேட்டார்.

"பழனியப்பனுடைய பண்ணையாளைக் கண்டுபிடித்தேன். அவன்தான் பண்ணைச் சாலையில் படுத்திருந்தானாம். ஜாமத்துக்கு மேல் தன்னுடைய எருதுகள் ஒன்றோடொன்று முட்டிக்கொண்டு, ஓர் எருது அறுத்துக்கொண்டு ஓடுகிற சத்தத்தைக் கேட்டு எழுந்து வந்தானாம். இருட்டில் மாடு மறைந்துவிட்டதாம். மணி மூன்று இருக்குமாம். எருதைத் தேடிக்கொண்டே வாய்க்கால் மேட்டில் வந்துகொண்டிருக்கும் போது, எதிரில் ஐந்தாறு பேர் வருவதைக் கண்டு பக்கத்தில் இருந்த வேலியோரமாக ஒரு செடி மறைவில் பள்ளத்தில் பதுங்கிக்கொண்டானாம். அவர்கள் கிட்ட வந்தபோது, ஒரு கட்டிலைத் தூக்கிக்கொண்டு வந்ததையும், அதில் யாரோ படுத்திருந்ததையும் நன்றாகப் பார்த்தானாம். அவர்கள் இவன் இருந்த இடத்தைத் தாண்டிக் கொஞ்ச தூரம் போய் நின்று ஏதோ பேசிவிட்டு, வேப்ப மரத்தண்டை வாய்க்காலில் இறங்கி இட்டேரியில் போனார்களாம். அவர்களில் ஒருவன் மட்டும் வந்த வழியிலேயே திரும்பிப் போய்விட்டானாம். இதைக் கேட்டு நான் இட்டேரியைப் பரிசோதித்ததில், அங்கே கொஞ்ச தூரத்துக்கு மண்ணில் அடிச்சுவடுகளும், கட்டிலைக் கீழே வைத்திருந்த குறியும் தெரிந்தன. இன்னும் கொஞ்ச தூரத்தில் இரத்தக் கறையோடு சில துணிக் கிழியல்கள் கிடந்தன. அங்கே கள்ளர்கள் இடுப்பில் செருகி மறைத்து வைத்திருக்கும் ஒரு குத்துக் கத்தியும் கிடந்தது. எதற்காகவோ துணியை அறுக்க எடுத்த அந்தக் கத்தியை மறந்து விட்டார்கள்."

"துணியை. அறுக்கவா? அந்தப் பெண்ணுக்கு ஏதாவது ........ஆபத்து........ரத்தத் துணியோடு கத்தியும் கிடந்ததென்றால்........" என்றார் சுந்தரம்.

"இல்லையில்லை. அந்தப் பயம் தங்களுக்கு வேண்டியதில்லை. துணி அறுபட்டிருக்கிற மாதிரியிலும், கத்தி பளபளவென்று சுத்தமாக இருப்பதிலுமிருந்தும் துணியை அறுக்கவே



கத்தி உபயோகப்படுத்தப்பட்டிருக்க வேண்டுமேயன்றி வேறல்ல ....இன்னும் கொஞ்ச தூரம் கவனித்துக்கொண்டு போனபின் ஒரு ரோஜாச் செண்டு இதழ்களெல்லாம் உதிர்ந்து வாடிக் கிடந்தது. அது அந்தப் பெண் அன்றிரவு தலையில் சூடியிருந்த புஷ்பச் செண்டென்று தெரிகிறது. அந்த இடத்தை வெகு ஜாக்கிரதையாகக் கவனித்தேன். இதோ பாருங்கள், இது அங்கே கிடந்தது" என்று ஒரு தங்கத் திருகாணியைக் காண்பித்து, "இதைச் சொக்கேசருக்குக் காட்டினேன். அவர், இது தம் குழந்தையின் வயிர அட்டிகையின் திருகாணி என்று சொல்லுகிறார்....அதன் மேல், குறுக்குப் பாதை வரையிலும் கால் நடமாட்டம் நன்றாகத் தெரிந்து, பின்பற்றிச் சென்றேன். அதற்குப் பின், குறுக்குப் பாதையில் அடிச்சுவடு நன்றாகத் தெரியவில்லை. இந்தச் சமயத்தில் கச்சேரிக்கு வந்த குடியானவர்கள், தண்ணீர்ப் பந்தலுக்குப் பின்னாலுள்ள காட்டுக்கு என்னைக் கூட்டிப் போய், அங்கேயிருந்த ஒரு பெரிய ஆலமரத்தைக் காட்டினார்கள். அதில் உயரமான இரண்டு கிளைகளில் இரண்டு பேர் தலைகீழாகக் கட்டித் தொங்கவிடப்பட்டிருந்தார்கள். வெகு சிரமத்துடன் பக்கத்துக் கிராமத்திலுள்ள குடியானவர்களுடைய உதவியைக்கொண்டு அவர்களைக் கீழே இறக்கினேன். அவர்கள் குற்றுயிரோடிருந்தார்கள். அவர்களில் ஒருவனுக்கு மூக்கின் வழியாக விஷம் ஏறினது போலக் காமாக்ஷியம்மாளுக்கிருந்த குறிகள் சில இருந்தன. மற்றவனுக்கு வலக்காது கொஞ்சம் அறுபட்டிருந்தது. இருவருடைய நெற்றிகளிலும் நாமம் போடப்பட்டிருந்தன."

"அப்படியா ? அது அந்த மலைக்கள்ளனுடைய அடையாளந்தான். முன்னே நடந்த இரண்டு மூன்று கொலைகளிலும் கொள்ளைகளிலும் இந்த மாதிரி அவன் நாமம் போட்டிருந்தது, உமக்கு ஞாபகம் இருக்கிறதா ?" என்று இன்ஸ்பெக்டர் கேட்டார்.

"ஆம், அதுதான் இப்போது இந்தக் குற்றத்தைச் செய்தவர்களை அனுமானிப்பதற்கு இடையூறாக இருக்கிறது."

"ஏன் ? அதில் என்ன சந்தேகம் ?"

"சந்தேகமா ?....சொல்லுகிறேன். மரத்தில் தொங்கவிடப் பட்டிருந்த இரண்டு ஆள்களும் பக்காத் திருடர்கள். அவர்களுள் ஒருவனை எனக்கு நன்றாகத் தெரியும். அவன் பல வருஷங் களுக்கு முன், **கலையூரில்** சொக்கேசருடைய மைத்துனர் **கணேசர்** வீட்டில் கொள்ளையடித்த காத்தவராயனுடைய கூட்டத்தைச் சேர்ந்தவன். இவனை, இந்தச் செய்கை நடப்பதற்கு முதல் நாள் இருட்டியபின் சொக்கேசருடைய வீட்டுக்கு முன்னாலுள்ள இச்சி மரத்தடியில் பார்த்ததாகவும், அடையாளங் கண்டுகொண்டார்களென்று அறிந்தவுடன் வேலி யைத் தாண்டிக் குதித்து ஓடிவிட்டதாகவும். நம்முடைய ஜவான்களில் ஒருவன் சொல்லுகிறான். அத்துடன் இவனுடைய எஜமான் காத்தவராயனும் இரண்டு மூன்று நாள்களாக இந்தப் பக்கத்தில் நடமாடிக்கொண்டிருக்கிறதாகத் தெரிகிறது."

"அதனால் உங்களுக்கென்ன சந்தேகம் ?" என்று சுந்தரம் கேட்டார்.

"அதனால் என்ன சந்தேகமென்றால், இவன் காத்தவராய னுடைய கூட்டத்தைச் சேர்ந்தவனானதாலும், காத்தவராயனு டைய கூட்டத்துக்கும் 'மலைக்கள்ள'னுக்கும் விரோதம் என் பதற்குப் பல ஆதாரங்கள் இருப்பதாலும், காத்தவராயனுடைய கூட்டத்தைச் சேர்ந்த இவனுக்கு நாமம் போட்டு மரத்தில் தொங்கவிட்டவன் மலைக்கள்ளனாகத்தான் இருக்க வேண்டு மென்று நினைக்க இடமிருப்பதாலும், மேலும் இந்தக் காத்தவராயனுடைய ஆளைச் சோதனையிட்டதில் - இதோ பாருங்கள், இதை அவனுடைய துணிக்குள் கண்டுபிடிக்க முடியாதபடி மறைத்திருந்தான்" என்று ஆறுமுகம் ஒரு நகையைக் காட்டி, "இது சொக்கேசருடைய பெண் அன்று தலையில் அணிந்திருந்த கல் ஜடைபில்லை. இதையும் சொக்கேசருக்குக் காட்டினேன். அவர் இது தம்முடைய குழந்தையுடையதுதான் என்று உறுதியாகச் சொல்லுகிறார். இந்த நகை இவனிடத்தில் இருப்பதால்; அந்தப் பெண்ணை வீட்டிலிருந்து அபகரித்துப் போனது அந்த மலைக்கள்ளனா



அல்லது காத்தவராயனுடைய கூட்டத்தாரா, அல்லது இரண்டு பேரும் சேர்ந்தா என்ற சந்தேகங்கள் பிறக்கின்றன" என்று சப் இன்ஸ்பெக்டர் சொன்னார்.

"இரண்டு கூட்டத்தாரும் சேர்ந்தா! இருக்காது. அதெப்படி முடியும் ? சேர்ந்து செய்திருந்தால் இவர்களை மலைக்கள்ளன் நாமமிட்டு மரத்தில் தொங்கவிடுவானேன் ?" என்று சுந்தரம் சொன்னார்.

"அப்படித்தான் நானும் எண்ணுகிறேன். இருந்தாலும் ஏதோ காரணத்தால் இரண்டு கூட்டத்தாரும் சேர்ந்து செய்து, இடையில் இரு கூட்டத்தாருக்கும் சச்சரவு ஏற்பட்டிருந்தாலும் இருக்கலாம். அல்லது இரண்டு கூட்டத்தாரும் தனித்தனியே அந்தப் பெண்ணை அபகரிக்க வேண்டுமென்றும் ஒருவருக் கொருவர் போட்டிபிடவே, அதனால் சண்டையுண்டாகி யிருந் தாலும் இருக்கலாம்...... ஆமாம், இன்னொன்று சொல்ல மறந்துவிட்டேன். அந்த ஆலமரத்தடியில் இன்னும் நாலைந்து கள்ளர்களுடைய ஆடைகள் மூட்டையாகக் கிடந்ததாலும், கிராமவாசிகள், யாரோ சிலர் துணிகூட இல்லாமல் கிராமத்தில் பதுங்கி ஓடினதாகச் சொல்வதிலிருந்தும், மரத்தில் கட்டப் பட்டவர்களைத் தவிர, இன்னும் பலர் சிக்கியும் அவர்களை எதனாலோ விரட்டிவிட்டிருக்கிறார்கள் என்று தெரிகிறது... மேலும், சொக்கேசர் வீட்டில் ஒரு பொருளும் திருட்டுப் போக வில்லை. பெண்ணை வஞ்சித்துக் கொண்டுபோக வேண்டு மென்ற ஒரே நோக்கத்துடன் இது செய்யப்பட்டிருக்கிறது. அந்தப் பெண்ணை இந்தக் கள்ளர்கள் கொண்டுபோனதன் நோக்கம்தான் விளங்கவில்லை."

"ஏன்? ஏன்? ஏன் விளங்கவில்லை? ........நோக்கமென்ன? .... அந்தப் பெண் வெகு சுந்தரி. நான் பார்த்திருக்கிறேன். அவ்வளவு அழகுள்ள பெண் மிகவும் அருமை. யாவருக்கும்...." என்று சுந்தரம் சொல்லி முடிக்குமுன், ஆறுமுகம், "நான் நம்பவில்லை. கள்ளர்களுடைய வழக்கங்களை நாம் அறிந்த வரையில் அழகுக்காக ஒரு பெண்ணை அவர்கள் கொண்டு போனதில்லை. இந்தப் பெண்ணை அழகுக்காக அவர்கள்

கொண்டு போயிருந்தால், அது அந்தக் கள்ளர்களுடைய சொந்தச் செய்கையல்ல. இந்தக் காரியத்தைச் செய்ய இந்தக் கள்ளர்களை ஏவிவிட்டவர்கள் யாரோ இருக்க வேண்டும். அதை நாம் முதலில் அறிய முயற்சி செய்ய வேண்டும்'' என்றார்.

“முதலில் நாம் அந்தப் பெண்ணைக் கண்டுபிடிக்க வேண்டும். பிறகு மற்ற விஷயங்களைக் கவனிப்போம். முக்கியமாக அந்த மலைக்கள்ளனைக் கண்டுபிடித்தால் எல்லா விஷயமும் வெளியாகும்'' என்றார் பெரிய இன்ஸ்பெக்டர்.

இப்படி அவர்கள் பேசிக்கொண்டிருக்கும் போதே ஒரு ஜவான் 'தபால்' கொண்டுவந்து, சற்றுத் தூரத்திலிருந்து 'சல்யூட்' செய்துவிட்டுத் தபால்களை மேஜையின்மீது வைத்தான். அவைகளைச் சுந்தரம் புரட்டிப் பார்க்கும்போது, “தமது பார்வைக்கு மட்டும்—ரகசியம்'' என்று ஒரு 'கவர்' இன்ஸ்பெக்டருடைய மேல்விலாசத்துக்கிருந்தது. அதை வெகு அவசரமாக இன்ஸ்பெக்டர் உடைத்துப் பார்த்து, முகம் சுண்டிப்போனார். சற்று நேரம் அந்தக் கடிதத்தையே பார்த்துக் கொண்டிருந்து, பிறகு ஆறுமுகத்தைப் பார்த்து, “எது எப்படியானாலும் மிஸ்டர் ஆறுமுகம், நீர் இந்த மலைக் கள்ளனை எப்படியாவது கண்டுபிடிக்க ஏற்பாடு செய்ய வேண்டும். ஐ. ஜி. புதிய துரை. இதைப் பாரும்'' என்று தன் கையிலிருந்த கடிதத்தைக் கொடுத்தார். ஆறுமுகம் அதைப் பார்த்தார்.

அதில் :....

ஐ. ஜி. ஆபீஸ், சென்னை,
7—9—1909.

**விஜயபுரி வட்டம் போலீஸ் இன்ஸ்பெக்டர்**
**ஸ்ரீ சுந்தரம் அவர்களுக்கு : ரகசியம்**
**அவசரமாகக் கவனிக்க வேண்டியது.**

ஐயா,

உம்முடைய விஜயபுரி வட்டத்தில் சென்ற நான்கு வருஷங்களுக்குள் 7 கொலைகளும் 9 கொள்ளைகளும் நடந்திருக்கின்றன. இதுவரையிலும் ஒன்றுகூடக் கண்டுபிடித்து விசாரணைக்குக் கொண்டுவந்ததாகத் தெரியவில்லை. உம்மை இதற்கென்றே அந்த வட்டத்துக்குக் குறிப்பாக நியமித்து, இரண்டு வருஷங்களுக்கு மேலாகியும் இன்னும் குற்றவாளிகளைக் கண்டுபிடிக்காமல் இருப்பது மிகவும் விசனிக்கத்தக்கது. நீரும் உம் சிப்பந்திகளும் செய்திருக்கும் வேலை மிகவும் அதிருப்தியை உண்டாக்குகிறது,

ஆகையினால், மேலே சொன்ன குற்றங்களில் சிலவற்றையாவது இன்னும் ஆறு மாதத்துக்குள் கண்டுபிடிக்காவிட்டால் உம்மை விஷேச ஜாப்தாவிலிருந்து விலக்கிவிடுவதுடன், சாமர்த்தியக் குறைவையும் குறிக்கப்படும்.

இப்படிக்கு,
**ராபர்ட் ஜான்,**
ஐ. ஜி.

என்று இருந்தது. இதைப் பார்த்தபின் சப் இன்ஸ்பெக்டர் மிக்க வருத்தக் குறியோடு, “ஆம், நாம் ரொம்பவும் பாடுபட வேண்டியிருக்கிறது. இல்லாவிட்டால் தங்களுக்கும் எனக்கும் மிகவும் குறைவுதான். இதில் சொல்லப்பட்டிருக்கிற 7 கொலைகளையும் 9 கொள்ளைகளையும் நான் இரவு பகலாக விசாரித்து வருகிறேன். நமக்குக் கிடைத்திருக்கிற துப்புகளிலிருந்து இந்த 9 கொள்ளைகளில் 5-ம், 7 கொலைகளில் 4-ம் ஒரே கூட்டத்தாரால் செய்யப்பட்டிருக்கின்றன என்று எனக்கு நிச்சயமாகப் படுகிறது. மற்ற நாலு கொள்ளைகளும் மூன்று கொலைகளும் முன் சொன்ன கூட்டத்தாரின் விரோதிகளால் நடந்திருக்க வேண்டுமென்றும் தெரிகிறது. இந்த மூன்று கொலைகளிலும் பிரேதங்கள்கூடக் கிடைவில்லை. முன்னால் சொல்லப்பட்ட ஐந்து கொள்ளைகளிலும் பெரிய மனிதர்கள் இரண்டொருவருடைய சம்பந்தம் இருந்திருக்கலாம் என்று எண்ணுவதற்கும் இடமிருக்கிறது. முக்கியமாய்க் காத்தவராயன்மேல்தான் எனக்கு அதிக சந்தேகமும்.......'' என்றார்.

பின்னால் நின்றுகொண்டிருந்த 'ஏட்' கறுப்பையா, "காத்தவராயன் இந்த ஜில்லாவிலேயே இல்லிங்களே! அவன் வேறு எங்கேயோ ........" என்று ஆரம்பித்தவுடன் சப்இன்ஸ்பெக்டர் ஆறுமுகம், "கறுப்பையா! உன்னை யார் கேட்டது? நீ வெளியில் போயிரு" என்று வெகு கோபத்தோடு திரும்பிப் பார்த்தார்.

கறுப்பையா பெரிய இன்ஸ்பெக்டருக்கு கொஞ்சம் வேண்டியவன். அந்தத் தைரியத்தில் சற்றுத் தயங்கினான்.

"போ வெளியில், நாங்கள் தனித்துப் பேச வேண்டும்" என்று மறுபடியும் ஆறுமுகம் அதட்டியதும் அவன் போய் விட்டான்.

"ஆகையால், நாம் மலைக்கள்ளனைக் கண்டுபிடிப்பதோடு அவனுக்கும் இந்தக் காத்தவராயன் முதலானவர்களுக்கும் ஒத்தாசையாக இருக்கிற சில பெரிய மனிதர்களையும்........" என்று சப் இன்ஸ்பெக்டர் சொல்லிக்கொண்டிருக்கும் போது, யாரோ உள்ளே வருவதைக் கண்டு ஆறுமுகம் பேச்சை நிறுத்தினார்.

வெகு வாடிய முகத்தோடு உள்ளே வந்தார் சொக்கேசர். அவர் இரண்டு நாளைக்குள் எலும்புக்கூடாக உருகிவிட்டார். இரண்டு உத்தியோகஸ்தர்களும் அவரை மரியாதையுடன் வரவேற்று, ஒரு நாற்காலியில் உட்காரச் சொல்லி உபசரித்தார்கள். "சொக்கேசரே, தாங்கள் வருத்தப்பட வேண்டாம். நானும் மிஸ்டர் ஆறுமுகமும் எப்படியாவது உங்களுடைய பெண்ணைக் கண்டுபிடித்துத் தருகிறோம். அதைப்பற்றித்தான் நாங்கள் இருவரும் இப்போது ஆலோசித்துக்கொண்டிருக்கிறோம்........அதிருக்கட்டும். முதலில் உங்கள் தமக்கையின் நிலைமை எப்படியிருக்கிறது? டாக்டர் என்ன சொன்னார்? ஆஸ்பத்திரியில் உங்களுடைய வேலையாள்கள்—அவர்களை நான் போய்ப் பார்க்க வேண்டுமென்றிருந்தேன்; ஒழியவில்லை—அவர்கள் எப்படியிருக்கிறார்கள்? அதைச் சொல்லுங்கள்........ அதைரியப்பட வேண்டாம்....... சந்தோஷமாக இருங்கள். நானாச்சு" என்று இன்ஸ்பெக்டர் சுந்தரம் சொன்னார்.



தலைகுனிந்து உட்கார்ந்திருந்த சொக்கேசர் தலையை மெதுவாக நிமிர்த்தினார். கண்களில் நீர் கலங்கி நின்றது. உதடுகள் சொல்லெழாமல் துடித்தன. வாய்விட்டு அழுவார் போல் தோன்றிற்று.

இன்ஸ்பெக்டர், "என்ன சொக்கேசர்! தாங்கள் இப்படிக் கலங்குவது அழகல்ல. என்? உம் தமக்கையின் நிலைமை ஏதாவது....டாக்டர் என்ன சொன்னார்?" என்று கேட்டார்.

"இல்லை. என் தமக்கையைப்பற்றிப் பயமில்லையென்று டாக்டர் சொல்லுகிறார். என்னுடைய வேலையாள்களைப் பற்றியுங்கூடக் கவலைக்கிடமில்லை. சடையனைத் தவிர, மற்றவர்களெல்லாம் எழுந்து நடமாடக்கூடிய நிலைமையில் இருக்கிறார்கள். சடையனுக்கு மட்டும் இன்னும் சரியான நினைவு வரவில்லை. ஒருகால் இரணசன்னி கண்டுவிடுமோ என்று வைத்தியர் சந்தேகப்படுகிறார். என் கவலை இவைகளைப்பற்றி அல்ல...." என்று சொக்கேசர் சொல்லி முடிக்குமுன், "ஆமாம், ஐயோ பாவம்! ஒரே குழந்தை. மிகவும் அருமையான பெண். உங்கள் கவலையெல்லாம் காணாமல் போன குழந்தை விஷயத்தில்தான் இருக்கும் எனக்குத் தெரியும். இருந்தாலும் பயப்பட வேண்டாம். நான் கண்டுபிடிக்கிறேன்" என்று இன்ஸ்பெக்டர் உற்சாகப்படுத்தினார்.

திடீரென்று சொக்கேசர் அடக்க முடியாமல் தேம்பித் தேம்பி அழ ஆரம்பித்தார். "ஐயோ! தெய்வமே! என்னுடைய மானம் இப்படியும் போகவேண்டுமா? நான் வாழ்ந்த வாழ்வெல்லாம்...."

"என்ன? சொக்கேசரே, இப்படித்தானா பெண்களைப் போல....என்ன வந்துவிட்டது? ஏன் தாங்கள் அழவேண்டும்?"

"ஐயோ! உயிர் போனாலும் மானம் போகக்கூடாதையா! கொலையும் களவும் கொள்ளையுமே தொழிலாக உடைய ஒரு கள்ளப்பயலா எனக்கு....ஐயோ, ஐயா, நினைத்தாலுங்கூட என் ஆவி துடிக்கிறதே! ஆ! அருமைக் கண்மணீ! பூங்கோதை! அம்மா! அம்மா! என் கண்ணே! என் உயிரே! உனக்கு இந்த....

இந்த....ஐயோ அப்பா! அப்பா. பொறுக்க முடியவில்லையே....'' என்று சொக்கேசர் தம்மையும் தாம் இருக்கும் இடத்தையும் மறந்து புலம்ப ஆரம்பித்தார். இன்னதென்று விளங்காமல் ஸ்ரீ சுந்தரமும் ஆறுமுகமும் ஒருவரையொருவர் பார்த்துக்கொண்டார்கள். சப் இன்ஸ்பெக்டர் எழுந்து சொக்கேசருடைய நாற்காலியின் அருகில் வந்து, "ஏன்? என்ன காரணம்? ஏதாவது புதிய விசேஷமுண்டா? சொல்லுங்கள்'' என்றார்.

"இதைவிட என் அருமைக் குழந்தை இறந்து போனாலும் சந்தோஷப்படுவேன். ஐயோ! அவள் இந்நேரம் நிச்சயமாகச் செத்துப் போயிருந்தாலும் இருப்பாள். ஒருகாலும் அவள் அதற்கு உடன்பட மாட்டாள். ஆ! என்ன செய்தானோ! எப்படி என் குழந்தை அவனை எதிர்த்து நிற்பாளோ! என்ன ஆபத்தாக முடிந்ததோ! ஆ! கடவுளே. உன் கருணை இது தானா?'' என்று சொக்கேசர் பிரலாபித்தார்.

"என்ன சொக்கேசர்வாள், இது நன்றாயில்லை. என்ன? ஏதாவது சமாசாரம் இருந்தால் சொல்லுங்கள். உங்களைப் போன்ற பெரிய மனிதர்கள் இவ்வளவு கோழைத்தனம் காட்டுவது அழகல்ல'' என்றார் ஆறுமுகம்.

"என்ன சமாச்சாரம், ஐபா! என்னத்தைச் சொல்லுவேன், நான்? ஐயா! என்னுடைய மானமே போய்விட்டதே! இனி நான் உயிரோடு இருந்துதான் என்ன பலன்? இதோ இதைப் பாருங்கள்'' என்று, இதுவரையிலும் தமது உள்ளங்கையில் மடக்கி வைத்துக்கொண்டிருந்த ஒரு காகிதத்தை நீட்டினார். அதை ஆறுமுகம் வாங்கிப் பிரித்தார். வெகுநேரமாக உள்ளங்கையிலேயே இருந்ததால், வியர்வை ஜலத்தில் ஊறிப் போய்ப் பிரிப்பதற்குச் சற்றுச் சிரமமாயிருந்தது. கிழிந்து போகாதபடி வெகு நிதானமாக, அதை விரித்துப் படித்துப் பார்த்துவிட்டு, ஆறுமுகம், அதை இன்ஸ்பெக்டரிடம் கொடுத்தார். சுந்தரமும் அதை வாசித்தார். வாசித்தபின் அதை அப்படியே மேஜையின் மீது உலர வைத்துவிட்டு, "இது ஏது? இதைக் கொண்டு வந்தவன் யார்? அவன் எங்கே?'' என்று வெகு பரபரப்போடு கேட்டார்.



"அவன் யாரோ? நான் முன்னும் பார்த்ததில்லை, பின்னும் பார்த்ததில்லை. நான் ஆஸ்பத்திரிக்குப் போய்ச் சடையனைப் பார்த்துவிட்டு வரும்போது, எதிரில் யாரோ ஒருவன் என் முன்னால் தோன்றி, 'ஐயா! அம்மாளுக்கு உடம்பு தேவிலிங்களா,' என்றான். நான் 'எந்த அம்மாளுக்கு?' என்றேன். அவன் 'நம்ம அக்காளுக்குங்க....பெரியம்மாளுக்கு....என்னமோ வெசங் கொடுத்துட்டாங்கோண்ணு அதுக்குப் பச்செலை அரைச்சி ஊத்திச்சிங்களே, அவுங்க பொளைச்சிக்கிட்டாங்களா?, என்றான். 'அவன் யாரோ ஒரு கிராமவாசி; நம்முடைய துன்பங்களில் அனுதாபங் காட்டுகிறவனாக்கும்' என்று எண்ணி நான், 'பச்சிலை ஊற்றின பிற்பாடுதான் அக்காள் காமாக்ஷியம்மாள்—அவர்களைத்தானே கேட்கிறாய்—பிழைத்துக்கொண்டார்கள். ஆனால் இன்னும் சரியான நினைவு வரவில்லை; இருந்தாலும் அக்காளுக்கு இனிமேல் அபாயமில்லை என்று வைத்தியர் சொல்லுகிறார்' என்றேன். அவன் 'ரம்பச் சந்தோஷமுங்க. புண்ணியவான் ஒங்களுக்கு இந்த அநியாயஞ் செய்தவங்க நாசமாத்தான் போவாங்க. இந்தாங்க—இதை ஒங்ககிட்ட கொடுக்க சொன்னாங்க' என்று—ஐயோ! இன்ஸ்பெக்டர்வாள்! என் மனந் துடிக்கிறதே—இந்தக் கடிதத்தைக் கொடுத்தான். கடிதத்தை வாங்கும்போதுதான் நான், 'நீ யாரப்பா? புதிதாக இருக்கிறாயே? எங்களுடைய கஷ்டத்தில் இவ்வளவு இரக்கம் காட்டுகிறாய். இது என்ன கடிதம்? யார் கொடுத்தது?' என்றேன். அதற்கு அவன் 'நான் கடைக்குப் போயிட்டு ஒங்க ஊட்டுக்கு வாரனுங்கோ. வந்து வெவரம் சொல்லுறேனுங்க' என்று சொல்லிக்கொண்டே போய்விட்டான்'' என்றார்.

"அவனுடைய அடையாளந் தெரியுமா? மறுபடியும் பார்த்தால் கண்டுபிடிப்பீர்களா?''

"நன்றாகத் தெரியும். கறுத்துத் தடித்துக் குட்டையான மனிதன். பெருத்த மீசைகளும், சிறுத்த கண்களும், பருத்த உதடுகளும் உடையவன். சுலபமாகக் கண்டுபிடிக்கக்கூடியவன். வீட்டுக்கு வருவதாகப் போயிருக்கிறான்....ஐயோ! அவனைக்

கண்டு பிடித்து என்ன பலனைபா ? இந்நேரம் என் குழந்தை என்ன துன்பத்துக்கு ஆளானாளோ ! தெய்வமே ! தெய்வமே!" என்று சொக்கேசர் மறுபடியும் கண்ணீர் வடித்தார்.

இன்ஸ்பெக்டர் அவரைச் சமாதானப்படுத்திவிட்டுக் கடிதத்தை மறுபடியும் படித்துப் பார்த்தார். அதில்,

"விஜயபுரி, மகா-ா-ா-ஸ்ரீ சொக்கேசர் அவர்கள் சமூகத்துக்கு, வந்தனம். தங்களுடைய குமாரத்தி சௌ. பூங்கோதையம்மாள் என்னுடைய பாதுகாப்பில் மிகவும் சௌக்கியமாக இருக்கிறாள். ஒரு குறைவுமில்லாதபடி நான் பார்த்துக்கொள்ளுகிறேன். தாங்கள் சிறிதும் கவலைப்பட வேண்டியதில்லை. மங்களமாக வந்து சேருவாள்.

இப்படிக்கு,
தங்கள் மாப்பிள்ளையாக விரும்பும்
'மலைக்கள்ளன்'

என்று எழுதப்பட்டிருந்தது.

"ஐயா! பார்த்தீர்களா! பார்த்தீர்களா! எத்தனை கொலைகளைச் செய்தவன் ? எவ்வளவு கொள்ளைகள் அடித்தவன்.... ஐயோ தெய்வமே ! அந்தக் கள்ளனா ! இவனா ! ....ஐயோ ! இவனா ! இவனா ! இவனா எனக்கு மாப்பிள்ளை !" என்று தலையில் அடித்துக்கொண்டார் சொக்கேசர்.

"தாங்கள் வருத்தப்பட வேண்டாம். இன்னும் இரண்டு நாளைக்குள் இந்தப் பயலைப் பிடித்து விலங்கிடுகிறேன்" என்று சுந்தரம் வீறு கூறினார்.



## அத்தியாயம் 6

'மலைக்கள்ளன்' என்ற பெயரைக் கேட்டவுடனே உண்டான பயத்தினால் மயங்கிவிட்ட பூங்கோதையைச் 'சின்னி'யம்மாள் பிடித்துத் தன் மடியில் சாய்த்துக்கொண்டு தேற்ற முயன்றாள். 'மலைக்கள்ளன்' என்ற பெயர் விஜயபுரியிலும், அதைச் சுற்றி வெகுதூரத்திலும் ஒவ்வொருவருக்கும் நன்றாகத் தெரிந்த பெயர். அநேக கொலைகளும் கொள்ளைகளும் 'மலைக்கள்ள'னால் நடந்திருக்கின்றன என்று எல்லோருக்கும் நம்பிக்கை. பட்டி பட்டியாக ஆடுமாடுகளும், பெட்டி பெட்டியாகப் பெரிய பணக்காரர் வீட்டு நகை நாணயங்களும், ஆனை வாய்க் கரும்பு போலப் போனவிதம் தெரியாதபடி கொண்டு போனவன் 'மலைக்கள்ளன்' என்று யாரும் சொல்லிக் கொள்வதைப் பூங்கோதை பல தடவைகளில் கேட்டிருந்தாள். சென்ற இரண்டு மூன்று வருஷத்துக்குள் 'மலைக்கள்ளன்' ஏழு பேரைக் கொன்றவன் என்றும், அந்த ஏழு பேருக்குள் மூன்று பேரைத் தன்னுடைய மலைக்குகைக்குக் கூட்டிக்கொண்டு போய், அவர்களை மலையுச்சியிலிருந்து உருட்டிவிட்டுக் கொன்றுவிட்டான் என்றும், அவர்களுடைய எலும்புகூடக் கிடைக்கவில்லை என்றும் ஊரார் பேசிக்கொண்டது பூங்கோதைக்குத் தெரியும். பார்ப்பதற்கு இவ்வளவு இளமையாகவும் இனிமையாகவும் காணப்படும் இவனுடைய சரித்திரமும், மாறு வேஷத்தோடு வெகு நல்லவனைப் போலவும், தனக்கு ஆபத்தில் உதவ வந்தவனாகவும் பேசிக்கொண்டே, யாருக்கும் எட்டாத இந்த இடத்துக்குத் தன்னை ஏமாற்றி இட்டுக்கொண்டு வந்ததையும் எண்ணி, அடக்க முடியாத துக்கத்தால் பூங்கோதை தன் இயற்கையான திடசித்தமும் குலைந்து, மயக்கமுற்று, அந்தச் சின்னியின் மடியில் தலை கவிழ்ந்து கிடந்தாள்.

மலைக்கள்ளன் 'சின்னி'யிடத்தில் பூங்கோதைக்கு வேண்டிய சமாதானம் செய்யச் சொல்லி "எப்படியாவது சிறிது ஆகாரம் சாப்பிடும்படி செய்தால் களை தீர்ந்துவிடும். நான் குகைக்குப் போய்விட்டு, இதோ வந்துவிடுகிறேன்" என்று உள்ளே போய்ப் பழையபடி தன்னுடைய கவசம், கச்சு, ஆயுதங்கள் இவைகளை அணிந்துகொண்டு—ஆனால், முகத்தை மட்டும் தாடி மீசைகளால் மாற்றிக்கொள்ளாமல் அந்த வீட்டின் கொல்லைப்புறத்தில் வெகு பலமுள்ளதாகக் கருங்கற்களால் கட்டப்பட்டிருந்த நெல் களஞ்சியம் போன்ற ஒரு சிறு அறையின் இரும்புக் கதவைத் தன் இடுப்பிலிருந்த கச்சையிற் கட்டப்பட்டிருந்த சங்கிலியில் இருந்த சாவியினால் திறந்தான். உள்ளே போய்த் தாழிட்டுக்கொண்டு ஒரு பூட்டும் பூட்டிவிட்டு, இருட்டில் சுவரைத் தொட்டுக்கொண்டே நடந்து, அந்த அறையின் எதிர்க் கோடியிலிருந்த ஒரு சிறு வாசற்படியண்டை நின்று, அங்கே நெற்றிக்கு நேராக ஒரு மாடத்தில் வைத்திருந்த விளக்கை, அதன் பக்கத்திலேயே வைக்கப்பட்டிருந்த தீப்பெட்டியினால் ஏற்றினான். விளக்கைப் பிடித்துக்கொண்டே அந்த வாசற்படியில் இறங்கினான். சுமார் நூறு படிகள் இறங்கின பின், நேராக நடந்து போய் அங்கிருந்த இன்னொரு கதவைச் சாவி கொண்டு திறந்தான். அங்கே ஆகாயத்தின் வெளிச்சமிருந்தது. அது செங்குத்தாய் வெகு உயரமான இரண்டு பாறைகளுக்கு இடையில் இருந்த ஒரு சிறு 'காலி' யிடம். சூரிய வெளிச்சம் நேராக அவ்விடத்தில் படும்.

அந்த இடை நிலத்தைக் கடந்து, எதிரே இருந்த பாறையின் மத்தியில் உள்ள ஒரு குகையில் நுழைந்தான். அதுவும் இருண்டிருந்தது. என்றாலும், இடையிடையே சிறு சிறு சாளரங்கள் கல்லிலேயே வெட்டப்பட்டிருந்ததனால், அங்கங்கே வெளிச்சம் இருந்தது. சுமார் நூறு இருநூறு கஜதூரம் அப்படி நடந்த பின் ஒரு பெரிய சாளரம் இருந்தது. அதற்கு நேராக ஒரு கதவு காணப்பட்டது. அந்தக் கதவண்டை நின்று மூன்று முறை தட்டினான். உள்ளேயிருந்து, "வாலி எங்கே?" என்று ஒரு சத்தம் கேட்டது. மலைக்கள்ளன் "சுக்ரீவன் பெரியவன்" என்று பதிலளித்தான். கதவு திறக்கப்பட்டது. கள்ளர் தலைவன் உள்ளே சென்றான். கதவு மூடப்பட்டது. அது ஒரு விசாலமான கூடம். ஏக காலத்தில் நூறு பேர் உண்ணவும் உறங்கவும் போதிய இடம் இருந்தது. பெரிய சாளரங்கள் ஆறு இருந்தன. வெளிச்சமும் காற்றோட்டமும் வேண மட்டும் இருந்தன. அந்தக் கூடத்தில் அலங்காரமான பல பொருள்களும் தட்டுமுட்டுகளும் நிறைந்திருந்தன. சுவரில், தாடியும் மீசையும் பண்ணைப் பூவைப் போல நரைத்த ஒரு கிழவனுடைய படம் ஒன்று மாட்டப்பட்டிருந்தது. பல அலமாரிகளும், இரண்டு பெரிய மேஜைகளும், அநேக நாற்காலிகளும், விசுப் பலகைகளும் இருந்தன.



கள்ளர் தலைவன் வருவதற்கு முன்னாலேயே அங்கே ஷண்முகம், செவந்தான், சாமியப்பன் முதலான சுமார் இருபது கள்ளர்கள் கூடியிருந்தார்கள்.

"சப்பாணி! எங்கே சப்பாணி?" என்றான் தலைவன்.

"சப்பாணி ஐயா இன்னும் வல்லிங்கோ" என்றான் ஒருவன்.

"ஏன்? ஏதாவது விசேஷமுண்டா?"

"ஆமாங்கோ. நாங்க அந்த ரெண்டு பயல்களையும் ஆல மரத்தில் கட்டிவிட்டுக் கருவேலங்குட்டையில் வந்துக்கிட்டிருக்கிறப்ப, காத்தவராயன் கூட்டத்தார் தொரத்திக்கிட்டு வந்தாங்க. நாங்க எல்லாரும் அவுங்க கைக்குச் சிக்காமல் தப்பிச்சிக்கிட்டமுங்கோ. நம்ம நாட்றாயன் பின்னாலே வந்தவன் சிக்கிக்கிட்டானுங்க. கொஞ்சம் தூரம் வந்த பிறகுதான் நாட்றாயனைக் காணமுண்ணு தெருஞ்சுதுங்கோ. ஒடனே சப்பாணி ஐயா, 'அடடே! நகையெல்லாம் அவன் கிட்ட அல்லவா இருக்குது! நீங்க எல்லாரும் குகைக்குப் போங்க. நான் நாட்றாயனைப் பார்த்துவிட்டு வருகிறேன்' இண்ணு சொல்லி விட்டுப் போனாங்க. இன்னமும் காணமுங்கோ எஜமானே."

"அடடா! இவ்வளவு பாடுபட்டுச் சப்பாணிக்கு ஆபத்து வரும்படியாக விட்டுவிட்டீர்களே! உங்களில் சில பேராவது

அவன்கூடத் துணையாகப் போகாமல் உங்கள் உயிர் தப்பினால் போதும் என்று வந்துவிட்டீர்களா? நல்ல வீரர்கள்தாம்! பேஷ்! நன்றாய் இருக்கிறது....'' என்று சொல்லிக்கொண்டிருக்கும்போது, யாரோ கதவைத் தட்டுகிற சத்தங்கேட்டது. முன்போலவே "வாலி எங்கே?'' என்ற கேள்வி உள்ளிருந்து கேட்கப்பட்டது. அதற்கு வெளியிலிருந்து பதில் வரவில்லை. எல்லோரும் ஒருவரையொருவர் பார்த்துக்கொண்டு ஆச்சரியத்தோடு சற்றுப் பயந்தவர்கள் போல விழித்தார்கள். மறுபடியும் மெதுவாகக் கதவு தட்டப்பட்டது. மறுபடியும் கேள்வி கேட்கப்பட்டது. பதில் இல்லை. சரியான பதில் வராததால் கதவைத் தட்டினவர்கள் இந்தக் கூட்டத்தைச் சேர்ந்தவர்கள் அல்ல என்று தீர்மானித்து, கள்ளர் தலைவன் எல்லாரையும் ஆயுதங்களோடு தயாராக இருக்கச் சைகை செய்துவிட்டுத் தான் கதவண்டை சென்று, அந்தக் கதவிலிருந்த ஒரு சிறு துவாரத்தைத் திறந்து, அதில் நேராய்ப் பார்க்காமல் சாய்வாக ஓரத்தில் கண்ணை வைத்துக் கவனித்தான். சற்று நேரம் பார்த்துவிட்டு, மற்றப் பக்கத்திலும் அதே மாதிரி பார்த்தான். அதன் பின் நேராகப் பார்த்தான். எதிரில் இருந்த சாளரத்தின் வெளிச்சம் இடையே தடுப்பாரின்றிக் கண்ணுக்குப் பட்டது. உடனே நிமிர்ந்துகொண்டு, மேலே கண்ணை வைத்துக் கீழே பார்த்தான். கதவின் வாசலண்டை ஒரு தனி ஆள் படுத்துக் கிடப்பது போலத் தெரிந்தது. சந்தேகம் சிறிது இருந்தாலும், யாரோ சக்தியற்றுக் கீழே கிடப்பதைக் கண்ட கள்ளர் தலைவன், எதுவானாலும் இன்னதென்று அறிய வேணுமென்று, தானே கதவைத் திறந்தான். தேகமெல்லாம் இரத்தக் கறையுடன், அடையாளந் தெரியாதபடி, ஒருவன் வாசலண்டை கிடந்தான். உடனே தலைவன் இரண்டு மூன்று கள்ளர்களைக் கூப்பிட்டு, அந்த மனிதனை உள்ளே தூக்கிப் போக உத்தரவிட்டான். அவர்களும் அவனை ஒரு ஜன்னலுக்கருகில் கொண்டுபோய் ஒரு பலகையின்மீது கிடத்தினார்கள். வெளிச்சத்தில் அடையாளந் தெரிந்தது. அவன் மலைக்கள்ளனுக்கு வலது புஜம் போன்ற **சப்பாணியே!**



தலைவன் மிகுந்த பரபரப்புற்று, தண்ணீர் கொண்டு வரச் சொல்லி, ஒரு மெல்லிய துணியை அதில் நனைத்து, சப்பாணியின் கண்கள், முகம் முதலானவற்றை அந்தத் துணியினால் துடைத்துவிட்டு, இரத்தம் காய்ந்திருந்த இடங்களையெல்லாம் சுத்தப்படுத்தினான். தண்ணீர் பட்ட உடனே சற்றுக் களை தெளிந்து, சப்பாணி கண்ணைத் திறந்தான். குடிக்கத் தண்ணீர் வேண்டும் என்று கை ஜாடை செய்தான். உடனே தண்ணீர் கொடுத்தார்கள். குடித்த உடன் சப்பாணி புன்சிரிப்போடு, "ஒன்றும் இல்லை, தாகந்தான் அதிகமாக இருந்து நா வறண்டு பேச முடியவில்லை'' என்று சொல்லி, தன் எஜமானைக்கண்டு எழுந்திருக்க முயன்றான். தலைவன் அவன் எழுந்திருப்பதைத் தடுத்துக் காயங்களைக் கவனித்தான். தலையில் ஒரு தடியடிக் காயமும், இடத்தோளில் ஆழமான ஒரு வெட்டுக் காயமும் இருந்தன. உடனே ஏதேதோ மருந்துகளும் பச்சிலைகளும் கொண்டுவரப்பட்டுக் கள்ளர் தலைவன் தானே அவற்றைக் காயங்களுக்கு வைத்து வெகு சாமர்த்தியமாகக் கட்டினான். தான் உத்தரவிடுகிற வரையிலும் அவன் எழுந்திருக்கக்கூடாதென்று அவனுக்கு எச்சரிக்கை செய்துவிட்டு, "என்ன சப்பாணி, இது யாருடைய வேலை?'' என்று கேட்டுக்கொண்டே, சப்பாணியின் முகத்துக்கு நேராக ஒரு நாற்காலியைப் போடச் சொல்லி, அதில் மலைக்கள்ளன் உட்கார்ந்தான்.

"அந்த இரண்டு பேரையும் ஆலமரத்தில் தலைகீழாகக் கட்டிவிட்டு, மற்றவர்களை மன்னித்து, 'இனி இந்த வேலைக்கு வருவதில்லை' என்று சத்தியம் வாங்கிக்கொண்டு, விட்டுவிட்டேன். பின்னால் வந்த நாட்றாயனைப் பிடித்துக்கொண்டார்கள் என்று தெரிந்து அவனை மீட்டு, அவனிடம் இருந்த நகை மூட்டையைக் காக்க வேண்டும் என்று எண்ணி, இவர்களையெல்லாம் இங்கே வரச்சொல்லிவிட்டு, நான் மட்டும் பதுங்கிப் பதுங்கிப் போனேன். சற்று தூரத்தில் இரண்டு மூன்று பேர் மல்லிட்டுக்கொண்டிருந்தது தெரிந்தது. ஓடிப்போய்ப் பார்த்தேன். நாட்றாயனை இரண்டு பேர்கள் பிடித்து அழுத்திக்

கொண்டிருந்தார்கள். அவன் அவர்களுடன் வெகு சாமர்த்திய மாகப் போராடிக்கொண்டிருந்தான். நாட்றாயனைப் பிடித்துக் கொண்டிருந்தவர்கள் நான் தங்கள் கிட்ட நெருங்குகிற வரை யிலும் என்னைத் தங்களுடைய மனிதன் என்றே எண்ணிக் கொண்டிருந்திருக்கிறார்கள். ஆகையால் நான் சமீபித்ததும், என்னை ஏதோ சொல்லிக் கூப்பிட்டு, நாட்றாயனுடைய கால்களை அழுத்திப் பிடிக்கும்படி என்னிடமே சொன்னார்கள். கீழே கிடந்தபடியே கால்களால் அவர்களை வெகு பலமாக உதைத்துக்கொண்டிருப்பவன்தான் நாட்றாயனென்று அறிந்து கொண்டேன்; கண்மூடித் திறப்பதற்குள், அவர்கள் இரண்டு பேருக்கும் உச்சந்தலையில் ஆளுக்கு ஓர் அடி, மூளை கலங்கும்படி கொடுத்தேன். அவர்கள் பிடித்திருந்த பிடி தளரவே நாட்றாயன் எழுந்து ஓடிவிட்டான். இதற்குள் எதிரில் வந்த வேறொருவன் என் தலையில் அடிக்கக் கை ஓங்குவதைக் கண்டு, எனது இடக்கையால் அவனைத் தடுக்க முயன்றேன். என்றாலும், எனக்குத் தலையில் நல்ல அடி விழுந்துவிட்டது. ஆனால், புத்தி கலங்கவில்லை. நான் என்னுடைய கழியை ஓங்கும்போது, என்னுடைய இடத்தோளில் கத்தி வெட்டு விழுந்தது. நான் ஓங்கிய தடியும் அவனுடைய காதோடு சேர்த்துப் பொறியில் படவே, அவன் விழுந்துவிட்டான். பிறகு, நான் தாமதிக்கவில்லை. கூடுமான வரையில் காயங்களை விரலால் மூடி அமுக்கிப் பிடித்துக்கொண்டே வந்தேன். இந்த வாசலுக்கு வருகிற வரையிலும் எப்படியோ சமாளித்துவிட் டேன். இருட்டாயிருந்ததால் வழியில் மற்றக் காவலிடங்களிலும் அவர்களுக்குச் சரியான பதில் சொல்லிக்கொண்டே சாதாரண மாகவே வந்துவிட்டேன். இங்கே வந்து கதவண்டை வந்து நிற்கும்போதுதான் என்னவோ ஒரே இருட்டாகக் கண்கள் மங்கித் தாகமும் அதிகப்பட்டு, நா வறண்டு பேச முடியாமல் போய்விட்டது" என்றான்.

"நல்ல வேளை. உன்னுடைய காயங்கள் பலமான காயங் களே; என்றாலும், அபாயமானவை அல்ல. நம்முடைய பச்சிலை மருந்துகள் பார்த்துக்கொள்ளும்; பயமில்லை. ஆமாம், நாட்றாயன் என்னவானான்? நகை மூட்டை என்னவாச்சு?"



"நாட்றாயனை அப்புறம் பார்க்கவில்லை. அங்கே காத்தவ ராயனுடைய ஆள்கள் இன்னும் பல பேர் அங்குமிங்கும் தேடிக் கொண்டிருந்தார்கள். நாட்றாயனை மறுபடியும் அவர்கள் பிடித்துக்கொண்டிருப்பார்கள் என்றே எண்ணுகின்றேன். அவர்கள் எங்களைத் தேடிக்கொண்டிருந்த பக்கமே முட்டாள் தனமாக, அவன் ஓடினான். நகை மூட்டையும் அவர்கள் கையில் சிக்கியிருக்கும் என்றே எண்ண வேண்டியிருக்கிறது" என்றான் சப்பாணி.

"நகைகளைப்பற்றிக் கவலையில்லை. நீ உயிரோடு வந்ததே போதும்."

மறுபடியும் கதவை யாரோ தட்டினார்கள். வழக்கம்போல் கேள்வி கேட்கப்பட்டது. சரியான பதிலும் வந்தது. கதவு திறக்கப்பட்டது. சிரித்துக்கொண்டே தோளில் ஒரு மூட்டை யுடன் நாட்றாயன் உள்ளே வந்தான். எல்லோருக்கும் அளவு கடந்த ஆச்சரியமும் ஆனந்தமும் உண்டாயின. "பேஷ் நாட்றாயா! நம்முடைய கூட்டத்தின் மானத்தைக் காத்து விட்டாய் நீ" என்று நாட்றாயனைத் தலைவன் தட்டிக் கொடுத்தான். சப்பாணியும் தன்னை மறந்து, விசுக்கென்று எழுந்து, உட்கார்ந்து நாட்றாயனைப் புகழ்ந்தான்.

"செத்த பிணம் எழுந்து வந்தது போல, எப்படியடா, நாட்றயா, தப்பி வந்தாய்?" என்றான் சப்பாணி.

"சப்பாணி ஐயா, நீங்க சமயத்தில் வராட்டி நான் செத்துத்தான் போயிருப்பேன். ஆனாக்கா நீங்கதான் வந்து அவனுங்களை அடிச்சிங்கோண்ணு எனக்கு அப்ப புத்தியிலே படலிங்கோ. என்னை எமனுங்களாட்டம் அவங்க புடிச் சிருந்த புடி உங்க அடியினாலே உட்ட உடனே, ஒரே ஓட்டம் புடிச்சனுங்க. எனக்கு நெனப்பெல்லாம் நகை மூட்டே மேலே இருந்துதுங்க."

"அட பயலே! அதை எப்படியடா காப்பாத்தினே?" என்றான் சப்பாணி.

"நான் அந்த மூட்டெயைச் சரியா இறுக்கிக் கட்டித் தூக்கறதுக்குள்ளே, நீங்களெல்லாம் போயிட்டிங்களா? நான் அதைத் தூக்கிக்கிட்டுப் பின்னாலே வந்தேன். எனக்குப் பின்னால் நாலஞ்சு பேர் ஓடியாந்த ஓசை கேட்டது. ஓ! சிக்கிக்கிட்டோமுண்ணு தெரிஞ்சு, ஒடனே நகை மூட்டையைக் கத்தாளைச் சந்திலே போட்டுட்டு ஓட்டமெடுத்தேன். ஒரு கல்லுமேலே கால் பட்டு மக்கிளிச்சிக்கிச்சிங்கோ. நான் விழுந்ததைப் பார்த்து, வெகு வேகமாக வந்து புடிச்சிக்கிட்டாங்க. ரெண்டு பேர் என்னைக் கெட்டியாகப் புடிச்சிக்கிட்டாங்க. மத்தவங்க ஒங்களைத் தேடி, அந்தப் பக்கத்திலே போயிட்டாங்க. ரெண்டு பேர்தானேண்ணு, நானும் அவங்களோடு என்னாலே ஏண்ட மட்டும் போராடினேன். தலையை ஒருத்தனும் கையை ஒருத்தனும் அழுத்திக்கிட்டாங்க. நான் காலாலேயே நல்ல ஒதை—போதும் அவங்களுக்கு—குடுத்துக்கிட்டிருக்கிறப்ப நீங்க வந்து காப்பாத்தினிங்கோ. நீங்க அடிச்ச அடியிலே அவங்க உளுந்திட்டாங்களா, நான் நகை மூட்டெயை எடுக்கப் போனேன். அந்தப் பக்கத்திலேயிருந்த வேறே ரெண்டு பேர் என்னைத் தொரத்தினாங்க. நான் அவங்களுக்குச் சிக்காமல் ஓடி, ஒரு பொதரிலே பூந்துக்கிட்டனுங்க—பாருங்க, மேலெல்லாம் முள்ளு கிளிச்சிடிச்சிங்க. அவங்க பொதரைச் சுத்திக்கிட்டு இன்னும் மத்தவங்களைக் கூப்பிட்டாங்க. தப்பி ஓட வழியில்லாமே முழிச்சேனுங்க. எந்த சாமி புண்ணியமோ, பொதரோடு சேர்ந்தாப்பிலே ஒரு பெரிய புளிய மரம் இருந்துதுங்க. வேட்டித் துணியை யெல்லாம் அவுத்துப் போட்டுட்டு, மெள்ளச் சத்தமில்லாமலே தொத்துனேனுங்க மரத்து மேலே. வெள்ளைத் துணியில்லாததாலே மரத்தோடே மரமாய் நான் தொத்தினது, அவங்களுக்குத் தெரியலிங்கோ. அவங்க பொதரைச் சுத்திச் சுத்தி வந்துகிட்டு, நான் வெளியிலே போகாதபடி கண்கொட்டாமல் பார்த்துகிட்டே இருந்தாங்க. கொஞ்சங் கொஞ்சமாக மேலே ஏறி, ஒரு பனை ஒயரத்துக்கு மேல் உச்சங்கிளையிலே போய்க் குறுகுறுண்ணு ஒக்காந்துக்கிட்டனுங்க. அப்புறம் கீழே இருந்தவங்க என்ன ஆனாங்கோண்ணு எனக்குத் தெரியாதுங்க.



எப்படாப்பா விடியப்போவுதுண்ணு பார்த்துகிட்டே இருந்தேனுங்க. பலபலன்னு விடிஞ்ச பிறவு எறங்கினேன். துணி, பொதரிலேயே கிடந்தது. கட்டிக்கொண்டு போய்ப் பார்த்தேன். நகை மூட்டே போட்டது போட்டாப்பிலேயே கத்தாளைச் சந்திலே கெடந்தது. எடுத்துக்கிட்டேன், வந்தேனுங்கோ" என்று நாட்றாயன் தன் கதையை முடித்தான்.

"பலே நாட்றாயா! நல்ல வேலை செய்தாய். உன்னுடைய சாமர்த்தியத்தை மெச்சுகிறேன். சரி, அந்த நகை மூட்டையை அவிழ்த்து வை. அதில் நம்முடைய அழகி பூங்கோதையின் நகைகள் இருக்கின்றனவா, பார்ப்போம். அந்தச் சுந்தரிக்கு நகையே வேண்டியதில்லை. இருந்தாலும் அவள் வெற்றுடம்பா யிருப்பது என்னுடைய கண்களை உறுத்துகிறது" என்றான் கள்வர் தலைவன்.

"ஆமாங்கோ, ரொம்ப அழகுங்க. அந்தம்மா, அவ்வளவு அழகு நான் பார்த்ததே யில்லிங்கோ. அந்த அம்மாளுடைய நகைங்களா?" என்றான் சப்பாணி.

"இருட்டில் அந்த அம்மாளுடைய அழகை நீ எப்படிப் பார்த்தாய்?" என்று தலைவன் கேட்டான்.

"நான் அந்தம்மாளைப் பல தடவைகளில் அவர்களுடைய ஊரில் வீட்டிலேயே பார்த்திருக்கிறேனுங்க. அழகுன்னா அதுதான் அழகுங்கோ....அந்தம்மாளுக்குக் கலியாணமாகியிருக்குதுங்களா?" என்றான் சப்பாணி.

"என்ன சப்பாணி! அடிபட்ட வேதனையில் உளறுகிறாயா? அந்த அம்மாளுக்குக் கலியாணம் ஆகியிருந்தால் என்ன, ஆகாதிருந்தால் என்ன? அந்தக் கவலை நமக்கேன்?.... எதற்காக அப்படிக் கேட்டாய்?" என்று சற்று அதட்டுவது போல் பேசினான் தலைவன்.

"இல்லிங்கோ நான் சும்மா....என்னமோ பேச்சோடு பேச்சாகச் சும்மா....மறந்தாப்பலே கேட்டுட்டேனுங்கோ, மன்னிச்சுடுங்க, சாமி."

"கலியாணம் ஆகாமலிருந்தால் நீ கலியாணம் செய்து கொள்ளலாம் என்ற ஆசையா?"

"ஐயையோ! ஐயோ! சாமி, எனக்கா? எனக்கு அந்த ஆசையா?....எனக்கென்னத்துக்குங்கோ அந்தப் பாவம்? எனக்கு இருக்கிற பெண்டாட்டியும் அஞ்சு குழந்தைகளும் போதாதுங்களா? எனக்கா....எனக்கா? வயசு அம்பதாகப் போகுது....எனக்கென்னத்துக்கு சாமி அந்த ஆசை!"

"உனக்கல்லவா? சரி; பின் யாருக்கு, எனக்கா? அந்தப் பெண்ணை நான் கலியாணம் செய்துகொள்ளட்டுமா, சப்பாணி?" என்று மலைக்கள்ளன் சிரித்தான்.

சப்பாணியும் அங்கிருந்த கள்ளர்களுங்கூடச் சிரித்தார்கள். பதில் ஒன்றும் சொல்லாமல் சப்பாணி சிரித்த முகத்தோடு தலைவனைப் பார்த்துக்கொண்டேயிருந்தான்.

"என்ன, சப்பாணி! ஏன் பதில் இல்லை? அந்தப் பெண் கலியாணம் ஆகாதவளாக இருந்தால் நான் மணந்து கொள்ளட்டுமா?"

"ஆமாங்கோ. வெகு நாளாக எனக்கு ஒரு ஆசை மனதிலிருக்குதுங்கோ. நீங்க ஒரு நல்ல பொண்ணைக் கலியாணம் செய்துகொள்ள வேணுமின்னு—உங்களுடைய வீரத்துக்கும் அழகுக்கும் அறிவுக்கும் இந்த அம்மாள் சரியான சோடுங்க. மன்னிக்கணுமுங்க....முடியுமானா...."

"முடியுமானால்தானே? .... முடியுமானால் எனக்கும் ரொம்ப ஆசைதான். அப்படிப் பெண் கிடைப்பதற்கு மிகவும் புண்ணியம் செய்திருக்க வேணும். ஆனால், கள்ளனுக்குப் பெண் கொடுக்கச் சம்மதிப்பார்களா? அந்தப் பெண்ணும் என் பெயரைக் கேட்டவுடனே; நடுங்குகிறாள்....சரி—அந்தப் பேச்சு நமக்கு எதற்கு?—நாட்றாயா—நகைகள் எங்கே?"

இதற்கு முன்னாலேயே நாட்றாயன் நகை மூட்டையை அவிழ்த்துக் கீழே பரப்பியிருந்தான். அதில் பூங்கோதையி



னுடைய ஜடைபில்லையையும் அட்டிகைத் திருகாணியையும் தவிர, மற்ற எல்லா நகைகளும் இருந்தன. அதோடு, வேறு யாருடையவையோ தெரியவில்லை—ஒரு காசுமாலை, மூன்று ஜதை வயிரக் கம்மல்கள், ஐந்தாறு கல்முகப்புள்ள தங்கச் சங்கிலிகள் முதலான இன்னும் சில சில்லறை நகைகளும் இருந்தன. மற்றும், தனியாக வார்க்கச்சைப் பை போல ஒரு பையும் இருந்தது. அதை அவிழ்த்துப் பார்த்ததில் நோட்டுகளாக 565 ரூபாயும், ஒரு வயிரக் கடயமும் காணப் பட்டன. இவைகளில் எவை எவை பூங்கோதையினுடைய நகைகள் என்று மலைக்கள்ளனுக்குத் தெரியாது. எல்லா வற்றையும் தன்னுடைய குட்டையில் மூட்டையாகக் கட்டச் சொல்லி எடுத்துக்கொண்டான். அந்தக் கூடத்தின் வலப் புறத்தில் உள்ள கிழவனுடைய படத்துக்கு நேராகக் கீழே ஒரு பெரிய இரும்புப் பெட்டியிருந்தது. அதை மலைக்கள்ளன் திறந்தான். அதிலிருந்து ஒரு பணப் பையை எடுத்துச் சப்பாணியிடத்தில் 250 ரூபாயும், நாட்றாயனிடத்தில் 100 ரூபாயும், மற்றவர்களுக்கெல்லாம் தலைக்கு 50 ரூபாயும் கொடுத்துவிட்டு, "நாட்றாயா, நீ மட்டும் இன்று முழுவதும் என்னுடைய வீட்டிலிரு; கொஞ்சம் வேலையிருக்கிறது. மற்ற வர்கள் அவரவர் வீட்டுக்குப் போய்விட்டு, வெள்ளிக்கிழமை வந்தால் போதும். அதற்கு முன்னால் வேணுமானால் செய்தி அனுப்புகிறேன். உங்களுக்குள் காவல் மாற்ற வேண்டியவர் கள் யாராவது இருந்தால் அவர்கள் அங்கே போகட்டும். வெகு ஜாக்கிரதையாக இருக்கவேணுமென்று அங்கங்கே காவலிடங் களிலெல்லாம்—டே! செவந்தான்!—நீ போய்க் கண்டிப்பாகச் சொல்லு. சரி, எல்லோரும் போகலாம்....யாருக்காவது ஏதாவது என்னிடத்தில் சொல்லிக்கொள்ள வேண்டுமா?"

"இல்லிங்கோ எஜமானே, ஒண்ணுமில்லிங்கோ!" என்று சொல்லிக்கொண்டே, ஒவ்வொருவராக எல்லோரும் வெளியில் போனார்கள்.

"சப்பாணி! நீ மட்டும் நான் சொல்லுகிறவரையில் இங்கேயே இருக்கவேணும். நான் சாயந்திரம் வருகிறேன்.

"சரி, இன்றைக்கு இங்கே வாசல் காப்போன் யார்....? ஆ? நீயா, வைத்தி ! ஜாக்ரதை. பெரியவருடைய சமையல்காரனிடத்தில் சொல்லிப் போகிறேன், சப்பாணிக்கு வேண்டியவைகளைக் கவனித்துக்கொள்" என்று கூறிவிட்டு, மலைக்கள்ளன் அந்தக் கூடத்தை விட்டு வெளியில் வந்தான். கதவு வழக்கம் போல் மூடப்பட்டது..........

மலைக்கள்ளன் தான் முன் வந்த வழியிலேயே திரும்பி வந்து, குகையைவிட்டு முன் சொன்ன வெளிச்சமான இடத்துக்கு வந்து, எதிரில் இருந்த கதவுக்குப் போகாமல் குகையை விட்ட உடனே, இடப்புறமாகத் திரும்பி, அந்த மலை இடுக்கிலேயே சுமார் இரண்டு பர்லாங்கு தூரம் சென்றான். அங்கே இன்னொரு குகை வாசல் இருந்தது. அதில் நுழைந்து சிறிது தூரம் முன் போலவே இருட்டும் வெளிச்சமுமான வழியில் நடந்து வலப்புறத்தில் இருந்த ஒரு கதவைத் தட்டினான். உள்ளே இருந்து, "தசரதன் எங்கே?" என்ற கேள்வி பிறந்தது. உடனே மலைக்கள்ளன், "அறுபதினாயிரம் வருஷத்துக்கு மேலும் இன்னும் ஆசை ஏன்?" என்று பதில் சொன்னான். கதவு திறக்கப்பட்டது. அங்கே நின்ற காவல்காரனைப் பார்த்து, "அப்பா என்ன செய்கிறார்?" என்று கேட்டான். காவலாளி, "ராத்திரியெல்லாம் ரொம்ப இருமிக்கொண்டு இருந்தாருங்க. விடியற்காலந்தான் கொஞ்சம் தூங்கினாப்பிலே இருக்குதுங்க. இப்ப என்ன செய்யறாங்கோண்ணு தெரியாதுங்க. ஒங்களைப் பார்க்கணுமுண்ணு சொன்னாருங்களாம். பெரியம்மா நீங்க வந்திங்களாண்ணு கேட்டாங்க" என்றான்.

அந்த நடையின் கோடியில் ஒரு கதவு இருந்தது. அது பாதி திறந்திருந்தது. கள்ளர் தலைவன் உள்ளே சென்றான். அந்தக் கட்டடம், எல்லாச் செல்வமும் நிறைந்த ஒரு பெரிய விடுதி. அதில் சாளரத்தின் பக்கத்தில் சுகமான மெத்தையிட்ட ஒரு கட்டிலில், சுமார் எழுபத்தைந்து வயது மதிக்கக்கூடிய ஒரு கிழவர், பார்ப்பதற்குத் தவசியைப் போல, நரைமுதிர்ந்து வெளுத்த தாடியும் மீசையுமாகப் படுத்திருந்தார். அருகில் சுமார் அறுபது வயதுள்ள ஒரு கிழவி, அந்தக் கட்டிலில் உட்கார்ந்துகொண்டு, பெரியவருடைய கை கால்களை மெதுவாக வருடிக்கொண்டிருந்தாள்.



உள்ளே வந்த வாலிபன் நேராகக் கட்டிலண்டை போனான். அவனைக் கண்டவுடன் கிழவி, "வாடா, என் கண்ணே! வந்தியா? அப்பா! நாலு நாளாச்சே! உன்னைக் காணோம் காணோமென்று துடிக்கிறாரே பெரியவர்" என்று சொல்லி, மலைக்கள்ளனுடைய முதுகில் கையை வைத்து, அவனை அருகில் அணைத்தாள்.

இதுவரையிலும் கண்களை மூடிக்கொண்டிருந்த கிழவன் விழித்துப் பார்த்து, "வீரய்யா ! வந்தாயா ? வா........ஏனப்பா நாலு நாளாக எட்டிக்கூடப் பார்க்கவில்லை ? நான் செத்திருந்தால், இரண்டு நாளாயிருக்குமே!" என்றான்.

"என்ன அப்பா ? உடம்புக்கு என்ன ? முகமெல்லாம் ரொம்பவும் வாடியிருக்கிறதே!"

"வாடாமலென்ன? வயது ஆகவில்லையா? .......வீரய்யா ! என்னுடைய நாள் சமீபத்தில் வந்துவிட்டது. அதைப்பற்றிக் கவலையில்லை. நான் செய்த பாவங்களையெல்லாம் மன்னித்து, வேதனையில்லாமல் என்னைத் தன் பாதங்களில் ஆண்டவன் சேர்த்துக்கொள்ள வேண்டுமென்று, நிம்மதியாக அவனைத் தொழுதுகொண்டிருக்கிறேன். ஆனால், உன்னிடத்தில் இதுவரையிலும் சொல்லாத சில ரகசியங்களை என் உயிர் போகு முன், உனக்குச் சொல்லிவிட்டால் என்னுடைய பற்றெல்லாம் நீங்கிவிடும். இரண்டு நாள்களுக்குமுன் என் உடம்பு இருந்ததை நினைத்தால், எங்கே உன்னைச் சந்திக்காமல் உயிர் போய்விடுமோ என்று மிகவும் பயந்து, உன்னைப் பார்க்க வேண்டும் என்று மிகுந்த ஆவல் கொண்டேன். ஏன் நாலு நாளாக வரவில்லை? எங்கே போயிருந்தாய்?"

"அப்பா, அது உங்களுடைய ஓர் இஷ்டத்தைப் பூர்த்தி செய்ய வேண்டும் என்ற முயற்சியால் நேர்ந்தது. அந்தக் **காத்தவராயனை** இன்றைய தினம் கட்டிக்கொண்டு வந்து

உங்கள் முன்னால் நிறுத்த வேணும் என்று ஏற்பாடுகள் செய்திருந்தேன்....''

"என்ன ! என்ன ! காத்தவராயன் ? என்ன செய்தான் ? எங்கிருந்தான் ? சிக்கிவிட்டானா ? பிடித்தாகிவிட்டதா ?........ இல்லையா?'' என்று கிழவன் ஒரு நோயுமில்லாதவன் போல வெகு ஆத்திரத்தோடு கேட்டான்.

''இல்லை, அப்பா, கொஞ்சம் தவறிவிட்டது. நான் அவனுக்குக் கண்ணி வைத்திருக்கிறேன் என்று கண்டு, அவன் தன்னுடைய மற்ற ஆள்கள் வந்த வழியில் வராமல் வேறு வழியாக நழுவிவிட்டான் போல் தோன்றுகிறது. அவன் இன்றைக்குச் செய்ய இருந்த காரியங்களையெல்லாம் முரித்து விட்டேன். அவனுடைய முக்கியமான துணைவர்கள் இரண்டு பேரை ஆலமரத்தில் தலைகீழாகக் கட்டிப்போட்டு, மற்றவர் களை மன்னித்து விட்டுவிட்டான் நம்ப சப்பாணி.''

''காத்தவராயன் அப்படி என்ன செய்தான் ?''

''அவனா ?........சொக்கேசர்—விஜயபுரத்துச் சொக்கேசர் இருக்கிறார் பாருங்கள்—அவருடைய புத்திரி பூங்கோதை அம்மாளை, வீட்டுக்குள் நுழைந்து, நடு ராத்திரியில் தூக்கிக் கொண்டு வந்துவிட்டான்....''

"என்ன! சொக்கேசருடைய பெண்ணையா?''

"எதற்காக ?..........பணத்துக்காகத்தான். வீரராஜ னுடைய சூழ்ச்சி. வீரராஜனுடைய தோட்ட வீட்டுக்குப் பூங்கோதையை யாருக்கும் தெரியாமல் காத்தவராயன் கொண்டுபோய் விட்டுவிட வேண்டுமென்று ஏற்பாடு.''

'' அப்படியா ? அந்த வீரராஜன் போன போக்குத்தான் என்ன ! நல்ல குடித்தனத்தில் பிறந்தவன் ! பெரிய மனித னுடைய பிள்ளை. காத்தவராயனுடைய தைரியத்தால்தான் அவன் இவ்வளவு பாதகன் ஆகிவிட்டான். சரி, அதன்பின் நடந்தது என்ன ?''



'' அவன் இப்படிச் செய்யப் போகிறானென்பதை நான் முன்னாலேயே காத்தவராயனுடைய நடமாட்டத்திலிருந்து கண்டுகொண்டேன். நம்முடைய ஆள்களைச் சரியானபடி அங்கங்கே காவல் போட்டு, அந்தப் பெண்ணை, அவன் தூக்கிக்கொண்டு வீட்டை விட்டுக் கொஞ்ச தூரம் போவதற்குள் கண்டுபிடிக்கச் செய்து, வரவேண்டிய பாதையில் நானும் நம்ம ஆள்கள் பதினைந்து பேருங் காத்திருந்தோம். நம்ம தண்ணீர்ப் பந்தலுக்குப் பக்கமாக அவர்களை மடக்கி, அவர்கள் அந்தப் பெண்ணை வைத்துத் தூக்கிக்கொண்டு வந்த கட்டிலோடு நம்முடைய கொட்டாரத்துக்குக் கொண்டுவந்துவிட்டேன்........ இதோ பாருங்கள். அவர்கள் அந்தப் பெண்ணின் மேலிருந்து அபகரித்த நகைகளும், இன்னும் எங்கெங்கேயோ திருடின நகை களும் சேர்ந்து, நம்ம சப்பாணியிடம் சிக்கிக்கொண்டன........''

'' சரி, அந்தப் பெண் எங்கே ?''

'' அந்தப் பெண்ணை நம்ம சின்னம்மாளுடன் மலை வீட்டில் விட்டுவிட்டு வந்தேன்.''

'' அடடா ! சொக்கேசர் எனக்கு ரொம்பவும் வேண்டியவர் அல்லவா ? அந்தப் பெண் சிறு வயசாயிருந்த போது நான் பார்த்திருக்கிறேன். வெகு சுந்தரி, நல்ல புத்திசாலி. அவ ளுடைய தாய்தான் காத்தவராயனுடைய எஜமானனான கொம்பேறியைச் சுட்டுவிட்டாள், ஏன் ? அந்தக் குழந்தையை இங்கே கூட்டிவந்தால், நான் சாவதற்குள் இன்னொரு முறை பார்ப்பேனே ! இப்போது வயது பதினைந்துக்கு மேலே இருக்குமே ?''

''ஆமாம், அப்பா. எனக்கு ரொம்ப ஆசைதான். இங்கே கூட்டி வரலாம் என்றுதான் எண்ணினேன். அதற்குள் ஏதோ பேச்சோடு பேச்சாக என் பெயர் என்ன என்று கேட்டாள் நான் மலைக்கள்ளன் என்று சொன்னவுடனே, அவள் மயங்கி விழுந்துவிட்டாள். நான், இந்தச் சமயம் சரியல்ல என்று நினைத்து, அவளைத் தேற்றி, ஆகாரம் கொடுக்குமாறு சின்னி

யிடம் சொல்லிவிட்டு, தங்களிடம் இதையெல்லாம் தெரிவித்துப் போகலாமென்று வந்தேன்."

"சரி, அந்தப் பெண் இங்கேதானே இருக்கிறாள். பிறகு பார்த்துக்கொள்வோம். காத்தவராயன் சிக்கவில்லையே!"

"அதுதான் அப்பா எனக்கும் கவலை. கொஞ்சம் ஏமாந்து விட்டேன். இல்லாவிட்டால், அவனைக் கண்டிப்பாக இன்று பிடித்திருப்பேன். இருந்தாலும், வெகு சீக்கிரத்தில் அவனைக் கட்டிக்கொண்டு வந்து, உங்கள் மனம் குளிரும்படி செய்கிறேன். ........இன்னொன்று சொல்ல மறந்துவிட்டேன். சுமார் பத்து நாள்களுக்கு முன்னால் இந்தக் காத்தவராயன், குட்டிப்பட்டி ஜமீன்தாருடைய ஏவுதலின் பேரில், அந்த ஊர் **ராமையாவின்** வீட்டில் ஒரு சாமர்த்தியம் காட்டினான். அதையும் இரண்டு நாள்களுக்கு முன்னால் நான் தோற்கடித்துவிட்டேன்."

"ஆமாம், துரையே, அந்தக் காத்தவராயன் பேரில் இருக்கும் ஆத்திரம் மட்டும் எனக்கு அடங்கவேயில்லை. அவன் என்னை அவமதித்தது மட்டுமல்ல, என்னுடைய நேசனையும் கொன்று, உடலைத் துண்டுதுண்டாக வெட்டி, சாலையில் தலை ஒரு மரத்திலும், கை ஒரு மரத்திலும், கால் ஒரு மரத்திலும், முண்டம் ஒரு மரத்திலுமாகக் கட்டினான் என்ற நாள் முதல் என் மனம் படும் பாட்டை, மகனே, சொல்லி முடியாது. கூடுமானால், என் உயிர் போவதற்கு முன், நீ அவனைக் கொல்லாமல் பிடித்து வந்து, நான் பார்க்கவேணும். அதுதான் என் மனத்திலிருந்துகொண்டிருக்கிற ஓர் ஆசை"........

கிழவனும் குமரனும் பேச ஆரம்பித்தபோதே எழுந்து உள்ளே போயிருந்த கிழவி, இந்தச் சமயத்தில் ஒரு தட்டில் பல அருமையான பழங்களையும், ஒரு செம்பு நிறைய பாலையும் கொண்டுவந்து, "அப்பா வீரையா, கொஞ்சம் சாப்பிடப்பா. நீ இங்கே சாப்பிட்டுப் பத்து நாளைக்கு மேலாச்சே" என்று சொல்லிக்கொண்டே அவைகளை அங்கிருந்த ஒரு சிறு மேஜையின்மீது வைத்தாள்.



கிழவன் புன்சிரிப்போடு சற்று இருமிக்கொண்டே, "ஏண்டி, கேட்டையா சங்கதியை? விஜயபுரத்துச் சொக்கேசருடைய பெண், உனக்குத்தான் தெரியுமே. அந்தப் பெண் பூங்கோதையை இங்கேயே நம்ம மலைவீட்டுக்கு, நம்ம வீரையா கொண்டுவந்துவிட்டானாம்!சரி....சரி....இனிமேல்....உம், என்னடி கேட்டாயா?" என்று சிரித்தான்.

கிழவி, "ஆ! அப்படியா! அந்தப் பெண்ணை எனக்குத் தெரியுமே. மயிலாச்சே, குயிலாச்சே. பொண்ணுண்ணா அவதாம் பொண்ணு. எங்கே? எங்கே? எங்கே அவள்?"

"எங்கே! வீரையன் வீட்டில்தான் இருக்கிறாள்" என்று கிழவன் மறுபடியும் கைகொட்டிச் சிரித்தான்.

"ஆ! என்ன அப்படிச் சொல்றீங்களே! சிரிப்பென்ன! கேலியென்ன!........ஏன், வீரய்யனுக்குத் தகாதா? சிங்கக்குட்டி அல்லவா! மன்மதனாச்சே! நம்ம சிங்கத்துக்கும் அந்தச் சிங்காரத்துக்கும் நல்ல பொருத்தமாச்சே! ஆ! யாரைக் கேக்கணும்? ........அப்பா வீரய்யா, இதோ வந்துவிட்டேன். நீ இன்றைக்கு இங்கேயே சாப்பிட்டுவிட்டுப் போ. ரொம்ப நாளாச்சு. —சமையற்காரனிடம் சொன்னேன், பார்த்துவிட்டு வந்துடுகிறேன். நீ பழத்தைச் சாப்பிடு. பாலைக் குடி" என்று சொல்லிக்கொண்டே கிழவி மறுபடியும் போய்விட்டாள்.

மலைக்கள்ளன் ஒன்றும் பேசாமல் ஒரு கிச்சிலிப்பழத்தை மட்டும் எடுத்துச் சாப்பிட்டுவிட்டு, கிழவன் பக்கத்தில் வந்து உட்கார்ந்து, "என்ன அப்பா? உடம்புக்கென்ன? அதைச் சொல்லுங்கள்" என்றான். "என் உடம்புக்கென்ன, வயசின் தளர்ச்சிதான். எந்த நிமிஷமும் இனித் தயாராக இருக்க வேண்டியதுதானே........சரி, மறந்துவிட்டேன். குழந்தாய்! உன்னிடத்தில் சில ரகசியங்களைச் சொல்லிவிட வேண்டும் என்றேன் அல்லவா? அவைகளைச் சொல்ல வெகு நாளாய் எனக்கு எண்ணம். இப்படியும் அப்படியுமாக இதுவரையிலும் சொல்லாமல் கடந்துவிட்டது. இனியும் அதை ஒத்திவைப்பது அழகல்ல. நான் இருப்பதானாலும் சரி, அல்லது சீக்கிரத்தில் இறப்பதானாலும் சரி; இன்றைக்கே நீ அவைகளை அறிந்துகொள்ள வேண்டும்.

இதோ (தன் தலையணையின் கீழிருந்து சில சாவிகளை எடுத்து) இந்தச் சாவிகளை இன்று முதல் உன்னிடத்தில் ஒப்படைத்துவிட்டேன். இந்த நிமிஷ முதல் என்னுடைய உடைமைகள் எல்லாவற்றுக்கும் நீயே சர்வாதிகாரி........"

"ஏன் அப்பா, இப்போதே நான் சர்வாதிகாரியாகத்தானே இருக்கிறேன். இந்தச் சாவிகளை என்னிடத்தில் கொடுக்காவிட்டால் என்ன ? நான் வேண்டும்போது எடுத்துக்கொள்கிறேன். இதற்கென்ன தங்களுக்கு இவ்வளவு கவலை ?........"

"அப்படியல்ல, மகனே. என் சுமை என்னுடைய தலையை விட்டு இறங்க வேண்டும். நான் சொல்லுவதையெல்லாம் கவனமாகக் கேள்........நான் அநேக பாவங்களைச் செய்திருக்கிறேன். கொஞ்சம் புண்ணியமும் பண்ணியிருக்கிறேன். என் பாவங்களுக்கெல்லாம் மனதார வருந்தி, ஆண்டவனிடத்தில் மன்னிப்புக் கேட்டுக்கொள்ளுவதற்குமுன், என் மனத்திலுள்ள சுமைகளையெல்லாம் உன்னிடத்தில் ஒப்படைத்துவிட்டு நான் நிம்மதியடைய வேண்டும்........ஆகையினால், நான் சொல்லுபவைகளை அமர்ந்து கேட்டு, அதன்படி செய்து, என் கோரிக்கைகளைப் பூர்த்தியாக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்."

"அப்பா ! தாங்கள் எதைச் சொன்னாலும் அதைப் பூர்த்தி செய்ய, நான் மனப்பூர்வமாக உழைப்பேன். இந்த மலையிலிருந்து இப்பொழுதே தலைகீழாக விழச் சொல்வீர்களானாலும், இதோ செய்கிறேன்."

"செய்வாய் மகனே ! நீ செய்வாய். அந்தச் சந்தேகம் எனக்கில்லை. நான் சொல்லுவதை முழுதுங்கேள்........உன்னைக் காட்டிலும் எனக்கு உற்ற துணை வேறில்லை. நீ எனக்குச் செய்திருக்கும் உதவியைப்புகழ்ந்து பேச எனக்கு வல்லமை இல்லை. புலி வாயிலிருந்து மீட்டாய். புண்ணியமே வந்து உதவியது போல என் கண்ணியத்தைக் காத்தாய். என்னை அவமதித்தது மட்டும் அல்லாமல் என்னை அழித்துவிட வேணும் என்று வெகு தந்திரமான ஏற்பாடுகளைச் செய்திருந்த என்னுடைய ஜன்ம விரோதிகளான அந்த மூவரையும் அடக்கினாய். உன் ஆண்மை



யையும் அறிவையும் கிழக்கள்ளனாகிய நான் எப்படி மெச்சுவது ! அதோடு, 'உன் தகப்பனாருடைய பழிக்கு, பழி வாங்குவேன்' என்று சபதம் பூண்டு, அதன் மூலமாக என்னைச் சந்தோஷப்படுத்துவதாகச் சத்தியம் செய்தாய். உன்னால் நான் அடைந்திருக்கிற இன்பம் அளவிடக்கூடாதது. ஆகையினால், வீரையா! சாதாரணமாக ஒரு தந்தை, தன் மனத்துக்கு உகந்த ஒரு மகனுக்குத் தன் ஆஸ்திகளை விட்டுப் போகும் விருப்பத்தைக்காட்டிலும் மிக உயர்ந்ததும் உண்மையானதுமான உணர்ச்சியோடு, நான் என்னுடைய எல்லா உடைமைகளையும் இந்த நிமிஷத்தில் உன்னிடம் ஒப்படைக்கிறேன்.... சரி....சரி, இன்னும் கேள். அந்தப் பெரிய இரும்புப் பெட்டியில் முன்னொரு நாள், உன்னையும் வைத்துக்கொண்டு, தனித் தனியாக மூட்டை கட்டி வைக்கப்பட்ட சொத்துகளின் மேல் அவரவர்களின் பெயர்களை விலாசத்துடன் எழுதியிருக்கின்றேன். உனக்குச் சௌகரியமான போது, அவைகளை அந்தந்த விலாசதார்களிடமாவது, அவர்களுடைய வாரிசுகளிடமாவது சேர்த்துவிடு. அவைகளில் ஏராளமான சொத்துகளிருந்தாலும் அவை அபகரிக்கப்பட்ட பொருள்கள். அவை நமக்கு வேண்டியதில்லை...."

"சீச்சீ ! நமக்கெதற்கு அப்பா, அவை ?"

"எனக்குத் தெரியும். நீ அவைகளைத் தொடக்கூட மாட்டாய்....கேள். இரண்டாவது பெட்டியில் இருப்பவை முழுதும் யாருடையவை என்று தெரியவில்லை. பின்னால் அவைகளின் சொந்தக்காரரை நீ அறிய முடிந்தால், உனக்கு இஷ்டமானால், அவர்களிடம் கொடுத்துவிடு. இல்லாவிட்டால், உன் மனத்துக்கு இசைந்த வழிகளில் தான தருமங்களைச் செய்வதற்கு உபயோகப்படுத்து. என் இஷ்டத்தைக் கேட்பாயானால், விஜயபுரியிலாவது அல்லது நம்ம **சிறுகுளத்தூரி**லாவது, ஏழை எளியவர்கள், கூன் குருடு, நொண்டி முடம் கிழம் கிட்டை ஆகியவர்களுக்கு எந்த நேரத்திலும் தங்குவதற்கும் பசியாற்றிக் கொள்ளுவதற்கும் ஒரு சாசுவதமான ஏற்பாட்டைச் செய்து

வைப்பது நல்லது என்று எண்ணுகிறேன். இருந்தாலும் உன் இஷ்டம் எப்படியோ—அதன்படி...."

"என் இஷ்டம் ஒன்றும் இல்லை. தங்கள் இஷ்டப்படியே, அதுவும் தங்கள் பிறப்பிடமாகிய சிறுகுளத்தூரிலேயே செய்துவிடலாம்...."

"எப்படியோ செய். நீ எதைச் செய்தாலும் எனக்குச் சம்மதம்—இன்னுங் கேள்—பிறகு, மூன்றாவது பெட்டியில் இருப்பவை முழுவதும் என்னுடையதே. அது அளவிடக் கூடாத அரச சம்பத்து. நான் பழைய கோட்டை மேட்டை ஒரு காரியமாக வெட்டியபோது கிடைத்தது. பண்டைத் தமிழ் மன்னர் காலத்தில் புதைபட்டுப் போனது. அள்ளி அள்ளி இறைத்தாலும் குறையாத செல்வம். அந்த முழுவதும் உனக்கே சொந்தம். அந்த மூன்றாவது பெட்டியில் இருக்கிற செல்வத்தையும், இந்த மலையிலுள்ள வீடு வாசல் முதலான எல்லாப் பொருள்களையும், நீ எனக்குச் செய்திருக்கும் பெரிய உதவிகளுக்கெல்லாம் ஒரு சிறிய கைம்மாறாக, இந்த நிமிஷத்தில் உனக்கு நான் கொடுக்கிறேன். கண்மணி வீரய்யா! ஏற்றுக்கொள்...."

"என்ன அப்பா! இப்படியெல்லாம்...."

"பொறு, பொறு, இன்னும் என் பேச்சு முடியவில்லை. கேள்—இதோ, போய் அந்த மூன்றாவது பெட்டியைத் திறந்து அதன் மேல் அறையில் ஒரு சிறு தங்கப் பெட்டி இருக்கிறது; எடுத்து வா...."

வாலிபன் அப்படியே எடுத்து வந்தான். கிழவன் அதைத் தன் மடிமேல் வைத்துக்கொண்டு, தானே திறந்து, அதில் இருந்த ஓர் ஓலைச் சுவடியை எடுத்து, "மகனே! இது வெகு அருமையான ஒரு சுவடி. செம்பை வெகு சுலபமாகத் தங்கமாக்கும் வழி இதில் எழுதப்பட்டிருக்கிறது. மறைவான அர்த்தமுள்ள வார்த்தைகள் இதில் ஏதுமில்லை. இந்தச் சுவடியில் சொல்லியிருக்கிற மூலிகைகளையும் உப்புக்களையும் கொண்டு, குறிப்பிட்ட முறையில் வேலை செய்தால், எவரும்



தாமிரத்தைத் தங்கமாக்கிவிடலாம். இவ்வளவு வெள்ளையான முறையை வேறு யாரும் சொன்னதில்லை. நான் பரீக்ஷையாக இரண்டு மூன்று தடவை செய்திருக்கிறேன். இதை நீ உபயோகப்படுத்த வேண்டிய அவசியம் வராது. வந்தாலும் வராவிட்டாலும், இதை உன்னுடைய சந்ததியாருக்கு என்னுடைய ஞாபகார்த்தமான ஒரு பொக்கிஷமாக வெகு பத்திரப்படுத்தி வைக்கவேணும். சுமார் முப்பது வருஷங்களுக்கு முன், முதல் முதல் நான் இந்த மலைக்கு வந்தபோது, இங்கே இருந்துகொண்டிருந்த ஒரு பெரியவர், நான் அவருக்குச் செய்த ஊழியங்களைப் பாராட்டி, தாம் அடக்கமாவதற்கு முன்னால் என்னைக் கூப்பிட்டு, என்னிடத்தில் இதை ஒப்புவித்தார்....இதோ, இந்தச் சுருளில் தாமிரத்தை நீறாக்கக்கூடிய முறை எழுதப்பட்டிருக்கிறது. இதுவும் வெகு உயர்ந்த பொக்கிஷம். தாமிர பஸ்பம், தங்க பஸ்பத்தைக்காட்டிலும் அருமை. அதைச் சித்தர்கள் 'கல்பம்' என்று சொல்லுவார்கள். இப்போது உலகத்திலே தாமிர பஸ்பம் என்று விற்கப்படுவதெல்லாம் பெரும்பாலும் பொய்யானவை. இதில் எழுதியிருக்கிற முறைப்படி, அடிக்கடி நானே தாமிர பஸ்பம் செய்து உட்கொள்வதுண்டு. நோயில்லாவிட்டாலும், அதை உன்னைப் போன்ற வாலிபரும் அடிக்கடி உண்ணலாம். உண்டால் திடசரீரமும் ஆயுள் விருத்தியும் உண்டாகும். முன்னே இரண்டு மூன்று தடவைகளில் மருந்தென்று சொல்லி, உனக்கு நான் கொடுத்ததும் இதுதான்....சரி....இந்தச் சுவடிக் கட்டில் அநேகம் சில்லறை வைத்திய முறைகள் சொல்லப்பட்டிருக்கின்றன. உனக்கு ஒழிவான நேரங்களில் இதைப் பார்.... பிறகு, நான் மாண்டபின் என் தேகத்தை அந்தப் பெரியவர் சமாதிக்குப் பக்கத்தில் அடக்கம் செய்துவிடு. கிழவிக்கு நீதான் கதி. அவளை அடிக்கடி வந்து கவனித்துக்கொள். அவள் காலமானால் அவளையும் என் சமாதிக்குப் பக்கத்திலேயே வைத்துவிடு...."

"அப்பா, இதென்ன இப்பொழுதே...."

"குழந்தாய், இறப்பதற்கு வருந்துவானேன்? இவ்வளவு வயதான நான், இப்படிச் சொல்லுவதிலும் மரணத்துக்குத்

தயார் செய்துகொள்வதிலும் என்ன தவறு? தூங்கப் போவதைப் போல் மரணத்தைச் சந்தோஷத்தோடு ஏற்றுக் கொள்ள மனத்தைப் பக்குவப்படுத்தி வைத்துக்கொள்ள வேண் டும் அல்லவா?....இதோ....இந்தக் காதிதத்தில் இன்னும் பல சிறு விஷயங்களையும் எழுதியிருக்கிறேன். அவைகளையும் நன்கு கவனித்துக்கொள். என்னுடைய செல்கதிக்கு நீதான் சேய். எல்லாவற்றையும் உனக்கு நான் முன்னமேயே சொல்லியிருக்கிற வழியில் கண்காணித்துக்கொள். இந்த மலைவாசத்தை விரும்பி, நீ இங்கே இருக்கிற வரையிலும் இதன் ரகசியங்களை வேறு எவரிடத்திலும் நம்பி விட்டுவிடா மல், நீயே காத்துக்கொள்ள வேண்டும். முற்றும் நம்பிக்கை யும், திறமையும், நன்னடத்தையும் உள்ளவர்கள் கிடைத்தால், உனக்குப்பின் அவர்களிடத்தில் இதை ஒப்படை. இல்லா விட்டால் என்னோடும் உன்னோடும் இந்தக் கதை முடிந்து விடட்டும். அந்த....அந்த....அந்தப் 'பஞ்சணை' வழியை உனக்கு ஆபத்து நேரும்போது மட்டும் வைத்துக்கொள். அந்த வழியை உன்னைத் தவிர, மற்றெவரும் அறியாதபடி பார்த்துக்கொள். அடிக்கடி அதைப் போய்ப் பார்த்து, எந்த நேரத்திலும் அது சரியாக இருக்கும்படி கவனித்துக்கொள்ள வேண்டும். அந்த வழிக்கு நேராக மேலே இருக்கும் 'படர்செடி' வாடிப் போகாதபடி, மேலே இருந்தே, நான் சொன்ன எருவை யும் தண்ணீரையும் கரைத்து, மாதத்துக்கு இரண்டு முறையா வது ஊற்றிவர வேண்டியது. அது ஒரு விநோதமான பூண்டு. அந்த எருவில்லாவிட்டால் காய்ந்து போகும். சரி....முக்கிய மாக நான் உனக்குச் சொல்ல விரும்பியவை இவைதான். என்னுடைய கைப்புத்தகத்தில் உனக்கு உதவியாகவே அநேக சில்லறை விஷயங்களை எழுதி வைத்திருக்கிறேன். அவைகளைப் படித்துப் பார்....ஆண்டவன் உனக்கு ஆயுள், அறிவு, ஆண்மை, ஆற்றல்—இவற்றை நிரம்பக் கொடுத்துக் காப்பாற்ற வேண்டும். மகனே, என் மனங்குளிர உன்னை வாழ்த்துகின்றேன்....சரி, நீ சாப்பிடப் போ. எனக்குக் கஞ்சி தான். இன்னும் சற்று நேரங் கழித்து நான் குடிக்கிறேன்.



நேற்று முழுவதும் தூக்கமில்லை. சற்றுக் களைப்பாகவே இருக் கிறது...."

"சரி........அப்பா, தாங்கள் அதிக நேரம் பேசி அலுத்துப் போனீர்கள். தாங்கள் சொன்னவைகளையெல்லாம் ஒன்று தவறாமல், என் சிரமேல் கொண்டு நடந்துகொள்ளு வேன். தாங்கள் என்னிடத்தில் வைத்த அன்பையும் நம்பிக் கையையும் வீணாக்க மாட்டேன். இது சத்தியம்....இதோ, பெட்டி யைப் பூட்டிச் சாவிகளை எப்பொழுதும் போலவே தங்களுடைய தலையணையின் கீழே வைக்கிறேன். பிறகு எடுத்துக்கொள்ளு கிறேன்."

"கூடாது, கூடாது. இனி அவை என்னிடத்தில் இருக்கக் கூடாது. என் தலைமாட்டில் அவை வெகு பாரமாக இருக்கும். என் கவனத்தை, இனி அவைகளின்மீது செலுத்துகிற வேலையை நீ எனக்கு வைக்கக்கூடாது."

"சரி....தங்கள் உத்தரவுப்படியே" என்று கூறிச் சாவி களை எடுத்துக்கொண்டு, கிழவனை விட்டுக் கிழவியிருக்கும் பின் கட்டில் மலைக்கள்ளன் நுழைந்தான். கிழக் கள்ளன் அயர்ந்து தூங்கினான்.

கிழவன் சொன்ன விஷயங்களில் அவசியமானதை எல்லாம் மலைக்கள்ளன், கிழவியிடத்தில் சொல்லி, சாவி களைத் தனக்காக வைத்திருக்கும்படி அவளைக் கேட்டுக் கொண்டான். கிழவியும் சம்மதித்தாள். கிழவியின் விருப்பத் தின்படி வீரய்யன் அங்கேயே சாப்பிட்டுவிட்டு, மத்தியானம் சுமார் இரண்டு மணிக்கு அந்த இடத்தை விட்டுத் தன்னுடைய வீட்டுக்கு வந்து சேர்ந்தான். சின்னியம்மாள் கதவைத் திறந்தாள்.

"என்ன சின்னி, பூங்கோதை எங்கே? ஏதாவது சாப்பிட் டாளா?" என்று கேட்டான்.

"வெகு பாடுபட்டு, என்னென்னவோ தேறுதல்களெல் லாம் சொல்லிக் குலதெய்வத்தின் மேல் பல சத்தியங்கள்

செய்து, இரண்டு பழமும் கொஞ்சம் பாலும் குடிக்கச் செய்தேன். இருந்தாலும் வெகு கோபத்தோடும் வருத்தத்தோடும் தான் இருக்கிறாள். நம்மைச் சிறிதும் நம்பமாட்டேன் என்கிறாள்.''

'' ஏன் ? உன்னுடைய பேச்சில் நம்முடைய எண்ணங்கள் ஏதாவது அவளுக்குத் தெரிந்துவிடும்படி ஏதேனும் சொல்லி விட்டாயா ?''

'' இல்லை, இல்லை. நான் வெகு ஜாக்கிரதையாகவே பேசுவதையெல்லாம் அளந்து பேசினேன். அதில் ஒன்றும் தவறில்லை. இருந்தாலும் சிறு பெண்....விவரமறிந்தவள்.... நல்ல மானி....படித்தவள்....மிகவும் திடசித்தமுள்ளவள். இங்கே முன்பின் அறியாதவர்களோடு, தனியாக இருப்பதற்கு.... என்னவோ ஏதோ என்று மருளுவது இயற்கைதானே ?''

'' இப்போது எங்கே இருக்கிறாள் ?''

'' இப்போதுதான் மேல்மாடிக்குக் கூட்டிப் போய்த் தமிழ்ப் புத்தகங்களையெல்லாம் காட்டிப் பேசிக்கொண்டிருந்தேன். சில புத்தகங்களை எடுத்துக்கொண்டு தரையில் படுத்துக்கொண்டு படிக்க ஆரம்பித்தாள். நான் கட்டிலின்மீது மெத்தையைத் தட்டிப் போட்டுக் கொடுத்து, அதில் படுத்துக்கொண்டு படிக்கச் சொன்னேன் ; மறுத்துவிட்டாள். கீழே ஒரு பாயையும் தலையணையையும் போட்டு அதிலாவது படுத்துக்கொள்ளும்படி வேண்டினேன். அதையும் வேண்டாமென்று தள்ளித் தன் முன்றானையை விரித்துப் படுத்து, புத்தகங்களைப் பார்த்துக் கொண்டிருக்கிறாள். அப்பா ! என்ன ரோஷம் ! என்ன வைராக்கியம் !''

'' அப்படிப்பட்ட பெண்தான் வேண்டும். சரி, அவளிடம் இருந்து காத்தவராயன் அபகரித்த நகைகளையெல்லாம் இதோ நம்முடைய சப்பாணி மீட்டுக்கொண்டு வந்துவிட்டான். அவளுடைய நகைகள் எவை, எவை என்று தெரியவில்லை. இவைகளை அவளிடத்தில் காட்டித் தன்னுடைய நகைகளை எடுத்துக்கொள்ளச் செய்ய வேணும். நான் அங்கேயே சாப்



பிட்டுவிட்டேன். நீ சாப்பிட்டாச்சா ?—சரி, மேலே போவோம்'' என்று மலைக்கள்ளன் சொல்லியதும், இருவரும் மேல் மாடிக்கு வந்தார்கள். இரண்டு பேர் படியேறி வருகிற சத்தத்தைக் கேட்டுப் பூங்கோதை எழுந்து நின்று எதிர்பார்த்தாள்.

மலைக்கள்ளன் புன்சிரிப்போடு உள்ளே வந்து, '' என்ன பூங்கோதை, ஏன் என் பெயரைக் கேட்டவுடன் மூர்ச்சையாகி விட்டாய் ? அவ்வளவு பொல்லாதவனா நான் ?'' என்றான்.

'' உலகம் சொல்லும்.''

'' உலகந்தானே சொல்லும் ! நீ சொல்லமாட்டாயே!''

'' நான் உலகத்திலுள்ளவள்தானே !''

'' நான் கெட்டவன் என்று உனக்கு எப்படித் தெரியும் ?''

'' கேள்வியினால்தான்.''

''கேள்விப்படுவதெல்லாம் உண்மையாய் இருக்க வேண்டுமா ?''

''கேள்வியோடு பார்வையும் சேர்ந்து உண்மைப்படுத்துகிறது.''

''நீ பார்த்தது என்ன ?''

''உம்முடைய வாழ்க்கையை.''

''என்னுடைய வாழ்க்கையில் நீ என்ன குற்றம் கண்டாய் ?''

''உம்முடைய ரகசியங்களே போதுமே !''

''என்னுடைய இரகசியங்கள் உனக்கென்ன தீங்கு செய்தன ?''

''நல்லவர்களுக்கு அவர்களுடைய வாழ்க்கையில் மறைக்க வேண்டியது ஒன்றுமே இருக்காது.''

''நான் என்னை நல்லவன் என்று சொல்லிக்கொள்ளவில்லை. என்னிடத்தில் இரகசியங்கள் இல்லை என்றும் சொல்லவில்லை. ஆனால்; இங்கே என்னுடைய வாழ்க்கையில் நீ பார்த்த எது என்னைத் தீயவன் என்று உண்மைப்படுத்துகிறது ?''

"இன்னது என்று குறிப்பிட்டுச் சொல்ல எனக்கு இஷ்டமில்லை. இதையெல்லாம் நீர் என்னை ஏன் கேட்கவேண்டும்?.... எனக்கு நீர் உதவி செய்ய வந்ததாகவும்; என்னை என்னுடைய வீட்டுக்குக் கொண்டுபோய்ச் சேர்ப்பிப்பதாகவும் சொன்னீரே, அந்த வார்த்தை என்னவாச்சுது ?....மற்ற விஷயங்களை வாதிக்க எனக்கு இச்சையில்லை."

"ஆஹா, தடை என்ன ? உன்னை உன் வீட்டில் சேர்த்து என் வாக்கைப் பூர்த்தி செய்கிறேன்."

"சரி; முதலில் அதற்கானவைகளைச் செய்யும். மற்ற எதையும் பேச வேண்டாம்."

"இருந்தாலும், பூங்கோதை, நீ என்னை இவ்வளவு வெறுத்துப் பேசுவது கூடாது. உன்னைப் பெரிய அபாயத்தினின்றும் காத்து உதவினேன். இன்னும் என் உயிருள்ளளவும் உனக்கு உதவி செய்யக் காத்துக்கொண்டிருக்கிறேன். உன்னுடைய அழகிய முகம் கடுகடுப்பதைக் காண எனக்கு வருத்தமாயிருக்கிறது."

"சீ ! என்னுடைய அழகைப் புகழ நீர் யார் ஐயா ? இதோ கடைசி வார்த்தை. நீர் கள்ளர் தலைவனாக இருந்தாலும் உம்மை ஒரு கண்ணியமான ஆண் பிள்ளை என்று நம்பிப் பின் பற்றி வந்தேன். எனக்கு வேறு கதி இல்லாத இந்த இடத்தில் நீர் மனம் போனபடி வேடிக்கை பேசுவதை நான் கட்டோடு வெறுக்கிறேன்."

"ஆம்! அப்படிச் சொல். கள்ளனாயிருந்தாலும் என்னிடத்தில் கண்ணியம் இருக்கலாம் அல்லவா ?"

"வீண் பேச்சு எதற்கு ? உம்முடைய கண்ணியத்தைக் காரியத்தில் உண்மைப்படுத்தும்."

"சரி, செய்கிறேன், நீ கவலைப்படாதே....இதோ இதில் உன்னுடைய நகைகள் இருக்கின்றன—அந்தக் கள்ளர்கள் உன்னிடமிருந்து அபகரித்தவை. என்னுடைய ஆள்கள் அவர்களிடமிருந்து இவைகளை மீட்டு வந்துவிட்டார்கள்—எவை எவை உன்னுடையவை என்று பார்த்து எடுத்து அணிந்து கொள். பின் உன்னை உன்னுடைய வீட்டுக்கு அனுப்ப ஏற்பாடு செய்கிறேன்" என்று சொல்லி, நகை மூட்டையை மலைக்கள்ளன் அவிழ்த்தான். பூங்கோதை நகைகளைச் சிறிது நேரம் உற்றுப் பார்த்துவிட்டு, "ஆம். என்னுடைய நகைகளில் ஒன்றைத் தவிர, மற்றவைகளெல்லாம் இவைகளுக்குள் இருக்கின்றன" என்றாள்.



"சரி, உன் நகைகளைத் தனியாக எடுத்து, அணிந்து கொள்."

"இல்லை; எனக்கு நகைகள் தேவையில்லை. இனி அவைகளை நான் அணிந்துகொள்ள மாட்டேன்."

"அணிந்துகொள்ளாவிட்டாலும், எடுத்துக்கொள்."

"இல்லை; வேண்டியதில்லை. அவைகளை நீர் எனக்குச் செய்த உதவிக்கு ஒரு சிறு பிரதியுபகாரமாக வைத்துக் கொள்ளும். போதாதென்றால் இன்னும் என்ன வேண்டுமோ அதை என் தந்தையிடம் சொல்லிக் கொடுக்கச் செய்கிறேன்."

இதைக் கேட்டுக் கள்ளன் கலகலவென்று குலுங்க நகைத்து, "சபாஷ், எனக்கா ! எதற்கு இந்த நகைகள் ? நான் பெண்பிள்ளையா இவைகளை அணிந்துகொள்ள ? இந்த அற்ப நகைகளுக்காகவா நான் உனக்கு உதவி செய்தேன் ! அல்ல, அல்ல. அவைகளுக்காக அல்ல. இவை போன்ற ஆயிரம் ஆயிரம் நகைகளை இன்னும் நான் உனக்குத் தருவேனே !"

"ஐயா ! ஏன் வீண் வார்த்தைகள் பேசுகின்றீர் ? நான் அவைகளைத் தொடவும் மாட்டேன். நீர் அவைகளை என்ன வேண்டுமானாலும் செய்துகொள்ளும்."

"சரி; உன் இஷ்டப்படி செய். உன்னை இன்றிரவு அல்லது நாளைக் காலையில் உன்னுடைய வீட்டில் கொண்டு போய் விட ஏற்பாடு செய்கிறேன். நீ உன் வீடு போய்ச் சேர மூன்று நிபந்தனைகள் உண்டு. அவைகளைச் செய்வதாக வாக்களித்தால், நான் என்னுடைய வாக்கைக் காப்பாற்றுகிறேன். நீ எனக்குச் செய்யும் கைம்மாறு அவைதாம்."

"என்ன அந்த மூன்று நிபந்தனைகள்? முடியுமானால் செய்கிறேன்."

"முதலாவது: நீ இந்தக் கடுகடுப்பையெல்லாம் விட்டு விட்டுச் சந்தோஷமாகச் சாப்பிட வேண்டும். எங்கள் வீட்டு உணவும் மிகவும் பரிசுத்தமான உணவுதான். எவ்வளவு ஆசாரம் பார்க்கிறவர்களும் சாப்பிடத் தகுந்தது. வேணு மானால் நீயே சமைத்துக்கொள்ளலாம். இரண்டாவது: என் னுடைய அண்ணாவும் அம்மாவும் வயதான பெரியவர்கள். அவர்கள் இரண்டு பேரும் இங்கே இருக்கிறார்கள்; உன்னைப் பார்க்க வேணுமென்கிறார்கள். அவர்கள் இருக்குமிடத்துக்கு நீ என் பின்னே வரவேண்டும். மூன்றாவது: உன்னை உன் வீட்டில் சேர்ப்பதற்காக நான் சொல்லுகிற எந்த உபாயத்தை யும் நீ ஒப்புக்கொள்ள வேண்டும். செய்வாயா?"

"நான் கடுகடுக்காமல் இருக்க வேண்டும் என்பது உம் முடைய கண்ணியமான சொல்லையும் செயலையும் பொறுத் தது. நான் சந்தோஷமாக இருக்க வேணும் என்பது முடியாத காரியம்; சாப்பிடுவதற்குப் பசியில்லை. உம்முடைய தாய் தந்தையரான பெரியவர்களைப் பார்க்க ஆக்ஷேபமில்லை. என்னை வீட்டில் சேர்ப்பதற்கு நீர் சொல்லும் உபாயங்கள் கௌரவமுள்ளவையானால் செய்கிறேன்."

"சரி, அவ்வளவு போதும். நான் இன்னும் சிறிது நேரத்துக்கெல்லாம் வருகிறேன்; அதற்குள் உனக்கு இஷ்ட மானால் நீராடி, உணவு உண்டு, தயாராக இரு. பெரியவர் களைப் போய்ப் பார்த்துவிட்டு வருவோம். உன்னுடைய நிபந்தனைகளை நான் ஒப்புக்கொண்டேன். நான் சொன்ன வைகளையும் நீ நடத்த வேண்டும்."

## அத்தியாயம் 7

ஜானகிக்கென்று தனியாகக் கட்டிக் கொடுக்கப்பட்டிருந்த அலங்காரமான பூந்தோட்ட வீட்டில், எல்லா வசதிகளும் நிறைந் திருந்த சிங்காரமான ஓர் அறையில், கைத்திறத்தோடு சித்திரிக் கப்பட்ட ஒரு மஞ்சத்தில் **வீரராஜன்** சாய்ந்துகொண்டிருந்தான். பக்கத்தில் அவனிடம் காதல் மிகுந்த **ஜானகி** உட்கார்ந்து கொண்டிருந்தாள். ஜானகி ஒரு தாசியின் மகள்; நல்ல கல்வி யறிவு உடையவள். தன் குல ஜீவனத்தை அவள் விரும்ப வில்லை. வயது இருபதுக்குக் குறைவாய் இருக்கும்."

"என்ன, ஜானகி! இன்று ஒரு மாதிரியாக வாட்டம் அடைந்திருக்கிறாயே, ஏன்?"

"வாட்டம் இல்லாமல் என் வாழ்வுக்கு வேறே என்ன வரப் போகிறது?"

"ஐயையோ! அதென்ன அப்படிச் சொல்கிறாய், என் அருமைக் கண்ணே! நீ அப்படிச் சொல்ல நான் பொறுப் பேனா" என்று வீரராஜன் அவளுடைய கையைப் பிடித்தான். ஜானகி கையை விலக்கிக்கொண்டு, எட்டிப் போய், "போதும் உங்களுடைய வஞ்சகம். நான் ஆசையினால் அறிவிழந்து அகப் பட்டுக்கொண்டேன். உங்களுடைய திறமையையும் தோற் றத்தையும் நம்பிச் சீரழிந்தேன்...."

"என்னடி கண்ணே! ஜானகி! என்னென்னவோ, இடி இடிப் பது போலத் திடீர் திடீரென்று இன்றைக்குச் சொல்கிறாயே? என்னுடைய வஞ்சனை என்ன? நீ என்ன சீரழிந்தாய்?"

"கலியாணம் இல்லாமல் வெறுங் காம வாழ்வில் சிக்கிக் கொண்ட ஒரு பெண்ணுக்கு இதைவிடச் சீரழிவு வேறென்ன வேண்டும்?"

"என்ன ? நீ சொல்வது ஒன்றும் விளங்கவில்லையே ?"

"ஏன் விளங்கும் ? உண்மையும் உள்ளன்பும் இருந்தால் தானே விளங்கும்...."

"என்ன ? என்ன ?....ஜானகி...."

"உங்களுக்கு விளங்கும்படி சொல்லிவிடுகிறேன். இனி என்னால் பொறுக்க முடியாது. நீங்கள் என்னை இங்கே அழைத்து வந்து மூன்று வருஷங்கள் ஆகிவிட்டன. நீங்கள் அதற்கு முன்னால்; எங்கள் வீட்டுப் பக்கம் வரப்போக இருந்த போது, என் தாய், தமக்கை முதலான உறவினர்கள் மூலமாக என்னுடைய இன்பத்தைக் கோரியபோது, நான் சொன்ன தெல்லாம் உங்களுக்கு ஞாபகம் இருக்கும். இருந்தாலும், உங்களுடைய இளமையையும் வளமையையுங் கண்டு, எப் படியோ உங்கள் மீது ஆசை கொண்டுவிட்டேன். என் குலத்தைக் கொண்டு என்னைச் சிறுமையாய் எண்ணிவிடாமல், என்னை முறைப்படி கலியாணம் செய்துகொள்ளுவதாக இருந்தால்தான் சம்மதிப்பேன் என்று நான் சொன்னபோது, நீங்கள் அப்படியே செய்வதாக ஆயிரம்சாமியின்மேல்ஆணையிட்டுச் சொன்னீர்கள். ஆனாலும், எங்களுடைய இருப்பிடத்தில் மணவிழா நடத்துவது மதிப்புடையதல்லவென்றும், இங்கே வந்த பிறகு நாடறிய என்னைக் கலியாணம் செய்துகொள்ளுவதாகவும், சிறுகச் சிறுக என்னைக் கலைத்து இங்கே கூட்டிக்கொண்டு வந்தீர்கள். வீட்டை விட்டுப் போகக்கூடாதென்று என்னுடைய உறவினர் களெல்லாம் தடுத்தார்கள். சிறு வயதின் மோகத்தால், அதை யெல்லாம் அவமதித்து; நான் இங்கே வந்துவிட்டேன். வந்த பின்பு, கலியாணம் 'இன்றைக்கு','நாளைக்கு' என்று சொல்லிக் கொண்டே வந்தீர்கள். பின்பு கலியாணத்தைப்பற்றி என்ன கவலை ? உண்மையான காதலர்களுக்குக் கல்யாணங்கூட வேண்டுமா ?" என்று வெகு சாமர்த்தியமாகப் பேசிக்கொண்டே வருகிறீர்கள். 'பெண் புத்தி பின் புத்தி' என்றபடி நானும் மெய்மறந்து இருந்துவிட்டேன். இப்போதல்லவா தெரிகிறது, உங்களுடைய மோசம் ?"



"என்ன மோசம் ?"

"என்ன மோசமா! இனிமேலும் என்னை ஏமாற்ற முடியாது. உங்களுடைய பித்தலாட்டங்கள் எனக்குத் தெரிந்து போய் விட்டன. சொக்கேசருடைய மகள் பூங்கோதையைக் கலியாணம் செய்துகொள்ள வேணுமென்று நீர் வெகு நாளாகப் பிரம்மப் பிரயத்தனம் செய்து வருவது எனக்குத் தெரியும். என்னை உங்களுடைய காமவேட்கைக்கு மட்டும் ஒரு வைப்பாகக் கருதியிருக்கிறீர்கள் என்பதையும் தெரிந்துகொண்டேன். அந்த ஆசையுள்ள நீங்கள் என்னை ஏன் பொய்ச் சத்தியங்கள் செய்து, இங்கே அழைத்து வந்தீர்கள் ? இது உங்களுக்கு........"

"ஓஹோ ! சரி சரி, இதற்காகவா இவ்வளவு கோபங்கொள் ளுகிறாய் ? நியாயந்தான். நீ கோபித்துக்கொள்ளுவதற்குத் தகுந்த காரணந்தான். இருந்தாலும் 'ஏன், என்ன' என்று எதையும் தீர விசாரிக்காமல் இவ்வளவு வருத்தப்படுவது அழகா? கண்ணே ஜானகி ! நீ வெகு புத்திசாலியாச்சுதே ! உன்னைவிட எனக்கு வேறொரு பெண் உயர்ந்தவள் ஆவாளா? நீ என் உயிர்நிலையாச்சே...."

"இந்தப் புரட்டுகளெல்லாம் ஏன் பேசுகிறீர்கள் ? நீங்கள் பூங்கோதைக்காக வெகு முயற்சிகளையெல்லாம் செய்து வரு வதை இல்லையென்பீர்களா ?"

"உனக்கு யார் சொன்னது இதெல்லாம். நான்...."

"யாரோ சொன்னார்கள். யார் சொன்னால் என்ன ? நீங்கள் அந்தப் பெண்ணை உங்களுக்கு மணம் பேசப் பல பெரிய மனி தர்களைக்கொண்டு தூதனுப்பியும், நீங்களே அவளுக்குக் கடிதம் எழுதியும், இன்னும் என்னென்னவோ முயற்சிகள் செய்தும் வருகிறீர்கள் என்பது எனக்குத் தெரியும். என்னைக் கலியாணம் செய்துகொள்வதாகச் சொல்லி மோசம் செய்துவிட்டு, இன்னொருத்தியை...."

"என்ன ஜானகி ! நல்ல அறிவாளியான உனக்குக்கூட 'இன்னொரு பெண்' என்று நினைப்பதற்குள் இவ்வளவு பொறாமையும்...."

"பொறாமையா ! அந்தப் பெண்ணின்மேல் எனக்குப் பொறாமை ஒன்றுமில்லை. ஆனால், அவள்மீது எனக்குள்ள அன்பினால் உம்முடைய மோசத்துக்கு அவளும் ஆளாகிவிடக் கூடாதே என்பதுதான் என் கவலை."

"கொஞ்சம் பொறுமையுடன் கேள், ஜானகி ! நானே எல்லாம் விவரமாகச் சொல்லிவிடுகிறேன். பிறகு...."

விவரம் என்ன இதில்...."

"பொறு. பொறு பதறாதே, நான் உள்ளதை உள்ளபடி சொல்லட்டுமா, வேண்டாமா ? சற்று நேரம் காது கொடுத்துக் கேட்கப் பிரியமிருந்தால், சொல்லுகிறேன், இல்லாவிட்டால் உன் இஷ்டம். நான் வெளியே போய், உன் கோபம் தணிந்த பிறகு திரும்பி வருகிறேன்" என்று வீரராஜன் எழுந்தான்.

"இல்லை. நீங்கள் இதுதான் சாக்கு என்று பதில்கூடச் சொல்லாமல் போய்விடவேண்டாம். சொல்லுங்கள், நான் காது கொடுத்துக் கேட்கிறேன்" என்று தடுத்தாள்.

"சரி, அப்படியானால் என் பக்கத்தில் உட்கார்..........சரி, கொஞ்சம் நிதானமாகக் கேள். நான் பூங்கோதையைக் கலியாணம் செய்துகொள்ள வேண்டும் என்று முயற்சி செய்து வருவது உண்மைதான். ஆனால், உன்னைவிட அவள் அழகி என்றாவது, உன்னைத் துறந்து அவளுடைய இன்பத்தைக் கோரியாவது அல்ல...."

"அடடா ! என்ன தந்திரங் கற்றிருக்கிறீர்கள்! என்னைவிட அவள் அழகி என்று நானே சொல்லுவேனே ! ஆனால், என்னைப் போல் அவள் ஏமாற...."

"குறுக்கே ஓட்டுகிறாயே அதற்குள்ளாக! முழுவதும் கேள். நான் அவளைக் கலியாணம் செய்துகொள்ள வேண்டும் என்பதெல்லாம் உன்னுடைய சுகத்தையும் கௌரவத்தையும் காக்கத்தான்........

"என்ன ! என்ன ! என் சுகத்தையும் கௌரவத்தையும் பாதுகாக்கவா ? பேஷ் ! பேஷ் ! கட்டுக் கதையானாலும் இப்படியல்லவா கட்டவேணும்! சரி, சரி! என்னைக் கலியாணம் செய்துகொள்வதாகச் சொல்லி, இங்கே கொண்டுவந்து வைத்து, என்னை விட்டுவிட்டு இன்னொரு பெண்ணைக் கலியாணம் செய்துகொள்ளப் பாடுபடுவது என்னுடைய சுகத்துக்காகவா ? வெகு விநோதமான........"



"நான் சொல்லி முடிப்பதற்குள்ளாக இவ்வளவு கிளை ஓட்டுகிறாயே! நான் சொல்லுவதை முற்றிலுங் கேட்க உனக்கு இஷ்டம் இல்லையா ?"

"சரி சொல்லுங்கள்...."

"நான் அவளைக் கலியாணம் செய்துகொண்டு அவளுடைய அகந்தையை அடக்க வேண்டும் என்று அலைவது உனக்காகத் தான்.......கேள். சிரிக்காதே.......பொய்போலத்தான் தோன்றும். அவளை நான் கலியாணம் செய்துகொள்ள வேண்டும் என்பதற்கு இரண்டு காரணங்கள் உண்டு. ஒன்று, அவளுடைய பணம் நம்முடைய காரியங்களுக்கும், கலியாணத்துக்கும், இன்னும் நாம் பின்னால் சௌக்கியமாக இருக்கவும். எதற்கும் பணம் வேண்டும் அல்லவா...."

"இருக்கிற பணம் நம்முடைய கலியாணத்துக்குப் போதாதா ? பணம் வேண்டாம். எனக்கு ஒரு கோவிலில் பத்துப் பேர் அறியத் தாலி கட்டினால் போதும். ஆடம்பரக் கலியாணத்தில் எனக்கு ஆசை இல்லை........"

"இடையிடையே பேசிக் கலைக்காதே.......பேசாமல் கேள். போன வருஷத்தில் நமக்கு ஒரு வியாஜ்யத்தில் மூன்றரை லட்ச ரூபாய் நஷ்டம் ஆகிவிட்டது. அது உனக்குத் தெரியாது. இன்னும் நமக்குள்ள செலவுகளுக்கு......."

"வீண் செலவுகள் ஏன் செய்ய வேண்டும் ?"

"அடா ! நீ சும்மா கேட்கமாட்டாயா ? நான் போகிறேன், உனக்கு இன்னும் கோபம்........"

"இல்லை, சொல்லுங்கள்......."

"குறுக்கே பேசாமல் கொஞ்சம் கேளேன். பல காரணங்களாலும் பணம் வேண்டியது அவசியம். என்னுடைய மாமன் சொக்கேசருக்குக் குறைந்தது ஒன்பது லட்ச ரூபாய் பெறுமான சொத்துகள் இருக்கின்றன. பூங்கோதை ஒரே குழந்தை. அவளை வேறு யாராவது கலியாணம் செய்து கொள்ள விட்டுவிட்டால், இந்த ஒன்பது லட்சமும் எவனுக்கோ போய்ச் சேரும்...."

"உங்களுடைய மாமன் மகளும் அவளுடைய சொத்துகளும் இருக்கையில் என்னை ஏன்...."

"அடடா! நீ கொஞ்சம் பொறுமையோடு கேட்க மாட்டாயா?....கேளேன். பூங்கோதையைக் கலியாணம் செய்து கொள்ள வேணும் என்று நான் தீர்மானித்தது கொஞ்ச நாளைக்கு முன்னால்தான். அவளுடைய சொத்துக்காக மட்டுமல்ல. இன்னொரு வெகு முக்கியமான காரணமும் இருக்கிறது. நிரம்பப் படித்தவள் என்று அவள் கொண்டிருக்கும் அகந்தையையும்...."

"ஏன்; பெண்கள் நிரம்பப் படித்திருப்பது உங்களுக்குப் பிடிக்கவில்லையா?"

"அடிக்கடி இப்படி மடக்கிப் பேசுகிறாயே, நான் முழுவதும் சொல்லுவதற்குள்? அவளுடைய படிப்பைக் கூடாதென்று நான் சொல்லவில்லை. ஆனால், படித்துவிட்டோம் என்று அவள் யாரையும் மதிக்காமல் அகம்பாவம் கொண்டிருப்பதற்காகவும், அவள் உனக்கும் எனக்கும் செய்திருக்கிற தீங்குகளுக்காகவும் அவளைக் கலியாணம் செய்துகொண்டு அவளுடைய கொட்டத்தை அடக்க வேண்டும்."

"என்ன! என்ன! எனக்கு........அவள் தீங்கா? எனக்கு அவள் ஒரு தீங்கும் செய்யவில்லையே! நான் அவளை இரண்டொரு தடவைகளில் சந்திக்க நேர்ந்த போதெல்லாம் என்னை வெகு அன்போடும் மரியாதையோடும்தானே நடத்தினாள்! எனக்கென்ன தீங்கு அவள்...."



"சொல்லுகிறேன் கேள்....நீ அவளுக்கு ஒரு கடிதம் எழுதினாயே! அதற்கு அவள் பதில் எழுதினாளா?"

"நான் அவளுக்குக் கடிதம் எழுதினேன் என்பது உங்களுக்கு எப்படித் தெரியும்?"

(சுமார் ஒரு மாதத்துக்கு முன்னால், ஜானகி, பூங்கோதைக்கு ஒரு கடிதம் எழுதி, அதில் வீரராஜன் தன்னைக் கலியாணம் செய்துகொள்ளுவதாக அழைத்து வந்தது, இங்கே வந்தபின் கலியாணப் பேச்சை விட்டுவிட்டிருப்பது போன்ற விஷயங்களையெல்லாம் விவரமாக எழுதி, பூங்கோதை தன்னுடைய தகப்பனார் சொக்கேசரிடம் இதைப் பற்றிப் பேசித் தனக்கு ஒத்தாசை செய்ய வேண்டும் என்று ஜானகி, பூங்கோதையைக் கேட்டிருந்தாள். இந்தக் கடிதத்தை வீரராஜன் அகஸ்மாத்தாக அறியவந்து; அதைப் பூங்கோதையிடத்தில் கொடுக்க எடுத்துப்போன வேலைக்காரியிடத்திலிருந்து வழிப்பறி செய்து, தன் சம்பளத்தில் இருக்கிற அந்த வேலைக்காரியைப் பூங்கோதையிடம் கடிதத்தைச் சேர்த்துவிட்டதாக ஜானகிக்குச் சொல்லிவிடச் செய்துவிட்டான். அந்தக் கடிதம் பூங்கோதைக்குச் சேர்ந்துவிட்டதாகவே ஜானகி எண்ணிக்கொண்டிருந்தாள்.)

"நீ கடிதம் எழுதியதாகப் பூங்கோதை, தானே பல பேரிடத்தில் சொல்லிக்கொண்டிருந்ததாக என் காதில் விழுந்தது" என்றான்.

"ஐயோ! அப்படியா? அந்தக் கடிதத்தை அவள் மட்டும் பார்க்கவேண்டியது என்றும், நான் கடிதம் எழுதினதாக யாருக்கும் சொல்லாமல் ஓர் உதவி செய்ய வேண்டும் என்றும் அல்லவா அதில் எழுதியிருந்தேன்! அவள் அதை ஊராருக்கெல்லாம்...."

இதுதான் சமயம் என்று வீரராஜன், "இன்னுங்கேள். பூங்கோதை படித்தவள் என்றும், நல்லவள் என்றும் நீ எண்ணிக்கொண்டிருக்கிறாய். அவளுடைய சமாசாரங்கள் உனக்கு முழுவதும் தெரியாது. அவளுக்குத்தான் என்ன

செருக்கு ! எவ்வளவு மினுக்கு....! அந்தத் திமிரை அடக்காமல் விடக்கூடாது....ஆச்சுதா ? உன் கடிதத்தைப்பற்றி ஊர் முழுவதும் தூற்றினது மட்டுமா ! நம்முடைய கலியாணம் தடைப்பட்டதும் அவளால்தான். நீ என்னவோ அவளை ஒன்றும் அறியாத அப்பாவி என்று எண்ணிக்கொண்டிருக்கிறாய்...." என்றான்.

" ஆ ! அப்படியா ? நம்முடைய கலியாணத்தை அவள் எப்படித் தடைப்படுத்த முடியும் ?"

" எப்படியா ! சொல்லுகிறேன், கேள். இங்கே நாம் வந்த சில நாளைக்கெல்லாம் நான் நம்முடைய கல்யாணத்தைச் சிறப்பாக நடத்திவிட வேண்டும் என்று என்னுடைய பந்துக்களிடத்திலும் நண்பர்களிடத்திலும் சொல்லி ஏற்பாடு செய்திருந்தேன். ஆனால், பூங்கோதை தன்னுடைய அத்தை காமாக்ஷியம்மாளுடன் சேர்ந்துகொண்டு உன்னைப்பற்றி ஊராரிடத்தில் வெகு இழிவாகப் பேசியதால், ஊரார் என்னை என்னென்னவோ கேள்விகள் கேட்க ஆரம்பித்துவிட்டார்கள்."

" என்னைப்பற்றி இழிவாகப் பேசினாளா ! நான் என்ன செய்தேன் அவளுக்கு ? ஊரார் உங்களை என்ன கேட்டார்கள்?"

" கண்மணி ஜானகி ! அதை என்னென்று சொல்லுவேன் ! நீ விஷயங்களை அறியாமல் கோபித்துக்கொள்ளுகிறாய்."

" இல்லை. சொல்லுங்கள்....பாதகமில்லை. சொல்லுங்கள். எனக்குத் தெரியவேணும் அல்லவா ? நானும் அவளுடைய விஷயங்களை நன்றாக அறிந்துகொண்டால் நாம் எச்சரிக்கையாக இருக்கலாம் அல்லவா ? சொல்லுங்கள்."

" சொல்லுவதென்ன ? உன் கலியாணத்தைக் கெடுத்தவள் அவள்தான். நீ தேவடியாள் மகள் என்றும், விபசாரி மகள் என்றும், இங்கே வருவதற்கு முன்னால் அப்படி இருந்தாய் என்றும், இப்படி இருந்தாய் என்றும் என்னுடைய பெரிய தாயார் காமாக்ஷியம்மாளிடம் சொல்லிவிட்டாள். அதை ஊரார்........"



" ஐயோ ! அடி பாவி ! நான் உனக்கு ஒரு பாவமும் செய்யவில்லையே ! என் வாழ்க்கையில் ஏன் மண் போடுகிறாய் ? அட தெய்வமே !........பிறகு ?........இன்னும் என்னென்ன செய்திருக்கிறாள்; சொல்லுங்கள்."

" இப்பொழுது தெரிகிறதா, ஜானகி ? அவளுக்கு எப்படியாவது தாலியைக் கட்டி, உன்னைத் தேவடியாள் மகள் என்று சொன்ன அவளை உனக்குத் தாதியாக்குகிறேன்; நீ பயப்படாதே. வீரராஜனை அவள் என்னவோ என்று எண்ணியிருக்கிறாள்."

" ஆமாம், நம்மிடத்தில் இவ்வளவு கொடுமை வைத்திருக்கிற அவள், தங்களை மணம்புரிய எப்படிச் சம்மதிப்பாள் ?"

" எப்படியாவது கழுத்தில் தாலியைக் கட்டிவிடுகிறேன், பாரேன். அதுவரையிலும் தயவு செய்து நீ கொஞ்சம் பொறுத்திருப்பதோடு, அவளுடைய கொட்டத்தை அடக்க நீயும் எனக்குச் சற்று உதவியாய் இருக்க வேணும்........"

இந்தச் சமயத்தில் யாரோ கூப்பிட்ட சத்தம் கேட்டது. உடனே, ஜானகி எழுந்து போய்ப் பார்த்து வந்து, குட்டிப்பட்டி ஜமீன்தார், வீரராஜனைப் பார்க்க வந்திருப்பதாக வேலைக்காரி சுந்தரம் கூப்பிட்டதாகச் சொன்னாள். வீரராஜன் உடனே எழுந்து, "இதோ வந்துவிடுகிறேன், கண்ணே ஜானகி ! எங்கே, ஒரு முத்தம் கொடு...."

சற்று நேரத்துக்கெல்லாம் குட்டிப்பட்டி ஜமீன்தாரும் வீரராஜனும் மேல் மாடியில் இரண்டு சாய்வு நாற்காலிகளில் உட்கார்ந்தார்கள். ஜமீன்தாருடைய முகம் வாடியிருந்தது. ஜமீன்தார் வீரராஜனுடைய நண்பர் குணத்திலும் குறிகளிலும் வீரராஜனுடைய கூட்டத்தைச் சேர்ந்தவர். தம்முடைய தந்தை விட்டுப்போன ஏராளமான செல்வத்தைக் கள்ளிலும் காமத்திலும் கரைத்துவிட்டுக் காத்தவராயனைப் போன்றவர்களுடைய உதவியைக் கருதியிருப்பவர். ஆனால், இன்னும் இவர் ஜமீன்தார்தான். சொத்துக்களெல்லாம் கடனில் முழுகியிருந்தாலும், தம்முடைய ஆடம்பரங்களில் சிறிதுங்

குறைந்தவர் அல்ல. எங்கே போனாலும் இவருக்கு முன்னாலும் பின்னாலும் சேவகர்கள் வழி விலக்கிக்கொண்டு போக வேண்டும். தம்முடைய வீட்டுக்குள்ளேயுங்கூட இவர் நடக்க ஆரம்பித்தால், முன்னால் இரண்டு பேரும் பின்னால் இரண்டு பேரும், வெறும் காற்றையாவது வழி விலக்கிக்கொண்டு போக வேண்டும். கட்டியமில்லாமல் கால் நகர்த்தமாட்டார். வெகு டாம்பீகமான உடை தரிப்பார். பார்க்கிறவர்கள் என்ன நினைத்தாலும், தாம் தம்மை வெகு சுந்தர புருஷனாகவே எண்ணிக்கொண்டிருப்பவர். உலகத்தில் உள்ள இளம் பெண்களெல்லாம் தம்மைக் கண்டு மயங்குவதாக மயங்கியிருப்பவர். ஆனால், படித்தவர். ஆசாரம், தெய்வபக்தி; தன்னடக்கம் முதலான விஷயங்களெல்லாம் தரித்திரர்களுடைய விசாரங்கள் என்று கருதி, அவைகளைத் தம்முடைய எண்ணங்களிலிருந்து பறித்தெறிந்தவர். இயற்கையாகத் தயாள குணமும் பச்சாத்தாபமும் உடையவர்; என்றாலும், தம்முடைய தகப்பனார் இறந்து போனபின் பற்பல விதமான போதைகளில் சிக்கிப் பேதிக்கப்பட்டுப் போனவர். தம்முடைய ஆடம்பர வாழ்க்கையை நடத்தப் போதுமான பணமில்லாமலும் இனிக் கடன் கொடுப்பார் இல்லாமலும் அக்கிரம வழிகளில் இறங்கத் தலைப்பட்டவர்.

குட்டிப்பட்டி ஒரு பெரிய கிராமம்; அதில் இராமையா என்பவர் சிலோனில் ஒரு பெரிய கங்காணியாக இருந்து, மிகுந்த செல்வத்தோடு திரும்பி வந்தவர். வெகு உயர்ந்த வயிரங்களும், பச்சை, நீலம், முத்து முதலிய நவரத்தினங்களும் அவருக்கு எங்கேயோ எப்படியோ கிடைத்திருந்தன. அவைகளுடன் குட்டிப்பட்டிக்கு வந்தவர் மறுபடியும் கங்காணி வேலைக்குப் போக வேண்டிய அவசியமில்லாமல் குட்டிப்பட்டியிலேயே சில தான தர்மங்களும் செய்து, விஜயபுரியில் தனது பெயரால் ஓர் அன்ன சத்திரமும் கட்டி, வசித்து வருகிறார். விஜயபுரிக்கு அடிக்கடி வரப் போக இருப்பதனால், வீரராஜனுடைய அறிமுகம் அவருக்கு ஏற்பட்டது. ஒரு நாள் வீரராஜனைத் தம்முடைய புது மாளிகைக்கு அழைத்து, வெகு விமரிசையாக விருந்து நடத்தினார். தம்முடைய செல்வத்தைக் காட்டிக்கொள்ள வேணுமென்ற ஆசையில், வீரராஜனுக்குத் தம்மிடத்தில் உள்ள அருமையான வயிரங்களையும் மற்ற இரத்தினங்களையும் காட்டியதல்லாமல் வீரராஜனுக்கு மிகவும் விலையுயர்ந்த ஒரு வயிர மோதிரமும் வெகுமதி அளித்தார். வீரராஜன் விஜயபுரியில் செல்வாக்குடையவன் என்றும், அநேகம் பெரிய உத்தியோகஸ்தர்களையும் அறிந்தவன் என்றும், அதனால் அவனுடைய உறவு பிரயோசனமானது என்றும், இராமையாவினுடைய எண்ணம். அன்று முதல் வீரராஜனுக்கு இராமையாவின் தண்டவாளப் பெட்டியின்மேல் கொஞ்சம் நினைவுண்டு....... சமீபத்தில் வீரராஜனுக்கு ஹைகோர்ட்டில் ஒரு வியாஜ்யம் தோற்றுப்போய் சுமார் நாலு லட்சம் ரூபாய் நஷ்டமானது உண்மைதான். அதனால் பணம் தேடவேண்டியதாயிற்று. குட்டிப்பட்டி ஜமீன்தாருக்கோ பணத்தட்டு சொல்லவேண்டியதில்லை. என்ன செய்வது? காத்தவராயன்தான் கையில் இருக்கிறான். ஆனால் காத்தவராயனுடைய தயவு பூங்கோதையைத் திருட வீரராஜனுக்கு வேண்டியிருந்ததால், இந்த வேலையை ஜமீன்தார் மூலமாகவே முடித்துக்கொள்ள வேணும் என்று வீரராஜன் தீர்மானித்திருந்தான்.

ஒரு நாள் ஒரு பெரிய உத்தியோகஸ்தருடைய தயவை நாடி, இராமையா வீரராஜனைப் பார்க்க விஜயபுரிக்கு வந்து, அவனுடைய வீட்டில் தங்க நேர்ந்தது. இராமையா ஸ்நானாதிகளைச் செய்யத் தன் உடைகளைக் களைந்து வீரராஜனிடத்தில் கொடுத்தார். அவைகளுடன் அவர் இடுப்பைவிட்டு என்றும் நீங்காத சாவிக்கொத்தும் இருந்தது. இராமையா நீராடி முடிப்பதற்குள், வீரராஜன் அவருடைய தண்டவாளப் பெட்டிச் சாவியின் 'மால்' எடுத்துக்கொண்டான்.

கொஞ்ச நாளைக்கெல்லாம் இராமையா ஊரில் இல்லாத ஒருநாள் இரவு, அவருடைய இரும்புப் பெட்டி வேறு சாவியினால் திறக்கப்பட்டு, அதிலிருந்த வயிரங்களும் நகைகளும் அடங்கிய சிறு பெட்டி களவு போய்விட்டது. குட்டிப்பட்டி

ஜமீன்தாரின் நந்தவன 'பங்களாவில்' வெகு கட்டுக் காவலான ஓர் அறையின் சுவரில் பதிக்கப்பட்டிருந்த இரும்புப் பெட்டியில் அது கொண்டுவந்து வைக்கப்பட்டது. கொண்டுவந்தவன் காத்தவராயன்; வாங்கி வைத்தவர் ஜமீன்தார். இரண்டு நாள்களுக்குப் பிறகு தான் வருவதாகவும், வந்தபின் இருவரு மாய்ப் பெட்டியைத் திறந்து முன்னால் செய்துகொண்ட ஒப்பந் தப்படி பங்கிட்டுக்கொள்ளலாமென்றும்; அதுவரையிலும் பங்களாவையும் பெட்டியையும் பாதுகாக்க வேண்டும் என்றும் சொல்லி, பூங்கோதையை அபகரிப்பதற்காக வீரராஜன் ஆள் மேல் ஆள் அனுப்பியதால், காத்தவராயன் போய்விட்டான். ஜமீன்தார் வயிரப் பெட்டியின் சாவியைக் காத்தவராயனிடமே கொடுத்துவிட்டுத் தண்டவாளப் பெட்டியின் சாவியையும் பங்களாவின் சாவியையும் வைத்துக்கொண்டு, தினம் இரண்டு தடவை வந்து திறந்து பார்த்து, பெட்டி வைத்தபடியே இருப் பதைத் தணிக்கை செய்து போவார்....

பூங்கோதையைத் தூக்கிக்கொண்டு போன காத்தவராயன், தான் சொல்லியனுப்பியபடி முனியப்பன் கோவில் ஆலமரத்துக்குத் தன்னுடைய ஆள்கள் வந்து சேராததால், தான் மெள்ளப் பதுங்கிப் பதுங்கி இட்டேரிக்கு வந்தான். எதிரில் தன்னுடைய ஆள்களில் மலைக்கள்ளனுக்குத் தப்பி வந்த ஒருவன், பூங்கோதையை மலைக்கள்ளன் கட்டிலோடு கொண்டுபோய்விட்டதைச் சொல்ல, காத்தவராயன் உடனே மிகுந்திருந்த ஆள்களுடன் சப்பாணி முதலான மலைக்கள்ள னுடைய கூட்டத்தாரைத் துரத்தி, அதிலும் தோல்வியுற்று, வெகு விசனத்தோடு தன்னுடைய மறைவிடத்துக்குப் போய் விட்டான். நடந்த விஷயங்களை வீரராஜனுக்குச் சொல்லும் படி ஓர் ஆளை அனுப்பிவிட்டு, தான் அடக்கமுடியாத துக்கத் தோடும் கோபத்தோடும் படுத்துக்கொண்டான். தோல்வியில் வந்த வெட்கத்தால் சூரியன் உதித்தானா என்பதுகூடத் தெரியாதவன் போல் இரண்டு நாள் இருண்ட இடத்திலேயே இருந்தான். அதன்பின் திடீரென்று நினைவு வந்து; குட்டிப் பட்டி ஜமீன்தாருடைய 'பங்களாவில்' பூட்டப்பட்டிருக்கிற



வயிரப் பெட்டியைத் திறந்து, அதிலுள்ள செல்வத்தைப் பார்த்து ஆனந்தத்துடன் பங்கு போட்டுக்கொள்ளுவதனாலா வது அவமானத்தையும் துக்கத்தையும் ஆற்றிக்கொள்ளலாம் என்று எண்ணி, ஜமீன்தாரிடம் போனான்.

இருவரும் யாரும் அறியாதபடி பங்களாவுக்குள் நுழைந் தார்கள். காவல்காரனைக் கூப்பிட்டு, யாரையும் உள்ளே விட்டு விடக்கூடாது என்று உத்தரவு போட்டார்கள்; கட்டடத்தில் பிரவேசித்தார்கள்; தாழிட்டுக்கொண்டார்கள். அறையை ஜமீன்தார் திறந்தார். இருவரும் உள்ளே சென்று, அங்கேயும் உட்புறம் தாழிட்டுக்கொண்டார்கள். சாளரங்களின் கீழ்க் கதவுகளையெல்லாம் மூடினார்கள். சுவரில் இருந்த இரும்புப் பெட்டியை ஜமீன்தார் திறந்தார். வயிரப்பெட்டி வைத்த படியே இருந்தது. காத்தவராயன் எடுத்தான். அறையின் நடுவே இருந்த மேஜையின்மீது அதை வைத்தான். தன் னுடைய இடுப்பில் வெகு கெட்டியாக முடிக்கப்பட்டிருந்த அந்தப் பெட்டியின் சாவியை எடுத்துப் பெட்டியைத் திறந் தான். அதில் பட்டுத்துணிகளாலும் பளபளப்பான காகிதங் களாலும் ஆக்கப்பட்டிருந்த பொட்டலங்களை ஜமீன்தார் ஒவ் வொன்றாக எடுத்து மேஜையின்மீது வைத்தார். இதற்குள் காத்தவராயன் அவைகளுக்குள் இருந்த வெகு அழகான ஒரு பட்டுப் பெட்டியை மிக்க ஆசையோடு திறந்தான். உற்று உற்றுப் பார்த்தான். வெளிச்சம் போதவில்லை என்று ஜன்ன லண்டை போய்ப் பார்த்தான்......

கலங்காத கல்நெஞ்சனான காத்தவராயனுடைய கை கால்களெல்லாம் நடுக்கெடுத்து, வாய் குளறி, 'ஐயோ! இதென்ன ஐயா ?........இதில்....'' என்று கத்தினான். ஜமீன் தார் ஓடிவந்து பார்த்தார். கண்ணைப் பறிக்கக்கூடிய மணி களும் வயிரங்களும் இருக்கின்றன என்று எண்ணித் திறக்கப் பட்ட அந்தப் பட்டுப்பெட்டியில் கல்லும் மண்ணும் கலந் திருந்தன. பிறகு, அவசரமும் ஆத்திரமுமாக எல்லாப் பொட்டலங்களையும் சோதித்தார்கள். யாவும் அப்படியே!

என்னென்று சொல்லுவது அவர்களுடைய நிலையை! கல் தூண்களைப் போல அப்படியே அசைவற்று ஒருவரையொருவர் உற்று உற்றுப் பார்த்துக்கொண்டே நின்றார்கள். பிறகு, காத்தவராயன் பெட்டியை இன்னும் சோதித்தான். அதன் அடியில் ஒரு சிறு காகிதத்துண்டு கிடந்தது. அதை எடுத்துப் பார்த்தான். அதில் மூன்று நாமக் குறிகள் போடப் பட்டிருந்தன!.......

காத்தவராயனும் ஜமீன்தாரும் மறுபடியும் அசைவற்று, ஒருவரை ஒருவர் விழுங்கிவிடப் போவது போலப் பார்த்துக் கொண்டு நின்றார்கள்.

தன்னைவிடப் பலசாலியும் தந்திரசாலியும் இல்லை என்று, நினைத்தது நினைத்தபடி செய்துவந்த காத்தவராய னுடைய உள்ளம் கலங்கிவிட்டது. அவனையே நம்பியிருந்த ஜமீன்தாருடைய ஆசையும் மோசம் போயிற்று.

கடந்த இரண்டு மூன்று காரியங்களிலும், இந்த விஷயத் திலும் தன்னை முற்றிலும் முரியடித்துவிட்ட யாரோ ஒருவனை எண்ணி எண்ணிக் காத்தவராயனுடைய மீசைகளும் உதடு களும் துடித்தன. அவன் இன்னான் என்று தான் அறிய முடியாவிட்டாலும், அவனைக் கண்டுபிடித்து, உயிரோடு மென்று தின்றுவிட வேண்டும் என்ற வெறி வந்தவனாய், உருட்டுவதும் மிரட்டுவதுமாகக் காத்தவராயன் நெடுநேரம் தனக்குள்ளேயே உறுமிக்கொண்டிருந்து, பின்பு, "இந்தக் காரியம் செய்த பயலைக் கண்டுபிடித்துக் கணுக்கணுவாக வெட்டி, மரத்துக்கொரு துண்டமாகக் கட்டாவிட்டால், நான் காத்தவராயன் அல்ல. இதற்கு வேண்டிய ஏற்பாடுகளைச் செய்கிறேன். நான் சாயந்திரம் வருகிறேன்" என்று சொல்லி விட்டுப் போய்விட்டான்.

ஆசை கெட்டும், எங்கே காத்தவராயன் தன்மேல் ஏதாவது கோபித்துக்கொள்ளுவானோ என்று அச்சத்தோடும் நின்று கொண்டிருந்த ஜமீன்தார், காத்தவராயன் போனவுடன், மேஜையின்மீது கிடந்த பண்டங்களையெல்லாம் போட்டது



போட்டபடியே விட்டுவிட்டு, அறையையும், கட்டடத்தின் வெளிக்கதவையும் பூட்டிக்கொண்டு, காவல்காரனைக் கூப் பிட்டு, 'ஏன் சரியானபடி காவல் இருக்கவில்லை' என்று அவனைக் கண்டித்துவிட்டு, இந்தத் துக்கத்தை நேராகச் சொல்லியழலாம் என்று இப்போது வீரராஜனிடம் வந்திருக் கிறார்.

"என்ன வீரராஜா! அவ்வளவு கஷ்டப்பட்டு முடித்த இந்தக் காரியம், இப்படியாகிவிட்டதே!........கொஞ்சங்கூடச் சந்தேகிக்க முடியாதபடி........"

"சந்தேகம் என்ன? அந்த மலைக்கள்ளனுடைய வேலை தான் இது. சாவி மாற்றுவதிலும் அவன் வெகு சமர்த்தன் என்று தெரிகிறது. இனி, அவனை இன்னான் என்று கண்டு பிடித்து, அவனைத் தொலைக்கிற வரையிலும் நமக்கு ஆபத்துத்தான். எந்த விதத்திலும் நமக்கு இடையூறு செய்ய வேண்டுமென்பதுதான் அவனுடைய ஆசை என்று தெரிகிறது. பூங்கோதையை அடித்துக்கொண்டு போய்விட்டான். ஆ! என் மனம் துடிக்கிறதே! இவ்வளவு பெயரெடுத்தும் இந்தக் கள்ளப் பயலுக்கு இளைத்துப் போனோமே....சரி, ராமையாவி னுடைய பெட்டிக்குச் சாவி செய்து கொடுத்தது நான் என்கிற விஷயம் காத்தவராயனுக்குத் தெரியுமா?" என்று வீரராஜன் வெகு மெதுவான குரலில் கேட்டான். "இல்லை, தெரியாது. சாவிகளை அவனிடத்தில் கொடுத்தபோது, 'என்னுடைய நண்பர் ஒருவர் கொடுத்தார்' என்றும், பங்கு போடும்போது மூன்று பாகமாக்கிக் காத்தவராயனுக்கு ஒரு பாகமும், சாவி செய்து கொடுத்த அந்த நண்பருக்கு ஒரு பாகமும், எனக்கு ஒரு பாகமும் கொடுக்க வேணும் என்றும் மொத்தமாகச் சொன்னதைத் தவிர, வேறொன்றும் நான் அவனிடம் சொல்ல வில்லை. ஏன்? தெரிந்தால்தான் என்ன?"

"ஏனெனில், இன்னோர் இடத்துக்குக் காத்தவராயனை ஏவவேண்டும் என்றிருக்கிறேன். அந்த இடம் கங்காணி வீட்டை விடப் பெரிய இடம். அது பலித்தால் இந்த எல்லா நஷ்டங்

களையும் ஈடு கட்டிக்கொள்ளலாம்....ஆமாம்.........இன்னொன்று மறந்துபோனேன்...வயிரப் பெட்டியை உங்கள் இரும்புப் பெட்டியில் வைத்துப் பூட்டு முன்னால் திறந்து பார்த்தீர்களா?''

"திறந்து பார்த்தோம். ஆனால் கலைக்கவில்லை. மேலாக இருந்த இரண்டொரு பொட்டலங்களைத் திறந்து பார்த்துவிட்டுக் காத்தவராயன் அவசரமாகப் போகவேண்டும் என்றதால், பிறகு பார்த்துக்கொள்ளுவோம் என்று பெட்டியின் சாவியை நானே அவனிடம் கொடுத்து அனுப்பிவிட்டேன். ஆனால், அன்றைக்குப் பார்த்தபோது அந்த 'மஹமல்' பெட்டியில் வெகு பெரிய வயிரங்கள் பளபள என்று கண்ணைப் பறித்தது எனக்கு நினைவிருக்கிறது."

"நீங்கள் தனக்கு வெகுமதி கொடுத்ததாகக் காத்தவராயன் என்னிடத்தில் காட்டிய வயிரக் கடயம் ஏது ?"

"ஓ ! அதுவா ? அது எங்கள் வீட்டுப் பழைய நகைகளில் மிச்சம் இருந்த ஒன்று. ஏராளமான வயிரங்களைக் காத்தவராயன் கொண்டுவந்துவிட்டான் என்ற சந்தோஷத்தால் அவனுக்கு என்னுடைய வெகுமதியாக அதைக் கொடுத்தேன்."

"அப்படியா?....சரி, இனி அந்த மலைக்கள்ளனைக் கண்டு பிடித்தே ஆக வேண்டும். அவனை எப்படியாவது ஒழித்தால் அல்லாமல் நமக்குச் சுகமில்லை. ஒவ்வொரு காரியத்திலும் கைக்கெட்டியது வாய்க்கெட்டாதபடி அவன் செய்து விடுகிறான். இவன் யார் என்பதும் தெரியவில்லையே! இவன் நம்முடைய எல்லா ரகசியங்களையும் உளவறிந்து வருகிறான் என்று தெரிகிறது" என்று வீரராஜன் விசனப்பட்டான்.

"போலீசாரால்கூட இவனைக் கண்டுபிடிக்க முடியவில்லையே" என்றார் ஜமீன்தார்.

"இல்லையே! இன்ஸ்பெக்டர் முதலானவர்கள் நமக்கு இவ்வளவு பழகியவர்களாக இருந்தும், அந்த மலைக்கள்ளன் நம்முடைய நண்பர்களான **சோமசுந்தரம், நீலமேகம், கிருஷ்ணையா** ஆகிய மூன்று பேரையும் மலைக்குக் கொண்டு போய்க் கொன்றுவிட்ட கொலையையுங்கூடக் கண்டுபிடிக்க வேண்டிய முயற்சிகளைச் செய்யாதிருக்கிறார்களே! அடடா! அந்த மூன்று நண்பர்களும் இப்போதிருந்தால், நமக்கும் காத்தவராயனுக்கும் எவ்வளவோ ஒத்தாசையாக இருக்குமே. அப்பா ! பூங்கோதையை இந்த மலைக்கள்ளன் அவ்வளவு சுலபமாக அடித்துக்கொண்டு போகத்தான் அவர்கள் விட்டிருப்பார்களா! இல்லை, இந்த வயிரப் பெட்டிதான் இப்படிப் போயிருக்குமா! அவர்கள் நம்மோடு இருந்த வரையிலும் அவன் ஜம்பம் சாயவில்லை. அதிலேதான் எப்படியோ அவர்களை அழுத்திவிட்டான். சரி, போனதையெல்லாம் எண்ணி எண்ணி வருந்திக்கொண்டிருப்பதில் பயனில்லை. ஜமீன்தாரவர்களே! என்ன கஷ்டம் வந்தாலும் சரி, மலைக்கள்ளனை மடக்க நம்மாலான முயற்சியெல்லாம் செய்யவேண்டும். சற்றும் சலிக்கக் கூடாது. நேற்று முழுவதும் 'இன்ஸ்பெக்டர்' சுந்தரத்தோடு இது விஷயமாகப் பேசிவிட்டு வந்தேன். அவர் தம்மாலானதையெல்லாம் செய்வதாகவும், வேண்டுமானால் பட்டாளத்துடனும் சென்று, அந்த மலைக்கள்ளனுடைய ரகசிய இடங்களையெல்லாம் தகர்த்துவிட ஏற்பாடு செய்துகொண்டிருப்பதாகவும் சொன்னார். நாமும் அவருக்கு உதவியாக இருக்க வேண்டும். அந்த மலையினுடைய ரகசிய வழிகளைக் காட்டக்கூடிய ஆள்களைக் கைவசப்படுத்த வேண்டும். நான் செய்து கொடுப்பதாக ஒப்புக்கொண்டு வந்திருக்கிறேன். அதற்கு வேண்டிய புலன்களையும் விசாரித்து வைத்திருக்கிறேன்....இப்போதைக்கு ஒரு லட்சம் ரூபாய்தான் வேண்டும். அதில் நான் ஓர் ஐம்பதினாயிரம் தயார் செய்கிறேன். நீங்கள் ஓர்.........."

"ஏது ? வீரராஜா ! என்னுடைய நிலைமை உமக்குத் தெரியாதா? ஐம்பதினாயிரத்துக்கு நான் இப்போது எங்கே போவேன்? எப்படிச் சுற்றிச் சுரண்டிப் பார்த்தாலும் ஒரு பத்துப் பதினைந்து ஆயிரத்துக்கு நகைகள்தாம் இருக்கும். ரொக்கம் ஏது ?"

"என்ன செய்வது ? எப்படியாவது பார்க்கத்தான் வேணும். ரொம்பவும் நெருக்கடியான சமயம். இந்தச் சமயத்தில் எது வந்தாலும் பின்வாங்கக்கூடாது. ஏன், காவன்னாமானா—ஆனாரூனா—வானாமேனாவிடம் வாங்க முடியாதா ?"

"முடியாது. அவர் சரியான ஈடில்லாமல் இனிமேல் பணங் கொடுக்க முடியாதென்று ஒரு வாரத்துக்கு முன்னால் சொல்லி யனுப்பிவிட்டார்."

"அதற்கென்ன, ஈடு காட்டுவதுதானே ?"

"எதைக் காட்டுவது ? எல்லாச் சொத்துகளும் ஜமீன் உள்பட ஏற்கனவே இரண்டு மூன்று அடைமானங்களில் சிக்கி யிருக்கின்றன. ஒன்றிலும் வில்லங்கப்படாமலிருந்த கரைவழி நிலங்களையும்கூடச் சொக்கேசருக்கு ஈடுவைத்தாகிவிட்டது. நான் என்ன செய்யட்டும் ?"

"உங்கள் மனைவியின் பேரில் இருக்கிற நிலங்களை...."

"ஐயோ ! அவள் அதற்கு ஒப்புக்கொள்ளவே மாட்டாள். அவள் ஒருகால் ஒப்புக்கொண்டாலும் என் மாமனார்...."

"மாமனார் கிடக்கிறார். நீங்கள் உங்களுக்கு ஒரு பெரிய ஆபத்து வந்துவிட்டதாகச் சொல்லி, உங்கள் மனைவியை எப்படியாவது கையெழுத்துச் செய்யச் செய்யுங்கள். நான் பணம் வாங்கித் தருகிறேன்."

"அது ரொம்ப கஷ்டமான காரியம்... அவள்."

"என்ன ஜமீன்தார் ? ஏன் தயங்குகிறீர்கள் ? இந்தப் பூங்கோதையை விட்டுவிட்டேனா நான் ?....எனக்குக் கல்யாணம் ஆகிவிட்டால், ஒன்பது லட்சம் ரூபாய்க்குக் குறையாமல் கையில் இருக்கிறது. அதிலிருந்து உங்களுக்கு வேண்டியதை நான் தருகிறேன். உங்கள் கடன்களையெல்லாம் நான் கட்டுகிறேன். பயப்படவேண்டாம். அதோடு இந்த மலைக் கள்ளனையும் பிடித்துவிட்டால், அவன் கொள்ளையடித்து வைத்திருப்பதெல்லாம் நம்முடையதாகிவிடும். இப்போதைக்கு நீங்கள் ஓர் ஐம்பதினாயிரத்துக்கு......."



"ஆமாம். மலைக்கள்ளனைப் பிடித்தாலும் அவனிடத்தில் அகப்படுகிற சொத்துகளைச் சர்க்கார் அல்லவோ...."

"சர்க்கார் பயம் உங்களுக்கு எதற்கு ? அதற்கெல்லாம் நானாச்சு. சர்க்கார் மனிதரெல்லாம் நம்ம ஆசாமிகள்தாமே! யோசிக்க வேண்டாம். எப்படியோ சரி செய்துவிடுகிறேன். உங்கள் மனைவியை மட்டும் கையெழுத்துப்போடச் செய் யுங்கள்."

"சரி, பார்க்கிறேன்........ஆமாம். பூங்கோதையை எப்படி அடைய முடியும் ? அவள் இருந்தாலாவது எப்படியோ எண்ண லாம். மலைக்கள்ளனிடம் இருந்து தப்பி வந்தால் அல்லவா கல்யாணப் பேச்சு ?"

"ஓ ! அவள் வந்துவிடுவாள். வெகு கெட்டிக்காரி. மஹா புத்திசாலி. நல்ல தைரியமுள்ளவள். நல்ல உத்தம குணங் கள் உடையவள்... அன்றியும், அந்தப் பயல் எனக்கு இடைஞ்சல் செய்யவேண்டும் என்று அவளைக் காத்தவ ராயனிடத்திலிருந்து பறித்துக்கொண்டு போயிருக்கிறானே யொழிய, அவளுக்கு ஒரு தீங்கும் செய்யமாட்டான். அவளும்........"

"பூங்கோதை காணாமல் போனதைப்பற்றிப் போலீஸார் என்ன எண்ணுகிறார்கள் ? காத்தவராயன்மேல்...."

"போலீஸார் பெரும்பாலும் அது மலைக்கள்ளனுடைய வேலையே என்றுதான் தீர்மானிக்கிறார்கள். இன்ஸ் பெக்டருடன் நான் பேசியவரையில் நம்மிடத்தில் அவர்களுக்குச் சந்தேகமிருப்பதாகவே தோன்றவில்லை" என்று சொல்லி, வீரராஜன் பெருமூச்சு விட்டான்.

"ஆனால், சப்இன்ஸ்பெக்டர் ஆறுமுகம் விசாரித்து வரு வதைப் பார்த்தால், எனக்கு வேறு விதமாகப் படுகிறது. சொக்கேசர் உம்மீது பலமாகச் சந்தேகப்படுவதாக சப்இன்ஸ் பெக்டரிடம் சொல்லியிருப்பதாகவும், சப்இன்ஸ்பெக்டருக்கு உம்மீது ஒரு கண்ணிருப்பதாகவும் தெரிகிறது."

"ஆம். அது விஷயமாக எனக்கும் கொஞ்சம் காதில் விழுந்தது. இருந்தாலும் இந்த சப்இன்ஸ்பெக்டர் என்ன செய்துவிட முடியும்? சொக்கேசருக்கும் நாம் கொஞ்சம் சூடு காட்ட வேண்டும்...."

இந்தச் சமயத்தில் ஒரு வேலைக்காரன் வந்து ஏதோ சொல்ல வாயெடுத்தான். பின்னாலேயே காத்தவராயன் வெகு அவசரமாக இவர்கள் பேசிக்கொண்டிருந்த கூடத்துள் நுழைந்தான். இருவரும் வரவேற்றார்கள்.

"காத்தவராயா, உனக்கு ஆயுசு நூறு. நான் இப்போது தான் நினைத்தேன். நீயும் வந்துவிட்டாய்" என்றான் வீரராஜன்.

"என்ன! காத்தவராயா! சாயங்காலம் வருவதாக....நான் வீரராஜனைப் பார்த்து நாளாச்சு. பொழுதுபோக்காக இப்படி.... வந்தேன்" என்று ஜமீன்தார் கொஞ்சம் பயத்தோடு சொன்னார். வயிரப் பெட்டி விஷயம் வீரராஜனுக்குத் தெரியாதென்று காத்தவராயனின் எண்ணம். தெரிந்தால் வேறொன்றும் இல்லா விட்டாலும் தான் பூங்கோதை விஷயத்தில் தோற்றுப்போன வெட்கக்கேட்டோடு இதையுங் கேட்டு வீரராஜன் தன்னைப் பற்றி அதிகக் குறைவாக எண்ணிவிடுவானோ என்ற பயம். பூங்கோதையை மலைக்கள்ளன் பறித்துக்கொண்டு போனபின், காத்தவராயன் இதுவரையிலும் வீரராஜனைப் பார்க்கவில்லை.

"மத்த சோலியெல்லாங் கெடக்கட்டும். நாம் இனிச் சும்மா இருக்கக்கூடாதுங்க. நம்ம 'ஏட்டு' கறுப்பையாவைக் கண்டு பேசினேன். சொக்கேசர் நம்ப மேலே போலீஸாரிடம் ரொம்ப ரொம்பச் சமுசயம் சொல்லியிருக்கிறதாகத் தெரியுதுங்க" என்று கூறிய காத்தவராயன், வீரராஜனைப் பார்த்தான்.

"ஆமாம், காத்தவராயா, சொக்கேசர் நம்மீது சமுசயம் சொல்லியிருப்பது என் காதிலும் விழுந்தது. அதைப்பற்றித் தான் யோசனை செய்துகொண்டிருந்தோம். சொக்கேசருக்கு அதிகாரிகளிடத்தில் அதிகப் பழக்கம் இல்லாவிட்டாலும், அவரிடத்தில் அதிகாரிகள் அதிக மதிப்பு வைத்திருக்கிறார்கள். ஜில்லா அதிகாரிகளிடத்திலும், பட்டணத்தில் பெரிய உத்தி யோகஸ்தர்களிடத்திலும் தக்க ஆதரவு தேடிக் கொடுக்கக்கூடிய பெரிய பெரிய நண்பர்கள் அவருக்கு அங்கங்கே இருக்கிறார்கள். சந்தேகங்கள் பலப்பட்டு, வேலை செய்வதற்குள் நாம் தக்க முன் ஜாக்கிரதை செய்துகொள்ள வேண்டும்."



"ஆமாங்கோ எஜமானே. அதோடு இந்த மலைக்கள்ளப் பயலை ஒழிக்கவேண்டியது நம்ம மொதல் வேலைங்க. அதுக்கு வேண்டியதெல்லாம் செய்யணுமுங்க. நல்லவேளையா அந்தப் பயல்களுடைய சேதிகளையெல்லாம் தெரிஞ்ச ஆள் ஒருத்தன் சிக்கியிருக்கிறானுங்க. அவன் மூலமா எல்லா ஒளவையும் தெரியலாமுங்க. ஆனால், கொஞ்சம் பணத்தை மட்டும் பணமாய்ப் பார்க்காமல் செலவு செய்ய வேணுமுங்க. முக்கிய மாய் இப்ப அதைப் பத்திதான் கவனிக்கணும்."

"எனக்கும் அது தெரியும். அது விஷயமாக நானும் ஜமீன் தாரும் இப்போதுதான் பேசிக்கொண்டிருந்தோம். அதற்கு வேண்டியதையெல்லாம் செய்வோம். (ஜமீன்தாரைப் பார்த்து) என்ன ஜமீன்தாரே, பார்த்தீர்களா? இந்தச் சமயத்தில் நாம் தயங்கக்கூடாது. உடனே நான் சொன்னபடி தாங்கள் தயார் செய்ய வேண்டும்."

"சரி, பார்க்கிறேன். நான் இப்போதே போய் ஆரம்பிக் கிறேன்" என்று ஜமீன்தார் எழுந்தார்.

"சந்தோஷம். தயவு செய்து உடனே முயற்சியெல்லாம் செய்து, காரியத்தையும் முடித்துவிட வேணும். இல்லையானால் எல்லாம் கெட்டுப்போகும்" என்று வீரராஜன் சொல்லிக் கொண்டிருக்கும்போதே ஜமீன்தார் உத்தரவு வாங்கிக்கொண்டு போய்விட்டார்.

ஜமீன்தார் போனபின், வீரராஜன், காத்தவராயனைப் பார்த்து, "காத்தான், என்ன நாம் நினைத்தது இப்படியாகிவிட்

டதே. இவை போன்ற தோல்வியும் அவமானமும் நமக்கு இதுவரையிலும்....''

''ஐயோ! அதையேஞ் சொல்றீங்கோ. எனக்குச் சோறுஞ் செல்ல மாட்டேங்குது, தூக்கமும் வரமாட்டேங்குதுங்க. இருக்கட்டும், விட்டேனா இவனை ! நீங்க மட்டும் கொஞ்சம் பணத்துக்கு....''

''பணக்கவலை உனக்கு வேண்டாம்; காத்தவராயா. நானும் ஜமீன்தாரும் பார்த்துக்கொள்ளுகிறோம். ஜமீன்தார் கொடுக்காவிட்டாலும் நானாச்சு. ஆனாலும், பூங்கோதையை அந்த மலைக்கள்ளனிடமிருந்து மீட்பது எப்படி என்ற ஏக்கம் பெரியதாய் இருக்கிறது. போலீஸார் சரியானபடி வேலை செய்து, அவனுடைய ரகசியமான இடங்களையெல்லாம் கைப் பற்றினால் அல்லாமல், அவளை நாம் காணமுடியாது. அதுவரை யிலும் பூங்....''

''அப்படி எண்ணாதிங்கோ சாமி! நானென்ன காத்த வராயனா என்ன ? ஏமாளி என்று நினைக்கிறீங்களா ? ஔவு களையெல்லாம் கண்டுபிடிக்க, அங்கங்கே வேண்டிய துப்பு வச்சி சாக்கிரதை செய்திருக்கிறேனுங்கோ.''

''என்ன ?''

''அந்த மலைக்கள்ளனுடைய ஒளவுகளையெல்லாம் தெரியக்கூடிய ஏற்பாடு செய்திருக்கிறேன். நீங்க யோசிக்க வேண்டாமுங்க....''

''காத்தவராயா; என்ன தைரியப்படுத்திக்கொண்டாலும் என் மனம் என்னவோ கலங்குகிறது. நாம் தோற்றுப் போனோமே என்ற வெட்கம் மட்டுமல்ல. வெகு நாளாக........ ஐயோ ! இலவு காத்த கிளியைப் போல்........ஐயோ ! என் அருமைப் பூங்கோதையை அவனுக்குப் பறிகொடுத்துவிட் டேனே! என்னுடைய ஆசையெல்லாம் அழிந்துவிட்டதே ! என் கனவெல்லாம் கலைந்துவிட்டதே ! ஆ ! அந்த மங்கையர்க்



கரசியை, என் மனசைக் கொள்ளை கொண்ட மாதர் சிகா மணியை, என் மாமன் மகளை, அந்தக் கள்ளப் பயல் கையில் பிடித்துக் கொடுத்துவிட்டோமே! அவள் வீட்டோடு இருந்தால், அடிக்கடி தூரத்திலிருந்தபடியாவது அவளைக் கண்டு களிப் பேனே! அவள் இங்கிருந்தால் ஒரு நாளைக்கில்லாவிட்டாலும் ஒரு நாளைக்காவது அவளுடைய மனங்கரைந்து, என்னை மணந்துகொள்ளுவாள் என்று எண்ண மார்க்கம் இருந்தது. எல்லாம் போய், அந்தக் கட்டழகியை ஒரு திருட்டுப் பயல் வசமாக்கிவிட்டோமே ! ஆ ! அவளை அவன் என்ன செய் வானோ ! அவளை நாம் மறுபடியும் காண்பதெப்படி ? அவளை அவன் விட்டுவிடுவானோ ?....''

''என்னாங்க, சாமி, இப்படிக் கலங்கிப் போனீங்க ? அப்படி ஒண்ணுங் கவலைப்படாதீங்க, சாமி. அந்தம்மாளை அவன் ஒண்ணுஞ் செய்ய முடியாதுங்க. அந்தம்மா வந்துடுவாங்க. பயப்படாதிங்க; சாமி.''

''அதென்ன காத்தவராயா; அவ்வளவு உறுதியாகச் சொல்லுகிறாயே ! எனக்கென்னவோ பயமாகத்தான் இருக் கிறது. அந்த....அந்த....அந்த....அருமைப் பெண் கனியைப் பார்த்த யாருக்கும் விட்டுவிட மனம் வராது.''

''அடடா! அதென்ன; இப்படியெல்லாம் எண்ணுறிங்க? அதெல்லாம் நான் விசாரிச்சுட்டேனுங்க. நீங்க பயப்படாதிங்க. அந்த மலைக்கள்ளனிடத்தில் **சப்பாணி** என்று, அவனுக்கு முக்கியமான ஆள் ஒருத்தன் ரெண்டு நாள் அந்த மலையிலிருந் தானுங்க அவன் நமக்கு ரொம்ப வேண்டியவனுங்க. அவன் சொன்னானுங்க—அந்தம்மாளை அந்த மலைக்கள்ளன் கூட்டிக் கொண்டு போகும்போது, என்னமோ வேடிக்கைத் தமாசு போலப் பேசினானுங்களாம். அதுக்கு அந்தம்மாள் ரொம்பக் கோவிச்சுக்கிட்டு, 'இந்தக் கேலிப் பேச்செல்லாம் எங்கிட்ட வச்சிக்காதே. சாக்கிரதை என்னை ஒடனே ஊட்டுக்கு அனுப்புறாயா? இல்லையா ?'ண்ணு சொன்னாங்களாம்,

ஊட்டுக்கு அனுப்புவதாக அவனும் சத்தியம் செய்தானுங் களாம்.''

''கள்ளனுக்குச் சத்தியமேது? ஏதோ ஒரு சமயத்தில் அப்படிச் சொன்னால், அதன்படியே நடப்பான் என்பது என்ன நிச்சயம்? தானே சர்வாதிகாரியான ஓர் ஏகாந்தமான இடத்தில் சிக்கிக்கொண்ட அந்தச் சுந்தரியை....''

''தனியாவா! அதெல்லாம் ஒண்ணுஞ் செல்லாதுங்க. இன்னொரு சேதி கேட்டிங்களா? அந்த மலைக்கள்ளனுக்கு ஓர் ஆசைக்காரி அங்கேயே இருக்கிறாளுங்க. அவள் மஹா கெட்டிக் காரிங்களாம். அவள் அறியாமல் அவன் எந்தக் காரியமும் செய்ய முடியாதுங்க. அவ அவனைப் பிச்சி, பிச்சிப் புடு வாளுங்க.''

''அப்படியானால், பூங்கோதையை அவன் வீட்டுக்கு அனுப்புகிறான் என்பதை நாம் கவனித்துப் பார்க்க வேண்டும்.''

''நீங்க ஒண்ணுக்கும் அஞ்சாதிங்க. அதுக்கெல்லாம் தகுந்த ஏற்பாடு செய்திருக்கிறேனுங்க. விட்டேனா நான் அந்தப் பயலை! அந்த மலையிலிருந்து போறவங்க வாறவங்களைக் கவனிச்சிப் பார்க்கமட்டும் ரொம்பக் கெட்டிக்காரனுங்களாகப் பதினைந்து ஆள்களைக் காவல் போட்டிருக்கிறேனுங்க. அவனுங் களுக்குத் தெரியாமல் அங்கே குருவி, காக்காகூடப் போகவர முடியாதுங்க. இன்னும் அந்த மலையில் நடக்கக்கூடிய ரகசியங் களையெல்லாம் கண்டு பிடிச்சிச் சொல்லத் தகுந்த யோசனை யெல்லாம் செய்திருக்கிறேனுங்க....ஆனாக்கா....எண்ணிப் பார்க் காமல், இந்த ஆளுங்களுக்குப் பணத்தை மட்டும்....ஊம்....ஊம்.'

''பணத்துக்கு ஒன்றும் பயப்படாதே. எவ்வளவு ஆனாலும் சரி. ஆனால் இன்றைக்கு ஒரு பெரிய தொகை....உம்....ஓர் இடத்துக்குக் கொடுக்க வேண்டும். நாளை உனக்கு வேண்டிய பணம் தருகிறேன். நீ மட்டும் தளர்ந்து போகக்கூடாது, காத்தவராயா.''



''அதென்ன அப்படிச் சொல்றிங்க? இந்த உசிரு ஒங்குளு துங்க....''

''அது எனக்குத் தெரியும்....சரி....நாளை, மறுதினம் ஒரு கொழுத்த இடத்தில்....நான் ஒரு யோசனை செய்திருக் கிறேன்....உன் சாமர்த்தியத்தைக் காட்ட வேண்டும். அதில் நமக்கு நல்ல வேட்டை; வேண பணம்....என்ன?''

''அதுக்கென்னாங்கோ. உங்க பேச்சுக்கு அட்டியுண்டுங் களா?''

''சரி, இன்றிரவு பத்து மணிக்கு மேல் நம்ம தோட்ட வீட்டுக்கு வா. எல்லா விவரமும் சொல்லுகிறேன்.''

''அப்படியே ஆகட்டுங்க.......''

## அத்தியாயம் 8

பூங்கோதை, தன்னை மலைக்கள்ளன் நிச்சயமாக வீட்டுக்குக் கொண்டுபோய்ச் சேர்ப்பிப்பதாகச் சொன்ன உறுதி மொழியினால் சிறிது கவலை குறைந்து, சின்னியம்மாள் அழைத்தவுடன் தடை சொல்லாமல் மாடியை விட்டுக் கீழே இறங்கிப் பின் கட்டிற்குப் போனாள். இதுவரையிலும் உள்ளே போக மறுத்திருந்தாள். சின்னியம்மாளுடன் பேசிக்கொண்டே சமையல் விடுதி, சாமான் தட்டுமுட்டுகள் முதலியன வைக்குமிடம் இவைகளையெல்லாம் கவனத்தோடு பார்த்தாள். ஒவ்வோர் அறையும், அங்குள்ள பண்டங்களும், பாண்டங்களும் வெகு சுத்தமாகவும் நாகரிகமாகவும் இருக்கக் கண்டு, "அம்மா, உங்களைப் பார்த்தால் கள்ளர் கூட்டத்தில் இருக்கத் தகாதவர்களாகக் காணப்படுகிறீர்கள். நீங்கள் யார்? என்ன ஜாதி? இந்த மலையில் இங்கே இவ்வளவு மர்மமானவர்களோடு இருக்க வேண்டிய நியாயம் என்ன? சொல்லமாட்டீர்களா?" என்றாள்.

"பூங்கோதையம்மா, உன்னுடைய கேள்வி வெகு புத்திசாலித்தனமானதே. உண்மைதான்; நாங்கள் கள்ளர்களல்ல. அதற்குமேல் தயவுசெய்து என்னை ஒன்றும் கேட்க வேண்டாம். நான் சொல்லக்கூடாது....அது கிடக்கட்டும், நீ மிகவும் வாடியிருக்கிறாய், ஸ்னானம் செய். வேறு சுத்தமான புடைவை தருகிறேன்; உடையை மாற்றிக்கொள்; தலையை வாரிக்கொள்ளு. கொஞ்சம் ஆகாரம் செய்துகொண்டு பெரியவர்களைப் போய்ப் பார்த்துவிட்டு வா. நீ ஒன்றுக்கும் யோசிக்க வேண்டாம்; உன்னை வீட்டிற்குக் கொண்டுபோய்ச் சேர்ப்பார்கள். அவர் ரொம்ப அருமையானவர்" என்றாள் சின்னியம்மாள்.

"இல்லையம்மா, எனக்கு ஒன்றும் வேண்டாம்; இந்த உடையே போதும். முன் பால் சாப்பிட்டதே போதும். தலையை



வாரிக்கொள்ளாவிட்டாலென்ன? பரவாயில்லை........வேண்டுமானால் ஸ்னானம் செய்கிறேன்........"

"செய்கிறாயா? செய்யம்மா. வெந்நீர் வேண்டுமா? இதோ இப்படி வா" என்று சின்னியம்மாள் வெகு சுத்தமான ஸ்னான அறைக்கு அழைத்துக்கொண்டு போனாள்.

பூங்கோதை நீராடி முடிப்பதற்குள், சின்னியம்மாள் ஒரு நல்ல புடைவை, சீப்பு, கண்ணாடி, கூந்தலெண்ணெய் முதலானவைகளையெல்லாம் கொண்டுவந்து வைத்துவிட்டு, அங்கே ஏராளமாகப் பயிர் செய்யப்பட்டிருந்த செடிகளிலிருந்து ரோஜா, இருவாட்சி, மல்லிகை முதலிய புஷ்பங்களைக் கொய்து வந்து; தலைக்கு வைக்கக்கூடியதாக இரண்டு அலங்காரமான செண்டுகளைத் தொடுத்தாள்.

பூங்கோதை ஸ்னானம் செய்துவிட்டு வந்து, சின்னியம்மாள் உபசரித்த அலங்காரப் பொருள்களையும் வேறு உடையையும் கண்டு, "அம்மா, உங்களுடைய அன்பை நான் மிகவும் பாராட்டுகின்றேன். இந்த இடத்தில் உங்களுடைய துணை கிடைத்தது என்னுடைய பாக்யமே. எனக்கு இவைகளெல்லாம் வேண்டாம். என்னை அலங்கரித்துக்கொள்ள மனம் வரவில்லை. என்னுடைய ஏக்கமெல்லாம் என் அத்தையின் மேலிருக்கிறது. கள்ளர்கள் கொடுத்த விஷத்தால் அவர்கள் என்ன நிலைமையிலிருக்கிறார்களோ தெரியவில்லை. சிறு வயதிலேயே தாயை இழந்த தீவினையுடைய என்னை, அத்தாயைக்காட்டிலும் அன்போடு தாங்கி வளர்த்த என் அத்தை...." என்று கண் கலங்க ஆரம்பித்தாள். சின்னியம்மாளுடைய முகமும் பரிதாபத்தில் சுருங்கி, மறுபடியும் திடீரென்று மலர்ந்து, "ஆ! சொல்ல மறந்துவிட்டேனே! உன்னுடைய அத்தை காமாக்ஷியம்மாள் பிழைத்துக்கொண்டார்களென்றும், சௌக்கியமடைந்து வருகிறார்களென்றும் சேதி வந்திருக்கிறதம்மா; நீ வருத்தப்பட வேண்டாம்" என்றாள்.

"அப்படியா! யார் சொன்னது? உங்களுக்கெப்படித் தெரியும்?" என்று முகமலர்ச்சியுடன் சின்னியம்மாள் கொண்டு

வந்திருந்த ரோஜா புஷ்பங்களில் ஒன்றை எடுத்து முகர்ந்து பார்த்து, தானே தன் தலையில் சூடிக்கொண்டாள்.

"இங்கிருந்து உங்கள் தகப்பனாருக்கு ஒரு கடிதம் கொடுத்தனுப்பப்பட்டது. அதில் நீ சௌக்யமாயிருப்பதாகவும், சீக்கிரத்தில் உன்னை வீட்டுக்கு அனுப்புவதாகவும் எழுதப்பட்டிருந்தது. அக்கடிதத்தைக் கொண்டுபோனவனை உங்கள் அத்தையின் க்ஷேமத்தை விசாரித்து வரச்சொல்லியிருந்தது. அவன் காமாக்ஷியம்மாள் குணமடைந்து வருவதாகச் சேதி கொண்டுவந்தான்."

"அம்மா, இது உண்மைதானா? அப்படியானால் எனக்குப் பால் வார்த்தீர்கள். உங்களுக்கு எப்போதும் நன்றியுள்ளவளாக இருப்பேன். நீங்கள் தயவு செய்து அவரிடத்தில் எனக்காகப் பரிந்து பேசி என்னைச் சீக்கிரத்தில் வீட்டிற்குக் கொண்டு போய்ச் சேர்க்கச் செய்யுங்கள். உங்களுக்குப் புண்ணியமுண்டு" என்று பூங்கோதை கெஞ்சினாள்.

"அவர் சொன்ன சொல் தவறமாட்டார்; நீ பயப்படாதேயம்மா. பெரியவர்களைப் பார்த்து வந்தவுடனே அனுப்பிவைப்பார்."

"அம்மா, இங்கே நீங்கள்தாம் எனக்குத் தாய். பெரியவரைப் பார்க்க எங்கே போகவேண்டும்? தயவுசெய்து வாருங்கள்."

"நான் வரத் தடையில்லை. ஆனால் எனக்கு இங்கிருந்து கவனிக்க வேண்டிய வேலை இருக்கிறது; பாதகமில்லை. நீ அவரோடு எங்கேயானாலும் பயப்படாமற் போகலாம்."

இந்தச் சமயத்தில் யாரோ கூப்பிடுகிற சத்தங் கேட்டுச் சின்னியம்மாள் முன்கட்டிற்குப் போனாள். அங்கே அடிவாரத்திலிருந்து வந்த ஓர் ஆள் வெகு அவசரமாக மலைக்கள்ளனைப் பார்க்கவேண்டுமென்று சொன்னான். சின்னியம்மாள் வீரய்யனுடைய தனிக் கட்டிற்குப் போய் ஆள் வந்திருக்கிற அவசரத்தைச் சொல்லிவிட்டு, மறுபடியும் பூங்கோதையிடம் வந்து,



பூங்கோதை தடுத்தும் கேளாமல் அவளுடைய கூந்தலைச் சிக்ககற்றி வகுப்பெடுத்து, ஸ்னானம் செய்த ஈரங்காயும்படி நுனிப் பின்னலிட்டுப் பூங்கோதையினுடைய அளவிடக்கூடாத அழகைப் பார்த்துத் தனக்குள்ளேயே ஆனந்தித்து ஆசை தீராமல், "அடி என் கண்ணே! பூங்கோதை! படுபாவிகள் ஒரு நகையும் விடாமல் கழட்டிவிட்டார்களே! உனக்கு ஓர் ஆபத்துமில்லாமல் காப்பாற்றிக்கொடுத்த தெய்வத்தைக் கையெடுத்துக் கும்பிடுகிறேன்" என்று சொல்லிக்கொண்டே பூங்கோதையைத் தன் மார்போடணைத்து முத்தமிட்டாள். பூங்கோதை சிறிது திடுக்கிட்டு மருண்டாள் என்றாலும், ஒன்றும் சொல்லவில்லை. சின்னியம்மாளைப் பார்த்தாள். என்ன சந்தோஷத்தால் தன்னைத் தழுவி முத்தமிட்டாளென்று எண்ணிய பூங்கோதை, சின்னியம்மாளுடைய கன்னங்களில் கண்ணீர் வடிவதைக் கண்டு, "ஏனம்மா? ஏன் அழுகிறீர்கள்?" என்றாள். சின்னியம்மாள் அவசரமாக முகத்தைத் துடைத்துக்கொண்டு, "ஒன்றுமில்லை. கண்மணீ! நீ வருத்தப்படாதே. ஏதோ என்னுடைய விதியை நினைத்து அழுதேன். அது இப்போது உன்னிடத்திற் சொல்லக்கூடியதல்ல" என்றாள். பூங்கோதைக்குத் துக்கமும் சந்தேகமும் தொடர்ந்தன. பிறகு, சின்னியம்மாள் என்னென்னவோ சொல்லியும் பூங்கோதை தான் கட்டியிருந்த ஆடையை மாற்றிக்கொள்ள மறுத்துவிட்டாள்; இருவரும் மறுபடியும் முன் கட்டு மாடிக்குப் போய் அங்கே கள்ளர் தலைவனுக்காகக் காத்துக்கொண்டிருந்தார்கள்.

சிறிது நேரத்துக்கெல்லாம் வீரய்யன் சின்னியம்மாளைக் கூப்பிட்ட ஓசை கேட்டது. அவள் பூங்கோதையை மாடியிலேயே விட்டுவிட்டுத் தான் மட்டும் கீழே போனாள்.

"பூங்கோதை இன்றிரவு இங்கேதானிருக்க வேண்டும். இன்றைக்கு அவளை இட்டுக்கொண்டு போக முடியாது" என்றான் கள்ளர் தலைவன்.

"ஐயோ! அப்படிச் சொல்லவேண்டாம். அவள் இப்போதே பாதி உயிர் போனது போல் இருக்கிறாள். இன்றைக்கு வீட்டுக்கு அழைத்துப் போவதாகச் சொன்ன உறுதியின்மேல்தான்

சற்றுத் தெளிவடைந்து ஸ்னானமாவது செய்தாள். அந்தச் சந்தோஷத்திலேயே சாப்பிட்டாலும் சாப்பிடுவாள். இன்றைக்கு வீட்டுக்கு அனுப்புவதில்லையென்று அறிந்தால் பிறகு பெரியவர்களைப் பார்க்கக்கூட வர மறுத்துவிடுவாள்."

"அப்படியானால் இதைப்பற்றிப் பின்னால் பேசிக்கொள்ளுவோம். இப்போது பெரியவரைப் போய்ப் பார்த்துவர, அவளைக் கூப்பிடு. மணி நாலுக்குமேல் ஆகிவிட்டது. இருட்டுவதற்குள் திரும்பி வந்துவிட வேண்டும்"என்றான். "பூங்கோதை என்னையும் பெரியவர்களைப் பார்க்கத் துணையாகக் கூப்பிடுகிறாள்" என்று சின்னி சொல்ல, "வேண்டாம், நீ இங்கே இருக்க வேண்டும். நாட்றாயனை ஒரு காரியமாக அனுப்பியிருக்கிறேன். அவன் இங்கே வருவான். வந்து, அவன் போன காரியத்துக்குப் பதில் சொல்லிவிட்டு, உடனே இன்னொரு காரியமாக அவனைப் போகச் சொல்லியிருக்கிறேன். அவன் வரும்போது இங்கு யாராவது அவசியமாக இருக்கவேண்டும்" என்றான் மலைக்கள்ளன்.

சின்னியம்மாள் போய், "அம்மா பூங்கோதை, போய் பெரியவர்களைப் பார்த்துவிட்டு வாம்மா" என்றாள்.

"நீங்களும் வந்தால் சந்தோஷப்படுவேன்."

"இல்லை, நான் இங்கிருக்க வேணும். உன்னை ஊருக்கு அனுப்புகிற விஷயமாக ஏதோ விசாரித்து வரப்போயிருக்கிற ஆள், இப்போது இங்கே வருவான். நீ போய் வா" என்று பூங்கோதையைக் கூட்டிக்கொண்டு கீழே வந்தாள். வீரய்யன் சாதாரண உடையோடு, ஆனால் ஆயுதபாணியாகக் காத்துக் கொண்டிருந்தான்.

"பூங்கோதையம்மா, நாம் இருட்டுவதற்குள் திரும்பி வரவேண்டும். சீக்கிரம் வா" என்று சொல்லிக்கொண்டே வீரய்யன் முன்னால் நடந்தான். பூங்கோதையும் சின்னியம்மாளும் பின் தொடர்ந்தார்கள். பின் கட்டின் கோடியிலிருந்த கதவுவரையிலும் போய்ச் சின்னியம்மாள் நின்றுவிட்டாள். கொல்லைப் புறத்தில் முன்சொல்லப்பட்ட சிறு அறையின் கதவைத்



திறந்து, "பூங்கோதை, இது ஒரு இருட்டான வழி; படிகள் உள்ளன; வெகு ஜாக்கிரதையாக இறங்க வேண்டும்........உம்........இதுவும் என்னுடைய ரகசிய வாழ்க்கையைச் சேர்ந்தது தான். நீ கோபித்துக்கொள்ளக் கூடாது" என்று மலைக் கள்ளன் சிரித்தான்.

"எனக்கென்ன கோபம்? நீர் என்னை வீட்டுக்கனுப்பி வைப்பதாகச் சொன்ன வார்த்தையைக் காப்பாற்றிக்கொண்டால் அதுவே போதும். மற்றபடி உங்களுடைய ரகசியங்களில் நானேன் தலையிட வேண்டும்?" என்றாள் பூங்கோதை.

"ஆஹா, அதிலென்ன தடை. உன்னை வீட்டுக்கனுப்பி வைக்கிறேன். இன்னும் உனக்கென்ன அதில் சந்தேகம்? நமக்குள்ளேதான் ஒப்பந்தம் செய்துகொண்டிருக்கிறோமே....நான் சொல்லுகிறபடி நீ கேட்பது—நான் உன்னை, நீ வேண்டியபடி உங்கள் வீட்டிற்கொண்டு போய் விடுவது."

"நீர் சொல்லுகிறபடியெல்லாம் நான் கேட்பதா? என்ன மறுபடியும் உமது கள்ளப் பேச்சை ஆரம்பித்துவிட்டீரே!........" என்று கடுத்தாள்.

"ஐயையோ! நீ தப்பர்த்தம் செய்து கோபித்துக்கொள்கிறாயே!"

"விளையாட்டா! நமக்குள் விளையாட்டுப் பேச்சுகள் கூடாதென்று நான் உமக்கு எச்சரித்திருக்கிறேன்."

"சரி அப்படியே அப்படியே. நான் மறந்துவிட்டேன், வா" என்று கள்ளன் விளக்கைப் பிடித்துக்கொண்டு முன்னால் செல்லக் கன்னி பின்னால் சென்றாள்.

இருவரும் கிழவர் வசிக்குமிடத்துக்கு வந்து வழக்கம் போல் மர்மமான வார்த்தைகள் சொல்ல, வீரய்யனுக்குக் கதவு திறக்கப் பட்டது. பூங்கோதையைச் சற்று தாமதிக்க நிறுத்திவிட்டு, வீரய்யன் மட்டும் உள்ளே போய்ப் பெரியவர்களைப் பார்க்க வேண்டுமென்று சொல்லி, பைங்கிளியாள் பூங்கோதை வந்திருப்பதையும், இன்னும் சில எச்சரிக்கைகளையும் சொல்லிவிட்டு

வந்து, பூங்கோதையை அழைத்துக்கொண்டு உள்ளே போனான். அங்கே கிழவனும் கிழவியும் காத்துக்கொண்டிருந்தார்கள்.

கிழவி பூங்கோதையைக் கண்டவுடன், "வாடியம்மா, கண்மணியே! பூங்கோதையா? பொன்னி மகளா? அடியென் கட்டிக் கரும்பே! மயிலே! மரகதமே! உங்கம்மா பொன்னம்மாளை ரொம்ப நாளைக்கு முன்னால் பார்த்ததுண்ணாலும் அவள் என் மனசிலேயே இருக்கிறாள்" என்று கட்டித் தழுவி உச்சி மோந்தாள். பூங்கோதை கிழவிக்கும் கிழவனுக்கும் நமஸ்காரம் செய்தாள்.

கிழவன் கட்டிலில் உட்கார்ந்தபடியே பூங்கோதையைத் தன்னருகில் இருக்கச் செய்து, "அம்மா, உன்னைப் பார்க்க வேணுமென்று எனக்கு வெகு ஆசை. தெய்வச் செயலால் வீரய்யன் உன்னை இங்கே கொண்டுவர நேர்ந்தது என்னுடைய அதிர்ஷ்டந்தான். இல்லாவிட்டால் நான் உங்கள் ஊருக்கு வந்து உன்னையெல்லாம் பார்க்க முடியுமா? உன்னுடைய தகப்பனார் சொக்கேசர் எனக்கு ரொம்பவும் வேண்டியவர். நான் சாவதற்கு முன்னால் உன்னை வீரய்யனே அழைத்து வந்து காட்டியது என் புண்ணியந்தான். வீரய்யன் என்னுடைய உயிர். உங்களைப் பார்த்து என் மனம் அளவில்லாத ஆனந்தமடைகின்றது. ஆண்டவன் உங்களுக்கு நிறைந்த சம்பத்தையும் நீண்ட ஆயுளையும் அருள வேண்டும்" என்றான்.

"என்ன தாத்தா, என் தகப்பனாரை உங்களுக்கு எப்படித் தெரியும்? தாங்கள் யார்?" என்றாள் பூங்கோதை.

"நானா? என் கதை ஒரு பெருங் கதை. அதன் இரகசியங்களெல்லாம் வீரய்யன் ஒருவனுக்குத்தான் தெரியும். என்னைப் பற்றி நீ அறிய வேண்டுமானால்........" என்று கிழவன் வீரய்யனைப் பார்த்தான். வீரய்யன் பெரியவரை உற்றுப் பார்த்து, முகஞ் சுழித்தான். "சொல்லுங்கள் தாத்தா, நான் இன்றிரவு வீட்டுக்குப் போவேன். உங்களைப்பற்றி என் தகப்பனாரிடம் சொல்லுவேன். நீங்கள் யார்?" என்று பூங்கோதை மறுபடியும் கேட்டாள்.



உடனே பெரியவர் பேச்சை மாற்றி; "அம்மா பூங்கோதை, நீ வந்தது என் வீட்டிற்கு லக்ஷ்மியே வந்தது போலிருக்கிறது. உனக்கு....உனக்கு....உனக்கு வேண்டிய எல்லா சௌகரியங்களும் இங்கே நிறைந்திருக்கின்றன. ஏராளமான செல்வம் உன்னுடைய இச்சைப்படி செலவு செய்ய இருக்கிறது. நீ வீட்டுக்குப் போவதைப் பற்றி இவ்வளவு அவசரமாக எண்ணுவானேன்? இங்கேயே இன்னும்...."

"என்ன தாத்தா, உங்கள் பேச்சு வெகு வேடிக்கையாக இருக்கிறதே! வீட்டிற் படுத்திருந்த என்னை யாரோ கள்ளர்கள் நடு ராத்திரியில் தூக்கிக்கொண்டு வந்துவிட்டார்கள். அந்தக் கள்ளர்களிடத்திலிருந்து, இவர் இங்கே கொண்டுவந்துவிட்டார்! நான் என்னவானேன் என்று எங்கள் வீட்டாருக்குத் தெரியாது! நீங்கள் எனக்கு உதவி செய்கிறவர்கள் போலவும், எங்கள் குடும்பத்தை நன்றாக அறிந்த நண்பர்கள் போலவும் என்னென்னவோ எல்லாம் பேசுகின்றீர்கள்! நீங்கள் யார் என்றால் சொல்ல மறைக்கிறீர்கள். இவரை, யார் என்றால் 'மலைக்கள்ளன்' என்கிறார். அந்தப் பேருக்கு எங்கள் ஊரில் இருக்கிற பழியையும் பயத்தையும் நினைத்தாலும் நெஞ்சம் நடுங்குகின்றது! இந்த நிலையில் நான் ஊருக்குப் போக வேண்டிய அவசரம் என்னவென்று இவ்வளவு பெரியவரான நீங்கள் உபதேசம் செய்யவருகிறீர்கள்! பேஷ்! இந்த ரகசியங்கள் ஒன்றும் எனக்குப் பிடிக்கவில்லை. தயவுசெய்து, இவர் என்னை வீட்டுக்கு அனுப்பி வைப்பதாகச் சொல்லியிருக்கிற வார்த்தையைப் பூர்த்தி செய்யச் சொல்லுங்கள் பாட்டி! நீங்களாவது சொல்லக்கூடாதா?" என்று பூங்கோதை சற்று படபடத்துப் பேசினாள்.

"அடியம்மா, பொன்னி மகளே! அப்படி நினைக்காதே. என் சாமி வீரய்யனை என்னமோண்ணு எண்ணாதே. உனக்கொன்றும் குறைச்சல் வைக்கமாட்டான். அப்படி ராஜாவை ஆயிரம் தவசு செய்தாலும் காண முடியாது. அவனைக் குறைவாகப் பேசாதேயம்மா......." என்றாள் கிழவி.

"அவரைப்பற்றி நானொன்றும் குறைவாகச் சொல்லவில்லை. நாட்டில் உள்ளவர்கள் எவ்வளவு நடுங்குகின்றார்கள் என்றுதான் சொன்னேன், பாட்டி. நீங்கள் வருத்தப்பட வேண்டாம்.........என்னை—நீங்கள் உங்களுக்கு ரொம்ப வேண்டியவர் என்று சொல்லுகின்ற—என் தந்தை காணாமல் மிகவும் கலங்கியிருப்பார். என்னுடைய அத்தை—உங்களுக்குத் தெரிந்திருக்கலாம்—காமாக்ஷியம்மாளை நான் உடனே பார்க்க வேண்டுமென்ற ஆசை அதிகமாயிருக்கிறது. என்னை வீட்டிற்கனுப்பச் செய்யுங்கள், பாட்டி!" என்று பூங்கோதை பேசிக்கொண்டிருக்கிற சமயத்தில் மலைக்கள்ளன் ஏதோ அவசரம் போல் வெளியிற் போனான். இதுதான் தக்க சமயமென்றெண்ணியோ என்னவோ கிழவன், பூங்கோதையை இன்னும் கிட்ட வரச்செய்து அவளுடைய காதோடு என்னவோ இரகசியமாகச் சொன்னான்.

உடனே பூங்கோதை திடீரென்று கட்டிலை விட்டுக் கீழே குதித்துச் சற்று தூரம் போய் நின்றுகொண்டு, கிழவனை ஏற இறங்கப் பார்த்தாள். அவளுடைய முகமும் கண்களும் சிவந்துவிட்டன. உதடுகள் துடித்தன. முத்து முத்தாகத் தேகமெல்லாம் வியர்வை அரும்பிற்று. இன்னது சொல்வதென்று தெரியாமல் வெறி கொண்டவளைப் போலக் கிழவனை விழுங்கி விழுங்கி கண் கொட்டாமற் பார்த்துக்கொண்டே நின்றாள்; அஞ்சாத நெஞ்சினனாகிய கிழவனும் அஞ்சிவிட்டான். 'ஏன் சொன்னோம்' என்று ஏங்கினவனாகி கிழவன், பூங்கோதை என்ன சொல்லிவிடுவாளோவென்று' பார்த்துக்கொண்டே இருந்தான். இந்த நிலையில் வெளியே போயிருந்த மலைக்கள்ளன் உள்ளே வந்து, மறுபடியும் திரும்பி வாசலண்டை நின்றுகொண்டு, "உள்ளே போய்ச் சப்பாணியைக் கண்டு நான் சொன்னபடி செய்து வைக்கச் சொல்லு" என்று உரத்த குரலில் வெளியிலிருந்த யாருக்கோ கூவினான். இந்தச் சத்தத்தைக் கேட்டுப் பூங்கோதை மலைக்கள்ளன் பக்கம் திரும்பி, "ஐயா, வீராதி வீரரே! நீர் வாக்களித்தபடி என்னை வீட்டுக்கு அனுப்பித் தர இஷ்டமா, இல்லையா?" என்றாள்.



"ஏன் அதைப்பற்றி உனக்கு இன்னும் என்ன சந்தேகம்? என்ன? என்ன? பூங்கோதை! ஏன் இவ்வளவு கோபம்? யார் உன்னை என்ன சொல்லிவிட்டார்கள்?"

"ஒன்றுமில்லை. அதையெல்லாம் என்னைக் கேட்க வேண்டாம். நான் உடனே ஊர் போய்ச் சேர வேண்டும். அனுப்பி வைப்பதாக ஆணையிட்டீர். அதைக் காப்பாற்ற எண்ணமுண்டா, இல்லையா என்பதைத்தான் நான் அறிய வேண்டும்" என்றாள்.

பூங்கோதையின் கொந்தளிப்பைக் கண்டு பெரியவர், "அம்மா, தாயே, நான் கிழவன், ஏதோ சொல்லிவிட்டேன். மன்னித்துக்கொள். நீ இவ்வளவு கோபித்துக்கொள்ளுவாயென்று தெரியாமற் சொல்லிவிட்டேன். அம்மா! சொக்கேசர் பெற்ற சுந்தரமே! வேண்டாம்மா, கோபித்துக்கொள்ளாதே" என்றார்.

"தாத்தா! முன்பின் என்னை அறியாத நீங்கள் சொன்ன முறைபல்லாத வார்த்தைகளிலும், இந்த மலைக்கள்ளருடைய மர்மமான நடத்தைகளிலும், ஏதோ பெருஞ் சூது இருக்கிறதென்று நன்றாக அறிந்துகொண்டேன். இனி, என்னை வீட்டிற்கு அனுப்பப் போகிறீர்களா, இல்லையாவென்பதை வெள்ளையாகச் சொல்லிவிடுங்கள். மர்மமான நட்பைக் காட்டிலும் பகிரங்கமான பகையே மேல். நான் உடனே ஊர் போக வேண்டும். உண்டா, இல்லையா?" என்று வீரய்யனைப் பார்த்தாள். வீரய்யன், "பூங்கோதை! பெரியவரை நீ அவ்வளவு குறைவாகப் பேசுவது அழகல்ல. உன்னை வீட்டுக்கு அனுப்பி வைப்பதில் எள்ளளவும் சந்தேகம் இல்லை. நான் சொன்ன சொல் ஒரு போதும் தவற மாட்டேன். ஆனால்...."

"ஆனால் என்ன! இந்த 'ஆனால்'தான் நானாவித சந்தேகத்துக்கும் இடமுண்டாக்குகிறது."

"இல்லை, நீ சந்தேகிக்கவே வேண்டாம். உன்னை ஒரு குறையுமில்லாமல், உங்கள் வீட்டிற் சேர்க்கிறேன்," என்றான்.

பூங்கோதை சற்றுக் கோபந் தணிந்தாள். இருந்தாலும் அவள் மனத்தில் உண்டான அருவருப்பும் சந்தேகமும் அகல வில்லை. கிழவனும் கிழவியும் பூங்கோதையை வெகு பயபக்தி யோடு சமாதானப்படுத்தி, வேறு ஏதேதோ பழங்கதைகளை யும் பேசிக்கொண்டிருந்தார்கள். அவர்கள் இருவரும் பூங்கோதை யின் அபூர்வ அழகைப் பார்த்துப் பார்த்து ஆனந்தப்பட்டுக் கொண்டிருக்கையில், பூங்கோதை மலைக்கள்ளனைப் பார்த்து, 'சரி, நேரமாகின்றது; இருட்டுவதற்குள்ளாகப் போக வேண்டு மென்று சொன்னீரே. இன்று விடிவதற்குள் நான் ஊர் போய்ச் சேர வேண்டும்....!'' என்றாள்.

கிழவனும் கிழவியும் பன்னிப் பன்னிக் கேட்டுக்கொண்டும், பூங்கோதை உடனே போக வேண்டுமென்று புறப்பட்டுவிட் டாள். ஏதாவது சிற்றுண்டியாவது சாப்பிட வேண்டுமென்று, கிழவி கெஞ்சிக் கெஞ்சி உபசரித்தும், பூங்கோதை மறுத்து விட்டாள். வெகு சிரமப்பட்டுத் தங்கள் இருப்பிடத்தின் உட் புறத்தையெல்லாம் பார்த்துவிட்டாவது போக வேண்டுமென்று, கிழவி பூங்கோதையைக் கூட்டிக்கொண்டு உட்புறம் போனாள்.

கிழவருடைய இருப்பிடம் வெகு அலங்காரமாக, ஒரு சிறு அரண்மனை போல எல்லாச் சுகப் பொருள்களும் நிறைந் திருந்தது. இரண்டு பக்கங்களில் மலைச்சாரல்களும், ஒரு பக்கத்தில் பெரிய பள்ளத்தாக்கும்; அதில் ஒரு நீர்வீழ்ச்சியும், கட்டடத்தைச் சுற்றிலுமிருந்த அழகிய செடி கொடிகளும் அடர்ந்த மரக்கூட்டங்களும், அவற்றுள் செறிந்த கனி வகை களும் பூங்கோதைக்குப் பூரிப்பை உண்டாக்கின. ' இவ்வளவு ஏகாந்தமான இடத்தில் இக்கிழங்களுக்கு என்ன வேலை ? இவர் களுக்கும் அந்த மலைக்கள்ளன் என்ற சிறுவனுக்கும் என்ன உறவு ? அந்தச் சின்னியம்மாள் யார் ?....' என்று பற்பல எண் ணங்களைப் பின்னலிட்டுக்கொண்டே கிழவியின் பின்னாற் சென்று, அந்த மலைவீட்டைப் பார்வையிட்டாள்.

கிழவியும் பூங்கோதையும் வீட்டுக்குள் போனபின், தான் ஏதோ சொன்னதில் பூங்கோதைக்கு உண்டான கோபத்தை



நினைத்து, "அடேயப்பா ! பொன்னம்மாளைக்காட்டிலும் ரோசக்காரியாக இருக்கிறாளே ! என்னை என்ன செய்துவிடு வாளோ என்று நடுங்கிப்போனேன் " என்றார் கிழவர்.

கிழவனும் மலைக்கள்ளனும் சிறிது நேரம் பூங்கோதையைப் பற்றிப் பேசிக்கொண்டிருந்தார்கள்.

பூங்கோதையும் கிழவியும் திரும்பி வந்தவுடன் மலைக் கள்ளன் பேச்சை நிறுத்திவிட்டு, " போகலாமா ?" என்று பூங்கோதையைக் கேட்டு முடிப்பதற்குள், அவள், "தாத்தா ! பாட்டீ ! போய் வருகிறேன் " என்று வந்தனம் சொல்லிவிட்டு, முன்னால் நடந்தாள். " மகாராசியாயிருப்பாய் " என்று அவர் களும் வாழ்த்துச் சொல்ல, இருவரும் வெளியில் வந்தார்கள். அவர்கள் வாசலைக் கடந்தவுடன் வழக்கம் போல் கதவு தாழிடப்பட்டது. மலைக்கள்ளன் பூங்கோதையைப் பார்த்து, " நீ ஊருக்குப் புறப்படுவதற்கு முன், நீ இங்கே பார்க்கத் தகுந்த இடம் இன்னொன்று இருக்கிறது, இப்படி வா " என்று வேறொரு வழியாக நடந்தான்.

" பார்த்ததெல்லாம் போதும். இருட்டும் சமயமாகி விட்டதே, இன்னும் நான் ஊருக்குப் புறப்படுவது எப்போ ? எனக்கு வேடிக்கை பார்த்துக்கொண்டிருக்க மனமில்லை " என்றாள்.

" ஊருக்கு அனுப்பிவைக்கிறேன். சந்தேகிக்க வேண் டாம். வா, இதோ பக்கத்தில்தான். பார்த்துவிட்டு இருட்டு வதற்குள் திரும்பிவிடலாம். வா, வாம்மா........யோசிக்காமல் வா " என்று முன்னால் போனான். வேறு ஒன்றும் செய்ய முடியாமல் சங்கடப்பட்டுக்கொண்டே பூங்கோதையும் பின் தொடர்ந்தாள். சற்று தூரம் போனபின் அங்கொரு கதவு காணப்பட்டது. அதன் முன்னால் நின்று, மலைக்கள்ளன் ஏதோ சொல்லிக் கதவைத் தட்டினவுடன் கதவின் ஒரு புறத்தில் ஒரு வட்டமான துவாரம் உண்டாயிற்று. " கதவைத் திறக்க வேண்டாம். இங்கிருந்தபடியே அவர்களைப் பார்க்க வேண்டும். அவர்களை வரிசையாக வழக்கம் போல் நிற்கச் செய் " என்று

மலைக்கள்ளன் உத்தரவிட்டான். சிறிது நேரங்கழிந்த பின், அந்தத் துவாரத்தின் வழியாகப் பார்க்கும்படி பூங்கோதையை மலைக்கள்ளன் வேண்டிக்கொண்டான். படிகளின் மேல் ஏறி, துவாரத்தின் வழியாகப் பார்த்தாள். அங்கே ஒரு விசாலமான கூடமும், அதன் இருபுறங்களிலும்....கதவுகளும் காணப்பட்டன. இந்தக் கதவுகளைத் திறந்துகொண்டு சுமார் பத்துப் பதினைந்து பேர்கள் வந்து வரிசையாக வெளிச்சத்தில் நின்றார்கள். அவர்கள் சௌக்கியமாகவும் நல்ல உடை தரித்த சீமான்களாகவும் காணப்பட்டார்கள். ஆனால் அவர்களுடைய முகத்தில் துக்கம் குடி கொண்டிருப்பதைப் பூங்கோதை கவனித்தாள். பார்த்துக்கொண்டேயிருந்த அவள் திடீரென்று, "ஐயோ! இதென்ன, இது!" என்று சொல்லிக்கொண்டு படிகளை விட்டுக் கீழே குதித்தாள்.

"என்ன! என்ன!" என்றான் வீரய்யன்.

"இவர்கள் இங்கே எதற்காக அடைபட்டிருக்கிறார்கள்?"

"அவர்கள் என்னுடைய கைதிகள். அவர்கள் செய்த குற்றங்களுக்காகத் தண்டனையடையக் காத்துக்கொண்டிருக்கிறார்கள்....அதிருக்கட்டும், நீ ஏன், 'ஐயோ' என்று சொல்லிக்கொண்டு, குதித்தாய்?"

"ஒன்றுமில்லை. அவர்களில் இரண்டு மூன்று பேர்கள் எனக்குத் தெரிந்தவர்கள்போலக் காணப்பட்டார்கள்."

"அதில் யார், யார், உனக்குத் தெரிந்தவர்கள்? எப்படித் தெரியும்?"

"ஞாபகமில்லை .... பார்த்திருக்கிறதாக நினைவுதான்" என்று பேசிக்கொண்டே இருவரும் வீரய்யனுடைய விடுதிக்கு நடந்தார்கள்.

"நீ ஊருக்குப் போனால் உன்னுடைய அத்தை, அப்பா முதலானவர்களிடத்தில் இங்கே நீ பார்த்த அதிசயங்களையெல்லாம் சொல்லுவாயல்லவா?.... அந்தச் சமயத்தில் 'பருத்திக் காட்டூர் ஆள்கள்' இங்கே அடைபட்டிருப்பதாகவும் சொல்லு" என்றான் கள்ளன்.



"அவர்கள் யார்? அவர்களைப்பற்றி என்னுடைய அத்தைக்கும் ஐயாவுக்கும் என்ன தெரியும்?"

"நீ சொல்லு, அவர்களுக்குத் தெரியும். உனக்கு அந்த விவரங்களையெல்லாம் இப்போது சொல்லக்கூடாமைக்கு வருத்தப்படுகிறேன். இதிலும் என்னுடைய ரகசியங்கள் அடங்கியிருக்கின்றன."

"சரி, உம்முடைய ரகசியங்கள் எனக்கொன்றும் வேண்டாம். நான் இனி, எந்நேரத்துக்குப் புறப்பட வேண்டும்?"

"புறப்படும்போது சொல்லுகிறேன்."

"புறப்படும்போதா? ....பெரியவர்களைப் பார்த்த பின் அனுப்புவதாகச் சொன்னீரே?"

"ஆம், அப்படித்தான் சொன்னேன். ஆனால்........நாட்றாயன் வந்திருப்பான். அவனைப் பார்த்த பிறகு, நீ புறப்பட வேண்டிய நேரத்தைச் சொல்லுகிறேன். வா, போவோம். நேரமாச்சு."

இருவரும் சின்னியம்மாள் இருக்குமிடத்துக்கு வந்தார்கள். நாட்றாயன் வெளியில் காத்துக்கொண்டிருந்தான். சின்னியம்மாள் கதவைத் திறந்தவுடன், "பூங்கோதை, நீ உள்ளே போய் இரு; நான் இவனை விசாரித்துவிட்டு வந்து சொல்லுகிறேன்" என்று சொல்லிவிட்டு, மலைக்கள்ளன் நாட்றாயனுடன் பூந்தோட்டத்துட் சென்றான். பூங்கோதை சின்னியம்மாளுடன் மேல் மாடிக்குப் போனாள்.

சின்னியம்மாள், "அம்மா, பூங்கோதை! பெரியவர்களைப் பார்த்தாயா? உன்னைப் பார்க்க வேணுமென்று அவர்கள் வெகு ஆசைப்பட்டார்கள். என்ன சொன்னார்கள்?" என்று கேட்டாள்.

"ஆமாம், பார்த்தேன். ரொம்பவும் ஆசையோடுதான் பேசினார்கள். இருந்தாலும், அந்தக் கிழவனாருக்குக் கொஞ்சம்கூட யோசனையே இல்லை. வயசாச்சு...."

“ என்ன, என்ன ? என்னம்மா, அப்படிச் சொல்லுகிறாய்? அவர் என்ன சொன்னார் ?”

“ என்ன சொன்னார் !....ஒன்றும் சொல்லவில்லை....எல்லாம் கள்ளத்தனமாகத்தான் இருக்கிறது. அது கிடக்கட்டும். என்னை எப்போது அனுப்பப் போகிறீர்கள் ? யாரோ நாட்றாயனைக் கேட்டுவிட்டுச் சொல்லுவதாக இவர் சொன்னாரே, வெளியில் இருந்தானே அவன்தானா நாட்றாயன் ? அவன் என்ன சொல்லுவது ! நான் உடனே வீட்டுக்குப் போக வேணும்.”

“ அம்மா, அதைப்பற்றித்தான் நாட்றாயன் விசாரித்து வரப் போயிருந்தான். அவன் திரும்பி வந்தது எனக்குத் தெரியாது. உங்களுக்காகக் கதவைத் திறந்த போதுதான் அவன் வாசலில் இருப்பதைப் பார்த்தேன்! அவன்தான் நாட்றாயன். அதைக் கேட்கத்தான் இவர் அவனோடு பேசப் போயிருக்கிறார். வந்து சொல்லுவார். இன்றிரவு நீ புறப்பட வேண்டியிருந்தாலும் இருக்கும்....நீ சீக்கிரம் ஆகாரம் பண்ணிக்கொண்டு தயாராக இருக்க வேணும். வா, சமையலெல்லாம் முடிந்துவிட்டது உனக்கு வாய்க்கு ருசிக்கும்படியாகக் கவனத்தோடு சமைத்திருக்கிறேன். கொஞ்சம் சாப்பிடு, வாம்மா....கொஞ்சம் கூட ஆகாரம் இல்லாமல்....நடப்பது கஷ்டமாயிருக்கும்.”

“ இல்லை; எனக்குச் சாப்பாடு வேண்டாம். எனக்காக, நீங்கள் கவனத்தோடு சமைத்ததாகச் சொல்லுகின்ற அன்பே, என் பசியை ஆற்றிவிட்டது. எனக்குச் சோறு வேண்டாம். வீடு போய்ச் சேராமல் எனக்குச் சாதம் செல்லாது.”

“ சரி, போகட்டும். புதுப் பால் காய்ச்சி வைத்திருக்கிறேன். நல்ல பழங்களும் இருக்கின்றன. அவற்றையாவது சாப்பிடு. வெறும் வயிற்றோடு....இன்னும் மலையிறங்கி வெகு தூரம் நடக்க வேண்டுமே ! பாலும் பழமும் கொண்டு வரட்டுமா ?”

பூங்கோதை மௌனமாக இருந்தாள். உடனே, சின்னியம்மாள் கீழே போய், ஒரு கூஜா நிறைய பாலையும், ஒரு



வெள்ளித் தாம்பாளத்தில் பலவிதப் பழங்களையும் எடுத்துக்கொண்டு சமையற் கட்டிலிருந்து மாடிக்கு வந்துகொண்டிருக்கையில் வெளிக் கதவு தட்டப்பட்டது. பழத் தட்டையும் கூஜாவையும் படிக்கட்டின் மேல் வைத்துவிட்டுச் சின்னியம்மாள் கதவைத் திறந்தாள். மலைக்கள்ளன் சிரித்துக்கொண்டே உள்ளே வந்தான்.

“ ஐயோ, இன்று ராத்திரி பூங்கோதை இங்கேதான் இருக்க வேண்டுமென்பதைப்பற்றி இப்போது ஒன்றும் அவளிடம் சொல்லிவிட வேண்டாம். இப்பத்தான் கொஞ்சம் பால் சாப்பிடவாவது சம்மதித்தாள். இதோ கொண்டு போகிறேன். சாப்பிடுகிற வரையிலுமாவது பேசாமலிருந்தால் நல்லது ” என்று சின்னியம்மாள் மலைக்கள்ளனை வேண்டினாள். “ சரி, நடக்கட்டும். சின்னியம்மா, உன் சாமர்த்தியத்தை மெச்சுகின்றேன். பாலையும் பழத்தையும் சாப்பிடச் செய். நான் இன்னும் ஒரு மணி கழித்து வருகிறேன். இன்றைக்குப் போக முடியாதென்பதைச் சொல்லிவிட வேண்டும். நான் வந்து சொல்லிக்கொள்ளுகிறேன். நீ அவளைச் சாப்பிடச் செய்து; அவள் சந்தோஷப்படும்படியான வேறு விஷயங்களைச் சிறிது பேசிக்கொண்டிருந்துவிட்டுப் போ ” என்று மலைக்கள்ளன் தன்னுடைய ரகசிய அறைக்குப் போய்விட்டான்.

சின்னியம்மாள் கொண்டுவந்த பழத்தட்டை, பூங்கோதை தடை சொல்லாமல் வாங்கிக்கொண்டு கீழே உட்கார்ந்தாள். சின்னியம்மாள், தானிருந்தால் பூங்கோதை கூச்சப்படுவாள் என்று, பால் கூஜாவையும் பக்கத்தில் வைத்துவிட்டுப் போய்விட்டாள். வீட்டுக்குப் போக வேண்டுமென்ற விருப்பத்தாலும், வெகு தூரம் நடக்க வேண்டுமே என்ற நினைவாலும், நிம்மதியான மனசோடு பழங்களையும் பாலையும் பசி தீரச் சாப்பிட்டுவிட்டு, தட்டத்தையும் கூஜாவையும் ஒரு மூலையில் வைத்துவிட்டு, அங்கிருந்த புத்தகங்களில் ஒன்றை எடுத்தாள். மேஜையின்மீதிருந்த விளக்கைக் கீழே எடுத்து வைத்துக்கொண்டு, மலைக்கள்ளன், சின்னியம்மாள் இவர்களுடைய வரவை எதிர்பார்த்துக்கொண்டே புத்தகத்தின் ஏடுகளைப்

புரட்டிக்கொண்டிருந்தாள். கண்ணும் கையும் புத்தகத்தில் இருந்தாலும், எண்ணமெல்லாம் எங்கேயோ இருந்ததால் நேரம் போவது தெரியாமல், வெகு நேரம் சென்றபின் திடுக்கிட்டு, அந்த அறையை நாலா பக்கமும் திரும்பிப் பார்த்தாள். அங்கிருந்த ஒரு கடிகாரத்தில் மணி பத்துக்குமேல் ஆய்விட்டது. நாட்றாயனைக் கேட்டுச் சொல்வதாகச் சொன்ன மலைக்கள்ளனும் வரவில்லை. பாலை வைத்துவிட்டு உடனே திரும்பி வருவாள் போலச் சென்ற சின்னியம்மாளையும் காணோம். பூங்கோதைக்குச் சஞ்சலமும் சந்தேகமும் அதிகரித்தன. புத்தகத்தை மேஜையின்மேல் வீசிவிட்டு, அறைக்குள் அங்கும் இங்கும் கூண்டிலடைபட்ட புனுகுப் பூனையைப் போல உலாவினாள். ஒவ்வொரு சாளரத்திலும் நின்று நின்று இருட்டை உற்று உற்றுப் பார்த்தாள். ஒரு பக்கத்தில் மலைச்சாரலும் இன்னொரு புறத்தில் மரக்கூட்டமும், மற்றொரு திசையில் மரங்களிடையே வானத்தில் மின்னிக்கொண்டிருந்த நட்சத்திரங்களுமே காணப்பட்டன. தன்னை வீட்டுக்கு அனுப்புவதாக மலைக்கள்ளன் சொன்ன வார்த்தை சூதோ என்று எண்ணினாள். அவனுடைய மாதிரியிலும், கிழவன் சொன்ன வார்த்தையிலும், தனக்கு ஏதோ அபாயம் இருப்பது போல் நிச்சயித்தாள். வீரய்யனையும் சின்னியம்மாளையும் உடனே சந்தித்து, அவர்களுடைய பித்தலாட்டங்களையெல்லாம் வாயார வைதுவிட வேண்டுமென்று ஆத்திரப்பட்டாள். கீழே இறங்கிப்போய், அவர்களைக் கேட்டுவிட வேண்டுமென்று எண்ணுவாள். கதவண்டை போவாள். உடனே, 'சீ, அவர்களைப் போய் நானேன் பார்க்கவேண்டும்? அவர்கள் என்ன தந்திரம் செய்தாலும் என்னை என்ன செய்துவிட முடியும்? உயிரைக் காட்டிலும் உயர்ந்தது ஒன்றுமில்லை. அந்த உயிரேபோனாலும் கௌரவத்தைக் காத்துக்கொள்ள வேணுமென்ற உறுதியுள்ளவர்களை யார்தாம் என்ன செய்துவிட முடியும்? பார்ப்போம். அவர்கள் எப்போது வேணுமானாலும் வரட்டும்' என்று தனக்குள்ளேயே சொல்லிக்கொண்டு மறுபடியும் உலாவுவாள்.



இப்படியாக மணி பதினொன்று ஆனது. ஆத்திரம் அதிகரித்தது. சிறு வயதின் சீற்றம் மேலெழுந்தது. புறப்பட்டாள். கதவைத் திறந்தாள். படிக்கட்டுகளில் இறங்கிக் கூடத்துக்கு வந்தாள். அங்கே பிரகாசமான விளக்கு எரிந்துகொண்டிருந்தது. நாலா பக்கமும் பார்த்தாள். ஸ்ரீராமர் படம் கண்ணில் பட்டது. சற்று நேரம் அதையே உற்றுப் பார்த்துவிட்டு, வெளிக் கதவண்டை போனாள். அது உட்புறத்தில் ஒரு பெரிய பூட்டால் பூட்டப்பட்டிருந்தது. பின்கட்டுக்குப் போகும் கதவண்டை போனாள். அதுவும் அப்புறத்தில் தாழிடப்பட்டிருந்தது. 'சின்னியம்மாள்! சின்னியம்மாள்!' என்று உரக்கக் கூவினாள். ஒரு பதிலும் இல்லை. தன்னைச் சிறைப்படுத்தியிருப்பதாக எண்ணினாள். 'சரி, அப்படியா?' என்று சொல்லிக்கொண்டே மீண்டும் மாடிக்கே போனாள். அறையிற் புகுந்து, கதவைத் தாழிட்டாள். இழுத்துப் பார்த்தாள். கதவு கெட்டியாகத் தாழிடப்பட்டிருக்கிறதென்று அறிந்தபின் கீழே உட்கார்ந்தாள். வெகுநேரம் உட்கார்ந்திருந்து அலுத்துப்போய், இடக்கையால் தலையைத் தாங்கிக்கொண்டு சற்று சாய்ந்து படுத்தாள். பற்பல யோசனைகளைப் பண்ணிக்கொண்டே அயர்ந்து தூங்கிவிட்டாள்.

## அத்தியாயம்—9

**ம**ணி இரண்டிருக்கும். மலைக்கள்ளன் தன்னுடைய
கள்ள அறையைவிட்டுக் கூடத்துக்கு வந்தான். அங்கிருந்த
நல்ல வெளிச்சத்தில் தன்னுடைய உடையைச் சரிபார்த்துக்
கொண்டான். முகம் பார்க்கும் ஒரு கண்ணாடியை எடுத்து,
விளக்கிற்கு முன்னால் நின்று, முகத்தை அழகு பார்த்துக்
கொண்டு, தன்னுடைய சிறு மீசையை முறுக்கிவிட்டுக்கொண்
டான். சந்தடியில்லாமல் படிகளின் மேல் ஏறினான்.
பூங்கோதை இருந்த அறையின் கதவண்டை வந்து நின்று,
கதவைத் தள்ளிப் பார்த்தான். தாழிடப்பட்டிருந்தது.
இடுப்பிலிருந்து ஒரு நீண்ட சாவியை எடுத்து; ஓசையில்லாமல்
கதவைத் திறந்தான். உள்ளே எட்டிப் பார்த்தான். விளக்குப்
பிரகாசமாக எரிந்துகொண்டிருந்தது. பூங்கோதை மெய்
மறந்து தூங்கிக்கொண்டிருந்தாள். அவள் அந்த அறையின்
கதவைத் தாழிட்டபோது, வேறு யாரும் தன்னையறியாமல்
அந்த அறைக்குள் வந்துவிட முடியாதென்று எண்ணித் தாழிட்
டாள்........கள்ளன் மெதுவாக உள்ளே சென்றான். பூங்கோ
தைக்குச் சிறிது தூரத்தில் தன்னுடைய இரண்டு கைகளையும்
பின்னால் கோத்துக்கொண்டு அசைவற்று நின்றான். அக்
கட்டழகியின் மட்டற்ற அழகைத் தன் கண்களால் அள்ளி
யள்ளிக் குடித்து மெய்சிலிர்த்தான். தூக்கத்திலும் அவ
ளுடைய அரிய முகப்பொலிவு பார்ப்பவர்கள் உயிரைப் பறிப்பதா
யிருந்ததைக் கண்டு, மலைக்கள்ளன் மயங்கி, மதிமருண்டு
நின்றான்.

'ஆ ! இந்த அருமையான செல்வம் யாருக்குக் கொடுத்து
வைத்திருக்கிறதோ ! இவள் வரிக்கக்கூடிய ஆண்பிள்ளையே
வாழ்வடைந்தவன். அழகுடைய பெண்கள் அநேகரைக்
காணலாம் ; ஆனால் அழகோடு இவ்வளவு அஞ்சாத நெஞ்சமும்
ஆற்றலும் அமைந்த பெண் அருமையிலும் அருமைதான்.



சுந்தரப் பெண்கள் பலர் கிடைப்பார்கள் ; ஆனால், சூரமும்
உள்ளவர்கள் வெகு சொற்பமே. கண்ணிற்கினிய கன்னிகள்
கணக்கிலோர் உண்டு ; ஆனால், கருத்துக்கும் இனியவர்கள்
கிடைப்பது கடினம். வீட்டிற்கு அலங்காரமெனத் தகுந்த
நங்கையர் வேண பேருண்டு ; ஆனால் நாட்டிற்கும் அணியாகும்
நாரியர் மிகச்சிலரே. அச்சமற்ற வாழ்க்கையையும், ஆற்றல்
மிகுந்த காரியங்களையும் விரும்பும் ஓர் ஆண் மகனுக்கு இப்
படிப்பட்ட பெண் கிடைத்தால், அதைக்காட்டிலும் வேறு
இன்பமும் ஒன்று இருக்க முடியுமா ! மலைக்கள்ளனென்ற
என்னை இவள் மதிப்பாளா ! என்னுடைய பெயரைச் சொன்
னாலே போதும் சீறி விழுகிறாள். இவள் வீட்டுக்குத் திரும்பிப்
போய்ச் சேர்ந்தவுடன் விரைவில் யாருக்காவது விவாகம்
செய்து கொடுத்துவிடுவார்களோ........! இவளை எழுப்பலாமா
........விளையாட்டாக ஏதாவது சொல்லிவிட்டாலும் விழுங்கி
விடுவது போலப் பார்த்து எரிந்து பேசுகிறாள்....தன்னந்தனி
யாக நடு ராத்திரியில் இப்படி அவளோடு நிற்பதைக் கண்
டால்........சொல்லி........இவளிடத்தில் சொல்லாவிட்டால்தான்
என்ன ?....' என்று பற்பல எண்ணங்களில் தன்னை முற்றிலும்
மறந்துவிட்ட மலைக்கள்ளனுடைய கையிலிருந்த வாள் கை
நழுவிக் கலீரென்று கீழே விழுந்தது.

சிங்கத்தின் பெருமுழக்கத்தைக் கேட்ட பெண்மான்
போலப் பூங்கோதை திடுக்கிட்டு விழித்தாள். ஆண் உருவம்
ஒன்று எதிரில் நிற்பதை அறிந்தாள் ; பதைபதைத்து எழுந்
தாள் ; எட்டச் சென்று நின்றாள். அவிழ்ந்திருந்த தன் கூந்
தலை முடித்துக்கொண்டு, "என்ன இது ! இந்நேரத்தில் இங்கு
உமக்கு என்ன வேலை ? தாழிட்டிருந்த கதவைத் தட்டாமல்
ஏன் திறந்தீர் ? இது ஒரு மனுஷத்தனமா ? அழகா ? அறிவா ?
ஆண்மையா ? கள்ளரானாலும் கண்ணியமுள்ளவரென்று
எண்ணச் சொன்னீரே ! சீ ! உமக்கு இது சற்றும்
தகாது" என்று சீறினாள்.

"பூங்கோதை ! சற்றுப் பொறு. கோபித்துக்கொள்
ளாதே! உன்னிடத்தில் சொல்ல வேண்டாமென்று நினைத்தேன்.
இருந்தாலும் சொல்லாமல்...."

"சொல்லாமல் கழுத்தை அறுத்துவிடலாம் என்று வந்தீராக்கும். கழுத்தறுக்க எடுத்த கத்தி கீழே விழுந்துவிட்டது ........அல்லவா ?"

"ஆ ! தெய்வமே !........பூங்கோதை ! நான் உன்னைப் போன்ற ஓர் உத்தமியைக் கழுத்தறுக்கக்கூடிய அவ்வளவு காதகன் அல்ல. என்னை அவ்வளவு கேவலமாக எண்ணாதே!"

"காதகரோ அல்லவோ, கேவலமே உயர்வோ எனக்குத் தெரியாது. உம்முடைய நடத்தை முற்றும் ஒழுங்கீனமானது. உம்மைச் சிறிதும் நம்பத்தகாதென்று கண்டுகொண்டேன் ........போதும்."

"என்ன ஒழுங்கீனம் ?........ஏன் நம்பத்தகாது ?"

"என்னவா ?........உம்மோடு வாதிக்க எனக்குச் சிறிதும் மனமில்லை. இருந்தாலும் வேறு விதியில்லாததால் சொல்லுகிறேன். நான் தனியாக மெய்மறந்து தூங்குகின்ற இந்த அறைக்குள்—கதவு திறந்திருந்தாலும் நீர் வந்திருக்கக்கூடாது. அப்படியிருந்தும் தாழ்போட்டிருந்த கதவைக் கள்ளமாகத் திறந்துகொண்டு சந்தடி செய்யாமல் வந்தது எந்த ஒழுங்கைச் சேர்ந்து ? என்னை இன்று வீட்டுக்கனுப்புவதாக வாக்களித்து, நான் அடுத்தடுத்துக் கேட்டும் யாரோ நாட்றாயனைக் கேட்டுவிட்டு வந்து சொல்லுவதாக என்னை உள்ளே போகச் சொன்னீர். நீர் வருவீரென்று நான் ஜாமம் வரையில் காத்திருந்தும் வராமல், நான் தூங்கும் போது திருட்டுத்தனமாக உள்ளே வந்தீர். 'ஏன் நம்பத்தகாது' என்று மட்டும் கேட்கிறீர் ?"

"உண்மைதான். உன்னுடைய ஏகாந்த இடத்துக்கு இந்த நேரத்தில் வந்தது ஒழுங்கீனம்தான்; ஒப்புக்கொள்ளுகிறேன். நாட்றாயனோடு பேசிவிட்டு, உடனே வருவதாகச் சொன்னபடி வராமற்போனதும் தவறிப் போனதுதான். ஆனால், இந்த இரண்டிற்கும் தகுந்த காரணங்கள் இருக்கின்றன. அவற்றை உன்னிடத்தில் சொல்லத்தான் வந்தேன். நான் இப்போது உடனே புளியந்தோப்புவரையும் போக



வேண்டியிருக்கிறது. உன்னிடத்தில் சொல்லாமலேயே போகலாமென்று எண்ணினேன். அது சரியல்லவென்று சொல்லிவிட்டுப் போக வந்தேன்."

"ஓஹோ ! என்னிடத்தில் சொல்லிவிட்டுப் போக வந்தீரா ? அப்படியானால் கண்ணியமான முறையில் கதவைத் தட்டி என்னை எழுப்பாமல், கள்ளத்தனமாக உள்ளே வரக் காரணம் என்ன ?........ எழுப்பாமலேயே சொல்லிவிடலாம் என்று வந்தீரோ ?"

"காரணம் சொல்கிறேன். நான் நாட்றாயனைப் பார்த்துவிட்டு உடனே வருவதாகச் சொன்னேனல்லவா ?..........நாட்றாயனோடு பேசினதில் இன்றிரவு உன்னை வீட்டுக்கு அனுப்ப முயன்றால் ஆபத்து நேரும் என்று அறிந்தேன். உன்னை ஊருக்கனுப்பச் சில ஏற்பாடுகளைச் செய்யவேண்டியிருந்ததால் நாட்றாயனோடு பேசினவுடன் இங்கே வரமுடியவில்லை. அந்த ஏற்பாடுகளைச் செய்ய நான் இந்நேரம் வரை வெளியில் போயிருந்தேன். நான் திரும்பி வந்து சிறிது நேரந்தான் ஆயிற்று. நான் உடனே வராததால் நீ கோபங்கொண்டிருப்பாயென்று எனக்குத் தெரியும். சந்தேகித்தும் இருப்பாயென்று சந்தேகித்தேன். என்மேற் கோபமும் சந்தேகமும் கொண்டிருக்கும் உன்னை நான் கதவைத் தட்டித் திறக்கச் சொன்னால் நீ ஒத்துக்கொள்ள மாட்டாய். நீ ஒருதரம் மறுத்தபின், மனஸ்தாபத்தோடு தள்ளிக்கொண்டு உள்ளே வருவது முற்றிலும் குற்றமாகும் என்று எண்ணி, அதைக்காட்டிலும் இது மேலான வழியென்று என்னுடைய சாவியால் உள்ளே வந்தேன். உன்னை எழுப்பலாமா என்று எண்ணிக்கொண்டேயிருக்கும் போது கைதவறிக் கத்தி கீழே விழுந்தது. நீ விழித்தாய்."

"சரி, நீர்தான் வெளியில் போயிருந்தீர் ! அந்த அம்மாள் —உங்கள் சின்னியம்மாள்—துணைக்காகவாவது இங்கே வந்து என்கூட இருக்கக்கூடாதா ? பாலை வைத்துவிட்டுச் சொல்

லாமற் போனவள் திரும்பிக்கூடப் பார்க்கவில்லையே!............ இந்தச் சூதும்............"

"கோபிக்க வேண்டாம், பூங்கோதை. இதிலொன்றும் சூதில்லை. சின்னியம்மாள் இங்கே இல்லை. சின்னியம்மாளை உனக்காகக் கீழே அனுப்பியிருக்கிறேன்."

"அவள் இங்கே இல்லையா!........ அப்படியானால்.... அப்படியானால், அந்தம்மாள் போய் எவ்வளவு நேரமாச்சு?"

"வெகு நேரமாயிற்று. இந்நேரம் புளியங்தோப்புக் கொட்டாரத்தில் இருப்பார்கள்."

"அப்படியானால், கூடத்தின் வெளிக்கதவின் உட்புறமாக ஒரு பெரிய பூட்டுப் பூட்டப்பட்டிருந்ததே. அதை உமக்குத் திறந்துவிட்டது யார்? நீர் இப்போதுதான் வந்ததாகச் சொன்னீரே."

"எனக்கு வேறு வழி இருக்கிறது. அந்தப் பூட்டைத் திறக்கவேண்டிய அவசியம் இல்லை."

பூங்கோதை ஆச்சரியப்பட்டாளோ அல்லது அவநம்பிக்கை கொண்டாளோ, சற்று நேரம் ஒன்றும் பேசாமல் மலைக் கள்ளனை ஏற இறங்கப் பார்த்துக்கொண்டேயிருந்தாள். அவனும் கண் கொட்டாமல் புன்சிரிப்புடன் பூங்கோதையைப் பார்த்துக்கொண்டேயிருந்தான். கொஞ்ச நேரம் கழித்துப் பூங்கோதை, "உம்முடைய பேச்சு வெகுசாமர்த்தியமாகத்தான் இருக்கிறது. காரணங்களும் வெகு பொருத்தம் போலத்தான் காணப்படுகின்றன. இருந்தாலும்...."

"சிறிதும் சந்தேகிக்க வேண்டாம், பூங்கோதை! என்னுடைய பகைவர்களிடத்தும் நான் கண்ணியக் குறைவாக நடந்துகொண்டதில்லை. உன்னை அனுப்புவதற்கே நான் ஏற்பாடுகளைச் செய்துகொண்டிருக்கிறேன். என்னுடைய ஒற்றர்கள் சொன்ன உளவுகளால் உன்னை இன்றைக்கு அனுப்புவதை மாற்றிக்கொள்ள வேண்டியதாயிற்று. உன்னை



இன்று நான் உன் வீட்டுக்கு அனுப்புவேன் என்று எதிர்பார்த்தோ, என்னவோ காத்தவராயனுடைய ஆள்கள் அங்கங்கே உன்னுடைய வீடுவரையிலும் கண்ணுங் கருத்துமாக இடைவிடாது காத்துக்கொண்டிருக்கிறார்கள். முடியுமானால் மறுபடியும் உன்னைக் கொண்டுபோய்விட முயல்வார்கள்....நேரமாகிறது. நான் அதற்காக அடிவாரத்துக்குப் போய்ப் பல ஏற்பாடுகளைச் செய்யவேண்டியிருக்கிறது. ஒரு மூடு வண்டி முதலாவது தயார் செய்ய வேண்டும். நான் போய்.... நாளை பத்து மணிக்குள் வந்துவிடுவேன். வந்த உடன் உன்னை நானே கூட்டிக்கொண்டு போய் வீட்டுக்கு அனுப்பி வைக்கிறேன். அதுவரையிலும் பொறுத்துக்கொள். உனக்குத் துணையாகப் பெரியவர் விடுதியில் இருக்கும் ஒரு வேலைக்காரி இதோ வருவாள். உன் ஏவலைக் கேட்க நாட்றாயனும் இங்கே இருப்பான். நான் போய் வருகிறேன்" என்று வீரய்யன் இதுவரையிலும் தரையிலேயே கிடந்த வாளை எடுத்துக்கொண்டு பூங்கோதையைப் போக உத்தரவு கேட்பது போலப் பார்த்தான்.

"உண்மைதானா? நம்பலாமா?" என்று பூங்கோதை வெகு பரிதாபமான குரலில் கேட்டாள்.

"உண்மை........நம்பலாம். என்னுடைய இஷ்ட தெய்வமாகிய ஸ்ரீ ராமச்சந்திரன்மேல் ஆணை" என்று சொல்லிக் கொண்டே வெளியில் வந்தான். கதவண்டை அப்போதுதான் வந்து நின்ற வேலைக்காரியைப் பார்த்து, "வந்துவிட்டாயா! நான் வருகிற வரையிலும், சின்னியம்மாள் வருகிற வரையிலும் பூங்கோதையம்மாளுக்கு வேண்டிய பணிவிடைகளைச் சரியாகக் கவனிக்க வேண்டும். தெரியுமா?" என்று சொல்லிக்கொண்டே மலைக்கள்ளன் மறைந்துவிட்டான்.

வந்த வேலைக்காரியும் பூங்கோதையும் கதவைத் தாழிட்டுக் கொண்டு படுத்தார்கள். தூக்கம் வருகிற வரைக்கும் முன்பின் அறியாத இரண்டு பெண்கள் சந்தித்தால் வழக்கமாகப் பேசிக்கொள்ளுகிறபடி பேசிக்கொண்டிருந்தார்கள்.

பூங்கோதை வெகு சாமர்த்தியமாகப் பல கேள்விகள் போட்டும்; கிழவனும் கிழவியும் யார் என்றாவது, மலைக் கள்ளனான வீரய்யனுக்கும் அவர்களுக்கும் என்ன சொந்தம் என்றாவது, சின்னியம்மாளுக்கும் வீரய்யனுக்கும் என்ன உறவு என்றாவது தெரிந்துகொள்ள முடியவில்லை. பேசிக்கொண்டே வேலைக்காரி தூங்கிவிட்டாள். பூங்கோதைக்குத் தூக்கமே வரவில்லை.

விடியுமுன் வேலைக்காரி எழுந்து போய், பூங்கோதையின் ஸ்னானத்துக்கு வெந்நீர் முதலானது தயார் செய்துவிட்டு வந்து பூங்கோதையை உபசரித்தாள். பூங்கோதை, கூச்சப்பட வேண்டியவர்கள் யாரும் இல்லாததால் தானே பின்கட்டிற்குப் போய் முழுகிவிட்டுத் தன்னுடைய புடைவையைக் கசக்கிப் பிழிந்து ஈரத்தோடு உடுத்திக்கொண்டு மேல் மாடிக்குப் போனாள். பாதிப் புடைவையைக் கட்டிக் கொண்டபடியே மறுபாதியின் முனையைப் பலகணியின் கம்பி ஒன்றில் கட்டி அங்கே இனிமையாக வீசிக்கொண்டிருந்த இளங் காற்றில் உலர்த்திக்கொண்டே நின்றாள். வேலைக்காரி வெகு பயபக்தியுடன் கொண்டுவந்த உடைகளை மறுத்துவிட்டாள். காலை ஆகாரத்துக்குப் பூங்கோதைக்கு விருப்பமானது என்னவென்று வேலைக்காரி கேட்டாள். புடைவை கொஞ்சம் உலர்ந்தவுடன் தானே சமையலுக்கு வருவதாகச் சொல்லியனுப்பி விட்டாள். கொஞ்ச நேரம் போனதும்; உலர்ந்தும் உலராமலும் இருந்த புடைவையை வழக்கப்படி உடுத்திக்கொண்டு கீழே போனாள். வேலைக்காரி கொண்டு வைத்திருந்த கண்ணாடியால் தன் முகத்தையும் சிகை வகுப்பையும் சீர்பார்த்துக் கொண்டு குங்குமத் திலகமிட்டாள். தன் வீட்டில் வழக்கமாகச் செய்வது போலக் கிழக்கு நோக்கி இஷ்ட தெய்வத் தியானம் செய்துவிட்டுச் சமையல் அறைக்குள் நுழைந்தாள். அடுப்பில் பால் காய்ந்துகொண்டிருந்தது. இஷ்டப்படி எதை வேணுமானாலும் சமைத்துக்கொள்ளத் தேவையான எல்லாச் சாமான்களும் அங்கே இருந்தன. பூங்கோதை தானே கொஞ்சம் கோதுமைக் குருணையைப் பொங்கி, பக்குவம் செய்து வேலைக்



காரிக்கும் கொடுத்துத் தானும் உண்டு, பசியாறப் பாலையும் குடித்துவிட்டு எழுந்தாள். மத்தியானச் சாப்பாட்டுக்கு உத்தரவு கேட்ட வேலைக்காரியிடம் தனக்கு அதற்குமேல் ஒன்றும் வேண்டாம் என்று சொல்லிவிட்டு மாடிக்குப் போய் விட்டாள்.

மாடியில் ஒரு அலமாரி நிறையத் தமிழ்ப் புத்தகங்கள் இருந்தன. இதுவரையிலும் பூங்கோதை அந்த அறையில் இருந்த பல நல்ல பொருள்களையுங்கூட லட்சியம் செய்ய வில்லை. இப்போது அந்த அலமாரியைத் திறந்து என்னனென்ன புத்தகங்கள் இருக்கின்றனவென்று சாவதானமாகப் பார்த்தாள். எல்லாப் புத்தகங்களையும் கவனித்த பின், தனக்கு விருப்பான கம்ப ராமாயணப் புத்தகத்தைக் கையில் எடுத்துக்கொண்டு, ஒரு நாற்காலியைச் சாளரத்தருகில் இழுத்துப் போட்டுப் படித்துக்கொண்டிருந்தாள்.

மணி பத்துக்குக் கிட்ட வரவர படிப்பில் கவனம் குறைந்து கொண்டே வந்தது. பத்து அடித்தது. புத்தகத்தை மேஜையின்மேல் வைத்துவிட்டாள். எழுந்தாள். தலை வாசலுக்கு நேராக இருந்த ஜன்னலண்டை வந்து கம்பிகளைப் பிடித்துக் கொண்டு வெகு நேரம் வரை வழியைப் பார்த்துக்கொண்டே நின்றாள். திரும்பி, கடிகாரத்தைப் பார்த்தாள்........மணி பத்தேகால் ஆயிற்று,..........பத்தரை ஆயிற்று; பத்தே முக்காலும் ஆய்விட்டது. 'பத்து மணிக்குள் வருகிறேன்' என்ற வீரய்யன் வரவில்லை. முன்சொன்ன வார்த்தைகளைப் போலவே இதுவும் மாறிவிடுமோ என்று பூங்கோதை சந்தேகிக்க ஆரம்பித்தாள். 'பேசுவதைப் பார்த்தால் ஒழுங்காகத்தான் இருக்கிறது. ஆனால் வாழ்க்கை மர்மங்களும் இன்னும் பல சந்தேகப்படக்கூடிய சங்கதிகளும் முழுதும் நேர்விரோதமான எண்ணத்தை உண்டாக்குகின்றன. என்ன மோசத்துக்கு ஆளாகப் போகிறோமோ........'' என்று கலங்க ஆரம்பித்து விட்டாள். இந்தச் சமயத்தில் கீழே செய்ய வேண்டிய வேலைகளையெல்லாம் செய்துவிட்டுப் பூங்கோதைக்குத் துணையாக இருக்க எண்ணி, வேலைக்காரி மாடிக்கு வந்தாள்.

அவளைப் பார்த்ததும் பூங்கோதை, "ஏனம்மா....அம்மா உங்கள் பேரென்ன ? ....என்ன ? என்ன ? ........பவளம்மாளா ?........சரி, அம்மா பவளம்மா ! இந்த வீட்டிலிருந்து வெளியே போக வெளிக் கதவைத் தவிர, வேறு வழி இருக்கிறதா ?"

"ஆமாம்மா, இருக்குது."

"எங்கே........அந்த வழியைக் காட்டுங்கள். கொஞ்சம் வெளியிற் போய்க் காற்று வாங்கி, இந்த மலைப்பிரதேசத்தின் அருமையான காட்சிகளைக் கண்குளிரப் பார்க்கவேணுமென்று ஆசைப்படுகிறேன். போவோம், வாருங்கள்."

"அந்தக் கதவை நாம் திறக்க முடியாது. அந்த வழியில் எஜமானர் வீரய்யா ஒருத்தர்தான் இஷ்டப்பட்ட போது போகவும் வரவும் முடியும். அதற்குச் சாவியும் அவர் ஒருவரிடத்தில்தான் இருக்குதுங்க" என்றாள் பவளம்மாள்.

பூங்கோதை அதைக் கேட்காதவள் போல, பதில் ஒன்றும் பேசாமல் இடப்புறத்திலிருந்த பள்ளத்தாக்கையும், நீர் வீழ்ச்சியையும், அந்த நீரோடை சமநிலத்தில் போய்க் கலந்தது போலக் கண்ணுக்குப் பட்ட இடத்தையும் உற்றுப் பார்த்துக் கொண்டே, கூடுமானால் அந்தப் பள்ளத்தாக்கின் வழியே குதித்து ஓடிவிட நினைப்பவள் போல் பார்த்துக்கொண்டே நின்றாள்.

திடீரென்று பள்ளத்தாக்கின் வலதுப்புறத்தில் ஒரு பாறையின் மறைவிலிருந்து உருவம் அசைவது கண்ணுக்குப் பட்டது. அந்த உருவம் மலையேறி வருவதைக் கண்டாள். உற்று உற்றுப் பார்த்தாள். வெகு தூரத்தில் செடி, மரங்களுக்கிடையில் ஓர் உருவம் அசைவது மட்டும் தெரிந்ததேயல்லாமல் அடையாளம் அறிய முடியவில்லை. பெருமூச்சு விட்டுக் கொண்டே நின்றாள். உருவம் கிட்டக் கிட்ட வந்துகொண்டிருந்தது. மலைக்கள்ளன்தானா என்று நிச்சயிக்கும் முன்னால், உருவம் மற்றொரு பாறையின் பின்னால் மறைந்து போய்விட்டது.



பாறையையும் பள்ளத்தாக்கையும் கண்கொட்டாமற் பார்த்துக்கொண்டே நின்றாள். மறுபடியும் அந்த உருவம் கண்ணுக்குப் புலப்படவில்லை. மரச்செறிவிலும் மலையின் மூலை முடுக்கிலும் மறைந்தாலும் வாசலுக்கு நேராக வந்து தானே ஆகவேண்டும் என்று, வாசலுக்கு முன்னால் வைத்த பார்வையை மாற்றாமல் பார்த்துக்கொண்டேயிருந்தாள். 'பூங்கோதை!' என்று பின்னால் ஒரு சத்தம் கேட்டது.

திடுக்கிட்டுத் திரும்பினாள். மலைக்கள்ளன் சிரித்துக் கொண்டு எதிரில் நின்றான். போகும்போது தரித்திருந்த உடையும் உடைவாளும் காணவில்லை. கள்ளச் சின்னங்கள் எள்ளளவுமின்றி செல்வக்குடியிற் பிறந்த ஒரு சிறுவன், வீட்டிலிருப்பது போல் விளங்கினான். என்ன சொல்லப் போகிறானோவென்று பூங்கோதை ஏங்கி நின்றாள். "நான் முன்னமேயே என்னுடைய வழியில் உள்ளே வந்து உடைகளை மாற்றிக்கொண்டு வந்தேன். சரி, நீ ஸ்னானம் செய்திருக்கிறாய்; சந்தோஷம். திலகம் பொலிந்த உன் முகத்தைப் பார்க்கும்போது திருமகள் தரிசனம் கிடைத்தது போல் இருக்கிறது" என்றான்.

"போதும், நீர் போகும்போது சொல்லிப்போனது என்ன ? அதைவிட்டு......." என்று பூங்கோதை முகஞ் சுருக்கினாள்.

"ஆ ! மறந்துவிட்டேன். வருத்தப்படாதே. மணி பதினொன்றுக்கு மேலாய்விட்டது எனக்குத் தெரியும். பொறுத்துக்கொள். போனது முதல் திரும்புகிற வரையிலும் வேலை சரியாக இருந்தது. நான் சொன்னபடி பத்து மணிக்குள் வந்து சேர முடியாமற் போய்விட்டது."

"போனது போகட்டும். இனிமேல் ஆகவேண்டியதைச் சொல்லும்" என்றாள்.

"சொல்லுகிறேன். காலையில் ஏதாவது சாப்பிட்டாயா ? பவளம்மாள், என்ன ஆகாரம் ?" என்று மலைக்கள்ளன் அவள் பக்கம் திரும்பினான்.

பவளம்மாள் சொன்னாள்.

"பேஷ், வெகு சந்தோஷம். இதை உன் சொந்த வீடு போல் கருதி, உனக்கிஷ்டமானதைச் செய்துகொள்ள வேணுமென்பது தான் என்னுடைய ஆனந்தம். மத்யானத்துக்கு ஆகாரம் என்ன? எனக்கு ஏதாவது நீ சமைத்தது கிடைக்குமா ?" என்று வீரய்யன் கபடச் சிரிப்புக் காட்டினான்.

வந்துவிட்டது கோபம் கோதைக்கு.

"சீ ! உம்முடைய சிரிப்புக் கெட்டுது. கள்ளவாழ்க்கையுள்ளவர்களுக்குக் கண்ணியம் எங்கிருந்து வரும் ?" என்று முணுமுணுத்துக்கொண்டு, சரேலென்று வீரய்யனுக்கு முன்னால் நின்றுகொண்டிருந்த இடத்தை விட்டு, அவ்வறையின் கோடியின் பலகணிக்கருகில் விரைந்து நடந்து, முகத்தைத் திருப்பிக்கொண்டு நின்றுவிட்டாள்.

"பூங்கோதை ! சரியாக மூன்று மணிக்கு இங்கிருந்து புறப்படுவோம். இன்றிரவு ஒன்பது மணிக்குள் உன்னை உன் தகப்பனாரிடத்தில் சேர்த்துவிடுகிறேன். தயவு செய்து கோபங் கொள்ளாதே" என்றான்.

பூங்கோதை திரும்பிப் பார்த்தாள். அவளுடைய கண்களில் நீர் கலங்கியிருந்தது.

மறுபடியும் மலைக்கள்ளன், "இது சத்தியம், நீ சற்றும் சந்தேகிக்க வேண்டாம். நான் போய்ச் சில அலுவல்களைக் கவனித்துவிட்டுச் சரியாக மூன்று மணி சுமாருக்கு வருகிறேன். நீ அதற்குள் ஆகாரம் செய்து முடித்துக்கொண்டு சித்தமாயிருக்க வேண்டும்" என்றான்.

"எனக்கு ஆகாரம் வேண்டாம்" என்றாள் பூங்கோதை.

"பூங்கோதை ! அது சரியல்ல. நீ இரண்டு நாளாகச் சாப்பிடவில்லை. ஒரு வேளைச் சோறுகூட இல்லாமலிருப்பது எனக்குக் கவலையை உண்டுபண்ணுகின்றது. இவ்வளவு பாடுபட்டு உன்னைக் காத்தவராயன், வீரராஜன் இவர்களுடைய கையிற் சிக்கிவிடாதபடி காத்த என்னுடைய இருப்பிடத்தில், சந்தோஷமாக ஒருவேளை உணவு கொள்ளக்



கூடிய உறவுகூடக் காட்டக்கூடாதா நீ ? ஒருகால் ஜாதி, மதம், ஆசாரம் இவைகளைப்பற்றிய அருவருப்பு உனக்கு ஏதாவதிருந்தால் உன் கைப்படவே சமைத்துக்கொள். என்ன பூங்கோதை ?"

"எனக்குப் பசி இல்லை. பசியில்லாமலும் உறவு காட்டுவதற்கென்றே, சாப்பிட வேணுமென்று என் மனம் ஒப்பவில்லை."

"நீ வீடு போய்ச் சேர மணி ஒன்பதாகும். பத்து, பதினொன்றும் ஆனாலும் ஆகலாம். அதுவரையிலும் நீ உணவின்றி இருப்பதை ஒத்துக்கொள்ள முடியாது. இப்போது வேண்டாமென்றாலும் கீழே சின்னியம்மாள் நாம் போவதற்குள் எல்லாம் தயாராக வைத்திருப்பாள். அங்கேயாவது சாப்பிடுவதாகச் சொன்னால்தான் உன்னை வீட்டுக்கனுப்பும் வேலையைச் சந்தோஷமாகச் செய்ய முடியும்; என்ன ?"

"கீழே போய்ப் பார்ப்போம். ஆகட்டும்" என்று பூங்கோதை சாப்பிடச் சம்மதம் காட்டினாள்.

"இன்னும் இரண்டொரு விஷயங்களில் நான் சொல்லுகிறபடி செய்ய நீ ஒப்புக்கொள்ள வேண்டும். பின்னால் சொல்லுகிறேன்....பவளம்மா, நான் இன்னும் ஒன்றும் சாப்பிடவில்லை. சீக்கிரம் சமையல் செய்" என்று சொல்லிக்கொண்டே மலைக்கள்ளன் போய்விட்டான்.

மலைச்சாரலைப் பார்த்துக்கொண்டே பூங்கோதை நெடுநேரம் நின்றுகொண்டிருந்து, பின் தரையின்மீது படுத்துக்கொண்டு, பற்பல எண்ணங்களாற் பாடுபட்டுக்கொண்டிருந்தாள். பாலும் பழங்களுமாவது கொஞ்சம் சாப்பிடச் சொல்லி வேலைக்காரி மிக வேண்டிக்கொண்டும் பூங்கோதை விரும்பவில்லை. சுமார் இரண்டு மணிக்கு சுத்த ஜலம் கொண்டு வரச் சொல்லி, அதைக் குடித்துவிட்டு, அமைதியில்லாமலே அறையில் அலைந்துகொண்டிருந்தாள்.

மூன்று மணியடிப்பதற்கு முன்னால், மலைக்கள்ளன் ஒரு போர் வீரனைப் போல் உடை தரித்துக்கொண்டு, முகத்தை முழுதும் தலையோடு ஒரு கவசமிட்டு மூடிக்கொண்டு, பூங்கோதையின் முன்னால் வந்து நின்றான். வீரய்யனைத் தவிர, வேறு யாரும் அங்கு வர முடியாதென்பது தெரிந்தாலும் உருத் தெரியாத அவ்வுருவத்தைக் கண்டு பூங்கோதை விழித்தாள். கண்களுக்கும் மூக்கிற்கும் வாய்க்கும் நேராக இருந்த துவாரங்களைத் தவிர ஒன்றும் தெரியவில்லை. உடனே கள்ளன், தன் தலையணியை எடுத்துக் கையில் வைத்துக்கொண்டு, "போகலாமா?" என்றான். பூங்கோதை வெகு பரபரப்புடன், "சரி, போவோம்" என்று தன் ஆடையைச் சரி பார்த்துக்கொண்டு அங்கிருந்த கண்ணாடியில் முகத்தைப் பார்த்து, கலைந்திருந்த பொட்டை ஒழுங்குபடுத்திக்கொண்டு, கள்ளனுக்கு முன்னால் கதவண்டை போனாள். அந்த இடத்தை விட்டுப் புறப்பட்டு விட்டால் போதும் என்று அவசரப்பட்டாள்.

"அப்பா! என்ன அவசரம்! நான் வராமல் கதவைத் திறப்பவர்கள் யார்? சற்றுப் பொறு, பூங்கோதை. உன்னோடு சில வார்த்தை பேச வேண்டும். கீழே போன பின் இவ்வளவு சாவதானமாகப் பேச முடியாது. ஆகையால் உன்னிடம் சொல்ல வேண்டியதையெல்லாம் இங்கேயே சொல்லிவிட வேண்டும். உன்னை மறுபடியும் அபகரித்துக்கொள்ள வேண்டும் என்று வீரராஜனும் காத்தவராயனும் வெகு அதிசயிக்கத்தகுந்த ஏற்பாடுகளையெல்லாம் செய்திருக்கிறார்கள். உன்னைச் சௌக்கியமாக வீடு சேர்த்துவிட்டால் நான் சமர்த்தனாவேன். கொஞ்சம் ஏமாந்தாலும் போச்சு. ஆகையினால், நான் சொல்லுகின்ற எந்த ஏற்பாட்டையும் நீ உதாசீனமாக எண்ணக்கூடாது. உன்னுடைய நன்மையைக் கருதியே சொல்லுகிறேன்" என்றான் மலைக்கள்ளன்.

"நான் முன்னமேயே சொல்லியிருக்கிறேனே. சுத்தமானதும் சுயமரியாதைக்குக் குறைவு வராததுமான எந்த ஏற்பாட்டையும் ஒத்துக்கொள்வேன். இல்லாவிட்டால் என்னுடைய உயிரையுங்கூட மதிக்கமாட்டேன்" என்றாள்.



"சரி, சுத்தமும் சுயமரியாதையும் குறையாது. ஆனால் உனக்குப் புதுமையானதென்று புறக்கணிக்கக்கூடாது."

"இல்லை, குற்றமற்றது என்று தெரிந்தால் பழக்கமில்லாதது என்று பழிக்கமாட்டேன்."

"சந்தோஷம். இன்னொரு விஷயம். விஜயபுரியில் உங்கள் வீட்டுக்குச் சிறிது தூரத்தில் ஒரு பெரிய மாந்தோப்பு இருக்கிறதல்லவா?"

"ஆம்."

"அது யாருக்குச் சொந்தம்? இப்போது அதில் யார் இருந்து வருகிறார்கள் என்பது உனக்குத் தெரியுமா?"

"தெரியும். அந்தத் தோப்பு எங்கள் அத்தை காமாக்ஷியம்மாளுடைய பூர்வீகச் சொத்து. ஏதோ ஒரு கடனை அடைக்க அதை விற்றுவிட்டதாகவும், அதைப் பட்டணத்திலிருந்து வந்திருக்கிற மகம்மதியர் விலைக்கு வாங்கி, அதில் ஒரு புது மாளிகை கட்டிக்கொண்டு இருந்து வருவதாகவும் எங்கள் அத்தை அடிக்கடி பேசுவதுண்டு."

"அந்த மகம்மதியரைப் பார்த்திருக்கிறாயா? அவர் பேர் என்ன? தெரியுமா?"

"அவரைப் பார்த்திருக்கிறேன்....ஒரே ஒரு தரம் அத்தை காட்டினார்கள். ஆனால் அவருடைய பெயரை அறியவேண்டிய அவசியம் நேரவில்லை. அப்பாவுக்கும் அத்தைக்கும் தெரிந்திருக்கலாம். ஏன்?"

"அவருடைய பெயர் அப்துல் ரஹீம். அவர் என்னுடைய இன்னுயிர்த் தோழர். விஜயபுரியில் எனக்கு ஆகவேண்டிய அலுவல்களிருந்தால் அவற்றை அவர்தான் கவனிக்கிறவர். மிகவும் யோக்யர். முற்றிலும் நம்பத் தகுந்தவர். இன்றைக்கு அவர் தம்முடைய சொந்த வண்டியைக் கொண்டுவந்து, அதில் உன்னை வீட்டுக்குக் கொண்டுபோய்ச் சேர்க்கவேண்டுமென்று, அவரை நான் கேட்டுக்கொண்டிருக்கிறேன். அவரை நீ சிறிதும்

சந்தேகித்துவிடாமல் அவருடன் வீடு போய்ச் சேர வேண்டும். ஏதேனும் தடையுண்டா ? வேறு மதத்தவர் என்ற...."

"தடையில்லை. மனிதர் நம்பத் தகுந்தவரானால் மதம் எதுவானால் என்ன ?"

"சந்தோஷம். பூங்கோதை, உன்னுடைய புத்திக் கூர்மையை நான் மிகவும் போற்றுகின்றேன். உன்னோடு பேசுவது எனக்கு ஒப்பில்லா உவகையளிக்கின்றது ; வெகு நாளாகக் கள்ளர்களோடு இருந்துவரும் இந்த மலை வாழ்க்கையால் மரத்துப்போயிருந்த என் மனக்களிப்பு உன்னுடைய அரிய குணத்திலும், அறிவுடைய பேச்சிலும், அவைகளைக்காட்டிலும் அச்சமில்லாத உன்னுடைய அபூர்வமான பெண்மையிலும் பூரித்துப் போனதனால் சிற்சில சமயங்களில் உன்னோடு நான் விளையாட்டாகப் பேசினதை விகற்பமாக எண்ணிவிடாதே. கள்ள வாழ்க்கையிலிருந்தாலும் கண்ணியம் உள்ளவன் என்பதை மறந்துவிடாதே. உன்னுடைய அத்தைக்கும் அப்பாவுக்கும் என் வந்தனங்களைச் சொல்லு. தெய்வம் துணை புரிந்தால் வெகு சீக்கிரத்தில் உங்கள் வீட்டிற்கே வந்து உங்களையெல்லாம் பார்க்கிறேன்."

"ஐயா, நீங்கள் செய்யும் உதவிக்கு நான் வீடு சேர்ந்த நிமிஷம் முதல் காடு போகிற வரையிலும் உங்களைத் தெய்வம் போற் கருதிக் கையெடுப்பேன். என் மானத்தைக் காத்த இந்த அரும்பெரும் உதவிக்கு என் தந்தையின் மூலமாக உங்களுக்குப் பெரிய வெகுமதிசெய்ய வேணுமென்று என் ஆசை. அதை ஏற்றுக்கொள்ள வேணும்."

"பூங்கோதை ! கோடி கோடியாகக் கொட்டிக் கொடுத்தாலும் கொள்ளமாட்டேன். பொன்னோ வேறு பொருளோ என்னிடத்தில் இல்லாதது ஒன்றுமில்லை. உன் தந்தையிடத்தில்—எவ்வளவு பெரியதானாலும்—கூலி வாங்கக்கூடியவன் அல்ல. ஆகையினால் அந்த எண்ணத்தை விட்டுவிடு. அப்படி உதவி பெறவேண்டிய அவசியம் ஏதேனும் நேரிட்டால், நானே வந்து கேட்டு, உன்னிடத்தில் வாங்கிக்கொள்ளுகிறேன்....



உன்னுடைய நகைகளெல்லாம் நீ வேண்டாமென்றாமலும் உன் பின்னாலேயே உன் வீடுவந்து சேரும். அங்கே போன பின்னாலாவது அவற்றை நான் மீட்டுக்கொடுத்த நினைவிற்காக அணிந்துகொள். அத்துடன்....இதோ....இந்தா, உன் இரண்டு கைகளையும் ஏந்து" என்றான்.

பூங்கோதை உடனே இரண்டு கைகளையும் ஏந்தி நீட்டினாள். மலைக்கள்ளன் தன் உடையில் இதுவரையிலும் மறைத்து வைத்திருந்த ஏதோ ஒன்றை எடுத்து, "இது என்ன பார் ?" என்று அவளுடைய கைகளில் மெல்லப் போட்டான். பளிச்சென்று வெளிச்சம் வீசிற்று. எடுத்துப் பார்த்தாள். அது சுத்தப் பொன்னால் செய்யப்பட்டு, மிகப் பிரகாசமான வைரம், பச்சை, நீலம் முதலான நவரத்தினங்களும் வைத்திழைத்த ஒரு கோதண்டராமனும் சீதையும் சேர்ந்த சீதாராம விக்ரகமாக விளங்கிற்று. வெகு பயபக்தியோடு பார்த்துக் கொண்டிருந்தாள்.

"உனக்கு இராமாயணத்தில் வெகு பிரியமல்லவா ?" என்றான் வீரய்யன்.

"ஆம், அதை உங்களுக்கு யார் சொன்னது ?"

"எனக்குத் தெரியும், பூங்கோதை. இது ஒரு வெகு அருமையான பொருள். இஷ்ட தெய்வம். நான் சொல்லுவதைத் தட்டாதே. இதை நீ இங்கு வந்து போனதற்கும் உன்னைக் காத்தவராயன் கையிலிருந்து காத்ததற்கும்—காப்பாற்றியவன் ராமன், நானல்ல—ஞாபகத்துக்காக வைத்துக் கொள். மறுத்துவிடாதே" என்றான்.

அந்தச் சிறு விக்ரகத்தின் அழகும், அருமையான வேலைப்பாடும் ஒருபுறமிருக்க, அது தனக்கும் இஷ்ட தெய்வமான ஸ்ரீ ராம விக்ரகமாயிருந்ததும் வீரய்யன் அதைக் கொடுத்த சமய சந்தர்ப்பமும் அவன் பேசிய தோரணையும் அதைப் பூங்கோதை ஏற்றுக்கொள்வதைத் தவிர, வேறொன்றும் சொல்ல இடங் கொடுக்கவில்லை. சற்று நேரம் தலை குனிந்து நின்றாள்; "சரி, தினந்தினம் இதற்குப் பூஜை செய்வேன்" என்று அதைத் தன்

முந்தானையின் ஒரு மூலையில் கெட்டியாக முடிந்து இடுப்பில் செருகிக்கொண்டாள்.

"இனிமேற் போகலாம், வா. இன்னும் உனக்குச் சொல்ல வேண்டியவற்றைக் கீழே சின்னியம்மாள் சொல்லுவாள். அதன்படி செய் மறுபடியும் நீயும் நானும் பேசிக்கொள்ள, அங்கே நேரமும் தனிமையும் நேராது. பூங்கோதை! நீ எனக்குச் செய்யவேண்டிய பேருதவி ஒன்றுண்டு. இந்த மலையிலே நான் உனக்குக் காட்டிய ரகசியங்களைக் கீழே ஊருக்குப் போனபிறகு யார் கேட்டாலும் சொல்லுவதில்லையென்று எனக்குச் சத்தியம் செய்து கொடுக்க வேணும். செய்வாயா?...." என்றான் கள்ளர் தலைவன்.

பூங்கோதை வீரய்யன் விரும்பியபடியே சத்தியம் செய்து கொடுத்துவிட்டுத் தானாகவே பவளம்மாளைக் கூப்பிட்டுக் கொஞ்சம் பால் மட்டும் கொண்டுவரச் சொல்லி, அதைக் குடித்துவிட்டு இருவரும் வெளியே வந்தார்கள்.

கடக்க வேண்டிய காவல்களையெல்லாம் கடந்து, கடைசிக் கதவைத் தாண்டி; கல்லில் வெட்டியிருந்த குகையின் வாசலுக்கு வந்ததும்; வீரய்யன் "பூங்கோதை, கொஞ்சம் நில்....எதிரில் ஒரு சிறு குன்று தெரிகிறது பார். அதன் உச்சிக்குச் சற்றுக் கீழே ஒரு மரம் தெரிகிறது பார். அதன் பக்கத்தில் ஏதாவது உன் கண்ணுக்குப் படுகிறதா, பார்த்துச் சொல்லு" என்றான். பூங்கோதை அவன் குறித்த இடத்தைக் கவனத்தோடு பார்த்துவிட்டு, "ஆம், சில ஆடுமாடுகள் மேய்ந்துகொண்டிருக்கின்றன" என்றாள்.

"சரி, ஆடுமாடுகள் மேய்கின்றன. அதற்கு மேல் ஒன்றும் தெரியவில்லையா? மரத்தின் ஓரமாகப் பார்" என்றான்.

சற்று நேரம் உற்றுப் பார்த்துவிட்டு, "என்ன, ஒன்றையும் காணோமே....ஓஹோ... ஆமாம்....ஆமாம்....இரண்டு மூன்று ஆள்கள் மரத்துடன் ஒட்டி நிற்பது தெரிகிறது" என்றாள் பூங்கோதை.



"தெரிந்ததா..............அவர்கள் காத்தவராயனுடைய ஆள்கள். ஆடுமாடுகளை மேய்ப்பது போல அங்கே உனக்காகக் காத்திருக்கிறவர்கள். என்னுடைய ஆள்களின் நடமாட்டத்தையும் உன்னை வீட்டுக்கு கொண்டுபோக இங்கே வண்டி வந்திருப்பதையும் கவனித்து, இன்றைக்கு நீ வரப்போவது நிச்சயம் என்று தெரிந்து, உன்னை வழிமறித்துப் பிடித்துக் கொண்டு போய்விடலாமென்று காத்திருக்கிறார்கள்."

"ஐயோ! அப்படியானால் நான் இன்றைக்குப் போக வேண்டாம். மேலேயே திரும்பிப் போகலாம். மறுபடியும் அவர்கள் என்னைப் பிடிப்பார்களானால், இந்த உயிரை வைத்துக்கொண்டிருக்க மாட்டேன்."

"பயப்படாதே. இன்றைக்கில்லாமல் என்றைக்குப் போனாலும் அவர்கள் இதே மாதிரிதான் காவல் காப்பார்கள். அவர்கள் உன்னைப் பிடிக்க முடியாதபடி வேண்டிய முஸ்தீபுகளைச் செய்திருக்கிறேன். நீ கலங்க வேண்டாம். உன்னுடைய மனோதிடம் உதவும். வா....ஆ! மறந்துவிட்டேன். சற்று நில். நாம் இந்தக் குகை மறைவைவிட்டு வெளிச்சத்திற்குப் போனவுடன் நீ அவர்களைப் பார்க்காதே. இடப்பக்கத்தில் இன்னும் சிலர் வெகு சமீபத்தில் மறைந்து பார்த்துக் கொண்டிருக்கிறார்கள். அவர்கள் இருப்பதையும் அறியாதவள் போல, நீ சாவதானமாகவும் சந்தோஷமாகவும் நடக்கவேணும். உன்னுடைய முந்தானையை இழுத்து முகத்தை கோஷாப் பெண்களைப் போல மூடிக்கொள். மற்ற விவரங்களைச் சின்னியம்மாள் உனக்குச் சொல்லி அனுப்பிவைப்பார்கள்" என்று மலைக்கள்ளன் முன்னாலும் மங்கை பின்னாலுமாகக் குகையை விட்டு வெளியே வந்தார்கள். பூங்கோதை கள்ளன் சொன்னதைக் குருமொழிபோற் கொண்டு, கவலையற்ற மனத்தோடு காவல் செய்கிறவர்களைக் காணாதவள் போலவே மெதுவாக நடந்து, முக்காடிட்ட முகத்தோடு அவன் பின்னாற் சென்று, இருவரும் கொட்டாரத்துக்குள் நுழைந்தார்கள்.

வீரா[illegible] ஜமீன்தாரிடம் வாங்கிக்கொடுத்த பணத்தின் பலத்தால், காத்தவராயன் கணக்கற்ற ஆள்களை அமர்த்தி,

அங்கங்கே இருக்கச்செய்து, பூங்கோதை வீட்டுக்குப் போகக் கூடிய எல்லா வழிகளையும் வெகு சாமர்த்தியமாகக் காத்து நிற்கச் செய்திருந்தான். காட்டின்மேல் மரத்தடியில் இருந்தவர்களும் மற்றப் பக்கத்தில் இருந்தவர்களும் பூங்கோதை மலைக்கள்ளனுக்கு முன்னால் வந்ததையும், அழகான அவளுடைய நீலநிறப் புடைவையையும், அதை இழுத்து இழுத்து அவள் முக்காடு போட்டுக்கொண்டதையும், இருவரும் கொட்டாரத்துக்குள் போனதையும் நன்றாகப் பார்த்தார்கள். குன்றின் மீதிருந்தவர்களில் ஒருவன், "அடெயம்மாடி, முக்காடு போட்டுக்கிட்டா தெரியாமே போயிடுமா? டே! வாங்கடா. இனிமேல் இங்கென்னதுக்கு இருக்கணும்? கொட்டாரத்தையும் குதிரை வண்டியையும் கவனிக்க வேணும். மீனு தூண்டிலே சிக்கிக்கிச்சி...... நமக்கு வேட்டைதான். ஆனால், அந்தப் பயல் மூஞ்சி தெரியிலே! என்னத்தையோ போட்டு மூடிக்கிட்டிருக்கிறான்" என்றான்.

இன்னொருவன், "அவனைப் புடிச்சித்தாரவங்களுக்கு ரெண்டாயிரம் ரூபாய் எனாம்டா.......டேய், நாமப ரொம்ப சாக்ரதையாக இருக்கணும். அந்த மலைக்கள்ளன் படு போக்கிரியாம். அவனுக்கு ரொம்ப ஆள்கள் இருக்கிறாங்களாம். ஏமாந்தாக்க நாம்ப தப்பறதே எச்சாப் போயிடுமாம்!" என்றான்.

இப்படியாக, அங்கங்கே இருந்து பூங்கோதை வந்ததைப் பார்த்துக்கொண்டிருந்த காத்தவராயனுடைய கையாள்கள் எல்லாரும், பூங்கோதை புளியந்தோப்புக் கொட்டாரத்தில் புகுந்ததும் கொட்டாரத்தைச் சுற்றியிருக்கிற இடங்களில் வந்து மறைந்துகொண்டு கொட்டார வாசலையும் பெட்டி வண்டியையும் கண் கொட்டாமல் பார்த்துக்கொண்டே இருந்தார்கள். அப்துர் ரஹிம் சாயபின் அழகான பச்சை நிறமான பெட்டி வண்டி, கொட்டாரத்தின் பக்கத்தில் வெள்ளைக் குதிரையோடு காத்துக்கொண்டிருந்தது. மணி ஆறுக்குக் கிட்ட இருக்கும். இருட்டிய பிறகுதான் புறப்படுவார்கள் என்று காத்தவராயனுடைய ஆள்களுக்கு எண்ணம்.



ஆறு மணிக்கு மேல் அடையாளம் தெரியக்கூடிய வெளிச்சம் இருக்கும்போதே பெட்டி வண்டி கொட்டாரத்து வாசலுக்கு அருகில் நிறுத்தப்பட்டது. கொட்டாரத்திலிருந்து அந்த நீல நிறப் புடைவைக்காரி வெளியில் வந்ததையும், அவளுடைய கோஷா முக்காட்டையும், அவள் பெட்டி வண்டியண்டை வந்த உடன் மலைக்கள்ளனுடைய ஆள்களில் ஒருவன் அவளுக்காகப் பெட்டி வண்டியின் கதவைத் திறந்ததையும், அதில் அந்தப் பெண் ஏறிக்கொண்டதையும் காத்தவராயனுடைய ஆள்கள் நன்றாகப் பார்த்துவிட்டார்கள்.

சிறிது நேரத்துக்கெல்லாம் கொட்டாரத்துக்குப் பின்புறத்திலுள்ள ஒரு கட்டடத்திலிருந்து மலைக்கள்ளனுடைய பத்துப் பதினைந்து ஆள்கள் வந்து, வெகு பரபரப்பாகத் தடியும் கத்தியும் கையுமாக அங்குமிங்கும் ஓடிக் கடைசியாக வண்டியைச் சுற்றிலும் பாரா நின்றார்கள். வண்டியை ஓட்ட, நாட்றாயன் சாட்டையும் கையுமாக வண்டியின் முன்புறத்தில் உட்கார்ந்தான்.

இதே சமயத்தில் மலைக்கள்ளன் மூடியணிந்த முகத்தோடு கொட்டாரத்திலிருந்து வெளியில் வந்து, கனத்த சத்தத்தில், 'டேய்! ஜாக்ரதை. உங்களுடைய உயிரைப் போலப் பாதுகாக்கவேணும். ஏதாவது தவறிப் போனீர்களானால் உங்களை லேசில் விடமாட்டேன். தலை தப்ப மாட்டீர்கள். நான் மேலே போய் இதே கவலையாகக் காத்துக்கொண்டிருப்பேன். திரும்பி வந்த உடன் நாட்றாயன் மேலே வந்து எனக்குத் தெரியப்படுத்த வேணும். அப்துர் ரஹீம் சாயபு காத்துக்கொண்டிருக்கிற இடம்.......தெரியுமா.......ஞாபகமிருக்கட்டும். சரி, புறப்படுங்கள்" என்று சொல்லிவிட்டு மலைக்கள்ளன், மேலே தன் மலைவீட்டுக்குப் போகும் படிகளில் ஏறிப் போவதையும் எதிரிகள் பார்த்துக்கொண்டிருந்தார்கள்.

வண்டி புறப்பட்டது. வழக்கமாக விஜயபுரிக்குப் போகும் பாதையை விட்டு, வேறு வழியில் ஓட்டப்பட்டது. உடனே, காத்தவராயனுக்கு எச்சரிக்கை செய்யச் சில பேர் ஓடினார்கள். மற்ற காத்தவராயன் ஆள்கள் வண்டிக்கு வெகு தூரத்திலேயே

தாங்கள் பின்தொடர்வது தெரியாமலிருக்கட்டுமென்று வந்து கொண்டிருந்தார்கள். சரியான பாதை போடாத வழியில் ஓட்டப்பட்டதனால் வண்டி கல்லின் மேலும் கட்டியின் மேலும் ஏறியிறங்கும்போது உண்டான சத்தத்தைத் தவிர, வேறு சந்தடியில்லாமல் மலைக்கள்ளனுடைய காவலாளிகள் வண்டியைக் காத்து நடந்தார்கள்.

காத்தவராயனுடைய ஆள்களுக்குத் தவறான வழி காட்டுவது போல் நாட்றாயன் வண்டியை அங்கும் இங்குமாக வளைத்து வளைத்து ஓட்டி, கடைசியாக விஜயபுரி ரஸ்தாவுக்கு வந்து சேர்ந்தான். அந்தப் பாதை பெரும்பாலும் காட்டு வழி. பகலிலேயே நடமாட்டம் குறைவு. இருட்டின பின் யாருமே அந்த வழியில் போவதில்லை. இந்தப் பாதையைவிட எந்த நேரத்திலும் ஜனப்பழக்கமுள்ள இன்னொரு ராஜபாட்டை இருந்தும், அதைவிட்டு, இந்த அபாயமான வழியில் வந்தது மதியீனமென்று மலைக்கள்ளனுடைய ஆள்களிலேயே சிலர் எண்ணினார்கள். ஆனால் அப்துர் ரஹீம் சாயபு இந்த வழியில் தான் காத்திருப்பதாகச் சேதி வந்ததாம். அவருடைய மாந்தோப்பு மாளிகைக்கும் இது குறுக்கு வழி. மணி எட்டுக்குக் கிட்டியது. இருட்டோ சொல்ல முடியாது. ஊர் இன்னும் ஆறு மைலிலிருக்கிறது. வண்டிக்குக் காவலாக வருகிறவர்கள் பொறுக்கியெடுத்த வீரர்கள்தாம். அவர்கள் பயமில்லாமல்தான் நடந்தார்கள்.

அப்துர் ரஹீம் சாயபுடைய மாந்தோப்புக்குப் போகிற குறுக்குப் பாதையண்டை அவர் காத்துக்கொண்டிருப்பார் என்று சொல்லப்பட்ட இடத்துக்கு நேராக வண்டி வந்த உடன், நாட்றாயன் வண்டியின் வேகத்தைக் குறைத்தான். எதிர்பார்த்த இடத்துக்குப் பக்கத்தில் ஒரு மேட்டு நிலத்தில் கும்பலாக ஐம்பது பேருக்குமேல் ஆள்கள் நின்றுகொண்டிருப்பது, நாட்றாயனுடைய பழக்கமுள்ள கண்களுக்கு நன்றாகத் தெரிந்தது.

இன்னதென்று எண்ணுவதற்கு முன் மேட்டின் மேலிருந்து, அநேகம் பேர் ஓடி வந்து வண்டிக்கு முன்னால் நின்று வளைத்தார்கள்; மேட்டின்மேல் நின்றபடியே காத்தவராயன் "குதிரையின் கடிவாளத்தைப் பிடி. நகரவிடாதே. எவனாவது பேசினால் வீசிவிடு. தயவு தாட்சணியம் காட்டாதே. ஒரு பயல்கூடத் தப்பி ஓடிப்போக விடக்கூடாது" என்று கத்திக் கொண்டே தானும் பாதையில் இறங்கினான். குதிரையின் கடிவாளத்தை ஒருவன் பிடிக்க வரும் சமயத்தில் நாட்றாயன் குதிரையைப் பலமான சவுக்கடி கொடுத்து ஓட்டினான். அப்துர் ரஹீம் குதிரை; வெகு உயர்ந்த ஜாதி அரபிக் குதிரை வம்சத்தைச் சேர்ந்தது. இதுவரையிலும் அதன் உடம்பின் மேல் ஓர் அடிகூடப் பட்டதில்லை. பிடித்தது ஓட்டம்....... அடடா! என்ன ஓட்டம்! குதிரையைப் பிடித்து நிறுத்த வந்தவர்கள், ஜேணத்தையும் ஏர்க்காலையும் சன்னலையும் சவாரியையுமாக, எட்டினவர்களும் எட்டாதவர்களும், பிடித்தவர்களும் பிடிக்காதவர்களுமாக, பின்னாலும் பக்கத்திலும் கொஞ்ச தூரம் ஓடினார்கள். காத்தவராயனும் மற்றவர்களும் வண்டியை விட்டுவிடக்கூடாதென்று பின்னாலேயே வந்துகொண்டிருந்தார்கள். "வண்டிக்காரப் பயலை முதலில் வெட்டிக் கீழே தள்ளுங்கடா" என்று இரைந்துகொண்டே காத்தவராயன் தன்னுடைய தடித்த சரீரத்தைத் தூக்கமாட்டாத துன்பத்தோடு வண்டியின் பின்னால் வந்துகொண்டிருந்தான். இப்படி இரண்டு மூன்று பர்லாங்கு வெகு வேகமாக ஓடுகையில் குதிரையை நிறுத்த, கடிவாளத்தைப் பிடிப்பதற்கு ஏர்க்காலை விடாமல் ஓடிவந்த 'அச்சாக்குட்டி' என்ற பெயருடைய காத்தவராயனுடைய வெகு சாமர்த்தியமுள்ள சகாவானவன்—குதிரையின் வேகத்துக்குச் சரியாக ஓடிக்கொண்டிருந்தவன்—கால் இடறிச் சக்கரத்துக்கு நேராக விழுந்துவிட்டான். விழுந்தவன் நீளப்படுத்துவிடாமல் கைகளையும் முழங்கால்களையும் ஊன்றி, உயரமாக உட்கார்ந்துவிட்டபடியால், சக்கரம் இடுப்பின் மேல் உயரமாக ஏறி இறங்கிற்று. குதிரை 'டோக்கர்' அடிப்பது போல விழப்போய்ச் சமாளித்துக்கொண்டு நின்றுவிட்டது. பார்த்தான் நாட்றாயன். இனிச் செய்யக்கூடியது ஒன்றும் இல்லை. தாமதித்தால் தலை போய்விடும். பெட்டியிலிருந்து

ஒரே குதியாகக் குதித்துக் குதிரை நிறுத்திவிட்ட ஓட்டத்தைத் தான் பிடித்தான். இருட்டில்....காட்டில் மறைந்துவிட்டான் நாட்றாயன்.

ஓட முடியாமல் ஒவ்வொருவராக வண்டியை விட்டுவிட்டு, நின்றுபோன காத்தவராயனுடைய ஆள்கள் வண்டியின் ஓட்டம் நின்றுபோய்விட்டதை அறிந்து, ஒவ்வொருவராக வண்டியி னண்டை வந்து சேர்ந்தார்கள். குதிரை மருண்டு மறுபடியும் ஓட ஆரம்பிப்பதற்குள் ஒருவன் கடிவாளத்தைப் பிடித்துக் கொண்டான். கீழே கிடந்த அச்சாக்குட்டிக்கு இடுப்பில் பல மான அடி. விலா எலும்பில் இரண்டொன்று உடைந்து விட்டாற்போலப் புரளக்கூட முடியாமற் கிடந்த அவனை, இரண்டு மூன்று பேர் தூக்கி உட்கார வைத்தார்கள். உட்காரவும் முடியவில்லை. காத்தவராயன்; "டேய், அச்சாக் குட்டியை நாலஞ்சு பேர் அசையாமல் தூக்கிக்கொண்டு போய்க் கருப்ப னுடைய காட்டுக் கொட்டாய்—பக்கத்திலிருக்கிறது—அங்கே கொண்டுபோங்கள்....வண்டியோடு நாலு பேர் இருங்கள். மத்தவங்கள் எல்லாம் நாலா பக்கமாகத் தேடி, அந்த மலைக் கள்ளப் பயலுடைய ஆள்கள் ஒருத்தன்கூட இந்தப் பக்கம் வராதபடி.......ஜாக்ரதை, ஓடினால் ஓடிப் போகட்டும்....... முண்டினால் துண்டு பண்ணிடு" என்று உத்தரவு செய்தான்.

காத்தவராயனுடைய ஆள்கள் பத்துப் பேரைத் தவிர மற்றவர்கள், வண்டி ஓட்டம் பிடிக்க ஆரம்பித்த இடத்திலேயே சிதறிப்போன மலைக்கள்ளனுடைய ஆசாமிகளைத் தேடப் போகிறவர்கள் போல இருட்டில் எங்கெங்கேயோ மறைந்து விட்டார்கள். இரண்டொரு நிமிஷத்தில் அச்சாக்குட்டியையும் தூக்கிக்கொண்டு சிலர் ஒரு வேலிக்குள் புகுந்து போய் விட்டார்கள்.

"சரி, டேய், மொடாக்குடியா, வண்டியிலே மெதுவா முன்னாலே ஏறி உக்காந்து சுமாரா மொள்ள ஓட்டு. நேரா நம்ம வீரராஜ ஐயாவுடைய தோட்டத்து ஊட்டுக்கு ஓட்டு. மொள்ள ஓட்டவேணும். தெரிந்துதா?" என்று காத்தவராயன் சொன்னவுடன் வண்டி நகர்ந்தது.



வண்டியோடு மூன்று பேரும், கொஞ்சம் பின்னால் காத்தவ ராயனும், அவனுக்குப் பின்னால் இரண்டு பேருமாக வர, வண்டி வீரராஜனுடைய தோட்ட வீட்டின் பெரிய வெளிக் கதவுக்கு நேராக வந்தது. இருட்டில் எங்கேயோ இருந்து வீரராஜன், "காத்தவராயா" என்று கையைப் பிடித்துக் குலுக்கிவிட்டு, தானே போய்க் கதவைத் திறந்தான்.

"சரி, நீங்கள் எல்லாரும் போய்ச் சாலையில் இருங்கள். நான் பின்னாலே வருகிறேன்" என்று காத்தவராயன் சொன்ன உடன் எல்லாரும் போய்விட்டார்கள். காத்தவராயனும் வீர ராஜனும் மட்டும்தான் வண்டியண்டை இருந்தார்கள். காத்தவ ராயன் கடிவாளத்தைப் பிடித்துக்கொண்டு வண்டியை உள்ளே நடத்தினவுடன், வீரராஜன் கதவை உள்ளே பூட்டிவிட்டான். கட்டடத்துக்குப் பக்கத்தில் வண்டி நின்றதும் உள்ளேயிருந்து வீரராஜனுடைய வேலைக்காரன் ராமன் ஒரு விளக்கை எடுத்துக் கொண்டு வந்தான்.

வீரராஜன் விரைந்து போய், "டே ராமா, முட்டாப்பயலே, விளக்கு என்னத்துக்குடா?.........யார் கொண்டுவரச் சொன் னார்கள்?........வேண்டாததையெல்லாம் சொல்லாமல் செய் வாய். சொன்னதையெல்லாம் செய்திருக்கிறாயா?........மேலே பெரிய அறையை, படுக்கிற வீட்டை நான் சொன்னபடி........ எல்லாம் செய்தாயா?....மேஜையின் மேல்....கண்ணாடிக் குழாயில் .... ரோஜாப்பூ கொத்தாக இலைகளோடு நான் சொன்னபடி வச்சியா? ஊதுவத்தி?....சரி சரி....பால்?...சரி.... பழங்கள்? சரி சரி, எல்லாம் அந்த அறைக்குள்ளே இருக்கு தல்ல? ....சரி சரி,—நீ போ....விளக்கு வேண்டாம்; அந்தக் காடிகானாவில் இரு. வேணுமானால் கூப்பிடுகிறேன். கூப்பி டாமல் வராதே, போ" என்று ராமனை அனுப்பிவிட்டு, வீரராஜன் வண்டியண்டை வந்தான். காத்தவராயன் குதிரை யைப் பிடித்துக்கொண்டு நின்றபடியே, "எப்படிங்கோ எஜமானே....அந்த மலைக்கள்ளனுடைய கைவரிசை காத்தவ ராயனிடத்தில் நடக்குமா?....நசுக்கி, நசுக்கிவிடமாட்டேனா?" என்றான்.

வீரராஜன், "காத்தவராயா, உன்னை வெல்ல யாரால் முடியும்?" என்று சொல்லிக்கொண்டே, வீரராஜன் வண்டியின் பின்னாற் போய்க் கதவின் கைப்பிடியைத் திருப்பி இழுத்தான். கதவு திறக்கவில்லை. பலமாக இழுத்தான். கதவு கொஞ்சம் திறந்து மறுபடியும் உள்ளே இழுத்தது போல மூடிக்கொண்டது. மறுபடியும் இழுத்தான்; கதவும் மறுபடியும் உள்ளுக்கு இழுத்துக்கொள்ளப்பட்டது. வீரராஜனுக்குக் கொஞ்சம் கோபம் வந்துவிட்டது. "பூங்கோதை, வேண்டாம்....எத்தனை நேரம் உன்னால் இழுத்துப் பிடிக்க முடியும்? இதிலென்ன பிரயோசனம்? நான் உன்னை ஒன்றும் செய்துவிடமாட்டேன். நான் உன்னுடைய அத்தை மகன்தானே, அன்னியனா?.... உன்னை மென்றுவிடுவேனா?....தின்றுவிடுவேனா? ஏன் என்னிடத்தில் இவ்வளவு வர்மம் காட்டுகிறாய்? உன்னுடைய சந்தோஷமும் மாமாவுடைய சம்மதமும் வருகிற வரையில் காத்திருப்பேன்....என்னைக் கலியாணம் செய்துகொள்ள இஷ்டமில்லாவிட்டாலும் சரி, உன்னை வீட்டுக்கு அனுப்பிவிடுகிறேன். என்னை இவ்வளவு அவமதிக்காமல் இரண்டொரு வார்த்தையாவது பேசிவிட்டு வீட்டுக்குப் போ. அங்கேயாவது நீ சுகமாக இருந்தால், அது போதும் எனக்கு. எங்கேயோ கிடக்கிற அந்த மலைக்கள்ளப் பயலிடத்திலிருந்து தப்பி வந்தாயே, அதுவே போதும். வா பூங்கோதை! வம்பு செய்யாமல் நீயே இறங்கி வா" என்று கனிவோடு பேசிக் காத்திருந்தான். கதவு திறக்கவில்லை. மறுபடியும் கூப்பிட்டான். பயனில்லை. கோபம் வந்துவிட்டது. "சீ போ, உனக்கென்ன மரியாதை? அந்தக் கள்ளப் பயலோடு மலையில் இரண்டு நாள் சந்தோஷமாக இருந்துவந்த சிறுக்கி, உன் சொந்த அத்தை மகனோடு பேசுவதென்றாலும் கூசுதோ?" என்று கத்திக்கொண்டே தன் பலமெல்லாம் சேர்த்து வண்டிக் கதவை இழுத்தான். கதவு பாதிக்கு மேல் திறந்து முன் போலவே இழுத்துக்கொள்ளப்பட்டது. இதைக் கவனித்துக்கொண்டிருந்த காத்தவராயன், "எங்கே என்னிடம் விடுங்க சாமி" என்று தான் இழுத்தான். முன்னிலும் அதிகமாகக் கதவு திறந்துகொண்டது. ஆனால் மீண்டும் உள்ளுக்கிழுத்துக்கொள்ளப்பட்டது.



"அடேயப்பா....உள்ளே எத்தனை பேர் இருந்தாலும் உட்டுடுவேனா?" என்று, இடக்கையை வண்டியில் அழுத்திக்கொண்டு வேகமாக இழுத்தான். 'படீர்' என்று சத்தங் கேட்டது. கதவு பரக்கத் திறந்துவிட்டது. வீரராஜன் உள்ளே பார்த்தான். ஒன்றும் தெரியவில்லை. கையால் தடவிப் பார்த்தான். புடைவை கையில் பட்டது. வண்டிக்குள் ஏறினான். சிறிது நேரத்தில் வெளியே குதித்து, "டேய் ராமா, விளக்கைக் கொண்டா" என்று கத்தினான். ராமன் விளக்கோடு ஓடி வந்தான். விளக்கை வாங்கி இருவரும் வண்டிக்குள் பார்த்தார்கள். வண்டியில் யாரும் இல்லை! பின் உள்ளேயிருந்து யார் இழுத்துக்கொண்டிருந்தது? வண்டியின் கதவைப் பரிசோதித்தார்கள்.

கதவின் உட்புறத்தில் ஒரு கெட்டியான உருக்குக் கம்பியினாற் செய்யப்பட்ட சுருள் வில் ஒடிந்து தொங்கிக்கொண்டிருந்தது. சத்தம், அது ஒடிந்ததுதான்!

வண்டியின் மத்தியில்—வண்டி ஆட்டமில்லாமல் இருப்பதற்கும் வண்டியில் ஆள் இருப்பது போலத் தோற்றுவதற்காகவும் கொஞ்சம் மணல் போட்டு அதன் மேல் ஒரு பளுவான கல் வைக்கப்பட்டிருந்தது. வீரராஜனும் காத்தவராயனும் ஒருவரையொருவர் விழுங்க விழுங்கப் பார்த்துக்கொண்டே நின்றார்கள். இந்தச் சமயத்தில் "ஐயா, ஐயா" என்று வெளிக்கதவுக்கு அப்பாலிருந்து யாரோ கூப்பிட்ட சத்தம் கேட்டது. காத்தவராயன் செடி மறைவில் பதுங்கினான். ராமன் ஓடிப்போய்ப் பார்த்துவிட்டு வந்து "போலீஸ் ஏட்டு கருப்பையா வந்திருக்கிறாருங்கோ" என்றான். 'நல்ல வேளை' என்று சொல்லிக்கொண்டே, வீரராஜன் கேட்டண்டை வந்து, "கருப்பையா, என்ன இந்நேரத்தில் வந்தது?" என்றான்.

"ஒண்ணுமில்லிங்கோ, பட்டணத்து சாயபு அப்துல் ரஹீமுடைய பெட்டிவண்டி குதிரையோடு கட்டி நிறுத்தப்பட்டிருந்தது காணாமற்போனதாகச் சொக்கேசருடைய வீட்டிலிருந்து பெரிய இன்ஸ்பெக்டருக்கு பிராது வந்ததுங்கோ. சப்இன்ஸ்

பெக்டர் ஊரில் இல்லை. என்னைப் போய்ப் பார்த்துவரச் சொன்னார்கள்'' என்றான் கருப்பையா.

"ஓ ! என்ன ! சாயபு வண்டிக்காகச் சொக்கேசர் வீட்டிலிருந்து பிராதா !....சரி, வண்டியை இங்காரும் திருடிக்கொண்டு வந்துவிடவில்லை. அது ஆளில்லாமல் இந்தப் பாதையில் வந்ததாம். என்னுடைய ஆள் பார்த்தவன் இங்கே ஓட்டிவந்தான். இதோ வண்டியும் குதிரையும் இருக்கின்றன. கருப்பையா, நீங்கள் கொண்டுபோய்ச் சொல்ல வேண்டியபடி சொல்லிவிடுங்கள் !'' என்று வீரராஜன் தன்னுடைய சட்டைப் பையிலிருந்து எதையோ எடுத்துக் கதவின் கம்பிகளின் வழியாகக் கருப்பையாவின் கையில் வைத்தான். அவரும் அதை வாங்கிக்கொண்டார். கதவு திறக்கப்பட்டது. வண்டியைக் கருப்பையா ஸ்டேஷனுக்கு ஓட்டிக்கொண்டு போனார்.

## அத்தியாயம் 10

அப்துர் ரஹிம் சாயபுவின் வண்டிக்காரனான வைத்தி என்பவன் வண்டியைத் தேடிக்கொண்டு வந்தான். எதிரில் வண்டி வருவதைப் பார்த்தான்; விசாரித்தான். போலீஸ் ஏட் கருப்பையா, வண்டியை ஓட்டிக்கொண்டு போலீஸ் கச்சேரிக்குப் போவதாகவும், அங்கே போய் எழுத வேண்டிய ரிக்கார்டுகளை எழுதிக்கொண்டுதான் வண்டியைச் சொந்தக்காரரிடம் கொடுக்க முடியும் என்றும் சொன்னார். "சரி, ஓட்டிக்கொண்டு போங்க, நான் கச்சேரிக்கு வருகிறேன்'' என்று வைத்தி சொன்னான். வண்டி போய்விட்டது. வைத்தி மெதுவாக வீரராஜனுடைய தோட்ட வீட்டின் வெளிக்கதவுக்கருகில் போய், பதுங்கிக்கொண்டு, கதவின் வழியாக உள்ளே பார்த்தான். இருட்டில் ஒன்றும் தெரியவில்லை. சற்று நேரத்தில் இரண்டு உருவங்கள் கதவண்டை வந்துகொண்டிருப்பதைக் கண்டு வைத்தி மறைந்துகொண்டான். ரோட்டுக்கும் வெளிக்கதவுக்கும் மத்தியிலிருந்த பாலத்துக்கடியில் வைத்தி பதுங்கிக்கொண்டு காது கொடுத்துக் கவனித்தான். வந்தவர்கள் வைத்தி மறைந்திருந்த இடத்துக்கு வெகு சமீபத்தில் வந்து நின்றார்கள். அவர்கள் பேசியது முழுவதும் வைத்திக்கு நன்றாகக் கேட்டது. வெகு ரகசியம் போலப் பேசிக்கொண்டாலும் மனக்கொதிப்பில், மறந்துபோய் வார்த்தைகள் அழுத்தமாகவும் ஆத்திரத்தோடும் வந்ததால் வைத்திக்கு அவர்கள் பேச்சின் விஷயங்கள் நன்றாக விளங்கின. குரல் அடையாளமும் தெரிந்தது.

"பணங் கெடக்குதுங்க, எஜமானே; பணம் எவ்வளவு வேணுமானாலும் எஜமான் நீங்கதான் குடுக்கிறீங்கோ....... மானம் போயிடிச்சே !....... ஏமாத்திப்புட்டானே ! அந்தம்மா மலையில் இறங்கி வந்ததையும், கொட்டாரத்துக்குப் போனதையும், அப்புறம் வந்து வண்டியிலே ஏறினதையும் நானே என்

கண்ணாலே பார்த்தேனுங்கே. நம்ம ஆளுங்க ஏமாந்தாலும் ஏமாந்துடுவாங்கோண்ணு, அவங்களுக்குத் தெரியாமே நான் மலையடிவாரத்தில் இருந்தேனுங்க. ஆளுகள் குறுக்கும் மறுக்குமா வண்டிக்கிட்ட கூட்டமாயிருந்தப்போ, அந்தப் பொண்ணு எறங்கிப் போயிட்டாப்பிலே தெரியுதுங்கோ. அதைப் பார்க்காமே போச்சுங்கோ....நாங் கூடல்லே ஏமாந்துட்டேன்........" என்று காத்தவராயன் கலங்கிப் போய்ச் சொன்னான்.

"காத்தவராயா, அந்தப் பெண்ணைப்பற்றியே திருப்பித் திருப்பி வருத்தப்படுகிறாய். அவளைப்பற்றியும் அந்த மலைத் திருடனைப்பற்றியும் பின்னால் யோசித்துக்கொள்ளுவோம். இப்போது கவனிக்க வேண்டியது—நான சொன்ன இரண்டு காரியம்....என்ன? நேற்று சொன்னதும், இப்போது சொக்கேசர் சமாச்சாரமும்....அ வ ச ர ம்....ஆமாம், அது கிடக்கட்டும். சாயபு வண்டிக்கும், சொக்கேசர் வீட்டுக்கும் என்ன சம்பந்தம்? வண்டி காணாமல் போய்விட்டதென்று சொக்கேசர் வீட்டிலிருந்து பிராது வந்ததென்று கருப்பையா சொன்னாரே! ஒரு வேளை....பூங்கோதையை சாயபு வண்டியில் அனுப்புவதாக மலைக்கள்ளன் சொக்கேசருக்குச் சொல்லியனுப்பி யிருப்பானோ !....காத்தவராயா ! நீ மட்டும் கொஞ்சங் கூடச் சோர்ந்து போகக்கூடாது .என்ன?" என்றான் வீரராஜன்.

"சோந்து போரதா ! எஜமானே .. காத்தவராயனா சோந்து போரவன் ! இப்படி அவமானப்பட்ட பிறகுங்கூடவா ! அந்தப் பேச்சு ஏதுங்க ?....ஒண்ணு நாஞ் சாகணும், இல்லாட்டி அவன் சாகணும். அவனைக் கண்டதுண்டமா வெட்டிப் போடாமே போனால் காத்தவராயனா நான்?" என்றான் காத்தவராயன்.

"சரி, நான் சொன்ன இரண்டு வேலையையும், நாளை அல்லது மறு நாளைக்குள் முடித்துவிட வேண்டும் சப் இன்ஸ்பெக்டர் ஊரில் இல்லை. அவர் வர இன்னும் நாலு நாள் ஆகும் என்று கேள்வி. அதற்குள் முடித்துவிட வேண்டும். சொக்கேசர் பேச்சைக் கேட்டுத்தான் சப் இன்ஸ்பெக்டர் நம்மை இவ்வளவு கவனித்து வருவதாகத் தெரிகிறது. பெரிய



இன்ஸ்பெக்டர் நல்லவர். இந்தச் சப் இன்ஸ்பெக்டர்...." என்றான் வீரராஜன்.

"அதுக்கென்னாங்கோ, சாவ்கார் வீட்டுச் சங்கதியை நாளைக்கே முடிச்சுவிடுவோம். சொக்கேசரை.... உம்."

"ஐயையோ ! அதுதான் முக்யம். சாவ்கார் விஷயத்தைக்காட்டிலும் முக்கியமானது."

"அது தெரியுமுங்கோ........எனக்கு....நான் யோசிக்கிறது ......அந்த அம்மா இன்னும் அந்த மலையிலேதான் இருக்கிறாப்பலே இருக்குதுங்க. அந்த அம்மா இருக்கிற இடம் தெரியாமல்........"

"ஓஹோ, சரி சரி....தெரியுது. அதுவும் நல்ல யோசனைதான். பூங்கோதை இருக்கிற இடத்தை நாளை விசாரித்து விடுவோம். அது முடியாதா நம்மால்?....அதற்கப்புறமே ஆகட்டும்."

"ஆமாங்கோ, எஜமானே. அதுதான் சரி. சாவ்கார் வீட்டுச் சமாசாரத்தை நாளைக்கே முடித்துக்கொள்வோம். நான் போய் வரட்டுங்களா?........எனக்கு....மனசு....எப்படியோ இருக்குதுங்க. அந்தப் பயலை........"

இரும்புக் கதவு பூட்டப்பட்ட சத்தத்தையும் வைத்தி கேட்டுக்கொண்டிருந்தான். ஒருவன் வடக்குப் பக்கமும், இன்னொருவன் தெற்குப் பக்கமுமாக வீரராஜனும் காத்தவராயனும் பிரிந்து போய்விட்டதையும் பாலத்தின் கீழிருந்தபடியே தலையை நீட்டி வைத்தி பார்த்துக்கொண்டிருந்தான். இருவரும் போனபின் பாலத்தை விட்டு வெளியில் வந்து, தன் எஜமான் சாயபுவுடைய மாந்தோப்புக்குள் புகுந்து, மாளிகையின் வாசலுக்கு வந்தான். கோஷா வீடானதால் உள்ளே ஆள் இருந்தாலும் எந்நேரமும் தலைவாசல் தாழிடப்பட்டேதான் இருக்கும். சாத்தப்பட்டிருந்த கதவுக்கு நேராக ஒரு வெள்ளை உருவம் நிற்பது வைத்திக்குத் தெரிந்தது. வைத்தியின் காலடிச் சத்தத்தைக் கேட்டுச் சட்டென்று அந்த உருவம்

கதவை விட்டுப் படிக்கட்டில் இறங்கி வந்து, "யார் அது?" என்று கேட்டுக்கொண்டே கிட்ட வந்தது.

"நீ யார்? இந்நேரத்தில் இங்கே உனக்கென்ன வேலை?" என்று அதட்டிக்கொண்டே வைத்தி அருகிற்போய் முகத்தை உற்றுப் பார்த்தான். சப் இன்ஸ்பெக்டர் ஆறுமுகம் அசையாமல் நின்றார். வைத்திக்குத் தன்னைத் தானே நம்ப முடியவில்லை. 'என்ன ஆச்சரியம். சப் இன்ஸ்பெக்டர் ஊரில் இல்லை. வர நாலு நாளாகும் என்று அவர்கள் பேசிக்கொண்டதை இப்போதுதானே கேட்டு வந்தோம்' என்று தனக்குள்ளேயே வைத்தி ஆச்சரியப்பட்டுக்கொண்டு—

"ஏதுங்க எஜமான், இந்நேரத்திலே இங்கே வந்தது?" என்றான்.

"நீ எங்கிருந்து வருகிறாய்?" என்றார் ஆறுமுகம்.

"எஜமானருடைய வண்டியைத் தேடப் போனேன்."

"வண்டி எங்கே யிருந்து வந்தது?"

"வண்டி போலீஸ் கச்சேரியில் இருக்குதுங்கோ."

"அது சரி. இப்ப வண்டி கச்சேரியில்தான் இருக்கிறது. வண்டி எங்கே போயிருந்தது....எங்கேயிருந்து வந்தது என்று கேட்கிறேன்" என்றார் சப் இன்ஸ்பெக்டர்.

"வண்டியை வீரராஜாவின் பங்களாவிலிருந்து கருப்பையா ஓட்டிக்கொண்டு போனாருங்கோ" என்றான் வைத்தி.

"அடே வைத்தி, இந்த 'டக்கு டகல்' பேச்செல்லாம் பேசாதே. வீரராஜா தோட்டத்துக்குப் போவதற்கு முன்னால் உங்கள் வண்டி எங்கே போயிருந்தது? அதைச் சொல்லு."

"அது எனக்குத் தெரியாதுங்கோ. எங்கள் எஜமான் சாயுபு, காலையிலே அதைச் எங்கேயோ ஓட்டிப் போனாருங்கோ!"

"உங்கள் எஜமான் சாயுபு எங்கே?"

"எனக்குத் தெரியாதுங்கோ."



"உள்ளே இருக்கிறாரா பார்."

"இல்லிங்கோ. அவர் உள்ளே இருந்தால் மெத்தைமேல் வெளிச்சம் இருக்கும்."

"சரி; அவர் வந்தால் நான் நாளை காலை பத்து மணிக்கு அவரைப் பார்க்க வருவதாகச் சொல்லி வை. வண்டிக்காக நீ கச்சேரிக்குப் போகவில்லையா?"

"போகவேணுங்கோ. இதோ போறேன்."

"போனால் என்னை இங்கே கண்டதாக 'ஏட், இன்ஸ்பெக்டர்' யாரிடத்திலும் சொல்லாதே. தெரியுமா? பத்ரம்" ........என்று சொல்லிவிட்டு ஆறுமுகம் போய்விட்டார். வைத்தி, கச்சேரிக்குப் போய் வண்டியை ஓட்டிக்கொண்டு வந்து அவிழ்த்துவிட்டு, குதிரைக்குத் தீனி முதலானதும் போட்டுவிட்டு, வண்டியும் குதிரையும் அதிக்ச் சேதமில்லாமல் வந்து சேர்ந்த சமாசாரத்தை மலையடிவாரப் புளியந்தோப்புக் கொட்டாரத்துக்குச் சொல்லி யனுப்பிவிட்டுத் தூங்கிவிட்டான்........

மறுநாள் இரவு சுமார் ஒன்பது மணிக்கு வீரராஜன், சொக்கேசருடைய வீட்டுக்கருகிலுள்ள தோட்டத்தில் இருட்டில் நின்றுகொண்டிருந்தான்.

சொக்கேசருடைய வீட்டிற்கு வீதிப்புறத்திலும், மேல்புறத்திலும், பின் புறத்திலும் வெளியே கருங்கல்லாற் கட்டப்பட்ட மதில் சுவர்களுண்டு. ஆனால், கீழ்ப்புறத்தில் சுவர் இல்லை. கீழ்ப்புறத்தில் இருந்த ஒரு தோட்டமும் அதிலுள்ள வீடும் ஒரு 'மைனருடைய' சொத்து. அந்தத் தோட்டத்துக்கும் தம் வீட்டிற்கும் மத்தியிலுள்ள எல்லைத் தகராறுகளினால், சுவர் எழுப்பி வழக்கு வரக்கூடாதே என்று சொக்கேசர் அந்தப் பக்கத்தில் மட்டும் ஒரு வேலி மட்டும் போட்டிருந்தார். இந்த வேலிக்குப் பின்னால் இரண்டு பெரிய வேப்ப மரங்கள் உண்டு. அந்த மரங்களுக்கு அடியில் இருட்டில் நின்றுகொண்டு வீரராஜன் வெகு நேரம் வரையிலும் சொக்கேசர் வீட்டின் மேல் மாடியைப் பார்த்துக்கொண்டிருந்தான். சொக்கேசர் வீட்டு

மேல் மாடியில் அந்தப் பக்கத்தில் இாண்டு பெரிய சாளரங்கள் உண்டு. அந்த இரண்டு சாளரங்களும் பூங்கோதையினுடைய அந்தரங்க அறையின் ஜன்னல்கள். பூங்கோதை அந்தப் பலகணிகளின் பக்கத்தில் உட்கார்ந்துகொண்டுதான் படித்துக்கொண்டோ, எழுதிக்கொண்டோ, பாடிக்கொண்டோ இருப்பது வழக்கம்.

பூங்கோதை அந்த வீட்டில் இருக்கிறாளா என்று பார்க்கவே வீரராஜன் அந்த நேரத்தில் அங்கே காத்திருந்தான். ஜன்னல்களின் வழியாக வெளிச்சம் தெரிந்தது. ஆனால், அந்த ஜன்னல்களின் கீழ்ப்பாதி துணியால் மூடப்பட்டிருந்ததால் உள்ளே இருந்தவர்களைப் பார்க்க முடியவில்லை. உள்ளே நடமாடியவர்களின் நிழல்கள் ஜன்னல் துணியில் நன்றாகத் தெரிந்தாலும் அடையாளம் கண்டுபிடிக்க முடியவில்லை. நன்றாகப் பார்க்க முடிந்த இரண்டு நிழல்களும் பூங்கோதையின் உருவம் அல்ல. பூங்கோதை அங்கே இல்லை போலத் தோன்றியது. ஆனால் வீடு முழுதும் பிரகாசமாகச் சந்தோஷப்படுவது போலத் தோன்றியதால் பூங்கோதை வந்திராவிட்டால் இப்படியிருக்காதே என்று வீரராஜன் எண்ணுவான். வெகு நேரம் காத்திருந்தும் ஒன்றும் நிச்சயிக்க முடியவில்லை. மணி பத்துக்கு மேல் ஆகிவிட்டது. காத்தவராயனை ஜானகி வீட்டுக்கு வந்து காத்திருக்கச் சொன்னது வீரராஜன் நினைவுக்கு வந்தது.

ஜானகி வீட்டுக்குப் போக வேண்டுமென்று வேலியின் மறைவிலேயே நடந்து பாதைக்கு வந்து, சொக்கேசருடைய வீட்டின் வாசலைப் பார்த்துக்கொண்டே நடந்தான். பூங்கோதை காணாமற்போன நாள் முதற்கொண்டு சொக்கேசர் வீட்டுக்கு இரவில் போலீஸ் காவலுண்டு. போலீஸ் சேவகன் வாசலில் நிற்பதைப் பார்த்துக்கொண்டே வீரராஜன் தன்னுடைய காதலி ஜானகியின் வீட்டுக்குப் போனான். காத்தவராயன் அங்கே காத்திருந்தான்.

பூங்கோதை அவளுடைய வீட்டில் இருப்பதும் இல்லாததும் நிச்சயமாகத் தெரிந்துகொள்ள முடியவில்லையென்பதை



வீரராஜன் காத்தவராயனிடத்தில் சுருக்கமாகச் சொல்லிவிட்டு, உள்ளே போய் அவசரமாகக் கொஞ்சம் ஆகாரம் பண்ணினான். மேல்மாடிக்குப் போனான். தண்டவாளப் பெட்டியைத் திறந்து, ஒரு நகைப் பெட்டியை எடுத்துத் தன்னுடைய சட்டைப் பையில் பத்திரப்படுத்திக்கொண்டான். கீழே வந்து, காத்தவராயனுடன் பேசிக்கொண்டே வீதி வரையிலும் போய், "நான் மறுபடியும் சொக்கேசர் வீட்டைக் கவனித்துக்கொண்டு மெதுவாக சாவ்கார் வீட்டுக்குப் போகிறேன். நீ சரியாகப் பன்னிரண்டு மணிக்குப் பின்னால் புறப்பட்டு வந்தால் போதும்" என்று வீரராஜன் போய்விட்டான். காத்தவராயன் பன்னிரண்டு மணிக்காகக் காத்திருந்தான்.

**கேசவ சாவ்கார்** என்பவர் விஜயபுரியில் மிகப்பெரிய பணக் கடைக்காரர். வெகு பெரிய முதலாளி. எந்த நேரத்திலும் ரொக்கமும் நோட்டுமாகக் கையில் மட்டும் லட்சம் ரூபாய்க்குக் குறையாமல் இவரிடத்தில் இருக்கும். முன்னோர் தேடிய ஆஸ்திகளை அழித்துப் பலவித வேடிக்கை, விபசாரம்' வாத வழக்குகளிலேயே காலங் கழித்து வருகிற அநேக மிராசுதாரர்களும், ஜமீன்தார்களும் இவருடைய இரும்புப் பெட்டியின் சாவித் துவாரத்தின் இடுக்கில் கிடப்பவர்கள்தாம். இவருடைய இரும்புப்பெட்டிக்கு இணை, சர்க்கார் கஜானாவிலும் காண முடியாது. அமெரிக்காவிலிருந்து இவருக்கென்றே செய்யப்பட்டு வந்தது. சாவிகளெல்லாம் கிடைத்துவிட்டாலும் புது மனிதர்கள் திறக்கவே முடியாத திறமை வாய்ந்தது. உடைப்பதென்றாலும் முடிப்பதரிது. நவீன முறையில் வேகடிப்பதென்றாலும் வெகு நேரம் பிடிக்கும்.

கேசவஜீ, வீரராஜனுக்கு வெகு பழக்கமானவர். அநேக கணக்குகள் வீரராஜன் மூலமாகத்தான் நடந்திருக்கின்றன. வீரராஜன் வெகு புத்திக் கூர்மையுள்ள மோசக்காரன். ஆனதால், தன் பெயரால் சாவ்காரிடம் கடன் வாங்குவதில்லை. தனக்கு வேண்டியவர்களான பல பெரிய மனுஷாள் வீட்டுப் பழைய நகைகளெல்லாம் வீரராஜன் மூலமாகவே சாவ்காருடைய பெட்டிக்குள்ளே கட்டுண்டு கிடந்தன. வீரராஜனிடத்

தில் சாவ்காருக்கு மதிப்புண்டு. அவனுக்கும் சாவ்காரிடத்தில் அப்படித்தான் இருந்து வந்தது. ஆனால், கொஞ்ச காலமாக மலைக்கள்ளனுக்கும், கேசவ சாவ்காருக்கும் மர்மமான உறவிருப்பதாகவும், மலைக்கள்ளனுக்கு சாவ்கார் பெரிய உதவியாக இருப்பதாகவும் வீரராஜனுக்கு ஒரு சந்தேகம் தோன்றி, அது முதல் சாவ்காரைப்பற்றி அவன் மனசில் சங்கடம்தான். ஆனால் வெளியில் காட்டுவதில்லை.

சாவ்காரின் வீடு, விஜயபுரியில் நடு ஊரில் நல்ல கட்டுக்காவலுள்ள தெருவில் இருந்தது. அங்கே போவதற்கு வீரராஜன் சொக்கேசருடைய வீட்டைத் தாண்டித்தான் போகவேண்டும். சொக்கேசர் வீட்டை மறுபடியும் கவனித்துக்கொண்டே வீரராஜன் நிதானமாக நடந்தான். சொக்கேசர் வீட்டுக்கு நேராக வந்தவுடன் ஏதோ வழிப்போக்கன் பார்ப்பதைப் போல் அவ்வீட்டைப் பார்த்தான். உள்ளேயிருந்து தனக்குப் பழக்கமான ஓர் உருவம் வெளிவருவதைப் பார்த்தான். நின்றால் சந்தேகம் உண்டாகுமென்று நெடுகப்போய், சற்று தூரத்தில் நின்று திரும்பிப் பார்த்தான். அந்த உருவம் தன் பின்னாலேயே வேகமாக வருவதைக் கண்டு திகிலடைந்தான். என்றாலும், தன்பாட்டில் நடந்துகொண்டேயிருந்தான். வந்த மனிதன் இவனை நன்றாக அடையாளம் கவனித்துக்கொண்டே பின்னால் வருவதுபோல வந்து, இன்னானென்று அறிந்துகொண்டும் கவனிக்காதது போல, வீரராஜனைத் தாண்டித் தனக்கு முன்னால் நடக்கும் அந்த உருவத்தை வீரராஜன் நன்றாகப் பார்த்தான். அது சப்இன்ஸ்பெக்டர் ஆறுமுகம் என்றதை அறிந்து, அச்சமுற்றுச் சற்று நேரம் அசையாது நின்றுவிட்டான். இருந்தாலும் தன் அடையாளம் சுலபமாகத் தெரியாமலிருக்க வேணுமென்றேதான் தலையில் முண்டாசு கட்டியிருந்ததும், மூலைக் கச்சம் போட்டிருந்ததும் மூக்குக் கண்ணாடி மாட்டிக்கொண்டிருந்ததும் நினைவுக்கு வந்து; கொஞ்சம் பயம் குறைந்தது. இருவரும் ஒருவரையொருவர் நம்புவதில்லையென்றாலும் சந்தித்தால் சல்லாபித்தே பேசுவார்கள். ஆறுமுகம், தன்னை அடையாளம் தெரியாததால்தான்



பேசாமல் போய்விட்டாரென்று சந்தோஷப்பட்டுக்கொண்டே வீரராஜன் நடந்தான். ஆனால், ஆறுமுகம் ஊரில் இல்லை; திரும்பி வர நாலு நாளாகும் என்றுதான் எண்ணியதற்கு மாறாக,இன்று வந்துவிட்டதிலும், சொக்கேசர் வீட்டுக்குள்ளிருந்து வந்ததிலும் வீரராஜனுக்கு சற்று விசாரந்தான். இருந்தாலும், மலைக்கள்ளன் விஷயமாகத்தான் ஆறுமுகம், சொக்கேசர் வீட்டுக்குப் போயிருப்பார் என்று எண்ணிச் சற்று மனசைத் தேற்றிக்கொண்டே சாவ்கார் வீட்டுக்கு நடந்தான்........

மணி பன்னிரண்டு அடித்துவிட்டது. சாவ்கார் வழக்கம் போல் பத்து மணிக்கே படுத்துத் தூங்கிவிட்டார். வீட்டிலுள்ள எல்லாக் கதவுகளையும் ஜன்னல்களையும் தாமே இழுத்துப் பார்த்துவிட்டுத்தான் படுப்பது வழக்கம். அதே மாதிரி இன்றைக்கும் தாழ்ப்பாள்களையும் பூட்டுகளையும் பார்த்துவிட்டுத்தான் படுத்தார். ஆனால், அவர் தூங்கிப் போன பின் அவர் வீட்டில் ஒரு ஜமீன்தாருடைய சிபார்சின்மேல் புதிதாக அமர்த்தப்பட்டிருந்த ஒரு வேலைக்காரன் சாவ்கார் வீட்டுக் கொல்லைக் கதவைத் திறந்தான். திறந்தவன் மறந்தோ, அறிந்தோ மறுபடியும் கதவைத் தாழ்போடாமல் விட்டுவிட்டது சாவ்காருக்குத் தெரியாது.

சாவ்கார் வீட்டுக் கொல்லைக்கு நேராக அடுத்த தெருவில் இரண்டு வீடுகள் குடியில்லாத வீடுகள். சாவ்கார் வீட்டுக் கொல்லையில் ஒரு பெரிய வைக்கோற் போரும், அதனருகில் ஒரு குட்டிச்சுவரும் உண்டு. பன்னிரண்டரை மணி சுமாருக்கு இந்தக் குட்டிச்சுவருக்குச் சமீபத்தில் எங்கிருந்தோ நாலைந்து உருவங்கள் வந்தன. அவற்றுள் ஓர் உருவம் இன்னொன்றைப் பார்த்து, ''இங்கேயே இந்தக் குட்டிச் செவத்துக்கும் வெக்கப் போருக்கும் மத்தியிலே சத்தமில்லாமெ இரு. நான் வார வரையிலே தலையைக்கூட நீட்டாதே, தெரியுதா? நான் கொண்டாந்து கொடுத்த ஒடனே ரொம்ப சாக்ரதையாகக் கொண்டுபோய்....நான் சொன்ன எடத்திலே வச்சிக்கிட்டு இரு....நாங்க அவரையும் கூட்டிக்கிட்டு வரணும். தெரியுதா.......சத்தம்........சாக்ரதை........'' என்று மெதுவான குரலில் சொல்லிவிட்டுப் பூனை போல

நடந்து போய், திறந்து கிடந்த சாவ்கார் வீட்டுக் கொல்லை வாசலில் நுழைந்து மறைந்துவிட்டது. அதே வாசலில் இன்னும் இரண்டு மூன்று பேரும் நுழைந்துகொண்டார்கள்.

இதையெல்லாம், பின்னாலிருந்த குடியில்லாத வீட்டுக் கொல்லையிலிருந்த மல்லிகைப் பந்தலின் கீழ் மறைந்து கொண்டு வேறோர் உருவம் கேட்டுக்கொண்டும் பார்த்துக் கொண்டும் இருந்தது.

சாவ்கார் வீட்டுக் கொல்லை வாசலுக்குள் சில பேர் புகுந்து கொண்டபின் சிறிது நேரம் கழித்து; அடுத்த வீட்டுக் கொல்லையின் மல்லிகைப் பந்தலில் மறைந்து பார்த்துக்கொண்டிருந்த உருவம், வெளியில் வந்து, வேறு வழியில் ஓசை செய்யாமல் நடந்து, தானும் சாவ்கார் வீட்டுக் கொல்லைக்குள் இறங்கிற்று. வைக்கோல் போருக்குப் பின்னால் காத்திருக்கச் சொல்லப் பட்டவன் ஏதோ ஓசை கேட்டு இன்னும் ஒடுங்கி உட்கார்ந்தான். அதே சமயத்தில் ஒரு பெட்டியைக் கொண்டுவந்து, உட்கார்ந் திருந்தவனிடத்தில் கொடுத்து, காதோடு காதாக, "இந்தா, இதை சாக்ரதையாகக் கொண்டுபோய் சொன்ன இடத்திலே வச்சிக் கிட்டுக் காத்திரு. நான் அவரையும் கூட்டிக்கிட்டு வர்ரேன்" என்று உருவம் சொல்லிற்று. உடனே அவன் அதை வெகு ஜாக்கிரதையாக எடுத்துக்கொண்டு குட்டிச்சுவரைத் தாண்டி, சொன்ன இடத்துக்குப் போய்விட்டான். பெட்டியைக் கொண்டு வந்து கொடுத்தவன், போனவன் இருந்த இடத்தில் உட்கார்ந்து கொண்டு உள்ளேயிருந்து வர வேண்டியவனுக்காகக் காத்துக் கொண்டிருந்தான்....

சப் இன்ஸ்பெக்டர் ஆறுமுகத்தை இந்நேரத்தில் கண்டதைப்பற்றிச் சிந்தித்துக்கொண்டே வீரராஜன் சாவ்கார் வீட்டுக் கதவைத் தட்டினான். கதவுக்குப் பக்கத்தில் படுத் திருந்த வெகு நம்பிக்கையுள்ள காவற்காரன் கதவைத் தட்டிக் கூப்பிட்டவர் இன்னாரென்று அனுமானித்துக்கொண்டு விளக்கை எடுத்துக்கொண்டு கதவைத் திறந்தான். வீரராஜன் சிரித்த முகத்துடன், "என்ன வஸ்தாத், சௌக்கியமா ? எஜமான் தூங்குகிற வேளை, எனக்குத் தெரியும். இருந்தாலும் ரொம்பவும் அவசரமான ஒரு விஷயம். நான் வந்திருப்பதாகக் கொஞ்சம் எழுப்பு" என்றான்.



வஸ்தாத் உள்ளே போனான். கொஞ்ச நேரத்தில் சாவ்கார் கண்ணைத் துடைத்துக்கொண்டு கூடத்துக்கு வந்தார்.

"என்ன இந்நேரத்தில் வந்தது, வீரராஜய்யா ! வாங்கோ, உட்காருங்கள்" என்று சாவ்கார் உபசரித்தார்.

"ரொம்ப அவசரம். உட்கார நேரமில்லை. நம்ம குட்டிப் பட்டி ஜமீன்தாருக்கு விடிவதற்குள் பத்தாயிரம் ரூபாய் வேண்டுமாம். என்னிடத்தில் இருந்த ரொக்கமெல்லாம் நேற்றுத்தான் ஒரு பெரிய மனுஷருக்குக் கைமாற்றாகக் கொடுத்தேன். நல்ல நகைகள், இதோ அடமானமாகக் கொண்டுவந்திருக்கிறேன்" என்று வீரராஜன் ஒரு நகைப் பெட்டியை நீட்டினான்.

சாவ்கார் அந்த நகைப்பெட்டியை வாங்கும் போதே, "ரெண்டு நாளைக்கு முன்னால்தானே ஜமீன்தார் ஏதோ ஒரு கடனை அடைக்க வேணுமென்று அடமானத்தின் மேல் பெரிய தொகை கடன் வாங்கினார்" என்றார்.

"ஆமாம், அந்தக் கணக்கைத் தீர்க்கத்தான்; வாங்கினது போதவில்லை. அது ஒரு எழுபத்தையாயிரம் ரூபாய்க் கணக்கு. நான் சிபார்சு செய்ததன்மேல் அதிகச் சிரமப்பட்டு....அறுபதினா யிரத்துக்கு வாதி ஒத்துக்கொண்டிருக்கிறார். இன்னும் பத்தாயிரம் தேவை. இல்லாவிட்டால், நாளைக்கு வாரண்ட்."

"ஓ அப்படியா ! ரூபாய் இப்போது பத்தாயிரம்....இருக் காதே....பவுன்தான் இருக்கிறது...." என்று முணுமுணுத்துக் கொண்டே சாவ்கார் வீரராஜன் கொடுத்த நகைகளைத் திருப்பித் திருப்பிப் பார்த்துக்கொண்டிருந்தார்.

"ஓஹோ, பத்தாயிரம் ரூபாய்க்கு நகைகள் போதாது என்று நினைக்கிறீர்களோ ? அப்படியானால்...." என்று வீர ராஜன் காவற்கார வஸ்தாதிடம் திரும்பி, "வஸ்தாத், இந்தா,

இந்தச் சாவியைக் கொண்டுபோய் நம்ம பங்களாவில் ஜானகியிடம் கொடுத்து, என் கைப்பெட்டியில் ஒரு வயிர மாலை இருக்கிறது—அதை நான் கேட்டதாக—எடுத்துத் தரச்சொல்லி வாங்கிக்கொண்டு வா........சீக்கிரம்........நான் அதையும் கொண்டு வர வேண்டுமென்றுதான் நினைத்தேன் ; மறந்து போனேன் ; போ சீக்கிரம்'' என்று வீரராஜன் சாவியை வஸ்தாதிடம் கொடுத்தான். வீரராஜனிடத்தில் சாவ்காருக்கு நல்ல மதிப்புண்டென்பதை அறிந்தவனாதலால், 'வஸ்தாத்' எஜமான் உத்தரவு போல் சாவியை வாங்கிக்கொண்டு போய்விட்டான்.

"இல்லை, நகைகள் போதாது என்றல்ல....ரொக்கம் பத்தாயிரம்....பெட்டியில் இருக்குமா என்று சந்தேகித்தேன். போய்ப் பார்க்கிறேன்'' என்று சாவ்கார் தானே வீதிக் கதவைத் தாழ் போட்டுவிட்டு, கூடத்திலிருந்த விளக்கை எடுத்துக்கொண்டு இரும்புப் பெட்டியிருக்கும் பொக்கிஷ அறையைத் திறந்தார். இடுப்பிலிருந்த சாவியை எடுத்துத் தண்டவாளப் பெட்டியைத் திறந்தார். ஒரு சிறு கைப்பெட்டியை வெளியில் எடுத்தார். அதில் ரொக்கமும் சில அடகு நகைகளும் இருந்தன. ரொக்கத்தை எண்ண ஆரம்பித்தார். வீரராஜன் கூடத்திலேயே மேஜைக்குப் பக்கத்தில் ஒரு நாற்காலியைத் தூசி தட்டுவது போல் தன்னுடைய மேல் வேஷ்டியால் 'பட் பட்டென்று' தட்டிவிட்டு அதில் உட்கார்ந்துகொண்டான்.

நாற்காலியில் சத்தமுண்டாகிச் சிறிது நேரத்துக்கெல்லாம் அந்தக் கூடத்தின் ஒரு மூலையிலிருந்து ஓர் உயரமான பருத்த உருவம் வீரராஜன் உட்கார்ந்திருந்த நாற்காலிக்கருகில் வந்தது. அந்த உருவத்துக்குப் பின்னால் அதே மாதிரி இன்னும் நான்கு உருவங்கள் வந்தன. கூடத்தில் வெளிச்சம் இல்லை. சாவ்கார் இருந்த பொக்கிஷ அறையில் தான் விளக்கு இருந்தது. அந்த அறைக்குள் இந்த நாலைந்து பேரும் திடீரென்று புகுந்தார்கள். சாவ்கார் என்னவென்று பார்ப்பதற்குள், "கூச்சல் போட்டால் உடனே கொன்று விடுவேன்'' என்று ஒரு வெகு பளபளப்பான குத்துக் கத்தியை முதலில் வந்தவன் காட்டிப் பயமுறுத்தினான். உடனே இரண்டு



பேர் சாவ்காருடைய வாயில் துணியை வைத்து அமுக்கிக் கொண்டார்கள். எல்லாருமாகச் சேர்ந்து சாவ்காரைக் கட்டி உருட்டிவிட்டார்கள். தன்னுடைய படுக்கையில் தலையணையின் கீழிருந்த தன்னுடைய கைத்துப்பாக்கியை நினைத்துக்கொண்டே சாவ்கார் கண்ணைக்கூடத் திறக்கப் பயந்து கிடந்தார். இந்தச் சமயத்தில் அந்தக் கொள்ளைக்காரர்களின் தலைவன் சாவ்காருடைய கைப்பெட்டியைத் தலை கீழாகக் கொட்டி, இருந்ததையெல்லாம் சாவ்காருடைய மேல் வேஷ்டியிலேயே போட்டு, இன்னும் தண்டவாளப் பெட்டிக்குள் கையை விட்டுச் சிக்கிய மட்டும் வாரிப்போட்டு மூட்டையாகக் கட்டி, அதைத் தன் இடுப்பிலிருந்து அவிழ்த்த வேறொரு துண்டில் வைத்துக் கட்டி எடுத்துக்கொண்டு கொல்லைப் புறத்துக்குப் போய்விட்டான்.

இதற்குள் மற்ற ஆள்கள் வீரராஜனையும் சாவ்காரைக் கட்டினதைப் போலவே கட்டி, சாவ்கார் கிடந்த அறையிலேயே கொண்டுவந்து உருட்டினார்கள்.

மூட்டையைத் தூக்கிக்கொண்டு போன முதல் ஆள், சாவ்கார் வீட்டுக் கொல்லைக் கதவைத் திறந்துகொண்டு, குட்டிச்சுவருக்கும் வைக்கோற்போருக்கும் மத்தியில் குந்தியிருந்த உருவத்திடம் வந்து, "டேய் ! இந்தா....அவுந்து போகாமல் கொண்டுபோய், சொன்ன இடத்தில் காத்திரு'' என்று மூட்டையைக் கொடுத்தான். வாங்கிக்கொண்டவன்; உத்தரவை ஏற்றுக்கொண்டு. உடனே குட்டிச் சுவரைத் தாண்டி, காலி வீட்டு மல்லிகைப் பந்தலின் பக்கமாகக் குதித்து மறைந்துவிட்டான். மூட்டையைக் கொண்டுவந்து கொடுத்தவன், " அடே மடையா, நம்ப வந்த வழியிலே போகாமே இந்தப் பக்கமா ஏண்டா போறே ?'' என்று முணுமுணுத்துக் கொண்டே மறுபடியும் சாவ்கார் வீட்டுக் கொல்லை வாசலுக்குள் நுழைந்துகொண்டான்.

சாவ்கார் வீட்டு வீதிக்கதவை போலீஸ்காரர்கள் படபடவென்று தட்டினார்கள். யாரும் திறப்பாரில்லை. தட்டுகிற

சத்தத்தில் தூங்கினவர்கள் எல்லாம் எழுந்தனர். மேல்மாடியில் படுத்திருந்த சாவ்கார் வீட்டுப் பெண்கள் விழித்துக்கொண்டு வேலைக்காரியை அனுப்பிக் கதவைத் திறக்கச் செய்தார்கள்.

சப்இன்ஸ்பெக்டர் ஆறுமுகம் ஐந்தாறு போலீஸ் ஜவான்களும் உள்ளே நுழைந்தார்கள். அவர்களுக்குப் பின்னால் வயிர மாலைக்காகப் போன வஸ்தாத்தும் மாலையுடன் வந்தான்.

பரக்கத் திறந்து கிடந்த பணப்பெட்டி அறையில் ஆறுமுகம் நுழைந்தார். வீரராஜனையும் பார்த்தார். ''அடடா! என்ன வீரராஜா! இதற்காகவா அவ்வளவு வேகமாக வந்தீர்?'' என்றார்.

## அத்தியாயம் 11

கூடத்திலிருந்த வீரராஜன், ஓடி வந்து உதவாவிட்டாலும் வீதிக் கதவைத் திறந்து கூச்சல் போட்டு அக்கம்பக்கத்தாரை யாவது கூப்பிடக்கூடாதா என்று எண்ணிக்கொண்டே கிடந்த சாவ்கார், வீரராஜனையும் கள்ளர்கள் தன்னைக் கட்டியதைப் போலவே கட்டிப் போட்டுவிட்டதைக் கண்டு சற்று ஆறுதலடைந்தார்.

சாவ்காரையும் வீரராஜனையும் கட்டவிழ்த்துவிட்டு, நடந்த விஷயங்களைக் கேட்டுக் குறித்துக்கொண்டு, ஸ்ரீ ஆறுமுகம் இன்னும் மேஜையின் மேலேயே கிடந்த வீரராஜன் கொண்டு வந்த நகைப்பெட்டியையும் 'வஸ்தாத்' ஜானகியிடமிருந்து வாங்கிவந்த வைர ஆரத்தையும் வாங்கிக்கொண்டு போய் விட்டார்.

வீரராஜன், சாவ்காருக்கு நேர்ந்துவிட்ட கஷ்டநஷ்டங்களுக்காக வருத்தப்பட்டு உபசாரம்பேசிவிட்டுப் போய்விட்டான். சாவ்கார் கதவுகளை எல்லாம் தாழிட்டு, வேலைக்காரர்களையும் வெளியே படுக்கும்படி சொல்லிவிட்டு, வெளிக் கதவை உள்ளே பூட்டிக்கொண்டார். மறுபடியும் விளக்குடன்போய்த் தண்டவாளப் பெட்டியைச் சோதித்தார். கைப்பெட்டியிலிருந்த ரொக்கமும் இரும்புப் பெட்டியில் முன்னாலிருந்த சில நகைகளும், சில பத்திரங்களும் கொஞ்சம் பவுன்களும் போய்விட்டன. சுமார் இருபதினாயிரம் ரூபாய்தான்நஷ்டம். தண்டவாளப்பெட்டிக்குள் கையை விட்டுக் கள்ள அறையை இழுத்துப் பார்த்தார். அது திறக்கப்படவில்லை. 'நல்ல வேளை' என்று பெருமூச்சு விட்டுச் சந்தோஷப்பட்டார். அந்தக் கள்ள அறையில் சுமார் பத்து லட்சம் ரூபாய் பெறுமான நகைகளும் நவரத்தினங்களும் இருந்தன. கள்ள அறையைத் திறந்து சோதித்தார். அதிலிருந்து ஒன்றும் போகவில்லை. வெகு சந்தோஷத்துடன்

கட்டி உருட்டின கஷ்டங்களையும் மறந்துவிட்டுச் சாவ்கார் சயன வீட்டுக்குப் போய்விட்டார்.

வீரராஜன் நேராக ஜானகி வீட்டுக்குப் போய், அங்கே சிறிது நேரம் தங்கிவிட்டு, சப்இன்ஸ்பெக்டர் ஆறுமுகம் வீட்டுக்குப் போய்விட்டாரென்று தன்னுடைய ஆள் வந்து சொன்ன பிற்பாடு புறப்பட்டு, பங்களாவிற்குப் போனான். பங்களாவுக்கருகில் காத்தவராயன் நின்றுகொண்டிருந்தான். கதவைத் திறந்துகொண்டு இருவரும் உள்ளே போனார்கள். பங்களாவிற்குப் பின்புறத்தில் உயரமான சுற்றுச் சுவரின் கோடியிலிருந்த ஒரு சிறு கதவைத் திறந்து, காத்தவராயன் இடுப்பிலிருந்த நெருப்புப் பெட்டியை எடுத்து ஒவ்வொன்றாக மூன்று குச்சிகளை வரிசையாகக் கிழித்து வெளிச்சங் காட்டினான். அந்த வெளிச்சத்தைப் பார்த்துப், பின்னாலிருந்த அடர்ந்த காட்டில் காத்துக்கொண்டிருந்த ஒருவன், தலையில் ஒரு சிறு பெட்டியுடன் வெளிச்சம் காட்டிய சிறு கதவிற்கு வந்தான். உள்ளே புகுந்தான். மூன்று பேரும் அந்தச் சிறு கதவைப் பூட்டிக்கொண்டு பங்களாவிற்குப் போனார்கள். வீரராஜன் விளக்கேற்றினான். காத்தவராயன், "டேய் மூக்கா! எங்கே கொண்டா அதை" என்றான். பெட்டி மேஜையின் மேல் வைக்கப்பட்டது.

"நான் கொடுத்த மூட்டை எங்கேடா முட்டாள்? பெட்டி ஏது? அவுக்க வேண்டாமென்னு சொன்னேனே! அவுத்துப் பெட்டிக்குள்ளே போட்டாயா? யார் இதிலே போடச் சொன்னது உன்னை.....?" என்றான் காத்தவராயன். "மூட்டை ஏதுங்கோ? இந்தப் பெட்டியைத்தானே குடுத்தீங்க" என்றான் மூக்கன். "ஐயையோ!" என்று பெட்டியை அவசரமாக வாங்கித் திறந்தான். அது பூட்டியிருந்தது. ஆத்திரத்தோடு கெம்பித்திறந்தான். பெட்டிக்குள் மேலாக ஒரு கந்தல் துணி, அடியிலிருக்கும் கனத்த பொருள்கள் ஆடாதபடி அடைக்கப்பட்டிருந்தது. துணியை இழுத்தெறிந்தான். வீரராஜனும் வெகு ஆசையோடு விளக்கைப் பெட்டிக்கு இன்னும் அருகில் கொண்டுவந்து பார்த்தான். பெட்டியில்....கல்லும் மண்ணும், கட்டியும் முட்டியும்தான் இருந்தன....



காத்தவராயனுக்குத் தேகமெல்லாம் கனலாய்த் தகித்தது! வீரராஜனுடைய முகம் கோரமடைந்தது! இன்னொருவன் குன்னிப் போனான்!........

காத்தவராயனோ கன்னெஞ்சன்; வீரராஜனோ விகார வாழ்க்கையினால் மனச்சாட்சியை விற்றுவிட்டவன். இவர்களுடைய துக்கம் எவ்வளவு நேரத்துக்கிருக்கப் போகிறது? எவ்வளவு வருத்தம் நேர்ந்தாலும் அது இவர்களைத் திருத்த முடியாது. மேலும் மேலும் கோபத்தையும் குரோதத்தையுமே கொடுக்கும். பெட்டியைக் கொண்டுவந்தவனை வாய்க்கு வந்தமட்டும் திட்டிவிட்டு, அவனைப் போகச் சொல்லிவிட்டு, காத்தவராயனும் வீரராஜனும் மேல் மாடிக்குப் போனார்கள்.

வீரராஜன் சாவ்கார் வீட்டுக்குத் தான் போகும்போது, சப் இன்ஸ்பெக்டர் ஆறுமுகம் சொக்கேசர் வீட்டிலிருந்து தன் பின்னாலேயே வந்து, தன்னைத் தாண்டிப் போனதையும், போலீஸ் ஜவான்களுடன் சாவ்கார் வீட்டுக்குத் தாமாகவே வந்ததையும் விவரமாகக் காத்தவராயனுக்குச் சொன்னான்.

தாங்கள் சாவ்கார் வீட்டில் கொள்ளையடிக்க ஏற்பாடு செய்திருந்த ரகசியங்களைச் சொக்கேசருக்கு யாரோ சொல்லி, அவர் சப் இன்ஸ்பெக்டருக்குத் துப்புக் கொடுத்திருக்க வேணுமென்றும் அனுமானித்தார்கள். சொக்கேசர் சப் இன்ஸ்பெக்டருக்கு எல்லா உதவிகளையும் செய்து, இருவரும் சேர்ந்து தங்களுக்கு விரோதமாக வேலை செய்து வருகிறார்கள் என்று தீர்மானித்தார்கள். இனி, சொக்கேசரைச் சும்மா விடக்கூடாதென்று துணிவு செய்துகொண்டு, இருவரும் பிரிந்து அவரவர்களுடைய இருப்பிடத்துக்குப் போய்விட்டார்கள்..........

ஒரு வாரத்துக்குப் பின்னால் ஒருநாள் இரவு சுமார் ஒன்பது மணிக்கு ஜனாப் அப்துர் ரஹீம் சாயபு, தம்முடைய மாந்தோப்பு மாளிகையின் மேல் மாடியில் ஓர் அழகான மேஜைக்கருகில் பஞ்சணை நாற்காலியில் உட்கார்ந்துகொண்டு ஹுக்கா குடித்துக்கொண்டிருந்தார். அவர் உட்கார்ந்திருந்த கூடமும்,

அதில் விரிக்கப்பட்டிருந்த வெகு விலை மதிப்புள்ள ரத்தினக் கம்பளமும், மேஜையும், நாற்காலிகளும் பளிங்குக் கண்ணாடிகள் பதித்த அலமாரிகளும், பங்காவும், தங்க முலாமோ-தங்கமே தானோ என்று சந்தேகிக்க வேண்டிய ஹுக்காச் செம்பும் அவர் மிகுந்த செல்வமுள்ள சீமானென்பதைக் காட்டின. வயது நாற்பதுக்கு மேலிருக்கும் ; நல்ல நிறமான அவருடைய பிரகாசமான முகத்தில் கீரை விதையைப் பரப்பினது போன்று மினுமினுப்பான கருத்த மீசை தாடியும், இடையிடையே இரண்டொரு நரை மயிர்களும் அழகாகவே அமைந்திருந்தன. கண்ணில் ஏதோ நோய் என்று பட்டணத்தில் கண் வைத்தியம் செய்ததாகவும், அது முதல் வெள்ளை வெளிச்சம் நேராகக் கண்ணில் படக்கூடாதென்று, நீல நிறமான விளக்குகளையே தம்முடைய வீட்டில் உபயோகிப்பார். பகற்காலங்களில் பருத்த நீல நிறமான மூக்குக் கண்ணாடிகளைச் சதா தரித்துக் கொண்டிருப்பார். இராக் காலங்களிலும் வேறு சிநேகிதர்களுடைய வீட்டுக்குப் போனால், அங்கே நீல நிறமான விளக்குகள் இருக்க முடியாததனால் மூக்குக் கண்ணாடிகளை முக்கியமாகக் கொண்டுபோவார். தும்பைப் பூவைப் போன்ற துய்ய வெள்ளையான சராயும் சட்டையும் போட்டிருப்பார். சட்டையின் மேல் வெகு விலைமதிப்புள்ள 'சம்கி' வாஸ்கோட் போட்டிருப்பார். அவற்றோடு அவருடைய கனமான ஜரிகைத் தலைப்பாகையும் அவர் அணிந்திருக்கிறதைப் பார்த்தால், இவர் கள்ளர்களுடைய சகவாசமுள்ளவரென்று எவரும் சந்தேகிக்க மாட்டார்கள்.

ஆனால், மலைக்கள்ளனுடைய மர்மங்களையெல்லாம் கண்டு பிடிக்க வேணுமென்று உண்மையாக வெகு பாடுபட்டு மலையையும், அதன் அடிவாரத்திலுள்ள புளியந்தோப்பையும், அதிலுள்ள கொட்டாரத்தையும் அங்கே போக்குவரவு உள்ளவர்களையும் இரவு பகலாகக் கவனித்து வருகிற சப் இன்ஸ்பெக்டர் ஸ்ரீ. ஆறுமுகத்துக்கு மட்டும் சாயபுவின் மேல் பலமான சந்தேகம் உண்டு. சாயபு பட்டணத்திலிருந்து வந்தவர் என்றும், பட்டணத்தில் அவரைப்பற்றி விசாரித்ததில்



அவருக்குப் பட்டணத்தில் 'ஒரு பங்களா' உண்டென்றும்; ஆனால் அவருக்குச் சொந்த ஊர் பட்டணம் அல்லவென்றும், அவர் ரங்கூனிலிருந்துவந்தவரென்றும் தெரியவந்தது. ரங்கூனில் ஏதோ கப்பல் வியாபாரத்தில் கூட்டாளியென்று மட்டும் கேள்வி. ஆனால், ரங்கூன் விலாசமும் மற்ற விவரங்களும் கிடைக்கவில்லை.

சப் இன்ஸ்பெக்டர், சாயபுவைச் சந்திக்கவேணும் என்று பல தடவைகளில் மறைவாகவும் நேராகவும் மாந்தோப்புக்கு வந்தும், இதுவரையிலும் கண்டுபிடிக்க முடியவில்லை. இன்றைக்கு சாயபு, வீட்டில் இருப்பதை நிச்சயமாக அறிந்து கொண்டு ஸ்ரீ ஆறுமுகம் கதவைத் தட்டினார். வைத்தி கதவைத் திறந்தான். தாம் வந்திருப்பதை அறிவிக்கச் சொன்னார், ஆறுமுகம். கதவைத் தாழிட்டுக்கொண்டு மேலே ஓடினான்.

சற்று நேரத்துக்குள் ஜனாப் அப்துர் ரஹிம் சாயபு ஒரு சிறு அத்தர் புட்டியுடன் தாமே கீழே வந்து, சப்இன்ஸ்பெக்டரை மகமதிய கனவான்கள் வீட்டு வழக்கப்படி வாசனை பூசி வரவேற்று, "ஸ்லாமலைக்கும், வாங்கோ சாப்" என்று மாடிக்குக் கூட்டிக்கொண்டு போய், அவரை ஒரு நாற்காலியில் அமரச் செய்து தாம் முன் உட்கார்ந்திருந்த நாற்காலியில் உட்கார்ந்து கொண்டு, "எங்கே இவ்வளவு தூரம் மெஹர்பானி செய்தது?" என்றார்.

"ஒன்றுமில்லை. உங்களைச்........சும்மா........பார்த்துப் போகலாமென்றுதான் வந்தேன்" என்று ஸ்ரீ ஆறுமுகம் ஆரம்பித்தார்.

"ஒன்றும் இல்லாமல் வருவீர்களா! திடீரென்று வீட்டுக்குப் போலீஸார் வந்தால் கொஞ்சம் பயம் செய்யுது சாப்."

"தங்களைச் சந்தித்துச் சில சந்தேகங்கள் தெளிய வேணும். அதற்காகக் கொஞ்ச நாளாகப் பல தடவைகளில் இங்கே வந்திருக்கிறேன். தாங்கள் கிடைப்பதில்லை."

"ஏன் கொஞ்ச நாளாக ?........தாங்கள் வெகு நாளாக இங்கே வந்து போய்க்கொண்டிருக்கிறீர்கள். ஆறு மாதத்துக்கு முன்னாலேயே அறிவேன், சாப். தாங்கள் அப்படிப் பதுங்கிப் பதுங்கிப் பார்க்க வேண்டியதில்லை, மகராஜ். நேராகவே வரலாம். நாம்பள் அப்படிப் போலீசுக்குப் பயப்பட வேண்டியது ஒன்றும் இல்லை, சாப்."

"இல்லையில்லை. உங்களைப்பற்றி ஒன்றுமில்லை."

"என்னைப்பற்றி யில்லையா! சந்தோஷம். பின்னே யாரைப்பற்றி?"

"இல்லை............இல்லை...........அந்த...........அந்த மலைக் கள்ளனைப்பற்றித் தங்களைக் கொஞ்சம் கேட்க வேண்டும் என்று...."

"அரேரே! மலைக்கள்ளனைப்பற்றியா! அவரைப்பற்றி என்னை என்னா கேட்கவேணும், சாப்?"

"சாஹேப் எனக்குத் தெரியும்........உங்களை நான் ஒன்றும் செய்வதில்லை. என்னிடத்தில் ஒளிக்க வேண்டாம். உங்களை நான்........"

"என்ன தெரியும் உங்களுக்கு? என்னை என்ன செய்து விடுவீர்கள்?....நான் என்ன ஒளிக்கிறேன்?.... ஜீ! ஐயா! போலீஸ் மெரட்டலா?—உங்களுக்குத்தான் தெரியும் என்று சொல்லுகிறீர்களே. என்னை ஏன்—பிர்—கேட்க வேணும், சாப்?"

"கோபிக்க வேண்டாம், சாயபு....மலைக்கள்ளனுக்கு நீங்கள் ரொம்ப வேண்டியவர் என்பது எனக்குத் தெரியும். அந்த மலைக்கள்ளன்மேல் அநேக கொலைக் குற்றங்களும் கொள்ளைக் குற்றங்களும் இருக்கின்றன. அவற்றைப்பற்றிய விஷயங்களை நான் விசாரிக்க வேண்டியவனாக இருக்கிறேன். ....நீங்கள் அவருக்கு ஆப்த நண்பராச்சே என்று...."



"யார் சொன்னது நாம் அவருக்கு ஆப்த....நம்....நம்ப ரென்று?" என்று சாயபு கோபக்குறி காட்டினார்.

"கோபிக்க வேண்டாம். யாரும்....எனக்குச் சொல்ல வேண்டியதில்லை..எனக்குத் தெரியும். நீங்கள் மறுக்கவே முடியாது. வேறு யாரும் சொன்னதல்ல, நானே கண்ணாரக் கண்டது."

"என்னாத்தை கண்டிங்க, மாராஜ்?"

"ஐயோ! அப்துர் ரஹீம் சாயபு, வளைத்து வளைத்துப் பேசுவானேன். நீங்கள் சொக்கேசருடைய பெண் பூங்கோதையம்மாளைப் போன வெள்ளிக்கிழமை இரவு பத்தரை மணி சுமாருக்குச் சொக்கேசருடைய வீட்டில் கொண்டு போய் விடவில்லையா?"

"இது....ஆப்....நீங்கள் கண்ணாரக் கண்டதா?"

"ஆம். அதுமட்டுமல்ல, ஆதியோடந்தமாக நான் பார்த்தேன்."

"அப்படியா சாப்....அச்சா....இன்னும் என்னா என்னா பார்த்தீர்கள்? உங்கள் பேச்சு ரொம்ப குஷியாகத்தான் இருக்கிறது. சொல்லுங்கள். என்னென்ன பார்த்தீர்கள்?"

"என்னைப் பரிசோதிக்க வேண்டியதில்லை. எனக்குத் தெரியும்....சரி சொல்லுகிறேன், கேளுங்கள். உங்களுடைய பெட்டி வண்டியில், வண்டிக்காரன் உட்காரும் இடத்துக்கு நேராக இருந்த ஜன்னலை மாற்றி ஒரு புதுக் கதவு வைத்தீர்கள். அது எனக்குத் தெரியும். இதை நான் அகஸ்மாத்தாக அறிய நேர்ந்தது. பூங்கோதை அம்மாளைத் தேடிப் பிடிக்க வேண்டிய கடமையில், அந்த அம்மாள் மலைக்கள்ளனுடைய வீட்டில் இருப்பதாகவும், மலையிலிருந்து வீட்டுக்கு வரப் போவதாகவும், அந்தச் சமயத்தில் அவளை மறுபடியும் அபகரித்துக்கொண்டுபோய்விட வேணுமென்று சில பேர் மலையடிவாரத்தில் காத்துக்கொண்டிருப்பதாகவும் எனக்குச் சேதி கிடைத்தது...."

"அந்தச் சேதியைத் தங்களுக்குச் சொன்னது யார் ?"

"ஆ ! சாயபு, அகப்பட்டுக்கொண்டீர் ! மலைக்கள்ளனுக்கு நீங்கள் வேண்டியவர் என்பது இந்தக் கேள்வியினாலேயே விளங்குகின்றது. அந்தச் சேதியை எனக்குச் சொன்னவர்கள் வேறே. ஆனால், அந்தச் சேதி இந்த மாந்தோப்பைச் சேர்ந்த ஆள் வந்து சொன்னதாகச் சொன்னார்கள். அதிலிருந்து உங்களுடைய சம்பந்தத்தை அனுமானித்தேன்....ஆம்....அகப்பட்டுக் கொண்டீர்....சாயபு...."

"நான் ஒன்றும் அகப்பட்டுக்கொள்ள மாட்டேன், சாப்.... அப்புறம் இன்னும் என்ன பார்த்தீர்கள் ? எல்லாம் சொல்லுங்கள்....அப்பாலே நான் சொல்லுகிறேன்" என்று சாயபு சிரித்தார். "சொல்லட்டுமா....சொல்லுகிறேன்......அந்தச் சேதி கிடைத்த உடன் வேண்டிய பந்தோபஸ்துக்களோடு யாரும் அறியாதபடி மலையடிவாரத்துக்குப் போனேன். அங்கு பல இடங்களில் ஆள்கள் பதுங்கியிருந்ததையும், மாறு வேஷத்தோடு மாடு மேய்த்துக்கொண்டிருந்ததையும் அறிந்தேன்.... அவர்கள் யாரும் என்னை அறியாதபடி நான் மறைந்திருந்தேன். என் கையில் தூரதிருஷ்டிக் கண்ணாடியோடு காத்திருந்தேன். நான் அங்கே போனபிறகு, கொஞ்ச நேரத்தில் உம்முடைய பெட்டி வண்டி அங்கே வந்தது. உம்முடைய வண்டியைக் கண்ட பின்புதான் உமக்கு இதில் சம்பந்தம் இருக்கிறது என்பதை ஊர்ஜிதம் செய்துகொண்டேன். உடனே உம்முடைய வண்டிக்கு முன்புறத்தில் ஒரு புதுக்கதவு வைக்கப்பட்டது நினைவிற்கு வந்தது...."

"புதுக் கதவு வைத்தது....உமக்கு எப்படித் தெரியும் ?" என்று சாயபு குறுக்கிட்டார்.

"ஓ ! அதுவா ?....அந்த வெள்ளிக்கிழமை முழுதும் உம்முடைய இந்த மாந்தோப்பை என்னுடைய ரகசியப் போலீஸ் ஜவான்கள் கவனித்தார்கள். உங்கள் வண்டிக்குப் புதுக் கதவு வைத்துக்கொண்டிருந்ததைத் தவிர, வேறொன்றும் இங்கிருந்து அறிந்து வர முடியவில்லை."



"ஓ ! சரி பரோபர். அப்புறம் இன்னும் மலையில் என்ன என்ன பார்த்தீங்கோ சாப். சொல்லுங்கள்."

"உம்முடைய வண்டி வந்த நிமிஷம் முதற்கொண்டு புதுக் கதவு வைக்கப்பட்டது, இதற்காகத்தான் என்று எண்ணி நான் கொஞ்சம்கூட ஏமாந்து போகாமல் புதுக் கதவையே பார்த்துக்கொண்டிருந்தேன். நல்ல வெளிச்சமிருக்கும்போதே மலைக் கள்ளனும் அந்தப் பெண்ணும் மலையிலிருந்து இறங்கி வந்ததும், கொட்டாரத்துக்குள் போனதும் தெரியும். பொழுது சாயும் வேளையில் வண்டியைக் கொட்டாரத்துக்கருகில் கொண்டுபோனதையும், ஒரு பெண் வண்டியில் ஏறிக்கொண்டதையும் பார்த்தேன். வண்டியின் புதுக்கதவு நல்ல வேளையாக எனக்கு நேராக இருந்தது. என்னுடைய 'பைனாகுலர்' கண்ணாடியில் புதுக் கதவையே விடாமல் பார்த்துக் கொண்டிருந்தேன். பெண் வண்டியிலேறிக்கொண்ட சமயத்தில் வண்டிக்குக் காவல் செய்வதற்கென்று வந்தவர்கள் பல பேர் இங்குமங்கும் வண்டியைச் சுற்றிக்கொண்டு சந்தடி செய்தார்கள். அந்தச் சமயத்தில் புதுக்கதவு திறக்கப்பட்டதை நான் கண்டேன். மற்றவர்கள் அதைப் பார்த்திருக்கமாட்டார்கள். திறக்கப்பட்ட கதவின் வழியாக ஓர் ஆண்-பெண்ணல்ல-வண்டிக்குள்ளிலிருந்துவந்துவண்டியோட்டி உட்காரும் இடத்தில் கையில் ஜாட்டையுடன் உட்கார்ந்துகொண்டான். இத்தனையும் கண் மூடிக் கண் திறப்பதற்குள் நடந்துவிட்டது. (என் கண்ணாடி நன்றாகக் காட்டிற்று) அந்தச் சமயத்திலேயே மலைக்கள்ளன் பகிரங்கமாக வெளியில் வந்து நின்றுகொண்டு, தன்னுடைய ஆள்களுக்கு உத்தரவிட்டான். அதனாலும் மற்றவர்கள் வண்டியில் நடந்ததைப் பார்த்திருக்க முடியாது. வண்டி புறப்பட்டது. காவலாளிகள் வண்டியைக் காத்து உடன் சென்றார்கள். மலைக்கள்ளன் உடனே எல்லோரும் காணத் தான் மலைக்குப் போவது போலப் படியேறிப் போய்விட்டான். காத்தவராயனுடைய ஆள்கள் எல்லோரும் வண்டியைப் பிடிக்கப் பின்னால் பதுங்கிப் பதுங்கிப் போய்விட்டார்கள். நான் மட்டும் இருந்த இடத்தை விட்டு அசையவில்லை.

"வண்டிக்குள் ஏறினது ஒரே ஓர் ஆசாமிதான் என்பது நிச்சயமாக எனக்குத் தெரியும். ஆகையினால் புதுக்கதவைத் திறந்துகொண்டு; வண்டிக்காரன் இடத்தில் வந்து உட்கார்ந்த அந்த ஆண்பிள்ளைதான், பெட்டி வண்டிக்குள் பின்புறத்தில் ஏறினபோது பூங்கோதையினுடைய புடைவையைக் கட்டிக்கொண்டு பெண் போல் வந்து ஏறியிருக்கிறான் என்று ஊகித்தேன். ஆகையினால், வண்டி போய்விட்ட பின்னும், பூங்கோதை கொட்டாரத்தில்தான் இருக்கிறாள் என்பதையும், காத்தவராயனுடைய ஆள்களை ஏமாற்றுவதற்கு மலைக்கள்ளன் செய்த மிகவும் புத்திசாலித்தனமான தந்திரம் என்றும் அறிந்துகொண்டேன். அதன் பிறகு அந்தப் பெண் பூங்கோதையை என்ன செய்யப் போகிறார்கள் என்பதைக் கண்டுபிடிக்க வேணுமென்ற ஆத்திரம் அதிகரித்தது. ஆத்திரத்தையும் அவசர புத்தியையும் அடக்கிக்கொண்டு காத்திருந்தேன். இருட்ட இருட்ட கொஞ்சங் கொஞ்சமாக நகர்ந்து கொட்டாரத்துக்கு வெகு சமீபத்தில் வந்து மறைந்திருந்தேன்."

"மலைக்கள்ளனுடைய காவற்காரர்கள் ஏராளமாக அங்கே இருப்பார்களே, அவர்கள் யாரும் உங்களைப் பார்க்கவில்லையா?" என்றார் சாயபு.

"ஆ! இதுவும் உம்மைக் காட்டிக் கொடுக்கும் கேள்வி.... ஆம்; இரண்டு மூன்று பேர்கள் என்னைக் கண்டுகொண்டார்கள். கேள்வியும் கேட்டார்கள். ஆனால் நான் இன்னானென்று அவர்களுக்குத் தெரியும் போல் இருந்தது. மலைக்கள்ளன் சொல்லியிருப்பான் போலிருக்கிறது. நான் சப்இன்ஸ்பெக்டர் என்றும், அந்தப் பெண்ணுடைய பாதுகாப்புக்காகவே மாங்தோப்பு சாயபுவிடமிருந்து வந்த சேதி கேட்டு வந்திருப்பதாகவும் சொன்னேன். அதிலும் என்னுடைய யூகம் பலித்தது. அவர்கள் அதற்குமேல் என்னை ஒன்றும் சொல்லவில்லை...."

"சரி சாப் - நான் ஒன்று கேட்கிறேன். அந்தப் பொண்ணை ஜுலும் செய்துகொண்டு போக யாரோ காத்திருக்



கிறார்கள் என்று உங்களுக்குச் சேதி சொன்னதால், உங்களுக்கு இந்த விஷயம் நடப்பதற்கு முன்னாலேயேதான் தெரிந்திருந்ததே, நீங்கள் ஏன் தக்க போலீஸ் பந்தோபஸ்துடன் வந்து குற்றவாளிகளைப் பிடித்து, அந்தப் பெண்ணைச் சொக்கேசர் வீட்டுக்குக் கொண்டுபோய் விட்டிருக்கக்கூடாது?"

"சரியான கேள்விதான்; சாயபுவாள். ஆனால் அப்படிச் செய்திருந்தால் பெரிய குழப்பம் உண்டாயிருக்கும். அந்தப் பெண்ணுக்கும் அபாயம் நேரலாம். போலீஸ் படை போனால் அந்த மலைக்கள்ளன் தன்னைப் பிடிக்கத்தான் போலீஸ் வந்திருக்கிறதோ என்று எண்ணி, அந்தப் பெண்ணை மலை வீட்டிலிருந்து கீழே கொண்டுவராமற் போயிருந்தாலும் இருப்பான். அல்லாமலும் போலீஸார் வருவதை அறிந்து, போலீஸ்காரர் மேல்கூட உளவு வைத்துப் பார்த்துக்கொண்டிருக்கிற முக்கியமான குற்றவாளிகள் தப்பித்துக்கொள்வார்கள் அல்லவா?"

"அச்சா, பகுத் அச்சா, சப்இன்ஸ்பெக்டர் சாப். உங்கள் யோசனையை நான் மெச்சுகிறேன். அது ரொம்ப ரொம்ப சரிதான். அப்புறம்? அந்தப் பெண்ணை நாம் கூட்டிவந்தோம் என்று யார் சொன்னது?"

"யார் சொன்னதா? நானே பார்த்தேன். ஒன்பது மணிக்குக் கொட்டாரத்திலிருந்து நீங்கள் வந்ததைப் பார்த்தேன். உங்கள் உருவத்தை எவ்வளவு இருட்டிலும் நான் அறிவேன். உங்களுக்குப் பின்னால் இன்னொரு ஆள் வந்ததையும் பார்த்தேன். பின்னால் வந்த ஆள் ஆண் வேஷம் போட்ட பூங்கோதையோ என்று சந்தேகித்தேன். என் சந்தேகம் தெளியும்படியாக, 'வாங்கோம்மா, வழியில் பேச்சுக்குரல் காட்டக்கூடாதம்மா' என்று நீங்கள் வெகு மெதுவாகச் சொன்னதை நான் கேட்டேன். உண்டா இல்லையா? ஆ! சிரிக்கிறீர்....சாயபு....பிறகு நீங்கள் சந்தைப் பாதையில் இட்டேரி வழியாகப் போனது தெரியும். அந்தப் பாதை ஜன நடமாட்டமுள்ளது, கள்ளர் - பயம் இல்லாத வழி. ஆகையினால் நான் உடனே எனக்காக ஓர் இடத்தில் மறைத்து

நிறுத்தப்பட்டிருந்த என் பைசைக்கிள் வண்டியில் ஏறிக் கொண்டு, என்னுடைய ஜவான்களுக்கு உத்தரவு செய்து விட்டு, வேறு வழியாக உங்களுக்கு முன்னால் போய்ச் சொக்கேசர் வீட்டுக்கருகிலிருக்கும் வேப்பமர இருட்டில் காத்துக் கொண்டிருந்தேன். நீங்கள் அந்த அம்மாளை அவர் வீட்டு வாசல் வரையிலும் கொண்டுவந்து விட்டுவிட்டு மறைந்து விட்டீர்கள். நான் வேகமாகச் சைக்கிள் வண்டியில் இங்கே வந்து பார்த்தேன். நீங்கள் உள்ளே புகுந்து கதவைத் தாழிட்டுக்கொண்டீர்கள். என்ன, அப்துர் ரஹிம்........ சரிதானா ?''

''ஹோ சாப், ரொம்பச் சரி, சபாஷ் ! சப்இன்ஸ்பெக்டர்ஜீ ! நீங்கள் படா சாமர்த்தியவாளி தடையில்லை. இருந்தாலும்....சொக்கேசர், பாவம் ரொம்ப பெரிய மனுஷர்....அந்தப் பொண்ணும்....பூங்கோதை ரொம்ப நல்ல பொண்ணு. கள்ளர்கள் மோசம் பண்ணிக்கொண்டு போய்விட்ட அந்த அம்மாளைப் புண்ணியத்துக்கு நான் வீட்டில் கொண்டுபோய் சேர்த்தேன். இதிலென்ன மாராஜ் தப்பு ?'' என்று சாயபு மெல்லச் சிரித்தார்.

''நான்தான் சொல்லவில்லையே ! புண்ணியந்தான். நல்ல காரியந்தான். நீங்களும் ரொம்ப நல்ல மனிதர்தாம். ஆனால் உங்கள் ஆப்த நண்பர்....அந்த மலைக்கள்ளனைப்பற்றிச் சில விஷயங்கள் அறிய வேண்டும். அறிந்தால் அநேக கேசுகள் வெளியாகும்'' என்று வெகு விநயமாக ஆறுமுகம் வேண்டினார்.

''அவன் என்னமோ இந்தப் பெண்ணைக் கொண்டுபோய் வீட்டில் சேர்த்துவிட வேணுமென்று என்னைக் கேட்டுக் கொண்டான். புண்ணியத்துக்கு நான் ஒத்துக்கொண்டேன். அதனாலே அந்த மலைக்கள்ளன் எனக்கு ஆப்த நண்பர் என்று யார் சொன்னது? இதென்ன சாப், வம்பாயிருக்குது.''

''யார் சொன்னதா! யாரும் சொல்லாமலேயே விளங்குகிறது. யார் சொன்னது என்பதற்கும் சாட்சி வேண்டுமானால் அதையும் சொல்லிவிடுகிறேன்....சொல்லட்டுமா ?........ அந்தப் பூங்கோதை அம்மாளே சொன்னது.''



''என்னா, யென்னா! பூங்கோதையம்மாளா ? சொக்கேசர் மகளா ? அந்த அம்மாள் என்ன சொன்னாங்கோ ?''

''நான் மிகவும் கேட்டுக்கொண்டதால் சொக்கேசர் பூங்கோதையிடம் நான் பேச ஏற்பாடு செய்தார். அந்தப் பெண் சொன்னது என்னவென்றால், 'மாந்தோப்பு அப்துர் ரஹீம் சாயபு என்னுடைய ஆப்த நண்பர். விஜயபுரியில் எனக்காக என்னுடைய காரியங்களையெல்லாம் கவனித்துக்கொள்ளக் கூடியவர் அவர்தாம். அவர் வந்து உன்னை வீட்டுக்கு அழைத்துப் போய்விடுவார். நீ சந்தேகிக்காமல் அவர் பின்னால் போக வேண்டும்' என்று மலைக்கள்ளனே சொன்னதாகப் பூங்கோதையம்மாள் சொன்னார்'' என்றார் சப் இன்ஸ்பெக்டர்.

''பலே ! பலே ! அப்படியா ?........அப்படியானால் மலைக் கள்ளனைப்பற்றிய விஷயங்களையெல்லாம் அந்த அம்மாளையே கேட்டுத் தெரிந்துகொள்ளலாமே! அந்த அம்மாள் தான் இரண்டு மூன்று நாள் மலைமேலே இருந்தாங்களே.''

''ஆஹா ! அதையும் கேட்டுவிட்டேன். மலைக்கள்ளனைப் பற்றித்தான் ஒன்றும் சொல்லவே முடியாதென்றும், சொல்லுவதில்லை என்று சத்தியம் செய்து கொடுத்திருப்பதாகவும் அந்தப் பெண் கண்டிப்பாகச் சொல்லிவிட்டது.''

''அரே அல்லாரே அல்லா ! அப்படியா ! அந்தப் பொண்ணு ரொம்ப தைரியசாலியாட்டம் தெரியுது சாப்........சரி, நம்பளை என்ன செய்யச் சொல்லுகிறீர்கள் மகராஜ் ?''

''அந்த மலைக்கள்ளனைப்பற்றித் தங்களுக்குத் தெரிந்த விஷயங்களைச் சொல்ல வேண்டும். அநேக கேசுகளுக்கு உதவும். உங்களை நான் ஒன்றும் சங்கடத்தில் சிக்கவிடமாட்டேன். சாட்சியாகக்கூட வேண்டாம். இந்தக் கேசுகளைக் கண்டுபிடித்தால் சர்க்காரில் சுமார் லட்சம் ரூபாய்க்குமேல் இனாம் தருவார்கள். அதில் பாதி....இல்லாவிட்டால் முழுதும் உங்களுக்கே கிடைக்கச் செய்கிறேன். எனக்கும் உத்தியோகத்தில் நல்ல பேர் வந்தால் போதும்.......''

"தூ தூ ! ஹராம் என்னா பேச்சையா பேசுறீங்கோ ? நான் யார் தெரியுமா ? முசல்மான். மலைக்கள்ளன் நமக்கு ரொம்பவும் வேண்டிய சிநேகிதன் என்று கண்டுபிடித்துவிட்டதாகச் சொன்னீங்கோ ! அரே, ஐயா ! ஓர் இஸ்லாம்காரன் உசிர் போனாலும் தன்னுடைய ஆஷ்னா....சிநேகிதனைக் காட்டிக் கொடுத்துக் காசு வாங்குவானென்று எண்ணிவிட்டீங்களா ?.... சீச்சீ ! உங்களுடைய இனாம் கெட்டுது ஹராம், அந்தப் பேச்சை நம்பகிட்டே இன்னொரு தடவை சொல்லிப் போடாதீங்க சாப், உஷார்" என்று சாயபு சீறி விழுந்தார்.

"பணத்துக்காக மட்டும் அல்ல, சாயபு. உங்களுடைய நன்மைக்காகவுந்தான் சொன்னேன். சாயபுவாள், கோபிக்க வேண்டாம்........சரி, இல்லாவிட்டால்; அப்புறம்........என் கடமை...."

"என்னாய்யா ! மிரட்டுகிறீர்கள் ? இல்லாவிட்டால் என்ன செய்வீர்கள்? ஹஹ்ஹா ! போலீஸ் சார், ஹம் நஹின் டரேங்கே சாப். இந்தப் பூச்சாண்டியெல்லாம் நம்பகிட்டே நடக்காது. செய்யறதைச் செய்யுங்கோ. ஏன்....உங்கள் பெரிய இன்ஸ்பெக்டர் இந்த ஊரிலுள்ள சில பெரிய மனிதர்களோடு கலந்து பேசி. பட்டாளத்தின் உதவியைக்கொண்டு, அந்த மலைக்கள்ளனுடைய ரகசியமான இடங்களையெல்லாம் உடைத்தெறியப் போவதாகச் சொல்லிக்கொள்ளுகிறார்களே ! வைசா....அப்படிச் செய்யறதுதானே ? அவனைக் காட்டிக் கொடுக்கச் சொல்லி என்கிட்டே வருவானேன் ?"

"ஆ ! உங்களுக்கு யார் சொன்னது ? பட்டாளத்தைக் கொண்டு...."

"ஐயோ ஆறுமுகம் சாப், உங்கள் இன்ஸ்பெக்டர் யோக்கியதையும், அவருக்கு ரொம்ப சினேகமாயிருக்கிற சில பெரிய மனுஷர்களுடைய நடத்தையும் எனக்கு நன்றாகத் தெரியும் ; இடம், நேரம்; கணக்கு முதலான விவரங்களுடனும் இந்த ஊர் போலீசாருடைய அயோக்யத்தனத்தையும் நாம் ருசுப்படுத்துவோம், சாப். இந்த ஊரில் நித்தம் நித்தம் உங்களோடு



உறவாக இருக்கிற திருட்டுப் பெரிய மனிதர்கள் செய்கிற குற்றங்கள் ஒன்றையாவது கண்டுபிடிக்காத போலீஸ்காரர்கள் மலைக்கள்ளனுடைய ரகசியங்களைச் சொல்ல எனக்கும் லஞ்சம் கொடுக்க வந்துவிட்டீர்கள் ! வெட்கக்கேடு ! ....என்ன சாப், முழிக்கிறீங்கோ....என்ன சிரிக்கிறீங்கோ....மற்றதெல்லாம் கிடக்கட்டும். சொக்கேசர் மகளைத் தூக்கிக்கொண்டு போனது யாரென்று கண்டுபிடித்தீர்களா ? அரே, ஓ ஜாங்தே.... அது போகட்டும், கேசவ சாவ்கார் வீட்டில் கொள்ளை போய்விட்டதாமே ; அதைக் கண்டுபிடித்தீர்களா ? இந்தச் சின்ன விஷயங்களைக்கூடக் கண்டுபிடிக்கமுடியாத நீங்கள், மலைக்கள்ளனைப் பிடிக்க........நான் அவனுக்குத் துரோகம் பண்ண வேண்டுமென்று சொல்ல வந்துவிட்டீர். ஆம், அவன் எனக்கு ஆப்த நண்பன்தான். அவனைக் காட்டிக்கொடுக்க முடியாது. செய்வதைச் செய்து கொள்ளுங்கள்" என்று வெகு ஆத்திரத்தோடு பேசினார் சாயபு.

ஆறுமுகம் தலைகுனிந்து கேட்டுக்கொண்டே இருந்தார். சாயபுவின் கொதிப்பு கொஞ்சம் அடங்கின பிறகு, ஆறுமுகம், "சாயபுவாள், நீங்கள் சொல்லுவதெல்லாம் சரிதான். நீங்கள் குறிப்பிடுகின்ற பெரிய மனிதர்களையும், பூங்கோதையைத் திருடினவர்களையும், சாவ்கார் வீட்டில் கொள்ளையடித்தவர்களையும், மற்ற போலீஸ் உத்தியோகஸ்தர்கள் அறியாவிட்டாலும் நான் அறிவேன்........"

"அதுவும் எனக்குத் தெரியும் மாராஜ், ஆறுமுகம் சார். நீங்கள் உங்கள் பெரிய அதிகாரிகளைப் போல அல்ல. அவர்களைப் போலத் திருட்டுப் பயல்களோடும்......." என்று சாயபு குறுக்கே பேசினார்.

"வேண்டாம், வேண்டாம், சாயபுவாள். மற்றவர்களைப் பற்றி நாம் பேச வேண்டாம். என்னைப்பற்றி மட்டும் எது வேண்டுமானாலும் பேசுங்கள்."

"நீங்கள் ரொம்ப யோக்கியர்தாம். உங்களுக்கு ரொம்ப சாமர்த்தியமும் உண்டு."

''சந்தோஷம். சாயபுவாள், நான் சொல்கிறதை முழுதும் கேளுங்கள். மலைக்கள்ளனுடைய இடத்தைப் பட்டாளத்தைக் கொண்டு தாக்க வேண்டுமென்ற யோசனையை நான்தான் தடுத்துவிட்டேன். அப்படிச் செய்தால், மலைக்கள்ளன் அகப்பட்டாலும் இன்னும் பல உண்மையான குற்றவாளிகள் சிக்கமாட்டார்கள். நீங்கள் எண்ணிக்கொண்டிருக்கிற பேர் வழிகள்மேல் எனக்கும் கண் உண்டு. இதுவரையிலும் இந்த வட்டத்தில் நடந்திருக்கும் அநேக கொலைகளும் கொள்ளைகளும் ஒன்றோடொன்று சம்பந்தப்பட்டுச் சிக்கலாகக் கிடக்கின்றன. பூங்கோதையைக் கொண்டுபோனவர்களை இன்றைக்கே வேணுமானாலும் நான் பிடித்துவிடுவேன். ஆனால், அதே ஆசாமிகள் சம்பந்தப்பட்டிருப்பதாக நிச்சயம் எனக்குத் தெரி கின்ற இன்னும் பெரிய குற்றங்களுக்காக அவர்களைப் பிடிக்க வேண்டுமென்று காத்துக்கொண்டிருக்கிறேன். அதற்கு மலைக் கள்ளனுடைய விஷயங்கள் சிலவற்றை அறிந்தால்தான் முடியும். நீங்கள் கொஞ்சம் ஒத்தாசை செய்தால்........''

''சப் இன்ஸ்பெக்டர் சாப், நீங்கள் சொன்னதெல்லாம் சரிதான். நீங்கள் வெகு சாமர்த்தியமாகத்தான் வேலை செய் கிறதாகத் தெரிகிறது. என்ன இருந்தாலும், நம்ம சினேகித னுடைய ரகசியங்களைப் போலீசாருக்கு உளவு சொல்கிற படா படா பாவத்தை நாம்பள் செய்ய முடியாது. மன்னிச்சிக் கோங்கோ, மாராஜ்....சரி, எனக்குத் தொழுகை நேரம் ஆச்சு. தாங்கள் போய் வாங்கோ. நான் மலைக்கள்ளனுக்குச் சினேகி தனாக இருப்பதற்கும், அந்த அம்மாளை வீட்டுக்குக் கூட்டிவந்து விட்டதற்கும், எனக்குத் தண்டனை கொடுக்கப் பிரியமானால் செய்யுங்கள்....ஆனால், ஒரு முசல்மான் தன்னை நம்பியிருக்கிற ஒரு நண்பனுக்குத் துரோகம் செய்ய ஒத்துக்கொள்ளமாட்டான் என்பதை அல்லா அறியச் சொல்லிவிடுகிறேன். அந்தப் பேச்சி இனி என்கிட்ட வேண்டாம். டீக், அச்சா, சலாம், போய் வாங்கோ.''

கழுத்தைப் பிடித்துத் தள்ளுவதைப் போல சாயபு 'போய் வாங்கோ' என்று சொன்ன பிற்பாடு, இனி, அதைப்பற்றிப்



பேசக்கூடாதென்று ஸ்ரீ ஆறுமுகம் எழுந்தார். சாயபு படிக்கட்டு வரை வந்து வழியனுப்பினார். சப் இன்ஸ்பெக்டர் ஐந்தாறு படி இறங்கின பிறகு, ''ஜீ சாப்; சப் இன்ஸ்பெக்டர் ஐயா! ஜர்ரா.... ஆயியே....கொஞ்சம் வாங்கோ. ஒரு பேச்சு'' என்று சாயபு கூப்பிட்டார். ஆறுமுகம் திடுக்கிட்டுத் திரும்பி மீண்டும் மேலே வந்து; சாயபு என்ன சொல்லப் போகிறாரோ என்று ஆவலோடு நின்றார். சாயுபு கொஞ்சம் யோசனை செய்து, ''ஐயா ஆறுமுகம் சார்; தாங்கள் மற்ற உத்தியோகஸ்தர்களைக் காட்டிலும் நல்லவராகவும் நியாயக்காரராகவும் இருக்கிறீர்கள். ஆப்........தாங்கள் வருத்தத்தோடு போவது எனக்கு சந்தோஷம் இல்லை. நமக்குள் ஒரு ஒப்பந்தத்தோடு செய்துகொள்வோம். ஆனால்.... '' என்று சாயபு சொல்லுவதற்குள் ஆறுமுகம்; ''சொல்லுங்கள், என்ன ஒப்பந்தம்? செய்துகொள்வோம்.... பரவாயில்லை, சொல்லுங்கள்'' என்று அவசரப்பட்டார்.

''நீங்கள் உங்கள் விசாரிப்புகளை இப்படியே நடத்திக் கொண்டு போய்க் குற்றவாளிகளைப் பிடிக்க வேண்டிய சாட்சி யங்களைச் சேகரம் செய்யுங்கள். நான் கொஞ்சம் அவசர வேலையாகப் பட்டணம் முதலான இடங்களுக்குப் போய்விட்டு, ஒரு வாரத்தில் வந்துவிடுகிறேன். என்னுடைய சிநேகர் மலைக் கள்ளனுக்குத் துரோகம் இல்லாமல் உங்களுக்குச் சொல்லக் கூடிய விஷயங்களைச் சொல்லி, இந்தக் குற்றவாளிகளைத் தண்டிக்க அவசியமான எல்லா ஒத்தாசைகளையும் நானும் உங்களுக்குச் செய்கிறேன். ஆனால் ஒரே ஒரு நிபந்தனை. தாங்கள் உறுதி சொன்னால்....''

''என்ன நிபந்தனை? சொல்லுங்கள். நான் உங்களுடைய ஒத்தாசையை நாடித்தான் இன்று வந்தேன். சொல்லுங்கள். என்ன நிபந்தனை?'' என்று ஸ்ரீ ஆறுமுகம் அவசரப்பட்டார்.

''நம்முடைய சிநேகர் மலைக்கள்ளனுக்குத் தாங்கள் கொஞ்சம் தாட்சண்யம் காட்டவேண்டும்'' என்றார் சாயபு.

''ஆ! பெரிய நிபந்தனையாக இருக்கிறதே! குருவியை விட்டுவிட்டுக் கூண்டை எடுத்துக்கொள்ளச் சொல்கிறீர்களே!

என்னுடைய கௌரவத்துக்கும் கடமைகளுக்கும் பாதகம் இல்லா விட்டால் தாட்சண்யம் காட்டத் தடையில்லை. ஆனால், என்னுடைய மனச்சாட்சிக்குச் சரியாக நான் நடந்துகொள்ள வேண்டாமா ?....அநேக கொலைகளிலும் கொள்ளைகளிலும் சம்பந்தப்பட்ட..........''

"சப் இன்ஸ்பெக்டர் சாப், உங்கள் உத்தியோகத்துக்கும் கடமைகளுக்கும் கெடுதலில்லாமல் உங்களால் முடிந்த தாட்சண்யம் காட்டினால் போதும். பெரிய தாட்சண்யத்துக்குப் பெரிய உத்தியோகஸ்தர்களைப் பார்த்துக்கொள்ளுகிறேன்.''

"சரி, அப்படியானால் உறுதி கொடுக்கிறேன்.''

"ரொம்ப ரொம்ப சலாம். நான் பட்டணம் போய் வந்த பின்னால், தங்களுக்கு நானே தெரியப்படுத்துகிறேன். சலாம், சலாம்.''

பற்பல யோசனைகள் பண்ணிக்கொண்டே ஸ்ரீ ஆறுமுகம் மாந்தோப்பை விட்டுத் தம் வீட்டுக்கு நடந்தார். வழியில் சொக்கேசர் வீடு. பூங்கோதை காணாமற்போன நாள் முதல், சப் இன்ஸ்பெக்டர் சொக்கேசர் வீட்டுக்கு அடிக்கடி போவதுண்டு. வழக்கம் போல் சொக்கேசரைப் பார்த்துவிட்டுப் போகலாமென்று நுழைந்தார்.

பூங்கோதை வீடு வந்து சேர்ந்துவிட்ட சந்தோஷத்தால் காமாக்ஷியம்மாள் வெகு சீக்கிரம் குணமடைந்து, பழையபடியே வீட்டு வேலைகளையெல்லாம் தாமே கவனித்துக்கொள்ளக் கூடிய நிலைமையிலிருந்தார். சப் இன்ஸ்பெக்டர் வந்தபோது கூடத்தின் படுக்கையின் மேல் உட்கார்ந்துகொண்டிருந்த காமாக்ஷியம்மாள், அவரை வழக்கம்போல் வெகு மரியாதையுடன் வரவேற்று, குடும்ப விஷயங்களைப்பற்றியும், தமக்கு விஷங் கொடுத்துவிட்டுப் பூங்கோதையைத் திருடிக்கொண்டு போனவர்களைப் பிடித்துவிட்டார்களா என்பதைப்பற்றியும் இருவரும் பேசிக்கொண்டிருந்தார்கள். சப் இன்ஸ்பெக்டர், "சொக்கேசர் தூங்கிவிட்டாரா ?'' என்றார்.



திடீரென்று, மறந்து போனதை நினைத்துக்கொண்டவர் போலத் திடுக்கிட்டுக் காமாக்ஷியம்மாள், "அதைத்தான் உங்களிடம் சொல்ல வேணுமென்றே எண்ணிக்கொண்டிருந்தேன் ; மறந்து போனேன். தம்பி சொக்கேசன், திங்கட்கிழமை ராத்திரி ஒரு மணி வண்டிக்கு அடுத்த டேசன் அரியபுரத்துக்கு ஒரு அவசரமாய்ப் போனான். மறுநாள் பத்து மணிக்குள் வந்துவிடுவதாகக் கண்டிப்பாகச் சொல்லி, ரயிலுக்கு வண்டியைக் கொண்டுவரச் சொல்லிவிட்டுப் போனவன் வரக்காணோம். வண்டி, ரயிலுக்குப் போய்ச் சும்மா திரும்பி வந்துவிட்டது. தம்பி, வீட்டுக்குச் சொல்லாமல் ஒரு ராத்திரிகூட வெளியில் தங்குகிற வழக்கமில்லை. அப்படித் தங்கிவிட நேரிட்டால் கடுதாசியோ, தந்தியோ, இல்லாவிட்டால் ஆளோ அனுப்பாமல் இருக்க மாட்டான்'' என்று கலங்கினார்கள்.

கவனமாகக் கேட்டுக்கொண்டிருந்த ஆறுமுகம், "அவர் ஊருக்குப் போனது என்றைக்கு ?'' என்றார்.

"திங்கட்கிழமை ராத்திரி'' என்றார் காமாக்ஷியம்மாள்.

"அப்படியா! ஐயோ! நாலு நாளாச்சே. என்னிடத்தில் இதுவரையிலும் ஏன் சொல்லவில்லை ? வீட்டுக்குச் சமாச்சாரம் அனுப்பாமலிருக்கக் காரணம் ஏதாவது உண்டா ? யார்மேலாவது வருத்தமா ?'' என்றார் ஆறுமுகம்.

"ஐயோ ! எங்கப்பன் சொக்கேசன் அப்படிப்பட்டவன் அல்லவே. வீட்டில் அவன் வருத்தப்படக்கூடியது ஒன்றும் இல்லையே. ஏதாவது வருத்தமான காரியத்தை யாராவது செய்துவிட்டாலும் இவன் கோவிக்கக்கூடியவன் அல்லவே. தரும ராஜாவாச்சே. கோவம் ஒண்ணுமிருக்காதுங்கோ.......... ஆனால் ஊருக்குப் போகிறதுக்கு முன்னாலே என்னவோ புது மாதிரியா கொஞ்சம் கவலையாகத்தான் இருந்தான். பூங்கோதை வீடு வந்து சேர்ந்த பிறகு சந்தோஷம் பொங்கி வழிந்துகொண்டிருந்தவன், அன்றைக்குமட்டும் என்னமோ வாட்டமாயிருந்தான். அரியபுரத்தில் கொடுக்கல் வாங்கல்களில் ஏதாவது சங்கட

மிருக்குமோ என்று நினைச்சு, நான்கூடக் கேக்காமலிருந்து விட்டேன். என்னாங்கோ, ஒன்றும் தெரியலையே.''

''சரி, அன்றைக்கு அவருக்கு ரயிலடிக்கு வண்டி ஓட்டிக் கொண்டு போனது யார் ?''

''நம்ம வண்டிக்காரன் போகலிங்கோ. நம்ம வண்டி ரெண்டும் ஒரு தெரிஞ்ச மனுசருடைய கலியாண வேலையாகப் பள்ளக் காட்டுக்குப் போயிருந்தது. வாடகை வண்டி வைத்துக்கொண்டு ரயிலுக்குத் தம்பி போனானுங்க.''

''அப்படியா ! ஆமாம். இதுவரையிலும் அரியபுரத்துக்கு ஆள் அனுப்பி; அவர் அங்கே தங்கக்கூடிய இடங்களில் விசாரிக்க வில்லையா?''

''இன்னைக்குத்தான் நினைப்பு வந்து கோவிந்தனை அனுப்பியிருக்கிறேன். போனவன் இன்னும் வரவில்லை.''

''சரி, உடனே கவனிக்கவேண்டிய காரியம். நான் விசாரிக் கிறேன். நீங்கள் கவலைப்பட வேண்டாம்...........பூங்கோதை சௌக்கியமா ?''

''ஆஹா, என் ராஜாத்தி, அவளுக்கென்ன குறைச்சல் ? உங்கள் புண்ணியத்தில் ரொம்ப சௌக்கியமாகவும் சந்தோஷ மாகவும் இருச்கிறாள். ஸ்ரீதேவி வந்து சேர்ந்தாப் போல வீடு சந்தோஷமாயிருக்குதுங்கோ. அவளும் வள்ளியம்மாளும் தூங்கி விட்டார்கள்........... அப்புறம் நீங்கள் விசாரிக்கச் சொன்னதைப் பத்தி....நானும் என்னால் ஆனமட்டும் பூங்கோதையைக் கேட்டுப் பார்த்துட்டேன். அந்த மலையிலிருக்கிற மனுஷரைப் பற்றிப் பேச முடியாதாம்... அப்படிச் சத்தியம் பண்ணிக் கொடுத்தாளாம். உசுரு போனாலும் சத்தியத்தை மீற மாட்டாளாம்........அவள் புடிச்சா ஒரே புடிதானுங்கோ.''

''சரி, பூங்கோதையை இனிக் கேட்க வேண்டாம். அவள் சொல்லாமலேயே நான் அந்த மலைக்கள்ளனைப்பற்றிய எல்லா ரகசியங்களையும் அறிய ஏற்பாடு செய்வேன்....நான்



போய் வருகிறேன். ரொம்ப நேரமாய்விட்டது. நீங்கள் படுத்துக் கொள்ளுங்கள்'' என்று ஸ்ரீ ஆறுமுகம் போய்விட்டார்.

''வீட்டுக்குப் போய் ஸ்ரீ ஆறுமுகம் தம் படுக்கையில் படுத்தார். ஆறு மாதமாக அவருக்கு ஓய்வு ஒழிச்சல் இல்லை. மலைக்கள்ளனுடைய மர்மங்களையும், அவன்மேல் சொல்லப் பட்ட குற்றங்களையும் கண்டுபிடிக்கவென்றே பிரத்தியேகமான 'ஸ்பெஷல் டியூட்டியில்', துப்பறியும் வேலையில் வெகு பாடுபட்டு வருகிறார்.

வீரராஜனுடைய பொய்யான பெரிய மனுஷத்தனத்தையும், அவனுடைய சகாக்களான குட்டிபட்டி ஜமீன்தார், கொள மங்கலம் ஜமீன்தார் முதலான பல பெரிய ஆசாமிகளுடைய நடத்தையையும்; காத்தவராயனுடைய தலைமையில் வெகு வலிமையும் சூதும் வாய்ந்த ஒரு கள்ளர் கூட்டம் வீரராஜ னுடைய கையில் இருப்பதையும், மலைக்கள்ளன் சம்பந்தப் பட்ட அநேக கொலைகளிலும், கொள்ளைகளிலும் வீரராஜனும் காத்தவராயன் கூட்டத்தாரும் சம்பந்தப்பட்டிருப்பதையும் அறிந்துகொண்டார். ஆனால், 'இன்ன குற்றத்துக்கு இன்னவன்தான் பொறுப்பாளி' என்று கண்டிப்பான் சாட்சியங் கள் இன்னும் தெளிவாகக் கிடைக்காமல் அதற்காக இராப் பகலாக மிகவும் உண்மையாக உழைத்து வருகிறார். வேலை யிலும் மிகக் கெட்டிக்காரர்.

பெரிய இன்ஸ்பெக்டர் ஸ்ரீ சுந்தரத்துக்கு மலைக்கள்ள னுடைய இடத்தைப் பட்டாளத்தைக் கொண்டு தாக்கினால் தான் அநேக உண்மைகள் வெளிப்படும் என்பது எண்ணம். ஆனால் ஸ்ரீ ஆறுமுகத்துக்கு அப்படிச் செய்வதனால் எல்லாம் கெட்டுப்போகும் என்றும், வீரராஜன் கூட்டத்தார் செய்திருக் கிற பல குற்றங்களுக்கு வேண்டிய சாட்சியங்கள் மலைக் கள்ளனுடைய கூட்டத்தில்தான் கிடைக்கும் என்ற நம்பிக்கை யால் மலைக்கள்ளனுடைய இருப்பிடத்தைத் தாக்கக்கூடாது என்றும் எண்ணம். சாவ்கார் வீட்டில் வீரராஜனும் காத்தவ ராயனும் சேர்ந்து செய்த சதியை ஆறுமுகம் அறிவார். ஆனால்,

காத்தவராயன், சாவ்கார்தண்டவாளப்பெட்டியிலிருந்து மூட்டை கட்டிக்கொண்டு வந்து, தன்னுடைய ஆள் என்று எண்ணிக் கொண்டு கொடுத்த நகை மூட்டை போன இடம் தெரிய வில்லை. சொக்கேசர் நாலு நாளாக இருக்கும் இடம் தெரிய வில்லை. சொக்கேசருக்கு வீரராஜனுடைய கூட்டத்தார் ஏதாவது தீங்கு செய்வார்கள் என்பதை முன்னாலேயே ஆறுமுகம் அறிந்திருந்தார்.

இந்த எண்ணங்களால் பற்பலவாறாகத் தம்முடைய செய் முறைகளைப்பற்றிச் சிந்தித்துக்கொண்டே ஆறுமுகம் தூங்கி விட்டார். கொஞ்ச நேரத்துக்கெல்லாம் யாரோ வீதிக் கதவைத் தட்டியது கேட்டு எழுந்தார். கதவைத் திறந்துவிடுவதற்குமுன் தம்முடைய வழக்கம் போல்....அதற்கென்று செய்யப் பட்டிருந்த....துவாரத்தில் பார்த்தார். இரண்டு போலீஸ் ஜவான்களும் பெரிய இன்ஸ்பெக்டர் ஸ்ரீ சுந்தரம் அவர்களும் வாசலில் நின்றது, அங்கிருந்த வெளிச்சத்தில் தெரிந்தது. கதவைத் திறந்து வெளியில் வந்தார். வீதியில் ஒரு மோட்டார் வண்டி இன்னும் எஞ்சினுடைய ஓசையோடு நின்று கொண்டிருந்தது.

"ஒன்றுமில்லை. மிஸ்டர் ஆறுமுகம், நான் இப்போது தான் செஷன்ஸுக்குப் போய்விட்டு வருகிறேன். இன்னும் வீட்டுக்குக்கூடப் போகவில்லை. வழியில் ஸ்டேஷனுக்குள் நுழைந்தேன். தபால்களைப் பார்த்தேன். அதில் உங்கள் 'ஸ்பெஷல் ட்யூட்டி'யிற் சேர்ந்த விஷயம் ஒன்று இருக்கிறது" என்று சொல்லி முடிப்பதற்குள் ஆறுமுகம், "வாருங்கள் உள்ளே வாருங்கள், நிற்கிறீர்களே" என்று பெரிய இன்ஸ்பெக்டரைக் கூட்டிக்கொண்டு போய் ஒரு நாற்காலியில் உட்காரச் செய்து, தம் மேஜையின் மேலிருந்த விளக்கைத் தூண்டிவிட்டுத் தாமும் ஒரு நாற்காலியில் உட்கார்ந்தார்.

பெரிய இன்ஸ்பெக்டர் தம் கையில் வைத்திருந்த ஒரு கடிதத்தை சப் இன்ஸ்பெக்டரிடம் நீட்டி, "சொக்கேசர் வீட்டில் ஏதாவது விசேஷம் உண்டா? அவருடைய பெண் வந்து சேர்ந்து விட்ட பிற்பாடும் அவருக்கு என்ன கவலை ?........பாருங்கள், கடிதத்தைப் பாருங்கள்," என்றார்.



ஆறுமுகம் வெகு பரபரப்போடு கடிதத்தை விரித்துப் படித்தார். அதில் அடியில் வருமாறு எழுதப்பட்டிருந்தது :........

**விஜயபுரி வட்டம் போலீஸ் இன்ஸ்பெக்டர் ஸ்ரீ சுந்தரம் அவர்களுடைய சமூகத்துக்கு விஜயபுரி அருங்குடி சொக்கேசன் அன்புடன் எழுதிக்கொண்டது:**

சில மனக் கவலைகளின் காரணமாக நான் மனோ சாந்திக்காக இரண்டு மூன்று வாரத்துக்கு க்ஷேத்திர யாத்திரை செய்ய வேணுமென்று, வேலையாக வந்த இடத்தில் இங்கேயே திடீரென்று தீர்மானித்தேன். என் வீட்டுக்கும் சொல்லி யனுப்பாமல் போகிறேன். நான் திரும்பி வருகிற வரையிலும் என் வீட்டை வழக்கம்போல் பாதுகாப்புடன் என்னுடைய அருமைக் குழந்தை பூங்கோதைக்கு மறுபடியும் ஏதாவது அபாயம் வந்துவிடாதபடி போலீஸ் பந்தோபஸ்து செய்து பார்த்துக்கொள்ள வேணுமென்று தங்களை மிகவும் வேண்டிக்கொள்கிறேன்.

திருக்கோணம் ஜங்ஷன் — தங்கள் அன்புள்ள,

அ. **சொக்கேசன்.**

"என்ன ? இது சொக்கேசருடைய கடிதந்தானா ? கையெழுத்து அவருடையதுதானா பாருங்கள். எனக்கு அவருடைய எழுத்து தெரியாது. உங்களுக்கு நன்றாகத் தெரியுமே!" என்றார் பெரிய இன்ஸ்பெக்டர்.

"ஆம். இது அவருடைய கடிதந்தான். எழுத்து அவர் எழுத்துதான். கையொப்பம் அவருடையதுதான். ஆனால் கொஞ்சம் கை நடுக்கத்தோடு எழுதியிருப்பதாகத் தெரிகிறது. வேறு யாரோ கட்டாயப்படுத்தி எழுதச் செய்திருப்பார்களோ என்று சந்தேகிக்கிறேன்" என்றார் சப் இன்ஸ்பெக்டர்.

"இதுவும் அந்த மலைக்கள்ளனுடைய வேலையாக இருக்குமோ ?" என்றார் பெரிய இன்ஸ்பெக்டர்.

"இருக்கலாம். ஆனால் இந்த மலைக்கள்ளனைக் காட்டிலும் பெரிய கொலைபாதகர்கள் இந்த ஊரில் பக்கத்திலேயே பல பேர்கள் இருக்கிறார்கள். முதலில் அவர்களைப் பிடித்தால்தான் அந்த மலைக்கள்ளனும் அகப்படுவான்'' என்றார் சப்இன்ஸ்பெக்டர்.

"என்ன, உங்களுக்கு ஏதாவது புதுப் புலன் கிடைத்ததா?''

"கொஞ்சம் கிடைத்தது. ஆனால், இன்னும் முழுதும் கிடைக்கவில்லை'' என்று மேலதிகாரியோடு பேசுகிற முறையில் ஆறுமுகம் பதில் சொன்னார்.

பெரிய இன்ஸ்பெக்டருக்கும் சப் இன்ஸ்பெக்டருக்கும் அநேக விஷயங்களில் அபிப்பிராய பேதம். ஆகையினால், தான் அறிந்த எல்லாவற்றையும் ஸ்ரீ ஆறுமுகம் ஸ்ரீ சுந்தரத்திடம் சொல்லிவிடுவதில்லை.

கடைசியாக, "என்னாற் கூடியமட்டும் பாடுபட்டுத்தான் வருகிறேன். வெகு சீக்கிரத்தில் அந்த மலைக்கள்ளனையும் மற்றுமுள்ள எல்லா அயோக்கியர்களையும் - அவர்கள் யாராயிருந்தாலும் சரி—பிடித்துவிடுவேன் என்றே எண்ணுகிறேன்'' என்று சப் இன்ஸ்பெக்டர் மேஜையின்மீது தட்டிச் சொன்னார். "ரொம்ப சந்தோஷம். நமக்கும் டிபார்ட்மெண்டுக்கும் கெட்ட பேர் வராமல் பார்த்துக்கொள்ள வேணும். சொக்கேசர் வீட்டுக்கு வேண்டிய ஜவான்களையும் அவசியமானால் அதற்காக ஒரு ஹெட்கான்ஸ்டெபிளையும் ஸ்பெஷல் டூட்டியில் போடுங்கள். நான் வருகிறேன்'' என்று இன்ஸ்பெக்டர் போய் விட்டார்.

## அத்தியாயம் 12

பெரிய இன்ஸ்பெக்டருடைய உத்தரவுப் பிரகாரம் சொக்கேசருடைய வீட்டிற்கு அதிகமான போலீஸ் காவல் போடப் பட்டது. அரியபுரத்துக்கு அனுப்பப்பட்ட ஆள், 'சொக்கேசர் அந்த ஊருக்குப் போகவே இல்லை' என்ற சமாசாரத்துடன் வந்தான். காமாக்ஷியம்மாள், தன் தம்பி தெய்வ பக்தியிலும் நம்பிக்கையுள்ளவரானதால் (ஆறுமுகம் சொன்னபடி) பெரிய இன்ஸ்பெக்டருக்கு எழுதியிருக்கிற பிரகாரம் தீர்த்த யாத்திரைக்குப் போயிருப்பாரென்று நிம்மதியாக இருந்தாள்.

ஸ்ரீ ஆறுமுகம் அந்தக் கடிதத்தில் ஏதோ மோசம் இருக்கிறதென்று தீர்மானித்தார்.

பூங்கோதை, அந்தக் கடிதம் தன்னுடைய தகப்பனாருடைய வழக்கத்துக்கும் குணத்துக்கும் கொஞ்சங்கூடப் பொருந்தாமல் இருப்பதை எண்ணியெண்ணி ஏங்கினாள். 'சில மனக்கவலையினால் என்று எழுதியிருக்கிறதே, என்ன மனக்கவலை? கவலையிருந்தால் என்னைப்பற்றித்தான் இருக்க வேணும். ஏதானாலும் என்னிடம் சொல்லாமல் போக மாட்டாரே! என்னிடங்கூடச் சொல்லக்கூடாத மனக்கவலை வேறு ஏதேனும் இருக்குமோ?' என்று அடிக்கடி நினைப்பாள்.

சொக்கேசர் ஊருக்குப் போவதாகப் போய் ஏழு நாள்கள் சென்றுவிட்டன. எந்த க்ஷேத்திரத்தில் இருக்கிறார் என்பதும் தெரியவில்லை. ஆதியிலிருந்து ஸ்ரீ ஆறுமுகத்துக்கு இது வீரராஜனுடைய வேலையாகத்தான் இருக்குமென்று நிச்சயம். வீரராஜன் கூட்டத்தாருடைய நடமாட்டத்தையும், அவனுடைய வீடு, தோட்டம், பங்களா, ஜானகி வீடு முதலானவற்றையும் வெகு ஜாக்கிரதையாகக் கவனிக்கும்படி சப் இன்ஸ்பெக்டர் தக்க ஏற்பாடுகளைச் செய்திருந்தார். ஆனால், மேற்சொன்ன எந்த இடத்திலும் சொக்கேசரைப்பற்றிய துப்பு எதுவும் கிடைக்க

வில்லை. அவசரப்பட்டு; அவர்கள்மேல் தாம் சந்தேகப் படுவதைக் காட்டிவிட்டால் பரம சண்டாளர்களாகிய அவர்கள் சொக்கேசருக்கு இன்னும் தீமையே செய்வார்கள் என்று பயந்தார். காமாக்ஷியம்மாளுக்கும் பூங்கோதைக்கும் தைரிய முண்டாக்கவே ஸ்ரீ ஆறுமுகம், சொக்கேசர் யாத்திரை போய் இருப்பதாகவே தானும் நம்புவதாகச் சொல்லிக்கொண்டு வந்தார்.

சிறுவயதிலேயே தாயை இழந்து, தந்தையை விட்டு எந்த நாளும் பிரிந்தறியாத குழந்தை மனமுடைய பூங்கோதை, தந்தையைக் காணாததாலும், அவர் யாத்திரை போகவேண்டிய மனக்கவலைகள் தன்னைப்பற்றிய விசாரங்களாக இருக்குமோ என்று தான் சந்தேகித்தாலும் மிகவும் மனம் தத்தளித்துக் கொண்டிருந்தாள். படிப்பு, பாட்டு; சிரிப்பு, சிங்காரம்; வேடிக்கை, விளையாட்டு; கெலிப்பு, கேலி; ஓட்டம், ஆட்டம்; உல்லாசம், சல்லாபம் எல்லாம் வீட்டில் குறைந்துவிட்டன. காமாக்ஷியம்மாள் எவ்வளவு தேற்றினாலும் பூங்கோதை வாடியே இருந்தாள். மனசுக்குள் காமாக்ஷியம்மாளுக்கும் கலக்கந்தான்........

சொக்கேசர் ஊருக்குப் போனதாகச் சொல்லப்பட்ட தினத்துக்கு எட்டாவது நாள் சப் இன்ஸ்பெக்டர் ஸ்ரீ ஆறுமுகத்துக்குக் கொஞ்சம் துப்புக் கிடைத்தது. விஜயபுரிக்குச் சுமார் பதினைந்து மைலில் குட்டிபட்டி ஜமீன்தாருக்கு ஒரு பெரிய தோட்டமும் அதில் ஒரு பழைய மெத்தை வீடும் இருப்பதாகவும், அதன் எல்லையிலிருந்து அன்று விடியற்காலையில் சுமார் ஐந்து மணிக்கு வீரராஜன் வந்ததாகவும், அவன் வந்து விட்டபின் விடியும்வரை அங்கேயிருந்த ஸ்ரீ ஆறுமுகம் அனுப்பி யிருந்த துப்பாள்கள் தாங்கள் மறைந்திருந்த ஒரு புதருக்குள் கிடந்ததாக ஒரு தோல் பையைக் கொண்டுவந்து ஸ்ரீ ஆறுமுகத்திடம் கொடுத்தார்கள். அந்தப் பை காலியாக இருந்தது. அதை முன்பொரு தரம் எங்கேயோ பார்த்திருப் பதாக சப் இன்ஸ்பெக்டருக்கு நினைவு வந்தது. நினைத்து நினைத்துப் பார்த்தார். வெகு நேரம் ஞாபகப்படுத்திப் பார்த்தபின், அது சொக்கேசர் வீட்டைச் சேர்ந்ததாக இருக்கும்



என்று தீர்மானித்தார். இருட்டிப்போன பிறகு சொக்கேசர் வீட்டுக்குள் நுழைந்தார்.

வழக்கம் போல் காமாக்ஷியம்மாள் அவரை வரவேற்றார். கதவைத் தாழிடச் சொல்லிவிட்டுத் தோற்பையைக் காமாக்ஷி யம்மாளிடம் காட்டினார். "இந்தப் பையை நீங்கள் முன்னால் பார்த்திருக்கிறீர்களா?" என்று கேட்டார். காமாக்ஷியம்மாள் வெகு நேரம் பையைத் திருப்பித் திருப்பிப் பார்த்துவிட்டு, "இதெல்லாம் எனக்குத் தெரிகிறதில்லிங்கோ. எங்க ராஜாத்தி பூங்கோதைக்குத்தான் இந்த நாஜுக்குச் சாமான் மேலெல்லாம் ஆசை" என்று சொல்லி, காமாக்ஷியம்மாள் தனக்கு இந்த நாகரிக காலத்துச் சாமான்களைப்பற்றி ஒன்றும் தெரியாதிருப் பதற்கு வெட்கப்பட்டவர் போல வருத்தச் சிரிப்புச் சிரித்தாள்.

"பூங்கோதையம்மாள் எங்கே?" என்றார் சப் இன்ஸ் பெக்டர்.

"அதையேன் கேட்கிறீங்கோ; அதோ பாருங்கள் அவளுடைய அறையிலேயே உட்கார்ந்துகொண்டு ஐயாவைக் காணமென்று அழுதுகிட்டே இருக்கிறாள். சரியாகச் சாப்பிடு வதுகூட இல்லைங்கோ. பத்து நாள் கோயில் கொளத்துக்குப் போனால்கூடத் தம்பியை விட்டு இருக்கிறதுன்னா அவ்வளவு பாடு அவளுக்கு. நீங்கள் வேணுமானால் மேலே போய்ப் பாருங்கோ. நீங்க போனால் என்ன? போங்க........போங்கையா ........போய் என் ராஜாத்திக்குக் கொஞ்சம் தைரியம் சொல்லுங்கோ" என்றாள், அத்தையம்மாள்.

ஸ்ரீ ஆறுமுகம், தான் வந்த விஷயம் காமாக்ஷியம்மாளுக்குத் தெரியாமலேயே இருப்பது நல்லதுதான் என்று எண்ணிக் கொண்டே மேலே போனார். பூங்கோதையின் அறைக் கதவைத் தட்டினார். கண்ணீரைத் துடைத்துக்கொண்டு, "யாரது?" என்றாள், பூங்கோதை. வந்து கதவைத் திறந்தாள். ஸ்ரீ ஆறுமுகம் நிற்பதைக் கண்டு நாணமுற்று, கதவின் மறைவில் ஒதுங்கி நின்று, "நீங்களா! என்னங்க?" என்று பூங்கோதை

மரியாதையோடு கேட்டாள். அடிக்கடி தங்கள் வீட்டுக்கு வரக்கூடியவரானாலும் ஸ்ரீ ஆறுமுகத்தோடு பூங்கோதை அதிகம் பேசினதில்லை. அதிலும் தான் தனியாக இருக்கிற அறைக்கு அவர் வந்ததே கிடையாது.

''அம்மா, ஒன்றுக்கும் கவலைப்பட வேண்டாம். ஒரு அவசர விஷயம். உன்னைக் கேட்டால்தான் தெரியும் என்று வந்தேன். உள்ளே, வெளிச்சத்துக்கு வரலாமா?'' என்றார்.

''வாங்கோ, என்ன அவசரம்? என்னைக் கேட்க வேண்டியது என்ன?'' என்று சொல்லிக்கொண்டே விளக்கைத் தூண்டி விட்டு, ஒரு நாற்காலியை இழுத்துப் போட்டு, அவரை உட்காரச் சொன்னாள்.

ஸ்ரீ ஆறுமுகம் உள்ளே போனார். உட்காரவில்லை; தோல் பையை மேஜையின்மீது வைத்துவிட்டு, ''ஐயா ஊருக்குப் போனபோது ஏதாவது பெட்டி, மூட்டை எடுத்துப் போனாரா?'' என்று கேட்டார்.

''ஆமாம், எடுத்துக்கொண்டு போனார். அவர் வழக்கமாக ஒரு நாள் பயணத்துக்கென்றே உபயோகப்படுத்தும்—அதோ மேஜையின்மேல் நீங்கள் வைத்த—அதைப் போன்ற ஒரு தோல் பையை எடுத்துப் போனார்கள். அதை நான்தான் தயார் செய்து பூட்டி சாவியுடன் ஐயாவிடம் கொடுத்தேன். ஏன்........?''

''அதில் என்ன இருந்தது?''

''ஒரு நாளைக்கு வேண்டிய துணிமணியும் சில பத்திரங்களும் இருந்தன.''

''பத்திரங்கள் என்னவென்று தெரியுமா?''

''தெரியும். ஐயாவிடம் இருக்கிற எல்லா தஸ்தாவேஜுகளையும் நான் அறிவேன். அவற்றை வேண்டிய போதெல்லாம் இரும்புப் பெட்டியில் வைப்பதும் எடுப்பதும் நான்தான். அன்றைய தினம் ஐயா எடுத்துப் போன பத்திரங்கள் குட்டிபட்டி ஜமீன்தாருடைய நிலங்களின் அடமானப் பத்திரங்கள். அந்தக் கணக்குகளைத் தீர்த்துவிட ஜமீன்தார் அரியபுரத்தில் ஒரு பணக்காரரிடம் ஏற்பாடு செய்திருப்பதாகவும், உடனே தஸ்தாவேஜுகளுடன் வரவேணும் என்பதாகவும் வந்த சமாசாரத்துக்காகத்தான் ஐயா போனார். ஏன்? என்ன! ஐயா, என் தந்தை எங்கே? இதையெல்லாம் ஏன் விசாரிக்கிறீர்கள்?'' என்று பூங்கோதை கலங்கினாள்.



''பயப்பட வேண்டாம்மா. ஐயா சீக்கிரம் வந்துவிடுவார் ..................மேஜையின் மேலிருக்கிற தோல்பை அந்தப் பைதானா? பார்த்துச் சொல்லு.''

''நான் அதை முன்னாலேயே கவனித்தேன். ஐயாவுடைய பை போலத்தான் இருக்கிறது. ஆனால், ஐயா பையின்மேல் ஒரு உறை போட்டிருக்கும்........இருங்கள் பார்க்கிறேன்''........ என்று பையை எடுத்து உள்ளும் புறமும் பார்த்துவிட்டு, ''ஆ! இது ஐயாவுடைய பைதான்! என்ன மோசமோ தெரியவில்லையே! மேலிருந்த உறையைக் காணோம். உள்ளே யிருந்த பொருள்கள் என்னவாச்சோ! பை நம்முடையதுதான். பாருங்கள் ....உள்ளே....இந்த மூலையில் இங்கி....அந்த மசியை நான் ஒரு நாள் கை தவறி ஊற்றிவிட்டேன். அந்த அடையாளம் ஒன்றே போதும்....ஐயா!....என்னிடத்தில் மறைக்காமல் சொல்லுங்கள், இது எங்கே கிடைத்தது? அண்ணா எங்கே?.... ஏதாவது கள்ளர்களுடைய சதியா? பையும் பத்திரங்களும் தொலையட்டும். என் தந்தை எங்கே? சொல்லுங்கள்........ சொல்லுங்களையா. முன்னே என்னைத் தூக்கிக்கொண்டு போனதைப் போன்ற மோசடி, இதிலும் இருப்பது போல என்னுடைய மனத்தில் ஒரு திகில் இருந்துகொண்டே இருக்கிறது.''

''அம்மா, நீ மிகவும் புத்திசாலி. உன்னிடத்தில் ஒளித்துப் பேச முடியாது. நீ அனுமானிக்கிறதைப் போலவே இதில் ஏதோ மோசடி இருப்பதாகவே நானும் எண்ணுகிறேன். அதைப்பற்றி விசாரித்ததில் இந்தப் பையும் இன்னும் சில

புலன்களும் கிடைத்திருக்கின்றன. ஐயா இருக்கிற இடம் மட்டும் இன்னும் தெரியவில்லை. இருந்தாலும் அவருக்கு அபாயம் இல்லையென்று எனக்கு நம்பிக்கை. நீ கலங்கக் கூடாது. எனக்குக் கிடைத்திருக்கிற துப்புகளிலிருந்து சொக்கேசர் இருக்கிற இடத்தை ஒருவாறு தீர்மானித்து விட்டேன். இதோ இப்போது நேரக அங்கேதான் போகிறேன். வேண்டிய துணிகளையும் முன் ஜாக்கிரதைகளையும் ஏற்பாடு செய்திருக்கிறேன். பொழுது விடிவதற்குள் கண்டுபிடித்து உனக்கு நல்ல சேதியனுப்புகிறேன். நீ மட்டும் தைரியமாக இரு. அத்தைக்கு இதைச் சொல்ல வேண்டாம். பயந்துவிடு வார்கள்'' என்று சொல்லிவிட்டு, சப் இன்ஸ்பெக்டர் தம்முடைய வீட்டுக்குப் போனார். ஏற்பாடு செய்திருந்தபடி இரவு பத்து மணிக்குப் பயணமானார். காத்தவராயனுடைய உளவாள்கள் ஆறுமுகம் புறப்பட்டதைப் பார்த்துக்கொண்டிருந் தார்கள்.

பூங்கோதை, பெண்ணுக்குள் அபூர்வ தைரியசாலிதான். தனக்கு எவ்வளவு சங்கடங்கள் நேர்ந்தாலும் சமாளித்துக் கொள்வாள். ஆனால், இன்னொருவருக்குக் கஷ்டம் வந்தால் உள்ளம் உருகிவிடுவாள். அதிலும் தன் தந்தை சொக்கேசருக்கு ஒரு துன்பம் வரச் சகிக்க மாட்டாள். ஆகையினால், எவ்வளவோ தைரியப்படுத்திக்கொண்டுங்கூடச் சொக்கேசரைப் பற்றிய வியாகூலம் அவளை விடவில்லை. 'அத்தைக்குக் கொடுத்தது போல, ஐயாவுக்கும் ஏதாவது விஷம் கொடுத்து விட்டார்களோ ! அத்தைக்குத்தான் அந்த மலைக்கள்ளரு டைய தயவினால் முறிவு கொடுக்க முடிந்தது. ஐயாவின் கதி என்னவோ?'' என்று நினைத்து நினைத்து ஆகாரம் செல்லாமல், தூக்கமும் இல்லாமல், படுக்கையிலேயே உட்கார்ந்துகொண்டு இருந்தாள். பொழுது விடிவதற்குள் தன் தந்தையைக் கண்டு பிடித்துவிடப் போவதாகவும், கண்டுபிடித்தவுடன் சேதியனுப்பு வதாகவும் சப் இன்ஸ்பெக்டர் சொல்லிவிட்டுப் போனதையே திருப்பித் திருப்பி எண்ணி எதிர்பார்த்துக்கொண்டிருந்தாள். வீதியில் வண்டி ஓடுவதைக் கேட்டாலும், வீட்டில் வேறு ஓசை



உண்டானாலும் யாராவது சேதி சொல்லத்தான் வருகிறார்களோ என்று ஆசையோடு எட்டிப் பார்ப்பாள்...............

*　　*　　*

வீரராஜனுடைய அலங்கார மாளிகையில் இரவு பதினொரு மணிக்குமேல் கொஞ்சம் பரபரப்பு உண்டாயிற்று. காத்தவ ராயனும் வீரராஜனும் வெகு ரகசியமாகக் கலந்து பேசிக் கொண்டிருந்தார்கள். சப் இன்ஸ்பெக்டர் வெகு பலமான ஏற்பாடுகளோடு பயணமானதைக் கேட்டு, கொஞ்சம் பயந் தார்கள்.

"சரி, காத்தவராயா! பங்களாவை நான் பார்த்துக் கொள்ளுகிறேன். நீ நம்முடைய முக்கியமான ஆள்களைக் கூட்டிக்கொண்டு போய் 'அங்கே' கவனித்துக்கொள்ளு. சப் இன்ஸ்பெக்டர் துப்பாக்கி, ஜவான்களுடன் போயிருப்ப தாகத் தெரிகிறது. அநேகமாக 'அங்கே'தான் போகிறார் என்று நினைக்கிறேன். நீ இன்றைக்கு வெகு ஜாக்கிரதையாக இருக்க வேணும்.''

"அந்தக் கவலை உங்களுக்கு வாண்டாங்கோ, எஜமானே. நானாச்சு........முடிஞ்சாக்க சப் இன்ஸ்பெக்டரையே இன்னிக்கு முடிச்சுப்புடரேனுங்க. சாவ்கார் ஊட்லே.......''

"ஐயையோ! காத்தவராயா, இன்றைக்கு அப்படி ஒன்றும் செய்துவிடாதே. இவ்வளவு நீ பாடுபட்டதெல்லாம் வீணாய்ப் போகும். வெண்ணெய் திரண்டு வருகிற சமயம்; தாழியை உடைத்துவிடாதே. அதெல்லாம் பின்னால் வேணு மானால்....''

"அப்படி அவசரம் வந்திடிச்சின்னா என்னா பண்ரதுங்கோ.''

"அப்படி வராமல் இன்றைக்குப் பார்த்துக்கொள். நேர மாச்சு. நீ புறப்படு.''

காத்தவராயனும் ஆள்களும் போய்விட்டார்கள். வீர ராஜன் தன் காதலி ஜானகி காத்துக்கொண்டிருந்த அறைக்குப் போனான்.

"கண்ணே, ஜானகி, கடிதத்தைப் படித்தாயா? அதில் எழுதியிருப்பதற்குத் தகுந்தபடி பேசு. நீ மிகவும் புத்திசாலி. உனக்கு நான் ஒன்றும் சொல்லிக்கொடுக்க வேண்டியதில்லை. புறப்படு. வண்டி காத்துக்கொண்டிருக்கிறது" என்றான்.

ஜானகியம்மாள் மேஜைக்கருகில் ஒரு பட்டுமெத்தை நாற்காலியின் பக்கத்தில், இடக்கையில் ஒரு கடிதத்துடன் வலக்கையை நாற்காலியின்மேல் ஊன்றிக்கொண்டு தலை குனிந்து மௌனமாக நின்றுகொண்டிருந்தாள். வெகு நேரம் வரை தலைநிமிர்ந்து பார்க்கவில்லை.

"என்ன, ஜானகி, மறுபடியும் பழைய பாடத்தையே ஆரம் பித்துவிட்டாயே! ஒருநாள் பூராவும் தர்க்கம் செய்து ஒத்துக் கொண்டாய். நீ சம்மதித்த பின் உன்னை நம்பி நான் எல்லா ஏற்பாடுகளையும் செய்துவிட்ட பிற்பாடு, நல்ல சமயத்தில் நழுவ விட்டுவிடுவது போல் நிற்கிறாயே! உனக்குத் தர்மமா? இந்தச் சமயத்தில் நீ உதவி செய்யாவிட்டால், இனிமேல் என் உயிரை வைத்துக்கொண்டு ஒரு நிமிஷங்கூட இருக்க மாட்டேன். கண்டிப்பாக நான் தற்கொலை செய்துகொள்வேன். சரி....நான் செத்தாலும் நீயாவது சுகமாயிரு. இந்த மாளிகை, இதைச் சேர்ந்த நிலங்கள், உன்னிடத்திலுள்ள நகைகள் எல்லாவற்றையும் உனக்கு எழுதிவைத்து நேற்றே 'ரிஜிஸ்டர்' செய்துவிட்டேன். நான் மாண்டுபோன பிறகாவது...."

"ஐயோ, நாதா, அப்படிச் சொல்ல வேண்டாம். உங்களையே கதியென்று நம்பி, வீடு வாசல் பந்து ஜனங்களையெல்லாம் வெறுத்துவிட்டு வந்த எனக்கு, உங்களுக்குப் பின்னால் என்ன வாழ்வு வேண்டியிருக்கிறது? அப்படிச் சொல்ல வேண்டாம்.... என்ன....என்ன இருந்தாலும் நாதா, என்னுடைய மனசு.... ஐயோ, என்னுடைய பெண்மனம் துடிக்கிறதே!....மனச்சாட்சி இடிக்கின்றதே....என்ன செய்வேன், நாதா?" என்று ஜானகி நிமிர்ந்து பார்த்தாள்.

"அடி பைத்தியமே, ஜானகி! இதென்ன இது? நம்மைக் கொல்ல வருவது பசுவானாலும் அதைக் கொல்லுவதில் என்ன பாவம்? உன்னுடைய வாழ்க்கையைக் கெடுத்தவர்களுக்கு இவ்வளவு நீ பரிவு காட்டுவானேன்? அப்படியென்ன நாம் கொன்றுவிடவா போகிறோம்? கொஞ்சங்கூடத் தப்பில்லை. நீ தயங்காதே, புறப்படு."



மறுபடியும் ஜானகி தலை குனிந்துகொண்டாள். சற்று நேரம் வீரராஜனும் சும்மா இருந்தான். ஜானகியும் சம்மதித்த தாகத் தெரியவில்லை.

"சரி, ஜானகி! உனக்கு இஷ்டமில்லை போலிருக்கிறது. இனிமேல் நான் இருந்து பயனில்லை. இன்றோடு என்னுடைய வாழ்வு, இதோ முடிந்தது. உன்னுடைய கண்ணுக்கு முன்னா லேயே—என் உயிரைப் போல் நான் நம்பியிருந்த உன்னாலேயே நான் இறந்து...."

"ஐயையோ! அப்படிச் சொல்ல வேண்டாம்........இதோ.... இதோ நான் போகிறேன். என்ன வந்தாலும் வரட்டும்; நான் போகிறேன். நீங்கள் வருத்தப்பட வேண்டாம்...." என்று ஜானகி புறப்பட்டாள்.

உடனே வீரராஜன் எட்டிக் குதித்து, ஜானகியை கட்டித் தழுவி முத்தமிட்டு, "என் கண்ணே, எனக்கு உயிர் கொடுத்த என் குலதெய்வம் நீ. புறப்படு. கடிதம் எங்கே? பத்ரம். ஜாக்கிரதையாக இரு" என்று இருவரும் மாடியை விட்டுக் கீழே வந்தார்கள். வீதிக் கதவு உட்புறத்தில் செடிகளின் மறைவில் இரண்டு குதிரை வண்டிகள் காத்திருந்தன. ஒரு வண்டியில் ஜானகி ஏறிக்கொண்டாள். வீரராஜன் வண்டிக்குள் தலையை நீட்டி, "சப் இன்ஸ்பெக்டர் கொஞ்ச நேரத்துக்கு முன் சொக் கேசர் வீட்டுக்குப் போயிருந்தார் என்பதும் ஞாபகமிருக்கட்டும்" என்றான். வண்டி நகர்ந்தது. இன்னொரு வண்டியில் வீரராஜன் ஏறிக்கொண்டு போய்விட்டான்.

சொக்கேசருடைய வீட்டுக்கு வெகு தூரத்திலேயே ஜானகி வண்டியை விட்டு இறங்கினாள். வண்டிக்காரனிடத்தில், அவன் காத்திருக்க வேண்டிய இடத்தையும் மாதிரியையும் சொல்லி

விட்டு, ஜானகி சொக்கேசர் மாளிகையின் வீதிவாசலுக்கு நடந்து வந்தாள். வெளிக் கதவு திறந்திருந்தது. பதினொரு மணிக்குச் சொக்கேசர் வீட்டுக்காவல் ஜவான் 'பீட்' மாற்றுகிற வழக்கம். புது ஜவான் இன்றைக்குக் கொஞ்சம் நேரங்கழித்து வந்ததனால், ஜானகியம்மாள் அங்கே வந்த சமயத்தில்தான் கதவு திறக்கப்பட்டது. சற்று தயக்கத்தோடுதான் ஜானகி உள்ளே நுழைந்தாள். "யாரங்கே ?" என்று ஜவான் கத்தினான்.

"நான்தனாய்யா. ஒரு அவசரமாக நான் அந்த அம்மாளைப் பார்த்து ஒரு வார்த்தை சொல்லிவிட்டுப் போக வேண்டும்" என்று ஜானகி நின்றாள். இந்தச் சமயத்தில் அங்கே வந்த 'பீட்'கள் சரியாக இருக்கின்றனவா என்று மேல் தணிக்கை செய்ய வந்த 'ஏட்' கருப்பையா, "அடே முந்நூத்தி ஏழு ! அந்த அம்மாள் பெரிய எடத்து அம்மாள். அந்தம்மாளை அப்படி மெரட்டாதே. திருடன் வந்தால் தூங்கிப் போவாய் ; இந்தம் மாளை மெரட்டுவாய் !" என்றான்.

ஜானகி, நிதானமாக நடந்து கட்டடத்தின் தலைவாசலைத் தட்டினாள். அயர்ந்து தூங்கிக்கொண்டிருந்த காமாக்ஷியம்மாள் எழுந்து கதவைத் திறந்தாள். வேலைக்காரர்கள் யாரும் இல்லை. சடையன் குணமடைந்திருந்தான் என்றாலும், இன்னும் வேலைக்குத் தகுதியில்லை. போலீஸ் காவல் இருப்ப தால், கதவுக்கு நேராக ஆள் படுக்கிற வழக்கம் வழுவியிருந்தது.

கதவைத் திறந்த காமாக்ஷியம்மாள், ஜானகியைக் கண்டு கொஞ்சம் வருத்தத்தோடு, "ஏண்டியம்மா, இந்நேரத்தில் என்ன ?" என்றாள். தன்னுடைய தங்கை மகனான வீரராஜ னுடைய ஆசைக்காரியென்றும், அவளால்தான் தன்னுடைய தங்கை மகன் கெட்டுப் போனான் என்றும் காமாக்ஷியம்மாளுக்கு ஜானகியிடத்தில் அருவருப்புண்டு. முன் இரண்டு மூன்று தடவைகளில் பூங்கோதையைப் பார்க்கவேணுமென்று ஜானகி வந்த போதுகூட காமாக்ஷியம்மாளுக்குச் சமாதானமில்லை. அதை ஒருவாறு அறிந்திருந்த ஜானகி, "ஒரு அவசரம்.



பூங்கோதையம்மாளைப் பார்த்துச் சொல்லிவிட்டுப் போகலாம் என்று வந்தேன். மன்னித்துக்கொள்ளுங்கள். இல்லா விட்டால் இந்நேரத்தில் வந்து உங்களுடைய தூக்கத்தைக் கெடுப்பேனா ?" என்றாள்.

"என்னம்மா அப்படி அவசரம் ? விடிஞ்சி பேசிக்கொள்ளக் கூடாதா அந்த அவசரத்தை ?"

"நான் விடியற்கால வண்டிக்கு எங்கள் ஊருக்கே போய் விடப் போகிறேன். பூங்கோதையம்மாளிடம் ஒரு வார்த்தை சொல்லாமல் போய்விடக் கூடாதென்றுதான் வந்தேன்" என்று ஜானகி வெகு மரியாதையாகச் சொன்னாள்.

காமாக்ஷியம்மாள் தனக்குள்ளேயே 'போய்த் தொலையட் டும், வீரராஜனைப் பிடிச்ச பீடை தொலையும்' என்று சந்தோஷப்பட்டுக்கொண்டு, "சரி, அப்படியானால் போய் பூங்கோதையிடம் சொல்லிவிட்டுப் போ" என்று காமாக்ஷி யம்மாள் சொன்னாள்.

பூங்கோதை, கதவு திறக்கப்பட்ட சத்தத்தையும், காமாக்ஷி யம்மாளுடைய பேச்சுக் குரலையும் கேட்டுத் தன் தகப்பனாரைப் பற்றிய சேதி வந்துவிட்டதென்றே எண்ணிக்கொண்டு எழுந்து வந்து; ஜானகி படியேறி வருவதைப் பார்த்தாள்.

தன்னைத் தாசி மகள் என்று இகழ்ந்து, வீரராஜனுக்கும் தனக்கும் நடக்கத் தீர்மானமாயிருந்த கலியாணத்தைத் தடுத்து விட்டவர்கள் காமாக்ஷியம்மாளும் பூங்கோதையுந்தான் என்று வீரராஜன், ஜானகியின் மனசைக் கெடுத்திருந்ததனால், ஜானகி பூங்கோதையின் மேல் வர்மம் கொண்டிருந்ததைப் பூங்கோதை அறியாள். வீரராஜனால் வீணாக்கப்பட்ட ஒரு நல்ல பெண்ணென்று தான் வழக்கமாக வரவேற்பதைப் போலவே, இன்றைக்கும் வரவேற்று உபசரித்து, "என்னம்மா ! இந்நேரத்தில் வர வேண்டிய சங்கடம் என்ன ? அவர் ஏதாவது இம்சை செய்துவிட்டாரா ?" என்றாள்.

"அவர் பேச்சு என்னத்திற்கு இந்நேரத்தில்? நான் வேறு ஒரு அவசர வேலையாக வந்தேன். இங்கே சப் இன்ஸ்பெக்டர் ஸ்ரீ ஆறுமுகம் வந்திருந்தாரா?" என்றாள் ஜானகி.

"ஆமாம், வந்திருந்தார். என்ன? என்ன? அதைப்பற்றி என்ன?" என்று பூங்கோதை துடித்தாள்.

"ஐயாவைப்பற்றி சப் இன்ஸ்பெக்டர் என்ன சொல்லி விட்டுப் போனார்?"

"ஆமாம் சொன்னார். ஐயா இருக்கிற இடத்தை அறிந்து விட்டதாகவும், விடிகிறதற்குள் அண்ணாவைக் கண்டுபிடித்து எனக்குச் சேதி அனுப்புவதாகவும் சொல்லிப் போனார். அதற்காகத்தான், நான் தூங்கிவிடாமல் காத்துக்கொண்டிருக்கிறேன். ஏன்? என்ன? அம்மா, உங்களுக்கு ஏதேனும் தெரியுமா?" என்று பூங்கோதை ஜானகியின் இரண்டு கைகளையும் பிடித்துக்கொண்டு கெஞ்சினாள்.

"இதோ பாருங்கள். அவர் உங்களுக்குக் கொடுக்கச் சொன்ன சேதி" என்று ஜானகி தன் கையில் வைத்திருந்த கடிதத்தைக் கொடுத்தாள். காணாமற்போன பொக்கிஷம் கிடைத்துவிட்டது போல் அக்கடிதத்தைப் பூங்கோதை விளக்கண்டை கொண்டுபோய்ப் படித்தாள். அதில்:

> எனது அருமைச் செல்வி சௌ. பூங்கோதைக்கு ஆசீர்வாதம். நான் ஒரு ஆபத்தில் சிக்கிக்கொண்டிருக்கிறேன். நீ இந்தக் கடிதத்தைக் கொண்டுவரும் ஜானகியம்மாளுடன் உடனே வரவேண்டும். நீ வந்தால்தான் நான் தப்ப முடியும். சப் இன்ஸ்பெக்டர் ஸ்ரீ ஆறுமுகம் இங்கே இருக்கிறார்.
>
> உன் அன்புள்ள தந்தை
>
> அ. சொக்கேசன்.
>
> **குறிப்பு:** வரும்போது இருப்புப்பெட்டியிலிருந்து குட்டிபட்டி ஜமீன்தார் சொத்துகள் நமக்கு 'மேடோவர்' ஆயிருக்கிற பத்திரக் கட்டுகளையும் எடுத்து வரவேண்டியது.
>
> அ. சொ.



வாசித்தபடியே கடிதத்தை மேஜையின்மேல் விட்டுவிட்டு பூங்கோதை விளக்கை எடுத்துக்கொண்டு இருப்புப் பெட்டி இருக்கிற அறைக்கு ஓடினாள். இருப்புப் பெட்டியைத் திறந்தாள். கடிதத்தில் குறிக்கப்பட்டிருந்த பத்திரக் கட்டைத் தேடி எடுத்துக்கொண்டாள். பெட்டியைப் பூட்டிச் சாவியை வழக்கமாக வைக்கும் இடத்தில் வைத்துவிட்டாள். தன் உடைகளை ஒழுங்குபடுத்திக்கொண்டாள். ஜானகியிடம் திரும்பி வந்து, "போகலாம் வாங்கோ. வண்டியைக் கட்டச் சொல்கிறேன்" என்றாள்.

"நான் வண்டி கொண்டுவந்திருக்கிறேன். வண்டிக்காக யாரையும் எழுப்ப வேண்டாம். நாம் உடனே போய்ச் சேர வேண்டும்" என்றாள் ஜானகி.

தகப்பனாரை உடனே சந்திக்க வேணுமென்ற ஆத்திரத்தோடு பூங்கோதை முன்னும், ஜானகி பின்னுமாக இறங்கிக் கூடத்துக்கு வந்தார்கள். காமாக்ஷியம்மாள் தூங்கிவிட்டாள். பூங்கோதை அவரை எழுப்பப் போனாள். ஜானகி தடுத்து, "வேண்டாம். எழுப்ப வேண்டாம். நாம் அரை மணிக்குள் திரும்பி வந்துவிடலாம்" என்று குசுகுசுவென்று சொன்னாள்.

சந்தடி செய்யாமல் கதவைத் திறந்துகொண்டு இருவரும் வீதிக் கதவண்டை வந்தார்கள். புது 'பீட்' வந்த போலீஸ் ஜவான் உள்ளே போன பெண்ணை வெளியில் அனுப்பிவிட்டு ஒரே வேலையாகப் பூட்டிவிட்டுப் படுத்துக்கொள்ளலாமென்று கதவைப் பூட்டாமலேயே பாராக் கொடுத்துக்கொண்டிருந்தான். இரண்டு பெண்களும் வந்ததைப் பார்த்து, "ஓ அதாரு? அந்தம்மாளை இந்நேரத்தில் எங்கே கூட்டிக்கொண்டு போகிறீர்கள்? சப் இன்ஸ்பெக்டர் கோபித்துக் கொள்வார். நில்லுங்கள்" என்று அதட்டினான்.

பூங்கோதை முன்னால் வந்து, "ஒன்றுமில்லை. எங்கள் ஐயா உடனே இந்தப் பத்திரத்தைக் கொண்டுவரச் சொல்லி எழுதியிருக்கிறார். இதோ கொடுத்துவிட்டு வந்துவிடுகிறோம். தயவு செய்து கொஞ்சம் பொறுங்கள்" என்று சொல்லிக் கொண்டே இருவரும் வெளியில் வந்துவிட்டார்கள்

"நில்லுங்கள்............நில்லுங்கள்..........ஐயாவா ! ஐயா, எங்கே இருக்கிறார் ? அவர்தான்.................." என்று ஜவான் மறுபடியும் சொல்லி முடிப்பதற்குள் 'ஏட்' கருப்பையா எங்கிருந்தோ வந்து, "போயிட்டு சீக்கிரம் வந்துடுங்கம்மா" என்றான். கான்ஸ்டேபிள் சும்மா இருந்துவிட்டான்.

இருவரும் வேகமாக நடந்தார்கள். ஜானகியைக் காட்டிலும் பூங்கோதைக்கு அவசரம். முன்னாலேயே குறிக்கப்பட்டிருந்த இடத்தில் வண்டி நின்றது. ஏறிக்கொண்டார்கள் ! வண்டி ஓட்டம் பிடித்தது.

வீரராஜனுடைய பங்களாவிற்குள் வண்டி நுழைந்தது. அந்தப் பங்களா யாருடையதென்று பூங்கோதைக்குத் தெரியும். ஆதலால், சற்றுப் பயந்து சந்தேகித்தாள். இருந்தாலும் தன்னுடைய தகப்பனாருக்குத் தீங்கு நினைக்கக்கூடியவன் வீரராஜன்தான் என்றும், இப்போது அவருக்கு வந்திருக்கும் ஆபத்தும் அதனால்தான் உண்டாயிருக்க வேணுமென்றும் முன்னமேயே எண்ணிக்கொண்டிருந்தாள். ஆனதால், தன் தகப்பனார் அங்கேதான் இருக்கிறார் என்று தந்தைக்காக அந்த இடத்துக்குப் போவதில் வருத்தம் வரவில்லை. சப் இன்ஸ்பெக்டர் ஆறுமுகம் அங்கே இருக்கிறார் என்று நம்பினதால் தான் கொண்டிருந்த பயம் நீங்கிவிட்டது.

வண்டி உள்ளே போய்க் கட்டடத்துக்கெதிரில் நின்றது. ஜானகி முதலில் இறங்கிப் பூங்கோதைக்குக் கை கொடுத்து இறக்கினாள். ஒரே இருட்டாக இருந்தது. ஜானகி பூங்கோதையின் கையைப் பிடித்துக் கூட்டிக்கொண்டு போய்க் கதவைத் தட்டினாள். கதவு திறக்கப்பட்டது. உள்ளே வெளிச்சமில்லை. பூங்கோதை தயங்கினாள். தந்தையின் ஆபத்தை நீக்கப்போகிறதாக எண்ணிவந்த அவளுடைய மனம் இப்போதுதான் தனக்கே ஏதேனும் ஆபத்து வருமோ என்று எண்ண ஆரம்பித்தது. என்னென்னவோ எண்ணங்கள் மனத்தில் பின்னலிட்டுக்கொண்டிருக்கும்போது ஜானகி, "வாம்மா, பயப்படாதே. வா" என்று பூங்கோதையின் கையைப் பிடித்து இழுத்துக்கொண்டு போவது போலப் போனாள். இவர்கள் இருவருக்கும் தெரியாமல் இவர்கள் பின்னாலேயே இன்னொரு உருவம் இவர்களுடன் உள்ளே நுழைந்துகொண்டது. "யாரது ? நீங்களா !" என்று ஜானகி பின்னால் வந்த இன்னொரு உருவத்தைக் கேட்டுக்கொண்டிருக்கும் போதே கதவு மூடித் தாழிடப்பட்டுவிட்டது.



இருட்டில் இன்ன இடத்தில் இருக்கிறோம் என்று தெரியவில்லை. "என்ன ஜானகியம்மா, என் தகப்பனார் எங்கே இருக்கிறார் ? சப் இன்ஸ்பெக்டர் எங்கே ? எனக்குப் பயமாக இருக்கிறது, ஜானகியம்மா...........ஜானகியம்மா !" என்று பூங்கோதை சிறு குரலில் அலறினாள். ஜானகியம்மாள் பக்கத்தில் இல்லை. இதுவரையிலும் தன் கையைப் பிடித்துக் கொண்டிருந்த ஜானகி இருட்டில் பக்கத்தில்கூட இல்லாமற் போனதைக் கண்டு, பூங்கோதை வியந்து பயந்தாள். கைக் கெட்டின மட்டும் தடவிப் பார்த்தாள். ஜானகி எட்டவில்லை. யாரோ மெத்தைப் படிமீது ஏறிப்போகிற காலடி ஓசை மட்டும் கேட்டது. மேலே ஒரு கதவு திறக்கப்பட்ட சத்தமும், மறுபடியும் மூடப்பட்ட சத்தமும் காதில் விழுந்தது. மேலேயிருந்து யாரும் வருவதாகவும் தெரியவில்லை. இருட்டில் தனக்கு வெகு சமீபத்தில் யாரோ வந்து ஒரு பலகையின்மேல் மோதிக்கொண்டது போலச் சத்தம் கேட்டது. தன்னிடத்துக்கு யாரோ வருவதாகப் பயந்து சுவரைத் தடவிக்கொண்டே போய் ஒரு மூலையில் ஒதுங்கி நின்றுகொண்டாள்.

சிறிது நேரத்துக்கெல்லாம் இதுவரையிலும் மறைத்து வைக்கப்பட்டிருந்தது போன்ற ஒரு சிறு வெளிச்சம் தென்பட்டது. அதை யாரோ எடுத்துக்கொண்டு வந்து நடுவிலிருந்த ஒரு மேஜையின்மேல் வைத்து அதைத் தூண்டி

விட்டார்கள். உடனே வெகு பிரகாசமான வெளிச்சமுண்டா யிற்று. மேஜையின் பக்கத்தில் வீரராஜன் வெகு அலங் காரமான உடை தரித்துக்கொண்டு, கம்பீரமாக நின்று நாலா புறத்திலும் பார்த்து, பூங்கோதை ஒரு மூலையில் ஒடுங்கி நிற்பதைக் கண்டான்.

சிரித்துக்கொண்டே, "கண்மணீ! பூங்கோதை! வந்தாயா? வா, மாமா ஒரு பெரிய ஆபத்தில் இருக்கிறார். அந்த ஆபத்து உன்னால்தான் நீங்கவேண்டும். அவர் உனக்கு எழுதியிருந்தா ரல்லவா? வா, கிட்ட வா; இங்கு வேறு யாரும் இல்லை. நாம் இருவர்தான், வா கூச்சப்படாதே" என்று வீரராஜன் வெகு நிதானமாகச் சொன்னான்.

பூங்கோதைக்கு நிலைமை புரிந்துவிட்டது. சந்தேகத்தால் தவித்துக்கொண்டிருந்த அவள் மனம் சந்தேகம் நீங்கின உடன் அதற்கு வேண்டிய தைரியம் அடைந்துவிட்டது. மெது வாக வந்தாள். மேஜைக்கு முன்னால் வீரராஜனுக்கு நேராக வந்து சற்று தூரத்தில் நின்றுகொண்டு, "இது ஒரு சாமர்த் தியமா? அவள் தாசி மகளென்றும் மோசக்காரியென்றும் இது வரையிலும் அறியாமற் போனேன். சரி, போனது போகட்டும். இப்போது என்ன செய்யப் போகிறீர்?" என்றாள்.

"என்ன செய்யப் போகிறேனா? உன்னை என் தெய்வமாக வைத்துத் தினந்தினம் பூஜை செய்யப் போகிறேன்."

"உம்முடைய பூஜைக்குத் தகுந்தவள் ஜானகியிருக் கிறாள். ........என் தகப்பனார் எங்கே? அதைச் சொல்லும் முதலில்."

"மாமாவா? இருக்கிறார், பயப்படாதே. ஆனால், அவர் ஒரு பெரிய அபாயத்தில் சிக்கிக்கொண்டிருக்கிறார். உனக்காக நான் அவரைத் தப்பவைக்க ஏற்பாடு செய்திருக்கிறேன். நான் இல்லாவிட்டால் இந்நேரம் அவருக்கு என்ன நேரிட்டிருக்குமோ தெரியாது........"

"நீரில்லாவிட்டால் அவருக்கு ஆபத்தே வந்திருக்காது. எனக்காக...........அவரை நீர் காப்பாற்றுகின்ற அனுதாபம் கிடக்கட்டும். விஷயத்தைச் சொல்லும்."



"என்ன பூங்கோதை, நான் உனக்குச் சொந்த அத்தை மகன் அல்லவா? உன் தகப்பனாருடைய தங்கை மகன்தானே நான்! இன்னும் உன் மனம்...."

"ஐயா, அதையெல்லாம் இப்போது அளக்க வேண்டாம். அந்த உறவு முறைப் பேச்சையெல்லாம் ஒருபுறம் மூட்டை கட்டி வைத்துவிட்டு; இப்போது இவ்வளவு வஞ்சகமாக என்னை ஏமாற்றிக் கூட்டிவந்த விஷயத்தைப்பற்றியும், என்னுடைய தந்தையை மூடி வைத்திருக்கிற விஷயத்தைப்பற்றியும் மட்டும் பேசும்."

"நீ நம்பினாலும் நம்பாவிட்டாலும் மாமாவுக்கு ஆபத்து என்பது உண்மை. அவர் தப்புவதற்கு ஒரே வழிதான்."

"அது என்ன வழி?"

"நீ என்னைக் கலியாணம் செய்துகொள்ளச் சம்மதிப்பது தான்."

"சம்மதிக்காவிட்டால்?"

சம்மதிக்காவிட்டால் உன்னை யார் விடப்போறாங்கோ? இனிமேல் உன்னுடைய சம்மதம் என்னத்திற்கு?"

"இது ஒரு கெட்டிக்காரத்தனமா? நான் மிகவும் நம்பி யிருந்த ஒரு பெண்ணைக் கொண்டு என்னை வஞ்சித்துக் கொண்டு வந்து, இந்த நடுச்சாம வேளையில் உம்முடைய வீட்டுக்குள் வைத்துப் பூட்டிக்கொண்டு, உம்மை விஷம் போல் கருதுகின்ற என்னிடத்தில் இப்படிப் பேச உமக்கு வெட்க மில்லையா? நீர் ஓர் ஆண் பிள்ளையா?" என்று சொல்லிக் கொண்டிருக்கும் போதே வீரராஜன் குறுக்கே இருந்த மேஜையை விட்டு விலகி, பூங்கோதை நின்ற இடத்துக்கு இரண்டெட்டு முன்னால் வந்து, "கண்ணே பூங்கோதை! நீ என்னை என்ன திட்டினாலும் சரி. அது எனக்கு இன்பமானதே ......அதென்ன கையில்? ...பத்திரக் கட்டா? எங்கே. அதைக் கொடு இப்படி" என்று பூங்கோதை கையைப் பிடிக்க வந்தான்.

பூங்கோதை பின்னுக்குப் போய், 'சீ முட்டாள், கதவைத் திற. நான் வீட்டுக்குப் போகவேணும்" என்றாள்.

"வீட்டுக்கா ?........போகலாம்....ஏன் ? இந்த இடம் அந்த மலைக்கள்ளனுடைய இடத்தைப் போல் அவ்வளவு பிடிக்க வில்லையா ? இரண்டு மூன்று நாள் அங்கேயிருந்த உனக்கு இங்கே வந்து சேர்ந்ததுக்குள் வீட்டுக்குப் போகவேணுமா ?" என்று அவளை எட்டிப் பிடிக்கத் தாவினான். பூங்கோதை தப்பித்துக்கொண்டு மேஜையின் எதிர்ப் பக்கத்துக்குப் போய் விட்டாள். வீரராஜன் மறுபடியும் பிடிக்கப் போனான். பூங்கோதை மேஜையைச் சுற்றிச் சுற்றி ஓடினாள். வீரராஜனும் விடாது துரத்திக் கடைசியாக அவளுடைய சேலையின் முந்தியைப் பிடித்துக்கொண்டான்...........

இந்தச் சமயத்தில் அந்த விசாலமான கூடத்தில் ஒரு ஒதுக்கான இடத்தில் சுவரோரமாக இருந்த பெரிய தேக்கு அலமாரிக்குப் பின்னால் ஏதோ சத்தம் உண்டாயிற்று. என்ன வென்று திரும்புவதற்குள் அந்த அலமாரிக்குப் பின்னாலிருந்து ஒரு முகம் தெரியாத உருவம் ஓடி வந்து, வீரராஜனுக்கும் பூங்கோதைக்கும் இடையில் நின்றுகொண்டு, "டேய் வீரராஜா அந்தப் பெண்ணைத் தொட்டால் உன்னுடைய மணிக்கட்டைத் துண்டித்துவிடுவேன்" என்று வீறிட்டது.

வீரராஜன் திடுக்கிட்டு இரண்டெட்டுப் பின்னால் போய்க் குறுக்கே நின்ற உருவத்தை ஏற இறங்கப் பார்த்தான். யாரும் உள்ளே வரமுடியாதபடி பாதுகாப்புகள் செய்யப்பட்ட தன்னுடைய சொந்த வீட்டுக்குள் வந்து நின்ற அவன் யார், அவன் எப்படி வந்தான் என்று அறிய முடியாமல் திகைத்து நின்றுவிட்டான். நிச்சயமாக இன்று பூங்கோதை சிக்கிக் கொண்டாள் என்று பொங்கிக்கொண்டிருந்த பூரிப்பைக்கெடுக்க, இந்தப் பூதம் எங்கிருந்து புறப்பட்டதென்று புகைந்து, எரிந்து, வேர்த்து விறுவிறுத்து, "நீ யாரடா என் வீட்டுக்குள்? எப்படி வந்தாய் உள்ளே ?" என்றான்.

"நானா? நான்தான் **மலைக்கள்ளன்**. எப்படி வந்தேனென்றா கேட்கிறாய் ? வாசலின் வழியாகத்தான் வந்தேன். எப்போது வந்தேனென்றும் தெரியவேணுமா ? இப்போதுதான், உன் னுடைய ஜானகியம்மாள் வந்தபோதுதான், நானும் வந்தேன்" என்று அந்த முகந்தெரியாத உருவம் நகைத்தது.



"மலைக்கள்ளனா ! நீதானா அவன் ? வசமாகச் சிக்கிக் கொண்டாய்" என்று சொல்லிக்கொண்டே வீரராஜன் தன் னுடைய சட்டைப் பையிலிருந்து எதையோ எடுக்கப் போகும் போது மலைக்கள்ளன் ஒரே பாய்ச்சலாகப் பாய்ந்து வீரராஜ னுடைய இரண்டு கைகளையும் இறுக்கிப் பிடித்துக்கொண்டு அவனை அப்படியே தள்ளிக்கொண்டுபோய்ச் சுவரோடு பலமாக மோதினான். வீரராஜன் அதிக தேக பலமுடையவன் அல்லா விட்டாலும் அப்போதைக்கு வந்த வெறியினால் வெகுநேரம் போராடினான். இருவரும் மாறி மாறித் தள்ளிக்கொண்டார்கள். தன்னுடைய கைகளை விடுவித்துக்கொள்ள வீரராஜன் வெகு பாடுபட்டான். முடியவில்லை. வீரராஜனுக்கு மூச்சுத் திணறி, அவனுடைய கை கால்கள் ஓய்ந்து போகிற வரையிலும் மலைக் கள்ளன் அவனை அங்கும் இங்கும் அலைத்தும் இழுத்தும், முட்டியும் மோதியும் களைக்கச் செய்து, கடைசியாக அவனை அப்படியே தள்ளிக்கொண்டு போய் அங்கிருந்த ஒரு நாற்காலிக்குப் பின்புறமாக இழுத்துப் பிடித்து, தன்னுடைய இடுப்பில் வைத்திருந்த மெல்லிய பலமுள்ள கயிற்றினால் கட்டிவிட்டு, கால்களையும் நாற்காலியினுடைய கால்களோடு சேர்த்துக் கட்டிவிட்டான்.

பூங்கோதை தனக்கு நேர்ந்த ஆபத்து நீங்கிவிட்டதைக் கண்டு இன்பப்பட்டாளோ, அல்லது அடிதடிச் சண்டையையும் வீரராஜன் பட்ட அவஸ்தையையும் பார்த்துப் பெண்மனம் துடித்துத் துன்பப்பட்டாளோ தெரியவில்லை. பதுமை போல் நின்றவிடத்திலேயே நின்று பார்த்துக்கொண்டிருந்தாள்.

முகந்தெரியாத மனிதன் நாற்காலிக்குப் பின்னால் போய் வீரராஜன் தன்னைப் பார்க்க முடியாதபடி நின்றுகொண்டு, தன்னுடைய முகமூடியை எடுத்துவிட்டுப் பூங்கோதையைப் பார்த்து புன்முறுவல் பூத்தான். பூங்கோதை பார்த்தாள். மலைக்கள்ளன்தான் ! உடனே முகத்தை மறுபடியும் மூடிக் கொண்டு, "பூங்கோதையம்மா, கொஞ்சம் பொறு. இதோ

வந்துவிட்டேன். உன்னை நானே வீட்டுக்குக் கொண்டுபோய் விட்டுப் போகிறேன்" என்று சொல்லிவிட்டு, அந்த வீட்டில் ரொம்பவும் பழகினவன் போல, மெத்தைப்படியில் ஏறிப் போய் ஒரு கதவைத் தட்டினான். உள்ளே இருந்த ஜானகி, "இனி மேல் என்னைக் கூப்பிடாதீர்கள். நீங்கள் எப்படியோ போங்கள், போதும் எனக்கு........ இந்தப் பாவம்........" என்றாள். மறு படியும் மலைக்கள்ளன் தட்டினான். மறுபடியும் உள்ளிருந்த படியே, "இனிமேல் என்னைக் கூப்பிடவே வேண்டாம். நான் வரவே மாட்டேன்" என்றாள் ஜானகி. பின்னும் தட்டினான்.

"ஐயையோ! போதும் போதும். நல்ல பெண் ஜென்மம் எடுத்தேன்" என்று சொல்லிக்கொண்டே ஜானகி கதவைத் திறந்தாள்.

மலைக்கள்ளன் உள்ளே போய் நின்றுகொண்டு, கதவைக் காட்டி, "ஜானகியம்மாள், கீழே நட" என்றான்.

"யாரது? தெரியவில்லையே!" என்றாள் ஜானகி

"ஒன்றும் பதில் பேசாதே. நான் சொல்லுகிறபடி செய். கீழே கூடத்துக்குப் போ. இல்லாவிட்டால் நீ பூங்கோதையை மோசம் பண்ணிக் கூட்டி வந்ததற்கு உன்னைக் கடுமையாகத் தண்டிப்பேன். நட கீழே" என்றான்.

ஜானகி பயந்துவிட்டாள். இன்னதென்று தெரியாமலே கீழே போனாள். மலைக்கள்ளனும் பின்னால் வந்தான். கூடத்தில் தன்னுடைய காதலன் நாற்காலியோடு கட்டுண்டு கிடப்பதையும், பூங்கோதை புகுந்தபடியே பத்திரக்கட்டைக் கையில் வைத்துக்கொண்டு நிற்பதையும், வேறு யாரோ தான் செய்த சதியைக் கண்டுபிடித்துவிட்டதையும் ஜானகி கண்டாள். கைகால் நடுக்கெடுத்து, வாய் குளறி மூர்ச்சையானவள்போல் கீழே விழுந்துவிட்டாள்.

வீரராஜன், தன்னுடைய தந்திரங்களெல்லாம் பயனற்றுப் போனதையும், எந்த மலைக்கள்ளனைத் தொலைத்துவிட வேணுமென்று இவ்வளவு பாடுபட்டானோ அதே மலைக் கள்ளனால் தன்னுடைய வீட்டிலேயே தான் கட்டப்பட்டுக் கிடப்பதையும், இவ்வளவும் தான் எந்த ஒரு பெண்ணினுடைய நன் மதிப்புக்கு ஆளாக வேண்டுமென்று ஆசை வைத்தானோ, அந்தப் பூங்கோதையின் கண்ணுக்கு முன்னாலேயே நடந்து விட்டதையும் மாறி மாறி எண்ணி, சொல்ல முடியாத மன வேதனையினால் கண்ணை மூடிக்கொண்டு தலையைக் கவிழ்த்துக்கொண்டே இருந்தான். அத்துடன் இறுக்கிய கட்டுகளினால் மெய்வலியும் கைவலியும் மேலிட்டு, வாய்விட்டு அழ வெட்கப்பட்டு, முக்கி முக்கி மூச்சு விட்டுக்கொண்டிருந்தான்.



மலைக்கள்ளன், வீரராஜனுக்கு அருகில் வந்து நின்றான். "வீரராஜா, என்ன ரொம்ப வலிக்கின்றதா? ஐயோ பாவம். நீ துன்பம் என்பதை இன்னதென்று அறியாதவன். அதனால் தான் பிறருடைய துன்பம் எப்படியிருக்கும் என்று நீ எண்ண முடியாமற் போய்விட்டது. எனக்குப் பரிதாபமாகத்தான் இருக்கிறது. சரி, வலிக்காமல் செய்கிறேன்" என்று பின்பக் கத்தில் இறுகக் கட்டியிருந்த கைகளை அவிழ்த்துவிட்டு, முன்னால் கொண்டுவந்து மணிக்கட்டுகளை மட்டும் அதிகமாக இறுக்காமல் கட்டிவிட்டு, "உன்னைக் கட்டிப்போட வேண்டு மென்று ஆசையில்லை. ஆனால், நீ இன்னும் கொஞ்சம் நேரத்துக்காவது யாருக்கும் தீங்கு செய்யாமல் இருக்கவேணும் என்றுதான்" என்று பரிதாபப்பட்டுச் சொன்னான்.

ஒன்றும் பேசாமல் வீரராஜன், மலைக்கள்ளனை உற்று உற்றுப் பார்த்து உறுமினான். மலைக்கள்ளன் வீரராஜனுடைய சட்டையிலும் இடுப்பிலும் இருந்த ஆயுதங்களையெல்லாம் எடுத்துக்கொண்டு, "வீரராஜா! பூங்கோதையை இவ்வளவு சாமர்த்தியமாகக் கூட்டிக்கொண்டு வந்த ஜானகியம்மாளை நான் மிகவும் பாராட்டுவதற்கு அடையாளமாக, பூங்கோதை இரண்டு மூன்று நாள் சந்தோஷமாக இருந்ததாக நீ சொன்ன என்னுடைய மலைவீட்டிற்கு விருந்தாளியாக அந்தம்மாளை அழைத்துக்கொண்டு போகிறேன். அந்த அம்மாள் எத்தனை நாளைக்கு அங்கே இருக்கலாமென்று நீ அனுமதிக்கின்றாயோ அத்தனை நாளைக்கு இருக்கட்டும். நீ நாற்காலியிலேயே உட்கார்ந்திரு. காத்தவராயன் வந்து கட்டவிழ்த்துவிடுவான்.

நான் போய் வருகிறேன்'' என்று சொல்லிவிட்டு ஜானகியின் பக்கம் திரும்பி, "ஜானகியம்மா, எழுந்து வா'' என்றான்.

"ஐயா, நீங்கள் யாரோ தெரியவில்லை. என்னை மன்னிக்க வேணும். என் மனச்சாட்சிக்கு விரோதமாக நான் இந்தக் காரியத்தைச் செய்துவிட்டேன். மிகவும் பொறுத்து என் மானத்தைக் காப்பாற்ற வேண்டும். உங்கள் அபயம்'' என்று அழுதுகொண்டே காலில் விழுந்தாள்.

"தடை சொல்லாமல் என்னுடன் வந்தால், உன்னை மன்னித்து, உன் கௌரவத்தையும் காப்பாற்றுவேன்; இல்லாவிட்டால், உன்னைப் போலீசாரிடம் ஒப்படைத்துவிடுவேன்'' என்றான் மலைக்கள்ளன்.

ஜானகி எழுந்து வந்தாள். மலைக்கள்ளன் கதவைத் திறந்தான். மூவரும் வெளியே வந்தார்கள். எதிரில் ஜானகியையும் பூங்கோதையையும் கொண்டுவந்த வண்டிக்காரன் வந்தான். மலைக்கள்ளனை வண்டிக்காரன் வீரராஜனாக்கும் என்று எண்ணிக்கொண்டு, "ஐயா, வண்டியை யாரோ இரண்டு பேர் பிடித்துக்கொண்டு விடமாட்டோமென்கிறார்கள்'' என்றான்.

மலைக்கள்ளன், "நான் விடச்சொல்லுகிறேன், வா'' என்றான். எல்லோரும் வண்டியிருந்த இடத்துக்கு வந்தார்கள். மலைக்கள்ளன் இரண்டு பெண்களையும் வண்டியில் ஏறச் சொல்லி, "காட்றாயா ஓட்டு'' என்று தானும் பின்னால் ஏறிக் கொண்டான். காட்றாயன் கைதேர்ந்த வண்டிக்காரன். வண்டிக்குச் சொந்தக்காரன் தடுக்கத் தடுக்க, வண்டி வெகு வேகமாக ஓட்டம் பிடித்தது.

பூங்கோதைக்கு மனத்திலிருந்த ஆச்சரியத்தையும் பூரிப்பையும் அடக்க முடியவில்லை. "ஐயா, ராமவிக்ரகம் கொடுத்தவரே! நான் இப்படிச் சிக்கிக்கொள்ளப் போகிறேன் என்பது தங்களுக்கு எப்படித் தெரிந்தது?'' என்று மலைக்கள்ளனைக் கேட்டாள்.

"எனக்கா? அந்த ஸ்ரீராமச்சந்திரன்தான் சொன்னான்'' என்று சிரித்தான். மறுபடியும், "இங்கே நடக்கிற சமாசாரங்களையெல்லாம் அந்தந்த நிமிஷமே எனக்குத் தெரியப்படுத்த என்னுடைய நண்பர் அப்துர் ரஹீம் சாயபு இருக்கிறாரென்று முன்னேயே சொல்லியிருக்கிறேனல்லவா? அவர் நம்ம ஜானகியம்மாள் வீட்டு வேலைக்காரி சுந்தரத்தம்மாளுக்கு ரொம்ப உபகாரி'' என்று மலைக்கள்ளன் சொல்லும்போது ஜானகி திடுக்கிட்டு, 'அப்படிப்பட்டவளா சுந்தரி! அது தெரியாமல் அவளிடம் என்னுடைய ரகசியங்களையெல்லாம் சொல்லி ஏமாந்து போனேனே' என்று தனக்குள்ளேயே எண்ணி வருத்தப்பட்டாள்.



சொக்கேசர் வீட்டுக்கருகில் வண்டி நின்றது.

"பூங்கோதை! நீ இறங்கி வீட்டுக்குப் போ. நீ வீட்டில் இல்லாமலிருந்ததை யாரும் கவனிக்காமல் இருந்தால் அப்படியே விட்டுவிடு. கவனித்திருந்தாலும் விவரம் சொல்லாதே. ....சரி இன்னொன்று, உன் தந்தை சொக்கேசரைப்பற்றி நீ பயப்படாதே. அவரைக் கண்டிபிடிக்க அப்துர் ரஹீம் சாயபு வேண்டிய முயற்சிகளைச் செய்துகொண்டிருக்கிறார். இரண்டொரு நாள்களில் சொக்கேசர் வீடுவந்து சேருவார்'' என்று சொல்லி மலைக்கள்ளன் வண்டியைவிட்டு இறங்கிப் பூங்கோதையையும் இறங்கச் செய்தான்.

பூங்கோதை இறங்கி நின்று, "ஜானகியம்மாளையும்... பாவம் பெண்....மன்னித்துவிடுங்கள்....அவளை என்னுடன்....'

"ஓ! ஜானகியம்மாளைப்பற்றி நீ கவலைப்பட வேண்டாம். அந்தம்மாளை நான் ஒன்றும் தண்டிக்கப் போவதில்லை. ஜானகியம்மாளை நான் பார்த்துக்கொள்ளுகிறேன், நீ போ'' என்று உத்தரவு போல் சொன்னான்.

பூங்கோதை போய்விட்டாள். வண்டி புளியந்தோப்புக் கொட்டாரத்துக்கு ஓட்டப்பட்டது.

# அத்தியாயம் 13

இன்னும் மூன்று நாள்கள் கழிந்தன. சொக்கேசர் இருக்குமிடம் தெரியவில்லை. சப்-இன்ஸ்பெக்டர் ஆறுமுகத்தைத் தவிர, மற்ற எல்லா உத்தியோகஸ்தர்களும் சொக்கேசர் யாத்திரை போயிருப்பதாகவே எண்ணிக்கொண்டிருந்தார்கள்.

பூங்கோதை, மலைக்கள்ளனும் மாந்தோப்பு சாயபுவும் எந்தக் காரியத்தையும் முடிக்கக்கூடிய சமர்த்தர்களென்று எண்ணியதாலும், மாந்தோப்புச் சாயபு தன் தந்தையைக் கண்டுபிடிப்பார் என்று மலைக்கள்ளன் சொன்ன உறுதியினாலும் உற்சாகமாகவே இருந்தாள். இருந்தாலும் 'விடிவதற்குள் சொக்கேசர் இருப்பிடத்தைக் கண்டுபிடித்துச் சேதியனுப்புகிறேன்' என்று சொல்லிப்போன சப்-இன்ஸ்பெக்டர் மூன்று நாள்களாகியும் தானும் வராமல் சேதியும் அனுப்பாமல் இருப்பதில் சற்று சலனமடைந்தாள்.

காமாக்ஷியம்மாளுக்கு ஒன்றுமே தெரியாது. மலைக்கள்ளன் பூங்கோதையை வீரராஜனுடைய பங்களாவிலிருந்து மீட்டு, அவளுடைய வீட்டண்டை விட்டுப் போனபோது, தூங்கிப்போன போலீஸ்காரனை மட்டும் எழுப்பி உள்ளே போனாள். வீட்டுக் கதவு, தானும் ஜானகியும் விட்டுப்போன மாதிரியே தாழிடாமல் இருந்தது. உள்ளே போய்ப் பூங்கோதை தாழிடும் போது காமாக்ஷியம்மாள் விழித்துக்கொண்டு, "ஏண்டியம்மா, இன்னுமா முழிச்சுக்கொண்டிருக்கிறாய்? தூங்கலையா?" என்றாள். "அத்தை, இப்போதுதான் ஜானகியம்மாளை அனுப்பினேன். இதோ நான் போய்த் தூங்கப் போகிறேன்" என்று பூங்கோதை சொல்லிவிட்டு மாடிக்குப் போய்விட்டாள்.

மாந்தோப்பு மாளிகையில் அப்துர் ரஹீம் சாயபு, சப்-இன்ஸ்பெக்டர் ஆறுமுகத்துக்காகத் தான் அனுப்பிய வைத்தி



யின் வரவை எதிர்பார்த்துக்கொண்டு ஹுக்கா குடித்துக் கொண்டிருந்தார். இரவு சுமார் பதினொரு மணி இருக்கும். அப்துர் ரஹீமுடைய அழகான மேஜையின் மேல் அநேக சிறு சிறு மூட்டை முடிச்சுகளும், சில பெட்டிகளும், பல பத்திரக் கட்டுகளும் வரிசையாக வைக்கப்பட்டிருந்தன. ஒரு கையெழுத்துக் குறிப்புப் புஸ்தகமும் சில காகிதங்களும் முன்னாலிருந்தன.

சுமார் பன்னிரண்டு மணிக்குக் கீழே கதவு தட்டப்பட்ட அடையாளத்தால் வைத்தி வந்துவிட்டதை அறிந்து, சாயபு வந்து கதவைத் திறந்தார். ஸ்ரீ ஆறுமுகம் வைத்தியுடன் வந்திருந்தார். வைத்தியைக் காவல் செய்யச் சொல்லிவிட்டு, சாயபு சப்-இன்ஸ்பெக்டரைக் கூட்டிக்கொண்டு மேலே போனார். சாயபுவின் மேஜையின் மேலிருந்த எல்லாவற்றையும் ஸ்ரீ ஆறுமுகம் பார்த்து வியந்து நின்றார்.

"என்ன அப்துர் ரஹீம் சார், கச்சேரி மேஜை மாதிரி...."

"அதிருக்கட்டும்....ஜீ! ஆறுமுகம் சாப், தாங்கள் போன காரியமெல்லாம் ஜயந்தானே?" என்று சாயபு சிரித்தார். பரிகாசம் பண்ணுவது போல் இருந்தாலும் ஸ்ரீ ஆறுமுகம் அதற்காக வருத்தப்படாமல், "என்ன போங்க சார், ஒரு சிக்கலைப் பிரிப்பதற்குள் இன்னொரு சிக்கு வந்து பின்னிக் கொள்ளுகிறது. நடந்த விஷயங்கள் இப்படித்தானிருக்கும் என்று நன்றாகத் தெரிந்தாலும் கேசுகளை உருப்படியாக்கக்கூடிய சாட்சிகளும் தடயங்களும் கிடைக்கவில்லை. நான் இன்னும் சாப்பிடக்கூட இல்லை. வீட்டுக்கு இப்போதுதான் வந்தேன். வைத்தி காத்துக்கொண்டிருந்தான். உங்களால்தான் இந்தச் சிக்குகள் எடுபட வேணுமென்று உடனே வந்துவிட்டேன்" என்றார் சப்-இன்ஸ்பெக்டர்.

சாயபு விழுந்து விழுந்து சிரித்தார். "அப்படியா பரோபர். மற்றதெல்லாம் இருக்கட்டும்....ஆப்....பைலே....முதலில் ஜரா.... கொஞ்சம் நாஷ்டா செய்யுங்கள்" என்று அங்குமிங்கும் தேடி ஒரு சீமைப் பிஸ்கோத்துப் பெட்டியையும் சில பழங்களையும் தமக்காக வைக்கப்பட்டிருந்த பாலையும் சேகரித்தார். ஆறுமுகம் பசியாறினார்.

"சாயபுவாள், நீங்கள் பட்டணத்திலிருந்து என்றைக்கு வந்தீர்கள்?"

"ஐயா ஆறுமுகம், என்னிடத்தில் கொஞ்சம்....டீக்பாத் கர்னா....சரியான பேச்சுப் பேச வேணும். உங்கள் போலீஸ் பித்தலாட்டம் எல்லாம் நம்பகிட்ட காட்டக்கூடாது."

"என்ன, என்ன? என்ன பித்தலாட்டம்?"

"என்னவா! நான் அந்த மலைக்கள்ளனுக்கு நண்பன் என்பது உங்களுக்குத் தெரியும். எனக்கும் அவனுக்கும் அடிக்கடி சமாசாரப் போக்குவரவு எல்லாம் உண்டு என்பதையும் உங்களுக்கு நாம் ஒளித்ததில்லை. அப்படியிருக்க, எனக்கும் மலைக்கள்ளனுக்கும் உங்களுடைய ரகசிய ஜவான்களைப் போட்டுக் கவனிக்கச் சொல்லியிருக்கிறீரே என்னத்திற்கு? நாம் சொன்னதை நம்பினால் நம்புங்கள், ஷஹீதோ....இல்லாவிட்டால் நமக்கும் உங்களுக்கும் ஒன்றும் வேண்டாம். உங்கள் இஷ்டப்படி சாமர்த்தியம் போலச் செய்துகொள்ளுங்கள்" என்று சாயபு கோபித்தார்.

"இல்லை........உண்மைதான்........நீங்கள் பட்டணம் போவதாக........சொல்லி....பட்டணம் போகாமல் மறுநாள் புளியந்தோப்புக்குப் போனதாக...."

"அதெல்லாம் தெரியாது, சாப். சப்-இன்ஸ்பெக்டர் ஜீ! உங்கள் ஆள் இனிமேல் நம்மைத் தொடரக் கூடாது, சம்மதமா?"

"சரி, கோபித்துக்கொள்ள வேண்டாம். அப்படியே ஆகட்டும்."

"பரோபர்....அச்சா! ஏழெட்டு நாளாக உங்களுக்காக மலைக்கள்ளனிடத்தில் அநேக தடயங்களையும் சாட்சியங்களையும் நாம் கெஞ்சிக் கேட்டு வாங்கி வந்தோம்....இதோ....மேஜை மேலிருக்கிற இதையெல்லாம் நான் கொண்டுவரும்போது குறுக்கே உங்கள் ஜவான்கள் என்னைப் பிடித்து, உங்கள் பெரிய இன்ஸ்பெக்டரிடத்தில் கொண்டுபோய்விட்டால் என்ன செய்கிறது?"



"ஆமாம்....வாஸ்தவந்தான்....சரிதான், மன்னித்துக் கொள்ளுங்கள். இனிமேல் உங்களை யாரும் தொடரமாட்டார்கள். இது சத்தியம்."

"பகுத் அச்சா!....சபாஷ்! ரொம்ப ரொம்ப சந்தோஷம். என்னை நம்புங்கள், சாப். முசல்மான் மோசம் செய்யமாட்டான். சரி, அப்........இப்போ........நான் சொல்லுவதைக் கவனியுங்கள். உங்கள் கச்சேரி கிதாப்மே....உம்....கச்சேரி ரிகார்டுகளின் கணக்குப்பிரகாரம் எத்தனை கேசுகள் கண்டுபிடிக்க வேண்டியிருக்கிறது?....தெரியுமா உங்களுக்கு?"

"ஆஹா தெரியும். மனப்பாடமாக ஒப்பிப்பேன். ஏழு கொலைகளும், ஒன்பது கொள்ளைகளும், இரண்டு மூன்று களவுகளும் தாக்கலாகி இருக்கின்றன."

"சரி, நீங்கள் அதற்காக 'ஸ்பெஷல் டியூட்டி' அல்லவா?....சப்-இன்ஸ்பெக்டர் சாப். கோபித்துக்கொள்ள வேண்டாம். நான் உங்களைப் பரீட்சை செய்கிறேன். இதோ இந்த மூட்டையை அவிழ்த்துப் பார்த்து, அதிலிருக்கும் சொத்துகள் எந்தக் கேசில் சம்பந்தப்பட்டனவென்று சொல்லுங்கள் பார்க்கலாம்" என்று மேஜையின் மேலிருந்த பைகளில் ஒன்றை எடுத்து, சப்-இன்ஸ்பெக்டர் பக்கத்தில் வைத்து, சாயபு ஊதா விளக்கைத் தூண்டிவிட்டார். சப்-இன்ஸ்பெக்டர் அவிழ்த்துப் பார்த்தார். அதில் அனேக பழைய காலத்து நகைகளும் சில பத்திரங்களும் இருந்தன. மிக்க விலையுயர்ந்த நகைகள்! ஆறுமுகம் ஆச்சரியப்பட்டுக்கொண்டே புரட்டிப் புரட்டிப் பார்த்தார்; புரியவில்லை. சாயபு கேலி செய்வது போலச் சிரித்துக்கொண்டே தம்முடைய ஊதா மூக்குக் கண்ணாடியைத் துடைத்துக்கொண்டு பக்கத்தில் நின்று பார்த்துக்கொண்டிருந்தார்.

கடைசியாக ஸ்ரீ ஆறுமுகம், "சாயபுவாள், எனக்கே வெட்கமாகத்தானிருக்கிறது. என்னுடைய குறிப்புகளைப் பார்த்துச் சொல்லுகிறேன்" என்று தம் சட்டைப் பையிலிருந்து ஒரு சிறு குறிப்புப் புத்தகத்தை எடுத்தார்.

உடனே அப்துர் ரஹீம், "நஹீம் நஹீம்....கூடாது....ஓ மத்கர்னா....எல்லாம் மனப்பாடம் என்றீரே. புத்தகத்தைப் பார்க்கக்கூடாது....அது போகட்டும். இதைப் பாருங்கள்" என்று அந்த மூட்டையை அப்படியே கட்டிவிட்டு, இன்னொரு சிறு மூட்டையை எடுத்துக் கொடுத்தார். அதை அவிழ்த்துப் பார்த்துவிட்டு, "ஓ! இது நன்றாகத் தெரிகிறது. இது சமீபத்தில் நடந்த விஷயம். மறந்துவிடுவேனா? இவைகள் கேசவ சாவ்கார் வீட்டில் களவு போன தடயங்கள்" என்றார் ஸ்ரீ ஆறுமுகம்.

"சரி, சந்தோஷம். இதையாவது சொன்னீரே! இருக்கட்டும். உம்முடைய குறிப்புப் புத்தகத்தில் குற்றங்கள் நடந்த தேதிகளை வரிசையாகக் குறித்திருக்கிறீரா?" என்றார் சாயபு.

"குறித்திருக்கிறேன்."

"பரோபர்....நான் ஒவ்வொன்றாக, குற்றங்கள் நடந்த வரிசையில் குற்றவாளிகளையும், சம்பந்தப்பட்டவர்களையும் மற்ற விவரங்களையும் சொல்லிக்கொண்டே வருகிறேன். நீங்கள் விசாரித்தறிந்த விஷயங்களோடு நான் சொல்வதையும் சேர்த்துக் கேசுகளை உருவாக்கிக் கொள்ளுங்கள். சொல்லட்டுமா?"

"சொல்லுங்கள்....சொல்லுங்கள்" என்று ஆறுமுகம் வெகு ஆவலுடன் தம்முடைய குறிப்புப் புஸ்தகத்தையும் பென்சிலையும் எடுத்துக்கொண்டு அப்துர் ரஹீமை அங்காந்து பார்த்துக்கொண்டிருந்தார்.

அப்துர் ரஹீம் சாயபு மூட்டைகளையும் தஸ்தாவேஜுகளையும் முன்னால் தாம் வைத்திருந்த வரிசையில் வைத்துக் கொண்டு ஆரம்பித்தார்.

"சப்-இன்ஸ்பெக்டர் ஹஸ்ரத்....தாங்கள் ஒன்றும் எழுதிக் கொள்ள வேண்டியதில்லை. நானே உங்களுக்காக ஒவ்வொரு குற்றத்தையும் தனித்தனியாக, தேதி, குற்றவாளிகள், உடந்தையாக இருந்தவர்கள், சொத்து விவரம், கொலையுண்டவர்கள், சாட்சிகள் முதலிய எல்லா விவரங்களையும் இதோ இதில் எழுதி வைத்திருக்கிறேன். அதைத் தாங்கள் எடுத்துக் கொண்டு போகலாம். இப்போது கொஞ்சம் மாதிரிக்காகச் சொல்லுகிறேன். ஆப்சுனோ, பஸ்....நீங்கள் கேளுங்கள் போதும்."



"அப்படியே....சொல்லுங்கள்."

"கவனமாகக் கேளுங்கள். முதல் கேஸ்: **குட்டிபட்டியில் நடந்த கொலையும் கொள்ளையும்**—குட்டிபட்டி ஜமீன்தாருக்கு எதிரியான நல்லதம்பியைக் கொன்று, சுமார் லட்சம் ரூபாய் சொத்துகளைக் கொள்ளையடித்தது. கொலை செய்தவர்கள் காத்தவராயனும் கருங்காட்டு நீலமேகமும். கொள்ளையில் கலந்துகொண்டவர்கள் 17 பேர்கள். அவர்களுடைய பெயர்கள் விலாசம் எல்லாம் அந்தப் புத்தகத்தில் இருக்கின்றன. குற்றத்துக்குத் தூண்டிவிட்டவர் ஜமீன்தார். காத்தவராயனை ஜமீன்தாருக்கு விலைபேசி விட்டவன் வீரராஜன்.

"2-வது கேஸ்: **வெள்ளைக்காட்டுக் கொலையும் கொள்ளையும்**—வீரராஜனுக்கு விரோதியான சின்னச்சாமி மிராசுதாரைக் கொன்று, அவருடைய இரண்டு லட்சம் ரூபாய் மதிப்புள்ள சொத்துகளைக் கொள்ளையடித்தது. கொலையாளிகள் காத்தவராயனும் வேலம்பாடி கிருஷ்ணையாவும். தூண்டிவிட்டவன் வீரராஜன். மற்ற விவரங்கள் புத்தகத்தில்.

"3-வது கேஸ்: **மாங்காட்டுக் கொள்ளை**—இதில் கொலை இல்லை. நெல்லுமண்டி வேலுச்சாமியின் லட்ச ரூபாய் சொத்துகள், ரொக்கம் மட்டும் பதினைந்து ஆயிரம். குற்றவாளிகள் காத்தவராயனும் இன்னும் 14 பேர்களும்.......

"4-வது கேஸ்: **பருத்திக் காட்டூர் கொலையும் கொள்ளையும்**—மாட்டு வியபாரி ஜெயராமனைக் கொன்று, 65 ஆயிரம் ரொக்கத்தையும் 500 மாடுகளையும் கொள்ளையடித்தது. இந்த மாடுகளைக் குட்டிபட்டி ஜமீன்தார் விலைக்கு வாங்கினதாகப் பொய் ரசீதுகளைத் தயார் செய்து விற்றுப் பணமாக்கிக்கொண்டது—கொலை செய்தவர்கள் காத்த

வராயனும் தென்னஞ்சோலை சோமசுந்தரமும். உளவிருந்தது வீரராஜனும் குட்டிபட்டி ஜமீன்தாரும்.......

"5 - வது கேஸ்: **களிமண்காட்டுக் கொலையும் கொள்ளையும்**—கோட்டக்காட்டு அங்கமுத்துவைக் கொன்று, மூன்று லட்சம் பெறுமான சொத்துகளைக் கொள்ளை யடித்தது. குற்றவாளிகள் காத்தவராயன், கிருஷ்ணையா, சோமசுந்தரம். வீரராஜனும் குட்டிபட்டி ஜமீன்தாரும் இதில் கலந்திருந்ததாகச் சந்தேகம். அதற்கு ருசு இன்னும் கிடைக்க வில்லையென்று மலைக்கள்ளன் சொல்லுகிறார்....

"மாதிரிக்குச் சொன்னது போதுமா? இன்னும் படிக்கட்டுமா?" என்று சாயபு கேட்டார்.

"போதும். போதும்....மற்றவைகளை நானே படித்துக் கொள்ளுகிறேன். உங்களுக்கேன் இவ்வளவு சிரமம்?" என்றார் ஆறுமுகம்.

"ரொம்ப ரொம்ப சந்தோஷம், சலாம். இதையெவ்லாம் நிதானமாகப் படித்துப் பாருங்கள். உங்களுடைய சொந்த முயற்சிகளால் இந்த ஒரு வருஷமாகப் பாடுபட்டு நீங்கள் சேகரம் செய்திருக்கிற துப்புகளையும் சேர்த்துப் பார்த்து ஒரு நிச்சயமான தீர்மானத்துக்கு வர, உங்களுக்கு எவ்வளவு நேரமாகும்?" என்றார் சாயபு.

"நீங்கள் சொல்லிக்கொண்டு வந்தபோதே எனக்குத் தெரிந்த விஷயங்களையும் சேர்த்துப் பார்த்துக்கொண்டேதான் வந்தேன். அநேகமாக எல்லாம் நான் அனுமானித்த மாதிரியே தான் இருக்கின்றன. இருந்தாலும் சாட்சிகளை ஒழுங்கு பண்ணிக் கேசுகளை உருப்படியாக்க நாளாகும்."

"அரே-ரே-ரே! நான் அதைக் கேட்கவில்லை, சாப். கேசுகள் தயாராக நாளும் ஆகும். மாசமும் ஆகும், வருஷங்கூட ஆகலாம். நான் கேட்கிறது அதுவல்ல. குற்றவாளிகளைத் தகுந்த சந்தேகத்தின்மேல் கைது செய்வதற்கு வேண்டிய சங்கதிகளைத் தீர்மானம் செய்துகொள்ள, இந்த ரிகார்டுகளைப் பார்க்கத் தங்களுக்கு எவ்வளவு நேரம் பிடிக்கும்?"



"ஓ! அதுவா?....ஏன் இப்போதே இருந்தாலும், ஒரு மணி நேரம் உட்கார்ந்தால் போதும்."

"சரி, நமக்கு இன்றைக்குத் தூக்கம் கெட்டாலும் கெடட்டும். இன்னும் இரண்டு மணி நேரத்துக்குத் தங்களைத் தனியாக இங்கே விட்டுவிட்டுப் போகிறேன். கொஞ்சம் நான் வெளியே போய் வரவேண்டும். அதற்குள் தாங்கள் எல்லா வற்றையும் படித்துப் பார்த்து நான் சொல்லுகிற பேர்வழிகளை ஜரூர்சே....சீக்கிரம் கைது செய்ய முடியுமா என்று தீர்மானித்து வையுங்கள். நான் போய்வரலாமா?" என்றார் சாயபு.

"மெத்த சந்தோஷம். அதுவும் நல்லதுதான். நான் தனியாக இருந்தால் நன்றாகக் கவனம் செலுத்திப் படிப்பேன். நீங்கள் போய் வாருங்கள்."

"சப் இன்ஸ்பெக்டர்ஜீ, இன்னொன்று. இங்கே ரொம்ப ரொம்ப பணமும் நகையும் இருக்கின்றன. நீங்கள் ஒருவேளை அடித்துக்கொண்டு 'டகல்' போய்விடாதபடி வெளியில்—உங்களை—பூட்டிக்கொண்டு போக வேண்டியிருக்கிறது. சம்மதமா?" என்று சாயபு சிரித்தார். ஆறுமுகமும் கூடச் சிரித்து, "சரி, அப்படியே செய்யுங்கள்" என்றார். அப்துர் ரஹீம் போய்விட்டார்.

சப் இன்ஸ்பெக்டர், சாயுபு கொடுத்த விவரங்களையெல்லாம் தம்முடைய குறிப்புகளோடு சேர்த்துப் பார்த்து ஆராய்ந்தார். சாயுபு சொன்னவையெல்லாம் சரிதான். அத்துடன் தமக்குக் கிடைக்கமுடியாத சாட்சிகளுடைய விவரங்களும் சாயுபு கொடுத்த குறிப்புகளில் இருப்பதைக் கண்டு பரம சந்தோஷப் பட்டார். ஆனால், மலைக்கள்ளன்மேல் தமக்கிருந்த சந்தேகம் முன்னிலும் அதிகப்பட்டது. ஏனென்றால், மலைக்கள்ளன் கொன்றுவிட்டதாகத் தாம் நம்பி இருக்கிற மேலமேகம், கிருஷ்ணையா, சோமசுந்தரம், பருத்திக் காட்டூர் ஆள்கள் முதலானவர்களுடைய மரணத்தைப்பற்றி மட்டும் சாயுபு கொடுத்த குறிப்புகளில் பேச்சே இல்லை. தம்முடைய நண்பனான மலைக்கள்ளனைக் காட்டிக்கொடுத்துவிடக்கூடா

தென்ற எண்ணத்தால்தான் சாயபு அதைப்பற்றி ஒன்றும் எழுதவில்லை என்று தீர்மானித்துக்கொண்டார்.

தாம் சொல்லிப்போன இரண்டு மணி நேரத்துக்கு முன்னாலேயே அப்துர் ரஹீம் சாயபு அதிவேகமாக மாடிக்கு ஓடிவந்து, ஆறுமுகத்தை வெகு அவசரமாக எழுந்து வரச் சொன்னார். இன்னதென்று தெரியாமல் ஆறுமுகம் அப்படியே போட்டுவிட்டு எழுந்து போனார். அறையைப் பூட்டிக்கொண்டு இருவரும் கீழே கட்டடத்துக்கு வெளியில் வந்தார்கள். அங்கே இருட்டில் ஐந்தாறு பேர் நிற்பதை ஆறுமுகம் கண்டார். அப்துர் ரஹீம் அங்கே நின்றவர்களில் ஒருவனைத் தனியாகக் கூப்பிட்டு ஏதோ ரகசியமாகச் சொல்லிவிட்டு, ஆறுமுகத்தைக் காடிகானாவிற்குள் கூட்டிப் போனார். அங்கே ஒரு கட்டிலின் மேல் சாயபுவின் வண்டிக்காரன் வைத்தி ரத்தக்கறைகளோடு குற்றுயிராகக் கிடந்தான். "இதென்ன இது! இதற்கா என்னைத் தனியாக விட்டுவிட்டுப் போனீர்கள்? நடந்தது என்ன சாயபு?" என்று ஆறுமுகம் கேட்டார்.

"நடந்ததையெல்லாம் சொல்லிக்கொண்டிருக்க நேரமில்லை, சப் இன்ஸ்பெக்டர் சாப். மெஹர்பானி பண்ணுங்கள். வண்டி இருக்கிறது. தாங்கள் உடனே இவனை சர்க்கார் ஆஸ்பத்திரிக்குக் கொண்டுபோய் பெரிய டாக்டரை எழுப்பி, சிகிச்சை செய்ய வேண்டும். இவனை உங்களுடைய துப்பு ஆள் என்றும், உங்கள் 'ஸ்பெஷல் டியூட்டி' வேலையில் போன இடத்தில் கள்ளர்களால் குத்துண்டான் என்றும் சிபார்சு செய்து, பக்கத்திலிருந்து செய்ய வேண்டியதையெல்லாம் கவனித்து வர வேண்டும். உங்களை ரொம்பக் கேட்டுக்கொள்ளுகிறேன். விவரம் பின்னால் சொல்லுகிறேன்" என்று சாயபு அவசரப்படுத்தினார்.

நாலைந்து பேர் வைத்தியை அலுங்காமல் தூக்கி வந்து வண்டியில் கிடத்தினார்கள். சப் இன்ஸ்பெக்டர் முன்னால் வண்டிக்காரனுக்குப் பக்கத்தில் உட்கார்ந்துகொண்டார். இன்னொருவன் வைத்தியை ஆடாதபடி அணைத்துக்கொண்டான். ஆஸ்பத்திரிக்குக் கொண்டு போய்விட்டார்கள்.



சுமார் மூன்று மணிக்கு சப் இன்ஸ்பெக்டர் திரும்பி வந்தார். பெரிய டாக்டரே வந்து வைத்திக்குக் கட்டுக் கட்டினார் என்றும், கத்திக் குத்து ஈரற் குலையில் பட்டிருப்பதாகவும், பிழைப்பது கஷ்டம் என்று டாக்டர் சொன்னதாகவும் ஆறுமுகம் சொன்னார்.

"அரே! அரே பஹுத் அச்சீ நௌகர் சாப்....ரொம்ப நல்ல வேலைக்காரன் சாப் அவன். அல்லாஹு தாலாவுடைய பிரியம் எப்படியிருக்கிறதோ?" என்று சாயபு மிகவும் துக்கப்பட்டு, அவன் பிழைத்துக்கொள்ள வேணும் என்று பல முறை ஆண்டவனைத் தொழுதார்.

"சப் இன்ஸ்பெக்டர் சாப், இனிமேல் நாம் ஒரு க்ஷணம் கூடச் சும்மா இருக்கக்கூடாது ரஹேதோ....இருந்தால் எனக்கும் ஆபத்து; உங்களுக்கும் அபாயம்; நம்ம மலைக்கள்ளனுக்கும் அப்படியே. காரியங்கள் வெகு வேகமாக நடக்கவேணும்" என்றார் சாயபு.

"ஆமாம், வைத்தியைக் குத்தினது யார்? நடந்ததென்ன? அப்போது நீங்கள் எங்கே இருந்தீர்கள்? தயவு செய்து முதலில் அதைச் சொல்லுங்கள்" என்று ஆறுமுகம் ஆவலோடு கேட்டார்.

"உங்களுக்குச் சொல்லாமல் வேறு யாருக்குச் சொல்லப் போகிறேன், மாராஜ். கொஞ்சம் பெரிய மனசு பண்ணிப் பொறுத்துக்கொள்ளுங்கள். அதைப்பற்றிப் பின்னால் சொல்லுகிறேன். இப்போது அதைவிட அவசரமாக நாம் கவனிக்க வேண்டிய வேலை அதிகம் இருக்கிறது. வைத்தியைக் குத்திஆச்சு. நம்மைக் குத்தப் பார்க்கிறார்கள். ஆகையினால், நாம் குத்து வாங்காமல் பார்த்துக்கொள்ள வேண்டியதுதான் முதல் வேலை....அதிருக்கட்டும். நான் தந்த குறிப்புகளையெல்லாம் பார்த்தீர்களா? ஹம்போல்யே சாப்—நான் சொன்னதெல்லாம் உங்களுக்குச் சரியென்று புலப்படுகின்றதா? குற்றவாளிகளை உடனே 'அரஸ்ட்' செய்ய நான் கொடுத்த சாட்சியங்கள் போதுமா?" என்றார் சாயபு.

"நீங்கள் சொன்னதெல்லாம் சரிதான். குற்றவாளிகளை இன்றைக்கே கைது செய்வதற்குப் போதுமான ஆதாரங்கள் இருக்கின்றன. ஆனால்....ஆனால்...."

"ஆனால்....என்ன ?"

"ஆனால் அந்த நீலமேகம், கிருஷ்ணையா, சோமசுந்தரம் முதலானவர்களைக் கொலை செய்தவனைப்பற்றித் தாங்கள் ஒன்றும் சொல்லவில்லையே ! உங்கள் குறிப்புகளிலும் இல்லை."

"ஸச்சீச்........உண்மைதான். தாங்கள் துப்பறிந்து விசாரித்த வரையில் அவர்களைக் கொன்றது யாரென்று உங்களுக்குத் தோன்றுகிறது?" என்று அப்துர் ரஹீம் சிரித்தார்.

"எனக்கா !....எனக்கு....எனக்கு....அவர்களைக் கொன்றவன்....உங்க....உங்கள்...."

"சொல்லுங்கள் மஹாராஜ், ஆறுமுகம் ! சொல்லுங்கள்' யோசிக்க வேண்டாம்."

"உங்களுடைய சினேகிதர் மலைக்கள்ளர்தாம் அவர்களைக் கொன்றவர் என்று நிச்சயமாக எனக்குத் தெரிகிறது."

"சப் இன்ஸ்பெக்டர்—பாய் !—அதைப்பற்றி முன்னாலேயே தங்களைக் கேட்டுக்கொண்டிருக்கிறேன். நம்முடைய நண்பர் மலைக்கள்ளன் விஷயத்தில் தாங்கள் கொஞ்சம் தாட்சண்யம் காட்ட வேண்டும் என்று. தாங்களும் சம்மதித்திருக்கிறீர்கள்" என்றார் சாயபு. ஆறுமுகம் கொஞ்சம் யோசனை செய்து, "இருந்தாலும் கொலைக் குற்றங்களை........எப்படி ?........ எப்படி ? எனக்கு நன்றாகத் தெரிவதை....மனச்சாட்சிக்கு விரோதமாக எப்படி ?....நான் என் டியூட்டியில்....என்னாற் கூடுமான தாட்சண்யம் காட்டுவதாகச் சொன்னது உண்மை தான்...."

"அதென்னமோ எனக்குத் தெரியாது. அந்த என்னுடைய ஆப்தமான....ஆஷ்ணாவுக்கு, நண்பருக்குக் கொஞ்சம் தாட்சண்யம் காட்டத்தான் வேணும்........சரி; இப்போதைக்குத் தாங்கள் வேறு உபகாரம் செய்யாவிட்டாலும், அந்த மலைக்கள்ளன் மேலிருக்கிற கேசுகளை இந்தச் சமயத்தில் கிளறிக்கொண்டிருக் காமல்; நிச்சயமாக இப்போது ருசுப்படுத்தக்கூடிய மற்றக் கேசுகளை நடத்துங்கள். மலைக்கள்ளன் விஷயத்தைப் பின்னால் பார்த்துக்கொள்வோம். இந்த உதவிகூடத் தாங்கள் செய்யக்கூடாதா ?"



"ஆஹா, இதை நான் சந்தோஷமாகச் செய்வேன். அந்தக் கொலைகளை விட்டுவிட ஒத்துக்கொண்டேனென்கிற மனக் குத்தல் இல்லாமலாவது இருக்கும். அப்படியே ஆகட்டும். இனி நாம் உடனே செய்ய வேண்டியது என்ன ?" என்று சப் இன்ஸ்பெக்டர் சம்மதித்தார்.

"இப்போது செய்ய வேண்டியதா ? முதலில் நாம் சொக் கேசரைக் கண்டுபிடித்து மீட்க வேண்டும். தாங்கள் இரண்டு மூன்று நாள்களுக்கு முன்னால் சொக்கேசரைக் கண்டுபிடித்து வருவதாகப் பூங்கோதையம்மாளிடம் சொல்லிவிட்டுப் போனீர் களே; அது என்னவாச்சு ? சொக்கேசர் இப்போது எங்கே இருக்கிறார் ?"

ஆறுமுகம் ஆச்சரியத்தோடு வாயைப் பிளந்துகொண்டு கண்ணை உருட்டிப் பார்த்து, "அது உங்களுக்கு எப்படித் தெரியும் ?" என்றார்.

"எனக்குத் தெரியும். நம்ப ஆள் வைத்தி வெகு கெட்டிக் காரன். எதையும் கண்டுபிடிப்பான்....அத்தோடு சொக்கேச ரைப்பற்றிய எல்லா விவரங்களையும் நம் மலைக்கள்ளன் எனக்குச் சொல்லியனுப்பியிருக்கிறார். அவரை மீட்க வேண்டிய காரியங்களைத்தங்களுடைய உதவியைக்கொண்டு முடிக்கும் வழிகளையும் மலைக்கள்ளனே சொல்லியனுப்பியிருக்கிறார்."

அப்படியா !—அந்த மலைக்கள்ளர் சொக்கேசரைப் பற்றிய விஷயங்களில் வெகு சிரத்தை கொண்டவராக இருக்கிறாரே, இதற்கெல்லாம் என்ன காரணம் ? மலைக்கள்ள னுக்குச் சொக்கேசர்மேலுள்ள அன்பா ? அல்லது வீரராஜன் மேலுள்ள வெறுப்பா ?" என்று ஆறுமுகம் ஆச்சரியப்பட்டார்.

"ஹோ—சாப், எனக்கும் அது கொஞ்சம் புரியாமல்தான் இருக்கிறது. நானும் ரொம்பக் கவனித்து வருகிறேன். நம்ப நேசருக்குச் சொக்கேசருடைய பெண்ணின் மேல் கண் இருக்கும் போலத் தெரியுது."

"ஐயையோ ! அப்படியா ? இதென்ன அநியாயம் ! விலங்குக்குத் தப்பித் தூக்கு மரத்தில் தொங்கின மாதிரியாக............ வீரராஜனுக்குத் தப்பின அந்தப் பெண்ணை...."

"அதெப்படியோ போகட்டும், சாப். நான் தமாஷாகச் சொன்னேன். அவர் இல்லாத இடத்தில் நாம் அதைப் பேசுவது நல்லாயில்லை....அது போகட்டும். நாம் உடனே சொக்கேசர் கஷ்டத்தை நீக்க வேண்டும். தாங்கள் போன சமாசாரம் என்ன ? சொக்கேசர் எங்கே இருக்கிறார் ? உங்களுக்குத் தெரிந்த மட்டில் அவர் எங்கே இருக்கிறார் ?" என்று சாயபு மறுபடியும் கேட்டார்.

"ஆமாம். நான் மூன்று நாளைக்கு முன்னால் போனது உண்மைதான். இங்கிருந்து பதினைந்து மைல் தூரத்தில், குட்டிப்பட்டி ஜமீன்தாருக்குச் சொந்தமான ஒரு தோட்டமும், அதில் ஒரு பழைய வீடும் இருக்கின்றன. அதில் சொக்கேசரை அடைத்து வைத்திருக்கிறார்கள் என்று எண்ணத் தகுந்த காரணங்கள் இருக்கின்றன. அந்தத் தோட்டத்தைச் சுற்றி வெகு தூரம் வரையில் அங்கங்கே காத்தவராயனுடைய கூட்டத்தார் தோட்ட வேலைக்காரர்களைப் போலவும், மாடு மேய்ப்பவர்களைப் போலவும், மரம் வெட்டுகிறவர்களைப் போலவும் காவல் செய்கிறார்கள். நான் நல்ல பந்தோபஸ்துகளுடன்தான் போனேன். ஆனால், ஒன்றும் செய்ய முடியவில்லை. அவசரப்பட்டால் சொக்கேசருக்கு ஏதாவது கெடுதல் நேரலாமென்று பயந்து திரும்பி வந்துவிட்டேன். இன்ன விதமாகச் செய்ய வேணும் என்பது எனக்கு நிச்சயப்படவில்லை. உங்களுக்கு எப்படி யோசனை ? சொல்லுங்கள். என்னோடு கலந்து, என்னுடைய சகாயத்தோடு அதைச் செய்ய வேணும் என்று மலைக்கள்ளன் சொன்னதாகச் சொன்னீர்களே !" என்று ஆறுமுகம் கேட்டார்



இந்தச் சமயத்தில் யாரோ கதவைத் தட்டுகிற சத்தம் கேட்டது. சாயபு கீழே போய் உள்ளே இருந்தபடியே தட்டினது யார் என்பதைக் கேட்டுக்கொண்டு கதவைத் திறந்தார். சப் இன்ஸ்பெக்டருடைய வீட்டு ஜவானும் சொக்கேசர் வீட்டு வண்டிக்காரனும் கதவுக்கு வெளியில் நின்றார்கள். சொக்கேசர் வீட்டு வண்டிக்காரன் வெகு அவசரமான ஒரு காரியமாக சப் இன்ஸ்பெக்டரைப் பார்க்க, பூங்கோதையினுடைய உத்தரவால் வந்திருப்பதாக ஜவான் சொன்னான். உடனே சாயபு ஜவானை வெளியில் இருக்கச் சொல்லிவிட்டு வண்டிக்காரனை மட்டும் கூட்டிக்கொண்டு மேலே போனார்.

வந்த வண்டிக்காரன் ஸ்ரீ ஆறுமுகத்தைப் பார்த்ததும், "பூங்கோதை அம்மா இதை உங்ககிட்டவே குடுக்க வேணும், நீங்க இல்லாட்டி திரும்பிக் கொண்டாந்துடுணும், வேறே யாரு கிட்டேயும் குடுக்கக் கூடாதுண்ணு சொன்னாங்க" என்று சொல்லிக்கொண்டே ஒரு கடிதத்தை நீட்டினான். சப் இன்ஸ்பெக்டர் வாங்கிப் படித்துப் பார்த்து, "இது எப்போது வந்தது ?" என்று கேட்டார்.

"எனக்கு அது எப்ப வந்ததுண்ணு தெரியாதுங்க. எங்கிட்டே காலமே குடுத்தாங்க. அப்போ இருந்து உங்க வீட்டுக்குப் பத்து நடை போனேனுங்க. நீங்க சிக்கலிங்கோ."

"சரி, போ. கடிதத்தை என்னிடமே கொடுத்தாச்சு என்று சொல்லு. நான் அதற்கு வேண்டியதெல்லாம் செய்கிறேன் என்று பூங்கோதையிடம் சொல்லு. பயப்பட வேண்டாம் என்று சொல்லு. போ........இரு இரு. இந்தக் கடிதம் வந்தது காமாக்ஷியம்மாளுக்குத் தெரியுமா ?"

"இல்லிங்கோ, தெரியாது. என்னைச் சொல்ல வாண்டாமுண்ணு சின்ன அம்மா சொன்னாங்க."

வண்டிக்காரனை அனுப்பிவிட்டுக் கதவைத் தாழ் போட்டுவிட்டு வந்த சாயபுவிடம் கடிதத்தைக் கொடுத்தார் ஆறுமுகம். கடிதத்தில் :

"சௌ. பூங்கோதைக்கு. மலைக்கள்ளன் குறுக்கே வந்ததால் நீ தப்பித்துக்கொண்டாயென்று கர்வங் கொள்ளாதே. புதன்கிழமை சாயந்திரம் 6 மணிக்குள் கலியாணம் செய்துகொள்வதாகச் சம்மதிக்கா விட்டால், உன் தகப்பனார் சொக்கேசர் கொல்லப் படுவார். பதில் எங்கே அனுப்ப வேணுமென்பது உனக்கே தெரியும்."

என்று எழுதப்பட்டிருந்தது.

"மலைக்கள்ளன் குறுக்கே வந்ததனால் தப்பித்துக்கொண டாய் என்று இருக்கிறதே, அது என்ன சாயபுவாள்? முன்னே காத்தவராயன் கூட்டத்தாரிடமிருந்து மலைக்கள்ளன் பூங்கோதையை மீட்டானே அதுவாயிருக்குமோ?" என்றார் ஆறுமுகம்.

"அதெல்லாம் அப்புறம் யோசனை செய்துகொள்ளலாம். சப்இன்ஸ்பெக்டர் சாப், நான் சொல்லுவதைக் கேளுங்கள். இதெல்லாம் அந்த அயோக்யப் பெரிய மனிதன் வீரராஜன் செய்யும் வேலை. பூங்கோதையம்மாளுடைய அழகிலும்—அதைக் காட்டிலும் அவள் சொத்திலும் ஆசைகொண்ட வீரராஜன் வெகு நாளாக ரொம்ப பணச் செலவில் செய்து வருகிற சதி இது. இன்றைக்கு என்ன கிழமை? ..............திங்கட்கிழமையா.... ........சரி, இன்னும் இரண்டு பகல் ஒரு ராத்திரி இருக்கிறது. நாம் தாமதிக்கக்கூடாது ; நாளை ராத்திரிக்குள் மலைக்கள்ளர் நமக்குக் கொடுத்திருக்கிற பிளான்படி செய்து முடித்துவிட வேணும். நீங்கள் நாளைப் பகல் பத்து மணிக்குள் வீரராஜன்; காத்தவராயன், குட்டிப்பட்டி ஜமீன்தார் இந்த மூன்று பேரை யாவது உடனே "அரஸ்ட்" செய்ய 'வாரண்ட்' வாங்க முடியுமா?"

"ஆஹா. பேஷா முடியும்."

"அச்சா! துப்பாக்கி, தோட்டாக்களுடன் குறைந்தது 25 ஜவான்கள் அந்தக் குட்டிபட்டி ஜமீன்தாருடைய தோட்ட வீட்டை முற்றுகை போட்ட மாதிரி வளைத்துக்



கொள்ள நாளை மாலை 5 மணிக்குள் தயாராக வேண்டும். முடியுமா?"

"முடியும். ரிசர்வ் போலீஸ் வந்தால் பாதகமில் லையே?"

"இல்லை. அதோடு உங்களுடைய ஜவான்களில் மிகவும் நம்பிக்கையானவர்களாக 10 அல்லது 12 பேர் உடுப்புப் போடாமல், நாளை இரவு எட்டு மணிக்கே, நான் உங்களுக்குக் குறித்துத் தருகிறபடி அந்தந்த இடத்துக்குப் போய் மறைந் திருக்க வேண்டும். இந்தப் பன்னிரண்டு பேரும் ரொம்பவும் நம்பத் தகுந்தவர்களாக இருக்க வேண்டும். அப்படிப்பட்ட ஆள்கள் உங்களிடம் இல்லாவிட்டால் நான் மலைக்கள்ளனுக்குச் சொல்லியனுப்ப வேணும். முடியுமா? என்ன யோசனை?"

"அந்தப் பன்னிரண்டு பேரும் போலீஸ்காரர்களாகத்தாம் இருக்க வேண்டுமா?"

"என்ன! உங்கள் ஜவான்களில் நம்பத்தகுந்தவர்கள் 12 பேர்கள்கூட இல்லையா? சரி, யாரானாலும் சரி, நம்பத்தகுந்த வர்களாக இருந்தால் போதும்" என்றார் சாயபு.

"சரி, தருகிறேன்" என்று சப்இன்ஸ்பெக்டர் மேஜையைத் தட்டினார்.

"அப்புறம், உங்கள் சமாசாரம் கொஞ்சம் கேட்க வேணும், சாப். நீங்கள்; இருட்டில் ஏதாவது அபாயமான நிலைமை ஏற்பட்டால் தைரியமாகச் சமாளிப்பீரா? இப்படிக் கேட்பதை மன்னிக்க வேணும்."

ஆறுமுகம் கொஞ்சம் ரோஷம் வந்தவர் போல்; "எனக்கும் கொஞ்சம் தைரியம் உண்டென்று நம்புங்கள், சாயபு. இந்த மாதிரி நாலைந்து சமயங்களில் நான் நல்ல பேர் வாங்கியிருக் கிறேன்" என்றார்.

"பரோபர், சந்தோஷம். தாங்கள் என் கூடவே இருக்க வேணும். ரொம்ப சலாம். நான் எழுதிக் கொடுக்கிறபடி எல்லா ஏற்பாடுகளையும் ஒன்றுவிடாமல் செய்யும்படி கேட்டுக் கொள்ளுகிறேன்" என்று சாயபு நாற்காலியில் உட்கார்ந்து,

சுமார் அரை மணி நேரம் என்னென்னவோ எழுதினார். ஆறு முகத்திடம் கொடுத்து, "எல்லாம் இதில் இருக்கிறபடியே செய்ய வேணும். எல்லாம் தயார் செய்துகொண்டு, இன்னொரு ரிவால்வரையும் எடுத்துக்கொண்டு, பயணத்தோடு நாளை சாயந்திரம் ஏழு மணிக்கு யாரும் அறியாதபடி இங்கே வந்து விட வேண்டியது. நான் புளியங்தோப்பு வரையிலும் போய் மலைக்கள்ளனையும் கலந்துகொண்டு 6-மணிக்குள் இங்கே வந்து உங்களுக்காகக் காத்திருப்பேன். சரி, சலாம். ரொம்ப சந்தோஷம். போய் வாங்கோ" என்றார்.

மலைக்கள்ளன் என்று சாயபு சொன்ன உடன் சப் இன்ஸ்பெக்டர் திடீரென்று ஏதோ நினைத்துக்கொண்டவர் போல, "ஆமாம் சாயபுவாள், ஒன்று கேட்க மறந்துவிட்டேன், அது சாயந்திரந்தான் என் காதில் விழுந்தது. மெய்யோ பொய்யோ, உங்களைக் கேட்டால்தான் தெரியும் என்று நினைத்துக் கொண்டே வந்தேன். இதுவரையிலும் மறந்து போனேன். ........உம்....மலைக்கள்ளன் வீரராஜனுடைய தாசி ஜானகியை அடித்துக்கொண்டு போய்விட்டானாமே?"

"மலைக்கள்ளன் அப்படிப்பட்ட ஆள் அல்ல, சாப்....நான் தான் அவரைப் பார்க்கப் போகிறேனே. விசாரித்து வருகிறேன்."

## அத்தியாயம் 14

மறுநாள் காலை பத்து மணிக்குள் விஜயபுரி போலீஸ் கச்சேரிக்கு இருபத்தைந்து ரிசர்வ் போலீஸ் ஜவான்கள் வந்து விட்டார்கள். துப்பாக்கியும் கையுமாக அவர்கள் ஊருக்குள் நடை போட்டுக்கொண்டு வந்ததைப் பார்த்த விஜயபுரி ஜனங்கள் என்னென்னவோ பேசிக்கொண்டார்கள்.

சிலர் ஜில்லா கலெக்டர் வரப்போவதற்காக என்றார்கள். சிலர் பெரிய போலீஸ் அதிகாரி வரப்போகிறார் என்றார்கள். சிலர் உள்ளூர் போலீஸுக்குத் துப்பாக்கி சுடும் பரீட்சைக்காக என்றார்கள். ஆனால், பெரும்பாலும் ஜனங்கள், அநேக கொலைகளையும் கொள்ளைகளையும் செய்திருக்கிற மலைக் கள்ளனைப் பிடிக்க அவனுடைய மலை வீட்டைத் தாக்குவதற்காகப் பெரிய இன்ஸ்பெக்டர் ஸ்ரீ சுந்தரம் செய்த ஏற்பாடு என்றே பேசிக்கொண்டார்கள். போலீஸ் கச்சேரிக்குப் பக்கத்தில் வேடிக்கை பார்க்கக் கூட்டமும் கூடிவிட்டது. அந்தக் கூட்டத்தில் காத்தவராயனுடைய துப்பாள்கள் பலர் கலந்திருந்தார்கள்.

சரியாக 5 மணிக்கு இந்த 25 ஜவான்களும் இரண்டு அதிகாரிகளும் ஏழு குதிரை வண்டிகளில் புறப்பட்டார்கள். குட்டிபட்டி ஜமீன்தாருடைய தோட்ட வீட்டை விடிகிற வரையிலும் முற்றுகை செய்ய வேணுமென்றும், யாராவது உத்தரவில்லாமல் அந்தத் தோட்டத்துக்குள் போனாலும் சரி, அல்லது உள்ளேயிருந்து வந்தாலும் சரி, அவர்களைக் கைது செய்ய வேண்டுமென்றும், தப்பியோட முயன்றால் உடனே சுட்டுவிட வேண்டும் என்றும் அவர்களுக்குப் பகிரங்கமான உத்தரவிடப் பட்டது.

பெரிய இன்ஸ்பெக்டர் சுந்தரத்துக்கு சப் இன்ஸ்பெக்டர் வீரராஜன், குட்டிபட்டி ஜமீன்தார் இவர்கள்மேல் வாரண்ட் வாங்கியிருப்பது தெரியாது. ஸ்ரீ ஆறுமுகம் மலைக்கள்ளன் சம்பந்தப்பட்ட கேசுகளைக் கண்டுபிடிக்க 'ஸ்பெஷல் டியூட்டி

யில்' வேலை செய்து வருவதால் அவரே நேராக வாரண்ட் வாங்கவும் ரிஸர்வைத் தருவிக்கவும் அதிகாரம் இருந்தது. வீரராஜனும் ஜமீன்தாரும் பெரிய இன்ஸ்பெக்டருக்கு மிகவும் வேண்டிய மனிதர்களானதால் அவர்கள்மேல் வாரண்ட் வாங்க வேண்டியதைப்பற்றி ஸ்ரீ சுந்தரத்திடம் சப் இன்ஸ்பெக்டர் பிரஸ்தாபிக்கவில்லை. மலைக் கள்ளன் சம்பந்தமான கேசுகளுக்கென்று 'ரிஸர்வ்' வந்தது மட்டும் பெரிய இன்ஸ்பெக்டருக்குத் தெரியும். தாம் இதுவரையிலும் மலைக்கள்ளனைப் பிடிக்கப் பட்டாளமோ ரிஸர்வோ வேண்டும் என்று சொல்லி வந்ததை ஒப்புக்கொள்ளாத சப் இன்ஸ்பெக்டர், இப்போது தம் வழிக்கே வந்துவிட்டாரென்று எண்ணித் தமக்குள்ளேயே சந்தோஷப்பட்டார். ஆனால், மலைக்கள்ளன் சம்பந்தப்பட்ட கேசுகளைப் பிடிக்கக் குட்டிபட்டி ஜமீன்தாருடைய தோட்ட வீட்டுக்கு ஏன் ரிஸர்வ் போக வேண்டும் என்று கொஞ்ச நேரம் சந்தேகித்து....அதைப்பற்றிக் கவலைப்பட வேண்டியது தம் வேலையல்லவென்று விட்டுவிட்டார்.

காகிதத்தில் சாயபு குறித்துக் கொடுத்திருந்தபடியே எல்லா விஷயங்களையும் செய்துவிட்டுச் சரியாக ஏழு மணிக்கு ஸ்ரீ ஆறுமுகம் மாந்தோப்பு வீட்டுக் கதவைத் தட்டினார். மேலே காத்துக்கொண்டிருந்த சாயபு வந்து கதவைத் திறந்தார். இருவரும் மேலே போனார்கள்.

"என்ன, மலைக்கள்ளனைச் சந்தித்தீர்களா? நான் பயணத்தோடு வந்திருக்கிறேன். நாம் எப்போது புறப்பட வேண்டும்? மற்ற எல்லாக் காரியங்களையும் தாங்கள் குறித்தபடி சரியாகச் செய்திருக்கிறேன்" என்று ஆறுமுகம் தம் சட்டையின் உட் புறத்துப் பையிலிருந்து வாரண்டுகளை எடுத்து, சாயபுவிடம் காட்டினார். சாயபு அவற்றைப் பார்த்துக் கொண்டே, "மலைக்கள்ளன் இன்றைக்கு நமக்கு வேண்டிய ஒத்தாசை செய்வதாகச் சொன்னார்....நேற்றுத் தாங்கள் சொன்ன ஜானகியம்மாள் விஷயமும் உண்மைதான். அவள் மலையில்தான் இருக்கிறாள்" என்று, மலைக்கள்ளன் வந்து பூங்கோதையம்மாளை வீரராஜன் பங்களாவிலிருந்து விடுவித்த



விவரங்களையும் சொன்னார். சப் இன்ஸ்பெக்டர் மிகவும் ஆச்சரியப்பட்டார். "பார்த்தீர்களா! நேற்று பூங்கோதையம்மாள் அனுப்பிய வீரராஜன் கடிதத்தில் 'மலைக்கள்ளன் குறுக்கே வந்ததனால்' என்றிருந்ததைப்பற்றி நான் அப்போதே சந்தேகித்தேன்" என்றார் ஆறுமுகம். "ஹோ சாப்! தங்கள் சந்தேகம் சரிதான்........நமக்குப் புறப்பட நேரமாச்சு.... நான் போய்ப் பூங்கோதையம்மாளை ஒரு பேச்சுக் கேட்டு வரவேணும். நம்ம சிநேகர் மலைக்கள்ளன் கேட்டுவரச் சொன்னார். நான் சொக்கேசர் வீடு வரையிலும் போய், அரை மணிக்குள் வந்துவிடுகிறேன். நாம் சரியாக ஒன்பது மணிக்குப் புறப்படலாம். ஹம்னா.......... ....நம்முடைய பொட்டி வண்டி உதவாது. வேறே காடி கொண்டுவரச் சொல்லியிருக்கிறேன்; கோடா........குதிரை நம்மதுதான். பத்தரை மணிக்குள் அங்கே போய்ச் சேர்ந்துவிடலாம். இதோ வந்துவிடுகிறேன்" என்று சாயபு போய்விட்டார்.

சப் இன்ஸ்பெக்டர், பூங்கோதையம்மாளை மலைக்கள்ளன் என்ன கேட்டுவரச் சொல்லியிருப்பான் என்று சிந்தித்துக் கொண்டிருந்தார். ஒரு வேளை கலியாணப் பேச்சாக இருக்குமா?........சே, சாயபு கொஞ்சம் பெருந்தன்மை யுள்ளவராகத்தான் இருக்கிறார்........இந்தச் சமயத்தில் அதையா கேட்கப் போயிருப்பார்?....பின் என்ன....' என்றெல்லாம் எண்ணிக் கொண்டு இருக்கையில் சாயபு வந்துவிட்டார். "சப் இன்ஸ்பெக்டர், தாங்கள் சாப்பாடாச்சா?....சரி; நான் கொஞ்சம் நாஷ்டா பண்ணிக்கொள்கிறேன். நாம் மரம் கிரம் ஏற வேண்டியிருக்கும். ரொம்ப சண்டை போட வேண்டியதானாலும் ஆகும். ஓட வேண்டி ஏற்பட்டாலும் ஏற்படலாம். ஆகையால்; ரொம்ப கனமாகச் சாப்பிடக்கூடாது. நீங்கள் மரம் தொத்துவீரா? உங்கள் பூடுசு வழுக்கிவிட்டுடுமே மாராஜ்" என்றார் சாயபு.

"மரம் ஏற வேணுமா! என்னத்திற்கு?..................நான் ஏறுவேன். பூட்சை வேணுமானால் கழட்டிவிடுகிறேன். கழட்டாமலும் ஏறிப் பழக்கமுண்டு........அதிருக்கட்டும். நாம்

போய் என்ன செய்வது........? பிளான் எப்படி........? அந்த விவரம் எல்லாம் எனக்குக் கொஞ்சம் சொன்னால் அதற்குத் தகுந்தபடி தயார் செய்துகொள்ளுகிறேன்" என்றார் ஆறுமுகம்.

"ஹோ, சரியான பேச்சு. இருந்தாலும் சுனோ சாப்.... தாங்கள் ரொம்ப பெரிய மனசு பண்ணி, அந்தப் பிளான் சமாசாரத்தையெல்லாம் என்னோடும் மலைக்கள்ளனோடும் விட்டு விடுங்கள். நீங்கள் என் பக்கத்திலேயே இருங்கள். சொல்லுகிறபடி செய்யுங்கள், போதும்; மற்றதெல்லாம் அப்போதைக்கப்போது சொல்லுகிறேன். தயவு பண்ணுங்கோ, மாராஜ்."

ஆறுமுகம் அப்படியே ஒப்புக்கொண்டார். அப்துர் ரஹீம் அவசரமாக நாஷ்டா செய்தார். வீட்டைப் பூட்டிக் காவல் வைத்துவிட்டுச் சரியாக ஒன்பது மணிக்கு வண்டியேறினார்கள். வண்டியில் வண்டிக்காரனோடு வேறொரு ஆளும் முன்னாலேயே இருந்தான்.

ஊரைத் தாண்டி ஒரு மைல் போகும் போது இவர்களுடைய வண்டிக்குப் பின்னால் அரை பர்லாங்கு தூரத்தில் இன்னொரு குதிரை வண்டி வந்தது. சப்-இன்ஸ்பெக்டர் அந்த வண்டி யாருடையதென்று அறிய ஆசைப்பட்டார். ஆனால் சாயபு, பின்னால் வருகிற வண்டி யாருடையதென்றும்; அதில் யார் வருகிறாரென்று தனக்குத் தெரியுமென்றும் சொல்லி, சப் இன்ஸ்பெக்டரைப் பேசாமல் வரச்சொன்னார்.

பத்தரை மணிக்கு முன்னாலேயே சாயபு குதிரை வண்டி ஜமீன்தாரின் தோட்டத்துக்கு வந்துவிட்டது. முன்னால் ரிஸர்வ் போலீஸ் தலைவர்கள் நின்றுகொண்டிருந்தார்கள். பின்னால் வந்த வண்டி அங்கே வரவில்லை. சாயபுவும் மற்றவர்களும் வண்டியை விட்டு இறங்கி, வண்டியை அவிழ்த்து விட்டுக் குதிரைக்குத் தீனி போடச் சொன்னார்கள். ரிஸர்வ் சப்இன்ஸ்பெக்டர் ஆறுமுகத்திடம் வந்து, ஒருவரும் தோட்டத்துக்கு வெளியிலாவது உள்ளேயாவது போகவில்லை என்று சொன்னார்.



சாயபு குறித்துக் கொடுத்திருந்தபடியே 'ரிஸர்வ்' போலீஸ் அந்தந்த இடங்களில் நிறுத்தப்பட்டிருந்தது. அப்துர் ரஹீம் சாயபுவும் ஆறுமுகமும் தாங்கள் வந்த வண்டியிலிருந்த கம்பளத்தை எடுத்து; பாதையோரமாக வண்டிக்குப் பின்னால் போட்டு உட்கார்ந்துகொண்டார்கள். பக்கத்திலிருந்த விளக்கை அணைத்துவிடச் சொல்லிவிட்டுப் பேசாமல் இருக்கும்படி ஆறுமுகத்துக்குச் சாயபு ரகசியமாகச் சொன்னார்........

சொக்கேசர் இருக்கிற இடத்தை சப் இன்ஸ்பெக்டர் ஆறுமுகம் அறிந்துவிட்டார் என்பதை வீரராஜனுடைய கூட்டத்தார் மூன்று நாளைக்கு முன்னாலேயே கண்டுகொண்டார்கள். அது முதல் ஆறுமுகத்தை வெகு ஜாக்கிரதையாகக் கவனித்து வருகிறார்கள். மாந்தோப்பு சாயபுவும் ஆறுமுகத்தோடு சேர்ந்துகொண்டு தங்களுக்கு விரோதமான முயற்சிகளைச் செய்து வருகிறார் என்பதும் அவர்களுக்குத் தெரியும். ஆகையினால்தான், ரிஸர்வ் போலீஸாரை எதிர்க்கச் சுமார் நூறு ஆள்களைத் தயார்செய்து, அவர்களை அங்கங்கே அந்தத் தோட்ட வீட்டுக்குப் பக்கத்தில் பல இடங்களில் மறைத்து வைத்திருந்தார்கள். சாயபுவும் சப் இன்ஸ்பெக்டரும் வந்த குதிரை வண்டிக்குப் பின்னால் வந்த இன்னொரு குதிரை வண்டியில் இவர்களைப் பின்தொடர்ந்தது காத்தவராயனும் அவனுடைய ஆள்களுந்தாம்.

காத்தவராயன்; தான் வந்த வண்டியைத் தோட்ட வீட்டுக்கு வெகு தூரத்திலேயே நிறுத்தி, இறங்கி நடந்து வந்து போலீஸார் நிற்பதையும், சாயபுவும் சப் இன்ஸ்பெக்டரும் உட்கார்ந்திருப்பதையும், வண்டி அவிழ்த்துவிடப்பட்டிருப்பதையும் பார்த்துவிட்டு, அவர்களுடைய ஏற்பாடுகளைக் கண்டு பரிகசிப்பவன் போலத் தனக்குள்ளேயே சிரித்துக்கொண்டான். திரும்பி, தான் வண்டியை விட்டு இறங்கின இடத்துக்கே வந்தான். அங்கேயிருந்த தன்னுடன் வந்த ஆள்களுக்கு என்னென்னவோ, சொல்லவேண்டியதையெல்லாம் சொல்லிவிட்டுத் தான் மட்டும் இருட்டில் எங்கேயோ மறைந்துவிட்டான்........

மணி பதினொன்றரை இருக்கும். சாயபு உட்கார்ந்திருந்த படியே சப் இன்ஸ்பெக்டர் ஆறுமுகத்தின் காலைத் தொட்டுக் காட்டி, பூட்சுகளை கழற்றிவிடும்படி குறிப்புக் காட்டினார். இருவரும் பூட்சுகளைக் கழற்றி அந்தப் பூட்சுகளைத் தங்களுடன் வண்டியில் வந்த ஆசாமியிடம் கொடுத்து எடுத்துவரச் செய்து, மூன்று பேரும் பாதையை விட்டு வேலியோரத்துக்கு வந்தார்கள். பூட்சைத் தூக்கி வந்தது மலைக்கள்ளனுடைய ஆள். இருட்டில் எந்தக் காரியத்தையும் பகலில் செய்வதைப் போலவே செய்துவிடுவான். காட்டிலும் கரட்டிலும் இராக் காலங்களில் போவதற்கு இணையற்ற துணைவன். வேட்டை நாய் போல் மோப்பமறியக்கூடியவன். விஷங்களுக்கு மாற்று மருந்துகள் செய்வதில் வெகு கெட்டிக்காரன். காட்டில் ஓடுகின்ற நாகப் பாம்பைக் கையால் பிடித்துவிடுவான். காமாக்ஷியம்மாளைக் காப்பாற்றிய மூலிகையைக் கொடுத்தவன் இவன் தான்.

இந்த ஆள் இப்போது இவர்களுக்கு வழிகாட்டவென்றே மலைக்கள்ளனால் ஏவப்பட்டவன். அவன் பெயர் **வேர் பிடுங்கிச் சின்னான்**. சின்னான் வழிகாட்ட, மற்ற இருவரும் அவனைப் பின்பற்றினார்கள். ஒரு வேலியில் நுழைந்தார்கள். அங்கே நடவு நட்ட வயல். அந்த நடவு இந்தப் பத்து நாளைக்குள் காத்தவராயனுடைய ஆள்களால் நடப்பட்ட நடவு. மூன்று பேரும் அந்த வயல் சேற்றில் இறங்கிக் கொஞ்ச தூரம் நடந்து இன்னொரு வேலிக்கு வந்தார்கள். வேலியோரத்தில் உட்கார்ந்துகொண்டு சின்னான் நரியின் ஊளை போல ஒரு வித ஓசை காட்டினான். வேலிக்கு அப்புறமிருந்து பதில் ஓசை வந்தது. அந்த வேலிக்குள் புகுந்து கடந்தார்கள். ஒரு கரடு முரடான கணவாய்க்கு வந்தார்கள். சுமார் ஒரு மைல் தூரம் நடந்து ஒரு சிறு காட்டுக்கல்லின் பக்கத்தில் வந்து நின்றார்கள். சின்னான் காட்டுப் பூனை போல் கத்தினான். அந்தக் கல்லுக்குப் பின்னாலிருந்து சுமார் இருபது உருவங்கள் இருட்டில் வெளிவந்தன. அவர்களெல்லாம் மலைக்கள்ளனுடைய கூட்டத்தார். அக்கூட்டத் தலைவனிடத்தில் அப்துர் ரஹீம், "என்னுடைய துப்பாக்கிச் சத்தம் — வரிசையாக மூன்று சத்தம் — கேட்டால் உடனே எல்லாரும் வேகமாக உள்ளே வந்துவிடுங்கள். நஹீதோ.... இல்லாவிட்டால் வர வேண்டாம். அங்கே இருக்கிறவர்களே போதும்" என்று ரகசியமாகச் சொல்லிவிட்டுக் கொஞ்ச தூரம் கடந்து இன்னொரு வேலிக்கு வந்தார்கள். அந்த வேலி மிகவும் முள்ளடர்ந்தது, புகுந்து போக முடியாது. சின்னான் அந்த வேலியின் இந்தப் பக்கத்திலிருந்த ஒரு பெரிய மரத்தண்டையில் இவர்களை நிறுத்திவிட்டுத் தான் மரத்தின் மேல் ஏறி, ஒரு கிளையில், தான் இடுப்பில் வைத்திருந்த பலமுள்ள கயிற்றைக் கட்டி அந்தக் கயிற்றின் தலைப்பை சாயபு தலையில் படும்படி போட்டான். அதைப் பிடித்து, சாயபு ஆறுமுகத்தின் கையில் கொடுத்து, கயிற்றைப் பிடித்துக்கொண்டு மரத்தில் ஏறச் சொன்னார். ஆறுமுகத்துக்குப் பின்னால் அப்துர் ரஹீமும் ஏறினார்.



மரக்கிளைகளில் தத்திப்போய், வேலிக்கு அப்புறத்தில் நீண்டிருந்த ஒரு கிளையில் கயிற்றைக் கட்டி, அதன் உதவியால் மூவரும் இறங்கினார்கள். இவர்கள் இறங்கின இடம் ஓர் அடர்ந்த சோலை மரங்களின் நெருக்கத்தால் அங்கே இருட்டு அதிகமாக இருந்தது. சின்னான் அந்தச் சோலையின் அமைப்பை அறிந்தவன். அந்த இருட்டிலிருந்து வழிகாட்டி, அவர்களை வெளியில் கூட்டிவருவது சின்னானுக்கும் சிரமமாகத்தான் இருந்தது. சோலையை விட்டதும், கொஞ்சம் சமவெளி. நட்சத்திர வெளிச்சம் இருந்தது. அந்தச் சமவெளியில் கொஞ்ச தூரம் வந்ததும் சில மரங்கள் தெரிந்தன. ஒரு குறிப்பிட்ட மரத்தண்டை சின்னான் நின்றான். அந்த மரத்தையும் அக்கம் பக்கத்தையும் நன்றாகப் பார்த்துவிட்டு சாயபு கையைப் பிடித்து; "இந்த மரந்தான்....அந்தக் கிளை" என்று அந்த மரத்தின் ஒரு கிளையைக் காட்டினான். கொஞ்ச நேரம் மரத்தடியில் மூவரும் சத்தமில்லாமல் நின்றுகொண்டு, அங்கே யாராவது காவல் இருக்குமா என்பதைக் கவனித்தார்கள். மரத்துக்கு வெகு சமீபத்தில் ஒரு கட்டடம் கண்ணுக்குப் பட்டது.

அது ஒரு பெரிய புராதன மெத்தை வீடு. மலைக்கள்ளனால் கொல்லப்பட்டான் என்று ஸ்ரீ ஆறுமுகம் குறித்து வைத்திருக்கிற சோமசுந்தரத்திற்குச் சொந்தமானது. அந்த வீட்டில் முன் யாரோ தூக்குப் போட்டுக்கொண்டார்கள் என்றும், அதில் பேய் இருக்கிறது என்றும் வெகுநாளாக அதில் குடியிருப்பில்லை. விலைக்குக் கேட்பாரும் இல்லை. சோமசுந்தரத்தின் குடும்பத்தார் காத்தவராயனுக்கு மிகவும் வேண்டியவர்கள். ஆகையினால், இப்போது அந்த வீடு காத்தவராயன் வசத்தில் இருந்து வருகிறது.

இந்த வீட்டிற்கும், இப்போது ரிஸர்வ் போலீஸார் முற்றுகை செய்துகொண்டிருக்கிற குட்டிபட்டி ஜமீன்தார் தோட்ட வீட்டுக்கும் குறைந்தது மூன்று மைல் தூரம் இருக்கும்.

சொக்கேசரை முதலில் குட்டிபட்டி ஜமீன்தாருடைய தோட்ட வீட்டில்தான் மறைத்து வைத்திருந்தார்கள். ஆனால் சப் இன்ஸ்பெக்டர் ஆறுமுகம் அதை அறிந்துவிட்டார் என்று காத்தவராயனுக்குத் தெரிந்த உடன் சொக்கேசரை இந்த வீட்டிற்குக் கொண்டுவந்துவிட்டார்கள். இந்த ரகசியம் ஸ்ரீ ஆறுமுகத்துக்குத் தெரியாது. மலைக்கள்ளனுக்கும் சாயபுவுக்குந்தான் தெரியும்.

இந்த வீடும் குட்டிபட்டி ஜமீன்தாருடைய தோட்ட வீடு இருக்கிற அதே ராஜபாட்டைக்குச் சமீபத்தில்தான் இருக்கிறது. பாட்டை வழியாக இங்கே வருவது வெகு சுலபம். ஆனால் இந்த இடத்தைத் தான் கண்டுகொண்டதாகக் காத்தவராயனுடைய கூட்டத்தாருக்குத் தெரியக்கூடாதென்றே சாயபு, சின்னானுடைய உதவியைக்கொண்டு, இந்த வீட்டுக்குப் பின்னாலுள்ள வழியாக இங்கே வந்தார். மலைக்கள்ளனுடைய ஆள்கள் காட்டுக்குப் பக்கத்தில் காத்துக்கொண்டிருப்பதும் இந்தக் காட்டில்தான். சின்னான், சாயபு, சப் இன்ஸ்பெக்டர் ஆகிய மூன்று பேரும் கயிற்றின் உதவியால் மரத்திலிருந்து உள்ளே இறங்கிய இடம் இந்த வீட்டுக்குப் பின்பகுதியான சோலை.



ரிஸர்வ் போலீசைத் தருவித்து, இவ்வளவு தடபுடலாகக் குட்டிபட்டி ஜமீன்தாருடைய தோட்ட வீட்டை முற்றுகை போட்டதெல்லாம் சாயபுவின் வெகு புத்திசாலித்தனமான தந்திரம்; சொக்கேசரை, குட்டிபட்டி ஜமீன்தார் தோட்டத்தை விட்டு வேறு இடத்துக்கு மாற்றிவிட்ட ரகசியம் சாயபுவுக்கும் சப் இன்ஸ்பெக்டருக்கும் கொஞ்சங்கூடத் தெரியாது என்று காத்தவராயன் நம்ப வேண்டும் என்ற ஒரே ஒரு நோக்கத்தோடு தான். அத்துடன் காத்தவராயனுடைய ஆள்கள் அத்தனை பேரும் 'ரிஸர்வ்' போலீசைக் காத்துக்கொண்டு அங்கேயே விடிகிற வரைக்கும் இருந்துவிடுவார்கள். அதை விட்டுவிட்டு இங்கே யாரும் வரமாட்டார்கள்.

இனி அப்துர் ரஹீமைத் தொடர்வோம். சின்னான் 'இந்த மரம்....அந்தக் கிளை' என்று காட்டிய மரம் கட்டடத்துக்குச் சமீபமாக இருந்தது. இதன் பல கிளைகள் கட்டடத்தின் மேல் வீட்டை முட்டிக்கொண்டிருந்தன.

சாயபு தம் தலைப்பாகையை இறுக்கிக் கட்டிக்கொண்டு ஆறுமுகத்தையும் பின்னால் ஏறச் சொல்லிவிட்டு, மரத்தின் மேல் ஏறினார். ஆறுமுகம் சற்று கனமான ஆள். மெள்ள மெள்ள அவரும் ஏறிவிட்டார். சிரமத்தோடு ஏறின ஆறுமுகத்தை சாயபு கைகொடுத்து நடுமரத்தில் நிறுத்திவிட்டுத் தாம் வைத்திருந்த கயிற்றின் ஒரு தலைப்பை ஆறுமுகத்தின் கையில் கொடுத்து, மற்ற தலைப்பைத் தாம் வைத்துக்கொண்டு, சின்னான் காட்டிய கிளையில்....அதற்கு மேலிருந்த கிளைகளின் உதவியால்—மெள்ளமெள்ளப் போய்க்கிளையைப் பிடித்துக்கொண்டு தொங்கினார். மாடியின் கைப்பிடிச் சுவர் காலுக்கு எட்டிற்று. மெதுவாக உள்ளே இறங்கிக்கொண்டார். கயிற்றைச் சுண்டிக் காட்டி ஆறுமுகத்தை அழைத்தார். ஆறுமுகம் வந்து கிளையைப் பிடித்துக்கொண்டு தொங்கினார். ஆறுமுகம் சற்றுக்குள்ளமானவர். சுவர் காலுக்கு எட்டவில்லை. சாயபு தம்முடைய ஒரு காலைச் சுவரில் உதைத்துக்கொண்டு சப் இன்ஸ்பெக்டரை அப்படியே தாங்கி இறக்கிவிட்டார். அந்த வீட்டின் அமைப்பை சாயபு அறிந்திருந்தார். தாழ்வாரமும்

ஓட்டுவில்லை மேல்வீடும், இறங்கின இடத்திலிருந்து இரண்டு கஜ தூரத்தில் இருந்தன.

ஆறுமுகத்தைச் சத்தமில்லாமல் இருக்கச் சொல்லி விட்டு, சுவரைத் தடவிப் பார்த்துக்கொண்டே அந்த மேல் வீட்டைச் சோதித்தார். ஒரு ஜன்னல் கைக்குப் பட்டது. ஜன்னலின் கதவு அடுக்குப் பலகைகள் உள்ள கதவாக இருந்தது பலகைகளை அசைத்துப் பார்த்தார். பழைய ஜன்னல் ஆனதால் சுலபமாகப் பலகைகள் சந்துவிடக்கூடியனவாக இருந்தன. சந்துண்டாக்கிப் பார்த்தார் ; உள்ளே வெளிச்சமில்லை. இடுப்பில் வைத்திருந்த ஒரு சிறு வாளை எடுத்துப் பலகையின் சந்தில் செலுத்திப் பார்த்தார். ஏதோ ஒரு மெதுவான வஸ்துவின்மேல் வாள் மோதிற்று. அந்த வஸ்து என்னவென்று அறியலாமென்று கத்தியைக் கொஞ்சம் அழுத்தினார். கத்தி நறுக்கென்று இறங்கி அங்கே பொத்தலுண்டாக்கி விட்டது. பொத்துக்கொண்டது துணி; ஜன்னலை மறைப்பதற்கென்றே சுவரில் தைக்கப்பட்டிருந்த கருப்புப் படுதா. அந்தத் துணி கிழிந்து போகவே, உள்ளே வெகு மங்கலாக வெளிச்சம் இருந்தது தெரிந்தது.

ஆகவே, உள்ளே புழுக்கம் இருக்கிறதென்பதும், வெளியில் வெளிச்சம் தெரியக்கூடாதென்றே மொத்தமான துணியினால் சந்துவிட்டுப்போன அந்தப் பழைய சன்னல் மூடப்பட்டிருக்கிறதென்றும் தெரிந்துகொண்டார். பலகையை இன்னும் நன்றாக விலக்கி, துணியின் துவாரத்தையும் பெரிதாக்கி, உள்ளே இருப்பதைப் பார்த்துவிடவேணும் என்ற ஆத்திரம் உண்டாயிற்று. ஆனால், பழைய பலகை ஒடிந்து ஓசை உண்டாக்கிவிட்டால் உள்ளேயிருப்பவர்கள் உஷாராய் விடுவார்கள் என்று பயந்து, அதை அப்படியே விட்டுவிட்டு, சாயபு அப்பாற் சென்றார். அங்கோர் பெரிய கதவுநிலை இருந்தது. அந்தக் கதவும் அடுக்குப் பலகைகள் தைத்த இரட்டைக் கதவாக இருந்தது. அந்த இரண்டு கதவுகளுக்கும் மத்தியில் சந்து இருந்தது. கத்தியைச் சந்துகளில் விட்டுப் பார்த்தார். அங்கேயும் துணி இருப்பது தெரிந்தது. துணியை



மெதுவாகப் பொத்துவிட்டு உள்ளே பார்த்தார். வெளிச்சம் இல்லை. அப்படியே விட்டுவிட்டு அடிமேல் அடிவைத்துச் சுவர் ஓரமாகவே இன்னும் கொஞ்ச தூரம் நடந்தார். இன்னொரு ஜன்னலுக்கு வந்தார். கத்தியை விட்டுப் பார்க்கலாமா என்று நினைப்பதற்குள் உள்ளே பேச்சுக் குரல் கேட்டது. உற்றுக் கேட்டார். பேச்சு விளங்கவில்லை. ஆனால், உள்ளே இரண்டு பேராவது நிச்சயமாக இருக்கிறார்கள். இந்த ஜன்னலில் மற்ற இடத்தில் செய்தது போல, கத்தியால் துணியைக் கிழிக்க முயன்றால் தன்னைக் காட்டிக் கொடுத்துவிடும் என்று வெகு புத்திசாலித்தனத்தோடு சாயபு வந்த வழியே திரும்பிப் போய், ஆறுமுகம் இருந்த இடத்துக்கு வந்தார்.

உள்ளே எத்தனை பேர் இருப்பார்களோ தெரியவில்லை. ஒருகால் அவர்கள் கதவைத் திறந்துகொண்டு தாழ்வாரத்துக்கு வரலாம். வந்தால் தங்களைக் கண்டுகொள்வார்கள் என்று சாயபு எண்ணினார். கொஞ்சம் யோசனை பண்ணினார். உடனே ஒரு யுக்தி தோன்றி, ஆறுமுகத்தின் கையில் கொடுத்துப் போன கயிற்றை வாங்கினார். கதவுக்கு அருகில் போனார். கதவின் வெளிப் புறத்திலிருந்த கைப்பிடி, கொண்டி முதலியவற்றில் கயிற்றை இறுக்கிக் கட்டி எதிரில் தாழ்வாரத்தின் சட்டத்தில் இறுக்கிக் கட்டிவிட்டார். இனிக் கதவை உள்ளிருந்து சுலபமாகத் திறக்க முடியாது.

பிறகு, முதல் ஜன்னலிலும் கதவிலும் தாம் முன்னே கத்தியால் பொத்துவிட்ட துவாரங்களை வேண்டிய மட்டும் பெரிதாக்கிவிட்டார். பேசாமல் காத்துக்கொண்டிருந்தார்கள்.

ஒரு மணி சுமாருக்குக் கீழே கதவு தட்டப்பட்டது. சற்று நேரத்துக்கெல்லாம் கதவுக்கு நேராகப் பேச்சுக் குரல் கேட்டது. சாயபு கதவுச் சந்தில் பார்த்தார். கொஞ்சம் வெளிச்சம் தெரிந்து மறைந்துவிட்டது. யாரோ புதிதாகக் கீழிருந்து இப்போதுதான் வந்திருப்பதாகத் தெரிந்தது. சாயபு சந்தடியில்லாமல் மறுபடியும் முதலில் பேச்சுக் குரல் கேட்ட ஜன்னலண்டை போனார். குரல் முன்னிலும் பெரிதாகக்

கேட்டது. நாற்காலியை இழுப்பது போலவும், மேஜையின் மேல் எதையோ வைத்ததைப் போலவும், பலவிதமான சத்தங்கள் சாயபுவின் காதில் பட்டன. சிற்சில ஓசைகளால் மேஜையின்மேல் பிராந்தி, சாராயப் புட்டிகளும் டம்ளர்களும் வைக்கப்பட்டன போலத் தெரிந்தது. வீரராஜனுடைய குரல் கேட்டது. ஆனால், அவன் பேச்சு விளங்கவில்லை. கொஞ்ச நேரம் கழித்து காத்தவராயனுடைய கனத்த சத்தம் "ஆமாங்க, நம்ப யோசனை பலிச்சுதுங்க. அப்பவே இந்த எடத்துக்குக் கொண்டாந்ததனால் தப்பிச்சிங்கோ. இல்லாட்டி எல்லாம் கெட்டுப்போயிருக்குங்கோ. அந்தத் துலுக்கனும் சப் இன்ஸ்பெக்டரும் எங்க போராங்கோண்ணு நானும் பின்னாலியே வந்தேனுங்க. எல்லாச் சிப்பாய்களும் அங்கே.... நம்ப........இவுங்க........ஜமீன்தார் ஐயா தோட்டத்தைக் கோட்டை புடிக்கச் சுத்தி வளைச்சிருக்கிறாங்க வீராதி வீரனுங்கள்" என்று சிரித்தான். மற்றவர்களும் கூடச் சிரித்தார்கள். குட்டிபட்டி ஜமீன்தாருடைய குரல் ஏதோ கேட்டது. காத்தவராயன், "இல்லிங்கோ, எல்லாப் பயல்களும் நம்ப தோட்டத்தைச் சுத்தித்தான் நிக்கிறானுங்க. என்னமோ பன்னெண்டு மணிக்கு மேலே கதவை உடைச்சு உள்ளே போகணும்னு சப் இன்ஸ்பெக்டர் சொன்னாராம். அதைப் பார்க்கலாமுண்ணுதான் நானும் இன்னேரம் அங்கே காத்திருந்தேன். ஒண்ணையும் காணுமுங்கோ. அல்லாந் தூங்கி உழுந்துக்கிட்டு நிக்றானுங்க. அந்தத் துலுக்கப்பயலும் சப் இன்ஸ்பெக்டரும் பாதையோரமா வண்டிக்குக் கீளே படுத்துக்கெடக்குறாங்க" என்றான். வீரராஜன், "மலைக்கள்ளனுடைய ஆட்கள்........தெரியுமா?" என்றான். "ஆமாங்க. அவனுடைய ஆளுகளும் நெறைய அங்கே இருக்கிறாப்பலே இருக்குதுங்க. ஆனா எல்லாம் அங்கே தானுங்க. விடியற வரைக்கும் இங்கே ஒண்ணும் பயம் இல்லிங்கோ... ....ஆனாக்கா, நீங்க கேக்க வேண்டியது, பார்க்கவேண்டியது எல்லாம் இப்பவே முடிச்சுக்கிட்டு விடியறத்துக்குள்ளற வேறே எடத்துக்குத் தாண்டிப்புடணுங்க. அந்தப் பசங்கள் பொல்லாதவனுங்க. மோந்து பார்த்துக்கிட்டே இங்கேயும் வந்தாலும் வந்துவிடுவானுங்க" என்றான் காத்தவராயன்.



வீரராஜன், "ஜமீன்தார்! காத்தவராயனும் நீங்களும் போய் அந்தக் கிழவனை இன்னொரு தரம் கேட்டுவிடுங்கள்........ கையெழுத்து வாங்கிவிடுங்கள். விடிகிறதற்குள் மங்கலத்துக்குப் போய்விட வேண்டும். விடிந்தபின் போகக்கூடாது. அங்கே ரிஜிஸ்டர் செய்துகொள்ளலாம். சப் ரிஜிஸ்தார் எனக்கு ரொம்ப வேண்டியவர். நம்ப இருப்பிடத்துக்கே வந்து ரிஜிஸ்டர் செய்துவிடுவார். சரி....ஊம், போய்க் காரியத்தைச் சீக்கிரம் முடிக்கப் பாருங்கள். இன்றைக்குள் முடியாவிட்டால்........" என்றான்.

சாயபு கவனித்தார். உள்ளே யிருந்தவர்கள் கதவைத் திறந்த சத்தம் கேட்டது. சாயபு கதவுச் சந்துக்கு வந்து பார்த்தார். கையில் விளக்கோடு வந்த காத்தவராயனையும், கூட வந்த ஜமீன்தாரையும் சாயபு சந்தில் பார்த்தார். அவர்கள் கதவுச் சந்தைக் கடந்து வேறொரு அறையின் பூட்டைத் திறக்கிற சத்தம் கேட்டது. அவர்கள் இப்போது திறந்த அறை, தான் முதல் பார்த்த அறைதான் என்று சாயபு அனுமானித்தார். அந்த ஜன்னலுக்கு வந்து முன்னே பொத்துவிட்ட துவாரத்தின் வழியாகப் பார்த்துக்கொண்டிருந்தார். முன்னே மங்கலாகத் தெரிந்த வெளிச்சம் இப்போது பிரகாசமாக இருந்தது. வெகு நேரம் சாயபு பார்த்துக்கொண்டே இருந்தார். உள்ளே இப்போது வந்த இருவரையும் தவிர வேறு யாரும் அந்த அறையில் இருப்பது சாயபுவுக்குத் தெரியவில்லை. கொஞ்ச நேரம் கழித்து ஜமீன்தார் இரண்டெட்டு முன்னால் வந்து, "ஐயா, எழுந்து உட்காருங்கள்" என்றார். படபடவென்று அப்துர் ரஹீமுடைய நெஞ்சுகூடத் துடித்தது. யாரைக் கூப்பிடுகிறான் என்று சாயபு அதிசயிக்கும்போது அறையின் ஒரு மூலையில் வெளிச்சம் படாத இடத்திலிருந்து "ஐயோ தெய்வமே! நான் என்ன பாவம் செய்தேனோ! என்னை ........ஏன் இப்படி உயிரோடு வதைக்கிறீர்கள்" என்ற வார்த்தைகள் சாயபு காதில் விழுந்தன. குரல் மிகவும் இளைத்துப் போயிருந்தாலும் அங்கே பேசினது சொக்கேசர்தாம் என்று சாயபு, சீதையைக் கண்டுவிட்ட அனுமானைப் போலச் சித்தம் குளிர்ந்து மயிர்க்கூச்செறிந்தார். ஜமீன்தார் பேச்சு கேட்டது.

"உங்களுக்கு இவ்வளவு தொந்தரவு கொடுக்கவேண்டி யிருப்பதைப் பற்றி எனக்கும் ரொம்ப வருத்தந்தான். இருந்தாலும் என்னாங்க, வீரராஜன் உங்களுடைய சொந்தத் தங்கை மகன் தானே? அவரைவிட உங்கள் பெண்ணுக்கு ஒசந்த மாப்பிள்ளை யார் இருக்கிறார்? 'பெண்ணைத் தருகிறேன்' என்று ஒரு உறுதி சொன்னா என்னாங்கோ? சொந்தத் தாய் மாமன் மகளைக் கலியாணம் பண்ணிக்கொள்ள வேணுமென்ற ஆசைதானே? இதிலென்னங்க குற்றம்? தாங்கள் தாம் சம்மதித்துவிட்டால் என்ன முழுகிப்போகும்?" என்றார் ஜமீன் தார். "ஐயோ! நான் சம்மதித்து என்ன செய்வது ஐயா? என் குழந்தை சம்மதிக்க வேண்டாமா? என் செல்வம்........ அவளுக்குக் கொஞ்சங்கூடப் பிரியமில்லாத காரியத்தை........" என்று மூலையில் இருந்தவர் முடிப்பதற்குள் ஜமீன்தார், "சரி, அது போகட்டும்........அதைப்பற்றி உங்களைக் கசக்குவதும் சரியல்லதான்........அது கிடக்கட்டும் ........இதில்........இதிலே கையெழுத்து மட்டுமாவது போடுங்கள். தங்களை வீட்டுக்கு அனுப்பவிடுகிறோம். உங்களுடைய பெண் தனக்கு இஷ்டமானவனைக் கலியாணம் பண்ணிக் கொள்ளட்டும்........அதுவும் சரிதான்........இதையாவது செய்து வையுங்கள் உங்கள் தங்கை மகனுக்கு" என்று சொல்லிக்கொண்டே ஜமீன்தார் விளக்கை மூலைக்குக் கொண்டுபோனார். மூலையிலிருந்த சொக்கேசருடைய உருவம் சாயபுவுக்குத் தெரியவில்லை. ஆனால் அவருடைய குரல், "அட கர்மமே! என்னய்யா, என்ன இது? என்னத்தில் என்னை இன்னும் கையெழுத்துப் போடச் சொல்லுகிறீர்கள். போட்ட கையெழுத்தெல்லாம் போதாதா? என்னவோ பெரிய இன்ஸ்பெக்டருக்கு நான் எழுதினதாக எழுதிக் கையெழுத்து மட்டும் வாங்கினான். உம்முடைய அடமானப் பத்திரங்களுக்கெல்லாம் பணம் செல்லாகிவிட்டதென்று ரசீதுகளில் கையெழுத்துப் போடச் சொன்னீர்கள். பிறகு,பூங்கோதையை நேரில் கேட்டுவிட அழைத்து வருவதாகச் சப் இன்ஸ்பெக்டர் ஸ்ரீ ஆறுமுகத்தையும் என் குழந்தையையும் என்னிடம் அழைத்துவருவதாகச் சொல்லிப்பூங்கோதைக்குக் கடிதம் எழுதிக் கையெழுத்துப் போடச் சொன்னான். நான் முட்டாள்தனமாக மகளும் ஆறுமுகமும் வருவார்கள் என்று ஏமாந்து கையெழுத்துப் போட்டுவிட்டேன். ஐயோ! அந்தக் கடிதத்தைக் காட்டி என் செல்வம்....பூங்கோதைக்கு என்ன அபாயம் செய்துவிட்டீர்களோ....தெரியவில்லையே....இப்போது மறுபடியும் என்னவோ பத்திரம் எழுதிக்கொண்டு வந்து கையெழுத்துப் போடச் சொல்கிறீர்கள். இன்னதென்று தெரியாமல் கையெழுத்துப் போட........" இதற்குள் காத்தவராயன், "அதைத்தான் படிச்சிக் கையெழுத்து வாங்குங்களேன். இன்னுமேல்........மூடுமந்திரமென்னாத்துக்குங்க? படிங்க.... படிங்க.... ...படிச்சி இன்னதுன்னு தெரிஞ்சே கையெழுத்துப் போடட்டும். நாளைக்கு ரீஸ்தர் செய்யறப்ப ஒத்துக்கிறதை இப்பவே ஒத்துக்கிடட்டும். ரவசியமென்னாங்கோ இவ்வளவு தூரம் ஆன பொறவு?" என்றான்.



"சரி, அதுவும் நல்ல யோசனைதான். நாளைக்கு சப் ரிஜிஸ்தரார் முன்னாலே ஒத்துக்கொள்ள மறுத்தால்....சரி படிக்கிறேன், கேளுங்கள். கேட்ட பிற்பாடு கையெழுத்துப் போட்டுத்தான் ஆகணும்" என்று ஜமீன்தார் படித்தார்.

> **"திருக்கோணம் ஜில்லா விஜயபுரி ரி. டி. கஸ்பா விஜயபுரியிலிருக்கும் கார்காத்த வேளாள ஜாதி விவசாய ஜீவனம் அருங்குடிப் பண்ணை அருணாசலேச குமாரர் சொக்கேசராகிய நான் என்னுடைய முழு சம்மதத்தோடும் சித்த சுவாதீனத்தோடும் எழுதி வைத்த உயில் பத்திரம் என்னவென்றால்: என்னுடைய ஏக புத்திரியான பூங்கோதையம்மாள் என்னுடைய விருப்பத்தின்படி என் தங்கை அலமேல்மங்கை அம்மாளுடைய மகனும் விஜயபுரி பெரும் பண்ணைக் கதிரேசனுடைய ஜேஷ்ட புத்திரனுமான வீரராஜனைக் கல்யாணம் செய்து கொள்ளச் சம்மதிக்க மறுத்துவிட்டபடியால் என் பிரியத்தை இழந்துவிட்டாள்.........."**

"ஐயோ! ஐயோ! என்ன அநியாயம் இது! அடே படுபாவிகளா! உங்களுக்கு இது அடுக்குமா? பாழுந் தெய்வத்துக்குக்கூட கண்ணில்லையே!" என்று சொக்கேசர் கதறினார்.

"அதெல்லாம் ஒன்றும் பயன்படாதுங்க. முழுக்கக் கேட்டுவிட்டுப் பேசாமல்........கையெழுத்துப் போடவேண்டியது தான்....கேளுங்கள்....நாளைக்கு ரிஜிஸ்டர்....கேளுங்கள்" என்று ஜமீன்தார் மறுபடியும் படிக்க ஆரம்பித்தார்.

**"என்னுடைய பிரியத்தை இழந்துவிட்டபடியால் என்னுடைய குடும்பத்துக்கு பிதிரார்ஜிதமான அடியிற் கண்ட சொத்துகள் நீங்க, மற்ற அடியிற் குறிப்பிட்டிருக்கிற என்னுடைய சுயார்ஜிதமான எல்லாச் சொத்துகளும் மேற்சொன்ன என் தங்கை மகன் க. வீரராஜனுக்கே சேரவேண்டியது. இந்த உயிலை என் மகள் சௌ. பூங்கோதை நான் விரும்புகிறபடி க. வீரராஜனை மணந்துகொள்ளச் சம்மதித்தால் அல்லாமல்—மாற்றிவிடுவதற்கு எனக்குள்ள உரிமைகளையும் இத்துடன் தத்தம் செய்துவிட்டேன்."**

"இவ்வளவுதான். இதில் நீங்கள் கையெழுத்துப் போட்டால் என்ன? பெண்ணைக் கொடுக்காவிட்டாலும், உங்கள் தங்கை மகனுக்கு, இதையாவது கொடுக்கக்கூடாதா?........... உம்....உம்.......இந்தாருங்கள் பேனா.......தயவு செய்து.... தகராறு பண்ணாமல் கையெழுத்துப் போடுங்கள்" என்றார் ஜமீன்தார்.

"ஐயா ஜமீன்தாரே! உங்களை ரொம்பப் பெரிய மனிதர் என்று எண்ணியிருந்தேன். உங்களுடைய தகப்பனார் மிகப் பெரிய மனிதர். நல்ல புண்ணியவான்; அவருடைய பேரைக் கெடுக்கலாமா? இது உங்களுக்கே சரியா? எனக்கும் என் குழந்தை பூங்கோதைக்கும் மனஸ்தாபமா? ....ஐயையோ! என் பிரியத்தை....இழந்துவிட்டாளா! ........ஐயா தெய்வம் பொறுக்குமா........ஐயோ தெய்வமே! இதையும் தெய்வம் பார்த்துக்கொண்டுதானே இருக்கிறது! ஆ முருகா! ஷண்முகா! ஆறுமுகம்....என்ன செய்வேன். ஐயா, ஜமீன்தாரே! வேணுமானால் என்னைக் கொன்றுவிடுங்கள். என் அருமைக் குழந்தை பூங்கோதை......."



காத்தவராயன், "ஐயா பண்ணைக்காரரே! இந்த அளுவாச்சி யெல்லாம் ஒண்ணும் இங்கே பலிக்காதுங்கோ, தெரியுமா? அந்தத் துலுக்கப்பயலையும் போலீஸ்கார ஆறுமுகத்தையும் சேத்துக்கிட்டு நீங்க செஞ்சதுக்கெல்லாம் தித்தியாகனுங்க. தெரிஞ்சிதுங்களா! இதுவரைக்கும் என்னமோ நாங்களும் மரியாதையாகத்தான் இருந்தோம்.... இனிமே...............மயிலே மயிலேண்ணாக் குடுக்குமா?.... அவ்வளவுதான்; கையெழுத்துப் போட்டுத்தான் ஆவுணும். ரிஜிஸ்தர் பண்ணித்தான் குடுக்கணும். பாத்துக்கங்க."

"ஆ தெய்வமே! ஐயோ!....ஐயோ! என்ன செய்வேன்? ஜகதீசா....ஆ.....ஆ........" என்று சொக்கேசர் மூர்ச்சையாவது போலிருந்தது.

"என்னாய்யா, பெரியவரே! மறுபடியும் படுத்துவிட்டீர்? நேரம் ஆகிறது. கையெழுத்துப் போட்டுவிட்டு அப்புறம் படுத்துக்கொள்ளுங்கள்" என்று ஜமீன்தார் பலமுறை கூப்பிட்டார். பதில் இல்லை. மெதுவாகத் தொட்டு அசைத்துப் பார்த்தார். அதற்கும் பேசவில்லை.

"மயக்கம்....மூர்ச்சையாகிவிட்டார்போலிருக்கிறது" என்று ஜமீன்தார் காத்தவராயனைப் பார்த்தார். காத்தவராயனும் சொக்கேசரைப் புரட்டி, அசைத்து, ஆட்டியும் பார்த்தான். சொக்கேசருக்குப் பிரக்ஞையில்லை. இருவரும் அறையைப் பூட்டிக்கொண்டு வீரராஜன் இருந்த அறைக்குப் போனார்கள்.

## அத்தியாயம் 15

**வீ**ரராஜன், குட்டிபட்டி ஜமீன்தார், காத்தவராயன் மூவரும் கலந்து ஆலோசனை செய்தார்கள். அவர்கள் பேசிக்கொண்டது அப்துர் ரஹீமுக்குச் சரியாகக் கேட்கவில்லை. மறுபடியும் காத்தவராயனும் ஜமீன்தாரும் சொக்கேசர் இருந்த அறைக்கு வந்தார்கள். "காத்தவராயா! நீயே சொல்லு. சொல்லித்தானே ஆகவேண்டும். இதைச் சொன்ன பிறகும் அவர் கையெழுத்துப் போடத் தடை சொன்னால்....அப்புறம் அந்தப் பெண்ணின் தலைவிதிக்கு நாமென்ன செய்யலாம்" என்று ஜமீன்தார், சொக்கேசர் இருந்த மூலையில் குனிந்து கவனித்தார். சொக்கேசர் மூர்ச்சை தெளியவில்லை. காத்தவராயன், "அது மயக்கமில்லிங்கோ....மாயம் போட்ராருங்கோ........ஐயா, இந்தச் சலசலப்புக்கெல்லாம் இந்த நரி அஞ்சாதுங்க. அந்த ஆறுமொகம் சப் இன்ஸ்பெக்டரை ஏவிவிட்டு, சாவுக்கார் ஊட்லே ஏமாத்தினாப்பலே இன்னிமேலே காத்தவராயனை ஏமாத்த முடியாதுங்கோ. மயக்கமெல்லாம் இப்ப ஓடுது பாருங்கோ" என்று அங்கே சொக்கேசர் குடிப்பதற்கென்று வைக்கப்பட்டிருந்த ஜலத்தை வாரி சொக்கேசர் முகத்தில் அடித்தான். சொக்கேசர் கொஞ்சம் மயக்கம் தெளிந்து உட்கார்ந்தார்.

காத்தவராயன்; "ஐயா பண்ணைக்காரரே! ஒரே ஒரு பேச்சு, கடசிப் பேச்சு. நீங்க கையெழுத்துப் போட்டுத்தான் ஆவுணும். இல்லாட்டி உங்க பூங்கோதையம்மாளை........" என்பதற்குள்,

"ஐயோ! அப்பா........பூங்கோதைக்கு என்ன! என் செல்வம் எங்கே?........ஐயோ........அவளை ஒன்றும்........" என்று சொக்கேசர் துடிக்கலானார்.

"ஐயா முழுக்கக் கேளுங்க....நீங்க கையெழுத்துப் போட்டு, உங்க மகளுக்கு ஒரு கடுதாசி அனுப்பினோமல்ல



ஜானகியம்மாவோடு வரச் சொல்லி?....அந்தக் கடுதாசியைப் பார்த்து உங்க பொண்ணு வந்து எங்ககிட்டச் சிக்கிக்கிட்டாச்சி. அந்த அம்மாளை இன்னொரு எடத்திலேபூட்டி வச்சிருக்கிறோம். அந்தம்மாளும் வீரராஜய்யாவைக் கலியாணம் பண்ணிக்க மாட்டேன் இன்னுதான் சொல்லுது. சரி, கலியாணம் வேண்டாம். இந்தப் பத்திரத்திலேயாவது கையெழுத்துப் போடுங்க. பத்திரத்திலே கையெழுத்துப் போட்டுட்டா உங்க ரெண்டு பேத்தையும் உட்டுடுவோம். இல்லாட்டி........அப்புறம்........ அப்புறம்........நீங்க உங்க மகளை................உசுரோட பார்க்க முடியாதுங்கோ" என்று காத்தவராயன் சொல்லி முடிப்பதற்குள் சொக்கேசர், "ஐயோ அப்பா, வேண்டாமப்பா....கையெழுத்தாவது போட்டுவிடுகிறேன், ஐயோ! வேண்டாம்—வேண்டாம். என் செல்வம், என் உயிர்........அப்பா என் ஒரே குழந்தை, ஐயோ உம்........உம்........உம்........" என்று சாய்ந்துவிட்டார்.

"ஐயா, கீளே உழுவாதிங்கோ—இந்தாங்கோ கையெழுத்தைப் போட்டுட்டு அப்புறம் மூச்சியோ போங்க கீச்சியோ போங்க" என்று காத்தவராயன் அவர் பக்கத்தில் பத்திரத்தோடு உட்கார்ந்தான்.

இந்தச் சமயத்தில் கீழே யாரோ வெகு அவசரமாகக் கதவைத் தட்டுகிற ஓசை கேட்டது. "என்ன ஆச்சரியம்! இங்கே இந்நேரத்தில் யார் வரமுடியும்? நம் ஆள்களைக்கூட வரச் சொல்லவில்லையே!........இல்லை. பின் யார்? காத்தவராயா, ரொம்ப ஜாக்கிரதையாகக் கவனிக்கவேணும், பார்!" என்றார் ஜமீன்தார்.

காத்தவராயன் பத்திரத்தை அப்படியே வைத்துவிட்டு, வெகு ஜாக்கிரதையாகக் கீழே போனான். ஜமீன்தார் அச்சமும் அதிசயமும் கலந்து விழித்துக்கொண்டு நின்றார்.

சற்று நேரத்தில் காத்தவராயன் திரும்பிவந்து, ஜமீன்தாரையும் கூட்டிக்கொண்டு வீரராஜன் இருந்த அறைக்குப் போய் வீரராஜனிடத்தில், "யாரோ புதுக்குரலாயிருக்குது. ரொம்ப அவசரமான சமாசாரம் உங்களுக்குக் கொண்டு வந்திருக்கிறானாம். வீரராஜாவிடம் நேரில் சொல்லவேணும்

இங்குறான்'' என்று சொன்னான். வீரராஜன் சற்று யோசனை செய்துவிட்டு; ''யாரானாலும் உடனே கவனிக்க வேணும். எதிரிகளுடைய ஆளாயிருந்தாலும் அவனைத் தொலைத்து விட்டு, நாம் தப்பித்துக்கொள்ள முயலவேணும். நீ.....போய்க் கவனித்து, ஒரே ஆள்தான் என்றால் அவனைக் கூட்டிவா. இல்லாவிட்டால் வந்து சொல்லு'' என்று வீரராஜன் காத்தவ ராயனை முன்னால் போகச் சொல்லித் தானும் பின்னால் போனான். ஜமீன்தாரும் தம்முடைய கைத்துப்பாக்கியைத் தயாராகப் பிடித்துக்கொண்டு பின்னால் சென்றார்

மூவரும் கீழே போனார்கள். சாயபு கதவுச் சந்தில் பார்த்துக்கொண்டே இருந்தார். கீழே போகும் வழி கதவுச் சந்துக்கு நேராக இருந்தது கீழே கதவு திறக்கப்பட்டது. இரண்டொரு நிமிஷத்துக்கெல்லாம் மூடப்பட்டது. மேலே ஏறிவருகிற காலடிச் சத்தமும் சாயபுக்குக் கேட்டது. வீரராஜன் முதலில் இருந்த அறையிலிருந்து விளக்குகொண்டுவரப்பட்டது. காத்தவராயன் விளக்கை உயரப் பிடித்தான். வீரராஜன் தன் கையிலிருந்த கடிதத்தைப் படித்துப் பார்த்தான். ஜமீன் தாரும் கடிதத்தைக் கவனித்தார். இவர்களுக்குப் பக்கத்தில் புதிதாகக் கீழேயிருந்து வந்த ஆள் நின்றுகொண்டிருந்தான். சாயபு பார்த்தார்.

வீரராஜன் கடிதத்தைப் படித்துவிட்டுப் புதிதாத வந்த ஆளைப் பார்த்து, ''ஹு'ம். இப்போதுதான் அந்த அம்மாளுக்குக் கொஞ்சம் புத்தி வந்திருக்கிறது போலத் தெரியுது. அவுங்கப்பனுக்கும் கொஞ்ச நேரத்துக்கு முன்னால்தான் புத்தி வந்து கையெழுத்துப் போடுவதாகச் சொன்னான். அப் பனைக் கொன்றுவிடுவோம் என்றால்தான் மகளுக்குப் புத்தி வருகிறது; மகளைக் கொன்றுவிடுவோம் என்ற பிறகுதான் அப்பனுக்கும் அறிவு வருகிறது........சரி........வீரராஜனுடைய சாமர்த்தியம் அவளுக்கு இதுவரையிலும் தெரியவில்லையோ! ........நீ யார்? .......புதிதாக இருக்கிறதே! சொக்கேசர் வீட் டுக்கு வந்து எத்தனை நாளாச்சு? அங்கே நீ என்ன வேலை செய்கிறாய்?'' என்றான்.



''நானு ஏட்டு கருப்பையாவுக்குச் சொந்தக்காரனுங்க. அந்தம்மா பூங்கோதை ஒரு நம்புதலான வேலைக்காரன் வேணு முன்னு சொன்னாங்களாம். ஏட்டுக் கருப்பையா என்னைப் போகச் சொன்னாருங்கோ அந்தம்மா....எஜமான், உங்கள் கடுதாசி வந்தாப்பிலே இருந்து சோறு திங்கிலிங்க.......இந்தக் கடுதாசியைக் குடுத்து உங்க பங்களாவிலே போய்ப் பார்க்கச் சொன்னாங்க. நான் நாலஞ்சு தடவை போனேனுங்க. நீங்க இருக்கிற இடம் தெரியலிங்கோ. இப்பத்தான் உங்க ஆள் அங்கே வந்தவன் நீங்க இங்கே இருக்கிறதை ரகசியமாகச் சொன்னானுங்க, ஒட்டமா ஓடிவந்தேன்........உடனே பதில் வாங் கிக்கிட்டு வரச் சொன்னாங்க. உங்க கைப்பட பதில் வேணு மாம். போலீஸுக்காரர் கிட்டச் சொல்ல வாண்டாமுண்ணு சொன்னாங்க. நான் சல்தி போகணும். வழி முழுக்க எங்கே பார்த்தாலும் போலீஸுங்க........சீக்கிரம் பதில் குடுங்க சாமி'' என்று வெகு பயத்தோடும் மரியாதையோடும் வந்தவன் சொன்னான்.

''பதில் இதோ தருகிறேன். கொஞ்சம் இரு....நம்ப ஏட்டு கருப்பையாவுக்குச் சொந்தக்காரனா நீ! ரொம்ப நல்ல தாச்சு. இந்தா, இதை வைத்துக்கொள்'' என்று அவனுக்கு இனாம் என்னவோ கொடுத்துவிட்டு, வீரராஜனும் மற்ற இரு வரும் விளக்கோடு அறைக்குள் போய்க் கதவை மூடிக்கொண் டனர். நாற்காலியில் உட்கார்ந்து வீரராஜன் பதில் எழுத ஆரம்பித்தான். கடிதம் கொண்டுவந்த ஆள் கதவுக்கு வெளியில் இருந்தான்.

''கடுதாசி யார் எழுதின கடுதாசிங்கோ? என்ன எழுதி யிருக்குது? நீங்க என்ன பதில் எழுதப்போறீங்கோ?'' என் றான் காத்தவராயன்.

''ஓ! ஆமாம்....காத்தவராயா; உனக்குச் சொல்ல மறந்து விட்டேன். கடிதம் பூங்கோதையம்மாள் கடிதம். நான் நாளை சாயந்திரத்துக்குள் அவள் கலியாணம் செய்துகொள் ளச் சம்மதிக்காவிட்டால் சொக்கேசரைத் தொலைத்துவிடுவ தாக எழுதியிருந்தேனல்லவா? அதற்குப் பதில் எழுதியிருக்

கிறாள். நான் வீட்டில் இல்லையென்று அவன்—நம்ம கருப்பையாவுக்குச் சொந்தக்காரனாம்—இங்கே வந்திருக்கிறான்....''

"அப்படிங்களா !....ஊ....ஊம்....அந்தம்மா என்ன எழுதியிருக்குதுங்கோ ?''

"காத்தவராயன் சமாசாரம் இப்பத்தான் அந்த அம்மாளுக்கும் கொஞ்சம் பட்டிருக்கிறது. கடிதத்தில் அப்பனுக்கு ஒன்றும் கெடுதி செய்துவிடக்கூடாது; அப்படி இப்படி என்று கெஞ்சுகிறாள்....என்னைச் சந்திக்க ஆசையாக இருக்குதாம்....இப்ப....''

"என்ன இருந்தாலும் கையெழுத்து வாங்கி பத்திரத்தை ரிஸ்தர் செய்துடுணும். அதுக்கப்புறந்தான் மத்ததெல்லாம் ஏமாந்து போவக் கூடாதுங்கோ. பேசறதோ சந்திக்கிறதோ அல்லாம் அப்புறந்தானுங்க....'' என்றான் காத்தவராயன்.

"பின்னே ? அதில்லாமலா ? கையெழுத்தும் ரிஜிஸ்டரும் ஆனபிறகுதான் மற்ற விஷயங்கள். நான் என்ன, அவ்வளவு பைத்தியக்காரனா, இவளுடைய கடிதத்தைக் கண்டவுடன் ஏமாந்து போக ?'' என்று சொல்லிவிட்டுக் கடிதத்துக்குப் பதில் எழுதினான். பதில் கடிதத்தைக் கையில் எடுத்துக் கொண்டு, "அவன் விடியுமுன் போகவேண்டும். போலீஸ்"க்குத் தெரியக்கூடாது........அவன் வந்துபோனது. முதலில் அவனை அனுப்பிவிட்டுப் பிறகு பத்திரக் கையெழுத்து'' என்று சொல்லிக்கொண்டே வீரராஜன் கதவை இழுத்தான். கதவு திறக்க முடியவில்லை. வெளியில் இருந்த புது ஆள் அந்தக் கதவைப் பூட்டி வெகு நேரம் ஆய்விட்டது............

அப்துர் ரஹீம் சாயபுவின் உத்தரவுப்படி சப் இன்ஸ் பெக்டர் ஆறுமுகம் தம்முடைய 'போலீஸ் பிகிலை' அவசரக் குரலோடு ஊதினார். உடனே தம் கைத் துப்பாக்கியை ஆகாயத்தில் நீட்டி மூன்று வெடி சுட்டார். இதற்குள் சாயபு கதவின் கைப்பிடிக்கும் தாழ்வாரத்துச் சட்டத்துக்கும் தாம் முன்னே கட்டியிருந்த கயிற்றை அறுத்துவிட்டார். உள்ளேயிருந்து, வீரராஜனுக்குப்



பூங்கோதையிடமிருந்து கடிதம் கொண்டுவந்த புது ஆள் கதவைத் திறந்துகொண்டு அப்துர் ரஹீமுடன் சேர்ந்து கொண்டான். சாயபு அவனிடம் ஏதோ சொன்னார். அவன் உடனே போய்க் கீழேயிருந்த மெத்தைப் படிக்கதவைத் திறந்தான். கொஞ்ச நேரத்துக்கெல்லாம் மலைக்கள்ளனுடைய கூட்டத்தார் சுமார் 15 பேர்கள் திபுதிபுவென்று மெத்தைக்கு வந்துவிட்டார்கள். மறுபடியும் கதவைத் தாழ் போட்டுக்கொண்டு புது ஆளும் மெத்தைக்கே வந்துவிட்டான். மேலே வந்தவர்களைப் பிரித்து, சொக்கேசர் இருந்த அறைக்கு முன்னால் நால்வரையும், படிக்கட்டு வாசலில் நால்வரையும், தாழ்வாரத்தைச் சுற்றி அங்கங்கேயிருக்க ஆறு பேரையும், குறிப்பிட்ட இடங்களில் குறிப்பிட்ட வேலைக்கு நிறுத்திவிட்டு, மிகுந்தவர்களைக் காத்தவராயன் முதலான மூவரும் இருக்கிற அறையின் கதவண்டை நிறுத்திவிட்டு சாயபு; கடிதம் கொண்டு வந்த ஆளைமட்டும் கூட்டிக்கொண்டு, கதவைத் தாண்டி வெளியில் தாழ்வாரத்துக்கு வந்தார். இந்தக் கடிதம் கொண்டுவந்த ஆள்தான் மலைக்கள்ளனுடைய வெகு நம்பிக்கையான கையாள் சப்பாணி. ஏட்டு கருப்பையாவுக்குச் சொந்தக்காரன் அல்ல. இவன் கொண்டுவந்த கடிதம் உண்மையில் பூங்கோதையே எழுதிய கடிதந்தான். இந்தக் கடிதத்தை வாங்கிவரத்தான் ஸ்ரீ ஆறுமுகத்தை விட்டுவிட்டு மாங்தோப்பு சாயபு தனியாகச் சொக்கேசர் வீட்டுக்கு ஏதோ 'மலைக்கள்ளன் கேட்டு வரச்சொன்னார்' என்று போனது.

இந்தச் சப்பாணிக்கு ஒரு தனி வேலை சொல்லிவிட்டு, சாயபு, வீரராஜன் முதலானவர்கள் சிக்கிக்கொண்டிருக்கிற அறையின் ஜன்னலுக்குப் போனார். முன்னே பொத்துவிடத் தயங்கின துணியை மெதுவாகப் பொத்துவிட்டார். உள்ளே விளக்கு; வீரராஜன் பதில் எழுத மேஜையின் மேல் வைத்தபடியே எரிந்துகொண்டிருந்தது. உள்ளே அகப்பட்டுக் கொண்ட மூன்று பேரும் வலையில் சிக்கிக்கொண்ட புலிகள் போல உறுமிக்கொண்டு ஒருவரையொருவர் பார்த்துக் கொண்டு விழித்தார்கள்.

பிகில் சத்தத்தையும் துப்பாக்கி வேட்டுகளையும், திடு திடுவென்று பல பேர்கள் மெத்தைப்படியில் ஏறி வந்த சத்தத்தையும் கேட்டுக் காத்தவராயனுடைய கன்னெஞ்சமும் கலங்கிவிட்டது. இனித் தப்ப வழியில்லை. மேலும் கீழும் பார்த்துக்கொண்டு கதிகலங்கிப்போய் மூச்சுப் பேச்சில்லாமல் நின்றார்கள்.

காத்தவராயன் வெகு வேகமாக மேஜையின்மேல் ஏறினான். அந்த வேகத்தில் மேஜையிலிருந்த பிராந்தி, சாராயப் புட்டிகளும் டம்ளர்களும் உருண்டு விழுந்து உடைந்தன. விட்டத்தின்மேல் தாவினான். இற்றுப் போயிருந்த பழைய மூங்கில் கரணைகளை வெகு சீக்கிரத்தில் ஒடித்தும் வெட்டியும் தள்ளினான். ஓர் ஆள் நுழையக்கூடிய சந்து உண்டாக்கிவிட்டான். கீழேயிருந்த அவனுடைய சகாக்கள் இரண்டு பேரும் காத்தவராயனுடைய சமயோசித சாமர்த்தியத்தை வியந்து தாங்களும் அதே வழியில் தப்பி ஓடிவிடலாம் என்று தயார் பண்ணிக்கொண்டார்கள்.

காத்தவராயன் விட்டத்திலிருந்து கூரைச் சந்தில் நுழைவதற்குக் கையைச் சந்தில் விட்டு ஏறப் போனான். அவ்வளவுதான் "ஐயோ" என்று, பாம்பு கடித்துவிட்டவனைப் போல் அலறிக்கொண்டு விட்டத்திலிருந்தபடியே தன் வலக் கையைப் பிடித்துக்கொண்டு கீழே குதித்தான். கீழே மேஜை இருக்கிறதென்று மேஜையை விட்டுக் குதித்தவன் ஜமீன்தார் மேல் குதித்துவிட்டான். காத்தவராயன் கனமான ஆள். ஜமீன்தார் வாய்விட்டுக் கத்திவிட்டார். நல்ல அடி. ஜன்னல் துணியின் துவாரத்தில் இவற்றையெல்லாம் பார்த்துக்கொண்டிருந்த சாயபு அடக்க முடியாமல் சிரித்துவிட்டார். ஜன்னலண்டை சிரிப்புச் சத்தம் கேட்ட வீரராஜன் பொறுக்க முடியாமல் தன் கைத்துப்பாக்கியை நீட்டி, சிரிப்பு வந்த இடத்துக்கு நேராக இரண்டு தரம் சுட்டான். பார்த்துக்கொண்டேயிருந்த சாயபு பதுங்கிக்கொண்டார். கீழே விழுந்த காத்தவராயன் அவசரமாக எழுந்து, தன் கைத்துப்பாக்கியை நீட்டிக் கூரையில் தான் உண்டாக்கின சந்துக்கு நேராக



இரண்டு மூன்று தடவை அடுத்தடுத்துச் சுட்டுவிட்டுக் கை வலி பொறுக்க முடியாமல் துப்பாக்கியை மேஜையின்மேல் போட்டுவிட்டு வெளிச்சத்தில் கையைப் பார்த்தான். பெரு விரலுக்கும் ஆள்காட்டி விரலுக்கும் மத்தியிலிருந்து ரத்தம் மளமளவென்று கொட்டிக்கொண்டிருந்தது. இரத்தத்தைக் கண்டதும் வீரராஜனுடைய வீரம் வெடவெடத்துவிட்டது. தன்னுடைய சாமர்த்தியங்களெல்லாம் ஓய்ந்துவிட்டது கண்டு ஒதுக்காகப் போய் உட்கார்ந்துவிட்டான்.

கஷ்டம் என்பதே இன்னதென்று தெரியாதவராகத் தம்முடைய இடுப்பு வேஷ்டியைக் கட்டுவதுகூட வேலையாள்கள் செய்துவந்த சுகத்தில் வளர்ந்த குட்டிபட்டி ஜமீன்தார், காத்தவராயன் மேலே விழுந்த களைப்புத் தீராமல் சுவரோடு சாய்ந்து ஒரு மூலையில் சுருண்டு கிடந்தார்.

சாயபுவின் உத்தரவுப்படி சப் இன்ஸ்பெக்டர் ஆறுமுகம் ஜன்னலுக்கருகில் வந்தார். உள்ளே இருக்கிறவர்கள் சுட்டாலும் எட்டாதபடி நின்றுகொண்டு, "ஓய் வீரராஜா, உடனே இந்த ஜன்னல் கதவைத் திறந்து உங்கள் மூன்று பேரிடத்திலும் இருக்கிற எல்லா ஆயுதங்களையும் ஜன்னலின் வழியாக வெளியில் போடவேண்டியது. ஐந்து நிமிஷ நேரம் கொடுக்கிறேன். அதற்குள் ஆயுதங்களையெல்லாம் போடத் தவறினால், இந்த அறைக்கு நெருப்பு வைக்கப்படும். இல்லாவிட்டால், இங்கிருந்தபடியே உங்கள் மூவரையும் துப்பாக்கியால் சுட்டு வீழ்த்த உத்தரவிடுகிறேன்" என்று உரக்கக் கூறினார்.

உள்ளேயிருந்த மூன்று பேருக்கும் கேட்டது. காத்தவராயனுக்குக் கைவலியுங்கூடப் பெரிதல்ல; மானம் போகிறதேயென்று மீசை துடிக்கப் பெருமூச்சு விட்டான். வீரராஜனுக்குத் தன் செல்வாக்கெல்லாம் போன இடம் தெரியாமல் திகைத்தான். ஜமீன்தாருக்குத் தேகம் நடுக்கெடுத்துவிட்டது. இருந்தாலும், காத்தவராயனுடைய தூண்டுதலின் மேல் வீரராஜன் சற்று சௌகரியம் பேசத் தைரியம் வந்து, "எங்களைக் கொளுத்தவோ; சுட்டுக் கொல்லவோ நாங்கள்

என்ன செய்துவிட்டோம்? எங்களைச் சுட உமக்கு என்ன அதிகாரம்?'' என்றான்.

''நீங்கள் மூன்று பேரும் பல கொலைகளையும் கொள்ளைகளையும் செய்திருக்கிறீர்கள். உங்களைக் கைது செய்ய இதோ 'வாரண்டுகள்' என்னிடம் இருக்கின்றன. கொலைக் குற்றம் செய்தவர்கள் தப்பியோட முயன்றால் சுட்டுக் கொல்ல எனக்கு அதிகாரம் இருக்கிறது. ஜாக்கிரதை! சீக்கிரம். ஆயுதங்கள் வெளியே வரட்டும்'' என்றார்.

''நாங்கள் யாரைக் கொன்றோம்? எங்கே கொள்ளையடித்தோம்? உங்களுக்குப் பொய்யாக யாரோ எங்கள் மேல்........''

''அதெல்லாம் நாளைக்குக் கச்சேரியில் சொல்லிக்கொள்ளலாம். இப்போது பேச்சுக்கு வேலையில்லை. உடனே என் உத்தரவுக்குக் கீழ்ப்படிய வேண்டும். இல்லாவிட்டால்........''

இரண்டொரு நிமிஷம் சத்தமில்லை. பிறகு ஜன்னல் கதவு திறக்கப்பட்டது. மலைக்கள்ளனுடைய ஆள்கள் வைத்திருந்த ஒரு விளக்கைப் பொருத்தி, சாயபு ஜன்னலுக்கு முன்னால் வைக்கச் செய்தார். சப் இன்ஸ்பெக்டருக்குப் பின்னால் சாயபு நின்றுகொண்டார்.

ஆறுமுகம், ''உம், முதலில் கைத் துப்பாக்கிகள்'' என்றார். மூன்று ரிவால்வர்கள் வெளியே விழுந்தன.

ஆறுமுகம்: ''இன்னொரு ரிவால்வர்....வரவேணும்.''

வீரராஜன், ''ஏது? மூன்று பேரும் வைத்திருந்த மூன்று ரிவால்வரையுந்தான் போட்டாயிற்றே'' என்றான்.

ஆறுமுகம்: ''இன்னொன்று ஏதா? மூன்று நாளைக்கு முன்னால் நீர் முனுசாமி மிராசுதாரிடம் உம்முடைய கைத் துப்பாக்கி கெட்டுப் போயிருப்பதாகப் பொய் சொல்லி, இரவல் வாங்கி வந்த அவருடைய ரிவால்வர். தெரியுதா? வரட்டும் வெளியில் அதுவும்.''

அதுவும் வெளியில் வந்து விழுந்தது.



ஆறுமுகம்: ''சரி, காத்தவராயனுடைய கத்தி, குத்தீட்டி, பிச்வா, குறுந்தடி, சுருக்குக் கயிறு........உம்.''

அவைகளும் வெளியில் வந்து விழுந்தன.

ஆறுமுகம்: ''வீரராஜன் இடுப்பிலிருக்கிற செருகுக் கத்தி.''

கொஞ்ச நேரம் தாமதித்து அதுவும் வந்தது.

ஆறுமுகம்: ''கடைசியாக ஜமீன்தாருடைய இரட்டைக் குழாய் வேட்டைத் துப்பாக்கி....''

அதுவும் வெளியில் தள்ளப்பட்டது. எல்லா ஆயுதங்களையும் மலைக்கள்ளனுடைய ஆள்கள் சாயபுவின் உத்தரவுப் பிரகாரம் எடுத்து வசப்படுத்திக்கொண்டார்கள். சாயபு, இதுவரையிலும் ஓட்டு வில்லைக் கூரைமேல் உட்கார்ந்து கொண்டிருந்த சப்பாணியை இறங்கிவரச் சொன்னார். அவன் வந்ததும் கைதிகள் இருந்த அறையின் கதவு திறக்கப் பட்டது. கையில் துப்பாக்கியுடன் சப் இன்ஸ்பெக்டர், காத்தவராயனை உள்ளே மேஜையின் மேலிருந்த விளக்கை எடுத்துக்கொண்டு வெளியில் வரச் சொல்லி உத்தரவிட்டார். தன்னை ஒருவர் அதிகாரம் செய்ததையும், தான் அஞ்சிக் கீழ்ப்படிந்ததையும் கனவிலும் அறியாத காத்தவராயனுடைய கைகளும் நடுங்கிவிட்டன. விளக்கைத் தூக்கக்கூட பலமில்லாதவன் போல இடக்கையில் விளக்கை எடுத்துக் கொண்டு மெள்ள வெளியில் வந்தான். வரும்போதே சப் இன்ஸ்பெக்டருக்குப் பின்னால் நின்ற சாயபுவைப் பார்த்துக் கொண்டே, ''அடே துலுக்கப் பயலே! தெரியுண்டா ஒன்னை'' என்று சொல்லி, விளக்கை அப்படியே விட்டுவிட்டு, ஒரே பாய்ச்சலாக அப்துர் ரஹீம் சாயபுமேல் பாய்ந்தான். இதற்குத் தயாராக இருந்தவர் போல, சாயபு காத்தவராயனுடைய கைக்குச் சிக்காமல் விலகிக்கொண்டார். வெகு எச்சரிக்கையாக இருந்த மலைக்கள்ளனுடைய ஆள்கள் ஐந்து பேர் காத்தவராயனை நகர முடியாதபடி அமுக்கிக்கொண்டார்கள். சாயபு

எழுதிக் கொடுத்திருந்தபடி சப் இன்ஸ்பெக்டர் கொண்டு வந்திருந்த போலீஸ் விலங்குகளைக் காத்தவராயன் கைகளுக்குப் பூட்டிவிட்டார்கள்.

இந்தச் சந்தடியில் வீரராஜன் மெல்ல படிக்கட்டில் இறங்கினான். அங்கே நிறுத்தப்பட்டிருந்த ஆள்கள் அவனை இழுத்துக்கொண்டு மேலே வந்தார்கள். ஸ்ரீ ஆறுமுகம் வீரராஜனுக்கும் விலங்கு போட்டார். "என்ன சார், எனக்குக் கூடவா?" என்று வீரராஜன் பல்லைக் கெஞ்சினதை அவர் கவனிக்கவில்லை. ஜமீன்தாரைக் காணோம். அறைக்குள் விளக்கைக் கொண்டுபோனார்கள். அவர் கண்களை இறுக்கி மூடிக்கொண்டு, எந்த உலகத்தில் இருக்கிறோம் என்பதுகூட அறியாதவர் போல் கிடந்தார். விலங்கு போட இரண்டு கைகளையும் சேர்த்த போதுதான், தமக்கும் ஏதோ ஆபத்து வந்துவிட்டதென்று கண்ணைத் திறந்தார்.

பத்து நிமிஷத்துக்கெல்லாம், பார்த்தவர்கள் நடுங்கும் காத்தவராயனும், விஜயபுரியில் மிகப் பெரிய மனிதராக விளங்கிய வீரராஜனும், செல்வத்திற்பிறந்து செல்வத்தில் வளர்ந்து செருக்கித் திரிந்த ஜமீன்தாரும் கைதிகளாகக் கணவாய்ப் பாதையில் நடத்திக்கொண்டு போகப்பட்டார்கள். சப் இன்ஸ்பெக்டருடைய உத்தரவுப்படி மலைக்கள்ளனுடைய காவலாளிகள் ஆறு பேர் முன்னாலும் ஆறு பேர் பின்னாலும் போக, கைதிகள் மூவரும் 'ரிஸர்வ்' போலீஸார் முற்றுகை செய்த ஜமீன்தார் தோட்ட வீட்டுக்கு முன்னால் கொண்டு போகப்பட்டார்கள்.

சப் இன்ஸ்பெக்டரும், சாயபுவும், சப்பாணியும் வீரராஜன் முதலானவர்கள் பிடிபட்ட அறைக்குள்ளேயே போய்ப் பரிசோதனை செய்தார்கள். அதில் கையெழுத்துக்காகக் காத்துக்கொண்டிருந்த பத்திரம், மூன்று பிராந்திப் புட்டிகள் முதலியவற்றை எடுத்துக்கொண்டு சொக்கேசர் அடைபட்டிருந்த அறைக்குப் போனார்கள். சொக்கேசர் பாதி மயக்கமும் பாதி துப்பாக்கி வெடிகளாலுண்டான பயமுமாக, நடந்தது இன்னதென்று அறியாதவரானதால் கதவு திறக்கப்பட்ட



ஓசையைக் கேட்டு மறுபடியும் காத்தவராயனும் ஜமீன்தாரும் தான் திரும்ப வருகிறார்களாக்கும் என்று எண்ணி, "ஐயா ஜமீன்தாரவர்களே, என் அருமைக் குழந்தை—என்....செல்வம் என்....உயிர்....அவளை ஒன்றும் செய்ய வேண்டாம். என் சொத்து முழுதும் வேணுமானாலும் போகட்டும். கையெழுத்துப் போட்டு ரிஜிஸ்டரும் பண்ணித் தந்துவிடுகிறேன்," என்று பிரலாபித்தார்.

விளக்கு வெளிச்சமிருந்தும் வந்தவர்கள் முகத்தைப் பார்க்காமலேயே சொக்கேசர் தலை குனிந்தபடியே பேசினார்.

"ஐயா, நாங்கள் காத்தவராயன்—ஜமீன்தார் அல்ல.... எங்களைப் பாருங்கள்" என்றார் ஆறுமுகம்.

சொக்கேசர் பார்த்தார். மாங்தோப்பு சாயபுவும் ஆறு முகமும் நிற்பதைக் கண்டார். ஆறுமுகம் போய் அருகில் உட்கார்ந்தார். சொக்கேசர் ஆறுமுகத்தைத் தாவிப் பிடித்துக் கொண்டு, "ஐயா....நீங்களா....ஐயோ என் கதி இப்படியாச்சே! கடவுளுக்குக் கண்ணில்லையே!" என்று தேம்பித் தேம்பி அழுதார்.

"கடவுளுக்குக் கண்ணில்லாமல் போகாது. தாங்கள் பயப்பட வேண்டாம். உங்களை இக்கோலம் செய்த அந்த மூன்று பேரையும் கைது செய்து விலங்கிட்டுக் கச்சேரிக்கு அனுப்பிவிட்டோம். தங்களுக்கு இனி ஒரு கஷ்டமும் இல்லை" என்றார் ஆறுமுகம்.

"ஐயோ! என் கஷ்டமா? ஐயா, என் கஷ்டம் கிடக்கட்டும். நான் செத்துப்போனாலும் பாதகம் இல்லை. என்னருமைக் குழந்தை பூங்கோதை....அவளை எங்கேயோ பூட்டி வைத்திருக்கிறார்களாம். அதைத் தயவு செய்து கண்டுபிடியுங்கள். என் உயிருள்ளவரையிலும் உங்களை நான் மறக்கமாட்டேன்" என்றார் சொக்கேசர்.

"அதெல்லாம் சுத்தப் பொய். உங்களிடம் பத்திரத்தில் கையெழுத்து வாங்குவதற்குச் சொன்ன பொய். பூங்கோதையம்மாள் வீட்டில் சௌக்கியமாக இருக்கிறாள். இவர்கள்

செய்த மோசத்தையெல்லாம் நம்ம சாயபுவும் அவருடைய சிநேகர் மலைக்கள்ளரும் முரியடித்துவிட்டார்கள். எல்லாம் அவர்களுடைய உதவியால்தான்" என்று ஆறுமுகம் சொல்லும்போது சற்று எட்ட நின்றுகொண்டிருந்த அப்துர் ரஹீம் சாயபு, "நம்மாலே ஒன்றும் இல்லைங்கோ. எல்லாம் ஆண்டவனுடைய சகாயந்தான்" என்றார்.

ஆறுமுகம் சொன்னதையெல்லாம் கேட்ட சொக்கேசர் சந்தோஷத்தால் பூரித்துத் தாம் பத்து நாளாகப் பட்ட துன்பத்தையெல்லாம் மறந்தார்.

சாயபு சப்பாணியைக் கூப்பிட்டு, "கணவாய்ப் பள்ளத்திலிருக்கிற அரசமரத்தடியில் இரண்டு குதிரை வண்டிகள் இருக்கும். சப் இன்ஸ்பெக்டருடைய ஆள்கள் அவற்றைப் பிடித்துக்கொண்டிருப்பார்கள். அந்த வண்டிகளை இங்கே ஓட்டிவரச் செய். இந்தா....இந்த ஊதியை இப்படி ஊதிக்கொண்டு போனால் உன்னை அவர்கள் சந்தேகிக்கமாட்டார்கள்" என்று பிகிலை ஊதிக் காட்டி அவனிடம் கொடுத்தார்.

சப் இன்ஸ்பெக்டர் வெகு ஆச்சரியத்துடன், "கணவாயில் வண்டிகள் ஏது? நான் கவனிக்கவில்லையே! நீங்கள் கொண்டு வரச் சொல்லியிருந்தீர்களா?" என்றார்.

"இல்லை. நான் கொண்டுவரச் சொல்லவில்லை. வீரராஜன் விடிகிறதற்குள் மங்கலத்துக்குக் கொண்டுபோய் அங்கே இந்த உயில் பத்திரத்தை ரிஜிஸ்டர் செய்துகொள்ளத் தயார் செய்திருந்த வண்டிகள். அவற்றைப் பிடித்துக் கொள்ளத்தான் நான் உங்கள் உடுப்பில்லாத ஜவான்களை அங்கே அனுப்பினது" என்றார் அப்துல் ரஹீம்.

சப்பாணி வண்டிகளுடன் வந்தான். சொக்கேசரை ஒரு வண்டியில் உட்காரவைத்து, அதில் சாயபுவும் சப் இன்ஸ்பெக்டரும் ஏறிக்கொண்டார்கள். இன்னொரு வண்டியில் ஆறுமுகத்தின் ஜவான்கள் சிலர் ஏறிக்கொண்டார்கள். மற்றவர்கள் நடந்தார்கள். எல்லாரும் 'ரிஸர்வ்' போலீஸார் இருந்த இடத்துக்கு வந்தார்கள். இவர்கள் வருவதற்கு முன்னாலேயே



கைதிகள் 'ரிஸர்வ்'போலீஸாரிடம் ஒப்புவிக்கப்பட்டு அவர்களை ஒரு வண்டியில் உட்கார வைத்திருந்தார்கள். சப் இன்ஸ்பெக்டர் 'ரிஸர்வ்' தலைவரைக் கூப்பிட்டு, "பேட்டையூருக்குப் போவதற்குள் விடிந்து போகும். விடிந்ததும் கைதிகளை வண்டியைவிட்டு இறக்கி, விஜயபுரிக்கு நடத்திக்கொண்டு போக வேண்டும்" என்று உத்தரவு செய்தார்.

பிறகு சாயபு, தமக்குத் துணையாக இருந்த மலைக் கள்ளனுடைய ஆள்களுக்கெல்லாம் உத்தரவு கொடுத்து அனுப்பிவிட்டு, தாங்கள் ஏறிவந்த வண்டியை முன்னால் விடச் சொன்னார். விடியக் கொஞ்சம் நேரத்துக்கு வண்டி சொக்கேசர் வீட்டு வாசலில் வந்து நின்றது.

'தகப்பனாரை விடிகிறதற்குள் மீட்டு வருவதாக வாக்களித்துத் தன்னிடத்தில் வீரராஜனுக்கு ஒரு கடிதம் வாங்கிக் கொண்டு போன மாந்தோப்பு சாயபு அப்துர் ரஹீமின் பேச்சும், முன் ஆறுமுகம் 'விடியுமுன் சேதி அனுப்புகிறேன்' என்று சொல்லிப் போனதைப் போலத்தான் முடியுமோ?' என்று பூங்கோதை வெகு ஏக்கத்தோடு தூக்கமில்லாமல் உட்கார்ந்து கொண்டிருந்தாள். வீதியில் வண்டி வந்து நின்ற சத்தத்தைக் கேட்டு, விளக்கை எடுத்துக்கொண்டு கதவைத் திறந்துகொண்டு வாசலில் வந்து நின்றாள். சப் இன்ஸ்பெக்டர் முன்னால் வந்தார். அடையாளம் கண்டுபிடிக்க முடியாதபடி இளைத்துப் போயிருந்த சொக்கேசர் மெல்ல மெல்லப் பின்னால் வந்தார். பார்த்தாள் பூங்கோதை. விளக்கை அப்படியே வைத்துவிட்டு ஓடிப்போய், 'அண்ணா' என்று அவரைக் கட்டிக்கொண்டு அவருடைய மேலாடையில் தன் முகத்தைப் புதைத்துக்கொண்டு கொஞ்ச நேரம் தேம்பித் தேம்பி அழுதாள். சாயபு, "அம்மா, பூங்கோதையம்மா....தேக்கீ அமராபாத்.......நம்ம பேச்சு பார்த்தீங்களா, பாருங்கோ நான் சொன்னதைப் பூர்த்தி பண்ணிவிட்டேன். ஐயாவை ஒப்புக்கொள்ளுங்கள். நான் உத்தரவு வாங்கிக்கொள்ளுகிறேன்.......சலாம்.......சலாம்.......ஐயாவுக்கும் சப் இன்ஸ்பெக்டருக்கும்........எல்லாருக்கும் சலாம்" என்று போகப் புறப்பட்டார்.

"ஐயா சாயபு அவர்களே, கொஞ்சம் உள்ளே வந்து உட்கார்ந்து, பேசிவிட்டுப் போகக்கூடாதா? தயவு செய்யுங்கள் நீங்க இல்லாவிட்டால் எங்கள் கதி...." என்று பூங்கோதை கெஞ்சிக் கேட்டுக்கொண்டும், சாயபு, "நஹீ........அம்மா, பகுத் காம் ஹை. மன்னாப் செய்யுங்கள்" என்று சொல்லிக் கொண்டே போய்விட்டார்.

## அத்தியாயம் 16

பேட்டையூருக்கும் விஜயபுரிக்கும் சுமார் இரண்டு மைலிருக்கும். ஐந்து மணிக்கெல்லாம் 'ரிஸர்வ்' வண்டிகள் பேட்டையூருக்கு வந்துவிட்டன. ஆனால், கைதிகளை இறக்கிப் புறப்படுவதற்கு மணி ஏழுக்கு மேலாகிவிட்டது. விலங்கோடு ஊருக்குள் நடந்து போக வேண்டுமென்றவுடன் வீரராஜனும் ஜமீன்தாரும் மிகவும் வெட்கப்பட்டு, எப்படியாவது தங்களை வண்டியிலேயே கொண்டுபோய் விடும்படி மிகவும் கெஞ்சிக் கெஞ்சி அழுததனால் நேரமாகிவிட்டது. வீரராஜனும் ஜமீன்தாரும் விஜயபுரியில் மிகப்பெரிய மனிதர்களாக விளங்கியதை அறிந்திருந்த 'ரிஸர்வ்' தலைவர்கள், அவர்களுடன் தாட்சண்யத்தோடு பேசியே வண்டியை விட்டிறக்க வேண்டியதாயிருந்தது. உடனே இறங்கி நடந்திருந்தால், நன்றாக விடிவதற்குள் கச்சேரி போய்ச் சேர்ந்திருக்கலாம். கைதிகள் இப்போது ஊரார் காணுமாறு போகவேண்டியதாகிவிட்டது. காத்தவராயனை யாருக்கும் தெரியாது. ஆனால், வீரராஜனையும் ஜமீன்தாரையும் விலங்கோடு கண்ட விஜயபுரிவாசிகள் கனவோ, நனவோ என்று கண்ணைத் துடைத்துத் துடைத்துப் பார்த்தார்கள். என்ன விந்தை! நேற்று இந்நேரம் நாவசைத்தால் நாடசையக்கூடிய இவர்களுக்கு இந்தக் கதியென்றால் யார் நம்ப முடியும்! அதுவும் வீரராஜனுடைய வீட்டில் அடிக்கடி விருந்துண்ட கனவான்களுக்கு எப்படியிருக்கும்? பஞ்சிற்பட்ட நெருப்புப் போல் இந்தச் சேதி ஊரில் பரவிவிட்டதால் வழியில் பார்த்தவர்களுங்கூட கச்சேரிக்கு முன்னால் கூடிவிட்டார்கள். சப் இன்ஸ்பெக்டர் கைதிகளுக்கு ஒரு மாதத்திற்கு 'ரிமாண்ட்' வாங்க ஏற்பாடு செய்தார்........

சொக்கேசர் வீடு வந்து சேர்ந்தபின் வீட்டில் சந்தோஷம் நாளுக்கு நாள் ததும்பி வளர்ந்தது. கஷ்டப்பட்டவர்களுக்கு

அல்லவா சுகத்தின் அருமை தெரியும்? ஆறுமுகத்தையும், அப்துர் ரஹீம் சாயபுவையும் சொக்கேசர் துதித்துப் போற்றாத நாளில்லை. அவர்கள் தம்மை மீட்டதற்குப் பிரதியாக எந்த விதத்திலாவது அவர்களுக்குப் பெருமிதமான மரியாதை செய்ய வேண்டுமென்றும் மனத்தில் எண்ணியெண்ணி மகிழ்வார். ஆனால், அதை அவர்கள் ஏற்றுக்கொள்ளுவார்களோ என்று ஏங்குவார். எப்படியிருந்தாலும் அவர்களுக்குத் தம்முடைய வீட்டில் ஒரு நாளாவது உடனே விருந்துபசாரம் நடத்த வேண்டுமென்று மிகவும் விரும்பினார்.

தாம் வீடு வந்து ஏறக்குறைய இருபது நாளாகியும், அன்று தம்மை வீட்டிற் கொண்டுவந்து விட்டுப்போன ஆறுமுகமும் அப்துர் ரஹீமும் பின் காணக்கிடைக்கவில்லை. சாயபு பட்டணத்துக்கோ எங்கோ போய்விட்டாரென்று அவருடைய மாந்தோப்பு வீடு பூட்டியே கிடந்தது. காவற்காரனும் சாயபு எப்போது வருவாரென்பது தெரியாதென்று கூறிவிட்டான். சப்இன்ஸ்பெக்டரோ சாயபு கொடுத்த சாட்சியங்களை உருவாக்கிக் குற்றப் பத்திரிகைகளைத் தயார் செய்வதில் வெகு கஷ்டப்பட்டு வேலை செய்துகொண்டிருந்ததால், வீட்டில் அவரைக் கண்டுபிடிப்பதும் முடியாமற் போய்விட்டது. சப் இன்ஸ்பெக்டருடைய சாமர்த்தியத்தால், வெகு நாளைய குற்றவாளிகளாகிய காத்தவராயன் கைதியாகப் பல பெரிய 'கேசு'களைப் பிடித்த புகழ் கச்சேரிக்கு வருவதில் பெரிய இன்ஸ்பெக்டருக்கு சந்தோஷந்தானென்றாலும், சப்இன்ஸ்பெக்டர் பல விஷயங்களைத் தமக்கு மறைத்து வைத்திருந்ததிலும், தன்னுடைய நண்பர்களான வீரராஜன், ஜமீன்தார் இவர்களைத் தம்மிடத்திலும் சொல்லாமற் கைது செய்தது மட்டுமல்லாமல், அவர்கள் மேல் பலமான சாட்சியங்களையும் தயார் செய்துவிட்டதில் மனத்தில் வெகு வேதனை உண்டு. ஆனால் வெளியிற் சொல்லுவாரா?

ஆறுமுகத்திற்கும், அப்துர் ரஹீமுக்கும் விருந்திட வேண்டுமென்றும். வெகுமதி செய்ய வேண்டுமென்றும் சொக்கேசர் அடிக்கடி சொல்லிக்கொள்ளும் போதெல்லாம் பூங்கோதை, மலைக்கள்ளனையும் நினைப்பாள். அந்த மலைக்



கள்ளன் தன்னைக் காத்தவராயனிடமிருந்து மீட்டதையும், மலைக்கு அழைத்துப் போனதையும், அங்கு, தான் பார்த்த புதுமைகளையும், அங்கிருந்த சின்னி அம்மாளையும், கிழவர்களையும், கிழவருடைய கிருத்துருவமான பேச்சையும், மலைக்கள்ளன் தனக்கு ஸ்ரீராமவிக்ரஹம் கொடுத்ததையும், தன்னை மறுபடியும் அபகரிக்கக் காத்துக்கொண்டிருந்த காத்தவராயனுடைய கூட்டத்தாரை ஏமாற்றி, மாந்தோப்பு சாயபுடன் வீட்டுக்கு அனுப்பி வைத்ததையும், தகப்பனாருடைய ஏக்கத்தால் ஜானகியின் தந்திரத்தை நம்பி வீரராஜனுடைய பங்களாவில் சிக்கிக்கொண்டபோது மலைக்கள்ளன் எங்கிருந்தோ இடையில் வந்து தன் மானத்தைக் காத்ததையும், அதே மலைக்கள்ளன், அப்துர் ரஹீம் சாயபுவையும் அனுப்பித் தன் தந்தையை மீட்டதையும், பூங்கோதை அடிக்கடி நினைத்து ஆனந்தமடைவாள். அந்தச் சந்தோஷத்துக்கு அடுத்தாற்போலவே தான் மலையில் கண்ட சின்னியம்மாள் யாரென்பதையும், அவள் மலைக்கள்ளனுடைய மர்மங்களை மறைத்துப் பேசியதையும், மலைக்கள்ளன் பல பேரை அங்கே சிறைப்படுத்தி வைத்திருப்பதையும், ஜானகியை மலைக்குக் கொண்டு போய்விட்டதையும் நினைத்துக் கொஞ்சம் அருவருப்படைவாள். ஆனாலும், தனக்கு மலைக்கள்ளன் செய்த நன்றிகளை மட்டுந்தான் எண்ணவேண்டும் என்று மற்றவைகளை மறக்க முயல்வாள். எது எப்படியிருந்தாலும் அந்த மலைக்கள்ளன் இதுவரையிலும் ஊரார் சொல்லி வந்தபடியும், தான் நம்பியிருந்தபடியும், அவ்வளவு கெட்டவனாக இருக்க முடியாதென்றும் நிச்சயித்தாள். ஆகையினால், அவரையும் சாயபு மூலமாக விருந்துக்கழைக்க வேண்டுமென்று, தன் தந்தையிடம் கேட்டுக்கொள்ள விரும்பினாள். தன்னுடைய அத்தை மக்களான பொன்னம்பலமும் வள்ளியம்மாளும், "மச்சீ! மச்சீ! உங்களை மலைத்திருடன் தூக்கிக்கொண்டு போனபோது நடந்த கதையைச் சொல்லுங்கள்" என்று அடிக்கடி பரிகாசம் பண்ணும்போதெல்லாம் பூங்கோதை வெட்கப்பட்டுத் தலைகுனிவாள்.

இப்படியாகச் சொக்கேசர் வீட்டில் எல்லாம் இன்பமாகவே இருக்கும்போது, ஒரு நாள் சாயந்திரம், சப் இன்ஸ்பெக்டர் ஆறுமுகம், சொக்கேசர் செல்லெழுதிக் கொடுத்த ஜமீன்தார் அடமானப் பத்திரங்களைப்பற்றி ஏதோ விவரம் விசாரிக்க வந்தார்.

இயற்கையிலே வெகு நல்லவரான சொக்கேசர் இப்போது தம்முடைய நன்றியறிதலும் சேர்ந்து, வெகு பரிவோடு ஆறுமுகத்தை வரவேற்றார். நெடுநாள்களாகச் சந்திக்கவேணுமென்றிருந்த ஆசை தீர; அன்பு கொண்டாடினார். முதலில் க்ஷேமலாபங்களைப் பேசிவிட்டுப் பிறகு தாம் வந்த கேசு விஷயத்தைப்பற்றி வேண்டியவற்றையெல்லாம் கேட்டுக் கொண்டார்.

சொக்கேசர் அவர்களுக்கு வெகுமதி செய்ய வேணுமென்று தம் மனத்திலிருந்த ஆசையைக் கொஞ்சங் கொஞ்சமாக ஆறுமுகத்துக்கு அறியப்படுத்தி, அவரும் அப்துர் ரஹீமும் தம் வீட்டில் ஒரு நாள் விருந்துக்கு வரவேண்டுமென்றும் கேட்டுக்கொண்டார். முடியுமானால், அந்த மலைக்கள்ளன் என்பவரையும் கூட்டிவர வேணுமென்று பூங்கோதை விரும்புவதையும் வெளியிட்டார்.

சப் இன்ஸ்பெக்டர் வெகுநேரம் யோசனை செய்தார். கடைசியாக, "தங்களுடைய விருப்பம் நியாயமானதுதான். உங்களைப் பொறுத்தமட்டில் அதில் குற்றமில்லை. ஆனால், என்னைப் பொறுத்தமட்டில் சரியல்ல. எனக்குப் பரிசு கொடுக்கத்தக்க யோக்கியதையும் செல்வாக்கும் உங்களுக்கு உண்டு. இருந்தாலும், இந்தக் கேசுகளையெல்லாம் இப்போது நான் நடத்தி வருவதனால், இந்தச் சமயத்தில் நான் தங்களிடத்தில் எந்த விதப் பரிசையும் ஏற்றுக்கொள்வது எண்ணத் தகுந்ததல்ல. சாயபு விஷயத்தில் சந்தேகமே கிடையாது. அவர் இசைய மாட்டார். அவர் மிகப்பெரிய தனவந்தர் என்று தெரிகிறது. இரங்கூனிலும் பட்டணத்திலும் அவருக்கு ஏராளமான சொத்துகள் இருப்பதாகக் கேள்வி. ஆனால், நம்முடைய நட்பின் முறையில் தங்கள் வீட்டில் ஒரு நாள் விருந்துண்பதில் ஆட்சேபணையில்லை. விருந்துக்கு சாயபு வருவாரோ என்பதை அவரைத்தாம் கேட்க வேண்டும். மலைக்கள்ளனைப் பற்றி எனக்கொன்றும் தெரியாது. அதையும் சாயபுவைக் கேட்டால்தான் தெரியும். நான் இப்போது அவரைப் பார்க்கத் தான் போகிறேன். கேட்டு வருகிறேன்" என்றார்.



"சாயபு ஊரில் இல்லையென்றார்களே! வந்துவிட்டாரா?"

"வந்துவிட்டார். நேற்றிரவுதான் வந்தாராம். அது தெரிந்துதான் போகிறேன்."

"அப்படியானால் இன்றைக்கே கேட்டுச் சொல்லுங்கள். நாளை முழுவதும் நீங்கள் இருவரும் என் வீட்டு விருந்தினராக இங்கேயே தங்க வேண்டும்" என்றார் சொக்கேசர்.

"நாளைக்கா! முடியாது. எனக்கு இன்னும் நாலைந்து நாள்களுக்கு நிற்கவும் நேரமிருக்காது. அதற்குப் பிறகும், ஒரு நாள் முழுவதும் இங்கே விருந்து சாப்பிட்டுக்கொண்டிருக்க முடியாத வேலை இருக்கிறது. அன்றியும், சாயபு அவர்களைப் பகலில் கண்டுபிடிப்பதும் கஷ்டம். இப்போதைக்கு ஒரு நாள் ராத்திரிச் சாப்பாட்டோடு தாங்கள் பொறுத்துக்கொள்ள வேண்டும். இந்தக் கேசுகள் எல்லாம் முடிந்தபின் என்னை இங்கேயே குடிவந்துவிடச் சொன்னாலும் வந்துவிடுகிறேன்!" என்றார் சப் இன்ஸ்பெக்டர்.

"சரி, உங்களிஷ்டம். அப்படியானால்....ஆம், வருகிற வெள்ளிக்கிழமை பௌர்ணமி. பூங்கோதை பிறந்த தினம். நிலாச் சாப்பாடு செய்வோம். சாயபுவையும் கேட்டு நிச்சயம் செய்துவிடுங்கள்....ஒன்றும் யோசிக்க வேண்டாம். எனக்கு மிகவும் ஆப்தமான சில நல்ல மனிதர்களைத் தவிர, வேறு யாரையும் அழைத்து ஆடம்பரம் செய்யப் போவதில்லை. அது கூட வேண்டாமென்றால், நீங்கள் இரண்டு பேரும் மலைக் கள்ளரும் மட்டுமே வந்தாலும் போதும். எனக்கு உயிர்ப் பிச்சை கொடுத்த உங்களிருவரையும் பூங்கோதையைக் காப்பாற்றிய மலைக்கள்ளரையும் என் வீட்டில்........?" என்று சொக்கேசர் சொல்லும்போதே,

"தாங்கள் அவற்றையெல்லாம் சொல்ல வேண்டாம்....சரி, வருகிற வெள்ளிக்கிழமை இரவு விருந்துக்கு ஒத்துக்கொள்ளுகிறேன். சாயபுவையும் கேட்டு நிச்சயிப்போம். உங்களுக்கு மிகவும் வேண்டிய நண்பர்களையும் விருந்துக்கு அழைப்பதில் எங்களுக்குத் தடையிருக்காது, செய்யுங்கள். நான் போய் வருகிறேன்........" என்று ஆறுமுகம் போய்விட்டார்.

இரவு சுமார் எட்டு மணிக்கு ஆறுமுகம் மாந்தோப்புக்குள் நுழைந்தார். வழக்கப்படி காவலில்லை. வேலையாள்கள் சந்தடியும் காணோம். மெத்தையில் வெளிச்சமும் தெரியவில்லை. ஆறுமுகம் கதவைத் தட்டினார். சாயபு விளக்கோடு கதவைத் திறந்தார்.

"எங்கே காவலாளி, வேலைக்காரர், யாரையுமே காணோமே! தனியாகவா இருக்கிறீர்கள் ?" என்றார் ஆறுமுகம்.

"சரியான கேள்விதான், சாப். இனிமேல் காவல் என்னத்துக்கு ? பயப்பட வேண்டியவர்களையெல்லாம் நீங்கள் கைது செய்துவிட்டீர்களே ! காத்தவராயனோடு கொள்ளைப் பயம்-கொலைப் பயம் விட்டது. வீரராஜனோடு மோசடியும் தந்திரமும் விழுந்தாச்சு. ஜமீன்தாரோடு கொலைகாரருக்குக் கூலி கொடுத்து வைத்திருக்கும் ஜம்பமும் சௌடாலும் ஒழிந்தது. கூலிக்கு வேலை செய்த கும்பல் குலைந்துவிட்டது. இனிமேல் நமக்குப் பயமென்ன ? இனிமேல் யாரும் ஒட்டுக் கேட்க வரவும் மாட்டார்கள். வைத்தியைக் குத்தவும் மாட்டார்கள்....ஹோ சாப்........மறந்துவிட்டேன்........வைத்தி எப்படி இருக்கிறான் ?........ ஆஸ்பத்திரிக்குப் போனீங்களா ? வைத்தி பிழைத்துக்கொள்வானா ?" என்றார் சாயபு.

"ஓ ! வைத்தியைக் குத்தினதும் இவர்கள் காரியந்தானா ! வைத்தியைப்பற்றி விசாரித்தேன். உங்கள் வைத்தி பிழைத்துக்கொள்வான் என்று டாக்டர் சொன்னார்."

"ஹா ஹா ! பகுத் குஷீ பாத்....ரொம்ப சந்தோஷப் பேச்சு சொன்னீர்கள். வைத்தி பிழைத்துக்கொள்வானா? உங்களுக்கு



ரொம்ப ரொம்ப சலாம், ஐயா ! வைத்தி வெகு நம்பிக்கையான ஆள். அவன் பிழைத்துக்கொண்டால் அல்லாஹு அக்பர்."

"சரி, எனக்கும் சந்தோஷந்தான். வைத்தி பிழைத்துக்கொள்வான்....அதிருக்கட்டும். இந்தக் கேசுகள் விஷயமாக தங்களைப் பார்க்க வேணுமென்று பலமுறை வந்தேன். நீங்கள் பட்டணத்திலிருந்து நேற்றுத்தான் வந்ததை அறிந்தேன். பட்டணம் போன வேலை என்ன ?"

"ஆ....ஜீ....நாம் போவது வருவதை எல்லாம் இன்னும் உங்கள் உளவு ஆள்கள் கவனிக்கிறது போலிருக்கிறதே ! அன்றைக்கு நீங்கள் சொன்ன பேச்சு என்ன ?"

"இல்லை, அப்படி ஒன்றுமில்லை. சந்தேகப்பட வேண்டாம். உங்களை ரயிலடியில் கண்ட சேவகன், நீங்கள் இறங்கினதைப் பார்த்ததாகச் சொன்னான். பட்டணம் போன வேலை நான் அறியத் தகாததா ?"

"ஆம், தாங்கள் அறியப்படாதென்றல்ல. அது நம்ப நண்பர் மலைக்கள்ளர் உத்தரவின்மேல் போன விஷயம். வீரராஜன் தன் ஆசைப்பெண் ஜானகிக்குச் சில சொத்துகளை எழுதி வைத்துவிட்டதாக ஒரு பொய்ப் பத்திரம் ரிஜிஸ்டர் செய்திருந்தார். அதைப்பற்றி விசாரிக்கப் போனேன். விவரம் பின்னால் தெரிவிக்கிறேன். இப்போது தாங்கள் வந்த காரியம் என்னவோ ?"

"நீங்கள் குறித்துக் கொடுத்திருக்கிறபடி, சில கொள்ளைச் சொத்துகள் தங்களுடைய நண்பர் மலைக்கள்ளரிடம் இருப்பதாகத் தெரிகிறது. அவற்றையும் தருவித்துக் கொடுக்க வேணும். அன்றியும் சில முக்கியமான கேசுகளுக்கு நேரிற் கண்ட சாட்சிகள் என்று நீங்கள் எழுதி வைத்திருக்கிற ஆசாமிகள் கிடைக்கவில்லை. அவர்களுடைய விலாசங்களுக்குப் போய் விசாரித்ததில் அவர்களை........அவர்களை........சில பேர் சொன்னார்கள்....அவர்களை........"

"பயப்படாமல் சொல்லுங்கள் பாய். சில பேர் அவர்களையும் மலைக்கள்ளன் கொன்றுவிட்டதாகச் சொன்னார்கள் அல்லவா ?" என்று சாயபு சிரித்தார்.

"ஆ ! ஆமாம். அப்படியே சொல்லுகிறீர்களே ! அது உண்மைதானா ? அவர்களையும்...."

"அதென்னமோ அது....ஹம்னா மாலும் நஹீ....நமக்குத் தெரியாது. மலைக்கள்ளரைக் கேட்கவேணும்........ஒரஃக்தே.... அதிருக்கட்டும். நாளைக் காலை பத்து மணிக்கு உங்களுடைய ஜவான்களில் நாலு பேரோடு, தாங்களும் பதினைந்து கைவிலங்குகளுடன் புளியந்தோப்புக்குப் போய்ச்சேரவேண்டியது. அங்கே நம்ப சப்பாணி காத்துக்கொண்டிருப்பான். மற்றதெல்லாம் அவன் சொல்வான். நான் குறித்துக் கொடுத்திருக்கிறபடி, கொள்ளைச் சொத்துகளையும் இன்னும் பதினைந்து கைதிகளையும் அவன் தங்களிடம் ஒப்பிப்பான். மற்றது பின்னால் சொல்லுகிறேன்," என்றார் சாயபு.

"பதினைந்து பேர்களா ! குற்றவாளிகளா ? இதிற் சேர்ந்தவர்களா ? உங்கள் குறிப்பில் இல்லையே !" என்று ஆறுமுகம் அதிசயித்தார்.

"அவர்கள் யார், என்ன குற்றம் செய்தார்கள் என்பதையெல்லாம் தாங்கள் சீக்கிரம் அறிவீர்கள். சரி, இன்னுமென்ன?"

"வேறு ஒன்றுமில்லை. வழியில் சொக்கேசர் வீட்டுக்குப் போயிருந்தேன். அவர் உங்களுக்கும் மலைக்கள்ளருக்கும் நன்றியறிதலைப் பலவிதமாகத் தெரியப்படுத்தினார். உங்களையும் மலைக்கள்ளரையும் ஒரு நாளைக்காவது தம் வீட்டில் விருந்துக்கு அழைத்துவர வேணுமென்று கேட்டுக்கொண்டார். கட்டாயம் மலைக்கள்ளரையும் கூட்டிவர வேணுமென்று அவருடைய பெண் பூங்கோதை வெகு பிரியப்படுகிறாளாம்."

"அச்சா, பகுத் அச்சா. என்னையும் மலைக்கள்ளரையும் மட்டுந்தான் அழைத்தார்களா ? உங்களுக்கு ஒன்றும் அவர் விசுவாசம், விருந்து சொல்லவில்லையா ?"



"எனக்குந்தான்....நான் உங்களைக் கேட்டுச் சொல்லுவதாகச் சொல்லி வந்தேன்."

"சுனோ பாய். கேளுங்கள் : விருந்துக்கு வா....முஜே கோய்ஹர்ஸ் நஹீ....எனக்கு ஒன்றும் ஆட்சேபம் இல்லை. ஆனால், ஹமாரா மலைக்கள்ளர் சொக்கேசர் வீட்டுக்கு வருவதானால் ஒரே ஒரு நிபந்தனை....முடியுமானால்தான் வருவார். அவருடைய ஆசை எனக்குத் தெரிந்துவிட்டது. சொக்கேசர் வீட்டைப்பற்றிய காரியங்களில் மலைக்கள்ளர் ஏன் இவ்வளவு கவலை காட்டினார் என்பது இப்போது அவரே சொல்லி விட்டார்."

"என்ன நிபந்தனை ? என்ன சொல்லுங்கள்....ஓஹோ !...."

"மெஹர்பானி கர்னா—தயவு செய்யுங்கள். இதைப்பற்றி நாளைக்கு விவரமாகக் கேட்டுச் சொல்லுகிறேன். கேசுகளைப் பற்றிய எல்லாத் தகவல்களும் வந்து சேர்ந்த பிறகு சொல்லுகிறேன்....சரி, சலாம். எனக்கு ரொம்ப வேலையிருக்கிறது. உங்களுக்கு நாளை அந்தச் சாட்சியங்கள் தடயங்கள் எல்லாம் வரவேணும். அதற்காக, நான் இப்போதே புளியந்தோப்புக்குப் போனால்தான் முடியும். தயவு செய்து, உங்கள் உளவுப் போலீஸைப் பின்னால் அனுப்ப வேண்டாம்" என்றார் சாயபு சிரித்துக்கொண்டே. ஆறுமுகம் போய்விட்டார்....

மறுநாட் காலையில் மலைவீட்டில் மலைக்கள்ளனான வீரையன் தனக்குச் சீக்கிரமாகவே ஆகாரம் வேண்டுமென்று சின்னியம்மாளைச் சமைக்கச் சொல்லிவிட்டுக் கிழவர்கள் இருந்த இடத்துக்குப் போனான். அங்கே தனித்தனியாக மூட்டை கட்டிக் கிடந்த அநேக கேசுகளில் சம்பந்தப்பட்ட சொத்துகளை எடுத்துக்கொண்டு தன்னுடைய இருப்பிடம் வந்தான். ஆகாராதிகளை முடித்துக்கொண்டு, சின்னியம்மாளையும் கூட்டிக்கொண்டு, ஜானகி இருந்த மேல்மாடி அறைக்குள் நுழைந்தான்.

வீரராஜனுடைய காதலியான ஜானகியை, அன்றிரவு வீரராஜனுடைய பங்களாவில் பூங்கோதையை மீட்டபோது

தான் சிறை கொண்டுவந்த பிறகு, அவளைச் சந்திக்க வீரைய னுக்கு நேரமில்லை. சப் இன்ஸ்பெக்டரும் சாயபுவும் காத்தவ ராயன் முதலானவர்களைக் கைது செய்து சொக்கேசரை விடுவிப்பதற்குத் தான் செய்ய வேண்டிய உதவிகளைக் கவனிப் பதிலேயே இருந்துவிட்டான். ஆனால் ஜானகியம்மாளைச் சின்னியம்மாளுடன் தன்னுடைய இருப்பிடத்திலேயே வெகு கண்ணியமாக, சௌகரியக் குறைவில்லாமல் கவனித்துக் கொள்ளச் செய்திருந்தான்.

இப்போது சின்னியம்மாளுடன் உள்ளே வந்த மலைக் கள்ளன் வீரையனைக் கண்டதும், ஜானகி வெட்கத்தாலும் பயத்தாலும் முகம் வெளுத்தாள். கண்களில் நீர் கலங்கத் தலை குனிந்து நின்றாள்.

"ஜானகியம்மாள்! ஒன்றும் சௌகரியக் குறைவில்லையே? சின்னியம்மாள் கவனக் குறைவாக நடந்திருக்க மாட்டா ளென்றே நம்புகிறேன்" என்றான் வீரையன்.

"சின்னியம்மாள் என்னை நடத்திய அன்பைக்காட்டிலும் பெற்று வளர்த்த தாயார்கூட நடத்தியிருக்க முடியாது. அந்தக் குறைச்சலொன்றும் இல்லை. ஆனால், ஐயா....ஐயா, ஐயா, உங்கள் அபயம். நான் வேசியர் குலத்தில் பிறந்தவளானாலும் வேறு விதமாகக் கண்ணியமான வாழ்க்கையை விரும்பி,வெறும் காமக் குறும்பைக் காதலென்று நம்பி, கதியற்றவளாகி விட்டேன். அவர் மேல் நான் வைத்தவிட்ட ஆசையால், அவருடைய பொய்களை நம்பி, இந்த அநியாயத்தைச் செய்து விட்டேன். வீடு வாசலையும், தாய் தந்தையரையும் விட்டு வந்தேன். எனக்கு வேறு திக்கில்லை. என்னைத் தாங்கள் தாம் மன்னித்துக் காப்பாற்ற வேணும்" என்று சொல்லிக் கொண்டே ஜானகி, வீரையன் காலில் விழுந்தாள்.

"ஜானகியம்மா, உம்முடைய சரித்திரம் முழுவதையும் நான் நன்றாக அறிவேன். உம்மைக் கண்டிக்கவோ அல்லது தண்டிக்கவோ நான் இப்போது இங்கு வரவில்லை. உமக்குச் சில உண்மைகளைச் சொல்லி, உமக்கு ஒரு நல்ல வழி



செய்யவே வந்தேன். ஆகையினால், சற்றும் பயப்படாமல் நான் சொல்வதைக் கேட்டு; நீங்கள் சொல்ல வேண்டியதையும் சொல்லுங்கள்....உமக்கு வீரராஜன் தன்னுடைய மாளிகை யையும் இன்னும் சில சொத்துகளையும் எழுதிவைத்திருக் கிறதாக உமக்குச் சொன்னது முற்றிலும் பொய். இருந்தாலும் இப்போது உண்மையாகவே பத்திரம் எழுதிக்கொடுக்கும்படி செய்துவிட முடியும். இப்போது அவனும் அவனுடைய சகாக்களும் பல கொலை—கொள்ளை கேசுகளுக்காகக் கைது செய்யப்பட்டிருக்கிறார்கள்........"

"ஐயோ ! ஐயோ ! கொலையா ! கொள்ளையா ! அவர் கைதியாகவா இருக்கிறார் ? யாரைக் கொலை செய்தார்....?" என்று ஜானகி நடுங்கினாள்.

"அதைப்பற்றி பின்னால் தெரியும். இப்போதைக்கு உம்முடைய வாழ்க்கை எப்படி இருக்க வேணுமென்று உமக்கு விருப்பம் ? உம்மைக் கலியாணம் செய்துகொள்ளுவதாக வீரராஜன் சத்தியம் செய்துகொடுத்து, உம்மை உறவினர்களை விட்டுப் பிரித்துக்கொண்டு வந்தான். அதனால், அவன் ஆஸ்தியில் உமக்கு உரிமை உண்டு. ஆகையினால், அவன் சொத்தில் சிலவற்றை உமக்குச் சொந்தமாக்கி—வேணுமானால் அந்தப்பங்களாவையும் உமக்கே கொடுத்துவிடச் செய்யமுடியும். அந்தப் பங்களாவில் வசிக்க உமக்குச் சம்மதமா ? அல்லது ஜீவனத்துக்கு வேண்டிய சொத்துகளை மட்டும் எழுதி வாங்கிக் கொண்டு, தாய் வீட்டுக்குப் போயிருக்கச் சம்மதமா ?"

"ஐயோ ! இனிமேல் இந்த முகத்தைக்கொண்டு, நான் என் தாய் தமக்கை முதலானவர்கள் முன்னால் எப்படிப் போவேன் ?"

"சரி, அந்தப் பங்களாவில் இருக்க இஷ்டமா ?"

"இல்லை. எனக்கு அவர் பங்களாவும் வேண்டாம், அவர் சொத்தும் வேண்டாம். அங்கே இருக்கவும் ஆசை இல்லை. தாங்கள் மட்டும் தயவுபண்ணி, என்னை இன்னும் சந்திக்கு

இழுத்துவிடாமல் விட்டுவிட்டால், அது போதும். நான் எங்கே யாவது கண்காணாத இடத்தில் என் வாழ்நாளை எப்படியோ கழித்துவிடுகிறேன்."

"ஓ ! அது முடியாது. கண்காணா இடத்தில் எப்படியாவது இருந்து, எக்கேடாவது கெட்டுப் போகட்டும் என்று விட்டு விடுவதற்காக இங்கே கூட்டி வரவில்லை........உம்மை இன்னும் சந்திக்கு இழுத்துவிட மாட்டேன். இது சத்தியம். ஆனால் ........"

"அது போதும். தாங்கள் என் மானத்தைக் காத்தால் போதும் !" என்று ஜானகி கைகூப்பி நமஸ்கரித்தாள்.

"சரி, நீங்கள் இனி எங்கே இருக்கப் போகிறீர்கள்? அதைக் கேட்கத்தான் வந்தேன். உங்களுடைய தகப்பனார் என்னுடைய தகப்பனாருக்கு ஓர் ஆபத்தான சமயத்தில் உதவியிருக்கிறார். இந்த நன்றிக்காக நான் உங்களைப் பாதுகாக்கக் கடமைப் பட்டிருக்கிறேன்........உங்கள் தகப்பனார் எப்படி உதவி செய் தார் என்பதைப் பின்னால் சொல்லுகிறேன். நீங்கள், அந்த முருகேச முதலியாருடைய மகள் என்பதை அறிந்துதான் இங்கே கூட்டிவந்தேன்."

"அப்படியா ! என் புண்ணியந்தான். அப்படியானால் நான் இங்கேயே உங்கள் பாதுகாப்பிலேயே இருந்துவிடு கிறேன்—உங்களுக்குச் சிரமம் இல்லாவிட்டால்."

"சந்தோஷம். நீங்கள் இங்கே இருப்பதில் எங்களுக்குத் துளிக்கூடச் சிரமம் இல்லை....சின்னம்மாள்; ஜானகியைக் கவனித்துக்கொள்ள வேணும்" என்று சின்னியம்மாளைப் பார்த்துச் சொல்லிவிட்டு, வீரையன் வெளியே போகப் புறப் பட்டான். அதற்குள் ஜானகி, "ஐயா, அது என்ன ஆகும் ?" என்றாள்.

"எது என்ன ஆகும் ?" என்றான் வீரையன்.

"அவர்மேல் என்னவோ கொலை, கொள்ளைக் குற்றம் என்று சொன்னீர்களே, என்ன ஆகும் ?"



"ஓ அதுவா ? என்ன ஆகும்—தூக்கு ஆகும் ?"

"ஐயா, அவர்....அவர் என்னைக் கெடுத்துவிட்டாலும்; அவரை என் கணவர் என்றே எண்ணி இதுவரையிலும் அவருடன் வாழ்ந்துவிட்டேன். இனிமேல் அவரோடு வாழவேணு மென்ற ஆசை கொஞ்சங்கூட இல்லை. இருந்தாலும்....ஐயா.... அவரைத் தூக்குப் போடாதபடி....நீங்கள்....முடியாதா ?" என்று மலைக்கள்ளனுடைய கால்களைப் பிடித்துக்கொண்டாள்.

"அது என் கையில் இல்லை. மீறிப்போய்விட்டது. அவ டைய தலையெழுத்து எப்படியோ பார்க்கலாம்" என்று சொல்லிக்கொண்டே வீரையன் போய்விட்டான்.

படி இறங்கி வீரையன் கூடத்துக்கு வந்தான். சப்பாணி அங்கே காத்திருந்தான்.

"சப்பாணி, நீ அந்த மூட்டைகளையெல்லாம் எடுத்துக் கொண்டு தகுந்த காவலுடன் அந்தப் பதினைந்து பேரையும் குகை வழியில் தோப்புக்குக் கொண்டுபோ. சாயபு சொன்ன படி சப் இன்ஸ்பெக்டர் வருவார். அவரிடம் மூட்டைகளையும் கைதிகளையும் ஒப்புவித்துவிட்டு, மற்ற விவரங்களை சாயபு விடம் கேட்டுத் தெரிந்துகொள்ளச் சொல்லிவிட்டு, நீ உடனே வந்துவிடு" என்று வீரையன் சொல்ல, சப்பாணியும் போய் விட்டான்.

குறிப்பிட்ட நேரத்தில் சப் இன்ஸ்பெக்டர் ஆறுமுகம் புளியந் தோப்புக்கு ஜவான்களுடன் வந்து சேர்ந்தார். மலையில் இது வரையிலும் சிறைப்பட்டிருந்த 15 பேரையும் கூட்டிக்கொண்டு மூட்டைகளோடு சப்பாணியும் வந்தான். அந்த 15 பேருக்கும் மலைக்கள்ளன் போட்டிருந்த விலங்குகளை மாற்றி, சர்க்கார் விலங்குகள் பூட்டப்பட்டன. கைதிகளையும் தடயங்களையும் ஒப்புக்கொண்டு ஆறுமுகம் விஜயபுரிக்கு நடந்தார். அவர் அந்த 15 பேரில் ஒருவரையாவது பார்த்ததில்லை. அவர்கள் ஏன் இதுவரை மலையில் அடைக்கப்பட்டிருந்தார்கள் என்றாவது எதற்காகத் தம்மிடத்தில் ஒப்படைக்கப்பட்டார்களென்றாவது விளங்கவில்லை. இருந்தாலும், இத்தனை பேரையும் சர்க்

கார்கூட கண்டுபிடிக்க முடியாதபடி, மலையில் மறைத்து வைத்திருந்த வீரையனுடைய விசேஷங்களையும், அவனுடைய நண்பரென்ற அப்துர் ரஹீம் சாயபுவின் சாமர்த்தியத்தையும் வழி நெடுக வியந்துகொண்டே விஜபபுரி போலீஸ் கச்சேரிக்குள் புகுந்தார்.

அங்கே பெரிய இன்ஸ்பெக்டர் சுந்தரமும், ஏட்டு கருப்பையாவும், மற்றவர்களும் இருந்தார்கள்.

ஆறுமுகம், கைதிகளுடைய ஊர், பேர், தொழில் முதலியவற்றைக் கேட்டு எழுதிக்கொண்டு வரும்போதே ஆறுமுகத்துக்கு அவரை அறியாமலேயே கையும் மனமும் பதற ஆரம்பித்தன. எழுத்தும் ஓடாமல் விழிப்பார். பேச்சு வராமல் பிதற்றுவார். பார்வை மங்கினவர் போல் ஒவ்வொரு கைதியையும் உற்று உற்றுப் பார்ப்பார். பேனாவைக் கீழே வைப்பார். மீண்டும் எடுப்பார். சிறிது நேரம் அசையாமல் சிந்திப்பார். உடனே சிரிப்பார். மலைக்கள்ளனை நினைத்து மகிழ்வார். அப்துர் ரஹீமைப்பற்றி ஆச்சரியப்படுவார். பித்துக்கொண்டார் போலத் தத்தளிப்பார். என்ன ஆச்சரியம்! எவ்வளவு சந்தோஷம்! தமக்கு எவ்வளவு புகழ்! தம் உத்தியோகத்துக்கு எவ்வளவு உயர்வு!

ஜனங்களும் சர்க்காரும் இதுவரையிலும் மலைக்கள்ளனால் கொல்லப்பட்டார்கள் என்று தீர்மானித்துவிட்ட நீலமேகம், கிருஷ்ணையா, சோமசுந்தரம் என்ற மூன்று மிராசுதார்களும் இன்னும் நாலு பேரும் உடலோடு, உயிரோடு தம் கண்ணுக்கு முன்னால் நிற்பதைக் கண்ட ஆறுமுகம், அப்படிப் பித்துக்கொண்டது ஆச்சரியம் அல்ல. பெரிய இன்ஸ்பெக்டருக்கும் கருப்பையாவுக்குங்கூட ஆச்சரியந்தான். என்றாலும்; இவர்கள் ஆறுமுகத்தைப் போல் அவ்வளவு சந்தோஷப்பட்டுவிட முடியாது.

* * * *

அன்று சாயந்திரமே ஆறுமுகம் அப்துர் ரஹீமைச் சந்திக்க வெகு ஆவலோடு மாந்தோப்புக்கு வந்தார். சப்பாணி கதவைத் திறந்துவிட்டான். ஆறுமுகம் மாடிக்குப் போனார். சாயபு காணப்படவில்லை. ஆனால் மேஜையின் மேல் ஊதா விளக்கும் கீழே ஹுக்காவும் அதில் புகையும் இருந்தன. அவை சாயபு உள்ளே இருக்கிறார் என்பதற்கு அறிகுறிகள். ஆறுமுகம் ஒரு நாற்காலியில் உட்கார்ந்தார். மேஜையின்மேல் ஒரு காகிதமும், அது பறந்து போகாதபடி அதன்மேல் ஒரு பாரமும் முன்னால் இருந்தன. அந்தக் காகித பாரத்தை விளையாட்டாகக் கையிலெடுத்தார். கீழிருந்த காகிதத்தில் பார்வை பட்டது. அவரை அறியாமலேயே அதைக் கவனித்தார். அதில் 'ஸ்ரீ சப் இன்ஸ்பெக்டர் ஆறுமுகம் அவர்களுக்கு' என்று ஆரம்பித்திருந்த எழுத்தைப் படித்தார். உடனே அதை எடுத்துப் பார்த்தார். அதில் அன்று கொண்டுவரப்பட்ட கைதிகளுடைய அங்க மச்ச அடையாளங்களும், அவர்களைப்பற்றிப் போலீஸுக்கு வேண்டிய எல்லா விவரங்களும் எழுதப்பட்டிருந்தன. அதைப் படித்துக்கொண்டிருக்கும்போது பின்னாலிருந்து, "சலாமலேக்கும்........வாங்கோ சாப், தொழுகை செய்துகொண்டிருந்தேன்" என்று சொல்லிக்கொண்டே சாயபு வந்தார். சாயபுவைக் கண்ட சப் இன்ஸ்பெக்டர், தங்கள் போலீஸ் 'ஐ. ஜி.' துரையைக் கண்டது போலத் தம்மையே மறந்து; மில்லாத பயபக்தியுடன் எழுந்து நின்றார்.

"ஜீ! ஆறுமுகம் சாப், ஹம்னா ஏக் ........நமக்கு ஒரு உபகாரம் தங்களால் ஆகவேணும்" என்றார் சாயபு.

"என்ன! என்ன! உபகாரமா? என்னாலா? உங்களுக்கா?"

"ஆமாம். நம் நண்பர் வீரையா விஷயத்தில் தாங்கள் கொஞ்சம் தாட்சண்யம் காட்ட வேணுமென்று முன்னாலேயே கேட்டுக்கொண்டிருக்கிறேன் அல்லவா? அதை நீங்கள் இப்போது செய்ய வேண்டும்."

"என்ன சாயபுவாள், என்னை இவ்வளவு பரிகாசம் பண்ணக்கூடாது. எனக்கு வெட்கமாயிருக்கிறது. வீரையாவை நான் தப்பாக எண்ணியிருந்தேன். மன்னிக்க வேணும். அவர்

எனக்கு, என்னுடைய உத்தியோகத்துக்கும், நாட்டிற்கும், நியாயத்திற்கும் செய்திருக்கிற ஆச்சரியமான உபகாரங்களை நினைத்தால், அவருக்கு என்னைப் போன்றவர்கள் காட்ட வேண்டிய தாட்சண்யமும் ஒன்று இருக்கக்கூடுமா! தயவு செய்து ஏளனம் செய்ய வேண்டாம்."

"அப்படியல்ல, சாப். என்ன இருந்தாலும் தாங்கள் சர்க்கார் மனிதர். அதுவும் போலீஸார் தயவிருந்தால் எதையும் செய்யலாம்.........."

"எனக்கு நீங்கள் சொல்லுகிற தினுசு ருசிக்கவில்லை........ அதிருக்கட்டும். என்னால் காட்டக்கூடிய தாட்சண்யம் என்ன? அதையாவது சொல்லுங்கள்."

"பராபர். சொல்லுகிறேன். இத்தனை நாளும் அந்த 15 பேரையும் வீரையா மலையில் அடைத்து வைத்திருந்ததை உங்கள் சர்க்கார் குற்றமாக எடுத்துக்கொள்ளாதபடி பொறுங்கள். நான் எல்லாம் சொல்லிவிடுகிறேன்....இன்னொன்று. உங்கள் பெரிய இன்ஸ்பெக்டர், மேல் அதிகாரிகளுக்கு எழுதியிருக்கிறபடி, அந்த மலைவீட்டை போலீஸு சோதனை செய்யாதபடி நீங்கள்தாம் சிபாரிசு செய்யவேணும். ஔர்.... இன்னும், வீரையாவுக்குத் தாய் தகப்பன்போல் இரண்டு கிழவர்கள் அந்த மலையில் அநேக வருஷங்களாக இருந்து வருகிறார்கள். அவர்கள் இருக்கிற மலைவீடு, அதைச் சுற்றிலுமுள்ள இடங்கள் எல்லாம் அவர்களுக்குச் சொந்தமானதாக விட்டுவிட்டு, அங்கே வேறு யாரும் சொந்தம் பாராட்டாதபடி, சர்க்கார் உத்தரவு வரும்படி, தாங்கள் சிபாரிசு பண்ண வேண்டியது. வீரையா உங்கள் வேலைகளுக்குச் செய்திருக்கிற உபகாரங்களுக்காக, இந்த இனாம் அவருக்குக் கிடைக்கும்படி நீங்கள் செய்ய முடியும். மேலும் 'மலைக்கள்ளன்' என்றவரைப்பற்றி சர்க்கார் ரிக்கார்டுகளில் இதுவரைக்கும் இருந்த கெட்ட பேரைப் பஹிரங்கமாக மாற்றி வைக்க வேண்டியது உங்கள் கடமையல்லவா? இந்தத் தாட்சண்யந்தான் நீங்கள் நம்ப வீரையாவுக்குக் காட்டவேண்டியது."



"ஓ, இது என்னால் முடியும். 'சூப்ரண்ட்' துரையிடம் நானே நேரிற் பேசி,'கலெக்டருக்கு'ச் சொல்லச் செய்து வேண்டியதையெல்லாம் செய்கிறேன்."

"பகுத் அச்சா. ரொம்ப சலாம். அவ்வளவுதான்."

"சரி, சர்க்கார் பேச்சைக் கொஞ்சம் நிறுத்திவிட்டு, சொந்தப் பேச்சுப் பேசுவோம். சொக்கேசர் இன்று ஆள் அனுப்பினார். வருகிற வெள்ளிக்கிழமை ராத்திரி அவர் வீட்டில் நமக்கு விருந்து. வீரையாவையும் வரச் செய்ய வேணும். நானும் அவரைப் பார்க்க வெகு ஆசைப்படுகிறேன்."

"எனக்கும் பிரியந்தான். ஆனால், நான் சொன்னபடி அவருடைய ஆசை முடியுமானால்தான் வீரையா, சொக்கேசர் வீட்டுக்கு வரமுடியும் என்று கண்டிப்பாகச் சொல்லிவிட்டார்."

"என்ன அவருடைய ஆசை? அதைத்தான் சொல்லுங்களேன்."

"அவருடைய ஆசையா?....ஆப்....நீங்கள் அதற்கு வேண்டிய சிபாரிசு செய்வதாயிருந்தால் சொல்லுகிறேன். இல்லாவிட்டால், அதைச் சொல்லுவதில் பலனில்லை. வீரையாவை சொக்கேசர் வீட்டுக்கு அழைத்தும் பயன்படாது."

"என்னுடைய சிபார்சு எதற்கு? என்னால் முடியக்கூடியதாக இருந்தால், அவருக்கில்லாமல் வேறு யாருக்கு நான் சிபார்சு செய்யப் போகிறேன்! என்ன அவருக்கு ஆசை?"

"அதுவா?.... அது........அது வீரையாவுக்குப் பூங்கோதை அம்மாள் மீதிருக்கிற அளவு கடந்த ஆசைதான். அந்தப் பெண்ணைத் தனக்குக் கலியாணம் செய்து கொடுக்கும்படி சொக்கேசரிடம் நீங்களும் நானும் சிபார்சு செய்ய வேணும் என்று மிகவும் கேட்டுக்கொள்கிறார். இதற்கென்ன செய்வது?"

ஆறுமுகத்தின் முகத்தில் அருவருப்பான குறிகள் தோன்றினதைக் கண்டு, சாயபு பேச்சை நிறுத்திவிட்டார். ஆறுமுகம் மிகவும் சங்கடப்பட்டார். பதிலே சொல்லவில்லை. சாயபு ஆறுமுகத்தையே பார்த்துக்கொண்டு பேசாமல் இருந்தார்

வெகுநேரம் கழித்து ஆறுமுகம், "எவ்வளவுதான் நாம் அவர்களுக்கு உபகாரம் செய்திருந்த போதிலும், இது மிகவும் கண்ணியக் குறைவான காரியம். சொக்கேசருடைய வீட்டுக்கு இவ்வளவு உதவி செய்த வீரையன், திடீரென்று இந்த ஆசை கொண்டு, அதையும் நாமிருவரும் இதற்கு சிபாரிசு பேச வேண்டுமென்பது பெருந்தன்மையல்ல. ஆனால், காமத்துக்கு கண்ணுண்டா?"

"எனக்கும் அதுதான் யோசனை. நானும் எவ்வளவோ சொல்லிப் பார்த்தேன். அவர் கேட்கவில்லை. அவர் அந்தப் பெண்ணின்மேல் தனக்கு உண்டாகிவிட்ட ஆசையை, உயிர் போனாலும் விட்டுவிட முடியாதென்றும்,சொக்கேசரைக் கேட்டே ஆகவேணும் என்றும், ஒரே பிடிவாதமாகப் பேசினார். கடைசியாக, நானும் அந்த ஆசையை ஒப்புக்கொண்டு சொக்கேசரிடம் சிபார்சு செய்வதாக வாக்களித்த பிறகுதான் இந்தக் கேசுகளுக்கு வேண்டிய உதவிகளையெல்லாம் செய்தார்."

"அப்படியானால், நீங்கள் சொக்கேசரைக் கேட்கப் போகிறீர்களா?"

"பின்னென்ன செய்வது? வாக்குக் கொடுத்துவிட்டேன். நான் ஒரு முசல்மான். சொன்ன பேச்சைக் காப்பாற்ற வேணும். அதற்காக, உண்டோ இல்லையோ, கேட்டுத்தான் ஆக வேண்டும். என்னைக்காட்டிலும் தாங்கள் கேட்பது நல்லதென்று நான் எண்ணினேன்."

"அதென்னமோ, அப்துர் ரஹீம் சார், என் மனம் கொஞ்சங்கூட இந்த ஆசைக்கு இடங் கொடுக்கவில்லை."

"சரி, நான் கொடுத்த வாக்குறுதிக்காக நானே கேட்டுவிடுகிறேன். தாங்கள் வருத்தப்படவேண்டாம்" என்று சாயபு சமாதானப்படுத்தினார்.

"உம்...............கேளுங்கள், என்றைக்குக் கேட்கப் போகிறீர்கள்?"



"ஏன்; வெள்ளிக்கிழமை ராத்திரி நான் விருந்து சாப்பிட்ட பின் கேட்கிறேன்...."

"சரி, உங்கள் பிரியம்" என்று சலித்த குரலில் சொல்லிவிட்டு ஆறுமுகம் போய்விட்டார்.

## அத்தியாயம் 17

வெள்ளிக்கிழமை விடிவதற்கு முன்னாலேயே சொக்கேசர் வீட்டில் விருந்துக்கான காரியங்கள் தொடங்கிவிட்டன. சுமார் இருபத்தைந்து லக்ஷ ரூபாய் பெறுமான ஆஸ்தியும் தர்ம சிந்தனையும் தாராள குணமும் உடைய சீமானான சொக்கேசர் வீட்டில் தம் உயிரையும் தம் அருமை மகள் பூங்கோதையின் மானத்தையும் காத்துக்கொடுத்த உபகாரிகளுக்கென்றே நடத்தப்பட்ட விருந்துக்கான ஏற்பாடுகளை என்னென்று எழுத முடியும்! தம்முடைய அந்தஸ்துக்கும் விருந்தாளிகளின் விசேஷத்துக்கும் தகுதியான எல்லாம் தயாராக்கப்பட்டன.

குணத்திலும் நடத்தையிலும் தம் மனத்திற்குப் பிடித்தமான சுமார் நூறு கனவான்களைச் சொக்கேசர் விருந்துக்கு அழைத்திருந்தார். மணி ஏழாவதற்குள் ஒவ்வொருவராக விருந்தாளிகள் வந்து சேர்ந்தார்கள். எட்டு மணிக்கு அப்துர் ரஹீம் சாயபும் சப் இன்ஸ்பெக்டர் ஆறுமுகமும் வந்தார்கள். சாயபுக்கென்று வீட்டில் எல்லா விளக்குகளுக்கும் ஊதாக் கண்ணாடி போடப்பட்டிருந்தது. சொக்கேசர் முக்கிய விருந்தாளிகளான அவ்விருவரையும் வாசலிலேயே வரவேற்று, உள்ளே அழைத்துப்போய், தம் ஆசை தீர அப்துர் ரஹீம் சாயுபுக்கும் நன்றியறிதலைத் தெரிவித்துக் கொண்டாடினார். இம்மாதிரி விருந்து சமயங்களில் சொக்கேசர் இவ்வளவு களிப்புக் காட்டினதில்லை.

சொக்கேசர் வெகு வைதீக வழக்கங்களும் ஆசாரங்களும் உடையவரென்றாலும் வாழ்க்கையில் பரந்த நோக்கமுள்ளவர். அர்த்தமில்லாத ஜாதி மத வித்யாசங்களை அருவருப்பார். சாயபுவையும் உடனிருத்தியே பந்தி நடத்த வேணும் என்று எண்ணினார். ஆனால், காமாக்ஷியம்மாள் கொஞ்சம் பழைய வழக்கங்களுள்ளவளென்பதையும், அங்கே வந்திருந்த வேறு



சில விருந்தாளிகள் சமபந்தியை விரும்பாதவர்கள் என்பதையும் தெரிந்திருந்த அப்துர் ரஹீம் தாம் தனியாகச் சாப்பிட வேணுமென்று தெரிவித்தார். சப் இன்ஸ்பெக்டர், சாயபுவை விட்டுவிட்டு உட்கார மறுத்துவிட்டார். சொக்கேசரும் சாயபோடு உட்கார்ந்து உண்ணவேண்டும் என்றார். அப்படியே ஒவ்வொருவராகச் சொல்லிக் கடைசியில் சமபந்தியே நடந்தது.

காமாக்ஷியம்மாளுடைய வெகு திறமையான மேற்பார்வையில் பூங்கோதையின் புத்திசாலித்தனமும் சேர்ந்து கைதேர்ந்த சமையற்காரர்கள் ஆக்கின உண்டிகள்! சாயபு, சப் இன்ஸ்பெக்டர் முதலான விசேஷ விருந்தாளிகள் தாங்கள் அதுவரையிலும் அப்படிப்பட்ட பதார்த்தங்களை உண்டதேயில்லையென்று சொக்கேசரிடம் சொல்லிக்கொண்டே சாப்பிட்டார்கள்.

சாப்பாடு முடிந்தது. மாடியின் விஸ்தாரமான நிலா முற்றத்தில் சந்தனத் தாம்பூலம் நடந்தது. வேடிக்கையாகப் பேசிக்கொண்டும் சிரித்துக்கொண்டும் பொழுது போயிற்று. சொக்கேசர் வீட்டிற்கும் விஜயபுரிக்கும் சாயபும் சப் இன்ஸ்பெக்டரும் செய்த சேவைகளைப்பற்றியும், காத்தவராயன், வீரராஜன் முதலானவர்களைப்பற்றியுந்தான் பெரும்பாலும் பேச்சுகள்.

விருந்தினர் கூடியிருந்த இடத்துக்கு வெகு சமீபத்தில் ஓர் அறையில், பூங்கோதை தன் தந்தையின் விருப்பத்திற்கிணங்கி, வெகு இனிமையாக வீணையோடு இசை பாடிக்கொண்டிருந்தாள். வேடிக்கைப் பேச்சுகளெல்லாம் நின்று, விருந்தாளிகள் வீணாகானத்தை வெகுநேரம் அனுபவித்தார்கள். பூங்கோதை பாட்டில் சப் இன்ஸ்பெக்டருக்கும் சாயபுக்கும் ஒரு தனியான சந்தோஷம். ஆறுமுகத்துக்கு இந்த அருமையான பெண் அநேக ஆபத்துகளிலிருந்து தப்பித்துக்கொண்டதை எண்ணிச் சந்தோஷம். சாயபுக்கு, மயிலின் சாயலும் குயிலின் குரலும் சேர்ந்த இந்த மங்கையர்க்கரசியை எப்படியாவது தம் மலைக்கள்ளனுக்கு மணமுடித்துவிட வேணும் என்ற மகிழ்ச்சி.

பூங்கோதையம்மாளுக்கு ஹிந்துஸ்தானி பாட்டுகள் பாடத்தெரியுமா என்று அப்துர்ரஹீம் சொக்கேசரைக் கேட்டார்.

உடனே சொக்கேசர் தம் பக்கத்தில் உட்கார்ந்திருந்த பொன்னம்பலத்தை அனுப்பி, சாயபு ஹிந்துஸ்தானி பாட்டு விரும்புவதாகப் பூங்கோதைக்குச் சொல்லச் சொன்னார். அதன்படியே பூங்கோதை நாலு ஹிந்துஸ்தானி பாட்டுகளை வெகு அழகாகப் பாடினாள். சாயபு தம்முடைய ஜரிகைத் தலைப்பா கீழே விழுந்துவிடும் போலத் தலையை ஆட்டி 'அச்சா, பலே, சபாஷ்' என்று சொல்லிக்கொண்டு ஆனந்தப்பட்டார்.

மணி பதினொன்று ஆயிற்று. விருந்தாளிகள் கலைய ஆரம்பித்தார்கள். சப் இன்ஸ்பெக்டர், சாயபுவை 'போகலாமா' என்றார். சாயபு உடனே எழுந்து ஆறுமுகத்தைச் சற்று எட்டக் கூட்டிப்போய், "என்ன மகாராஜ், போகலாமா என்கிறீர்களே! நான் வீரையன் சொன்னதைக் கேட்க வேண்டாமா?" என்றார்.

"ஓஹோ ! கேட்கத்தான் வேண்டுமா?........இருந்தாலும் இவ்வளவு பேர் இருக்கும்போது அது நன்றாயிராது....."

"நான் அதற்கு வழி செய்கிறேன். சொக்கேசரிடம் தனியாகத்தான் கேட்கப் போகிறேன். நீங்களும் இருக்கவேணும். நான் பார்த்துக்கொள்ளுகிறேன்" என்று சாயபு ஆறுமுகத்தையும் கூட்டிக்கொண்டு மறுபடியும் சொக்கேசரிடம் வந்தார். பக்கத்திலிருந்தவர்களுக்கெல்லாம் கேட்கும்படியாக சாயபு சொக்கேசரிடம், "ஜீ! ஆப்கே பாஸ்—ஐயா! தங்களிடமும் தங்கள் தமக்கையிடமும் நம்ம மலைக்கள்ளர் கண்டுபிடித்திருக்கிற கேசுகளைப்பற்றிக் கொஞ்சம் தனியாகப் பேசவேண்டியிருக்கிறது. தங்களுக்குத் தூக்கம் வருகிறதா....?"என்றார்.

"இல்லை, இல்லை. உங்களைவிடவா எனக்குத் தூக்கம் பெரிசு? எவ்வளவு நேரம் வேணுமானாலும் பேசுவோம். ஓ ! மறந்துவிட்டேன். என் தமக்கைகூட உங்கள் இருவரிடத்திலும் என்னவோ தனிமையாகக் கேட்க வேணுமென்று சொன்னார்கள்" என்றார் சொக்கேசர்.

இதைக் கேட்ட விருந்தாளிகள் ஒவ்வொருவராக விடைபெற்றுக்கொண்டார்கள். சொக்கேசரும் ஆறுமுகமும் அப்துர் ரஹீம் சாயபும் உட்கார்ந்தார்கள். சொக்கேசர் பொன்னம்பலத்தை அனுப்பி, காமாக்ஷியம்மாளை அழைத்து வரச் சொன்னார். அந்தம்மாளும் வந்து சேர்ந்தாள். பூங்கோதை பாட்டை நிறுத்திவிட்டு, வள்ளியம்மாளுடன் வந்து கொஞ்ச தூரத்தில் நின்றுகொண்டிருந்தாள். காமாக்ஷியம்மாளைப் பார்த்து சாயபு, "மாயீ பைட்டியே.......அம்மா, உட்காருங்கள். என்னிடத்தில் என்னவோ கேட்கவேணுமென்று சொன்னீர்களாமே, என்ன, அது?" என்றார்.



"ஐயா, சாயபு ஐயா, சப் இன்ஸ்பெக்டர் ஐயா—உங்களுக்கும் உங்கள் பிள்ளை குட்டிகளுக்கும் புண்ணியம் உண்டு. நானென்னமோ பொண் மனசு கேட்காமே உங்களைக் கெஞ்சிக் கேட்டுக்கிறேன். தருமந் தலை காக்கும்........" என்று விஷயமில்லாமல் சொல்லிக்கொண்டே போனாள்.

"விஷயத்தைச் சொல்லுங்கள், என்ன வேணும்?" என்றார் ஆறுமுகம். "ஆமாங்க........அதுதான்....அந்தப் பெண் கமலநாயகி நல்ல உத்தமி. பெரிய மனுஷர் வயத்தில் பிறந்தவள். எனக்குச் சிறு வயசிலிருந்து அவளைத் தெரியும். அவளுடைய பாட்டன் காலத்திலிருந்து நம்ப வீட்டுக்கு ரொம்ப வேண்டியவர்கள். சொந்தக்காரருக்கு மேலே........"

"மாயீ, க்யா ஏ....அம்மா, என்ன இது! அந்தப் பெண் யார்? அவளுக்கு என்ன அம்மா?" என்றார் சாயபு.

"ஆமாங்க, சாயபு. அந்தப் பெண் கமலநாயகி....அவள் அந்த ஜமீன்தார் பெண்டாட்டி....நாலஞ்சு தரம் வந்து போனாள். உங்ககிட்ட என்னைச் சொல்லச் சொல்லி....பாவம், ஏழு குழந்தை குட்டிங்க. அந்தப் பொண் முகத்தையும் அந்தக் குஞ்சு குழந்தை முகத்தையும் கொஞ்சம் பாருங்க, சாமி. சொத்தெல்லாம் தொலைச்சாச்சு, ஐயோ பாவம்...." என்று காமாக்ஷியம்மாள் அழ ஆரம்பித்தாள்.

"அம்மா, அழ வேண்டாம். எங்களை என்ன செய்யச் சொல்லுகிறீர்கள்?"

"ஐயா, நீங்க ரெண்டு பேருந்தானே எல்லாம்........உங்களால் முடியாமற் போகுமா?"

"எங்களால் என்ன முடிய வேணும்?"

'ஐயா, அந்தப் பெண்ணுக்கு அந்தத் தாலிக் கயிறாவது கழுத்தில் இருக்கிறாப்பிலே பாருங்களய்யா. அவ்வளவுதான் நான் கேட்கிறது. அப்புறம் அந்தப் படுபாவிப் பயல் வீரராஜன் இருக்கிறானே........எங்கள் குலத்தைக் கெடுத்த கோடாலிக் காம்பு....அவன்....அவன் எனக்குச் சொந்தத் தங்கச்சி மகனுங்க சாமி...."

"அப்படியா! வீரராஜன் ஆப்கே....உங்களுடைய தங்கை மகனோ! அரேரே."

"ஆமாம், சாயபு, சொந்தத் தங்கச்சி. அவள் பேரைக் கெடுக்கப் பிறந்தான்."

"சரி; அவனையும் ஜமீன்தாரையும் அவர்கள் செய்திருக்கிற அக்கிரமங்களையெல்லாம் தெரிந்த பிறகுங்கூட அவர்களை விட்டுவிடச் சொல்லுகிறீர்களா? அந்தக் காதகர்களைத் தண்டிக்காத அரசாங்கம் இருந்தாலென்ன, போனாலென்ன? அவர்களுக்கு இரக்கம் காட்டுவதே பாவம், அம்மா" என்று ஆறுமுகம் இரைந்து பேசினார்.

"ஐயா, வேறே என்னா தன்டனை வேணுமுண்ணாலும் செய்யுங்கோ, சாமி. அவர்களைத் தூக்குப் போடாமலாவது ஒரு புண்ணியம் கட்டிக்கொள்ளுங்கள் நீங்கள் ரெண்டு பேரும்" என்று காமாக்ஷியம்மாள் கெஞ்சினாள்.

"பராபர், கமலநாயகிக்காக ஜமீன்தாரை விட்டுவிட வேணும்! காமாக்ஷியம்மாளுக்காக வீரராஜனை விட்டுவிட வேணும்! பூங்கோதையம்மாளை மூச்சை அடைத்துத் தூக்கிக் கொண்டு போய் அவளுடைய அத்தைக்குச் சாகக்கூடிய விஷத்தைக் கொடுத்த காத்தவராயனையும் வீரராஜனுக்காக விட்டுவிட வேண்டும்! அல்லவா அம்மா?" என்று பூங்கோதையைக் கேட்பது போல சாயபு அவள் பக்கத்தைப் பார்த்துச் சொன்னார்.

சாயபு பேசிக்கொண்டிருக்கும்போதே பூங்கோதை காமாக்ஷியம்மாள் அருகில் வந்து, அவளைக் கையைப் பிடித்துக் கூட்டிக்



கொண்டு எட்டப்போய் என்னவோ சொன்னாள். அத்தையுடன் பூங்கோதை பேசுகின்றதைப் பார்த்து ஆறுமுகம், "பூங்கோதையம்மாள் யாருக்கோ சிபார்சு செய்கிறாப்போலிருக்கிறது! என்னாம்மா?" என்றார். காமாக்ஷியம்மாள் களுக்கென்று சிரித்துவிட்டு, "ஆமாங்கொ; ஆமாங்க. அவளும் ஒரு சிபார்சுதான் பண்ணச் சொல்லுகிறாள். உங்க மலைக்கள்ளர் பிடித்துக் கொண்டு போன அந்த ஜானகியை மன்னித்துவிடும்படி மலைக் கள்ளருக்குச் சாயபு சிபார்சு செய்யவேணுமென்று சொல்லுகிறாள்" என்றாள்.

"சபாஷ்! இது வேணுமானால் சரியான சிபார்சு. நம்மால் முடியக்கூடியது. மற்றதெல்லாம் சர்க்கார் கைக்குப் போய் விட்டது. ஜானகியம்மாளை விட்டுவிட நான் சிபார்சு பண்ண முடியும். ஆனால், ஜமீன்தாரையும் வீரராஜனையும் தூக்குப் போடாமல் செய்ய சப் இன்ஸ்பெக்டர் தயவு செய்தால்தான் முடியும். அவர்தான் சர்க்கார் மனிதர்....ஜீ! சப் இன்ஸ்பெக்டர் ....அம்மாளுக்குச் சொல்லுங்கள்...." என்று சாயபு ஆறு முகத்தைப் பார்த்தார்.

ஆறுமுகம் அது முடியவே முடியாது என்று சொல்லிக் கொண்டே வரும்போது; சாயபு சப் இன்ஸ்பெக்டருக்கு ஏதோ பரிபாஷையாகச் சொன்னார். அதன் பிறகு ஆறுமுகம், 'முடியுமானால் பார்க்கலாம்' என்று காமாக்ஷியம்மாளுக்குக் கொஞ்சம் இரக்கமாகப் பேசினார். "இதெல்லாமிருக்கட்டும். இந்தக் கேசுகள் விஷயமாக என்னிடம் என்னவோ பேசவேணுமென்றீர்களே. அதென்ன?" என்று சொக்கேசர், சாயபுவைக் கேட்டார்.

"ஹோ சாப், அது பூங்கோதை அம்மாளைப்பற்றியது. பூங்கோதையம்மாளைப் படுத்துக்கொள்ளப் போகச் சொல்லுங்கள். பெரியம்மாள் இருக்கலாம்" என்று சாயபு சொக்கேசருக்கு மட்டும் சொல்வது போலச் சொன்னார். ஆனால்; அது எல்லாருக்கும் கேட்டது. பூங்கோதையும் கேட்டாள். அதன் பின் அங்கிருக்கப் பிரியமில்லாமல் போய்விட்டாள். பொன்னம்பலமும் வள்ளியம்மாளும் முன்னாலேயே தூங்கி

விட்டார்கள். பூங்கோதையும் படுத்துக்கொண்டாள். உடனே எழுந்தாள். என்னவோ தன்னைப்பற்றிய பேச்சு என்று சாயபு சொன்னாரே என்ற ஆவல் அதிகரித்தது. மறுபடியும் வெளியில் வந்தாள். 'எனக்குத் தெரியாமல் பேச வேண்டிய என் விஷயம் என்ன அது? ஏதோ விசேஷம் இருக்கவேணும். நான் இருக்கக் கூடாது என்ற ரகசியம் போல் சொன்ன சாயபு எனக்கும் கேட்கும்படி சொல்லுவானேன்?' என்றெல்லாம் எண்ணிக் கொண்டே பூங்கோதை வேறு பக்கமாக அவர்கள் பேசிக் கொண்டிருந்த இடத்துக்குச் சமீபத்தில் திரைத் தட்டியின் மறைவில் வந்து உட்கார்ந்துகொண்டாள். அங்கேயிருந்து அவர்கள் பேசினதை முற்றும் கேட்க முடிந்தது. பூங்கோதை அங்கு வருவதற்கு முன்னாலேயே பேச்சு ஆரம்பமாகி, அவள் மறுபடியும் அங்கே வந்த போது தன்னுடைய அத்தை கொஞ்சம் பலத்த குரலில் பேசிக்கொண்டிருந்தாள்.

"சாயபு ஐயா, நீங்கள் எங்களுக்கு ரொம்ப உபகாரம் பண்ணினவர்கள் தாம். அந்த மலைக்கள்ளனும் என் ராஜாத்தி பூங்கோதையைக் காப்பாத்தினதுக்கு நாங்கள் அவனைக் கையெடுத்துக் கும்பிடவேணும். சப் இன்ஸ்பெக்டர் ஐயாவையும் உங்களையும் உங்கள் சேத்தாளி மலைக்கள்ளனையும் நாங்கள் உள்ளளவும் மறக்க மாட்டோம். இருந்தாலும் நான் சொல்றேனுண்ணு வருத்தப்படாதீங்க. இது உங்களுக்கு நல்லாயில்லை" என்று காமாக்ஷியம்மாள் வருத்தமும் கோபமும் கலந்த குரலில் சொன்னாள்.

"பீயம்மா! என்னுடைய நண்பர் நல்ல புத்திசாலி. கணக்கில்லாத பணக்காரர்...."

"பணங் கெடக்குதுங்க, செருப்பு. நாய் பேய் கிட்டகூட பணம் இருக்குதுங்கோ. பணமா பெருசு? எங்கேயோ கிடக்கிற கள்ளன். வாண்டங்க, இது நல்லாயில்லை. விட்டுடுங்க இந்தப் பேச்சை" என்று கோபத்தோடு காமாக்ஷியம்மாள் எழுந்திருந்தாள் போக. சாயபு அந்தம்மாளைப் போக வேண்டாமென்று தடுத்து உட்காரும்படி வேண்டிக்கொண்டார். ஆறுமுகம் தலை



குனிந்து பேசாமல் உட்கார்ந்திருந்தார். இதுவரையில் பேசாதிருந்த சொக்கேசர், "ஐயா சாயபுவாள்; என்னதான் இருந்தாலும் இப்படித் திடீரென்று, முன்பின் அறியாத ஒருவர், குலங்கோத்திரம் தெரியாத ஒருவர், நாங்கள் கண்ணால்கூட பார்த்தறியாத ஒருவர், கள்ளர் கூட்டத்தைச் சேர்ந்தவரென்ற ஒருவர் இப்படிப் பெண் கேட்கத் துணிந்தது உங்களுக்கே சரியாகத் தோன்றுகின்றதா? என்ன சப் இன்ஸ்பெக்டர்வாள், சாயபு கேட்பது சரியா, நீங்கள் சொல்லுங்கள்" என்றார்.

சப் இன்ஸ்பெக்டர் வாயே திறக்கவில்லை.

"சொக்கேசர் சாப், தாங்கள் சொல்லுவதெல்லாம் ரொம்ப சரிதான். என்னுடைய வீரையன் கள்ளன் அல்ல. அவர் வெகு கண்ணியமான குடும்பத்தில் பிறந்தவர். அவர் சரித்திரம் முழுக்க எனக்குத் தெரியும்."

"அதையாவது சொல்லுங்கள். அவர் யார்? எந்தக் குடும்பத்தில் பிறந்தவர்? என்ன குலம்? இதெல்லாம் தெரியாமல் பெண் கொடுக்கச் சொன்னால்.......... ஐயா சாயபு, ஒரே ஒரு குழந்தை. என் உயிர் போல் வைத்திருக்கிறேன். அந்த என் செல்வத்தை முன்பின் அறியாத ஒருவருக்கு...." என்றார் சொக்கேசர்.

"டேரோ சாப்....பொறுங்கள். வீரையாவைப்பற்றி எனக்குத் தெரிந்ததைச் சொல்லுகிறேன். அதைக் கேட்ட பிறகு உங்களுக்கு இஷ்டமானால் அவரை ஒரு நாள் இங்கே அழைத்து வருகிறேன்........"

"சொல்லுங்கள். அவர் யார்?"

"அவரா? அவர், மகராஜ்! தங்கள் எண்ணுவது போலக் கள்ளனல்ல. அவரை எனக்கு வெகு நாளாகத் தெரியும். அவரால்தான் நான் மாந்தோப்பை விலைக்கு வாங்கி அங்கே குடி வந்தேன். 'மலைக்கள்ளன்', 'மலைக்கள்ளன்' என்று சென்ற இருபது வருஷமாக இந்த வட்டாரத்தில் சொல்லப் பட்டு வரும் 'மலைக்கள்ளன்' நான் பெண் கேட்கிற வீரையா அல்ல. மலைக்கள்ளன்' என்று பேரெடுத்த ஆசாமி இப்

போது சுமார் எழுபது வயசுக் கிழவராகி அந்த மலையிலேயே அவரும் அவருடைய மனைவியும் இன்னும் இருக்கிறார்கள். அந்த நிஜமான மலைக்கள்ளரான கிழவருக்கு எங்கள் வீரையன் தத்துப் புத்திரன் போல இருந்து வருகிறார். அதனால் ஜனங்கள் இவரையும் மலைக்கள்ளன் என்றே சொல்லி வருகிறார்கள்.

"அந்தக் கிழவரைப்பற்றிக் கொஞ்சம் சொல்லுகிறேன். சுனோ—கேளுங்கள். அவரைப்பற்றி அவரே சொன்னதை நான் அறிந்த வரையில் சொல்லுகிறேன். அந்தக் கிழவர் கலையூரில் பிறந்தவராம்."

"என்ன, என்ன, கலையூரா ! கலையூரிற் பிறந்தவரா ?" என்று இதுவரையிலும் தூங்கி விழுந்து கேட்டுக்கொண்டிருந்த காமாக்ஷியம்மாள் துடிதுடித்துக் கேட்டாள். ஏனென்றால் கலையூர், காமாக்ஷியம்மாளின் கணவனுடைய பூர்விகமான ஊர். காமாக்ஷியம்மாள் தன் கணவனுடைய மரண பரியந்தம் அந்தக் கலையூரிலேதான் வாழ்ந்தவள்.

"ஹோ, கலையூர்தான். கேளுங்கள் அம்மா. அந்தக் கிழவர் கலையூரில் பிறந்தவராம். சுமார் முப்பது வருஷங்களுக்கு முன்னால் இந்தக் கிழவர் தம்முடைய சொத்துகளையெல்லாம் சூதாட்டத்திலும் தாசிகளுக்கும் தொலைத்துவிட்டு ஒரு சாமியாரோடு அந்த மலைக்குப் போய்விட்டார்........"

"அப்படியா ! கலையூரிலிருந்தா ! முப்பது வருஷத்துக்கு முன்னாலா !........அப்படியானால் ....என்னுடைய........ கலையூரிலிருந்து ........ என்னுடைய மூத்தார்தான் அப்படிச் சொத்தையெல்லாம் சூதாடித் தோற்றுவிட்டு யாரோ ஒரு சாமியாரோடு போய்விட்டார். ஒரு வேளை அந்தக் கிழவர்........" என்று காமாக்ஷியம்மாள் தடுமாறிக்கொண்டிருக்கும்போது சொக்கேசர் வெகு ஆச்சரியப்பட்டவராக, "ஆமாம் அக்கா, சாயபுவாள் சொல்வதைப் பார்த்தால் உங்கள் மூத்தார் **கனகசபை** போலத்தான் இருக்கிறது. அவர்தான் சாமியாரோடு போனவர். அதுவும் கலையூரிலிருந்து போனவர் என்றால் அவராகத்தான் இருக்கவேணும்....சாயபுவாள் ! உங்கள் கதை ரொம்ப ருசியாக இருக்கிறது. அப்புறம் ?....சொல்லுங்கள்" என்றார்.



"சபாஷ் ! நம்ம வீரையா சொன்னது சரியாகத்தான் இருக்கிறது. கலையூர் என்ற பேரைச் சொன்னாலே காமாக்ஷியம்மாளுக்கு என்ன கோபம் வந்தாலும் போய்விடும் என்று வீரையன் சொன்னார். அது சரியாக இருக்கிறது....ஔர்.... சுனோ....கேளுங்கள்....அந்தக் கிழவர் அநேக வருஷம் அந்தச் சாமியாருக்குப் பணிவிடைகள் செய்துகொண்டு அந்த மலையில் அவர்கள் இரண்டு பேருமே இருந்து வந்தார்களாம். அந்தச் சாமியாருக்கு நல்ல வைத்தியம் செய்யவும் தங்கம் செய்யவுங் கூடத் தெரியுமாம். அந்த முறைகளின் ரகசியமெல்லாம் இந்தக் கிழவருக்கும் சாமியார் சொல்லிக் கொடுத்திருப்பதாக வீரையா சொன்னார்.

"அதன் பிறகு சாமியார் காலமானார். அந்தச் சாமியாருக்குச் சமாதி கட்டுவதற்காக அந்த மலையில் வசித்த சில கள்ளர்களையும் சேர்த்துக்கொண்டு அந்த மலையில் ஒரு பக்கத்தில் இடிந்து மண்ணிற் புதைந்து கிடந்த ஒரு கோட்டையின் கற்களையெல்லாம் தோண்டியெடுத்தபோது அங்கே அநேக காலத்துக்கு முன்னாலிருந்த ஒரு சிற்றரசனுடைய பொக்கிஷமெல்லாம் கிழவருக்குக் கிடைத்ததாம். அந்தச் செல்வத்தைக்கொண்டு அநேக கள்ளர்களைத் தம் கூட்டமாகச் சேர்த்துக்கொண்டு நல்ல வீடு ஒன்றைக் கட்டிக்கொண்டு, அநேக சாமர்த்தியமான காரியங்களைச் செய்துகொண்டு, பகையாளிகள் கூட்டத்தைச் சேர்ந்த கள்ளர்களோடு கட்சி கட்டிக்கொண்டு வசித்து வந்தார். அப்போதிருந்த இந்தக் கிழவருடைய கள்ளர் கூட்டத்துக்கும், காத்தவராயனுடைய குருவாயிருந்த பேர்போன ஒரு கள்ளனுடைய கூட்டத்துக்கும் பகையாம். இந்தக் காத்தவராயனுடைய தலைவனான கள்ளன் கலையூரில் யாரோ ஒரு தனவானுடைய வீட்டிலே புகுந்து கொள்ளையடிக்க முயன்றானாம். அந்த வீட்டுக்காரர் விழித்துக்கொண்டு கள்ளர்களைத் துரத்திய போது அவரைக் கள்ளர்கள் கைத்தடியால் நெஞ்சில் அடித்து

விட்டுப் போய்விட்டார்களாம். அந்த அடியினால் அவர் ஒரு வருஷம் நோயாக இருந்து இறந்துபோனதாகவும் கிழவரான மலைக்கள்ளன் தன்னிடம் சொல்லியிருக்கிறதாக வீரையனே என்னிடம் சொன்னார்...."

"ஐயோ! ஐயோ! அந்தப் பாழாப்போனவன் கூட்டமா இந்தக் காத்தவராயன்! என்னப்பா, சொக்கேசா! பாத்தியா! உங்கள் அத்தானை அடித்தவர்கள் இவர்களாமே! ஐயா சாயபு, அந்தப் படுபாவி....காத்தவராயனை—பட்டுப் போனவனை— விடாதிங்க. மணிக்கட்டு மணிக்கட்டாக வெட்டிச் சித்திரவதை பண்ணனும் அவனை" என்று காமாக்ஷியம்மாள் அழுகையும் ஆத்திரமும் பொங்கினாள்.

"க்யா மாயீ! என்ன அம்மா? ஏன் காத்தவராயன் மேல் மட்டும் அவ்வளவு கோபம்?" என்றார் சாயபு. அதற்குச் சொக்கேசர், காத்தவராயனுடைய கூட்டத்தால் அடிபட்டுச் செத்தவர் காமாக்ஷியம்மாளுடைய கணவன்தான் என்றார். உடனே சாயபு, "அப்படியா! அல்லாரே அல்லா! அம்மா, என்ன அம்மா, அப்படிப்பட்ட காத்தவராயன் கூட்டத்துக்கு இவ்வளவு ஒத்தாசையாக இருந்து, அநேக கொலைகளுக்கும் கொள்ளைகளுக்கும் காரணமாயிருந்தவர்கள் உங்கள் தங்கை மகன் வீரராஜனும், குட்டிபட்டி ஜமீன்தாருந்தானே! உங்களுக்கு விஷம் கொடுத்ததும் பூங்கோதை அம்மாளைத் தூக்கிக்கொண்டு போனதும் எல்லாம் வீரராஜன், ஜமீன்தார்—இந்த இரண்டு பேருடைய காரியந்தானே? அவர்களுக்குச் சிபார்சு பேசினீர்களே! காத்தவராயனை மட்டுமா சித்ரவதை செய்ய வேணும்?...." என்றார் சாயபு.

காமாக்ஷியம்மாள் பதில் பேசவில்லை. தன்னுடைய கணவரின் நினைவும், கலையூரில் அவர் அடிபட்டிறந்த துக்கமும் வந்து தேம்பித் தேம்பி அழுதாள். சாயபுவும் சொக்கேசரும் வெகுநேரம் காமாக்ஷியம்மாளைத் தேற்றினார்கள்.

"இதெல்லாம் கிடக்கிட்டும். உங்கள் கதையை முடியுங்கள். இன்னும் உங்களுடைய நண்பர் வீரையனுடைய விஷயத்திற்கு வரவில்லையே. அவர் யார்? அதைச் சொல்லுங்கள்" என்று சொக்கேசர் கேட்டார்.



"பராபர், சொல்லுகிறேன். எல்லாம் வரிசையாக நான் கேட்டபடி சொல்லுகிறேன். கொஞ்சம் மெஹர்பானி செய்து பொறுத்துக் கேளுங்கள்..................... .... ........உம்................... என்ன சொன்னேன்........அந்த மலைக்கள்ளரான கிழவன் காத்தவராயன் கூட்டத்தாரோடு கட்சி கட்டி வேலை செய்தார் என்று சொன்னேனா....இனி எங்கள் வீரையன் அந்த மலைக் கள்ளனோடு எப்படிப் போய்ச் சேர்ந்தார் என்பதைச் சொல்லுகிறேன்.

"சுமார் பதினைந்து வருஷங்களுக்கு முன்னால் எங்கள் வீரையாவுக்குப் பன்னிரண்டு பதின்மூன்று வயசாக இருக்கும் போது, அவரும் அவரோடு இன்னும் சில துடுக்கான பையன்களும் சேர்ந்துகொண்டு சிறுபிள்ளைத்தனமாக........இங்கே எங்கேயோ 'சிறுத்தைக்காடு' என்று ஒரு காடு இருக்கிறதாமே...."

"ஆமாம், இங்கிருந்து ஐந்தாறு மைல் தூரத்தில் இருக்கிறது" என்றார் சொக்கேசர்.

"அச்சா. அந்தக் காட்டுக்கு இந்தப் பையன்கள் 'புலி வேட்டைக்குப் போகிறோம்' என்று போனார்களாம். அந்தக் காட்டில் ஒரு சிறுத்தைப்புலி இருப்பதாக ஊரில் பேசிக் கொண்டதைக் கேட்டு அந்தச் சிறுவர்கள் பயமறியாத வயசான தால் அந்தச் சிறுத்தைப் புலி தினம் தினம் தண்ணீர் குடிக்க ஒரு குட்டைக்கு வருகிறதென்று கேள்விப்பட்டதனால் அந்தக் குட்டைக்குப் பக்கத்தில் மறைந்திருந்தால் சிறுத்தையைப் பார்க்கலாமென்று போனார்களாம். குட்டைக்குப் பக்கத்தில் ஆளுக்கு ஒரு புளியமரத்தின்மேல் ஏறிக்கொண்டு பையன்கள் சிறுத்தைக்காகக் காத்திருந்தார்களாம். பொழுது போகிற சமயத்தில் வீரையன் இருந்த மரத்துக்கு நேராக ஒரு மனிதன் ஓடி வந்தானாம். அவனுக்குப் பின்னால் ஒரு சிறுத்தை துரத்திக்கொண்டு வந்ததாம். மனிதன் குட்டையின் களிமண்

சேற்றில் கால் வழுக்கி விழுந்துவிட்டானாம். சிறுத்தை அவனை அழுத்திக்கொண்டது. நம்ம வீரையன் வெகு தைரியசாலி. சிறுவயதிலேயே ரொம்ப துணிச்சலுள்ளவாரம். வீரையன் தன்னுடைய வலக்கைப் பின்புறத்தை வாயில் வைத்து 'பப்பப்பப்—பப்பப்பப்—பப்பப்பப்' என்று பயங்கரமான சத்தம் செய்தார். அந்தச் சத்தத்தைக் கேட்டுத் திடுக்கிட்டுச் சிறுத்தை மேலே பார்த்தது. வீரையன் மறுபடியும் இன்னும் பெரிய சத்தம் போட்டுச் சிறுத்தையை மிரட்டினார். உடனே சிறுத்தை வீரையன் மேல் கோபங்கொண்டு தான் அழுத்திக் கொண்டிருந்த ஆளை விட்டுவிட்டு மரத்தின் மேல் தாவி ஏற வீரையன் இருந்த கிளைக்குச் சமீபமாக வந்துவிட்டது. சிறுத்தைப் புலி வேட்டைக்கு என்று பையன்கள் விளையாட்டாக ஆளுக்கு ஒரு மூங்கில் தடி கொண்டுபோயிருந்தார்கள். அந்தத் தடியின் முனையில் பழைய பேனாக்கத்தி ஒன்றைச் செருகி ஈட்டி என்று வீரையன் கொண்டுபோயிருந்தாராம். அந்தத் தடியால் வீரையன் மரத்தின்மேல் ஏறி வந்துவிட்ட சிறுத்தையின் முகத்தில் குத்தினார். நல்ல வேளையாக அந்தக் குத்து நேராகச் சிறுத்தையின் கண்ணில் பாய்ந்துவிட்டதாம். சிறுத்தை அப்படியே பொத்தென்று கீழே விழுந்து உறுமிக் கொண்டு ஓட்டம் பிடித்துவிட்டது. இதற்குள் சிறுத்தை அழுத்திக்கொண்ட ஆள் மெல்லத் தப்பி எழுந்து நொண்டி நொண்டிப்போய் ஒரு புதரில் புகுந்து அதற்கு மேல் போக முடியாமல் விழுந்துவிட்டான்.

"சிறுத்தை ஓடிவிட்டபின் பையன்கள் ஒவ்வொருவராக இறங்கி வந்து வீரையன் தைரியத்தை மெச்சி வீட்டுக்குப் புறப்பட்டார்கள். ஆனால், வீரையன் மட்டும் அந்தப் புலி அழுத்திய ஆளைக் கண்டுபிடித்து அவனுக்கு ஒத்தாசை செய்ய வேணுமென்று ஒவ்வொரு புதராக அந்த மனிதனைத் தேட ஆரம்பித்தார். மற்றப் பையன்கள் இருட்டிப்போகுமென்றும் வீட்டுக்குப் போக வேணும் என்றும் சொன்னார்கள். வீரையன் அவர்கள் சொன்னதை ஏற்றுக்கொள்ளவில்லை. அடிபட்ட மனிதனுக்காகத் தேடிக்கொண்டே யிருந்தார். கொஞ்சங் கொஞ்சமாக மற்ற பையன்கள் இருந்த இடத்தை விட்டு வெகு



மறைந்த இடங்களுக்குப் போய்விட்டார்கள். மற்ற பையன்கள் கூப்பிட்டுப் பார்த்துவிட்டுப் போய்விட்டார்கள்.

"இருட்டுகிற சமயத்தில் ஓர் அடர்ந்த புதருக்குள் அந்த அடிபட்ட மனிதன் மயங்கிக் கிடப்பதை வீரையன் கண்டுபிடித்தார். இடத்தோள்பட்டையில் சிறுத்தையினுடைய பற்கள் பதிந்து, தோல் கிழிபட்டு எலும்பு தெரியக்கூடிய காயமுண்டாகி ரத்தம் கொட்டிக்கொண்டிருந்தது. அருகிலிருந்த குட்டைக்கு ஓடி வீரையன் தன்னுடைய மேல்துண்டு முழுவதையும் நனைத்துக்கொண்டு வந்து, அந்த மனிதனுடைய முகத்திலும் வாயிலும் பிழிந்தார். வாயிற்பட்ட தண்ணீரைத் தாகத்தோடு குடித்துக் கொஞ்சம் களைப்புத் தீர்ந்து கண்ணைத் திறந்து பார்த்து அந்த மனிதன், 'அப்பா நீதானா ! நீ யில்லாதிருந்தால் நான் இன்று செத்திருப்பேன் என்றான்' வீரையன் அந்த ஈரத் துண்டை கிழித்துக் காயத்தின் மேல் கோணமாணலாகக் கட்டி 'வாங்க, உங்க வீட்டுக்குக் கொண்டுபோய் உங்களை விட்டுவிட்டு நான் ஊருக்குப் போகணும்' என்றாராம். அதைக் கேட்ட அந்த மனிதன் தன்னுடைய வீடு வெகு தூரத்திலிருக்கிறதென்றும். ஆனால் அடுத்த பனந்தோப்புச் சாலையில் தன் ஆள்கள் இருப்பதரகவும் அங்கே போய்ச் சொன்னால் உடனே உதவி வரும் என்றும் சொன்னாராம். வீரையன் உடனே பனந்தோப்புக்குப் போய் அங்கிருந்தவர்களிடம் சொன்னாராம். கேட்டதும் ஏழெட்டுப் பேர் விளக்கு, தடி, கட்டில் எல்லாம் எடுத்துக்கொண்டு வெகுவேகமாக ஓடிவந்து அந்த அடிபட்ட மனிதரைப் பார்த்தார்களாம். வந்தவர்களில் ஒருவன் காயங்களைப் பார்த்துவிட்டு விளக்கை எடுத்துக்கொண்டு போய் அந்தக் காட்டில் ஏதோ ஒரு பச்சிலையைக் கொண்டு வந்து கசக்கி அதன் சாற்றைக் காயத்தின்மேல் பிழிந்துவிட்டு அந்தத் தழையை ரணத்தின் மேல் வைத்துக் கட்டுக் கட்டினானாம். பிறகு அடிபட்டவனைக் கட்டிலின்மேல் படுக்க வைத்து நாலுபேர் கட்டிலைத் தூக்கினார்களாம். தூக்குவதற்கு முன், அடிபட்டவர் வீரையாவைக் கிட்டவரச் சொல்லி, வலக்

கையால் வீரையனைத் தன் மார்போடணைத்துக்கொண்டு, "குழந்தாய்! என் உயிர் இன்று உன்னால் காப்பாற்றப்பட்டது. நீ யாரென்பது எனக்குத் தெரியாவிட்டாலும், நீ எனக்குக் குல தெய்வம் போன்றவன். இருட்டிப் போய்விட்டது. தனியாகக் காட்டுப்பாதையில் ஊருக்குப் போக வேண்டாம். இன்றிரவு எங்களோடு என்னுடைய இருப்பிடத்தில் தங்கி நாளைக்கு ஊர் போகலாம். தயவு செய். உனக்கு நல்ல வெகுமதி செய்து நாளை அனுப்பி வைக்கிறேன். கூடவே வாப்பா குழந்தை" என்று கேட்டுக்கொண்டாராம். வீரையனும் சம்மதித்தார். பிறகு ஆறு ஏழு மைல் நடந்து மலையின்மேல் ஏற எங்கெங்கேயோ குகையிலும் கணவாயிலும் புகுந்து போய்க் கடைசியாக அந்த அடிபட்ட மனிதனுடைய பெரிய அரண்மனை போன்ற வீட்டை அடைந்தார்களாம். அந்த வீடு தான் இப்போது அந்தக் கிழவரான மலைக்கள்ளரும் அவருடைய மனைவியும் இருந்து வருகிற வீடு. அந்தக் கிழவன்தான் இந்தச் சிறுத்தைப் புலியால் அடிபட்ட மனிதன்."

"ஆ! அப்படியா அது! 'மலைக்கள்ளன்' என்று போலீஸ் ரிகார்டுகளிலெல்லாம் தாக்கலாயிருக்கிறது உங்கள் நண்பரான வீரையன் அல்லவா?" என்று இதுவரையிலும் வாய் திறக்காத சப் இன்ஸ்பெக்டர் ஆறுமுகம் கேட்டார்.

"நஹீ நஹீ........ இல்லை இல்லை........ஸச் பாத்........ உண்மையான பேச்சு. அவர் அல்லவே அல்ல. ஆனால், அவரையும் மலைக்கள்ளனென்றுதான் எல்லோரும் சொல்லு வார்கள்" என்றார் சாயபு.

"சரி; கதையைச் சொல்லுங்கள். அங்கே அந்த மலை வீட்டுக்குப் போன பையன் என்னவானான்? அதைச் சொல்லுங்கள்" என்று சொக்கேசர் அவசரப்பட்டார்.

"வீரையன் என்ன ஆனான் என்றா கேட்கிறீர்கள், சாப்? என்ன ஆனார்? அங்கேயே இருந்துகொண்டார். இயற்கை யிலேயே நிம்மதியான மனமும் தைரியமும், உத்ஸாகமும் உள்ள



வீரையா அந்த மலை வளத்தையும் அங்குள்ளவர்களுடைய அச்சமற்ற வாழ்க்கையையும் மலைக்கள்ளனென்ற கிழவனும் அவருடைய மனைவியும் இவர்மேல் வைத்த பிரியத்தையும் பார்த்து அங்கேயே இருந்துவிட்டார்; வீட்டை மறந்துவிட்டார். அந்த மலைக்கள்ளனும் வீரையனுடைய தாய் தந்தையர் யாரென்று விசாரித்தபொழுது, தன்னைச் சிறுத்தைப் புலியினின்றும் தப்பச்செய்த சிறுவன் தனக்கு நெருங்கிய சொந்தக்காரனாக இருப்பதை அறிந்து, அவனை வீட்டுக்குப் போகவிடாமல், தன்னுடைய மகனைப்போல அங்கேயே இருக்க வேணுமென்றும், தன்னுடைய ஏராளமான செல்வத்துக்கு ஒரு வாரிசு வேண்டுமென்றும் மிகவும் கேட்டுக்கொண்டார். அங்குள்ள சம்பத்தையும் சுகத்தையும் பார்த்து நம்ம வீரையாவும் இருந்துவிட்டார்." என்று சாயபு சொல்லும் போதே சொக்கேசர், "என்ன, என்ன, சொந்தக்காரனா! கலையூரிலிருந்து சாமியாரோடு மலைக்குப் போன அந்த மனிதனுக்கு இந்த வீரையன் சொந்தக்காரனா? எப்படிச் சொந்தம்? அதைச் சொல்லுங்கள். அதுதான் முக்கியம்" என்றார் சொக்கேசர்.

தன்னுடைய கணவனுக்குத் தமையனான கனகசபை யாகத்தான் இருக்கவேணும் என்று தெரிகிற அந்த மலைக் கிழவனுக்கு இந்தப் பையன் சொந்தக்காரனாம் என்பதைக் கேட்டவுடன், என்னவோ சொல்ல முடியாத மனக்குழப்பம் உண்டாகித் தலையும் மனமும் சுழல்வது போல வேகத்துடன் காமாக்ஷியம்மாள், "ஐயா, சாயபு, ஆமாஞ் சாமி, அதைச் சொல்லுங்கள். அந்தப் பையன் கிழவருக்கு எப்படிச் சொந்தம்?" என்றாள்.

"மாயீ........ஓ சப்ஹம்னா........அம்மா, அதெல்லாம் நமக்குத் தெரியாது. சரியாக நினைப்பில்லை. நேற்றுத்தான் இதையெல்லாம் வீரையா என்னிடம் சொல்லி பூங்கோதை யம்மாளைக் கல்யாணம் செய்துகொள்ள உங்களிடம் கேட்கச் சொன்னார். அவர் சொன்ன வேகத்தில் இந்தச் சொந்தம்

எப்படி என்பது என் மனத்தில் நிற்கவில்லை....உம்.... நினைத்துப் பார்த்தாலும் ஞாபகம் வரவில்லை....என்னமோ அந்தக் கிழவருக்கு வீரையா அண்ணன் மகனோ தம்பி மகனோ ....எனக்கு நிச்சயமாகச் சொல்ல முடியவில்லை."

"என்ன, என்ன, அண்ணன் மகனா ! தம்பி மகனா !" என்று காமாக்ஷியம்மாளும் சொக்கேசரும் ஏக காலத்தில் கேட்டார்கள்.

"அதென்னமோ ..........மகராஜ், சரியாக நினைவுக்கு வர வில்லை."

"அது போகட்டும். என்னமோ பசங்கள் புலி வேட்டைக் குண்ணு சிறுத்தைக் காட்டுக்குப் போனாங்கோண்ணு சொன்னீங்களே, அந்தப் பசங்கள் எந்த ஊரிலிருந்து போனவர்களாம் ?" என்று காமாக்ஷியம்மாள் கேட்டாள்.

"ஹோ ! ஓ மாலும்—அது தெரியும். அது நினைவிருக் கிறது. அந்தப் பையன்கள் இந்த விஜயபுரியிலிருந்துதான் போனார்களாம்."

"அப்படியா....அட பெருஞ்சாமி....ஐயா சாயபு, அந்த வீரையன் எப்படியிருப்பான் ? கொஞ்சம் அவனுடைய அடை யாளத்தைச் சொல்லுங்களேன்" என்றாள் காமாக்ஷியம்மாள்.

"பரோபர். அவருடைய அடையாளமா ? அவர் அதிக உயரமும் அல்ல, குள்ளமும் அல்ல. ரொம்ப சிவப்பும் அல்ல, கருப்பும் அல்ல. நல்ல கம்பீரமான தோற்றமும் இனிய பார்வையும் உள்ளவர். எப்போதும் சிரித்த முகமாகப் பேசு வார். இடக்கையில் ஒரு பெரிய புண்ணின் ஆறிப்போன தழும்பு உண்டு. வலத்தோளில் புளியங்கொட்டையளவு கறுத்த வட்டமான மச்சம் உண்டு....அவர்...."

"அப்பா, சாமி......., சாயபையா—ஆமாம்....ஆமாம் ஆ........ ஆ....... அவன் தான்........அவனே தான்" என்று காமாக்ஷியம்மாள் துள்ளி எழுந்தாள். உடனே மாரடைத்துக்கொண்டது போலக் கையை நெஞ்சில் அழுத்திக்கொண்டு மயங்கிக் கீழே உட்கார்ந்த



படியே படுத்துவிட்டாள். சொக்கேசர் எழுந்து ஓடி அங்கே விருந்தாளிகளுக்குக் கொண்டுவந்து வைத்திருந்த பானைத் தண்ணீரை அள்ளி வந்து காமாக்ஷியம்மாள் முகத்தில் அடித்து விசிறியெடுத்து வெகுநேரம் விசிறியபின் பிரக்ஞை வந்தது. நல்ல நினைவு வந்தவுடன் சாயபுவுக்கு நேராகப் படுத்துக் கொண்டு, "சாமி சாயபு ! எங்கள் குலதெய்வம் போல எங்க ளுக்கு எவ்வளவோ மானங் காப்பாத்திய சாயபூ, உங்கள் காலைக் கும்பிடுகிறேன். அவனை என் கண்ணிலே காட்டுங்க ஐயா.... என் ராஜா....ஐயோ ! பதினஞ்சு வருஷம் ஆகப் போவுதே, என் சாமியைப் பார்த்து. எங்கேயோ கண்டிக்குப் போய், அங்கே செத்துப் போனாண்ணு சொன்னாங்களே ! ஐயா சாயபு, எனக்குப் பால் வார்த்த புண்ணியவான் நீங்கள்" என்று காமாக்ஷியம்மாள் சாயபு காலைப் பிடித்துக்கொண்டு கதறினாள்.

"ஏ க்யா மாயி........இது என்ன அம்மா ? நம்ம வீரையன் உங்களுக்குச் சொந்தமா ? இது ? என்ன ஆச்சரியம் !.... சொக்கேசர் சாப், என்ன இதெல்லாம்....?" என்றார் சாயபு.

பிறகு சொக்கேசர், சாயபுவுக்கு விவரமெல்லாம் சொன்னார். சாயபு சொன்ன அடையாளங்களால் அந்த வீரையன் தன் தமக்கை காமாக்ஷியம்மாளின் மூத்த மகனாகத் தான் இருக்கவேணும் என்றும், அவனை உடனே தன் வீட்டுக்கு அழைத்துவர வேணுமென்றும், நினைக்கிறபடி அதே ஆளாக இருந்தால் பூங்கோதை அவனுக்கென்றே வளர்ந்தவளானதால் வெகு சிறப்பாக மணம் முடித்துவைக்கத் தான் வெகு சந்தோஷப்படுவதாகவும் சொக்கேசர் சொன்னார். அதற்கு சாயபு, "அதென்னமோ சாப், அதே ஆளோ அல்லவோ, எனக்குத் தெரியாது. பெண் கொடுப்பதாக உறுதி சொன்னால் தான் அவர் இங்கே வருவார். நீங்கள் உறுதி சொல்லாமல் குமார வீரையன்...."

"என்ன சொன்னீங்க, சாயபு? அவன் பெயர் குமார வீரையனா !"

"ஆம். அவர் முழுப் பெயர் குமாரவீரன். கிழவர் அவரை வீரையா என்று கூப்பிடுகிற வழக்கம்."

"ஐயோ, அவனே அவன்தான். என் மகன்தான். அவன் பெயர்தான் குமார வீரன். தம்பீ சொக்கேசா! கேட்டாயா!" என்று காமாக்ஷியம்மாள் பூரித்துப் பொங்கினாள்.

"சரி சாயபுவாள், நீங்கள் சொன்னதெல்லாம் உண்மை தானே?" என்றார் சொக்கேசர்.

"பொய் வேறே பேசுவோமா நாம், மகராஜ். நான் சொன்னதெல்லாம் உண்மை. அல்லாவறிய நாகூர் ஆண்டவனறிய."

"சரி, அப்படியானால் உங்கள் நண்பர் வீரையாவுக்கு நான் பூங்கோதையைக் கொடுக்கிறேன்."

"சபாஷ்! சபாஷ்! அச்சா! வைசா போலோ, சாப். அப்படிச் சொல்லுங்கள். அப்படியானால் நாளை அல்லது மறுதினம் அவரை இங்கே அழைத்துவருகிறேன். ரொம்ப நேரமாகிவிட்டது. போய் வருகிறேன். எல்லாருக்கும் சலாம். பூங்கோதைக்கும் சலாம் சொல்லுங்கள்."

இத்தனைக்கும் காதுகொடுத்துக் கேட்டுக்கொண்டிருந்த பூங்கோதை உடனே போய் யாருமறியாதபடி தன் அறையில் படுத்துக்கொண்டாள்.

சாயபுவும் சப்-இன்ஸ்பெக்டரும் சொக்கேசர் வீட்டை விட்டு வெளியில் வந்த பிறகு சப்-இன்ஸ்பெக்டர், "ஐயா சாயபு! உங்களைப் போன்ற சமர்த்தரை நான் கண்டதே இல்லை. ஒன்றும் தெரியாதவர் போலப் பெண் கேட்க ஆரம்பித்தீரே!" என்றார்.

சாயபு கலகலவென்று சிரித்தார்.

## அத்தியாயம் 18

அப்துர் ரஹீமும், ஆறுமுகமும் போனபின் சொக்கேசருடைய வீட்டில் ஆச்சரியமும் ஆனந்தமும் அளவு கடந்துவிட்டன. சொக்கேசர் உடலோடு சொர்க்கத்தைக் கண்டவர் போல் களித்தார். வீரையன் தம் தமக்கை மகனான குமாரவீரன் தான் என்றால், இதைவிட இனிய செய்தி இந்த ஜன்மத்தில் அவர் காதில் விழுந்ததில்லையென்றுதான் சொல்ல வேண்டும். தமக்கு இவ்வளவு உபசாரங்களைச் செய்து, தம் உயிர் போன்ற ஒரே குழந்தை பூங்கோதையின் கௌரவத்தைக் காத்து, தம்முடைய மைத்துனர் கலையூர் கணேசரை அடித்த காத்தவராயன் கூட்டத்தைக் கைது செய்த அப்துர் ரஹீம் சாயபுவையும் குமாரவீரனையும் இன்ன விதமாகத்தான் புகழ்ந்து மகிழ்வதென்று தெரியாமல் சொக்கேசர் சொக்கிக் கிடந்தார். சிறு வயசில் வெகு துடுக்கான பையன் என்று தாம் கண்டித்து வளர்த்த அந்தக் குமாரவீரன், இவ்வளவு வீரத்தன முள்ளவனாகித் தம்முடைய கண்மணி போன்ற பூங்கோதைக்குக் கணவனாகப் போவதை நினைத்து நினைத்து இன்பம் கரை காணார். சிறு வயதில் குமாரவீரனும் பூங்கோதையும் சேர்ந்து விளையாடும் போதெல்லாம், தமக்கை காமாக்ஷியம்மாள் பூங்கோதையைக் குமார வீரனுக்குத்தான் கொடுக்க வேணுமென்று கேட்ட போதெல்லாம், அந்தத் துஷ்டப் பையனுக்கு அருமையான பெண் பூங்கோதையைக் கொடுக்க மாட்டேன் என்று சொன்னதையெல்லாம் இப்போது எண்ணி வெட்கப்பட்டார்.

காமாக்ஷியம்மாளுடைய சந்தோஷத்தைக் கணக்கிடவும் முடியுமா! புனர்ஜன்மம் பெற்றுவந்த சிறு குழந்தையைப் போல் பூரித்தாள். கள்ளர்களால் அடிபட்ட கணவனை இழந்து, மக்களுடன் சொக்கேசர் வீட்டுக்கு வந்தவள், கணவன் இறந்த துக்கத்தை மறப்பதற்குள் திடீரென்று தன் மூத்த மகன்

காணாமற்போனான்; புலியடித்துவிட்டதென்றும் கண்டிக்குப் போய்ச் செத்துப்போய்விட்டானென்றும் பற்பல விதமாக நினைத்து நினைத்து, பதினைந்து வருஷமாகி யும் மறக்க முடியாத அந்தத் தலைமகன் உயிரோடிருக்கிறான் என்று கேட்ட காமாக்ஷியம்மாளுக்கு உண்டான குதூகலத்தைக் கணக்கிடவும் முடியுமா? அதுவும் அந்த மகன் வெகு கெட்டிக் காரனாகவும் உலகம் புகழத் தகுந்தவனாகவும் இருக்கிறான் என்றால் சொல்லவும் வேண்டுமா? மகன் உயிரோடிருக்கிறான் என்றதைக்காட்டிலும், அவன் கீர்த்தி வாய்ந்தவனாக இருக்கிறான் என்றதைக்காட்டிலும், தான் கண்ணில் வைத்துக் காத்து வந்த பூங்கோதையை எத்தனையோ பேர் மணம் பேசியும் அவளுக்கு இதுவரையிலும் மணம் முடியாதபடி தன் மகனுக்கென்று தாமதப்படுத்தியது எந்தத் தெய்வமோ என்று துதிப்பாள்.

இனி, பூங்கோதைக்குற்ற இன்பத்தை எடுத்துரைப்ப தெப்படி? மறைந்திருந்து, சாயபு சொல்லிக்கொண்டு வந்த மலைக்கள்ளன் சரித்திரத்தைக் கேட்ட நிமிஷம் முதல் தான் இன்ன நிலையில் இருக்கிறோம் என்பது தனக்கே தெரியாமல் தவித்தாள்; தூக்கம் கொஞ்சம்கூட வரவில்லை. காணாமற் போன தன் தந்தைக்காகத் தூக்கம் வராமல் துடித்துக்கொண் டிருந்த இராத்திரியைவிட இன்றைக்குத் தூக்கம் வராம லிருந்தது எப்படியோ இருந்தது. அன்றைக்குத் தன் னுடைய நினைவுகளாவது ஏங்காமல் தன் தகப்பனாரை மீட்ப தெப்படி என்று ஆலோசனை செய்ய உதவின. இன்றைக்குத் தூக்கம் வராதது மட்டுமல்லாமல் தன்னுடைய மனமும் யோசனைகளும் எந்த இடத்துக்குப் போயினவென்றுகூடத் தெரியவில்லை. விடிய விடியத் தன்னுடைய படுக்கையில் படுத்தும் உட்கார்ந்தும், எழுந்தும் விழுந்தும், புரண்டும் சுருண்டும் என்னென்னவோ செய்துகொண்டிருந்தாள். திடீரென்று மஞ்சத்தைவிட்டு இறங்குவதும், விளக்கைச் சிறிதாக்குவதும் மறுபடியும் பெரிதாக்குவதும், புத்தகத்தைத் தேடுவதும், அதை எடுத்து விரித்தவுடன் மூடுவதும்,



கண்ணாடிக்கு முன்னால் ஓடுவதும், தனக்குத் தானே பேசுவதும் வெட்கப்பட்டவள் போலக் கூசுவதும் இப்படியாக இரவு கழிந்தது.

பொழுது விடிந்தது. பூங்கோதை ஏதோ பித்துக் கொண்டவள் போல் புது மாதிரியாக இருப்பதைச் சொக்கேச ரும் கவனிக்கவில்லை; காமாக்ஷியம்மாளும் கண்டுகொள்ள வில்லை. அவர்கள், சாயபு சொன்னது ஒன்றும் பூங்கோதைக் குத் தெரியாது என்றே எண்ணித் தங்களுடைய சந்தோஷத்தி லேயே இருந்தார்கள். வள்ளியம்மாள் மட்டும், "என்ன மச்சி! என்னவோ புது மாதிரியாக இருக்கிறீர்கள். நீங்களே பேசிக்கொள்ளுகிறீர்கள்! நீங்களே சிரிக்கிறீர்கள்!" என்றாள். இது காதில் விழுந்த பொன்னம்பலம் மனத்திற் களங்கமில் லாமல் எப்போதும் மச்சியுடன் விளையாடுவது போல, "மச்சிக்குத் திருடன் தூக்கிக்கொண்டு போன மலைக்கள்ளன் மலைக்குப் போகவேணும் என்று நினைப்பாக இருக்கும். ஏன் மச்சீ, அப்படித்தானே?" என்றான். உடனே, பூங்கோதைக்கு ஆத்திரமும் அழுகையும் எங்கிருந்தோ வந்துவிட்டன. இது வரையிலும் இப்படிப் பொன்னம்பலம் பல தடவை கேலி பேசி யிருக்கிறான். அப்போதெல்லாம் பூங்கோதை கோபித்ததே கிடையாது. தானும் ஏதாவது பதிலுக்குக் கேலி பேசிச் சிரிப்பாள். இன்றைக்கும் மட்டும் என்னவோ உடனே கொதிப் பும் அழுகையும் வந்துவிட்டன. "என்ன பொன்னம்பலம்! வரவர கூடச் சொல்லக்கூடாத பேச்செல்லாம் சொல்ல ஆரம்பித்துவிட்டாய்? அத்தையிடம் சொல்லுகிறேன்" என்று உரக்கக் கூவி அழ ஆரம்பித்துவிட்டாள். இந்தச் சத்தத்தைக் கேட்டுக் காமாக்ஷியம்மாள் ஓடி வந்தாள். நடந்ததை விசாரித் தாள். தன் இளைய மகன் பொன்னம்பலம் சொன்னது எப்படியோ பொருத்தமாக அமைந்ததைக் கண்டு தனக் குள்ளேயே சந்தோஷப்பட்டுத் தன்னை மறந்து வழக்கத்துக்கு விரோதமாகப் பூங்கோதையைப் பார்த்து, "என்னவோ அவன் சொன்னது போல இருந்தாலும் இருக்கும்" என்று சொல்லிச் சந்தோஷப்பட்டாள். பூங்கோதைக்கு மனத்துக்குள்

எப்படியிருந்ததோ, வெளியில் அழுகைதான் அதிகப்பட்டது. காமாக்ஷியம்மாள் அதைக் கண்டு; தான் தெரியாமற் சொல்லி விட்டதாகத் தேறுதல் சொல்லி, பொன்னம்பலத்தையும் கண்டிப்பது போல இரண்டொரு வார்த்தைகள் சொன்ன பிறகு அழுகை ஓய்ந்தது. பூங்கோதை சிரித்தாள்.................... இப்படியாகப் பகலும் பறந்தது. 'நாளை மறுதினம் குமார வீரனைக் கூட்டிக்கொண்டு வருகிறேன்' என்று சாயபு சொல்லிப் போனதை எதிர்பார்த்துப் பொழுது போனபின்தான் அவர்கள் வருவார்களென்று காமாக்ஷியம்மாளும் சொக்கேசரும் காத்திருந்தார்கள். பொழுது சாய்ந்து கொஞ்ச நேரத்திற்கெல்லாம் மாந்தோப்பிலிருந்து சாயபு அனுப்பியதாக ஓர் ஆள் வந்தான். அவன், மலையில் வீரையாவுக்குப் பெரிய தந்தையான கிழவர் மலைக்கள்ளருடைய வேலையாக இன்னும் ஒரு வாரத்திற்கு வெகு முக்கியமான அலுவல்கள் இருப்பதாகவும், ஆகையினால் அடுத்த ஞாயிற்றுக்கிழமை இரவு ஒன்பது மணிக்குச் சொக்கேசர் வீட்டுக்கு வீரையன் வருவதாகச் சொல்லியனுப்பியிருப்பதாகவும், சாயபு சொல்லிவரச் சொன்னாரென்று சொன்னான்.

மறுநாள் சொக்கேசர் தம்முடைய சில அவசர காரியங்களைக் கவனித்துவர வெகு ஊர்களுக்குப் போக வேண்டியிருந்தது. அத்துடன், கலியாணத்திற்கு வேண்டிய ஏற்பாடுகளையும் கவனித்து வர வேணுமென்று ஒரு வேலைக்காரனையும் கூட்டிக்கொண்டு சப் இன்ஸ்பெக்டர் ஆறுமுகத்துக்கும் அப்துர் ரஹீமுக்கும் சொல்லியனுப்பிவிட்டுப் போய்விட்டார்.

மறுநாள் சாயந்திரம் மாந்தோப்பு சாயபு சொக்கேசர் வீட்டுக்கு வந்து காமாக்ஷியம்மாளுடன் வெகுநேரம் பேசிக்கொண்டிருந்தார். பேச்சோடு பேச்சாகக் காமாக்ஷியம்மாள் கைதியாக இருக்கிற வீரராஜனுக்கும் குட்டிபட்டி ஜமீன்தாருக்கும் தூக்குத்தண்டனை வந்துவிடாதபடி சப் இன்ஸ்பெக்டருக்கு சாயபு சிபார்சு செய்யவேணுமென்று மறுபடியும் கேட்டுக்கொண்டாள். சாயபு காமாக்ஷியம்மாளின் கவலையை மாற்றி, வீரராஜனும் குட்டிபட்டி ஜமீன்தாரும் அவர்கள் சம்பந்தப்பட்ட



எல்லாக் குற்றங்களிலும் கொலையாளிகளுக்கும் கொள்ளைக்காரருக்கும் உடந்தையாகத்தான் இருந்தார்களேயல்லாமல் அவர்கள் நேராக ஒரு கொலையும் செய்ததில்லையானதால் அவர்களுக்குத் தூக்குத் தண்டனை வராது என்று சொன்னார். காமாக்ஷியம்மாள், "போதுஞ் சாமி, அவ்வளவு போதும்" என்று சொல்லி சந்தோஷமடைந்தாள். அதன் பிறகு, தன்னுடைய மகன் குமார வீரனைப்பற்றி என்னென்னவோ மனத்தில் நேர்ந்தபடியெல்லாம் விசாரித்தாள். சாயபுவும் அந்த அம்மாள் கேட்ட கேள்விக்கெல்லாம் தமக்குத் தெரிந்த வரையில் திருப்தியான பதில் சொல்லி, சந்தோஷப்படுத்தினார். பிறகு, சாயபு பூங்கோதையைப்பற்றி விசாரித்தார். "நேற்றுச் சாயந்திரமெல்லாம் கீழேயே இருந்து காத்துக்கொண்டிருந்த பூங்கோதை, நேற்று உங்கள் ஆள் வந்து குமார வீரன் வருகிற ஞாயிற்றுக்கிழமைதான் வருவான் என்றதைக் கேட்டுவிட்டுப் போனவள்தான் இன்றைக்குப் பூராவும் மாடியில் தன் அறையிலேதான் இருந்தாள்" என்று சொல்லிவிட்டு, பொன்னம்பலம் வேடிக்கையாக மச்சிக்கு மலைக்குப் போக ஆசை என்று சொன்னதையும், அதற்குப் பூங்கோதை அழுததையும் எல்லாம் காமாக்ஷியம்மாள் சாயபுவிடம் சொல்லி, சந்தோஷப்பட்டுக்கொண்டாள்....

அடுத்த ஞாயிற்றுக்கிழமை தன் மகன் கட்டாயமாக வருவானா என்று காமாக்ஷியம்மாள் கேட்டதற்கு, 'சத்தியமா வருவார்' என்று சாயபு சொல்லிவிட்டுப் போய்விட்டார்.......

சாயபு வந்து போனது பூங்கோதைக்குத் தெரியாது. தன் அறையில் ஒரு காரியமும் செய்யாமல் பித்துப் பிடித்தவள் போல் உட்கார்ந்துகொண்டே இருந்தாள். காமாக்ஷியம்மாளுடைய கட்டாயத்துக்காகக் கீழே வந்து சாப்பிட்டது போல இலையில் உட்கார்ந்து எழுந்து மீண்டும் போய்த் தன் அறையில் உட்கார்ந்துகொண்டாள். மணி பத்தாச்சு. வழக்கமாக அதே அறையில் படுத்துக்கொள்ளும் வள்ளியம்மாள் தூங்கிவிட்டாள். பூங்கோதைக்குத் தூக்கம் வரவில்லை. ஏன் வரும்? அகத்திலும் புறத்திலும் மலைக்கள்ளனென்னும் தன்னுடைய

அத்தை மகன் குமாரவீரன்—தன்னைக் காத்தவராயன் தூக்கிக் கொண்டு போய்விட்ட போது மீட்டவன்-தன்னுடைய அத்தைக்குக் காத்தவராயன் கட்டிய விஷப்பூண்டால் அவர் சாகும் தறுவாயில் இருந்த போது அந்த விஷப்பூண்டுக்கு முறிவு மூலிகையை அனுப்பி அத்தை காமாக்ஷியம்மாளைப் பிழைக்க வைத்தவன்-வீரராஜன் பங்களாவில் ஜானகியுடன் போய் அகப்பட்டுக்கொண்டபோது எப்படியோ வெகு ஆச்சரியப்படும்படி அங்கே தோன்றித் தன்னை விடுதலை செய்தவன்-தன்னுடைய தந்தையை வீரராஜன் முதலானவர்கள் மறைந்திருந்த இடத்தைக் கண்டுபிடித்து அவரை மீட்டதுமல்லாமல், காத்தவராயன் முதலான எல்லாரையும் கைது செய்ய சப் இன்ஸ்பெக்டருக்கு உதவியாக சாயபுவை அனுப்பி எல்லாவித உபாயங்களையும் சொல்லிக்கொடுத்து விலைமதிக்க முடியாத சேவை செய்திருக்கிற தீரன் - தன்னை மணம் பேசியிருக்கிற மைத்துனன் - குமார வீரனுடைய சுந்தர உருவம் வந்து வந்து கலைக்கும்போது தூக்கம் எப்படி வரும்?

தான் மலையிற் கண்ட அந்த அழகான ஆண்பிள்ளை தன் அத்தை மகன் என்பதை அறிந்த நிமிஷம் முதல் பூங்கோதைக்கு இதுவரையிலும் இல்லாத ஒரு புது உணர்ச்சி உண்டாகி, அவளை-தூங்க மட்டுமா-எந்தக் காரியமும் செய்ய முடியாதவளாக்கிவிட்டது.

பூங்கோதை கண்ணிற்கண்ட எவரையும் கலக்கக்கூடிய கட்டழகி என்றாலும், கனிந்த பக்குவமடைந்த கன்னிகைதான் என்றாலும் இதுவரையிலும் காதல் உணர்ச்சிகளையோ காமத் துன்பங்களையோ ஒரு சிறிதும் அறியாதவள். யாரிடத்திலும் கபடமற்ற பேச்சும் கலகலத்த சிரிப்பும் உடையவள். தன்னுடைய கண்ணியத்தைக் காத்துக்கொள்ளக்கூடிய கம்பீரமான நாணம் உள்ளவள். ஆனாலும், அர்த்தமில்லாத கோணல்களைச் செய்துகொண்டு நாணம் என்று தலையை நட்டுக் கொண்டே நடக்கிற வழக்கமுடையவள் அல்ல. முன்பின் அறியாத ஆடவர்களையே சந்தித்துவிட்டாலும் பேச வேண்டியவற்றைக் கூச்சமில்லாமல் பேசி; யாரிடம் எப்படி நடந்து கொள்ள வேணுமோ, அப்படி நடந்துகொள்ளுவாள்.



எத்தனையோ பேர் தன்னை மணம் பேசினார்கள்; என்றாலும், தான் இதுவரையிலும் அதில் மனம் செலுத்தியதே கிடையாது. மணம் பேசி வந்த மாப்பிள்ளைகளுக்குள் ஒருவனாவது தன்னுடைய கண்ணுக்கும் காதுக்கும் கூட விரும்பத் தக்கவனாக நேரவில்லை. வீட்டிலும் காதற் பேச்சுப் பேசுவதற்குச் சந்தர்ப்பம் இல்லை. சிற்சில சமயங்களில் பொன்னம்பலம் கேலிப் பேச்சுகள் பேசுவான். இருந்தாலும், அவற்றில் பூங்கோதை வெறும் விளையாட்டைத் தவிர வேறெதையும் கண்டதில்லை. காதற்பேச்சுகளையும் காமக் குறும்புகளையும் கடித மூலயாகவும், தரகர்கள் மூலமாகவும், கடைசியாக நேரிலும் தெரியப்படுத்திக்கொண்ட தன்னுடைய இன்னொரு அத்தையின் மகனான வீரராஜனை அவனுடைய துர்நடத்தைகளைக் கேள்விப்பட்டு வெகு நாள்களாக வெறுத்து வந்தவளானதால் அவன் செய்த சிங்கார முயற்சிகளால் காம உணர்ச்சி இருந்தாலும் அழிந்து போகுமேயல்லாமல் புதிதாக உண்டாக நியாயம் இல்லை....

பூங்கோதை பக்குவமடைந்தபின் முதல் முதல் தன்னுடைய கண்ணைக் கவரக்கூடிய ஆண் உருவத்தை அன்றைக்கு மலையில் தான் மலைக்கள்ளனென்று மதித்திருந்த வீரையன் அவனுடைய கள்ள உடைகளைக் களைந்துவிட்டுத் தனக்கு முன்னால் வந்து நின்ற போதுதான் கண்டாள். கண்ணுக்கு அழகாகத் தோன்றினாலும், அவனுடைய கள்ள வாழ்க்கைகளைப்பற்றித் தான் கேட்டிருந்த கதைகளால், அவனை வெகு கொடியவனென்று அப்போது கருதியிருந்தாளானதால், அவன் மேல் அருவருப்புத்தான் அரும்பிற்று. அத்துடன் அவ்வளவு வடிவழகனான அவன், கள்ளர் தலைவனாக, வெறும் வஞ்சக வாழ்க்கையில் இருக்கிறானே என்ற பச்சாத்தாபமும் தான் உண்டானதேயன்றி வேறு உணர்ச்சிகள் உதிக்கவில்லை.

அதற்குப்பின், அதே வீரையன் வீரராஜனுடைய பங்களாவில் தன்னுடைய மானத்தைக் காத்த போது, அவன் வீர

ராஜனோடு பேசிய வீரமொழிகளும், பிறகு வீரராஜனைக் கட்டியிருந்த வலியுண்டாக்கின கட்டுகளைத் தளர்த்திவிட்ட போது சொன்ன இரக்கமான சொற்களுந்தான் முதல் முதல் பூங்கோதையின் காதுக்கு இனிமையுண்டாக்கிய ஆண் பேச்சுகள். அப்பொழுதுங்கூட அந்த வீரையனிடத்தில் ஒரு விதமான பயபக்தி உண்டானதேயன்றி, வேறு எண்ணங்கள் விளையவில்லை. அதன் பிறகு, மாந்தோப்பு சாயபு தன்னுடைய தந்தையை வீரராஜனிடத்திலிருந்து விடுதலை செய்தது முழுதும் இந்த வீரையனின் உதவியினால்தான் என்று தெரிந்தபோதும், வீரையன் மிகவும் விரும்பத் தகுந்த மனிதர்தான், முன் எண்ணியிருந்தது போலப் பொல்லாதவராக இருக்க முடியாது என்ற எண்ணந்தான் வந்ததேயன்றி மற்ற எதுவும் மனத்தில் உதிக்கவில்லை. ஆனால், அந்த வீரையன் தன்னுடன் சிறு வயதில் விளையாடிக்கொண்டிருந்து காணாமற்போன அத்தை மகன் என்பதையும், தன்னை மணஞ்செய்து கொள்ள உரிமையுடையவன் என்பதையும் உணர்ந்த நிமிஷம் முதற்கொண்டு பூங்கோதை ஒரு புது உலகத்தில் புகுந்தவளாகிவிட்டாள்.

தூக்கம் வராமல், குமார வீரன் காணாமற்போவதற்கு முன்னால் பிடித்திருந்த அவனுடைய ஒரு போட்டோ படத்தை—தான் அன்று காலை முழுவதும் தேடி, கீழே ஒரு அறையில் புழுதியில் முழுகிக் கிடந்த பழைய பெட்டிகள் ஒன்றிலிருந்து எடுத்து வந்ததை—திருப்பிப் பார்த்துக்கொண்டிருந்தாள். சிறு வயதில் எடுத்த அந்தப் படத்தில் தன்னுடைய மனத்தில் சஞ்சரிக்கின்ற குமார வீரனுடைய அடையாளம் கொஞ்சங்கூட இல்லையென்றாலும், அதைக் கீழே வைக்கக்கூட விரும்பவில்லை.

“ஐயோ! அன்றைக்கு மலையிலேயே அவர் இன்னாரென்று அறியாமற் போனேனே! ஆ! அவரைக் கள்ளரென்று எண்ணினேனே!....ஏன், கள்ளர்தான் அவர். அவ்வளவு கள்ளமாகத் தம்மைக் கொஞ்சங்கூடக் காட்டிக்கொள்ளாமல் நடந்து



கொண்டவர் கள்ளரல்லவா? ஐயோ! அவர் வேடிக்கையாகப் பேசினபோதெல்லாம் நான் எவ்வளவு வெறுத்துப் பேசிவிட்டேன்? அதற்காக என்ன நினைத்தாரோ....அடடா! அந்தக் கிழவர் சொன்னதை அப்பொழுதே அறியாமற்போனேனே! என் அருமை அத்தான் எவ்வளவு சமர்த்தராக இருக்கிறார்! என்ன கம்பீரம்! எவ்வளவு தைரியம்! எத்தனை மர்மமான இருப்பிடம்! எப்பேர்ப்பட்ட தந்திரங்கள்!’....என்றெல்லாம் தனக்குத்தானே பேசிக்கொண்டும் எண்ணிக்கொண்டும் இருந்தாள். மணி பன்னிரண்டு அடித்தது. திடுக்கிட்டு எழுந்து போய்ப் படுக்கையில் படுத்தாள்.

என்னவோ ‘திடும்’ என்று சத்தம் கேட்டது. யாரோ எங்கிருந்தோ குதித்தது போல் இருந்தது. உடனே மனோராஜ்யம் மறைந்துவிட்டது. காது கொடுத்துக் கவனித்தாள். யாரோ அடிமேல் அடிவைத்து நடந்து வந்து தன்னுடைய அறைக்கு அருகில் நின்றது போலத் தெரிந்தது. பழைய நினைவுகள் வந்து, எழுந்து, படுக்கையில் உட்கார்ந்தாள். தந்தையோ ஊரில் இல்லை. முன்னே தந்தை ஊரிலில்லாத சமயத்தில்தான் யாரோ கதவைத் தட்டினார்களென்று திறந்து காத்தவராயன் கையிற் சிக்கிக்கொண்டது நினைவுக்கு வந்தது. இன்றைக்கு யாராயிருந்தாலும் கதவை உடனே திறந்துவிடக்கூடாதென்று தீர்மானித்துக்கொண்டே கதவைப் பார்த்தாள். ஐயோ, கதவு தாழிடப்படவில்லை; சாயபு சொன்ன குமார வீரன் சரித்திரத்தைக் கேட்டபின் தன்னுடைய காரியம் எதிலும் கவனக்குறைவு ஏற்பட்டுவிட்ட பூங்கோதை வழக்கம் போல் தாழ்ப்பாள் போடவும் மறந்துவிட்டாள். எழுந்து போய்த் தாழிட எண்ணினாள். கதவண்டை போனதும் வெளியில் நிற்பதாகத் தான் நினைக்கிற யாரோ திருடன் என்ன துன்பம் செய்யக் காத்திருக்கிறானோ என்று கருதினாள். இன்னது செய்வதென்று தீர்மானிப்பதற்கு முன் கதவு கொஞ்சம் திறக்கப்பட்டது. கொஞ்சங் கொஞ்சமாகச் சத்தம் உண்டாகாதபடி கதவு திறக்கப்படுவதைப் பார்த்துக்கொண்டே உட்கார்ந்திருந்தாள். ஓர் ஆள் நுழையக்கூடிய அளவுக்குக் கதவு திறக்கப்பட்டு, நின்றுவிட்டது. கதவுச் சந்தில்

வெளியில் இருப்பது யார், என்னவென்று தெரியவில்லை. அறையில் இருக்கிற பிரகாசமான விளக்கின் வெளிச்சம் நேராகக் கதவுக்குப் படாததால் பார்க்க முடியவில்லை. சற்று நேரங்கழித்துக் கதவுச் சந்தில் விளக்கு வெளிச்சம் படும்படியாக ஒரு பட்டு வஸ்திரத்தின் பளபளப்பான ஜரிகை முந்தி தென் பட்டது. யாரோ ஆண்பிள்ளையென்று அறிந்துகொண்டாள்.

பூங்கோதைக்கு ஆபத்து என்றால் அச்சம் போய்விடும். உடனே கட்டிலை விட்டுக் குதித்தாள். தன் உடையை ஒழுங்கு படுத்திக்கொண்டு, "யாரது?" என்று அதிகாரத்தோடு கேட் டாள். பதில் வரவில்லை. மறுபடியும் கேட்டாள். வெளியி லிருந்து மெதுவான குரலில், "உள்ளே வர உத்தரவு கொடுத் தால் வருகிறேன். இல்லாவிட்டால் இப்படியே போய் விடுகிறேன்" என்று பதில் வந்தது. ஏதோ பழகின குரல் போல இருந்தது. இருந்தாலும், "இந்நேரத்தில் இங்கே உள்ளே வர என்ன வேலை?" என்றாள் பூங்கோதை.

"வேலை இருக்கிறதென்றுதான் வந்தேன். இல்லை யென்றால் போய்விடுகிறேன். பூங்கோதை, மெள்ளப் பேசு. நீ கத்துவது கீழே தூங்குகிறவர்களை எழுப்பிவிடும் போலிருக் கிறது" என்று வெளியிலிருந்து பதில் கிடைத்தது.

தன்னுடைய பெயரை உச்சரித்த ஒலியிலிருந்து பூங் கோதைக்கு என்னவோ நினைவுக்கு வந்து, அதற்கு மேல் பேச்சு வராமல் மௌனமாகக் கதவுச் சந்தைக் கண் கொட் டாமல் பார்த்துக்கொண்டே நின்றாள்.

சட்டென்று கதவு முற்றிலும் திறக்கப்பட்டு, ஒரு மனிதன் உள்ளே நுழைந்தான். கண்ணிமைக்கிற நேரத்துக்குள் கதவை மூடித் தாழிட்டுக்கொண்டு சரசரவென்று பூங்கோதைக்கு ஒரு கஜ தூரத்தில் வந்து நின்றான். மனதும் கண்ணும் மயக்கம் கொண்டனவோ, அல்லது காண்பது கனவுதானோ என்று தெளிவதற்குள் மலைக்கள்ளனென்று பேர் பெற்ற **குமார வீரன்** மணக்கோலம் பூண்டவன் போல வெகு அலங்காரமான



உடையுடன் பூங்கோதைக்கு முன்னால் நின்றுகொண்டு, "கோபித்துக்கொள்ளாதே, பூங்கோதை. உன்னுடைய உத்தர வுக்கு மேல்தான் உள்ளே வந்தேன்" என்றான்.

"ஐயோ அத்தான்! ஏது?....இந்நேரத்தில்....எப்படி?....எந்த வழியாக....அத்தை...." என்று பூங்கோதை வார்த்தை வராமல் தடுமாறினாள்.

"எப்படியானால் என்ன? எந்த வழியில் வந்தாலென்ன? நான் இங்கே வந்தது தவறு என்றால் உடனே போய்விடு கிறேன். நீ திகைக்கவேண்டாம். போய்விடட்டுமா?" என்றான் குமாரவீரன்.

இந்நேரம் வரையிலும் தூக்கம் வராமல் அவனையே நினைத்துக்கொண்டு அவனுடைய பழைய படத்தைப் பார்த்துக் கொண்டு தவிப்பாய்த் தவித்துக்கொண்டிருந்த பூங்கோதை போய்விடச் சொல்லுவாளா!

"உங்களுடைய சொந்தத் தாய்மாமன் வீட்டுக்கு—அதுவும் உங்களுடைய தாயாருடைய அதிகாரத்துக்கு அடங்கி நடக்கும் வீட்டுக்குள்—நீங்கள் வந்தது தவறு என்று சொல்ல யாருக்குத் தைரியம் வரும்? நீங்கள் போய்விட வேண்டுமென்று நான் சொல்லவில்லை. இருந்தாலும்...."

"இருந்தாலும் இப்படி வந்தது குற்றந்தான் என்கிறாயா? உண்மைதான். இருந்தாலும் குற்றந்தான்."

"இல்லை, இல்லை. நான் ஒன்றும் குற்றம் சாட்டவில்லை. தாங்கள் ஒன்றும் அப்படி நினைத்துவிட வேண்டாம்."

"இல்லை, நீ குற்றஞ் சாட்டவில்லை. ஆனால் தகப்பனார் ஊரிலில்லாத சமயத்தில், நேரமில்லாத நேரத்தில், வழியல்லாத வழியில், வழக்கமில்லாத வழக்கமாக வரலாமா என்று வருந்து கின்றாய். அவ்வளவுதானே?" என்று குமாரவீரன் சிரித்தான்.

"என்ன போங்க....என்னென்னமோ...."

"போகட்டுமா? சொன்னாற் போய்விடுகிறேன்!" என்று குமாரவீரன் கதவண்டை திரும்பினான்.

"ஐயோ! நான் போகவா சொன்னேன்!" என்று வெகு அவசரமாகப் பூங்கோதை சொன்னாள்.

" 'என்ன போங்க' என்று நீ இப்போது சொல்ல வில்லையா?" என்று குமாரவீரன் தன் இரு கைகளையும் பின்னால் கட்டிக்கொண்டு பூங்கோதைக்கு வெகு சமீபமாக முகத்தை நீட்டிக் கேட்டான்.

"உங்களைப் பேச்சில் வெல்ல எனக்குச் சாமர்த்தியம் இல்லைதான். இருந்தாலும் நான் ஒன்றும் உங்களைப் போகச் சொல்லவில்லை. நான் சொன்னது....இரண்டு மூன்று நாள் களாக அத்தையும் அண்ணாவும் உங்களைப் பார்க்க வேண்டு மென்று வெகு ஆவலோடு எதிர்பார்த்துக்கொண்டிருந்தார் களே; நீங்கள் வரவில்லையே என்றுதான் சொல்ல வந்தேன்.... அண்ணா ஊரில் இல்லை....அத்தைக்குத் தெரியுமோ நீங்கள் வந்தது?"

"தெரியாது. உங்கள் அத்தை நல்ல தூக்கத்தில் இருக் கிறார்கள். தெரியாவிட்டால் என்ன? அவளுக்குத் தெரியாமல் வந்தது குற்றம் என்கிறாய், அவ்வளவுதானே."

"நானொன்றும் குற்றம் சாட்டவில்லை. நீங்கள் திருப்பித் திருப்பி மடக்க வேண்டாம். அத்தை உங்களைப் பார்க்க வேண்டுமென்று துடியாய்த் துடித்துக்கொண்டிருக்கிறார்களே, அவர்களைப் பார்க்கவில்லையா?" என்றேன்.

"ஓஹோ ! அப்படியா ? சரி....இருந்தாலும் உன்னுடைய அத்தையையும் அண்ணாவையும் பார்ப்பதற்கு முன்னால் உன்னைப் பார்க்க வேணுமென்று வந்தேன்."

"என்னைத்தான் பார்த்திருக்கிறீர்களே !"

"பார்த்திருக்கிறேன் ; ஆனால் கேட்டதில்லையே !"

"என்ன கேட்க வேண்டும் ?"

"ஏன் நான் சொல்ல வேண்டும் ?"

"சொல்லாமலேயே கேட்கப் போகிறீர்களோ ?"

"கேட்காமலேயே சொல்லிவிடக் கூடாதோ ?"



"உங்கள் மனத்திலிருப்பது எனக்கெப்படித் தெரியும்?"

"என் மனத்திலிருப்பது உன் மனத்திலும் இருந்தால், தானே தெரியும்."

"உங்கள் மனத்திலிருப்பது என் மனத்தில் எப்படி இருக்கும்?"

"இருக்கும் என்றுதான் எண்ணி வந்தேன். இல்லா விட்டால் சரி, வேண்டாம்" என்று தோற்கடித்துவிட்டவன் போல சிரித்தான். பூங்கோதை மட்டும் என்ன, புத்திக் கூர்மையில் குறைந்தவளா !

"நீங்கள் இருக்கும் என்று எண்ணி வந்திருந்தால இருக்கும். அதைக் கேட்பானேன்" என்றாள்.

"சரி, கேட்க வேண்டியதில்லை" என்று குமாரவீரன் வெகு சமீபத்தில் வந்தான். பூங்கோதைக்குத் தேகம் சிலிர்த்து, உடம்பு முழுவதும் ஒருவிதமான நடுக்கம் உண்டாகித் தலை குனிந்துகொண்டாள். குமாரவீரன் பூங்கோதையின் முகத்தையே பார்த்துக்கொண்டு தனக்குள்ளேயே அடக்க முடியாத ஆனந்தம் பொங்கப் பொங்க அவளுடைய இணையற்ற சௌந்தர்யத்தை இமை கொட்டாமல் பருகினான். வெகு சமீபத்தில் அவன் வந்து நின்றதைக் கூசினவள் போலத் தோன்றினாலும் விலகிப் போகவில்லை. தரையைப் பார்த்த வண்ணமே நின்றாள். மூச்சு வெகு வேகமாக வந்தது ; நெஞ்சு படபடவென்று அடித்துக்கொண்டது. நெற்றியில் முத்து முத்தாக வியர்வை அரும்பிற்று. என்ன செய்யப் போகிறானோ, இன்னும் என்ன சொல்லப் போகிறானோவென்று எண்ணிக் கொண்டிருக்கும் போதே, குமாரவீரன் தன் கையிலிருந்த கைக்குட்டையைக் கொண்டு அவள் முகத்தில் அரும்பிய வியர்வையைத் துடைத்தான். துடைக்கும் போது அந்தக் குட்டையிலிருந்து வெகு இனிமையான மலை ரோஜாவின் மணம் வீசியதை நுகர்ந்தாள். வியர்வையைத் துடைக்கிற வரைக்கும் சும்மா இருந்துவிட்டு, துடைத்து முடிந்ததும் தூங்கி விழித்தவள் போலத் திடுக்கிட்டு, சட்டென்று எட்டப்போய் நின்றுகொண்டு, "என்ன அத்தான் ?" என்றாள்.

குமாரவீரன் தான் இருந்த இடத்திலேயே இருந்துகொண்டு "பூங்கோதை! நான் இந்நேரத்தில் இங்கே வந்ததோ, உன்னோடு இவ்வளவு சரசமாகப் பேசினதோ, உன்னுடைய வியர்வையைத் துடைத்துவிட்டதோ, உனக்கு எந்த விதத்திலாவது அருவருப்பாக இருந்தால் உடனே சொல்லிவிடு. நான் இதோ சத்தமில்லாமல் இப்போதே போய்விடுகிறேன்" என்றான்.

"அருவருப்பா! எனக்கா! அத்தான்........தங்கள் வாயால் அப்படிச் சொல்லுகிறீர்களே ! மாந்தோப்பு சாயபு சொன்ன உங்கள் சரித்திரத்தைக் கேட்ட நிமிஷம் முதல் நான் படும் பாட்டை ஈசன்தான் அறிவார், அத்தான் ! எனக்கு ஒன்றும் சொல்லத் தெரியவில்லை....உங்களுக்குத் தெரியாதது ஒன்றுமில்லை. அத்தைக்கும் அண்ணாவுக்கும் தெரியாமல் நாம் சந்தித்ததை வழக்க விரோதம் என்று...."

"வழக்கமாவது ! விரோதமாவது ! வழக்கம் என்று விட்டதனாலேயே அதில் எல்லா தர்மமும் அடங்கிவிட்டது போல நீயும் பேசுகின்றாயே! பூங்கோதை! மலையில் உன்னைச் சந்தித்த பிறகு சாவதானமாகச் சந்திக்க முடியவில்லை. அப்போது நீ என்னுடன் பேசிய மாதிரியில் என்னை வெகு பொல்லாதவன் என்று நீ எண்ணியிருந்தாய் என்பதை அறிந்தேன். இப்போது உன் மனம் என் விஷயத்தில் எப்படி இருக்கிறதென்பதை, தனித்து உன்னைக் கண்டு பேசி அறியவே நான் இன்று இப்படி வந்தேன். என்னுடைய சரித்திரத்தை உன்னுடைய அத்தைக்கும் அண்ணாவுக்கும் அப்துர் ரஹீம் சாயபு சொன்னபோது நீ அங்கே இல்லையாம். அவசியமானால் நான் யார் என்பதையும் உன்னிடம் நானே சொல்லிவிடலாம் என்று எண்ணித்தான் வந்தேன். நான் வந்தவுடன் நீ என்னை, 'அத்தான்' என்று அழைத்ததனாலும், பிறகு நீ பேசினதிலிருந்தும் உனக்கு என் சரித்திரம் தெரிந்திருக்கிறதென்பதைத் தெரிந்துகொண்டேன்...."

"ஆம், சாயபு என்னை அங்கே இருக்கக்கூடாது என்று சொன்னதனால் நான் மறைந்திருந்து கேட்டேன்."



"சந்தோஷம். நீ என்னை இன்னானென்று அறிந்துகொண்டிருக்கிறாய். நான் இந்த வீட்டை விட்டுப் போய் வெகு காலமானாலும் உன்னைப்பற்றி ஒவ்வொரு நாளும் விசாரித்துக் கொண்டே வந்திருக்கிறேன்—இல்லாவிட்டால் வீரராஜன் செய்த சூழ்ச்சிகளையெல்லாம் நான் எப்படி வென்றிருக்க முடியும்? நான் இங்கே இருந்த போது உன்னுடைய அழகும் அறிவும் என்னை ஒன்றும் செய்ததில்லை. ஆனால் உன்னுடன் விளையாடிக்கொண்டிருந்ததைப் பிரிந்த நாளாக உன்னை ஒரு நாளும் மறந்ததில்லை. உன்னைப்பார்க்கவென்றே அடிக்கடி நான் மாறுவேடத்துடன் இந்த வீட்டுப்பக்கம் வந்து போவதுண்டு. உன்னைப்பற்றியும் உன் அத்தையைப்பற்றியும், உன் அண்ணாவைப்பற்றியும் நேரக்கூடிய எல்லா விஷயங்களையும் அப்போதைக்கப்போது கவனித்து எனக்குச் சேதியனுப்புவதற்கென்றே என்னுடைய ஆள்கள் பலபேர் இங்கே இருந்துகொண்டிருக்கிறார்கள். நீ எனக்காகவே வளர்ந்து வருகிறாய் என்ற உறுதியால் நான் உன்னைச் சந்திக்க அவசரப்படவில்லை. உன்மேல் எனக்கிருக்கிற ஆசை வெறும் சரீரத்தைப்பற்றிய ஆசை மட்டும் அல்ல. உன்னுடைய படிப்பையும் சங்கீத சாமர்த்தியத்தையும் நான் அடிக்கடி அறிந்து ஆனந்தம் அடைந்ததுண்டு. உனக்குக் கலியாணம் பேசினவர்களையெல்லாம் நான் அறிவேன். ஒன்றாவது உனக்குப் பிடிக்கவில்லை என்பதும் தெரியும். அந்தக் கலியாணப் பேச்சுகளில் ஏதேனும் நிச்சயப்பட்டு விவாகம் நடந்துவிடும் போலத் தோன்றியிருந்தால் நான் முன்னாலேயே என்னை இன்னானென்று காட்டிக்கொண்டிருப்பேன்.

"எனவே, நீ என்னை மறந்துவிட்டிருந்த நாள்களிலும் நான் உன்னை மறந்ததும் இல்லை ; துறந்ததும் இல்லை. அதை நீ அறியமாட்டாய். உன்னைக் காத்தவராயன் களவாடியதால் நீ என்னுடைய மலைக்கு வந்தபோது நான் உன்னிடத்தில் கண்ட உயர்ந்த பெண்மையும், தற்காப்பும், அறிவுள்ள பேச்சும், அச்சமற்ற தன்மையும் என்னை உருக்கிவிட்டன. என்னை மறந்து உன்னோடு உறவினன் பேசுவது போல அன்று நான்

சொன்ன சில வார்த்தைகளில் நீ அருவருப்புக் காட்டியதைக் கண்டு நான் ஆனந்தமேஅடைந்தேன். ஆகையினால்,பூங்கோதை உன்னுடைய மனத்துக்கு நான் எப்படி இருக்கிறேனோ தெரியாது. ஆனால், என்னுடைய மனத்துக்கு உன்னைவிட உயர்ந்த பொருள்........"

"ஐயோ ! அத்தான் ! அத்தான்...."

"கேள், உனக்கு நான் எப்படியிருந்தாலும், எனக்கு உன்னைவிட உயர்ந்த பொருள் இந்த உலகத்தில் இல்லை. இது வெறும் ஆசை வார்த்தை அல்ல. உன்னோடு வாழும் வாழ்க்கையே சொர்க்கமெனக் கருதியிருக்கிறேன். ஆண்டவனுடைய அருளாலும், மலையில் இருக்கிற என்னுடைய பெரிய தகப்பனாருடைய ஆசியினாலும்,மலை வாழ்க்கையின் மாசற்ற தன்மையினாலும், பூங்கோதை நான் இன்னொரு பெண்ணை இச்சிக்க வேண்டிய சந்தர்ப்பமே வரவில்லை. அப்படி வைத்திருந்தாலும் உன்னை நினைத்து அந்த ஆசை ஓடியிருக்கும்.... ஆகையினால், உறவின் உரிமையும், மனத்திற் பிரியமும், எவரும் குறை சொல்ல முடியாதபடி எல்லாப் பொருத்தமும் இசைந்துவிட்ட நமக்குள் வழக்கம் என்ன ? சங்கையென்ன ? சடங்கென்ன ? குற்றமென்ன ? கூச்சமென்ன ? எனக்கு நீதான் என்பது என்னுடைய தீர்மானம். உனக்கும் நானே என்பதும் உன்னுடைய உள்ளமானால் நீ விலகிப் போய் நிற்பதே விகாரம்.......' என்று குமாரவீரன் பேச்சை முடிப்பதற்குள் பூங்கோதை சரேலென்று அவனுக்குச் சமீபத்தில் வந்து இன்னது செய்யப் போகிறாளென்று அறிவதற்குள் குனிந்து குமாரவீரனுடைய இரண்டு பாதங்களையும் தொட்டுக் கும்பிட்டாள்.

குமார வீரன் உடனே அவளை வாரியெடுத்துத் தன் மார்புறத் தழுவி, அவளுடைய தலையைத் தன் இரண்டு கைகளாலும் தாங்கிப் பிடித்துக்கொண்டு, முகத்துக்கு நேராக வைத்துக்கொண்டு, "என் கண்ணே ! மணியே ! கனியே ! கற்கண்டே ! பொன்னே ! பூங்கோதை ! மாசற்ற மயிலே ! மருவற்ற மலரே ! உயிர் பெற்ற சித்திரமே ! உடல் பெற்ற செந்திருவே ! உயிரே! உணர்வே ! மாமன் மகளே ! காமன் விருந்தே ! கோடைக்கு நிழலே ! வாடைக்கு வஸ்திரமே ! நோவிற்கு மருந்தே ! பாவிற்கு ஊடே ! உன்னை என்னவென்று இன்புறுவேன் !" என்று அவளுடைய உச்சியிலும், நெற்றியிலும், கண்களிலும், கன்னங்களிலும் உதட்டிலும் முத்தங்களை மழையாகப் பொழிந்துவிட்டான். பூங்கோதை முற்றிலும் மெய்மறந்தவளாகி இரண்டு கைகளாலும் குமாரவீரனை இறுகப் பிடித்துக்கொண்டு செயலற்றிருந்துவிட்டாள்.



உடனே குமார வீரன் தான் தழுவிய கைகளைத் தளரவிட்டுப் பூங்கோதையின் பிடியையும் நீக்கி, அவளைப் பிடித்து முன்னால் நிறுத்தினான். அவளுடைய மயக்கம் தெளிய வெகு நேரம் சென்றது. தன்னுணர்வு வந்தவுடன் பூங்கோதை மிகவும் வெட்கப்பட்டுத் தலை குனிந்து நின்று, சரேலென்று தன் படுக்கைக்கு ஓடி, அங்கே எப்போதும் தன் தலையணைக்கு அடியிலே வைத்திருந்த—குமார வீரன் அன்று மலையிலே தனக்கு வெகுமதியாகக் கொடுத்த—சீதாராம சொர்ண விக்கிரகத்தைக் கையில் எடுத்துக்கொண்டு தலையணைமேல் முகம் குப்புறப் படுத்துக்கொண்டாள்.

குமார வீரன் அவளுக்குச் சமீபத்தில் போய், "கண்மணி ! பூங்கோதை, நான் போய் வருகிறேன். நீ கதவைத் தாழிட்டுக்கொண்டு தூங்கு. மாமா வந்தபின், வருகிற ஞாயிற்றுக்கிழமை வந்து அவரையும் அம்மாவையும் சந்தித்து, என்னுடைய மரியாதைகளை அவர்களுக்குச் செலுத்தி..........." என்பதற்குள் பூங்கோதை எழுந்து தலைகுனிந்த வண்ணமே நின்றுகொண்டு, "அத்தான் ! தங்களை ஒன்று கேட்கிறேன். என்னிடத்தில் ஒளிக்காமல் உண்மையைச் சொல்ல வேணும்" என்றாள்.

"என்ன ? கண்மணி, உன்னிடத்தில் ஒளிக்க வேண்டியது இந்த உயிருள்ளளவும் ஒன்றும் இருக்காது. கேள்" என்றான்.

"அந்த மலையில் இருக்கிற சின்னியம்மாள் யார்?" என்றாள் பூங்கோதை.

குமார வீரன் கலகலவென்று சிரித்து, "அடடா, அப்படியா! இந்தச் சந்தேகம் உனக்கும் வந்திருக்கும் என்பதை மறந்துவிட்டேன். இந்த விசாரம் வந்தது பெண்ணாகிய உனக்கு சகஜந்தான். சொல்லுகிறேன்—சின்னியம்மாள் எனக்குச் சின்ன அம்மாள் தான்."

"எப்படி?"

"எனக்குச் சின்ன அம்மாள்; உனக்குச் சின்ன அத்தை; என் தாயாரின் தங்கை; உன் தகப்பனாருக்கும் சொந்த உடன் பிறந்த தங்கை. உனக்கு மறந்து போயிருக்கும். அவர் சிறு வயதிலேயே கணவனை இழந்தவர். பெயர் பார்வதியம்மாள். அவர் தம் கணவன் இறந்த பிறகு கொஞ்ச காலம் வீரராஜனுடைய வீட்டில் இருந்தார். வீரராஜனுடைய தாயாரும் எனக்கு ஒரு சிறிய தாயார் அல்லவா? அதனால், அப்போது வீரராஜன், அந்தப் பார்வதியம்மாளை அவமதிப்பாகப் பேசி, அந்த அம்மாள்மீது ஏதோ பொய்யான பழி சொன்னான் என்று அதைப் பொறுக்க முடியாமல் ஒரு நாள் சாயங்காலம் மலைக்குச் சமீபமாக ஒரு பாழுங்கிணற்றில் அந்த அம்மாள் குதித்துவிட்டாள். காத்தவராயனுடைய கூட்டத்தாருக்குப் பக்கத்தில் பதுங்கியிருந்த எங்களுக்கு, யாரோ கிணற்றில் விழுந்துவிட்ட சத்தம் கேட்டு, சப்பாணி ஓடிக் குதித்து, அந்த அம்மாளைக் கரையேற்றினான். இல்லையானால், அந்த என் சிற்றன்னையார் அன்றைக்கே இறந்திருப்பார். அவரை இன்னாரென்று அறிந்து, நான் இன்னான் என்பதையும் அவருக்குச் சொல்லி மிகவும் கெஞ்சிக் கிளறி அவரை மலை வீட்டிற்குக் கூட்டிப் போனேன். அன்றுமுதல் இன்றளவும் எனக்குப் பெற்றெடுத்த தாயைப் போலவே எல்லா விதத்திலும் உதவி வருகின்றார்கள். அவர்களுடைய பராமரிப்பால்தான் நான் இவ்வளவு செழித்துக் கொழுகொழுத்து இருக்கிறேன்......................அவருடைய சிறு வயசையும் அழகையும் கண்ட எல்லாரும் எங்கள்மேல் சந்தேகம் கொண்டதுண்டு. அதைப் போலவே நீயும்................"



என்று முடிப்பதற்குள் பூங்கோதை குமார வீரனுடைய இரண்டு கால்களையும் பிடித்துக்கொண்டு, "அத்தான், மஹா பாதகம் செய்துவிட்டேன். மன்னித்தருள வேண்டும். இதைச் சின்ன அத்தையவர்களிடம் சொல்லிவிடக்கூடாது" என்றாள்.

"இல்லை. சொல்ல மாட்டேன். நீ வருத்தப்படாதே" என்று குமார வீரன் பூங்கோதையின் கையைப் பிடித்துத் தூக்கிவிட்டு, அவளுடைய முகவாய்க்கட்டையைப் பிடித்துச் சொல்லி, தலையைத் தடவிக் கொடுத்து, தோளைத் தடவிக் கொடுத்து, "நான் வருகிறேன், நீ தூங்கு........" என்றான்.

இந்தச் சமயத்தில், "பூங்கோதை, பூங்கோதை, அம்மா, கதவைத் திற" என்று யாரோ கதவைத் தட்டினார்கள். குமார வீரனுடைய தீர்மான உள்ளமும் திடுக்கிட்டது. பூங்கோதை நடுங்கிவிட்டாள். உடனே குமார வீரன் அங்கிருந்த விளக்கை ஊதி அணைத்துவிட்டான். அறை இருண்டுவிட்டது. இருட்டில் பூங்கோதையின் கையைப் பிடித்துக் கதவைத் திறக்கும்படி குமார வீரன் கதவண்டை அவளை இழுத்துவிட்டான். பூங்கோதை கதவைத் திறந்தாள். கையில் ஒரு விளக்குடன் காமாக்ஷியம்மாள் கதவுக்கு வெளியில் நின்றாள். "என்னடியம்மா என் ராஜாத்தி, இன்னேரமாயும்கூட இன்னும் தூங்காமல் என்ன பேசிக்கொண்டிருக்கிறாய்? யாரோடு பேச்சு? வள்ளியம்மாளும் தூங்கவில்லையா? என்னமோ ஆண்பிள்ளை குரல் போலக் கேட்டதே! சிரித்தது யார்? எங்கே விளக்கு? ஒருநாளும் இல்லாமல் இன்னைக்கு மட்டும் விளக்கையும் அவித்துவிட்டு ஜாமத்துக்குமேல் இருட்டில் யாரோடு என்ன பேசிக்கொண்டிருக்கிறாய்? என்னமோ பார்வதியைப்பற்றி யாரோ பேசினாப் போல காதில் விழுந்ததே. அந்தப் பார்வதி தான் போய் வெகு நாளாச்சே...." என்று தூக்கக் கலக்கத்தோடு காமாக்ஷியம்மாள் கேட்டாள். பூங்கோதைக்குத் தூக்கி வாரிப் போட்டது போல் இருந்தது. குமார வீரன் எங்கே தன் தாயார் விளக்கோடு உள்ளே வந்துவிடுகிறார்களோ என்று எண்ணி பூங்கோதையின் கட்டிலின்கீழ் மறைந்துகொண்டான்.

சமயத்தில் தளர்ச்சியறியாத புத்திக் கூர்மையுள்ள
பூங்கோதை, அத்தை அறைக்குள் வந்துவிடுவதற்கு முன்னால்
தான் வெளியில் போய் அத்தையின் பார்வை அறையை
விட்டுத் திரும்பும்படியாக நின்றுகொண்டு தன் கையிலேயே
இன்னும் வைத்துக்கொண்டிருந்த ராம விக்ரஹத்தை அத்தை
யிடம் நீட்டி, "ஒன்றுமில்லை. அத்தை, இதைப் பாருங்கள்.
இத்தனை நாள் இதை உங்களிடத்திலிருந்து காட்ட மறந்தே
போனேன். இதை அன்றைக்கு என்னைக் காத்தவராயன்
கொண்டுபோன போது அவனிடத்திலிருந்து என்னைக் காப்
பாற்றி மலைக்குக் கூட்டிப்போன அந்த மலைக்கள்ளர் கொடுத்
தார்...."

"ஐயையோ! அவன் கள்ளன் அல்லம்மா! அடி என்
ராஜாத்தி, அவனைக் கள்ளனென்றா எண்ணிக்கொண்டிருக்
கிறாய்?..........ஓஹோ..........ஆமாம். சாயபு ஐயா சொன்னது
ஒன்றும் உனக்குத் தெரியாது! சரிதான்...."

"என்ன அத்தை? சாயபு என்ன சொன்னார்? அவர்
தான் நான் அங்கே இருக்கக்கூடாது என்றார். நான் போய்
விட்டேன். அவர் உங்களுக்கு மட்டும் என்னவோ சொன்னாராம்.
அதை ஒன்றும் நீங்கள் எனக்குச் சொல்லவில்லையே, அத்தை.
எனக்கு ஒன்றும் மறைக்க மாட்டீர்களே நீங்கள், இதை மட்டும்
ஏன் சொல்லவில்லை?" என்று சொல்லிக்கொண்டே
பூங்கோதை கீழே போகும்படி கதவண்டை போனாள். அத்தை
யும், "சொல்லுகிறேன்; சாயபு சொன்னதெல்லாம் உனக்காகத்
தான். அடி என் கண்ணே! என் புண்ணியமே புண்ணியம்.
உனக்கு எவன் வந்து வாய்க்கப் போகிறானோ என்று....அடி என்
ராஜாத்தி; நீ வருகிற ஞாயிற்றுக்கிழமை வரையிலும் பொறுத்
துக்கொள். அதற்கப்புறம் அந்த சாயபு சொன்னதையும் அந்த
மலை சமாசாரங்களையும் எல்லாம் உனக்குச் சொல்லுகிறேன்.
ஆ! எந்த சாமி புண்ணியமோ...." என்று பூங்கோதைக்குச்
சமாதானம் சொல்லிக்கொண்டே காமாக்ஷியம்மாள் கிட்ட வர வர
பூங்கோதையும் படிகளண்டை வந்து, அத்தையின் கையிலிருந்த
விளக்கைத் தான் வாங்கிக்கொண்டு படிக்கட்டில் இறங்குவதற்கு



அத்தைக்கு வெளிச்சம் காட்டினாள். மகனுடைய நினைப்பு வந்து
விட்டால் மற்ற எதுவும் காமாக்ஷியம்மாளுக்கு மறந்து போகும்.
தான் இப்போது விளக்கைப் பிடித்துக்கொண்டு பூங்கோதையின்
அறைக்கு வந்த காரணத்தையும் கேட்ட கேள்விகளையும் அடி
யோடு மறந்துவிட்டுத் தன் மகனைப்பற்றிய நினைவுகளும்,
அவனுக்குப் பூங்கோதை மனைவியாகப்போகிற பூரிப்புமே
புகுந்துவிட்டன. இருவரும் இறங்கி வந்து காமாக்ஷியம்மாளின்
கட்டிலின்மீது உட்கார்ந்தார்கள். சிறிது நேரம் அத்தையி
னுடைய எண்ணங்களை எதில் எதிலோ இழுத்துக்கொண்டு
போகும்படியான பேச்சுகளையே பேசிக்கொண்டிருந்துவிட்டு,
அத்தைக்கு உறக்கம் வருகிற வரையிலும் பார்த்துக்கொண்
டிருந்து, "அத்தை, தூங்குங்கள். எனக்கும் தூக்கம் வருகிறது"
என்று காமாக்ஷியம்மாளின் கையில் இருந்த விக்ரஹத்தை
வாங்கிக்கொண்டு மாடிக்கு ஓடினாள். அதை விட்டுப்போன
படியே இருந்தது. உள்ளே போனாள். வெகு மெதுவான
குரலில், "அத்தான், அத்தான், அத்தை தூங்கிவிட்டார்கள்.
நீங்கள் போவதற்கு இதுதான் சமயம். இன்னும் கொஞ்சம்
நேரமானால் அத்தை விழித்துக்கொள்ளுவார்கள்" என்று
இருட்டில் சொன்னாள். பதில் இல்லை. இருட்டில் அத்தா
னுடைய கையாவது தன்மேல் படுமோ என்று பார்த்தாள்.
அதுவும் இல்லை. "கட்டிலின் கீழ் பதுங்கியிருப்பது எனக்குத்
தெரியாது என்று நினைத்துக்கொண்டீர்களோ" என்று
முனகிக்கொண்டே தீப்பெட்டியைத் தடவி எடுத்து; விளக்கை
ஏற்றினாள். சிரித்துக்கொண்டே விளக்கைக் கட்டிலின்கீழ்
காட்டி, தானும் குனிந்து பார்த்தாள். கள்ளனைக்
காணவில்லை. எந்த வழியில் போயிருப்பார் என்று ஆச்சரியப்
பட்டுக்கொண்டே படுத்தாள். 'வருகிற ஞாயிற்றுக்கிழமை
எப்பொழுது விடியும்' என்று எண்ணிக்கொண்டே கண்
அயர்ந்தாள்.

## அத்தியாயம் 19

**ஞா**யிற்றுக்கிழமை விடிந்தது. காமாக்ஷியம்மாள் பதினைந்து வருஷத்துக்கு முன் காணாமற்போன மூத்த மகனைப் பார்க்கப் போகிற சந்தோஷத்தில் பரவசப்பட்டு, அதிகாலையிலிருந்தே வீடு வாசல்களுடைய அலங்காரங்களைப் பார்வையிட்டுக்கொண்டும் வேலையாள்களுக்கு இன்னின்ன காரியம் இப்படிச் செய்ய வேண்டும் என்று உத்தரவுகள் செய்து கொண்டும், சமையல் சாப்பாடு இப்படி இப்படி இருக்க வேணுமென்று திட்டம் போட்டுக்கொண்டும் வெகு பரபரப்போடு காரியங்களைப் பார்க்கலானாள்.

காலை ஒன்பது மணிக்கு அப்துர் ரஹீம் சாயபு அவசரமாகச் சொக்கேசர் வீட்டுக்கு வந்தார். காமாக்ஷியம்மாள் அவரை வெகு மரியாதையுடன் வரவேற்று, "ஏது ?.... ஐயா இந்நேரத்தில் ?........இன்றைக்கு என் குழந்தை குமார வீரன் வருவானல்லவா ?" என்றார்.

"ஜீ அம்மா, இஸ்மே க்யா சக் ஹை ?........இதில் என்ன சந்தேகம் ? இன்றைக்குக் கட்டாயம் வருவார்........ஆப் டர்னாநஹீ........தாங்கள் பயப்பட வேண்டியதில்லை. சொக்கேசர் ஐயா வந்துவிட்டாரா ?" என்றார் சாயபு.

"தம்பிங்களா ? தம்பி சொக்கேசன் இன்னிக்கு ராத்திரி எட்டு மணி வண்டிக்கு வருவதாக நேற்று சாயந்திரம் தந்தி வந்தது........அம்மா பூங்கோதை, அந்தத் தந்தியை எடுத்தாந்து ஐயாகிட்ட காட்டு" என்று கூவி, பூங்கோதை மாடியிலிருக்கிறாள் என்று தெரிந்து, தந்தியை வாங்கி வரும்படி வேலைக்காரன் ஒருவனை அனுப்பினாள்.

"பராபர்........நான் இப்போது அவசரமாக வந்த காரியம் என்னவென்றால், குமார வீரன் தங்களையும் பூங்கோதை



அம்மாளையும் கண்டு பேசி ஒரு சமாசாரம் கேட்டுவரச் சொன்னார்."

"என்ன ? என்ன ? என்னையும் பூங்கோதையையும் கேட்டாக வேண்டிய அப்படிப்பட்ட சமாசாரம் என்ன ?"

"பெண்பிள்ளைகளைப்பற்றிய சமாசாரத்தைப் பெண்பிள்ளைகளிடத்தில்தாமே கேட்டுக்கொள்ள வேணும். அந்த வீரராஜனுடைய காதலியாயிருந்த ஜானகியம்மாள் இருக்கிறாளல்லவா ?"

"ஆமாம். அவளுக்கென்ன ?"

"அந்த ஜானகி இப்போது மலையில் இருந்து வருகிறாள். அவளுக்குத் தன் சொந்த ஊருக்குப் போகவும் பிரியம் இல்லையாம். வீரராஜனுடைய பங்களாவை அவளுக்கு வாங்கிக் கொடுத்து, ஜீவனத்துக்கு வேண்டிய சௌகரியங்களையெல்லாம் செய்து கொடுத்து, இருக்கச் சொன்னால் அதுவும் தனக்கு வேண்டாமாம். குமார வீரனுடைய ஆதரவில் மலையிலேயே இருந்துவிடணும் என்கிறாளாம். மலையில் இருக்க முடியாது. அதுவும் குமார வீரனுக்கும் பூங்கோதைக்கும் கலியாணமாகிவிட்டால் அவர் மலையில் இனி அதிகமாக வாசஞ் செய்யமாட்டார். ஆகையினால், அந்த ஜானகியம்மாளை இந்த வீட்டில் கண்ணியமாக வைத்திருக்க, உங்களுடைய சம்மதத்தையும் பூங்கோதையம்மாளுடைய சந்தோஷத்தையும் எதிர்பார்க்கிறார். அதை உடனே கேட்டுத் தெரியப்படுத்தச் சொல்லியிருக்கிறார்."

"ஐயோ ! தங்கமா வந்து இருக்கட்டும். என் துரை குமார வீரன் பேச்சுக்குக்கூடப் பதிலுண்டா என்ன ? வரச் சொல்லுங்கோ........இண்ணைக்கே வரச் சொல்லுங்க. அந்த ஜானகியைப் பார்த்துக்கொள்ள வேண்டியதும் நம்ம வேலை தான். அவளுடைய தகப்பன் என்னுடைய வீட்டுக்காரரைத் திருடன் அடித்த போது அவருக்குத் துணையாகத் திருடர்களுடன் போராடினவர். என் வீட்டுக்காரர் அடிபட்டுப் படுத்திருந்த போது பக்கத்திலேயே இருந்து பார்த்துக்

கொண்டவர். ரொம்ப நல்ல மனிதர். பெரிய நாயன வித்வான். அந்த மனுஷனுக்காகவாவது ஜானகியை வைத்து ஆதரிக்க வேண்டியது நம்ம கடமைதான்'' என்று காமாக்ஷியம்மாள் சொல்லிக்கொண்டிருக்கும் போது பூங்கோதை தந்தியுடன் அங்கே வந்தாள். சாயபுவை வரவேற்று வணங்கினாள். சாயபுவும் சலாம் செய்து பூங்கோதையின் உத்ஸாகத்தையும் உல்லாசத்தையும் பார்த்து உள்ளுக்குள் அடங்காத மகிழ்ச்சி கொண்டார். இதுவரையிலும் அவர் பூங்கோதையைப் பகலில் பார்த்ததில்லை. வர்ணிக்க முடியாத அவளுடைய இயற்கையான அழகு, இன்றைக்குக் குமார வீரன் வரப்போகிறான் என்ற பூரிப்பினால் உண்டான புதுமலர்ச்சியுடன் பொலிந்ததைக் கண்டு சாயபு புளகாங்கிதமடைந்துவிட்டார். வந்த பூங்கோதை தந்தியை அவரிடம் நீட்டி, "என்னவோ அத்தையுடன் ரகசியம் பேசுகின்றீர்களே. நான் இங்கே இருக்கலாமோ?'' என்றாள். அந்தக் கேள்வி தனக்கு ஒரு சூடு என்று கண்ட சாயபு கலகலவென்று சிரித்துவிட்டார். அத்தையும் அதை அறிந்துகொண்டதைப் பூங்கோதை கவனித்து, அங்கிருந்து போகப் புறப்பட்டாள். சாயபு போக வேண்டாமென்று கையை ஆட்டித் தடுத்து, ஜானகியம்மாள் வருவதைப்பற்றி, பூங்கோதையின் சம்மதத்தையும் கேட்கச் சொல்லி, காமாக்ஷியம்மாளிடம் சொன்னார். காமாக்ஷியம்மாளும் சொன்னாள். பூங்கோதை அதைக் கேட்டவுடன் அளவில்லாத ஆனந்தமடைந்தாள். தனக்குத் தீமை செய்து விட்டாலும் அவளை மன்னித்துவிட வேணுமென்று முன்னாலேயே மலைக்கள்ளரான குமார வீரனிடம் தான் கோரியபடி ஜானகி மன்னிக்கப்பட்டிருக்கிறாள் என்பதையும், அதே ஜானகியம்மாளைத் தன் வீட்டில் வைத்து ஆதரிக்கிற பெருமையும் கிடைத்ததென்று மிகவும் சந்தோஷமடைந்தாள். அந்தச் சந்தோஷத்தைப் பலபடியாகச் சாயபுவிடம் தெரிவித்து, இந்தப் பெருங்குணத்துக்காக சாயபுவின் நண்பரான அந்த மலைக்கள்ளருக்குத் தனியான வந்தனத்தையும் தான் தெரிவித்ததாகவும் சொல்லச் சொல்லிக் களித்தாள்.



சாயபுவைப் பூங்கோதை இதற்கு முன்னால் பல முறை சந்தித்திருக்கிறாள் என்றாலும் அவரிடத்தில் தனக்கு ஆரம்பத்திலிருந்து ஏற்பட்ட ஒரு தனி மரியாதையினால் இதுவரையிலும் சாயபுக்கு முன்னால் இவ்வளவு சங்கோஜமில்லாமல், சிரித்து விளையாடிப் பேசினதே இல்லை. கலியாணமாகாத கன்னிகைக்கு வழக்கமாக உள்ள காவலையும் மறந்துவிட்டதைப் போலக் களித்துப் பேசினதினாலேயோ என்னவோ, அப்துர் ரஹீம் அவருடைய வழக்கத்துக்கு முற்றிலும் மாறுபாடாகப் பூங்கோதையையே உற்று உற்றுப் பார்த்துக் கொண்டிருந்தார். ஏதோ வெளியில் சொல்ல முடியாத சந்தோஷமோ சங்கடமோ மனத்தில் உள்ளவர் போல வெகு நேரம் அப்துர் ரஹீம், பூங்கோதையின் புது அழகைப் பார்த்துக் கொண்டே இருந்ததில், வந்த காரியத்தையும் மறந்துவிட்டார்.

சாயபுவினிடத்திலுண்டான மாறுதல்களைக் கண்ட பூங்கோதை, தான் அளவு கடந்து காட்டிவிட்ட சந்தோஷமும் கலகலப்பும் சாயபுவுக்குப் பிடிக்கவில்லை போலிருக்கிறதென்று நினைத்துக்கொண்டு, ஜானகியம்மாள் தன் வீட்டுக்கு வருவதில் தனக்கு வெகு சந்தோஷம் என்பதை மட்டும் மறுமுறை சொல்லிவிட்டுப் போய்விட்டாள்.

பூங்கோதை மறைந்தவுடன் சாயபுக்குத் தன் உணர்வு வந்து திடுக்கிட்டுக் காமாக்ஷியம்மாளுடன், விட்டுப்போன பேச்சைத் தொடர்ந்து, கொஞ்ச நேரம் பேசிக்கொண்டிருந்தார். சாயபு பூங்கோதையைப் புது மாதிரியாகக் கவனித்ததையும் அதனால் பூங்கோதை தன்னுடைய சந்தோஷப் பேச்சுகளையெல்லாம் சட்டென்று விட்டுவிட்டுப் போய்விட்டதையும் காமாக்ஷியம்மாள் அறியவில்லை. ஆனால், தங்களுடைய குடும்பத்துக்கு இவ்வளவு உதவிகளைச் செய்த அவ்வளவு பெரிய நண்பர் அப்துர் ரஹீம் சாயபுவை வழியனுப்பி வைக்கிற வரைக்கும் தானும் கூட இருக்காமல் பூங்கோதை போய் விட்டாளே என்று காமாக்ஷியம்மாளுக்குக் கொஞ்சம் வருத்தம் தான். இருந்தாலும், பூங்கோதை தன்னுடைய மூத்த மகன் குமாரவீரனைக் கள்ளன் என்று எண்ணிக்கொண்டிருப்ப

தெல்லாம் இன்றைக்கு மாறி, அவனே அவளுக்கு அத்தை மகனும் கணவனும் ஆகப்போகிற சந்தோஷத்தில் காமாக்ஷியம்மாள், பூங்கோதை அப்படி சாயபுவிடம் விடை பெற்றுக் கொள்ளாமல் போய்விட்டதைப் பொருட்படுத்தவில்லை.

"மாயி! பகுத் வஹத் ஹோகயா........அம்மா, ரொம்ப நேரமாய்விட்டது. நான் போய் வருகிறேன், சலாம்" என்று சாயபு எழுந்தார்.

"ஐயா உங்களை நாங்கள் ஒரு நாளும் மறக்கமாட்டோம். ....இன்னைக்குச் சாயந்திரம் என் ராஜா குமாரவீரன் வருவானல்லவா?"

"அம்மா, நீங்கள் துளிக்கூடச் சந்தேகிக்க வேண்டாம். இன்றைக்கு இரவு பத்து மணிக்குள் பார்ப்பீர்கள்—உங்கள் மகனை."

"நீங்களும் வரவேணுஞ் சாமி—"

"ஆஹா! நானில்லாமலா அவர் வருவார்? நானும் வருவேன். ஜானகியம்மாளும் பார்வதியம்மாளும் கூட வருவார்கள்."

"பார்வதியம்மாளா! அது யாரு?...."

"அந்த அம்மாள் ரொம்ப நாளாகக் குமார வீரையாவுடன் மலையிலேயே இருக்கிறாள். ஒரு நாள் சந்தேகம் வந்து, அந்த அம்மாள் யாரென்று கேட்டதற்கு நம்ம குமார வீரன் தம்முடைய சிறிய தாயார் என்று சொன்னார். எல்லாருக்கும் ஆச்சரியமாகப் போய்விட்டது."

"அட யெஞ்சாமீ! எங்க பார்வதி இருக்கிறாளா!.......ஐயா சாயபு, அவளை நீங்கள் பார்த்திருக்கிறீர்களா? அவள் அடையாளத்தைச் சொல்லுங்கள்."

"ஓ, பார்த்திருக்கிறேன். அந்தம்மாள் ரொம்ப அழகாயிருப்பார்கள். வயசு முப்பதுக்குக் கம்மியாக இருக்கும். நல்ல சிவப்பு. உங்களைவிடக் கொஞ்சம் உயரம். பெரிய கண்கள். அகலமான நெற்றி. பல், வரிசை அப்படி நான்



பார்த்ததேயில்லை. சிற்சில ஜாடைகள் பூங்கோதை மாதிரியே இருக்கும்....இடக்கையில் ஆள் காட்டி விரலில் பாதி...."

"ஆமாய்யா! ஆமாய்யா! சாயபு; அவளேதான் சாமி.... என் உடன்பிறப்பு பார்வதிதான் அது. சிறு வயதில் மாட்டுக்குத் தட்டு வெட்டிப் போடறேண்ணு இடக்கையில் கொடுவாளைப் போட்டுக்கொண்டாள். ஆள்காட்டி விரல் பாதித் துண்டாய் ஒடிப்போச்சு. இந்த அடையாளம் ஒண்ணே போதும்; மற்ற அடையாளங்களும் சொன்னதெல்லாம் சரியாயிருக்குது. எங்கள் பார்வதிதான். சாயபு ஐயா! நீங்கள் எங்கள் குல தெய்வந்தான் சாமி.........." என்று காமாக்ஷியம்மாள் வாய் கொண்ட மட்டும் சாயபுவைப் புகழ்ந்துவிட்டுப் பார்வதியின் சரித்திரத்தையும் அவருக்குச் சொன்னாள்....சாயபு போய் வெகு நேரம் வரைக்கும் காமாக்ஷியம்மாளுக்குத் தன் தங்கை உயிரோடிருக்கிறாள் என்றதைக் கேட்ட பூரிப்பு ஓயவில்லை. வீட்டிலுள்ள எல்லாப் பிராணிகளிடத்திலும் சொல்லிச் சொல்லிச் சந்தோஷப்பட்டாள். பூங்கோதைக்கு இதைச் சொல்ல, துள்ளிக் குதித்துக்கொண்டு காமாக்ஷியம்மாள் மெத்தைக்கு ஓடினாள். பூங்கோதைக்கு இந்த விஷயம் முன்னாலேயே தெரியுமானதால், அத்தை சொன்னபோது புதுமையான பூரிப்பு ஒன்றும் உதிக்கவில்லை. இருந்தாலும் அத்தையோடு சேர்ந்து ஆச்சரியப்பட்டாள்.

இரவு ஒன்பது மணிக்கு அத்தான் வரப்போகிறார் அல்லவா? மத்தியானம் இரண்டு மணியிலிருந்தே பூங்கோதை தன்னைச் சிங்காரித்துக்கொள்ள ஆரம்பித்துவிட்டாள். ஆடைகளையும் ஆபரணங்களையும் இருப்பெடுக்கிறவள் போல ஒவ்வொன்றாகக் கழித்து இன்றைக்குப் பொருத்தமானவை இவையென்று எடுத்து வைத்தாள். இதுவரையிலும் பூங்கோதை தன்னுடைய துணிமணிகளில் இவ்வளவு கவலை காட்டினதில்லை.

இருட்டில் ஏழடிப்பதற்கு முன் வழக்கம் போல நீராடி வந்து, வழக்கமில்லாத வாசனைத் தைலங்களால் கூந்தலை வெகு

ஜாக்கிரதையாகத் தானே வாரி வகிர்ந்து, கருநாகம் போல ஒரே சடையாகப் பின்னிவிட்டாள். சற்று நேரத்துக்கு முன்னால் தானே நந்தவனத்துக்குப் போய்க் கொய்து வந்த ரோஜா, மல்லிகை முதலான மலர்களைக்கொண்டு கட்டிய பூச்செண்டைச் சடையின் உச்சியில் தலையிற் செருகினாள். சித்திரம் எழுதுவது போலத் திலகமிட்டாள். வெகுநேரம் கண்ணாடிக்கு முன்னால் நின்றுகொண்டு முகத்தையும், பொட்டையும், நெற்றியையும், வகுந்தெடுத்த நேர்மையையும் மாற்றிப் பார்த்து ஒழுங்கு செய்துகொண்டாள். பூங்கோதையை இதுவரையிலும் அறிந்தவர்கள் யாரேனும் இன்றைக்கு அவள் தன் முகத்துக்குச் செலவிட்ட காலத்தையும் கவனத்தையும் கண்டால் வெகு ஆச்சரியப்படுவார்கள். அதற்குமேல் வயிரச் சடைப்பில்லையைப் பூ முடிப்புக்குக் கீழ் சடையின் ஆரம்பத்தில் திருகிக்கொண்டாள். முன்னமே பொறுக்கி வைத்திருந்த ஆடைகளையும் அணிந்து கொண்டாள். இதுவரையில் நகைகளின் மேல் ஆசையே காட்டாத அவள், இன்று இரண்டொரு நகைகளை அதிகமாக அணிந்துகொண்டு; மறுபடியும் நிலைக்கண்ணாடியில் தன்னை முற்றிலும் சரி பார்த்துக்கொண்டு கீழே அத்தையிடம் ஓடினாள். பூங்கோதையின் புது அலங்காரங்களைக் கண்ட காமாக்ஷியம்மாள் அளவிட முடியாத ஆனந்தமடைந்தாள். ஆனால், தன் மகன் குமார வீரன் வரப்போகிற சங்கதி பூங்கோதைக்கும் தெரியுமோ என்று திகைத்தாள். ஒருகால், தம்பி சொக்கேசன் ஊருக்குப் போகுமுன் சொல்லியிருப்பானோ என்று நினைத்தாள். இருக்காது, தம்பி சொல்லியிருந்தால் பூங்கோதை, சாயபு சொன்னதையெல்லாம் தனக்குச் சொல்லவில்லையே என்று கேட்டிருக்கமாட்டாளேயென்று நினைப்பாள்........எப்படியானாலென்ன, தன் மகன் வந்து, கண்டு களிப்பதற்கு உதவும்படி, தான் கேட்டுக்கொள்ளாமல் அவளாகவே பூங்கோதை செய்துகொண்டிருக்கிற அலங்காரத்தில் காமாக்ஷியம்மாளுக்குச் சந்தோஷத்தைத் தவிர வேறு என்ன இருக்க முடியும்? ஆனால், அதைப்பற்றி ஒன்றும் பூங்கோதையிடம் பேசாமல், சாப்பாட்டு விஷயமாகப் பேச்செடுத்து, அன்றைக்குச் சாப்பாடு வழக்கம் போல் எட்டு மணிக்கு அல்லவென்றும், சொக்கேசர் முதலான எல்லோரும் வந்த பிறகுதான் என்றும் காமாக்ஷியம்மாள் சொன்னதைக் கேட்டுக்கொண்டு, மறுபடியும் பூங்கோதை மாடிக்குப் போய்விட்டாள்.



மகனும் மாந்தோப்பு சாயபுவும் சாப்பிடப் போகிறார்கள் என்று காமாக்ஷியம்மாள் வெகு கவனத்தோடு விருந்து சமைத்துக்கொண்டிருந்தாள். அது பூங்கோதைக்குத் தெரியும். இருந்தாலும், தான் அத்தானைக் காணப்போகிற சந்தோஷத்தாலும், அவரைக் கண்டு அத்தையும் அண்ணாவும் அடையப் போகிற ஆனந்தத்தையும் தன் மனசுக்குள்ளேயே எண்ணியெண்ணி மயங்கிக்கொண்டிருந்துவிட்டதாலும், அத்தைக்கு ஒத்தாசையாக அடுப்பண்டை இருக்கிற வழக்கத்தை அடியோடு மறந்து போனாள்.

தன்னுடைய அறையிற் புகுந்தாள். கடிகாரத்தைப் பார்த்தாள். மணி ஏழே முக்கால்தான். சொக்கேசர் எட்டு மணி வண்டிக்குத்தான் வரப்போகிறார். ரயிலடிக்கும் வீட்டுக்கும் ஏழு மைல். மாட்டு வண்டி வேகமாக வந்தாலும் ஒன்றரை மணி செல்லும். மற்றவர்களும் ஏறத்தாழ அந்த நேரத்துக்குத்தான் வரலாம். குறைந்தது இன்னும் இரண்டு மணி நேரமாவது காத்திருக்க வேணுமே!........படித்து முடிப்பவள் போலக் கம்பராமாயணத்தை எடுத்தாள்; மேஜைக்கு முன்னால் தன்னுடைய உயரமான நாற்காலியில் உட்கார்ந்தாள்; புத்தகத்தை விரித்தாள். விரித்த புத்தகம் விரித்தபடியே கையில் இருக்க, விளக்கு வெளிச்சத்தில் மேஜைக்குப் பக்கத்திலிருந்த கண்ணாடியில் தன்னுடைய அலங்காரங்களையே பார்த்துக்கொண்டு, 'அத்தான் வந்து, அண்ணாவையும் அத்தையையும் சந்திக்கிற சமயம் எப்படி இருக்கும்? பேச்சு எப்படி ஆரம்பமாகும்? யார் முதலில் என்ன சொல்லுவார்? அவர்களுக்கு முன்னால் என்னோடு பழக்கமானவர் போல பேசுவரோ வெட்கப்படுவாரோ? நான் என்ன செய்வது?' என்றெல்லாம் எண்ணிக்கொண்டே உட்கார்ந்திருந்தாள்.

மேலே பூங்கோதை தன்னறையில் அப்படி உட்கார்ந்து கொண்டிருக்கையில், கீழே சுமார் எட்டடிக்கிற சமயத்தில் அப்துர் ரஹீம் சாயபு, அவர் மட்டும் அவசரமாக வந்தார். சாயபு வந்திருக்கிறார் என்று காதில் விழுந்தவுடன் குமாரவீரனும் வந்துவிட்டானென்று காமாக்ஷியம்மாள் சமையல் வேலைகளையெல்லாம் அப்படியே போட்டுவிட்டு ஓட்டமாக வந்து, "வாங்கையா சாயபு, சலாம். எங்கே, வந்துவிட்டானா என் துரை ?....எங்கே அவன் ?....நீங்கள் மட்டுந்தானா வந்தீர்கள் ? ஐயா, இண்ணைக்காவது....சாயபு ஐயா, அவனைக் கண்ணில் காட்டுங்கள், ஐயா...." என்றாள். "மாயீ ! ஸச் பாத் போல்தாஹூம்....அம்மா, உண்மையான பேச்சு சொல்லுகிறேன். இன்றைக்குக் கட்டாயம் வீரையா வருவார். நீங்கள் பார்ப்பீர்கள். ஒன்பது ஒன்பதரை மணிக்குள் ஜானகியம்மாள், பார்வதியம்மாள் முதலான எல்லோரும் வரப்போகிறார்கள். இன்னும் ரொம்ப நேரம் இருக்கிறது. தாங்கள் சந்தேகிக்க வேண்டாம். நான் இங்கே இருந்து வருகிறவர்களைக் கவனித்துக்கொள்கிறேன். நீங்கள் விருந்து சமையல் செய்கிறாப்போலிருக்கிறது. போய் அதைக் கவனியுங்கள். இன்றைக்குச் சாப்பாடு தேவாமிர்தம் போலத்தான் இருக்கும் ! தடையில்லை....நீங்கள் போங்கள்....நான் பார்த்துக்கொள்ளுகிறேன்........" என்று சாயபு சொன்னார். சாயபு தம்முடைய சமையலைப் புகழ்ந்து பேசியதைக் கேட்டுச் சந்தோஷப்பட்டுக் கொண்டு காமாக்ஷியம்மாள், சாயபு நிஜமாகவே சமையல் நன்றாக இருக்கவேணுமென்ற எண்ணத்தில்தான் தன்னைப் போகச் சொல்லுகிறார் என்று நம்பி, உடனே சமையல் வீட்டுக்குப் போய்விட்டாள்.

சாயபு கூடத்தில் ஒரு நாற்காலியில் உட்கார்ந்தார். அங்கிருந்த இரண்டொரு வேலைக்காரர்களும் வெவ்வேறு வேலையாகப் போய்விட்டார்கள். சாயபு மெதுவாக எழுந்தார். நாலா பக்கமும் பார்த்தார். அங்கே யாரும் இல்லையென்பதை நிச்சயப்படுத்திக்கொண்டு, மெதுவாக மெத்தைக்கு ஏறினார். பூங்கோதையின் அறைக்கதவு மூடியும் மூடாமலும் வெளிச்சமாக இருந்தது. ஓசையில்லாமல் நடந்து, கதவைத் திறந்து தலையை உள்ளே நீட்டினார். அப்துர் ரஹீம் சாயபு என்று அறிந்தவுடன் பூங்கோதை வெகு பரபரப்போடு எழுந்து மரியாதை செய்தாள். முன் ஒரு நாள் இதே நேரத்தில், இதே மாதிரி வந்து, தன்னுடைய தகப்பனாரை வீரராஜன் கையிலிருந்து மீட்பதற்கும், காத்தவராயன் முதலானவர்களைக் கைது செய்வதற்கும் வேண்டியிருக்கிறதென்று, தான் எழுதியது போல் வீரராஜனுக்கு ஒரு கடிதம் வாங்கிக்கொண்டு போவதற்கு சாயபு வந்தது, இப்போது பூங்கோதைக்கு நினைவிற்கு வந்தது. ஏதோ முக்கியமான காரியம் இருக்கவேணும், அவர் இப்படித் தாமாகத் தம் அறைக்கு வந்ததற்கு, என்று எண்ணினாள்.



இதற்குள் உள்ளே வந்த சாயபு சலாம் செய்து, என்றுமில்லாத மந்தகாஸத்துடன் புன்சிரிப்புக் காட்டி, "பூங்கோதையம்மா........பீனேக்கு பானி........குடிக்கத் தண்ணீர் வேணும்" என்றார். உடனே பூங்கோதை தன்னுடைய அறையில் எந்நேரத்திலும் வைத்திருக்கிற குளிர்ந்த பானைத் தண்ணீரை ஒரு வெள்ளிப் பாத்திரத்தில் கொண்டுவந்தாள். அவள் கொடுப்பதற்கு முன்னால் வெகு அவசரமாகத் தாமே கையை நீட்டி, அந்தப் பாத்திரத்தை வாங்கிக்கொண்டார். அந்த அவசரத்தில் சாயபு பூங்கோதையின் விரல்களையும் சேர்த்துப் பிடித்துவிட்டார். பூங்கோதை கூச்சத்தால் சட்டென்று கையை இழுத்ததில் பாதித் தண்ணீர் அவளுடைய பட்டுப்புடைவையின் மீது கொட்டிவிட்டது. தன்னுடைய அத்தானுக்காக வெகு நேரத்துக்கு முன்னாலேயே தன்னை அலங்காரப்படுத்திக் கொண்டு, அந்த அலங்காரம் அத்தான் வருவதற்குள் கலைந்து போகக்கூடாதென்று வெகு கவனத்தோடு இதுவரையிலும் காத்து வரப்பட்டது. அது குலைந்துவிட்டதில் பூங்கோதைக்கு வருத்தமும்—கோபமுங்கூட—வந்துவிட்டது போல மாங்தோப்பு சாயபுவைக் கண்டவுடன் உண்டான மரியாதையும் சந்தோஷமும் மறைந்துவிட்டன. தன்னுடைய கை பூங்கோதையின் விரல்களில் மோதிவிட்டதற்கு வருத்தப்பட்டு, சாயபு மன்னிப்புக்

கேட்டுக்கொண்டார். கொஞ்சம் தண்ணீரைக் குடித்துவிட்டு, மீதி ஜலத்தைத் தம்முடைய முகம், தாடி, மீசை—இவற்றின்மீது குளிர்ச்சியாகத் தடவிக்கொண்டு, பாத்திரத்தைப் பூங்கோதையினிடமே நீட்டினார். மிகவும் கூச்சப்பட்டுக்கொண்டே பாத்திரத்தை வாங்கி, பூங்கோதை மேஜைமீது வைத்துவிட்டு, அவர் வந்த காரியம் என்னவென்று எதிர்பார்த்தாள். சாயபு ஒன்றும் பேசாமல் ஏதோ மனத்திலுள்ளதைச் சொல்ல முடியாமல் தவிக்கிறவரைப் போலப் பூங்கோதையையே பார்த்துக்கொண்டு நின்றார். இன்றைக்கு சாயபுவின் உடை அளவு கடந்த பட்டும் ஜரிகையுமாகப் பளபளப்பும் மினுமினுப்புமாக இருந்தது. அத்துடன் வழக்கத்துக்குமேல் கணக்கில்லாமல் அவருடைய உடைகளில் ஊற்றியிருந்த அத்தர் வாசனைகள் வெகு காரமாகப் பூங்கோதைக்குக் கடுத்தது. மொத்தத்தில் இன்றைக்கு அவர் வந்த விதமும், தண்ணீர் கேட்ட மாதிரியும், அதை வாங்கின அஜாக்கிரதையும், வந்த காரியம் ஒன்றும் சொல்லாமல் விழுங்க விழுங்கப் பார்த்துக்கொண்டே நிற்பதும், வஸ்திரங்களின் ஆடம்பரமும், வாசனைகளின் வீச்சும் எல்லாம் சேர்ந்து பூங்கோதைக்கு சாயபுவினிடத்திலிருந்த மதிப்பைக் கலக்கிவிட்டன. பூங்கோதைக்கு மனக்குழப்பம் உண்டாகி, இன்னது செய்வதென்று தேன்றாமல் தலை குனிந்து நின்றுகொண்டிருந்தாள்—நிலைமை மிகவும் சங்கடமானதாக இருந்தது. அறையை விட்டுப் போய்விடலாமென்றாலும் அவர் கதவிற்கு நேராக வழியை அடைத்துக்கொண்ட மாதிரி நிற்கிறார்....

இப்படித் தவித்துக்கொண்டிருக்கையில் சாயபு வெகு மெதுவான குரலில் ஏதோ கெஞ்சிக் கேட்பவர் போலத் தம்முடைய கீச்சுக்குரல் இன்னும் சிறுத்து, "ஹம் பூங்கோதையம்மா! நான் உனக்கும் உன் வீட்டுக்கும் எவ்வளவோ உபகாரம் செய்திருக்கிறேன்'' என்றார்.

"ஆம், அதை யார் இல்லையென்றது ?''

"இல்லையென்று யாரும் சொல்லவில்லை........ஆனால்........ தேக்கோ........பாருங்கள்........ஆனால் அதற்கு எனக்கு........ ஒன்றும் வெகுமதி இல்லையா?''



"ஆஹா. வேண்டிய மட்டும் உண்டு. என்ன கொடுத்தாலும் நீங்கள் எங்களுக்குச் செய்திருக்கிற உதவிகளுக்கு ஈடு செய்ய முடியுமா? இருந்தாலும் இதோ அண்ணா வந்துவிடுவார். அவரிடம் நானே சொல்லி, உங்களுக்குத் திருப்தியாகக்கூடிய வெகுமதியை எங்களால் கூடியமட்டும் செய்கிறோம். வாருங்கள் கீழே போகலாம். அத்தையிடம் சொல்லித் தங்களுக்கு........''

"எனக்கு அவர்கள் கொடுக்கக்கூடிய வெகுமதி ஒன்றும் வேண்டாம்.''

"பின்னென்ன வேண்டும்?''

"துமாரீ........உன்னுடைய தயவுதான் வேண்டும்.''

"என்னுடைய தயவென்றால்? விளங்கவில்லையே! என்னுடைய தயவென்றால் அர்த்தம் என்ன? ஐயா சாயபு! என்ன உங்களுடைய குணம்—காலையிலேயே கவனித்தேன். இப்படித் தடுமாறி இருக்கிறது.''

"உண்மைதான், பூங்கோதையம்மாள். இன்றைக்கு மட்டுமல்ல, கொஞ்ச நாளாகவே என் மனம் உன் விஷயத்தில் ரொம்பவும் தடுமாறித்தான் போயிருக்கிறது. உன்னைப் போன்ற ரதியைக் கண்டால் யாருக்குத்தாம் மனம் தடுமாறாது ?''

"சீ, இதென்ன சாயபு! உமக்கென்ன பைத்தியம் பிடித்துவிட்டதா திடீரென்று? இந்த மாதிரி வார்த்தைகளை என்னிடம் பேசுவது உமக்கு ஒழுங்காக இருக்கிறதா? உம்மை ஒரு சரியான முசல்மான் சிநேகிதர் என்றல்லவா எண்ணினோம்! அன்றைக்கு உம்முடைய உயிர்த்தோழருக்காகப் பெண் கேட்க வந்தீர்! இன்றைக்கு அவருக்கே துரோகம் செய்ய நினைக்கிறீரே! ஒரு முசல்மான் செய்கிற வேலையா இது ?''

"மன்னாப் செய்துகொள், பூங்கோதையம்மா........... என்னமோ என்னுடைய மனம் முற்றிலும் மாறிப்போய்விட்டது. உண்மைதான். தோழருக்காகத்தான் பெண் கேட்டேன். இன்றைக்கு எனக்கு....'எனக்கு' என்று நான் சொல்லிவிட்டால் அவரும் சம்மதிப்பார்....''

"சீச்சீ! தூ. போ! நீ ஒரு யோக்கியனைப் போலப் பாசாங்கு செய்த பாதகன், துரோகி. போ வெளியில், இனி இங்கே நின்றால் மரியாதை கெட்டுப்போகும். சத்தமில்லாமல் போய் விட்டால் மன்னித்துவிடுகிறேன். இல்லையென்றால், இதோ இரைச்சல் போட்டு, அத்தை முதலானவர்கள் வந்து, உன் மானம் கெட்டுப்போகும்படி செய்வேன்" என்று சீறிவிட்டு முகத்தைத் திருப்பிக்கொண்டாள்.

காமப்பித்துப் பிடித்துவிட்டவனைப் போன்ற சாயபு, வெளியே போகாமல் தன் பக்கம் முகங்கொடுக்காமல் திரும்பி நின்ற பூங்கோதையின் வெகு சமீபமாகப் போய், அவளுடைய காதுக்கு ஓரத்தில், "சுனோ அம்மா - கோபித்துக்கொள்ளாதே. நான் என்னமோ சொல்லிவிட்டதற்கு இவ்வளவு கோபம் காட்டுகிறாயே, நாலைந்து நாளைக்கு முன்னால் இதே இடத்தில் கல்யாணமில்லாமலேயே அவரைக் கட்டித் தழுவி முத்தம் கொடுத்தாயாமே, அது மட்டும்...."

"அடே முட்டாள்! மஹம்மதிய மார்க்கத்துக்கே மாசுண் டாக்கிய மடையா? போ வெளியில். போ.... உம் போ....போ" என்று கர்ஜித்து, இடக்கையால் கதவைக் காட்டி, வலக் கையால் போகக் காட்டி அடிக்கப்போவது போல அதிர்ந்தாள்.

சாயபு நிமிர்ந்து நின்று தம்முடைய நீலக் கண்ணாடியை மூக்கிலிருந்து எடுத்துக் கையில் பிடித்துக்கொண்டு, "இதோ போகிறேன், பூங்கோதை. ஒரு முத்தம்-குமார வீரனுக்குக் கொடுத்தது போல—கொடுத்தால் போய்விடுகிறேன்" என்று சாயபு சிரித்தார். சாயபு சிரித்த சிரிப்பும், 'முத்தம் கொடுத் தால் போய்விடுகிறேன்" என்று சொன்ன சொல்லும் இது வரையிலும் மாங்தோப்பு சாயபுவின் குரலென்று தான் பழக்க மாகக் கேட்டிருக்கிற கீச்சுக் குரலாக இல்லாமல் தான் முன் கேட்டிருக்கிற வேறு ஒரு குரலாகவும் கம்பீரமான சத்தத் தோடும் இருப்பதைக் கண்டு சாயபுவை உற்றுக் கவனித்தாள். பூங்கோதை சட்டென்று தாவி, சாயபுவின் தலைப்பாகையைத் தள்ளிவிட்டாள். தலை மொட்டையாகவே இல்லை. "அப்பா,



என்ன மோசம்!" என்று சொல்லிக்கொண்டே வெடுக்கென்று தாடியைப் பிடித்து இழுத்தாள். முன்னே தடவப்பட்ட தண்ணீரில் ஊறி, ஒட்டுப் பசை இளகிப்போயிருந்த ஒரு பக்கத்துத் தாடியும் மீசையும் பூங்கோதையின் கையோடு கழன்றுவிட்டன. உடனே தாடிக்குச் சொந்தக்காரர் "பொறு, பொறு, கிழித்துவிடாதே. நானே எடுத்துவிடுகிறேன்" என்று தன்னுடைய தாடி மீசையை எடுத்துவிட்டார். மஹம்மதிய உடைகளுடன் மலைக்கள்ளன் குமார வீரன் மந்தகாஸத்தோடு நிற்பதைக் கண்டாள்! பூங்கோதை, "ஐயோ! அத்தான் அத்தான், என்னென்னவோ சொல்லிவிட்டேன் தங்களை ! அப்பா! இந்த மாயமெல்லாம் எங்கேதான் கற்றீர்களோ! இதற் காகத்தான் இருண்ட நீலநிற மூக்குக் கண்ணாடிகளோ! அதனால்தான் பகலில் தங்களை யாரும் பார்க்க முடிய வில்லையோ! குரலை இப்படி மாற்றிப் பேச, எந்த வித்தைக் காரனிடத்தில் கற்றுக்கொண்டீர்கள்?... ....அத்தான், என்னென் னவோ சொல்லிவிட்டேனே! நான் அன்றைக்குக் கவனித்தேன். 'என்னாடாப்பா, ஒரு சாயபு இவ்வளவு சுத்தமாகத் தமிழ் பேசுகின்றாரே' என்று. அப்பா ! அத்தான், ஐந்தாறு துலுக்கு வார்த்தைகளை வைத்துக்கொண்டு எவ்வளவு பேரை ஏமாற்றி விட்டீர்கள் ! அத்தான்... ....அத்தான்...." கொஞ்சங் கொஞ்ச மாகக் குமார வீரனுக்கு அருகில் வந்தாள். குமார வீரன் அவளை வாரியணைத்து ஒருமுத்தம் கொடுத்து, "சரி போதும், நான் கீழே போகிறேன். யாராவது வந்துவிடப் போகிறார்கள். மாமா முதலானவர்களுக்கு என்னுடைய மகம்மதிய வேஷத்தைக் காட்டி, கொஞ்சம் வேடிக்கை செய்ய வேண்டும்" என்று வெகு அவசரமாகத் தன்னுடைய தாடி, மீசை முதலிய வற்றை, தன் சட்டைப் பையில் வைத்திருந்த பசையைத் தடவி மறுபடியும் முன் போலவே ஒட்டிக்கொண்டான். அந்தப் பொய்த்தாடி தோலோடு தோலாக ஒட்டிக்கொண்டு, சொந்த மீசை தாடி போலத் தோன்றியதைக் கண்டு பூங்கோதை பிரமித்துவிட்டாள். தலைப்பாகையையும் முன்போல் கட்டி, மூக்குக் கண்ணாடியையும் போட்டுக்கொண்ட உடன் பழைய சாயபாகிவிட்ட குமார வீரன், "கண்மணி, பூங்கோதை !

உனக்கு இந்த மகம்மதிய உருவம் பிடிக்கிறதா? அல்லது என்னுடைய சொந்த உருவம் பிடிக்கிறதா?'' என்றான்.

''எனக்கு இரண்டு உருவமும் பிடிக்கின்றன. இந்த உருவம் என் தந்தையைக் காத்த உருவம். அந்த உருவம் என்னையும் என் அத்தையையும் காத்த உருவம்'' என்று சொல்லிக்கொண்டே பூங்கோதை தன்னை மறந்து தாவிக் குதித்து, அவனைத் தழுவித் தாடியின் மீது ஒரு முத்தமிட்டாள். ஐயோ! பூங்கோதை முத்தம் கொடுக்கிற அதே க்ஷணத்தில் சாயபுவைத் தேடிக்கொண்டு அங்கே வந்த காமாக்ஷியம்மாள் கதவைத் திறந்துவிட்டாள்! பூங்கோதை சாயபுவைக் கட்டித் தழுவி முத்தமிட்டதையும் பார்த்துவிட்டாள்.

''ஐயோ! ஐயோ! ஐயோ! என்ன அநியாயம்! என்ன அநியாயம்! இப்படி அக்கிரமம் உண்டா! என் தலையிலே கல்லைப் போட்டானே! சாயபு என் வயிற்றில் நெருப்பைக் கொட்டிவிட்டானே—அட பழிகாரா—பாவி! சண்டாளா! ஐயோ! ஐயோ!'' என்று காமாக்ஷியம்மாள் வாயிலும் மார்பிலும் வயிற்றிலும் ஓங்கி ஓங்கி அடித்துக்கொண்டு கதவைவிட்டுத் தூர நின்றுகொண்டு கதற ஆரம்பித்தாள். உள்ளேயிருந்த இருவரும் சிரித்துவிட்டார்கள். பூங்கோதைக்கு அத்தை தன்னை அந்த நிலைமையில் பார்த்துவிட்டதைப்பற்றி வெகு துக்கம் வந்துவிட்டதென்றாலும் குமார வீரன் சிரித்ததைக் கண்டு தானும் அறியாமல் சிரித்துவிட்டாள்.

சிரித்ததைக் கேட்ட காமாக்ஷியம்மாளுடைய அழுகையும் கோபமும் அதிகப்பட்டுவிட்டன. ''சிரிப்பா! சிரிப்பா உங்களுக்கு!....இனிமேல் சொக்கேசன் வீடு சிரிக்கத்தான் போகுது. அடப் பாழாய்ப் போன சாயபு, இதுக்கா இங்கே அடிக்கடி வந்தாய். உன் உபகாரத்தின் தலையிலே நெருப்பை வாரிக் கொட்ட. ஐயோ! நானும் சூதுவாது நினைக்காமல் எந்த நேரத்தில் வந்தாலும் அவனோடு பேசவிட்டேனே!........அடி பழிகாரி பூங்கோதை! உன் புத்தியுமா இப்படிப் போச்சு!'' என்று கதறிக் கொண்டு காமாக்ஷியம்மாள் கீழே போய் தான் வழக்கமாக உட்காரும் இடத்தில் உட்கார்ந்து கொண்டு ஒப்பாரி பாடி ஓலமிட ஆரம்பித்துவிட்டாள். வேலையாட்கள், சமையல்காரர்கள், வள்ளியம்மாள் பொன்னம்பலம் எல்லாரும் என்னவோ ஏதோ வென்று காமாக்ஷியம்மாளைச் சுற்றிக் கூடிவிட்டார்கள். என்ன வென்று கேட்டவர்களுக்கு, ''ஐயோ! நான் என்னான்னு சொல்லுவேன்?....சொல்லத்தான் முடியுமா?....பொழைச்ச பொழைப்பெல்லாம் போச்சே! வாழ்ந்த வாழ்வெல்லாம் போச்சே!'' என்று தலை தலையாக அடித்துக் கொண்டாளேயன்றி, காரணம் என்னவென்று சொல்லவில்லை.



இந்தச் சமயத்தில் சொக்கேசர் ஊரிலிருந்து உள்ளே வந்தார். கூட்டத்தையும் குழப்பத்தையும் பார்த்தார். சுற்றி நின்றவர்களை விலக்கிக் கொண்டு தமக்கை முன்னால் வந்து நின்றார். தம்பியைக் கண்ட உடன் தாங்க முடியாத துக்கம் வந்தது. காமாக்ஷியம்மாள் ஒரே ரோதனம் செய்யத் தொடங்கினாள்.

''என்ன அக்கா? ஏன் அழுகிறீர்கள்? குமார வீரன் வரவில்லையா? பூங்கோதை எங்கே? சாயபு வந்தாரா?''........ என்றார் சொக்கேசர்.

''சாயபு வந்தான்....சந்தியிலே போனான்....'' என்று அழுதுகொண்டே காமாக்ஷியம்மாள் சொன்னாள்.

''எங்கே சாயபு? ஒன்பது மணிக்கு வருவதாகச் சொன்ன மற்றவர்கள் வரவில்லையா? சாயபு சொன்னது பொய்யா? என்ன அக்கா, ஒன்றும் தெரியவில்லையே. ஏன் அழுகிறீர்கள்?''

''அப்பா, தம்பி! சொக்கேசா, என் வயிறு பத்தி எரியுது. என்னை ஒன்றும் கேட்காதே. மேலே அந்தப் பெரிய மனுஷன் சாயபு இருக்கிறான். அவனைக் கேள்....இல்லாட்டி உன் மகளைக் கேளு'' என்று சொல்லி முடிப்பதற்குள் சொக்கேசர் மாடிக்கு ஓடினார். பின்னாலேயே அங்கிருந்த அத்தனை பேரும் புறப்பட்டார்கள். உடனே காமாக்ஷியம்மாள் ''டேய்! வேறு யாரும் மேலே போகக் கூடாது. தம்பி மட்டும்தான் போகவேணும்''

என்று மற்றவர்களையெல்லாம் தடுத்து வழி மறித்து நின்றாள். சொக்கேசர் மட்டும் போனார்.

அத்தை வயிற்றிலும் வாயிலும் அடித்துக்கொண்டும் அழுதுகொண்டும் கீழே போனதை அறிந்த பூங்கோதை அத்தைக்குப் பின்னாலேயே வந்து மெத்தைப் படிக்கட்டுக் கதவுக்குப் பின்னால் இருந்துகொண்டு அத்தை அழுவதையும் அத்தையைச் சுற்றிலும் கூடிவிட்ட கூட்டத்தையும் கவனித்துக்கொண்டே நின்றுகொண்டிருந்தாள். சொக்கேசர் வீட்டுக்குள் வந்தவுடன், பூங்கோதை மறுபடியும் மாடிக்கு ஓடி, சாயபு வேஷத்தோடு நின்ற குமார வீரனிடம் தன் தந்தை வந்துவிட்டதைச் சொல்லிவிட்டு, மாடியிலுள்ள கட்டிலின் ஜன்னலண்டை போய், அங்கிருந்துகொண்டு கீழே கூடத்தில் நடக்கிற விஷயங்களைக் கவனித்துக்கொண்டிருந்தாள்.

பூங்கோதை வந்து சொக்கேசர் வந்துவிட்டதைச் சொன்ன உடன், குமார வீரன் வெகு வேகமாகத் தன் மகம்மதிய உடையையும் தாடி மீசையையும் களைந்துவிட்டு, குமார வீரனாகப் பூங்கோதையின் அறையிலேயே நின்றுகொண்டிருந்தான்.

"மேலே அந்தப் பெரிய மனுஷன் சாயபு இருக்கிறான். அவனைக் கேள். இல்லாவிட்டால் உன் மகளைக் கேளு," என்று தமக்கை காமாக்ஷியம்மாள் சொன்ன வெகு விபரீதமான சொற்களை நினைத்துக்கொண்டே சொக்கேசர் மேல்மாடிக்கு வந்து, பூங்கோதையின் அறைக்குள் புகுந்தார். அங்கே சாயபுவைக் காணவில்லை. வேறு ஒரு புது மனிதன் யாரோ நிற்பதைக் கண்டு திடுக்கிட்டார். யாரென்று அவர் கேட்க வாயெடுக்குமுன் குமார வீரன், "மாமா! என்னை அடையாளம் அறிகிறீர்களா?" என்று சொக்கேசருக்குச் சாஷ்டாங்க நமஸ்காரம் செய்து எழுந்து வெளிச்சத்தில் நின்றான். சொக்கேசருக்கு வெகு நேரம் வரைக்கும் அடையாளம் தெரியவில்லை; என்றாலும் கனவு கண்டது போல, அவனுடைய முகச்சாயல் நினைவுக்கு வந்தது. குமார வீரன் அதிக நேரம் மாமாவைத்



திகைக்கவிடக்கூடாதென்று தன்னுடைய இடதுக்கையை வெளிச்சத்தில் நீட்டி, "மாமா, இந்தத் தழும்பைத் தாங்கள் மறக்க முடியாது. இந்தக் கை வெந்து போனதற்குத் தாங்கள் தினந்தினம் ஆஸ்பத்திரிக்கு என்னைக் கூட்டிப் போய் ஆற்றி வைத்தது இது" என்றான். அந்தத் தழும்பைப் பார்த்தவுடன் தன்னுடைய தமக்கை மகன் குமார வீரன் அவன்தான் என்று சந்தேகமறத் தெரிந்துகொண்டார். மறுபடியும் அவனை ஏற இறங்கப் பார்த்து, அவனுடைய முகப் பொலிவையும் கம்பீரமான தோற்றத்தையும் கண்டு மனமகிழ்ந்து, 'பூங்கோதையின் புண்ணியமே புண்ணியம்' என்று எண்ணிக்கொண்டு, மருமகனை இறுகத் தழுவி முதுகையும் தோளையும் தடவிக்கொடுத்துக் கொண்டே "எங்கே சாயபு?" என்றார். குமார வீரன் மெல்லச் சிரித்துக்கொண்டே,

"சாயபும் நானும்தான் ஒன்றாக வந்தோம். அவர் இப்போது இங்கில்லை" என்றான்

"அக்காள் உன்னை இன்னும் பார்க்கவில்லையா?"

"இல்லை. அம்மாள் கொஞ்ச நேரத்துக்கு முன்னால் இங்கே வந்து என்னைக் காணாமல் சாயபுவை மட்டும் பார்த்துவிட்டு வருத்தமாகப் போய்விட்டார்கள்" என்று குமாரவீரன் சொன்னதிலிருந்த சூது சொக்கேசருக்குத் தெரிய முடியாது. தமக்கை என்னவோ தவறாக எண்ணிக்கொண்டு வருத்தப்படுகிறார் என்று சொக்கேசர், குமார வீரன் வந்திருக்கிறதை அக்காளுக்குச் சொல்லவேணும் என்ற சந்தோஷத்தோடு கீழே ஓடினார்.

தகப்பனார் வந்து போனதைக் கவனித்துக்கொண்டு மறைந்திருந்த பூங்கோதை, தகப்பனார் போனவுடன் குமார வீரனிடம் ஓடி வந்து, "அத்தான், மறுபடியும் சாயபு வேஷத்தைப் போட்டுக் கொண்டு, அத்தைக்கு முன்னால் போய், தாடி மீசை எல்லாவற்றையும் களைந்து, உங்களைக் காட்டினால்தான் அத்தைக்குச் சந்தேகம் நீங்கும். தயவு செய்து மறுபடியும் தரித்துக்கொள்ளுங்கள்" என்றாள்.

"பூங்கோதை, உன் புத்தியே புத்தி! நானும் அதே மாதிரி நினைத்தபோதே 'நீயும் சொல்லிவிட்டாய். ஆமாம், அப்படிச் செய்தால்தான் அம்மாளுக்கு நம்பிக்கை உண்டாகும். சரி, நான் வேஷம் போட்டுக்கொள்ளுகிறேன். நீ கொஞ்சம் வெளியில் இருந்து வேஷம் பூர்த்தியாவதற்குள் யாரும் வந்துவிடாதபடி பார்த்துக்கொள்" என்றான் குமார வீரன்.

பூங்கோதை உடனே கதவைச் சாத்திக்கொண்டு, வெளியில் வந்தாள். படிக்கட்டுகளில் இறங்கி, யாரும் வருகிறார்களா என்று பார்த்துக்கொண்டு நின்றாள். கொஞ்ச நேரத்தில் பொன்னம்பலம்—குமார வீரனுடைய தம்பி—வெகு வேகமாக ஓடி வந்து படியேறினான். எதிரில் பூங்கோதை இருப்பதைக் கண்டு, "மச்சீ! மச்சீ! உங்களுடைய 'ரூமுக்குள்ளே' எங்கள் அண்ணாத்தையை மறைத்து வைத்திருக்கிறீர்களாமே? இதோ மாமா சொல்லுகிறார். அம்மாவும் மாமாவும், அவரைக் கூட்டி வரும்படி என்னை அனுப்பினார்கள்" என்றான் பொன்னம் பலம்.

"என்ன பொன்னம்பலம், என்னுடைய ரூமில் உங்கள் அண்ணாத்தை எப்படி வருவார்? அவரை நான் எப்படி மறைக்க முடியும்? எதற்காக நான் அவரை மறைக்கவேணும்? அங்கே உன்னுடைய அண்ணாத்தை இல்லை. வழக்கமாக நம்ப வீட்டுக்கு வருகிற அப்துர் ரஹீம் சாயபுதான் வந்தார். அவர் உங்கள் அண்ணாத்தையின் கள்ளத்தனத்தையெல்லாம் எனக்குக் காட்டினார். அந்தச் சாயபுதான் இப்போது என்னுடைய அறையில் இருக்கிறார். வேணுமானால் அவரைக் கூட்டிக்கொண்டு போய் அத்தையிடம் நிறுத்து............இரு, இரு, அவர் என்னவோ தம்முடைய தாடி மீசைக்கு மெருகு கொடுத்துக் கொண்டிருக்கிறார். அது முடியட்டும், கொஞ்சம் பொறு......." என்றாள்.

பொன்னம்பலத்துக்கு ஒன்றும் புரியவில்லை. சற்று நேரம் திகைத்து நின்றான். பிறகு, "போங்க மச்சீ, என்னை ஏமாற்றுகிறீர்கள். மாமா இப்பத்தான் உங்கள் 'ரூமில்' அண்ணாத்தையைப் பார்த்துப் பேசிவிட்டு வந்ததாக அம்மாளிடம் சொல்லிவிட்டு என்னைப் போய் அழைத்து வர அனுப்பினார்களே! மாமா ஒருகாலும் பொய் சொல்ல மாட்டார்" என்று மச்சியை மீறிக்கொண்டு மேலே ஓடி அறைக்குட் புகுந்தான்.



அப்போதுதான் சாயபு கண்ணாடியைப் போட்டுக்கொண்டு அலங்காரத்தை முடித்தார். பார்த்தான் பொன்னம்பலம். மச்சி சொன்னது மெய்யாகிவிட்டது. மாமா சொன்னது பொய்யாகிவிட்டது! அவனுடைய மனக்குழப்பம் மாறுவதற்குள் பூங்கோதை அங்கே வந்து, "ஐயா அப்துர் ரஹீம் சாயபு அவர்களே! தங்களை என்னுடைய அண்ணாவும் அத்தையும் பார்க்க வேண்டுமென்று கூப்பிடுகிறார்களாம். அங்கே போய் அவர்களிடத்தில் சொல்லுங்கள்—உங்களுடைய சிநேகிதர் மலைக்கள்ளருடைய — பொன்னம்பலத்தின் அண்ணாத்தையுடைய—மாயவித்தைகளையெல்லாம், தயவுசெய்து என்னுடைய ரூமை விட்டுப் போங்கள். பொன்னம்பலம்! கூட்டிக் கொண்டு போ, நீ கூப்பிட வந்த உங்கள் அண்ணாத்தையவர்களை" என்றாள்.

சாயபு சிரித்துக்கொண்டே பொன்னம்பலத்தின் கையைப் பிடித்து அவனையும் இழுத்துக்கொண்டு கீழே போனார். தன்னுடைய தமையனைக் கண்டு கூட்டிப்போகவந்த பொன்னம் பலத்துக்குச் சாயபு தன் கையைப் பிடித்து இழுத்துக்கொண்டு போனது பிடிக்கவில்லை. பாதி வழியிலேயே பொன்னம்பலம் தன் கையைச் சாயபு பிடியினின்றும் இழுத்துக்கொண்டு நின்று விட்டான். பூங்கோதை, படிக்கட்டின் கதவுக்குப் பின்னாலேயே நின்றுவிட்டாள்.

கூடியிருந்த வேலைக்காரர்களையெல்லாம் அவரவர்கள் வேலையைப் பாரக்கப் போய்விடும்படிக்கும், அங்கே யாரும் இருக்கக்கூடாதென்றும் காமாக்ஷியம்மாள் கண்டிப்பான உத்தரவு செய்தாள். எல்லாரும் போய்விட்டார்கள். காமாக்ஷியம்மாளும் சொக்கேசரும் குமார வீரன் மாடியிலிருந்து வரப் போகிறான் என்று வெகு ஆவலோடு எதிர்பார்த்துக்கொண்டிருந் தார்கள்....

சப் இன்ஸ்பெக்டர் ஆறுமுகம், சாயபு இன்றைக்குச்
சொக்கேசர் வீட்டுக்கு மலைக்கள்ளனைக் கூட்டிக்கொண்டு
போவதற்கென்று தன்னையும் வரச்சொல்லி இருந்ததால்
மாந்தோப்புக்குப் போனார். மலைக்கள்ளனென்று சொல்லப்
படுகிற மனிதரை இதுவரையிலும் தாமும் சந்தித்ததில்லை
யானதால் சப் இன்ஸ்பெக்டரும் ஆவலாகப் போனார். அங்கே
சாயபு இல்லை. அவர் முன்னாலேயே சொக்கேசர் வீட்டுக்குப்
போய்விட்டதாகவும், சப் இன்ஸ்பெக்டர் வந்தால் வண்டியில்
வரச்சொல்லிவிட்டுப் போனதாகவும் வைத்தி சொன்னான்.
வைத்தி குத்துண்ட அபாயத்திலிருந்து முற்றிலும் குண
மடைந்து மீண்டும் சாயபு பங்களாவில் வேலை செய்து
கொண்டிருப்பதைக் கண்டு ஆறுமுகம் பரம சந்தோஷமடைந்து
அவனைப் பாராட்டினார். அங்கே ஒரு குதிரை வண்டி தயாராக
இருந்தது. குதிரையும் அதே குதிரைதான். வண்டியும் சாயபு
வண்டிதான். ஆனால் புதிதாக—காத்தவராயன் கூட்டத்தாரை
ஏமாற்றுவதற்கென்று—வைக்கப்பட்டிருந்த முன் கதவுகளெல்
லாம் மாறிப்போய் பழைய பெட்டி வண்டியாக இருந்தது. அந்த
வண்டியில் சப் இன்ஸ்பெக்டருக்கு முன்னாலேயே அங்கே வந்து
பங்களாவிற்குள் இருந்த ஜானகியம்மாளும் சின்னம்மாள் என்
கிற பார்வதியம்மாளும் வந்து ஏறினார்கள். ஆறுமுகம் முன்
னால் பெட்டியின்மேல் வைத்தியின் பக்கத்தில் உட்கார்ந்து
கொண்டார். வண்டி சொக்கேசர் வீட்டுக்கு முன்னால் நின்றது.
வண்டியில் வந்தவர்கள் கூடத்தில் நுழைந்தார்கள்...........

அதே சமயத்தில் மாடியில் பூங்கோதையின் அறையி
லிருந்து அப்துர் ரஹீம் சாயபுவும் கூடத்துக்கு வந்தார். பொன்
னம்பலத்தைக் காணோம் குமார வீரன் வரவில்லை. சாயபு
மட்டும் வருகிறார். சொக்கேசருக்கு உண்டான ஆச்சரி
யத்துக்கு அளவே இல்லை.

மகன் வரப்போகிறான் என்று தன் தம்பி சொன்னதைக்
கேட்டுக் காத்திருந்த காமாக்ஷியம்மாளுக்கு, தான் மாடியில் பூங்
கோதையோடு கண்ட அதே சாயபு வருவதைப் பார்த்துக்
குறைந்திருந்த துக்கம் கொழுந்துவிட ஆரம்பித்தது.



வந்த சாயபு, நேராக காமாக்ஷியம்மாள் காலில் விழுந்து நமஸ்கரித்து, "அம்மா! நான்தான் குமாரவீரன். வேஷம் மட்டும் சாயபு வேஷம்" என்று தன்னுடைய சொந்தக் குரலில் பேசி, எழுந்து நின்று, மூக்குக்கண்ணாடியை முதலில் நீக்கினான். தலைப்பாகையை எடுத்துத் தரையில் போட்டான். மீசையையும் தாடியையும் மெதுவாக நீக்கி, கையில் பிடித்துக்கொண்டு புன்சிரிப்போடு நின்றான். காமாக்ஷியம்மாள் கண்ணிமைக்காமல் பிரமை கொண்டவள் போலப் பார்த்துக்கொண்டே இருந்தாள்.

குமாரவீரன் தன்னுடைய சாயபு உடைகளைக் களைந்து விட்டு, உள்ளே உடுத்தியிருந்த ஒற்றை வேஷ்டியுடனும் சட்டையுடனும் நின்றான். ஜால வேடிக்கை பார்ப்பது போலக் காமாக்ஷியம்மாளுக்கு மகிழ்ச்சியும் மயக்கமும் மாறி மாறி வந்தன. கடைசியாகக் குமாரவீரன் தன்னுடைய சட்டையையும் கழற்றி வீசிவிட்டு, மேஜையின் மீதிருந்த விளக்கை ஓடி எடுத்து வந்து, "அம்மா, இதைப் பாருங்கள்!" என்று தன் வலத்தோளிலிருந்த மச்சத்தைக் காட்டினான்.

மச்சத்தைப் பார்த்த மாத்திரத்தில், காமாக்ஷியம்மாள் நின்றபடியே மகன்மேல் சாய்ந்து, பெற்றெடுத்த காலத்தில் அடைந்த சந்தோஷத்தைக்காட்டிலும் பெரிய சந்தோஷத்தால் பேச்சும் வராமல் மயங்கிவிட்டாள்.

தாயை மகன் தாங்கிப் பிடித்துக்கொண்டான்.

..........................................................................................................

திடீரென்று துக்கம் வந்தாலும் அல்லது திடீரென்று சந்தோஷம் வந்துவிட்டாலும் சட்டென்று ரத்த ஓட்டம் பாதிக்கப்பட்டு மாரடைப்பு வந்துவிடுவது மனிதருக்கு இயல்பு. இழந்துவிட்டதாக எண்ணிய தன்னுடைய தலைமகன் மீண்டும் தனக்குக் கிடைத்துவிட்டதனாலுண்டான அளவு கடந்த பூரிப்பினால் காமாக்ஷியம்மாளுக்கு மாரடைத்து மயக்கம் வந்துவிட்டது.

நல்ல வேளையாக அந்த மயக்கம் விரைவில் விலகிவிட்டது. அதன் பிறகு, அங்கே உண்டான களிப்பைச் சொல்லவும்

முடியுமா ! ஒவ்வொருவரும் ஒவ்வொரு விதமான காரணத்தால் ஆனந்தமடைந்தார்கள்.

சப் இன்ஸ்பெக்டர் ஆறுமுகத்திற்கு மற்றதெல்லாம் மறந்து போய்விட்டது. மாங்தோப்பு சாயபுவாக நடித்துத் தன்னை இவ்வளவு ஏமாற்றிவிட்ட குமாரவீரனுடைய அற்புத சாமர்த்தியத்தினாலுண்டான வியப்பே பெரிதாகிவிட்டது !

விருந்துண்டபின் எல்லாரும் உட்கார்ந்து சல்லாபித்துக் கொண்டிருந்தார்கள். இதுவரையிலும் நடந்த பல விஷயங்களில் யார் யாருக்கு என்னென்ன சந்தேகமோ அதையெல்லாம் கேட்டார்கள். குமாரவீரன் அவரவருக்கு வேண்டிய பதிலைச் சொல்லிச் சந்தோஷப்படுத்தினான்.

பூங்கோதையும் குமாரவீரனும் பல நாள் பழகின தம்பதிகளைப் போலப் பேசிக்கொண்டதைப் பார்த்து எல்லாருக்கும் ஒரு புதுமையான மகிழ்ச்சி.

"உங்கள் மலைவீட்டுக்குப் போகிற வழிநெடுக அங்கங்கே கதவைத் திறக்கச் சொல்லவேண்டிய சந்தர்ப்பம் வந்த போதெல்லாம் ராமாயணத்திலுள்ள பேர்களைச் சொல்லியே கேள்விகள் கேட்கப்பட்டதே, உங்களுக்கென்ன ராமாயணத்தில் தான் பிரியமா?" என்றாள் பூங்கோதை.

"ராமாயணத்தில் எனக்குப் பிரியம் என்பதற்காக அல்ல. ராமாயணத்தில் உனக்குப் பிரியம் என்பதற்காகத்தான். கம்ப ராமாயணம் உனக்கு மிகவும் பிரியமான புத்தகம் என்பதை நெடுநாளாக அறிவேன். நீ அடிக்கடி அம்மாளுக்குக் கம்ப ராமாயணத்தைப் படித்துக் காட்டி அர்த்தம் சொல்லிக் கொண்டிருப்பதும் எனக்குத் தெரியும்.....நீ மலைக்கு வந்திருந்த போதுகூட என்னுடைய புத்தகங்களில் கம்பராமாயணத்தை மட்டும் எடுத்துப் பார்த்துக்கொண்டிருந்தாய் என்பதைக் கவனித்தேன்........இல்லையா ?"

பூங்கோதை ஒத்துக்கொண்ட மாதிரி சிரித்தாள்.

"ஆகையினால், பல வருஷங்களாக உன்னைப்பற்றியே அடிக்கடி நினைத்துக்கொண்டிருந்த நான் உன்னுடைய நினைவினால் ராமாயணத்திலுள்ள பேச்சுகளைக்கொண்டே என்னுடைய காவலாளிகளுக்குள் சமிக்கைப் பேச்சுகளைப் பழக்கியிருந்தேன்" என்றான் குமாரவீரன்.



"சரி........ உங்கள் மலையில் அடைத்து வைத்திருந்தீர்களே, அவர்களையெல்லாம் என்ன செய்தீர்கள்? பல பேர் மலையில் கொல்லப்பட்டார்கள் என்று ரொம்ப நாளாகச் சொல்லிக்கொண்டார்களே!" என்று பூங்கோதை முடிப்பதற்குள்,

"பூங்கோதை, நீ கொஞ்சங்கூடச் சந்தேகிக்க வேண்டாம். நான் யாரையும் கொன்றதில்லை. பல சமயங்களில் நான் தற்காப்புக்காக வாளெடுத்துப் போராடியிருக்கிறேன். என்னிடத்தில் கைத்துப்பாக்கியும் எந்த நேரத்திலும் இருப்பதுண்டு. என்னுடைய வாள் வீச்சினால் காயப்பட்டவர்கள் உண்டு. என்னுடைய கைத்துப்பாக்கியின் சத்தத்தால் பயந்து ஓடினவர்களும் உண்டு. ஆனால் வெட்ட வேண்டியவர்களையும் கூட நான் கட்டித்தான் வைத்திருந்தேன். மலையில் நீ பார்த்த கைதிகளையெல்லாம் சர்க்கார் அதிகாரியான நம்முடைய அரிய நண்பர் ஆறுமுகத்திடம் ஒப்படைத்துவிட்டேன். என்னிடம் அகப்பட்ட எவனையும் நான் கொலை செய்ததில்லை. ஏன் எனில் உனக்குக் **கம்பராமாயணத்தின்** மேல் எவ்வளவு பக்தியோ அவ்வளவு பக்தி எனக்குத் **திருக்குறளின்** மேல் உண்டு.

**நன்றாகு மாக்கம் பெரிதெனினும் சான்றோர்க்குக்**
**கொன்றாகு மாக்கம் கடை.**

என்பதே என்னுடைய விசேஷ தர்மம்."

---